# ஜவஹர்லால் நேரு

## சுயசரித்திரம்

வ. ரா. அவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டு
க. சந்தானம் அவர்களால்
சரிபார்க்கப்பட்டது.

ரூ. 2-8-0

சங்கு. கணேசன்,
திருவல்லிக்கேணி, சென்னை.
1936.

ஸ்ரீமதி கமலா நேரு

அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

# சுதந்திர சிந்தாமணி:

மனிதன் வீழ்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் அவன் மனதே முதல் காரணம். எந்த சமூகத்தின் அங்கத்தினர்கள் கம்பீரமாகவும், சுதந்திரமாகவும் சிந்திக்க சக்தி வாய்ந்திருக்கின்றனரோ, அந்த சமூகம் எல்லாத் துறைகளிலும் விறைவில் முன்னேறும் என்பதில் ஐயமில்லை. தமிழ் மக்களிடை இந்த சிந்தனசக்தியை வளர்ப்பதற்காகப் பல அரிய நூல்களைப் பிரசுரிக்க நிச்சயித்திருக்கிறேன். இந்தியாவின் ராஜீய, சமூக, பொருளாதார விஷயங்களைத் தீரமாகவும், தெளிவாகவும் சிந்திக்கும் பாரதப் புதல்வர்களில் ஒப்பற்று விளங்குபவர் பண்டித ஜவஹர்லால்நேரு. அவருடைய நூல்களைப் பிரசுரிப்பதே எனது முதல் கடமையாகக் கொண்டிருக்கிறேன். ஜவஹர்லால் எழுதிய நூல்கள், "சுதந்திர சிந்தாமணி" என்ற மகுடத்துடன் தமிழில் ஒவ்வொன்றும் 500 பக்கங்கள் கொண்ட 7 பாகங்களாக வெளியிட உத்தேசித்திருக்கிறேன்.

பண்டித ஜவஹர்லாலின் ஆத்மசரிதம் அவருடைய வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல. சென்ற 20 வருஷங்களின் இந்திய ராஜீய சரித்திரமாகும். இந்தியாவின் முக்கியப் பிரச்சினைகளை ஒப்பற்ற கம்பீரத்துடன் சர்ச்சை செய்திருக்கிறார். இந்த நூல் இந்நாட்டின் வருங்கால ராஜீய, பொருளாதார வாழ்விற்கு ஒரு ஆதார சாஸ்திரம் ஆகும் என்று பல அறிஞர் என்னிடம் கூறி யிருக்கின்றனர்.

இந்த நூலை <u>தமிழில்</u> மொழி பெயர்த்தது ஸ்ரீ வ. ராமஸ்வாமி அய்யங்கார். அதை ஸ்ரீ. கே. சந்தானம் பரிசோதித்து உதவினார். இவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

எனது இந்த முயற்சியைத் தமிழன்பர்கள் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

2-10-37.

எஸ். கணேசன்.

# முன்னுரை

இந்த நூல் முழுதும் சிறையிலேயே எழுதப்பட்டது. பின்னுரையும் 1934 ஜூன் முதல் 1935 பிப்ரவரி வரையில் உள்ள வரலாறு சம்பந்தமாக சில சில்லரை மாறுதல்களும் சிறையில் எழுதப்படவில்லை. இந்த நூலை நான் எழுதினதின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், சிறையிலே தனியாக நீண்டகாலங் கழிக்க நேர்ந்த காலையில், பொழுது போவதற்காக. மேலும் நான் கலந்துகொண்ட முக்கியமான இந்திய நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பரிசீலனை செய்து, அவைகளைப்பற்றி தெளிவாக நான் யோசிப்பதற்காகவும் இதை எழுதினேன். என்னை நானே கேள்வி கேட்டுக்கொள்ளும் முறையில், இந்த வேலையை நான் துவக்கினேன். அந்த மனப்பான்மை புஸ்தகத்தின் கடைசிவரையிலும் பெரும்பான்மையில் பிடிவாதமாக இருந்து வந்தது. பிறர் படிப்பதற்காக எண்ணங்கொண்டு, வேண்டுமென்றே நான் எழுதவில்லை. ஒருக்கால் பிறர்படிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்திருக்குமாகில், அது எனது நாட்டிலுள்ள சகோதரர்களும் சகோதரிகளும் படிக்கலாம் என்ற ஆசைதான். அன்னிய நாட்டிலே இதை படிக்கவேண்டும் என்றஆசை எனக்கு இருந்திருக்குமாகில், இந்த வரலாற்றை வேறு வகையாக எழுதியிருப்பேன். வேறு சில விஷயங்களை வற்புறுத்தியிருப்பேன். இந்த நூலில் சிற்சில அம்சங்கள் வழவழவென்று விடப்பட்டிருக்கின்றன. மேலும் சில அம்சங்கள் விஸ்தாரமாக சொல்லப் பட்டிருக்கின்றன. அவைகளை மாற்றியும் குறைவாகவும் எழுதியிருப்பேன். இந்தியரல்லாத வாசகருக்கு, பின் சொன்ன பகுதிகளில் பல பிடிக்காமல் இருக்கலாம். அவைகள் முக்கியமானவையல்ல என்றும் வாதத்திற்கு தகுதிபெறாத அவ்வளவு எளிதான விஷயங்களென்றும் அன்னியநாட்டு வாசகர்கள் கருதலாம். ஆனால் தற்போதைய இந்தியாவில் அவைகள் யாவும் தேவை என்று

எனக்கு நிச்சயமாகத் தோன்றிற்று. நம்முடைய உள்நாட்டு அரசியலும் தலைவர்களும் வெளிநாட்டாருக்கு அவ்வளவாக இனிப்பை தராமலிருக்கலாம்.

என்னுடைய வாழ்க்கையில் மிகவும் துன்பம் நிறைந்த சந்தர்ப்பத்தில் புஸ்தகம் எழுதப்பட்டது என்பதை வாசக நண்பர் தயவுசெய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதன் குறிகளை இந்த நூலில் ஏராளமாகக் காணலாம். சாதாரண மனப்பான்மையுடன், வேறு நிலைமையில், இது எழுதப்பட்டிருக்குமாகில், வேறு வகையாக இருந்திருக்கலாம். அதிகமான அடக்கத்துடன் எழுதப்பட்டிருக்கலாம். இருந்தாலும் எழுதின எழுத்தைத் தொடாமல், அதை அப்படியே விட்டுவிடுவதென்று தீர்மானங் கொண்டேன். ஏனெனில் எழுதும் பொழுது, என்மனதில் என்ன இருந்தது என்பதை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதற்கு இது பெரிதும் உபயோகமாயிருக்கும்.

கூடுமானவரையில் எனது சொந்த மனவளர்ச்சியை வரைவதே எனது முயற்சியாகும். சமீபகால இந்திய சரித்திரத்தை எழுதுவது, என் நோக்கமல்ல. வெளித்தோற்றத்தில், இந்த வரலாறு சரித்திரத்தைப்போல தோன்றுவதால், வாசக நண்பர் தவறான எண்ணங்கொண்டு, சரித்திரத்திற்குரிய அதிகமான பிராதான்யத்தை இதற்கு கொடுக்கக்கூடும். எனவே, இந்த வரலாறு முழுதும் ஒருதலைப் பட்சமானதென்றும், என் சம்பந்தப் பட்டதென்றும் நான் வாசக நண்பருக்கு எச்சரிக்கை செய்யவேண்டும். முக்கியமான பல நிகழ்ச்சிகள் என்னால் குறிப்பிடப் படவேயில்லை. மகத்தான நிகழ்ச்சிகளுக்கு காரண பூதர்களாயிருந்த முக்கியஸ்தர்கள் பலரை நான் குறிப்பிடவுமில்லை. கடந்த கால நிகழ்ச்சிகளைப்பற்றி, உண்மையான வரலாற்றை எழுதினால், இவ்வாறு செய்திருக்கவே கூடாது. அது மன்னிக்கக்கூடாத பிழையாகும். ஆனால் சொந்த வரலாறுகளில், இவைகளைப்பற்றி குறிப்பிடவேண்டிய தேவையில்லை. நமது சமீபகாலத்து சரித்திரத்தை, சரியான முறையில் படிக்க ஆசைப்படுகிறவர்கள், வேறுபல எழுத்து

களைப் படிக்கவேண்டும். என்றாலும் இந்த எழுத்தும் வேறு சொந்த வரலாறுகளும், பொது நிகழ்ச்சிகளை உள்ளபடியே நிதானம்செய்து மதிப்பிடுவதற்கும், மேடு பள்ளங்களை சரிப் படுத்தி முறையாக சரித்திரத்தை தெரிந்து கொள்வதற்கும் மிகவும் துணையாக இருக்கலாம்.

பல ஆண்டுகளாக தோழர்கள் பலரோடு உழைக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். அவர்களிடத்தில் எனக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் உண்டு. இருந்தாலும் அவர் களில் சிலரைப்பற்றி பட்டவர்த்தனமாக் குறிப்பிட்டிருக்கி றேன். சில தனி நபர்களையும் சில கூட்டங்களையும் நான் கண்டித்திருக்கிறேன். சில சமயங்களில் கண்டனம் மிகவும் கடுமையாகக் கூடயிருக்கலாம். ஆனாலும் அந்தக் கண்டனத் தால் அவர்களிடம் எனக்கு இருக்கும் மரியாதை போய்விட வில்லை. பொதுஜன அலுவல்களில் தலையிடுபவர்கள் பரஸ் பரம் மனதை விட்டுப் பேசவேண்டுமென்றும் யாருக்குத் தொண்டுசெய்ய விரும்புகிறார்களோ, அந்தப் பொதுமக்க ளிடமும் தாராளமாக மனந்தவிட்டு பேசவேண்டுமென்றும் நான் கருதுகிறேன். பாவனை மரியாதையால் ஒருவரை யொருவர் அறிந்து கொள்ள முடியாது. நம்மைப் பிடித்து நிற்கும் பிரச்னைகளுக்கும் பரிகாரம் ஏற்படமுடியாது. திக்குமுக்கலாடச்செய்யும் பிரச்னைகளை யோசிக்காமலே விட்டு விட்டாலும், அதனால் காரியமும் கைகூடாது. ஒற்றுமை அம்சங்களையும் வேற்றுமைகளையும் நன்றாக உணர வேண்டும். நிகழ்ச்சிகள் நமக்கு எவ்வளவு அசௌகரியமாக நேர்ந்தாலும், அவைகளை உள்ளபடியே நிதானிக்கவேண்டும். அப்பொழுதுதான் நமக்குள் உண்மையான ஒத்துழைப்பு உண்டாகும். என்றாலும், நான் எழுதியிருக்கும் எழுத்தில் யாரிடமும் பொறாமையும் பகைமையும் துளிகூட இல்லை என்று நான் நம்புகிறேன்.

தற்போதைய இந்திய பிரச்னைகளைப்பற்றி மேலாகவும் மறைமுகமாகவும் குறிப்பிட்டிருக்கிறேன். வேண்டுமென்றே விரிவாக ஆராய்ச்சி செய்யவில்லை. சிறையிலே அவைகளைப்

பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்யும் நிலைமையும் வசதியும் எனக்கு இருக்கவில்லை. மேலும் இன்னதுதான் செய்ய வேண்டும் என்று நான் என் மனதில் முடிவு செய்துகொள் ளவுமில்லை. விடுதலையடைந்த பின்னரும் இது சம்பந்தமாக, எதையும் சேர்த்து எழுத எனக்கு விருப்பமில்லை. நான் ஏற்கனவே எழுதியதற்கு, இது பொருத்தமாயிருக்காது போல தோன்றிற்று. எனவே இந்த சுயசரிதை வரலாறு நடைச் சித்திரமாக இருக்கின்றது. சொந்த வரலாறு, கடந்த காலத்தைப்பற்றி பூராவுக்கும் விவரம் கிடையாது. நிகழ் காலத்தை ஓரளவு தொட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதோடு ஒட்டிக்கொள்ளவே யில்லை.

பேடன் வீலர்,
ஜனவரி மீ 2, 1936

ஜவஹர்லால் நேரு.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| | சுதந்திரசிந்தாமணி | ... | vii |
| | முன்னுரை ஜவஹர்லால் நேரு | ... | ix |
| | பொருளடக்கம் | ... | xiii |
| i | காஷ்மீரத்திலிருந்து குடியேற்றம் | ... | 1 |
| ii | குழந்தைப் பருவம் | ... | 10 |
| iii | பிரும்ம ஞானம் | ... | 20 |
| iv | ஹாரோவும் கேம்பிரிட்ஜும் | ... | 29 |
| v | இந்தியாவின் போர்க்காலத்து அரசியல் | ... | 47 |
| vi | என்னுடைய கலியாணமும் இமயமலை பிரயாணமும் | ... | 65 |
| vii | காந்திஜியின் பிரவேசம்: அம்ருதசரசும் சத்தியாக்கிரகமும் | ... | 69 |
| viii | நான் கடத்தப்பட்டதும் அதன் விளைவுகளும் | | 84 |
| ix | விவசாயிகளோடு கலத்தல் | ... | 98 |
| x | ஒத்துழையாமை | ... | 110 |
| xi | எனது முதல் சிறைவாசம் | ... | 130 |
| xii | அஹிம்சையும், க்ஷத்திரிய தர்மமும் | ... | 143 |
| xiii | லக்ஷ்மணபுரி ஜில்லாச் சிறை | ... | 157 |
| xiv | மீண்டும் வெளியே | ... | 170 |
| xv | சந்தேகமும் மனப் போராட்டமும் | ... | 180 |
| xvi | நாபாவில் நடந்த விடுகதை | ... | 188 |
| xvii | காகிநாடா காங்கிரஸும், மௌலானா மகமதலியும் | ... | 202 |
| xviii | எனது தகப்பனாரும் காந்திஜீயும் | ... | 213 |
| xix | ஜாதி துவேஷத்தின் அட்டகாசம் | ... | 229 |
| xx | நகரசபை வேலை | ... | 241 |
| xxi | ஐரோப்பாவில் | ... | 251 |

| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| xxii | இந்தியாவில் விவாதங்கள் | ... | 264 |
| xxiii | பிரஸ்ஸல்ஸில் ஒடுக்கப்பட்டவர்கள் மகாநாடு | | 273 |
| xxiv | இந்தியா திரும்புதல், ராஜீய வேலையில் புகுதல் | | 281 |
| xxv | தடியடி அனுபவம் | ... | 300 |
| xxvi | தொழிலாளர் சங்க காங்கிரஸ் | ... | 307 |
| xxvii | ராஜீய வானத்தில் இடிமுழக்கம் | ... | 320 |
| xxviii | பூர்ண விடுதலைத் தீர்மானமும், அதன் பின்னரும் | ... | 336 |
| xxix | சட்ட மறுப்பு ஆரம்பம் | ... | 349 |
| xxx | நைனி சிறையில் | ... | 362 |
| xxxi | எர்வாடாவில் ராஜிப் பேச்சு | ... | 377 |
| xxxii | ஐக்கிய மாகாணங்களில் வரிகொடா இயக்கம் | | 391 |
| xxxiii | எனது தகப்பனாரின் மரணம் | ... | 408 |
| xxxiv | டில்லி ஒப்பந்தம் | ... | 414 |
| xxxv | கராச்சி காங்கிரஸ் | ... | 432 |
| xxxvi | தெற்கே ஓய்வு | ... | 451 |
| xxxvii | ஒப்பந்தக்காலத்தில் தகராறு | ... | 458 |

# முதல் பாகம்

# I

## காஷ்மீரத்திலிருந்து குடியேற்றம்

"ஒருவன் தன்னைப்பற்றி எழுதுவதென்பது இனிய விஷயந்தான்; ஆனால் அது கடினமான வேலையாகும். தன்னைப்பற்றி குறைவாகச் சொல்லிக்கொண்டால், அவனுக்கு மனங்குழைந்துவிடும். தன்னைப் பற்றிப் புகழ்ந்து எழுதிக்கொண்டாலோ, அது வாசகர்களுக்குக் கசக்கும்."

—ஆபிரஹாம் கௌலி.

செல்வச் செழிப்புள்ள பெற்றோர்களுக்கு ஏகபுத்திரனாகவிருந்தால், பிள்ளை அநேகமாய் உருப்படாமல் போவது வழக்கம்; விசேஷமாக, இந்தியாவில், இது அனுபவத்தில் கண்டதாகும். அதுவும் அந்த மகன் அவனுடைய முதல் பதினொரு வயது வரையிலும் பெற்றோர்களின் ஏகபுத்திரனாக யிருப்பானாகில், அவன் தப்பித்துக்கொள்ள வழியே இல்லை. என்னுடைய இரண்டு சகோதரிகளும் என்னைக்காட்டிலும் வயதில் மிகச் சிறியவர்கள். எனக்கும் அவர்களுக்கும் இடையே பல ஆண்டுகள் வித்தியாசம். எனவே குழந்தைப் பருவத்தில், நான் தனித்துவாழவேண்டி வந்தது; என் வயதுக்கொத்த தோழர்களும் இருக்கவில்லை.

பள்ளிக்கூடத்தில் சமவயதுள்ள குழந்தைகளோடு கூட, எனக்கு சகவாசம் இல்லை. ஏனெனில் நான் எத்தகைய ஆரம்பப் பள்ளிக்கும் அனுப்பப்படவில்லை. வீட்டிலேயே தாதிகளும், உபாத்தியாயர்களும் எனக்குக் கல்வி போதித்து வந்தார்கள். எங்கள் வீட்டில் ஆட்கள் குறைவு இல்லாமல் இல்லை; மற்ற ஹிந்துக் குடும்பங்களைப்போலவே எங்களுடன் என்

னுடைய ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளும் நெருங்கிய உறவினர்களும் வசித்துவந்தனர். ஆனால் என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்னைக்காட்டிலும் வயதில் மிகவும் மூத்தவர்கள். அவர்கள் உயர்தரப்பள்ளியிலோ, அல்லது பல்கலைக்கழகத்திலோ மாணவர்களாயிருந்தார்கள். விளையாட்டிற்கும் சரி, வேலைக்கும் சரி, மிகச் சிறிய பிள்ளையாக நான் அவர்களால் கருதப்பட்டேன். எனவே இத்தனை பேர்களின் மத்தியில் வாழ்ந்துவந்த போதிலும், நான் தனிமையாகவே வளர்ந்தேன். என்னுடைய சொந்த கற்பனைகளும் தனித்த விளையாட்டுகளுமேதான் எனக்குத் தோழர்கள்.

நாங்கள் காஷ்மீர தேசத்தவர்கள். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில், எங்களுடைய மூதாதை, அந்த இமய மலைச் சரிவிலிருந்து கீழே இறங்கிவந்து, செழிப்புள்ள சம பூமிப் பிராந்தியங்களில் குடியேறி கீர்த்தியும் பொருளும் சம்பாதிக்கப் புறப்பட்டார். டில்லி பாதுஷா ஔரங்கஜீப் மாண்டு, அவரது புதல்வன் பருக்சியார் டில்லியில் சக்கரவர்த்தியாக இருந்த சமயம். முகலாய சாம்ராஜ்யத்தின் பெருமை தேய் பிறையைப்போல் தேய்ந்துகொண்டு வந்த நாட்கள். எங்களுடைய மூதாதையின்பேர் ராஜ்கால். காஷ்மீரத்திலே அவருக்கு நல்ல கீர்த்தி; அவர் சம்ஸ்கிருதத்திலும் பாரசீக மொழியிலும் சிறந்த பண்டிதர். பருக்சியார் காஷ்மீரத்துக்குச் சென்றிருந்தபொழுது, ராஜ்கால் பாதுஷாவின் கவனத்தையும் மதிப்பையும் கவர்ந்திருக்கவேண்டும். பாதுஷாவின் யோசனைக்கிணங்கி, எங்கள் குடும்பத்தார் தலைநகரான டில்லிக்கு வந்து அங்கே குடியேறினார்கள். குடியேறிய ஆண்டு 1716. ஒரு கால்வாய்க்கரையில் வீடும் நிலமும்கூடிய ஒரு ஜாகீர் ராஜ்கால் அவர்களுக்கு பாதுஷாவால் சன்மானம் அளிக்கப்பெற்றது. நஹார் என்றால் கால்வாய் என்று அர்த்தம். ராஜ்கால் கால்வாய் பக்கத்திலே குடியிருந்ததால், அவருக்கு நேரு என்ற பட்டம் கிடைத்தது. கால் என்பது எங்களுடைய குடும்பத்தின் பெயர். டில்லிக்கு வந்ததும் இது கால்-நேருவாக மாறிற்று. பின்னர் கால் என்பது நழுவிப்போய், நாங்கள் வெறும் நேருக்களாக ஆனோம்.

முகலாய சாம்ராஜ்யம் சீர்குலையும் சமயமானதால், நாட்டில் அமைதியில்லை. எனவே எங்களுடைய குடும்பத்தின் பாக்கியத்தில் பல மாறுதல்கள் நேர்ந்தன. எங்களுடைய

ஜாகீர் குறைந்துகொண்டே வந்தது. கடைசியாக ஒன்றுமே இல்லை. என்னுடைய பாட்டனாரின் தகப்பனாருக்கு லக்ஷ்மி நாராயண நேரு என்று பெயர். டில்லி பாதுஷாவின் தர்பாரிலே கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முதல் வக்கீலாக அமர்ந்தார். என்னுடைய பாட்டனார் கங்காதர நேரு 1857-ம் ஆண்டு கலகத்திற்குமுன்னர், சிறிது காலத்திற்கு, டில்லியில் போலீஸ் கொத்தவாலாக (இன்ஸ்பெக்டராக) அமர்ந்திருந்தார். அவருக்கு அகால மரணம் நேர்ந்தது. 1861-ம் ஆண்டில் மரிக்கும் பொழுது, அவருக்கு வயது 34.

டில்லிக்கும் எங்கள் குடும்பத்துக்குமிடையே இருந்த சம்பந்தம் 1857-ம் வருடக் கலகத்தால் தெறித்துப் போய்விட்டது. எங்களுடைய குடும்பசம்பந்தமான எல்லா வகை தஸ்தாவேஜுகளும், ஓலைகளும் நாசமடைந்துவிட்டன. எங்களுக்கு இருந்த சொத்துக்கள் அனேகமாக முற்றிலும் அழிந்தன. ஆதலால் பழைய தலைநகரான டில்லியைவிட்டு பிழைப்புத் தேடிக்கொண்டு போகும் கூட்டத்தாரோடு, எங்கள் குடும்பமும் ஆக்ராவிற்குப் போய்ச்சேர்ந்தது. என்னுடைய தகப்பனார் அப்பொழுது பிறக்கவில்லை. என்னுடைய இரண்டு பெரியப்பன்மார்களும் இளைஞர்கள்; அவர்களுக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும். அந்தச் சிறிய ஆங்கிலப் பயிற்சி அவர்களுக்கு மிகவும் நல்லதாக முடிந்தது. இல்லாவிட்டால் பெரியப்பன்மார்களில் சின்னவரும், குடும்பத்தில் வேறு சிலரும் அகால மரணத்திற்கு ஆளாயிருப்பார்கள். பெரிய தகப்பன்மார்களில் சிறியவர் குடும்பத்தாரில் சிலரோடு டில்லியிலிருந்து வழிப்பிரயாணம் வந்துகொண்டிருந்தார். அவருக்கு ஒரு இளையசகோதரி; சிறிய பெண்; அவளும்கூட வந்தாள். காஷ்மீரத்தில் உள்ள மற்றும் சில குழந்தைகளைப்போல இவளும் அதிக வெண்மை நிறமுடையவள். சில இங்கிலீஷ் சிப்பாய்கள் எங்கள் குடும்பத்தாரை வழியிலே சந்தித்தார்கள். என்னுடைய சிறிய அத்தை ஒரு இங்கிலீஷ் பெண்ணென்றும் அவளை என்னுடைய பெரிய தகப்பனார் யாருக்குந் தெரியாமல் அபகரித்துக்கொண்டு போகிறாரென்றும் அவர்கள் சந்தேகப்பட்டார்கள். அந்தக்காலத்திலே சந்தேகப்பட்டால் போதும்; அத்தறகடுத்த நிமிஷம் விசாரணை; மறு நிமிஷம் தண்டனை. எனவே என்னுடைய பெரிய தகப்பனாரும் குடும்பத்தின் ஏனையோர்களும் சமீபத்திலிருந்த மரத்தில் தூக்கிலிடப்பட்டு, தொங்கிக் கொண்டிருக்க நேர்ந்திருக்

கலாம். ஆனால் அதிர்ஷ்டவசமாக, என்னுடைய பெரிய தகப்பனாரின் இங்கிலீஷ் பாஷையறிவினால் தர்க்கமேற்பட்டு, சிறிது கால சாவகாசம் கிடைத்தது. அந்தசமயத்தில் அவருக்குத் தெரிந்த ஒருவர் அங்கே வர, அவர் பெரியதகப்பனாரையும் மற்றவர்களையும் காப்பாற்றினார்.

எங்கள்குடும்பம் ஆக்ரா நகரத்தில், சிலஆண்டுகள் வாழ்ந்துவந்தது. ஆக்ராவிலேதான் எனது தகப்பனார் 1861-ம் வருடம் மே மாதம் 6-ந் தேதி பிறந்தார். கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களும் இதே வருடம் இதே மாதம் இதேநாளில் பிறந்தது ஒரு ஆச்சரியமான சம்பவமாகும். என் தந்தை தன் தகப்பன் முகமறியாதவர். என்னுடைய பாட்டனார் இறந்து போன மூன்றுமாதத்திற்குப் பிறகுதான் அவர் பிறந்தார். எனது பாட்டனாரின் சிறிய சித்திரப் படம் ஒன்று எங்களிடம் இருக்கிறது. அந்தப் படத்திலே, அவர் முகலாய தர்பார் உடுப்பில் காணப்படுகிறார்; அவருடையகையிலே ஒரு வளைந்த கத்தி. இந்த அங்கங்களோடு பார்த்தால், அவர் முகலாய பிரமுகராகத் தோன்றுகிறார். என்றாலும் அவருடைய உடல் தோற்றங்கள் யாவும் "காஷ்மீரி" என்று பறைசாற்றுகின்றன.

குடித்தனப்பொறுப்பு முழுதும் என்னுடைய இரண்டு பெரிய தகப்பன்மார்கள் பேரில் சுமந்து போயிற்று. மூத்தவர் பன்ஸீதார் நேரு; ஆங்கில அரசாங்கத்தில் நீதி இலாகாவில் உத்தியோகம் பெற்று, பல்வேறிடங்களில் வேலைபார்த்து வந்ததால் அவருக்கும் குடும்பத்தின் ஏனையோர்க்கும்நெருங்கிய சம்பந்தம் இல்லாமற் போயிற்று. இளையவர் நந்தலால் நேரு; இந்திய சமஸ்தானம் ஒன்றில் வேலைக் கமர்ந்து, ராஜபுதனத்தில் இருக்கும் கேத்ரி சமஸ்தானத்தில் பத்து வருடம் திவானாக இருந்தார். பின்னர் அவர் சட்டம் படித்து ஆக்ராவில் வக்கீலாக தொழில் நடத்தினார்.

என்னுடைய தகப்பனார் அவருடன் வசித்து வந்தார். அவருடைய அன்பு நிறைந்த பாதுகாப்பிலே வளர்ந்தார். அவர்கள் இருவருக்குள்ளும் நேசபாசம் மிகவும் அதிகம். அவர்களுடைய உறவில் சகோதர வாஞ்சையும் பிதாபுத்திர பாவமும் கலந்து கிடந்தன. என்னுடைய தகப்பனார் "கடைக்குட்டி" ஆனதால், எனது பாட்டியாருக்கு அவர் செல்வப் புதல்வன் என்று சொல்லவும் வேண்டுமோ? என்னுடைய பாட்டி

யார் "பெரிய" பொல்லாத கிழவி! முரட்டுப் பிடிவாதமுள்ளவள்! அவரை யாரும் அலட்சியம் செய்ய முடியாது. அவர் இறந்து சுமார் 50 வருஷங்கள் ஆகின்றன. ஆனாலும் அவருடைய பெயரைச் சொன்னால், இன்றைக்கும் காஷ்மீரி ஸ்திரீகளுக்குள் நடுக்கம் உண்டாகும். அவருடைய சங்கற்பத்திற்கு குறுக்கே யாரும் நிற்கமுடியாது.

ஆக்ராவில் புதிதாக அமைக்கப் பெற்ற உயர்தரநீதி மன்றத்தில் எனது பெரிய தகப்பனார் வக்கீல் தொழில் நடத்திவந்தார். இந்தக் கோர்ட்டு ஆக்ராவிலிருந்து அலகாபாத்திற்கு வந்ததும், குடும்பமும் அலகாபாத்திற்கு வந்து சேர்ந்தது. அன்று முதல் அலகாபாத் எங்களுடைய வாசஸ்தலமாயிற்று. அங்கேதான் பல ஆண்டுகள் கழித்து நான் பிறந்தேன். என்னுடைய பெரிய தகப்பனாருக்கு தொழிலில் வருமானம் ஏராளமாக வரத் துவக்கிற்று. அவர் தலைமை வக்கீல்களில் ஒருவரானார். இதற்கிடையே என்னுடைய தகப்பனார் கான்பூரிலும அலகாபாத்திலும் பள்ளியிலும் கல்லூரியிலுமாக படித்துவந்தார். அவர் சிறுபிராயத்தில் பாரசீக அரபிபாஷைகளைத்தான் படித்தார். சுமார் பதினைந்து பிராயத்திற்குப் பின்னரே, அவர் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார்.

சிறு பிராயத்திலேயே அவர் ஒரு சிறந்த பாரசீக வித்வானாக மதிக்கப்பெற்றார். அவருக்குக் கொஞ்சம் அரபிபாஷையும் வருமாதலால், அவரிடம் வயதானவர்களுக்குக்கூட அதிக மரியாதை உண்டு. ஆனால் மகாபுத்திசாலியாயிருந்தாலும்கூட, அவருடைய பள்ளி கலலூரி வாழ்க்கை திறம்பட நடைபெறவில்லை. அவற்றில் அவர் சரியான கவனம் செலுத்தவில்லை. அவர் "படிக்கிற" பிள்ளையாக நடந்து கொள்ளவேயில்லை. விளையாட்டிலேதான் கருத்து. குறும்புத்தனமாக ஏதாவது செய்வதில், அவர் தமது புத்திக்கூர்மையைச் செலுத்திவந்தார். கல்லூரியில் "அவர் காலிக்கூட்டத்திற்கு" தலைவராக கருதப்பட்டார். அவருக்கு மேனாட்டு உடையிலும் ஏனைய மேனாட்டுப் பழக்கவழக்கங்களிலும் மோகமதிகம். கல்கத்தா, பம்பாய் முதலிய பெரிய நகரங்களில் தவிர, இத்தகைய ஆசை இந்தியர்களிடம் அந்தக்காலத்தில் விசேஷமாக இருக்கவில்லை. சிறிது முரடாயிருந்தாலும் அவரிடம் அவருடைய இங்கிலீஷ் ஆசிரியாகளுக்கு அன்பு அதிகம். அவர்கள் அவரைப் பல சிக்கல்களினின்றும் தப்பித்துவிட்டார்கள். அவருடைய

புத்தியிலும் அவர்களுக்கு மிகவும் பிரியம். சரியாகப் படிக்காத போதிலும் சாமர்த்தியத்தால் படிப்பிலும் சமாளித்துக் கொண்டுவந்தார். அலகாபாத் மியூர்சென்ட்ரல் காலேஜுக்குத் தலைமை ஆசிரியராக யிருந்த ஹாரிசன் அவர்களிடம் என் தகப்பனருக்கு மிகுந்த பக்தி. தாம் மாணவராயிருந்த காலத்தில், தமக்கு ஹாரிசன் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்றை வெகுகாலம் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்தார்.

கல்லூரிப் பரீக்ஷைகளில் அவர் தேறினர். ஆனல் சிறப்பாக ஒன்றும் சொல்வதற்கில்லை. கடைசியாக பி. ஏ. பரீக்ஷைக்குச் சென்றார். ஆனல் படிக்கவேயில்லை. முதல் பரீக்ஷையில் எழுதினர்; திருப்திஇல்லை. பரீக்ஷை தேருது என்று நினைத்து, மற்ற பரீக்ஷைகளில் எழுதாமல் தாஜ்மகால் கட்டிடத்தில் உல்லாசமாகத் தமது காலத்தைக் கழித்தார். அந்தக் காலத்தில் அலகாபாத் சர்வகலாசாலைப் பரீக்ஷைகள் ஆக்ராவில் நடைபெற்றுவந்தன. என்தகப்பனர் பரீக்ஷைகளுக்கு எழுதாத செய்தியைக் கேட்டு, அவருடைய ஆசிரியர் அவரை வரவழைத்து ரொம்பவும் திட்டினர். முதல்பரீக்ஷையில் அவர் தேறினர் என்றும், அசட்டுத்தனமாக ஏனைய பரீக்ஷைகளில் அவர் கலந்துகொள்ளாதது மிகவும் தப்பிதம் என்றும், ஆசிரியர் கடிந்து பேசினர். என்ன சொல்லி என்ன! என்னுடையதகப்பனருக்கு பி. ஏ. பட்டம் கிடைக்காமற்போயிற்று. அவர் ஒருநாளும் பி. ஏ. பட்டதாரியாகவில்லை.

ஒருதொழிலில் புகுந்துகொள்ளவேண்டுமென்ற வைராக்கியம் அவருக்கு உண்டாயிற்று. சட்டம்தான் படிக்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டார். ஏனெனில், அக்காலத்திலே இந்தியாவில் புத்திக் கூர்மையுள்ளவர்களுக்கு, வக்கீல் தொழில் மூலமாகத்தான் ஏராளமான வருமானம வந்து கொண்டிருந்தது. மேலும் அவருடைய தமையனர் ஒருபிரபல வக்கீலல்லவா! எனது தகப்பனர் ஹைகோர்ட்டு வக்கீல் பரீக்ஷைக்குப் போனர். அதிலே தேறினது மட்டுமன்றி, தேறினவர்களுக்குள் முதன்மை யாதலால் தங்கப் பதக்கமும் பெற்றார். சட்டம் அவருடைய மனதிற்கிசைந்த தொழில். அதில் வெற்றி பெறவேண்டுமென்று தீர்மானங்கொண்டார்.

கான்பூர் ஜில்லாக் கோர்ட்டுகளில் தொழிலை ஆரம்பித்தார். வெற்றியைநாட்டிக் கடுமையாக உழைத்தார். சீக்கிரத்

தில் நல்ல வருமானம் வர ஆரம்பித்தது. விளையாட்டுகள், களியாட்டங்கள் விநோதங்கள் முதலியவற்றில் அவருக்கிருந்த ஆசை குறையவேயில்லை. முக்கியமாக அவருக்கு தண்டால் எடுப்பதிலும், குஸ்தி போடுவதிலும் அதிக ஆசை. அந்தக் காலத்தில் கான்பூரில் குஸ்திப் பந்தயங்கள் ரொம்ப அதிகம்.

கான்பூரில் மூன்று ஆண்டுகள் அவர் தொழில் கற்றுக் கொண்டபிறகு, ஹைகோர்ட்டில் தொழில் நடத்துவதற்காக, அலகாபாத்துக்கு என் தந்தை வந்து சேர்ந்தார். அவர் வந்து சேர்ந்த சிறிது காலத்திற்குள், அவருடைய தமயனார் பண்டித நந்தலால் திடீரென்று இறந்துபோனார். இது என்னுடைய தகப்பனாருக்கு தாங்கமுடியாத துர்திர்ஷ்டம். தகப்பனைப்போலிருந்த அருமையான சகோதரர் இறந்துபோன துக்கம் ஒருபுறம், பெரும் குடும்பத்தை வகித்துப் போஷித்தவர் மறைந்த நஷ்டம் மறுபுறம். இனி, பெரிய குடும்பத்தை போஷித்து நடத்தும்பொறுப்பு இளவயதினரான எனது தகப்பனாரின் பேரில் விழுந்தது.

தனது தொழிலில் வெற்றி பெறவேண்டுமென்ற ஆர்வத்தினால் அதனிலேயே மூழ்கினார். பல மாதங்கள் அவர் வேறு எதையும் கவனிக்கவில்லை. தனது தமையன் வழக்குகளெல்லாம் அவருக்கு வந்தன. அவற்றைத் திறமையாக நடத்தியதால் தான் கோரிய வெற்றி கிடைத்தது. அத்துடன் அதிக வழக்குகளும் பணமும் குவிந்தன. சிறுவயதிலேயே வக்கீல் தொழிலில் பெயர் பெற்றார். ஆனால் அதன் பொருட்டு அத்தொழிலுக்கே அடிமையுமானார். வேறு எத்தகைய அலுவலிலும் கலந்துகொள்ள நேரமே கிடைக்கவில்லை. ஓய்வு காலங்களையும் விடுமுறை நாட்களையும்கூட தம் தொழிலிலேயே கழித்துவந்தார். ஆங்கிலங் கற்ற மத்திய வகுப்பு இந்தியர்களின் கவனத்தை காங்கிரஸ் மஹா சபை அக்காலத்தில் கவர்ந்து கொண்டுவந்தது. என் தந்தையும் அதன் சில கூட்டங்களில் கலந்து தன் விசுவாசத்தைத் தெரிவித்தார். ஆனால் அதன் வேலையில் அவருக்கு அதிக சிரத்தையில்லை. தன் தொழிலுக்கே அவருக்கு சாவகாசம் போதவில்லை. தவிரவும் அந்நாட்களில் அரசியலிலும் மற்ற பொது விஷயங்களிலும் தெளிவான அபிப்பிராயங்கள் அவருக்கு ஏற்படவில்லை. அதுவரையிலும் அவைகளைப் பற்றி யாதொரு கவனமும் செலுத்தியதில்லை. அதனால்

அவைகளைப் பற்றிய அறிவும் விசேஷமாக இருக்கவில்லை. தான் முன்னணியில் நில்லாது பிறருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி நேரிடக்கூடிய எந்த இயக்கத்திலும் ஸ்தாபனத்திலும் அவருக்குச் சேர இஷ்டமில்லை. வாலிபத்திலும், யௌவனத்திலும் அவருக்கிருந்த முரட்டுத்தனம் வெளிப்படையாக தணிந்து காணப்பட்ட போதிலும், அது அவரை விட்டுப் போய்விடவில்லை. அதிகார ஆசையாக மாற்று ஸ்வரூபம் எடுத்து நின்றது. தொழிலில் அது வெற்றியைக் கொடுத்து, அவருடைய கர்வத்தையும் சுயமதிப்பையும் அதிகரிக்கச் செய்தது. சண்டையில் அவருக்கு அதிக ஆசை. தனக்கு மிஞ்சிய பலத்தை எதிர்ப்பதில கொண்டாட்டம். எனினும் அக்காலத்தில் அவர் அரசியல் மேடையை விரும்பவில்லை.

அக்காலத்திய தேசீய காங்கிரஸின்போக்கில், போராட்டத்திற்கு வழியே இல்லை என்பது உண்மைதான. என்றாலும அரசியல் வஷ்யங்களில் பழக்கமில்லாததொன்று. மேலும் அவரது மனம் வக்கீல் தொழிலில் ஈடுபட்டுக்கிடந்தது. வெற்றி ஏணியை நன்றாகப்பற்றிக்கொண்டு, அவர் ஒவ்வொரு படியாக ஏறிவிட்டார். பிறருடைய தயவால் அல்ல, யாருடைய ஒத்தாசையாலும் அல்ல; அது அவருடைய திடசங்கற்பத்தால் ஏற்பட்ட வெற்றியாகும். கூர்மையான புத்தி விசேஷத்தால் உண்டான ஜயமாகும்.

அவரும் ஒருவிதமான தேசீயவாதிதான். ஆனால் அவருக்கு இங்கிலீஷ்காரரிடத்திலும் அவர்களுடைய பழக்க வழக்கங்களிலும் மோகம் அதிகம். தம்முடைய தேசத்தார் தாழ்மையடைந்து விட்டார்கள் என்றும், அது சரியானது தான் என்றும் அவர் எண்ணியிருந்தார். ஒன்றும் செய்யாமல், பேசிப் பேசிக்காலத்தைக் கடத்தும் அரசியல் வாதிகளிடம் அவருக்கு அதிக மதிப்பில்லை. ஆனால் அரசியல் வாதிகள் பேசாமல், வேறு என்னசெய்யக்கூடும் என்பதைப்பற்றி அவர் சிந்தித்ததும் இல்லை. மேலும் அவருக்கு ஒரு எண்ணம். இந்த எண்ணம் அவருடைய வெற்றி கர்வத்தால் ஏற்பட்டதாகும். வாழ்க்கையில் தோற்றவர்களில் பலர் அரசியலில் புகுந்துகொள்ளுகிறார்கள் என்பது அவருடைய நிச்சய நிறைந்த நினைப்பு.

வருமானம் விரைவில் அதிகப்பட்டுக்கொண்டே போனதால், எங்கள் வாழ்க்கையிலும் மாறுதல்கள் உண்டாயின.

அதிக வருமானம் என்றால் அதிகச்செலவு என்று அர்த்த மல்லவா? பணத்தை மீத்து வைப்பது என்பது என் தகப் பனாருக்கு பிடிக்காத காரியம். எவ்வளவு தேவையோ, எப் பொழுது விருப்பமோ, அவ்வளவையும் அப்பொழுதே சம் பாதிக்கக்கூடிய தம் சாமர்த்தியத்திற்கு, பணத்தை முன்ன தாகவே சேர்க்க முயலுவது இழிவு என்றும் எண்ணினார். அவருக்கு குஷி அதிகம். ஜோராக வாழ்க்கை நடத்தவேண்டு மென்ற ஆசை அதிகம். எனவே சம்பாதித்ததை செலவு செய்வதில் அவர் நிபுணர். கொஞ்சம் கொஞ்சமாக எங்க ளுடைய வீட்டில் மேனாட்டு ஐரோப்பிய நாகரிகம் குடியேறி விட்டது.

என்னுடைய குழந்தைப்பருவத்தில் எங்களுடைய குடும் பம் இருந்த நிலை இது தான்.

நான் 1889-ம் வருஷம் நவம்பர் மாதம் 14-ந் தேதி அலகா பாத்தில் பிறந்தேன்.

# II

## குழந்தைப்பருவம்

எனது குழந்தைப்பருவம் இவ்வாறு வீட்டிலேயே ஒதுங்கிக் கழிந்தது. ஆகவே குறிப்பிடத்தக்கதாக ஒன்றும் நேரவில்லை. வயதில் மூத்த எனது ஒன்றுவிட்ட சகோதரர்களின் பேச்சை ஆவலுடன் கேட்பேன். ஆனால் அதன் அர்த்தம் முழுதும் எனக்குப் புரியாது. அடிக்கடி ஒரே ஒரு பேச்சைத் தான் திருப்பித் திருப்பி அவர்கள் பேசுவார்கள். இங்கிலீஷ்காரர்களும் யூரேஷியர்களும் எவ்வளவு செருக்குடன் இருக்கிறார்களென்றும் அவர்கள் நாள்தோறும் இந்தியர்களை அவமானப் படுத்துகிறார்கள் என்றும், இதை இந்தியர்கள் பொறுத்துக்கொண்டிராமல் எதிர்த்துப்போராட வேண்டுவது அவர்களுடைய கடமை என்றும் பேசிக்கொள்வார்கள். அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே மனஸ்தாபங்கள் அடிக்கடி நேருவதைக்குறித்து அவர்கள் விஸ்தாரமாகப் பேசிக்கொள்வார்கள்.

ஒரு இங்கிலீஷ்காரன் இந்தியன் ஒருவனைக் கொன்றபொழுதெல்லாம், அவன் தன்னினத்தைச் சேர்ந்த வெள்ளை ஜூரிகளால் விடுதலை செய்யப்படுவது மிக சாதாரண நிகழ்ச்சியாயிருந்து வந்தது. ரயில்வண்டித் தொடர்களில் ஐரோப்பியர்களுக்கென்று தனி அறைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. ரயிலிலே எவ்வளவு கூட்டமாயிருந்தாலும் (கூட்டம் மிதமிஞ்சி இருப்பது சாதாரண அனுபவமாக விருந்தது.) ஐரோப்பியர்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட அறைகளில், அவைகள் காலியாயிருந்தபோதிலும், எந்த இந்தியனும் உட்கார்ந்து பிரயாணம் செய்யக்கூடாது. சிற்சில சமயங்களில் ஒதுக்கிவைக்கப்படாமல் இருந்தாலுமே, இங்கிலீஷ்காரன் ஒருவன், ஒரு அறையில் உட்கார்ந்துகொண்டு இந்தியன் எவனையும், அதற்குள் வரவிடமாட்டான். பொதுஸ்தலங்களிலும், பொதுமக்கள் கூடக்கூடிய பூந்தோட்டங்களிலும் கூட, ஐரோப்பியர்களுக்கென்று தனியாக நாற்காலிகளும் பெஞ்சுகளும் போடப்பட்டிருக்கும்.

இவ்வாறு செருக்குடன் எனது தேசத்தாரிடம் நடந்து கொள்ளும் அந்நியநாட்டு அதிகாரிகளின் பேரில், எனக்கு அடங்காத ஆத்திரம் உண்டாகும். எப்பொழுதாவது ஒரு இந்தியன் "திருப்பிக்கொடுத்தால்" எனக்குப் பரம ஆனந்தம். இந்த மாதிரி அடிக்கடி எனது சகோதரர்களும் அவர்களுடைய நண்பர்களும் "திருப்பிக்கொடுத்து விடுவார்கள்". அப்பொழுது எங்களுடைய பரபரப்பைச் சொல்லமுடியாது. என்னுடைய சகோதரர்களில் ஒருவன் எங்கள் குடும்பத்திலேயே நல்ல "சாகஸி". இங்கிலீஷ்காரனை வம்புக்கு இழுப்பதென்றால், அவனுக்கு ரொம்ப ஆசை. அதுவும் யூரேஷியர்களென்றால் இன்னும் அதிக குஷி. ஏனெனில் இந்தச் சட்டைக்காரர்கள் தங்களை இங்கிலீஷ்காரர்களாகவே மதித்துக்கொண்டு, அதிகாரம் செய்யத் துவக்கி, அசல் இங்கிலீஷ் வியாபாரியையும் அதிகாரியையும் காட்டிலும் மோசமாய் நடந்துகொள்வது வழக்கம். இத்தகைய சச்சரவுகள் முக்கியமாக ரெயில் பிரயாணங்களில் நடக்கும். அன்னியநாட்டார்கள் இந்த தேசத்தை ஆண்டு, தங்கள் செருக்கைக் காண்பிக்கிறார்களே என்று நான் மிகவும் ஆத்திரப்பட்டபோதிலும், தனிப்பட்ட எந்த இங்லீஷ்காரன் பேரிலும் எனக்கு விரோத உணர்ச்சி இருந்ததே இல்லை. ஆங்கில மாதிகளிடம் நான் கல்வி கற்றுக்கொண்டதுண்டு. இங்கிலீஷ் நண்பர்கள் பலர் என்னுடைய தகப்பனாரைப் பார்க்க வருவதைக்காண்பேன். என் மனதிற்குள்ளே இங்கிலீஷ்காரர்களைக் கண்டால், எனக்கு மதிப்பு அதிகம் என்றுதான் சொல்லவேண்டும்.

மாலை நேரங்களில் வழக்கமாக பலநண்பர்கள் தகப்பனாரைப் பார்க்க வருவார்கள். நாள் வேலை முடிந்ததும், என்னுடைய தகப்பனார் குதூகலமாயிருப்பார். அப்பொழுது அவர் சிரிக்கும் "கோடையிடி" ச் சிரிப்பினால், வீடுமுழுதும் ஒலிக்கும். அவருடைய சிரிப்பைப்பற்றி அலகாபாத்தில் எல்லோரும் பேசிக்கொள்ளத் தலைப்பட்டார்கள். சில சமயங்களில் திரையின்பின்னே இருந்து, அவரையும் அவரது நண்பர்களையும் எட்டிப்பார்ப்பேன். இந்தப் பெரிய பேர்வழிகள் தங்களுக்குள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்று அறிய எனக்கு ஆவல். நான் எட்டிப்பார்ப்பது தெரிந்து போனால், என்னை கரகரவென்று பிடித்து இழுப்பார்கள் கொஞ்சம் பயத்தோடு, தகப்பனாருடைய மடியின்மேல் உட்கார்ந்துவிட்டுத் திரும்பி ஓடிவந்துவிடுவேன்.

ஒரு சமயத்தில் அவர் கிளாரெட்டோ அல்லது வேறு சிவப்பு சாராயம் ஏதோ குடித்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். விஸ்கி எனக்குத் தெரியும். அவரும் அவருடைய நண்பர்களும் விஸ்கி குடிப்பதை அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தச் சிவப்பு சரக்கைக் கண்டு, நான் நடுங்கிப்போனேன். ஓடோடியும் தாயாரிடம் போய், "அம்மா! அப்பா இரத்தத்தைக்குடித்துக்கொண்டிருக்கிறார்" என்று சொன்னேன்.

தகப்பனரிடம் எனக்கு அடங்காதபெருமை. தைரியம், புத்தி, தேகவலிமை மூன்றும் சேர்ந்து உருவெடுத்தாற்போல, அவர் என் கண்ணில் பட்டார். அவருக்கு நிகராக யாரையுமே சொல்ல முடியாது. வயதாக வயதாக நானும் அவரைப் போல் ஆகவேண்டும் என்று ஆசைகொண்டேன். அவரிடம் எனக்கு அன்பும் பக்தியும் இருந்தபோதிலும், அவரைக்கண்டால் திகில்தான். அவர் வேலைக்கார்ரர்களிடமும் மற்றவர்கள் பேரிலும் கோபிப்பதைப் பார்க்கவேண்டுமே! மிகவும் பயங்கரமான காட்சி. நடுநடுங்கிப்போவேன். வேலைக்காரனை இவ்வளவு கேவலமாக நடத்தலாமா என்றும் ஆத்திரப்படுவேன். அந்த நாட்களிலே அவர் கோபம்—அப்பா! பொறுக்க முடியாத சங்கதி. அவருடைய பிற்கால வாழ்வில் இத்தகைய கோபமு, அவரிடம் இருந்ததில்லை. ஆனால் நலல வேளையாக அவரிடம் ஏராளமாக நகைச் சுவையும் இருந்தது. திடசித்தமும்கூட உண்டு. அவர் எளிதிலே தன்னை அடக்கிக் கொள்ளவும் செய்வார். வயதாக வயதாக, இந்த சக்தி அவரிடம் அதிகமாகக் காணப்பட்டது. பழைய கோபத்தைப் பாரப்பது அரிதாகிவிட்டது.

அவருடைய பொல்லாக் கோபந்தான், என் ஆதிஞாபகங்களில் முக்கியமாக நினைவுக்கு வருகின்றது. அக்கோபத்துக்குப் பலியானவன் நான் தான. எனக்கு ஐந்தாறு வயதிருக்கும். அவருடைய காரியாலய மேஜையில் இரண்டு, பவுண்டன் பேனுக்கள் இருப்பதை ஒருநாள் கண்டேன். இலேசாக அவைகள் பேரில என் . கடைக்கண் பார்வை சென்றது. இரண்டு பேனுக்களும் தகப்பனருக்கு ஒரே காலத்தில் தேவையாக இருக்க முடியாது என்று எனக்குள்ளாகவே வாதஞ் செய்துகொண்டு, ஒன்றை எனக்கென்று எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன். வீடு முழுதும் ஒரே இரைச்சலும் சந்தடியும் உண்டாயிற்று. கெட்டுப்போன பேனுவுக்காக கெடு

பிடியாகத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிந்தது. எனக்கு ஏற்பட்ட நடுக்கம். "ஐயோ! என்னவோ செய்துவிட்டேனே" என்று எண்ணினேன். ஆனால் என் குற்றத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. பேனா அகப்பட்டது. அதோடு என் திருட்டும் வெளியாயிற்று. அப்பாவுக்கு அடக்கமுடியாத ஆத்திரம். போரடியாக அடித்துப் போட்டு விட்டார். வலி பொறுக்கமுடியவில்லை. அவமானம் சகிக்க முடியவில்லை. மயக்கம் போட்டு விழுந்துவிடுவேன்போலிருந்தது. அம்மாவிடம் ஓடினேன். அதற்குப் பிறகு பலநாட்கள், என் தேகத்திலிருந்து வலியும் கிலியும் நீங்குவதற்காக தைலங்களைத்தடவி சிகிச்சை செய்தார்கள்.

தகப்பனார் என்னை இவ்வாறு அடித்ததற்காக, அவரிடம் எனக்குயாதொரு வருத்தமும் ஏற்படவில்லை. "தண்டனை நியாயம்தான்; ஆனால் அதைக் கொஞ்சம் அதிகப்படுத்திவிட்டார்" என்று நான் எண்ணி இருக்கவேண்டும். அவரிடம் அன்பும் பக்தியும் வளர்ந்துகொண்டே வந்தபோதிலும் பயம் மட்டும் தீர்ந்தபாடில்லை. ஆனால் அம்மாவிடம் வேறு போக்கு. அவரிடத்தில் எனக்கு பயமே கிடையாது. அவருக்கு என்னிடம் எல்லைகடந்த அன்பு. நான் எது செய்தாலும் அவரது கண்களில் அது சரியென்று பட்டுக்கொண்டிருந்தது. ஆகவே நான் அவர்பேரில் அதிகாரஞ் செலுத்த தொடங்கினேன். தகப்பனாரிடங் காட்டிலும் தாயாரிடம்தான் நான் அதிகமாகப் பழகிவந்தேன். அவர்தான் என்னிடம் நெருங்கிப் பழக்கூடியவர். தந்தையிடம் சொல்லக்கூடாத எந்த சங்கதியையும் அவரிடம் சொல்லிவிடுவேன். அவர் மெல்லியவள். அதிக உயரமில்லை. நான் விரைவில் வளர்ந்துவிட்டபடியால், அவரோடு சரிசமான உயரத்திற்கு வந்துவிட்டேன். அவர் வெகு அழகு. அவருடைய அதிசயப்படத்தக்க சிறிய, அழகிய கைகளையும் பாதங்களையும் பார்த்து நான் மகிழ்ச்சி கொள்வேன். அவர் காஷ்மீரத்திலிருந்து புதிதாகவந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவள். அவருடைய ஜனங்கள் இரண்டு தலைமுறைக்கு முன்னர்தான் காஷ்மீரத்தைவிட்டு வெளியேறினார்கள்.

என்னுடைய சிறு பிராயத்திலே, இன்னொருவர் என் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். அவர் என் தகப்பனாருடைய முன்ஷி. அவருக்கு முன்ஷி முபராக் அலி என்று பெயர். படான் என்ற ஊரிலே செல்வாக்குள்ள ஒரு

குடும்பத்தில் தோன்றியவர். 1857-ம் வருஷக்கலகத்தினுல், அவருடைய குடும்பம் சீரழிந்து போய்விட்டது. இங்கிலீஷ் துருப்புகள் அக்குடும்பத்தில் பலரைக் கொன்றுவிட்டன என்று சொல்லவேண்டும். இந்த ஆருத்துயரத்தால், முன்ஷி மிக மிருது சுபாவமுள்ளவராளுர். எவரிடத்தும் அவருக்கு தயவு. முக்கியமாக குழந்தைகளிடம் அவருக்கு பேரன்பு. எனக்கு துக்கமோ, கஷ்டமோ ஏற்பட்டால், நான அவரிடம் தான் அடைக்கலம் புகுந்து கொள்ளுவேன். அவருடைய நேர்த்தியான நரைத்த தாடியைக்கண்டால், எனக்கு ஆனந்தம். என்னுடைய இளங்கண்களுக்கு அவர் பெரிய ஜாம்பவாளுகத் தோன்றிஞர். அவர் கதைக் களஞ்சியம். எத்தனே கதைகள் சொல்லுவார்! எவ்வளவு ருசியாயிருக்கும்! அவருடைய தேகத்தின் பக்கத்திலே ஒண்டிக்கொண்டு, வெகு நேரம் கதை கேட்டுக் கொண்டிருப்பேன். அராபிநைட்கதைகள், வேறு கதைகள், அல்லது 1857-58 ம் வருடங்களில் நடந்த கலகத்தின் வரலாறுகள் எல்லாம் சொல்லுவார். நான் பெரியவளுகிப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் தான, முன்ஷி இறந்துபோளுர். அவருடைய ஞாபகம் இன்றைக்கும் எனக்கு ஒரு அழியாத அருந்தனமாகத் திகழ்கின்றது.

வேறு பலரிடமும் கதைகளே கேட்பேன். புராதன ஹிந்து புராணக்கதைகள், ராமாயணம், மகாபாரதம் முதலிய ஹிந்துக் கதைகள் முதலியவற்றை என் அம்மாவும் பெரியம்மாவும எனக்குச் சொல்லுவார்கள். எனது பெரியம்மா (பண்டிட் நந்தலாலின் மனேவியார்) பழைய இந்திய நூல்களில் தேர்ச்சி பெற்றவர்; அவரிடம் கதைகளுக்குக் குறைவு இருந்ததே இல்லே. பழைய இந்தியகிராமக் கதைகளேயும் புராணக்கதைகளேயும் அவர் எனக்குச் சொல்லுவார். இக்கதைகளில் எனக்கு விசேஷ பரிச்சயம் உண்டாயிற்று.

மதத்தைப்பற்றி எனக்கு தெளிவான எண்ணம் இல்லே என்று சொல்லலாம். மதம் என்பது பெண்களின் பொழுது போக்கு என்று எனக்குத் தோன்றிற்று. தகப்பளுரும் எனது ஒன்றுவிட்ட சகோதரர்களும் மதத்தைப்பற்றிக் கேலியாகவும் குஷியாகவும் பேசுவார்கள். வீட்டிலுள்ள ஸ்திரீகள் அடிக்கடி பூஜைகள் செய்வார்கள். நோன்புகள் கொண்டாடுவார்கள். இவைகளிலே எனக்குப் பிரியம். சில சமயங்களில் அம்மாவோடு அல்லது பெரியம்மாவோடு கங்கையில் ஸ்நானம் செய்யப்போவேன். சில சமயங்களில் அலகாபாத், காசி, முதலிய

ஸ்தலங்களில் இருக்கும் கோயில்களுக்கு நாங்கள் போவதுண்டு. மகா சாது என்று சொல்லப்படும் சன்னியாசிகளின் தரிசனத்துக்காகவும் நாங்கள் செல்லுவதுண்டு. ஆனால், இதனையெல்லாம் என்னுடைய உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சியும் ஏற்படவில்லை.

பண்டிகை திருநாட்களின் குதூகலங்களை நினைக்க, இன்னும் எனக்கு மகிழ்ச்சி உண்டாகின்றது. ஹோலிதினத்தன்று நகரம் முழுதும் ஒரே களியாட்டம் தான். நாங்கள் ஒருவர் மற்றவர் பேரில் நீரை வாரி இறைப்போம். ஆயிரக் கணக்கான மண் விளக்குகளில் (அகல்களில்) தீபம் ஜ்வலித்து எரியும். தீபாவளித் திருநாளைக் கண்டு, எங்களுக்குக் கொண்டாட்டம். நடுநிசி வரையிலும் நாங்கள் விழித்திருக்க முடியாவிடினும், கிருஷ்ணன் சிறையில் அவதாரம் செய்த ஜன்மாஷ்டமியை உற்சாகத்துடன் கொண்டாடுவோம். தசரா பண்டிகை, ராமலீலா இவைகள்வரும். பெரிய பெரிய ஊர்வலங்கள் ! ராமன் இலங்கையை ஜயித்த நினைவு ஜனங்களுக்கு உண்டாகும். ஏராளமான கூட்டங்கள். மொகரம் பண்டிகையின் ஊர்வலங்களைப் பார்ப்பதற்காக உடை சிங்காரத்துடன் குழந்தைகள்செல்லுவார்கள். தூரத்திலிருக்கும் அரேபியாவில் ஹாசன், ஹுசேன் என்ற இரு பக்தர்கள் மாண்ட பயங்கரக் காட்சியின் ஞாபகத்தைக் கொண்டாடும் இந்த ஊர்வலங்களில், திரளான ஜனங்கள் சேர்ந்துகொள்வார்கள். இட், திருநாள்களிலும், முன்ஷிஜி அவர்கள், தம்மிடத்திலிருக்கும் உயர்ந்த உடுப்புகளைப் போட்டுக்கொண்டு, பெரிய 'பள்ளி' வாசலுக்கு தொழுகைக்காகச் செல்லுவார். அந்தத் திருநாட்களில், நான் அவருடைய வீட்டுக்குப்போய், இனிப்பான சேமியா முதலிய பக்ஷணங்களைத் தின்பேன். ஹிந்து பஞ்சாங்கப்படிக்கு, இன்னும் எத்தனையோ சில்லரைப் பண்டிகைகள் வரும்.

காஷ்மீரிகளுக்குள், நாங்கள் பிரத்தியேகமாக வேறு சில திருநாட்களை சிறப்பாகக் கொண்டாடுவதுண்டு. இதிலே முக்கியமானது வருஷப்பிறப்பு. சம்வத் பஞ்சாங்கப்படி, இந்த நாளைக்கொண்டாடுவோம். நாங்கள் புது ஆடைகள் உடுத்திக் கொள்வோம். சிறுவர்களுக்கு அன்று சிறியதொகைகள் இனாமாகக் கிடைக்கும்.

இந்தத் திருநாட்கள் எல்லாவற்றைக் காட்டிலும், வருஷத்துக் கொருமுறை எனக்காக வரும் கொண்டாட்டத்தில்

எனக்கு ரொம்பப் பிரியம். அது என் பிறந்தாள் கொண்டாட்டம். அன்றைக்கு எனக்கு குதூகலம். அன்றைய காலையில் பெரிய தராசின் ஒரு தட்டில் என்னை வைப்பார்கள். இன்னொரு தட்டில் சிறிய சிறிய மூட்டைகளாக கோதுமையும், வேறு சாமான்களும் வைத்து எடைபோட்டு, அவைகளை எளியவர்களுக்குக் கொடுப்பார்கள். பின்னர் நான் கோடி உடுத்திக் கொள்வேன். வாழ்த்துப் பரிசுகள் அளிப்பார்கள். பிறகு விருந்துகள் நடைபெறும். அன்றைக்கு நான்தான் கதாநாயகன். இந்த ஜன்ம தினங்கள் கிட்டக் கிட்ட வரவில்லையே என்று நான் வருந்துவதுண்டு. அதற்காகக் கிளர்ச்சிசெய்யக் கூட உத்தேசித்தேன். பிறந்நாட்கள், நெருங்கிவரும் முதுமையின் ஞாபகச் சின்னங்களாக மாறிவிடும் காலம் வரும் என்று நான் அப்பொழுது உணரவில்லை. அறியாப்பிள்ளைதானே! சகோதரர்கள், உறவினர்கள் அல்லது குடும்பத்து நண்பர்களின் கல்யாணத்திற்காக சிலசமயங்களில், எங்கள் குடும்பத்தார் எல்லோருமாக நெடுந் தூரத்திலுள்ள ஊருக்குப் பிரயாணமாய்ப் போவோம். வழிப் பிரயாணம் செல்லுகையில், நாங்கள் குழந்தைகள் எல்லோரும் ஆனந்தம் அடைவோம். கலியாண நாட்களில் யாதொருகட்டுப்பாடும் இருக்காது. எனவே நாங்கள் எங்கேயும் ஓடித்திரிவோம். கலியாண வீட்டில் எல்லோரும் கூட்டமாகக் கூடிக்கொண்டிருப்பார்கள். பல குடும்பங்கள் வந்திருக்கும். அப்பொழுது அநேக சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்து களிப்பார்கள். இந்த சமயங்களில் நான் மூலையில் தனியாக இருப்பதில்லை. எல்லோருடனும் கூடி விளையாடுவேன். குறும்புகளிலும் சந்தோஷமாக கலந்துகொள்வேன். பெரியவர்கள் கண்டித்தாலும் கவலைப்படமாட்டோம்.

இந்தியாவிலே நடைபெறும் கலியாணங்களில் ஏழை பணக்காரர் எல்லோரும் அவசியமாகப் பணம் செலவு செய்து ஆடம்பரப்படுத்துகிறார்கள் என்று எல்லோரும் குறைகூறுகிறார்கள். குற்ற கூறுவது நியாயந்தான். வீண் செலவு என்பது ஒரு புறமிருக்கட்டும். யாதொரு கலையழகுமின்றி, ஆபாசமான ஆடம்பர விளம்பரம் செய்வதைப்பார்க்க, மனதுக்கு ரொம்ப துக்கமாய்த் தான் இருக்கிறது. இக்கண்டனத்திற்கு விலக்குகள் இருக்கின்றன என்று சொல்லத் தேவையில்லை. இதில் முக்கியகுற்றவாளிகள் நடுத்தர வகுப்பினர்தான். தாங்கமுடியாதவரைக்கும் கடன் வாங்கிக்கூட, ஏழைகளும் ஊதாரிச் செலவு செய்கிறார்கள் என்பது உண்

மையே. ஆனால் இவ்வித சமூகப் பழக்கவழக்கங்களாலேயே ஏழைகளுக்கு வறுமை ஏற்படுகிறதென்று சொல்லுவது சுத்த விதண்டாவாதம். ஏழைகளின் வாழ்வு களியாட்டத்துக்கு இடமே இல்லாமல் ரஸமற்ற மந்த வாழ்க்கையென்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். என்வே ஒரோர் சமயத்தில் ஏழைகள் விருந்து, கூத்து, முதலியவைகளுடன் கலியாண விழாவை நடத்தினால், அது பாலைவனத்தில் பசுமரச்சோலை போல் அவர்களுடைய உள்ளத்தில் சிறிது உற்சாகம் உண்டாக்கும். இயந்திரத்தைப்போல் சென்றுகொண்டிருக்கும் அவர்களுடைய வாழ்க்கையில் இன்பத்தேன் வந்து பாயச் சந்தர்ப்பம் ஏற்படும். சிரித்துக் களிப்பதற்கே சந்தர்ப்பமில்லாத ஏழைகளுக்கு, இந்தக் கலியாண கொண்டாட்டம் கூட இருக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய கடின சித்தம் படைத்தவர்களும் இருக்கக் கூடுமா! எந்த வகையாலும் வீண் செலவை நிறுத்தி மிதமாகச் செலவுசெய்யவேண்டியது தான். அதற்கென்று எளியவர்களுடைய களியாட்டச் சந்தர்ப்பங்களை அடியோடு அழித்துவிட்டு, அவர்களுடைய வாழ்க்கையை இன்னும் இன்பமில்லாது பாழாகச் செய்ய வேண்டியது அவசியமே இல்லை.

நடுத்தர வகுப்பார்களுக்கும் இதுபொருந்தும். கலியாண காலங்களிலேதான் உறவினர்களும் பழைய நண்பர்களும் நீண்ட காலத்திற்குப்பிறகு சந்திக்கமுடியும். இந்தியா ஒரு பெரிய, விஸ்தாரமான தேசம். நண்பர்கள் அடிக்கடி சந்திக்க முடியாது. மேலும் பலர் ஒரேசமயத்தில் சந்திப்பதும் கஷ்டமாகும். அதனாலேதான் கலியாணக் கொண்டாட்டங்களிலே ஜனங்களுக்கு பற்றும் மோகமும் உண்டாகின்றன. ஆனால் இப்பொழுது இந்தக் கலியாணக்கொண்டாட்டங்களுக்குப் போட்டியாகத்தோன்றி யிருப்பது அரசியல் மகாநாடுகள். இவைகளால் எல்லோரும் ஒன்று கூடுவதற்கான சிறந்த சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுவிட்டன. கலியாணக்கொண்டாட்டங்களைவிடக் காங்கிரஸ் கூட்டங்களும் அரசியல் மகாநாடுகளும் ஏனைய மகாநாடுகளும் இதற்குமேலான அவகாசங்கள் கொடுக்கத் தலைப்பட்டு விட்டன.

இந்தியாவின் வடபாகத்திலுள்ள ஏனையோர்களைக்காட்டிலும் காஷ்மீரிகளுக்கு ஒரு சிறந்த பழக்கம் இருந்தது. அவர்களுடைய ஸ்திரீகளுக்குள்ளே "படுதா"-வழக்கம் கிடையாது. ஆனால் அவர்கள் இந்தியப்பள்ளத்தாக்குகளில் குடி

யேறிய·வுடனே், இந்த வழக்கம் அங்கு இருப்பதைக்கண்டு, அதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனல் அதைமுற்றிலும் அனுஷ்டிக்கவில்லை. காஷ்மீரிகள் அல்லாத ஏனையோர்களிடம் பழகும்பொழுதுதான், படுதா வழக்கத்தை கொண்டாடினுர்கள். "படுதா" வழக்கம் கொண்டாடுவது உயர்ந்த பதவியைக் காண்பிக்கின்றது என்ற எண்ணம் வட இந்தியாவில் அப்பொழுது இருந்தது. ஆனல் காஷ்மீரிகளுக்குள் இக்கொள்கைபரவவில்லை. எந்தக் காஷ்மீரியும் இன்னொரு காஷ்மீரியின் வீட்டுக்குள் தாராளமாகச் செல்லலாம். காஷ்மீரி நடத்தும் விருந்துகளிலும் சடங்குகளிலும் ஆண்களும் பெண்களும் சமமாகக் கூடிக்கலந்துகொள்வார்கள், சேர்ந்து உண்பார்கள். அனேகமாய் பெண்கள் எல்லோரும் ஒருபந்தியில் உட்கார்ந்துகொள்வார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் சரிசமானமாகவே பழகிக்கொள்வார்கள். என்றாலும் தற்கால மேனுட்டுச்சுதந்திரம் அவர்களுக்கு இல்லையென்று சொல்லத்தேவையில்லை.

எனது சிறுபிராயம் இவ்வாறு கழிந்தது. பெரியகுடும்பம் ஆனதால், சிலசமயங்களில் சில்லரைச்சச்சரவுகள் உண்டாகும். இந்தச்சச்சரவுகள் பெரிதாக வலுத்துப்போய், என்னுடைய தகப்பனுரின் காதில் விழுந்தால், அவர் மிகவும் கோபங்கொள்ளுவார். இவைகள் எல்லாம். பெண்களின் பித்தலாட்டத்தாலே நேருகின்றன, என்று கடிந்துபேசுவார். அக்காலங்களில் என்ன சச்சரவு; எதற்காக சச்சரவு, என்பதே எனக்குப் புரியாது. ஆனல் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறதென்பது மாத்திரம் தெரியும். இந்தசமயங்களில் குடும்பத்திலே ஒருவருக்கொருவர் கடிந்து பேசிக்கொள்ளுவார்கள். அப்போது எனக்கு அதிகதுக்கம் உண்டாகும். இந்த சந்தர்ப்பங்களில் தகப்பனுர் தலையிட்டால், நாங்கள் எல்லோரும் நடுநடுங்கிப் போவோம்.

ஒரு சிறிய சம்பவம், நான் சிறுபிள்ளையாக இருந்தபொழுது நடந்தது நன்றாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. எனக்கு ஏழு அல்லது எட்டுவயதிருக்கும். அலகாபாத்தில் வைக்கப்பட்டிருந்த குதிரைப்படையைச் சேர்ந்த ஒரு சிப்பாய், பின் தொடர்ந்துவர, நான் ஒவ்வொருநாளும் குதிரை சவாரி செய்வது வழக்கம். ஒருநாள் மாலையில், நான் குதிரை மீதிருந்து கீழே விழுந்துவிட்டேன். என்னுடைய போனிக் குதிரை மட்டும்—நல்ல அழகானது, அரபிக்குதிரை இனத்தைச்சேர்ந்தது—வீடுபோய்ச் சேர்ந்தது. நான் இல்லாமல்,

குதிரை மட்டும் போய்ச்சேர்ந்த சமயத்தில், தகப்பனார் நண்பர்களுடன் டென்னிஸ் விளையாடிக்கொண்டிருந்தார். அவர்கள் குதிரையைப்பார்த்தார்கள். உடனே எல்லோரும் பயந்து போனார்கள். விருந்துக்கு வந்திருந்த அத்தனை பேர்களும், தகப்பனார்சகிதமாக கிடைத்த வாகனங்களில் ஏறிக்கொண்டு, என்னைத் தேடிப்பிடிக்க ஊர்வலம்வர ஆரம்பித்தார்கள். வழியிலே என்னைக்கண்டதுதான் தாமதம்! ஏதோ ஒரு அற்புதச்செயல் செய்துவந்த வீரனைப்போல் என்னைவரவேற்றார்கள்.

III

## பிரம்மஞானம்

எனக்கு பத்து வயது. அப்பொழுது நாங்கள் மற்ருெரு பெரியவீட்டுக்குக் குடிப் போனேம். புதிய வீடு மிகவும் பெரிது. அதற்கு தகப்பனர் ஆனந்தபவன் என்று பெயர் வைத்தார். இந்த வீட்டையொட்டி ஒரு பெரிய தோட்டம்; நீந்துவதற்கு ஒரு சிறிய தடாகம்; இந்த வீடு சம்பந்தமாக ஒவ்வொருநாளும் ஒவ்வொன்றை புதிது புதிதாகக்காண்பேன். எனக்கு மிக்க குதூகலம். பழையவீட்டை யொட்டி புதிதாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. கட்டிடவேலையும் மண்வெட்டு வேலையும் பார்த்துக்கொண்டிருப்பேன். தொழிலாளிகள் வேலைசெய்வதைப் பார்ப்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம்.

நீந்துகிறவாவியில் வெகுவிரைவில் நீந்தக்கற்றுக்கொண்டேன். ஜலத்துக்குள்ளே குமிழிபிடித்து நீந்துவதிலும், நீருக்கு வெளியே தலையைத்தூக்கி நீந்துவதிலும் திறமை வாய்ந்தவனுனேன். கோடைகாலத்தில் அடிக்கடி குளத்தில் பொத்தென்று குதிப்பேன். ஒரு நாளைக்குப் பல தடவைகள் இவ்வாறு நடக்கும். மாலையில் தகப்பனுரின் நண்பர்களில் பலர் குளத்துக்கு வருவார்கள். நீந்துகிற குளம் என்பது அக்காலத்தில் அலகபாத்துக்கு ஒரு விநோதம். குளத்தின் கரையிலும் வீட்டிலும் அமைக்கப்பெற்ற மின்சார விளக்கு. அந்த நாட்களில் அலகாபாத்துக்கே புதிதென்று சொல்லலாம். பெரியவர்கள் நீந்துகிற சமயங்களிலெல்லாம் எனக்கு உற்சாகம். நான் ஒருகுறும்பு செய்வதுண்டு. அதிலே எனக்கு ரொம்ப சந்தோஷம். நீந்தத் தெரியாதவர்களைப் பிடித்து, குளத்திலே தள்ளிவிட்டு, வேடிக்கை பார்ப்பேன்.

அலகாபாத்தில் அப்பொழுதுதான் வக்கீல் வேலையிலமர்ந்த டாக்டர் தேஜ் பகதூர் சாப்ரூ வைப்பற்றி இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு நன்ருக ஞாபகம்வருகின்றது. அவருக்கு நீந்தத்தெரியாது. கற்றுக்கொள்ளவும் ஆசைப்படவில்லை. பதினைந்து அங்

குலம் தண்ணீருள்ள் முதற்படியிலேயே உட்கார்ந்துகொள்வார். இரண்டாம் படிக்குக்கூட நகரமாட்டார். அவரை அசைக்க யாராவது முயன்ருல் "குய்யோ முறையோ" என்று கத்துவார். என் தகப்பனருக்கும் நீந்தத் தெரியாது. இருந்தாலும் பற்களைக் கெட்டியாய்க் கடித்துக்கொண்டு, கைகால்கள் சளைத்துப்போனாலும் குட்டை, முழுதும் நீந்தி விடுவார்.

௨ அப்பொழுது போயர் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தகாலம். இந்தப்போரில் நடந்தவைகளை ஒன்றுவிடாமல் படிப்பதில் எனக்கு ஆவல் அதிகம். என்னுடைய அனுதாபங்கள் யாவும் போயர்கள் பக்கந்தான். பத்திரிகைகளை வாங்கிப் போர்ச்செய்திகளை விழுந்து விழுந்து படிப்பேன்.

ஆயினும் வீட்டிலே நேர்ந்த ஒரு நிகழ்ச்சியின்பேரில் என் கவனமெல்லாம் இப்பொழுது சென்றுகொண்டிருந்தது. எனக்கு ஒரு சிறிய தங்கை பிறந்தாள். வேறு எல்லோருக்கும் சகோதர சகோதரிகள் இருக்கையில், எனக்கு மட்டும் இல்லையே என்று நினைத்து நீண்டகாலமாக இரகசியமாக வருந்திக்கொண்டிருந்தேன். எனவே தம்பியோ தங்கையோ பிறப்பது என்பதில் எனக்கு பரம ஆனந்தம். தகப்பனர் அப்பொழுது ஐரோப்பாவில் இருந்தார். பிரசவ சமயம். நான் வெளித்தாழ்வாரத்தில் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தேன். டாக்டர்களில் ஒருவர் என்னிடம் வந்து சங்கதியைச் சொன்னர். சொல்லிவிட்டு "அப்பா! சந்தோஷப்படு. தம்பியாயில்லையே என்று சந்தோஷப்படு. உன்சொத்திலே அவன் பங்கெடுத்துக் கொண்டுவிடுவானல்லவா" என்று சிரித்தார். எனக்கு ரொம்ப கோபம். அடே! அவ்வளவு கேவலமாக நான் போய்விட்டேன! சொத்திலே பங்குகொடுக்க எண்ணமில்லாத பாவியா நான்? என்று எண்ணி ஆத்திரப்பட்டேன்.

அப்பா வழக்கத்தைமீறி அடிக்கடி ஐரோப்பாவுக்குப் போய் வந்ததால், இந்தியாவில் வசிக்கும் காஷ்மீரி பிராமணர்களுக் குள்ளே அவர்பேரில் கோபம் புகைந்து புகைந்து கடைசியில் புயலைப்போன்ற கலவரம் உண்டாயிற்று. ஐரோப்பாவிலிருந்து திரும்பி வரும்பொழுதெல்லாம், தகப்பனர் பிராயச்சித்தம் செய்துக்கொள்ள மறுத்துவிட்டார். சில ஆண்டுகளுக்கு முன்னர் பண்டித பிஷன் நாராயணதர் என்ற இன்னொரு காஷ்மீர பிராமணர் பாரிஸ்டர் பரீக்ஷைக்காக இங்கி

லாந்துக்குப் போயிருந்தார். இவர்பின்னர் காங்கிரஸுக்குத் தலைவர் ஆனார். அவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வருகையில், வைதீகர்கள் சேர்ந்துகொண்டு, அவரை ஜாதிப்பிரஷ்டம் செய்தார்கள். அவர் பிராயச்சித்தம் செய்துகொண்ட போதிலும், அவரோடு கூடுவதற்கு வைதீகர்கள் சம்மதிக்கவில்லை. எனவே இதனால் காஷ்மீரி பிராமணர்களுக்குள் பிளவு ஏற்பட்டு, இரண்டு பாதியாகக் கக்ஷிப்பிரிவு ஏற்பட்டு விட்டது. பின்னர் பல காஷ்மீரி இளைஞர்கள் ஐரோப்பாவுக்குத் தங்கள் கல்வியின்பொருட்டுப் போனாலும், அவர்கள் திரும்பிவந்து சீர்திருத்தக் கோஷ்டியில் சேர்ந்துகொண்டாலும், பிராயச்சித்தம் செய்துகொள்ளுவதை நிறுத்தவில்லை.

இந்தச்சடங்கு ஒரு ஏமாற்றம். அதில் மதம் என்பதே கிடையாது. பிராயச்சித்தம் என்றாலென்ன? ஜனசமூகத்தின் கட்டுப்பாட்டுக்கு வெளித்தோற்றத்தில் இணங்கிநடக்க இசைவது என்றுதான் அர்த்தம். இதைச்செய்தால் போதும். அவர்கள் எத்தகைய வைதீகக்குறைவான காரியங்களை வேண்டுமானாலும் செய்யலாம். பிராயச்சித்தம் செய்துவிட்டு, பிராமணரல்லாதாருடனும் ஹிந்துக்களல்லாதாருடனும் கூடிக்கலந்தும், உண்டும், மற்றும் பலவாறும் வைதீகவிதிகளை புறக்கணிப்பார்கள்.

ஆனால் தகப்பனார் பிடிவாதக்காரர். வெளிவேஷத்திற்காகக்கூட, அவர் பிராயச்சித்தத்துக்கு சம்மதிக்கவில்லை. பிராயசித்தம பண்ணிக்கொள்ளமாட்டேன் என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டார். மற்றவர்களுக்கு கனலைப்போலக் கோபம் எழுந்தது. "என்ன! இவன் சம்பிரதாயத்தை மதிக்காமல் எல்லோரையும் அவமதிக்கிறானே" என்று வைதீகர்கள் உள்ளம் புழுங்கினார்கள். என்றாலும் காஷ்மீரிகளிற் பலர் தகப்பனாருடன்சேர்ந்து கொண்டார்கள். இப்படியாக மூன்று வதுகக்ஷி உண்டாயிற்று. சில ஆண்டுகளுக்குள் பழைய கட்டுப்பாடுகளும் பழைய சம்பிரதாயங்களும் மாறி உடைந்து போகவே, இந்தக் கக்ஷிகளெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்துவிட்டன. பிறகு எத்தனையோ காஷ்மீரி இளைஞர்களும் யுவதிகளும் கல்வியின்பொருட்டு, ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் போயிருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வருகையில் பிராயச்சித்தத்தைப்பற்றிக் கேள்விமுறையே கிடையாது; உணவு சம்பந்தமான கட்டுப்பாடுகளும் அநேகமாக சிதைந்து போய் விட்டன. ஒன்றிரண்டு வைதீகர்களும் சில கிழவிமார்களும்

தான் உணவுக் கட்டுப்பாட்டைப் பாராட்டி வந்தார்கள். மற்றவர்கள் எல்லோருடனும் சமபந்திபோஜனம் செய்யத் துணிந்தனர். ஸ்திரீகளுக்குள் கொஞ்சங் கொஞ்சம் இருந்த படுதா வழக்கமும் அறவே போய்விட்டது. கடைசியாக பாக்கி இருந்த "படுதாவும்" 1930-ம் வருஷம் நிகழ்ந்த அரசியல் புரட்சிக்கிளர்ச்சியால் தொலைந்தே போய்விட்டது. சிற்சில கலப்பு மணங்கள் நேர்ந்தபோதிலும், அத்தகைய மணம் இன்னும் சாதாரண நிகழ்ச்சியாக ஆகிவிடவில்லை. என்னுடைய இரண்டு சகோதரிகளும் காஷ்மீரிகளல்லாதவர்களைத்தான் மணந்திருக்கிறார்கள். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர் சமீபத்தில் வெள்ளைக்கார ஹங்கேரிய மாது ஒருத்தியை மணந்திருக்கிறார். தற்காலம் மதம் கலப்பு மணத்திற்கு ஆக்ஷேபணையல்ல. ஜாதிவித்தியாசமும், காஷ்மீரிகளின் "சுத்த ரத்தம்", மற்றவர்களோடு கலந்து கெட்டுப்போகக்கூடாது என்ற ஆசையினாலும் எங்களுடைய விசேஷ ஆரியத்தோற்றங்களை அழித்துக்கொள்ளக்கூடாது என்ற ஆவலினாலும், மற்றவர்களோடு கலந்துகொண்டால், அவைகள் அழிந்தே போகும் என்ற பயத்தாலும் கலப்பு மணத்தைப் பலகாஷ்மீரிகள் ஆட்சேபிக்கின்றனர். பாரத ஜனசமுத்திரத்தில் தாங்கள் கரைந்து விடுவோமென்று அஞ்சுகின்றனர். இந்தப்பெரிய நாட்டிலே நாங்கள் மிகச் சிறுதொகையினர்.

மேனாடுகளில் சமீபகாலத்துக்கு முன் பிரயாணஞ் செய்த முதல் காஷ்மீரப்பிராமணனுக்கு மிர்ஸா மோகன்லால் காஷ்மீரியன் என்று பெயர். அவர் நூறு ஆண்டுகளுக்குமுன் மேனாட்டுப் பிரயாணம் செய்தார். ரொம்பவும் புத்திசாலி. மிக்க அழகுவாய்ந்தவர். டில்லி மிஷன் கல்லூரியில் மாணவராய் இருந்தார். பாரசீகமொழி பெயர்ப்பாளராக காபூலுக்கு பிரிட்டிஷ் ராஜதந்திரக் கூட்டத்தாரோடு, அவர் அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் அவர் மத்திய ஆசியா, பாரசீகம் முதலிய பிரதேசங்களில் பிரயாணம் செய்தார். அவர் எங்கே போனாலும் அவருக்கு ஒரு சாமர்த்தியம். ஒவ்வோரிடத்திலும் ஒரு மனைவியை சம்பாதித்துக்கொண்டார். அதுவும் உயர்ந்த குடும்பங்களில் கலியாணம்! அவர் இறுதியில் முஸ்லிம் ஆனார். பாரசீகத்தில் ராஜ குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பெண்ணை மணந்தார். அதனாலேதான் அவருக்கு மிர்ஸா என்ற பட்டம் கிடைத்தது. அவர் ஐரோப்பாவுக்கும் சென்றார். அப்பொழுது இளமைப்பருவத்திலிருந்த விக்டோரியா மகாராணியையும்

பேட்டிகண்டார். அவர் தம்முடைய பிரயாணங்களைப்பற்றி யுள்ள ருசிகரமான வரலாறுகளை வரைந்திருக்கிறார்.

எனக்கு வயது பதினொன்றிருக்கும். புதிதாக ஒரு உபாத்தியாயர் என்னோடு கூடவே இருந்து படிப்பு சொல்லிக் கொடுக்கும்படியாக திட்டம் செய்யப்பட்டார். அவருக்கு பெர்டினன்டு ப்ரூக்ஸ் என்று பெயர். அவருடைய தகப்பனார் ஐரிஷ்காரர். அவருடைய தாய் ஒரு பிரெஞ்சு அல்லது பெல் ஜியநாட்டுப்பெண்மணி. அவருக்கு பிரம்மஞானத்திலே மிகவும் சிரத்தை. அவரை ஸ்ரீமதி அன்னிபெசண்டு அம்மையார் என் னுடைய தகப்பனாருக்கு சிபார்சு செய்தார். அவர் மூன்று வருஷகாலம் என்னுடன் இருந்தார். பல வழிகளிலும் அவர் என் மனப்போக்கை மாற்றினார்.

அச்சமயம் இவருடன் இன்னொரு உபாத்தியாயர் இருந் தார். அவர் ஒரு கிழப்பண்டிதர். எனக்கு இவர் ஹிந்தியும் சம்ஸ்கிருதமும் போதிப்பதாகப் பாவனை! அவ்வளவுதான். எத்தனையோ வருஷங்கள் அந்தப்பண்டிதர் எனக்குப்போதித் தும், என்னுடைய சம்ஸ்கிருதஞானம் மிகக் குறைவாகவே இருந்தது. பின்னாலே இங்கிலாந்தில் ஹாரோ பள்ளிக்கூடத் தில் நான் லத்தீன் பாஷையைக் கற்றுக்கொண்ட கதையைப் போலத்தான் இதுவும் முடிந்தது. தப்பிதம் என்பேரில்தான். பாஷைகள் கற்றுக்கொள்வதில் எனக்கு ருசியே கிடையாது. இலக்கணத்தைக்கண்டால் எனக்கு ரொம்ப வெறுப்பு.

படிக்கிற ருசியை எப்படியோ எனக்கு எப். டி. ப்ரூக்ஸ் உண்டாக்கிவிட்டார். அநேக இங்கிலீஷ் புஸ்தகங்களைப் படித்தேன். யாதொரு நோக்கமும் இல்லாமல் படித்தேன். சிறுபிள்ளைகள் படிக்கக்கூடிய நூல்கள் யாவையும் நான் படித்துவிட்டதாகச் சொல்லலாம். கவிதையிலே எனக்கு ரொம்ப ஆசையும் ருசியும் ஏற்பட்டது. என்னிடம் எத் தனையோ மாறுதல்கள் பின்னர் ஏற்பட்டபோதிலும், இந்த ருசிமட்டும் மாறவே இல்லை.

ப்ரூக்ஸ், ஸயன்ஸின் மர்மங்களிலும் என்னைப் புகுத்தி விட்டார். ஸயன்ஸ் சம்பந்தமாக, சோதனைகள் செய்து பார்க் கும் பொருட்டு, சோதனைக் கருவிகள் நிறைந்த சிறிய சோதனைச்சாலை ஒன்றை வீட்டின் ஒருபகுதியில் அமைத்துக் கொண்டோம். அங்கே ரஸாயனம், பௌதிகசாஸ்திரம் முத லியவற்றின் எளியசோதனைகள் செய்து நீண்டநேரம் கழிப் பேன்.

படிப்பைத் தவிர, இன்னொருவகையிலும் எப். டி. புருக்ஸ் அவர்கள் என்னிடம் புதிய போக்கு ஒன்றை உண்டாக்கிவிட்டார். அது சிறிது காலம் என்னை பலமாகப் பிடித்துக்கொண்டது. அது பிரம்ம ஞானம் ஆகும். வாராவாரம் அவருடைய அறைகளில் பிரம்ம ஞானிகளைக் கூட்டிவைத்துப் பிரசங்கம் செய்வார். அவைகளை நான் கேட்பதுண்டு. பிரம்மஞானச் சொற்களிலும் கருத்துக்களிலும் நான் பழக்கமடைந்துவிட்டேன். எத்தனையோ சங்கதிகளைப்பற்றி வாதங்கள் நிகழும். மறுபிறப்பு, கர்மபலன், ஆகாயத்திலுலவும் சூக்ஷ்ம தேகங்கள், மற்றும் ஜோதிகள், பிரம்மாண்டங்கள் முதலியவைகளைப்பற்றி வாதங்கள் நடைபெறும். மாடம் பிளாவட்ஸ்கி முதலிய பிரம்ம ஞானிகள் எழுதிய நூல்களிலிருந்தும் ஹிந்து வேத நூல்களிலிருந்தும் புத்த "தர்ம பதத்திலி" ருந்தும், பைதாகொரஸ், அப்பொலோனியஸ், முதலிய கிரேக்க தத்துவ ஞானிகள் எழுதிய நூல்களிலிருந்தும் ஆதாரங்கள் காண்பிக்கப்படும். இதிலே எனக்கு அதிகமாக ஒன்றும் புரிந்ததில்லை. இருந்தாலும் என்னை அறியாமலே அவைகளில் ஒரு மூடு மந்திரக் கவர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

சிருஷ்டியின் இரகசியங்களின் கதவைத் திறந்து அறிந்து கொள்வதற்கு, எனக்கு ஒரு அற்புதமான சாவிகிடைத்துவிட்டதாக எண்ணி மகிழ்ச்சியடைந்தேன். முதன் முதலாக இப்பொழுதுதான் மதத்தைப்பற்றியும் ஏனைய உலகங்களைப்பற்றியும் சுயமாக சிந்தனை செய்யத்துவக்கினேன். ஹிந்து மதம் என்னுடைய மதிப்பில் உயர்ந்துவிட்டது. கர்மகாண்டத்தைப் போதிக்கும் ஹிந்து மதமல்ல; ஞானகாண்டத்தைக்கூறும் உபநிஷத்துகளும் பகவத் கீதையும் எனக்கு அர்த்தமாகாவிட்டாலும், மிகுந்த ஆச்சரியமான நூல்களாகத் தோன்றின. ஆகாயத்தில் உலவும் சூக்ஷ்மதேகங்களைப்பற்றிக் கனவுகண்டேன். நீண்டதூரம் பறந்து செல்வதாகவும் கற்பனை செய்து கொள்வேன். யாதொருதுணையும் இல்லாமல் ஆகாயத்தில் பறப்பது என்ற இந்தக் கனவு, என்னுடைய வாழ்நாளில் என்னைவிட்டு அகன்றதேயில்லை. சில சமயத்தில், நினைவிலே போல் வியக்தமான உணர்ச்சியுடன் கனவில் பறக்கும்பொழுது, உலகம் யாவும் சித்திர விசித்திரங்கள்போல் எனக்குக் கீழே இருப்பதாகத் தோன்றும். இந்தக் கனவுக்கு நவீன சொப்பன வியாக்கியான கர்த்தர்கள் என்ன பொருள் கொடுப்பார்களோ எனக்குத் தெரியாது.

அந்தக்காலங்களில் பெசண்டு அம்மையார் அலகாபாத்துக்குவந்து, பிரம்மஞான விஷயங்களைக் குறித்து பல பிரசங்கங்கள் செய்வதுண்டு. அவ்வருடைய சொற்பெருக்கினால், நான் மிகுதியும் கரைந்துபோவேன். பிரசங்கத்தைக்கேட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பும்பொழுது, மெய்ம்மறந்து கனவு காண்பது போல் இருக்கும். அப்பொழுது எனக்கு பதின்மூன்று வய்து தான். இருந்தாலும் பிரம்மஞான சபையில் சேரத் தீர்மானம் செய்துகொண்டேன். நான் தகப்பனரை அனுமதிகேட்கையில், அவர் கடகடவென்று சிரித்தார். ஆனல் சேர அனுமதிகொடுத்தார். நான் சேருவதைப்பற்றி யாதொரு கவலையும் அவர் கொண்டதாகத் தெரியவில்லை. அவருக்கு இதுவிஷயத்தில் யாதொரு உணர்ச்சியும் இல்லாததைக்கண்டு, எனக்கு சிறிது ஆத்திரம் உண்டாயிற்று. அவர் என்னுடைய கண்களுக்கு எத்தனையோ வகைகளில் பெரியவராகக் காணப்பட்டாலும், அத்யாத்மிக விஷயங்களில் அவர் மிகக் குறைந்தவர் என்று எனக்குப்பட்டது. உண்மையென்னவெனில், அவர் ஒரு பழைய பிரம்மஞானி. மாடம் பிளாவட்ஸ்கி முதன் முதலில் இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில், தகப்பனர் பிரம்மஞான சங்கத்தில் சேர்ந்துவிட்டார். மதசம்பந்தமான உணர்ச்சியின்றி, அந்த சங்கத்தில் என்ன நடக்கிறது என்பதைய்றிய ஆவல்கொண்டு, அவர் சேர்ந்திருக்கவேண்டும். விரைவில் அந்தச் சங்கத்தைவிட்டு விலகிநின்று கொண்டார். ஆனல் அவரோடுகூட சங்கத்தில் சேர்ந்த அவருடைய நண்பர்களிற் சிலர் சங்கத்திலேயே தங்கி, சங்க சம்பந்தமாக பெரிய பதவிகளைப் பெற்றார்கள். எனவே, என்னுடைய பதின்மூன்றும் வயதில்; நான் பிரம்மஞானசங்கத்தில் ஒரு மெம்பராகச் சேர்ந்தேன். அந்தச் சடங்கில் எனக்கு பெசன்ட் அம்மையாரே "மந்திர தீக்ஷை" செய்து வைத்தார். என்ன மந்திர தீக்ஷை? சிறிது புத்திமதி; சில அர்த்தம் புரியாத ஜாடை அடையாளங்கள்; முதலியன தான். நான் பரவசமடைந்தேன். காசியில் கூடிய பிரம்மஞான மகாநாட்டிற்குப் போயிருந்தேன். நேர்த்தியான தாடியுடன் கூடிய கர்னல் ஆல்காட் கிழவனரை சந்தித்தேன்.

முப்பது வருஷங்களுக்குமுன் ஒருவன் தன்னுடைய இளமைப்பருவத்தில் தனது தோற்றம் எவ்வாறு இருந்தது, தன்னுடைய உள்ளம் எவ்வாறு ஊசலாடிற்று என்பதை திரும்பவும் ஞாபகத்தில் கொண்டு வருவது கஷ்டமான வேலைதான்.

பக்தி சின்னமாகக்கருதப்பட்ட இதர பிரம்மஞானிகளைப் போலவே, நானும் ஒளியற்ற அசட்டுப்பார்வையுடன் இருந் தேன் என்ற உணர்ச்சி இப்பொழுதும் உண்டாகின்றது. விசேஷ தெய்வப் பிரசாதம்பெற்ற கோஷ்டியில் சேர்ந்துவிட் டதாக எனக்கு எண்ணம். அந்த எண்ணத்தோடு இருக்கிற என்னிடம் சின்னவயதுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் ருசி யோடும் இன்பத்தோடும் பழக முடிந்திருக்காதென்பது திண் ணம். எப். டி. புரூக்ஸ் என்னை விட்டுப்போனதும், என்னு டைய பிரம்மஞான சங்கத்தொடர்பும் அற்றுப்போய்விட்டது. நான் இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்றதனால், வெகுவிரை விலே பிரம்மஞானம் என்னுடைய வாழ்க்கையிலிருந்து அடி யோடு விலகிவிட்டது. ஆனால் எப். டி. புரூக்ஸ் அவர்க ளோடு நான் கூடி இருந்த காலத்தில், அவரால் என்னிடம் பெரியமாறுதல்கள் ஏற்பட்டன வென்றும் நான் அவருக்கும் பிரம்மஞானத்திற்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேனென் றும் சொல்லத்தேவையில்லை. என்றாலும் அந்தநாட்களிலி ருந்து பிரம்மஞானக் கூட்டத்தார் என்னுடைய மதிப்பில் குறைந்துகொண்டே வந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் தாங்கள் நினைப்பதுபோல் விசேஷபிர கிருதிகள் அல்ல. அபாயத்திற்கஞ்சாவீரர்களல்ல. தியாகத் தைநாடும் தீரர்களல்ல. பத்திரமாக சுகஜீவனம் செய்யவிரும் பும், சாதாரண ஜனங்களாகப் புலப்படுகிறார்கள். என்றா லும் எனக்கு எப்பொழுதுமே பெசண்டம்மையாரிடம் பெரிய மதிப்பு.

என் ஞாபகத்தில் அடுத்த முக்கியமான விஷயம் ருஷிய- ஜப்பானிய யுத்தமாகும். ஜப்பானியரின் வெற்றிகள் என்னு டைய உற்சாகத்தைமேலே கிளப்பிவிட்டன. ஒவ்வொரு நாளும் புதிய புதிய செய்திகளைப் பத்திரிகைகளிலே காண, எனக்கு ஆத்திரம். ஜப்பானைப்பற்றிப் புஸ்தகங்கள் அனேகம் விலைகொடுத்து வாங்கினேன். சிலவற்றைப் படிக்கமுயன் றேன். எனக்கு ஜப்பானிய சரித்திரம் சரியாகப் புரியவில்லை. ஆனாலும் பழைய ஜப்பானின் வீரபராக்கிரமக் கதைகளும் லாப்காடியோ ஹார்ன் அவர்களுடைய இனிமையான வசன நடையும் எனக்குப்பிடித்தன. தேசியக் கருத்துகள் என் னுள்ளத்தைக் கொள்ளைகொண்டன. ஐரோப்பாவின் அடி மைத்தனத்திலிருந்து விடுபட்டு இந்தியாவும் ஆசியாவும் என் றைக்கு சுதந்திரம்பெறும் என்று யோசிக்கலானேன். பல

தீரச்செயல்கள் புரியப்போவதாகவும், இந்தியாவை விடுவிக்கும் பொருட்டு கத்தியைக் கையிலேந்தி சண்டை செய்யப் போவதாகவும் கனவுகாண்பேன்.

வயது பதினன்கு. எங்களுடைய குடும்பத்தில் மாறுதல்கள் ஏற்பட்டுவந்தன. எனது மூத்தசகோதரர்கள் தொழிலில் அமர்ந்ததால், எங்களுடைய பொதுக்குடும்பத்தை விட்டு விட்டு, தனிக்குடித்தனங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். புதிய கருத்துகளும் கற்பனைகளும் என்னுடைய மனதில், பவனிவந்து கொண்டிருந்தன. பெண்ணினத்தில் சிறிதளவு கவனம்செல்ல ஆரம்பித்தது. இருந்தாலும் சிறுவர்களுடைய தோழமையைத்தான் விரும்பினேன். சிறுமிகளோடு பழகுவது கௌரவக்குறைவு என்று எண்ணுவேன். ஆனல் காஷ்மீரி விருந்துக்கூட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் அழகான பெண்கள் என்னை பார்த்தாலும் சரி, தொட்டாலும் சரி, எனக்கு மயிர்க்கூச்சலுண்டாவதுண்டு.

1905—ம் வருடம் மே மாதம் எனக்கு, அப்பொழுது 15 வயது. அப்பா, அம்மா, கைக்குழந்தை, தங்கை, நான் எல்லோருமாகச்சேர்ந்து இங்கிலாந்திற்குப் போனேம்.

IV

# ஹாரோவும் கேம்பிரிட்ஜும்

மே மாதக் கடைசியில் நாங்கள் லண்டன்வந்து சேர்ந்தோம். டோவரிலிருந்து லண்டனுக்கு ரயிலில் வந்து கொண்டிருக்கையில், ஜப்பானியர்கள் ருஷியர்களின்பேரில் சுஷீமா என்ற இடத்தில் மகத்தான வெற்றிபெற்றார்கள் என்ற செய்தியைப் படித்தோம். எனக்குப் பெரிய உற்சாகம். அடுத்த நாள் டெர்பி குதிரைப்பந்தயம் நடந்தது. நாங்கள் குதிரைப்பந்தயத்தைப் பார்க்கப்போனோம். லண்டனுக்கு வந்து சேர்ந்த சில நாட்களுக்குள் எம். ஏ. அன்சாரி அவர்களைச் சந்தித்தோம். அப்பொழுது அவர் சுறுசுறுப்பும் புத்திக்கூர்மையுமுள்ள யௌவன புருஷராக விருந்தார். உயர்ந்த பரீக்ஷைகளில் முதன்மையாகத்தேறி சிறந்த பட்டங்கள் பெற்றிருந்தார். அப்பொழுது அவர் லண்டன் ஆஸ்பத்திரியொன்றில் உதவி சர்ஜனாக வேலைபார்த்துவந்தார்.

எனக்கு வயது பதினைந்து. வழக்கமாக ஹாரோவில் மாணவர்கள் சேரும் வயதைக்காட்டிலும் கொஞ்சம் அதிகம். ஆனபோதிலும் அதிர்ஷ்டவசமாக எனக்கு ஹாரோப்பள்ளியில் இடம்கிடைத்தது. எனது குடும்பத்தார்கள் ஐரோப்பாக் கண்டத்தில் சுற்றுப் பிரயாணஞ்செய்து விட்டு சில மாதங்களுக்குப்பின்னர் இந்தியாவுக்குத் திரும்பினர். அன்னியர்களுக்கு மத்தியில், தன்னந்தனியாக நான் இருந்தது இதுவே முதல்தடவையாகும். தனிமை உணர்ச்சியும், வீட்டு ஏக்கமும் உண்டாயின. ஆனால் இந்த நிலைமை நீடித்து நிற்கவில்லை. பள்ளிக்கூடத்து வாழ்க்கைக்கு, எப்படியோ ஓரளவு, என்னைச் சரிப்படுத்திக்கொண்டு விட்டேன். வேலையிலும் விளையாட்டிலும் எனது காலம் விரைவில் கழிந்தது. நான் ஹாரோக் கூட்டத்தில் முற்றிலும் பொருந்தவில்லை. அவர்களுக்கு மத்தியில் நான் அன்னியன் என்ற எண்ணமே என்னிடம் எப்பொழுதும் இருந்துவந்தது. மற்றவர்களும் என்னைப்பற்றி இவ்வாறுதான் எண்ணிக்கொண்டிருக்க வேண்டும். மற்றவர்களிட மிருந்து கொஞ்சம் விலகியே வசித்தேன். என்றாலும்

மொத்தத்திலே, விளையாட்டுகளில் பூராப்பங்கு எடுத்துக் கொண்டேன். அவைகளில் அதிகமாக தேர்ச்சியடைந்து பிரகாசிக்கா விட்டாலும், நான் சண்டியல்ல என்பதை மற்றவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

எனக்கு அதிகமாக லத்தீன்பாஷை தெரியாததால் கீழ் வகுப்பொன்றில் சேர்த்துக்கொண்டார்கள். ஆனால் விரைவில் மேல்வகுப்புகளுக்கு உயர்த்தப்பட்டேன். பல பாடங்களில், முக்கியமாக பொது அறிவு சம்பந்தப்பட்ட மட்டிலும், என்னையொத்த வாலிபர்களைக்காட்டிலும் நான் அதிக அறிவுள்ளவனாகவே இருந்தேன். அவர்களைவிட எனக்கு அதிக விஷயங்களிலே சிரத்தை உண்டு. எனவே மற்ற மாணவர்களைக்காட்டிலும் அதிகமாக புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்தேன். இங்கிலீஷ் பையன்களின் மந்தபுத்தியைப்பற்றி நான் என் தகப்பனாருக்கு கடிதம் எழுதினேன். ஏனென்றால் அந்த இளைஞர்களுக்கு விளையாட்டுகளைத் தவிர வேறு எதையும்பற்றிப் பேச சாமர்த்தியமில்லை: ஆனால் இதற்கு விலக்கான பையன்கள் உண்டு. மேல்வகுப்புகளில் இவர்களைவிசேஷமாகக்கண்டேன்.

1905—ம் ஆண்டுக் கடைசியில் பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடந்தது. தேர்தலிலே லிபரல் கட்சியார் பெருமிதமாக வெற்றியடைந்தனர். இந்தத் தேர்தலை மிகுந்த ஊக்கத்துடன் கவனித்து வந்தேன். 1906-ம் வருஷ ஆரம்பத்தில் எங்களுடைய வகுப்பு உபாத்தியாயர் புதிதாய் அமைக்கப் பெற்ற மந்திரிசபையைப்பற்றி எங்களைக் கேள்விகேட்டார். என்னைத்தவிர வேறு ஒருவருக்கும் அவ்விஷயத்தைப்பற்றித் தெரியவில்லை. முதன் மந்திரி கேம்பெல் பேனர்மென் தெரிந்தெடுத்த மந்திரிமார்களின் ஜாபிதாவோடு எல்லா விவரங்களையும் நான்கூறியதைக்கண்டு அவர் வியப்படைந்தார். எனக்கு அரசியலிலிருந்த பற்றைத்தவிர, ஆகாயவிமான வளர்ச்சியில் கவர்ச்சி அதிகம். அப்பொழுதுதான் ரைட் சகோதரர்கள், ஸாண்டோஸ்ட்யூமாண்ட், பார்மென், லேதாம், பிளரியோ முதலிய நிபுணர்கள் ஆகாயவிமான சம்பந்தமாக அரிய ஆராய்ச்சிகளும் சோதனைகளும் செய்துவந்தார்கள். என்னுடைய உற்சாகத்தில், ஆகாயமார்க்கமாக சனிக்கிழமை புறப்பட்டு இந்தியாவிற்கு வந்து அவரை தரிசினம் செய்துவிட்டுத் திங்கட்கிழமை பள்ளிக்கூடத்திற்குத் திரும்பக்கூடிய நிலைமை

சீக்கிரம் ஏற்படக்கூடுமென்று என் பிதாவுக்கு ஒரு கடிதத்தில் எழுதினேன்.

என் காலத்தில் ஹாரோவில் நாலைந்து இந்திய இளைஞர்கள் இருந்தார்கள். மற்ற வீடுகளில் வசித்த இந்திய மாணவர்களை, நான் அதிகமாகச் சந்திப்பது இல்லை. ஆனால் நான் வசித்த தலைமை உபாத்தியாயர் வீட்டில் பரோடா கெயிக்வார் அவர்களின் புதல்வர்களில் ஒருவர் வசித்து வந்தார். அவர் என்னைக்காட்டிலும் அதிக மூத்தவர். அவர் நன்றாக கிரிக்கெட் விளையாடுவார். அதனால் அவருக்குப் பையன்களிடம் செல்வாக்கு அதிகம். நான் போய்ச் சேர்ந்த சிறிது காலத்திற்குப் பிறகு அவர் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டார். பின்னர் கபூர்த்தலா மகாராஜாவின் மூத்த குமாரர் பாரஞ்சித்சிங் என்பவர் வந்துசேர்ந்தார். அந்த வாழ்க்கைக்கு அவர் முற்றிலும் தகுதியற்றவர். வந்த நாள் முதல் வாடி வருந்தினார். மற்ற மாணவர்களோடு சேர்ந்து பழக முடியவில்லை. அவர்கள் அவருடைய நடவடிக்கைகளைப் பார்த்துக் கேலி செய்வார்கள். அப்பொழுது அவருக்கு ரொம்பவும் ஆத்திரம் உண்டாகும். கபூர்த்தலாவுக்கு வந்தால் அவர்களைத் தான் என்ன செய்வார் என்று சிலவேளை பயமுறுத்துவார். இந்த மிரட்டலினால் கேலி அதிகரிக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. அவர் ஏற்கனவே பிரான்சில் சிறிது காலமிருந்திருக்கிறார். நன்றாய் பிரெஞ்சு பேசுவார். அவர் எவ்வளவு பிரஞ்சு பேசினாலும் அது உபயோகப்படவில்லை. இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் அந்நியபாஷைகள் கற்றுக்கொடுக்கும் விநோத முறைக்கு இதுவே உதாரணமாகும்.

ஒரு நாள் இரவு நடுநிசியில் உபாத்தியாயர் திடீரென்று எங்களுடைய அறைகளுக்கு வந்து சோதனைபோட்டார். பாரஞ்சித்சிங் அவர்களுடைய அழகான தங்கப்பூண் கட்டிய பிரம்பு கெட்டுப்போய் விட்டதாம். சோதனையால் பயனில்லை. சாமான் கிடைக்கவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, லார்ட்ஸ் என்ற இடத்தில் ஈட்டனுக்கும் ஹாரோவுக்கும் பந்தயவிளையாட்டு நடந்தது. அது முடிந்தவுடனே கெட்டுப்போன பிரம்பு சொந்தக்காரரின் அறையில் குந்தினாற்போல வந்து விட்டது. யாரோ ஒருவர் அதைப் பந்தயநாளில், டம்பமாக உபயோகப்படுத்தி விட்டு, திரும்பி வைத்திருக்கவேண்டும். எங்களுடைய வீட்டிலும் ஏனைய

வீடுகளிலும் சில யூதமாணவர்கள் வசித்துவந்தார்கள். எங்களோடுகூட, அவர்கள் நன்றாக பழகிவந்த போதிலும், பொதுவாக அவர்களிடம் மற்றவர்களுக்கு ஒருவகை அருவருப்பு இருந்துவந்தது. கண்மறைவாக அவர்களைப்பற்றித் திட்டுவார்கள். அவர்களுக்கு விரோதமாக கண்டதையெல்லாம் பேசுவார்கள். யூதர்களைப்பற்றி இவ்வாறு பேசுவது சரிதான் என்ற எண்ணம் என்னையறியாமலே எனக்குக்கூட வந்து விட்டது. ஆனால், புத்திபூர்வமாக எனக்கு அவர்களிடம் வெறுப்புக் கிடையாது. பின்னாட்களில் எனக்கு பல யூத நண்பர்கள் இருந்தார்கள்.

ஹாரோவாழ்க்கை எனக்கு நன்றாகப் பழகிவிட்டது. அதன்பேரில் எனக்குப் பிரியமுமேற்பட்டது. என்றாலும் என்னுடைய வளர்ச்சிக்கு அது இடந்தராது என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. உயர்தரக் கல்லூரியில்சேர ஆவல் உண்டாயிற்று. 1906-7 ஆண்டுகளில் இந்தியச் செய்திகள் எனக்கு மிகுதியும் மனக்கலக்கம் உண்டாக்கின. இங்கிலீஷ் பத்திரிகைகளில் இந்தச் செய்திகள் மிகவும் சொற்பமாகத்தான் கிடைத்தன. அவ்வளவு சொற்பமாயிருந்தபோதிலும், வங்காளத்திலும், பாஞ்சாலத்திலும், மகாராஷ்டிர தேசத்திலும் பெரிய பெரிய நிகழ்ச்சிகள் நேர்ந்துவருகின்றன என்று எனக்குத் தெரிந்தது. லாலா லஜபதிராயும், சர்தார் அஜித் சிங்கும் பாஞ்சாலத்திலிருந்து பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். வங்காளம் பொங்கியெழுந்த பேரரவம் எங்கும் எட்டியது. பூனாவிலிருந்து கிடைத்த செய்திகளில் திலகரின்நாமம் ஜொலித்தது. ஸ்வதேசி இயக்கமும் பகிஷ்காரக் கிளர்ச்சியும் ஓங்கிவளர்ந்தன. இவைகள் எல்லாம் என் உள்ளத்தில் மகத்தான உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டன. என்றாலும் இவைகளைப்பற்றிப்பேச ஹாரோவில் எனக்கு ஒருவரும் கிடைக்கவில்லை. விடுமுறை நாட்களில் என்னுடைய சகோதரர்களிற் சிலரையும் மற்றும் இந்திய நண்பர்களையும் சந்திப்பேன். அப்பொழுதுதான் என்மனதார சம்பாஷித்து ஆறுதலடைய ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

திறமையான படிப்பிற்காக பள்ளிக்கூடத்தில் எனக்கு வெகுமதியாக ஒரு புஸ்தகம் கிடைத்தது. அது கரிபால்டியைப்பற்றி ஜி.எம். ட்ரெவிலியன் எழுதிய நூலின் ஒருபாகம். உத்தம தேசாபிமானியும் இத்தாலிய வீரனுமான கரிபால்டியின் ஜீவிய சரித்திரத்தின் சில குறிப்புகளை நான் படிக்கவும்,

பரவச மடைந்தேன். விரைவில் கரிபால்டியைப்பற்றி டிரெவி லியன் அவர்கள் எழுதிய மற்றிரண்டு பாகங்களையும் வாங்கி, கரிபால்டியின் ஜீவிய சரித்திரம் முழுவதையும் ஜாக்கிரதை யாய்ப் படித்தேன். இத்தாலியை எவ்வாறு ஆஸ்திரியாவின் கொடுமையினின்றும், கரிபால்டி விடுதலை செய்தாரோ, அதே போல இந்தியாவிலும் விடுதலைப்போர் நடப்பதாகவும், வீரச் செயல்கள் புரிவதாகவும் கற்பனைக்காட்சிகள் காண ஆரம் பித்தேன். அந்த மயக்கத்தில் இத்தாலியை இந்தியாவாகவும் இந்தியாவை இத்தாலியாகவும் நினைத்துக்கொள்வேன். இப் பேர்ப்பட்ட பெரிய சிந்தனைகள் செய்ய, ஹாரோ சிறிதும் பொருத்தமில்லாத இடமாகக் காணப்பட்டது. ஆகவே, கல் லூரியின் விசாலமான அரங்கத்திற்குப் போக ஆசைப்பட் டேன். இந்தயோசனைக்கு தகப்பனுரை இணங்கும்படி செய்தேன். ஹாரோவுக்கு நான் வந்து இரண்டு ஆண்டுகள் தான் ஆயின. இவ்வளவு குறுகிய காலத்துக்குள் மாணவர்கள் ஹாரோவை விட்டுச் செல்வது. வழக்கமில்லாவிடினும், நான் அதை விட்டு விலகினேன். ஹாரோவை நான் விட்டது என்னுடைய சொந்த விருப்பத்தாலேதான். இருந்தாலும் அதைவிட்டுப் பிரியுந்தருணத்தில் எனக்கு என்னமோ. துக்கம் வந்து, கண்களில் கண்ணீர்த்ததும்பிற்று. அந்த இடம் அவ் வளவு எனக்குப் பிடித்துப் பழகிப் போயிருந்தது. தவிர, என் வாழ்க்கையில் ஒருபாகம் அன்றேமுடிவடைந்தது. இருந் தாலும் உள்ளபடியே ஹாரோவை விட்டுப் பிரிந்ததில், எனக்கு துக்கந்தான் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஹாரோவைவிட்டுப் பிரிகிறவர்கள், இந்த மாதிரி வழக்கமாக நடந்து கொள்ளும் ஒரு சம்பிரதாயத்தினுலேயே, நானும் அழுதேனே என்றும் எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், ஹாரோ பள்ளிக் கூடத்தில் நான் மனப்பூர்வமாகக் கலந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். அதற்கு ஏற்றாற் போல, அதனுடைய பழக்க வழக்கங்களும் என்னிடம் ஒட் டிக்கொள்ளுவது சகஜம்.

1907-ல் அக்டோபரில் பதினேழு முடிந்து பதினெட் டாம் பிராயம் பிறக்கும் சமயம். கேம்பிரிட்ஜ் ப்ல்கலைக் கழகத்திலே டிரினிடி காலேஜில் போய்ச் சேர்ந்தேன். பள்ளிக்கூடத்தைக் காட்டிலும் கல்லூரியில் அதிகமான சுதந் திரம் இருந்ததால், சந்தோஷம். கௌமார தசையின் தளை களைக் களைந்து, வயது வந்த யுவபுருஷனுக எண்ணிக்

கொண்டேன். ஆகவே ஜோராக கேம்பிரிட்ஜின் குறுகியவீதி களிலும் கல்லூரிகளின் பெரிய பிராகாரங்களிலும் கொஞ்சம் உல்லாசமாக நடப்பதும், எனக்குத் தெரிந்த பேர்வழிகளைச் சந்தித்துப் பேசுவதும் எனக்கு மகிழ்ச்சியை அளித்தன.

கேம்பிரிட்ஜில் நான் மூன்று வருஷம் படித்தேன். கேம் பிரிட்ஜ் பக்கத்தில் மந்தகதியுடன் ஓடிக்கொண்டிருக்கும் "கேம்" நதியைப்போல், எனது வாழ்நாளும் இந்த மூன்று ஆண்டுகளில் மிகவும் அமைதியுடன் ஓடிக்கொண்டிருந்தது. கலவரமே கிடையாது. அநேக நண்பர்கள், இந்தக்காலத்தில், எனக்குக் கிடைத்தார்கள். கஷ்டமில்லாத படிப்பு; இனி மையான விளையாட்டு; இதன் மூலம் என் மனோசக்திகளின் மலர்ச்சி. ரசாயனம், பூமி அமைப்பு சாஸ்திரம், தாவரநூல் இவைகளை என்னுடைய பரீக்ஷைக்கு பாடங்களாக எடுத்துக் கொண்டேன். ஆனால் என்னுடைய படிப்பின் ருசி, இவை களோடு நின்றுவிடவில்லை. கேம்பிரிட்ஜிலும், விடுமுறை நாட் களில் சென்ற பொழுது லண்டன் மாநகரிலும், மற்ற இடங் களிலும் என் சகாக்கள் எல்லோரும் பெரிய வித்வான்களைப் போல, இலக்கியம், சரித்திரம், அரசியல், பொருளாதாரம் முதலியவைகளைப்பற்றிப் பேசுவது வழக்கம். இந்தப் பண்டி தத்தனத்தைக் கண்டு முதலில் நான் மயங்கினேன். ஆனால் நானும் சில புஸ்தகங்களைப் படித்ததும், இவர்களோடு சரி சமானமாகப் பேசி வாதாட எனக்குத் தெரியாது என்ற எண்ணம் பிறருக்கு ஏற்படாத வண்ணம் சமாளித்துக்கொள்ள வும் திறமை அடைந்தேன். அக்காலத்தில் கேம்பிரிட்ஜில் மாணவர்களுக்குள்ளும் மற்றவர்களுக்குள்ளும் ஜெர்மானிய தத்துவ ஞானி நீட்சே அவர்களைப் பற்றி எப்பொழுதும் பேச்சு. தமது நாடகங்களுக்கு பர்னார்ட் ஷா எழுதி யிருக்கும் முகவுரைகளைப் பற்றியும், லாவஸ் டிக்கின்சன் எழுதிய நூல் களைப்பற்றியும் எங்களுக்குள் மிகுதியும் வாதம் நடைபெறும். அதிக அனுபவ சீலர்போல் நாங்கள் ஆண் பெண் விவகாரங் களைப் பற்றி கூச்சமில்லாமல் பேசுவோம். தர்மாதர்ம த்தைப் பற்றிப் பேசுவோம். இவான்பிளாக், ஹேவ்லக் எல்லிஸ், கிராப்ட்எப்பிங், அல்லது ஆட்டோவெய்னிங்கர் முத லியவர்கள் எழுதிய மர்ம நூல்களையும் மனோ தத்துவ நூல்களை யும் பற்றி, ஏதோ ரொம்பத் தெரிந்தவர்கள் போல் விவாதம் செய்வோம். நிபுணர்களைத் தவிர சாதாரண புத்திசாலி மனித ருக்கு வேண்டிய அளவு இந்த விஷயங்கள் சம்பந்தமாக எங்

களுக்குத் தெரிந்து விட்டதென்று நாங்கள் எண்ணிக் கொண்டோம்.

பெரிய டம்பப் பேச்சு பேசினாலும், பெண்களோடு பழகும் போது எங்களிற் பெரும்பாலோருக்குக் கூச்சம்தான். மற்றவர்கள் எப்படியோ சொல்லமுடியாது. நிச்சயமக நான் கோழை. கேம்பிரிட்ஜை விட்டு வெளிவந்த பல ஆண்டுகள் வரையிலும், என் இல்லற இன்ப ஞானம் புஸ்தகங்ளிலிருந்து சேகரித்தது தான். அனுபவமல்ல. ஏன் இப்படி இருந்திருக்கவேண்டும் என்பதற்கு காரணஞ் சொல்வது கஷ்டம். எங்களில் பெரும்பான்மை யோருக்கு பெண்களைக் கண்டால் மயக்கந்தான். இது பாபம் என்ற எண்ணமும் எங்களுக்கு கிடையாது. நிச்சயமாய் எனக்குக் கிடையாது. மதகோட்பாடுகள் என்னைப் பாதிக்க வில்லை. காதல், தர்மத்தையும் சேர்ந்ததல்ல; அதர்மத்தையும் சேர்ந்ததல்ல; இயற்கை குணம் என்று பேசிக் கொள்வோம். என்றாலும் என்னுடைய கூச்சத்தினால் யாதொரு விபரீதமும் நேரவில்லை. மேலும் இத்தகைய அநுபவத்தை நாடிச்செல்ல எனக்கு அருவருப்பு. குழந்தையிலிருந்து நான் தனித்து வளர்ந்ததினால், எனக்கு இவ்வளவு கூச்சமோ என்னவோ

இந்த வயதில் சார்வாகமதத்தைச் சார்ந்திருந்தேன். யுவாவஸ்தையில் இது சகஜம். ஆஸ்கார்வைல்ட், வால்டர் பேடர், இவர்களின் நூல்களும் இதற்குக்காரணம். குதூகலமான சுகவாழ்வில் விருப்பமிருந்தபோதிலும், என் மனப் போக்குக்கு இது போதியகாரண மல்ல. விஷயசுகங்களில் மிதமிஞ்சிய மோகம் என் சுபாவமல்ல. மதத்தில் பற்று எனக்குக்கிடையாது. மதத்தின் இயற்கை விரோதமான நியமங்களில் எனக்கு வெறுப்பு. என்றாலும் வாழ்க்கைக்குக் குறிக்கோளாக இருக்க ஒரு திட்டம் வேண்டாமா? அப்பொழுது நான் உண்மைகளை ஆழ்ந்து ஆராய ஆற்றல் பெறவில்லை. ஆகவே வாழ்க்கையை அழகாகவும் ரம்மியமாகவும் வாழ வேண்டும் என்று எனக்குத்தோன்றிற்று. எல்லா வகைகளிலும், மதிப்பும் கௌரவமும் ஏற்படும்படி ஆபாசத்திற்கு இடங்கொடுக்காமல் வாழக்கூடிய வாழ்க்கைதான் மேலாக எனக்குபபட்டது. வாழ்க்கை இன்பமயமாகத் தோன்றிற்று. அதைப்பாவ மயமாகக்கருத மறுத்தேன்.

இத்துடன் துணிகரமான செயல்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணமும் என்னைக்கவர்ந்து கொண்டது. எனது

தகப்பனைப்போல நானும் ஒருவகைச் சூதாடி. முதன் முதலாக பணத்தை பந்தயமாக வைத்து ஊதாரி வாழ்க்கை வாழ்ந்தேன். பின்னர் உயிரையே பந்தயமாக வைத்து செயற்கரிய செயல்களைச் செய்ய, ஏதோ என் பிடரியைப் பிடித்துத் தள்ளிற்று. 1907-8-ம் வருஷங்களில் இந்திய அரசியல் போக்கு பெரும் கொந்தளிப்பாக விருந்தது. அதிலே நானும் கலந்துகொண்டு, தீரமான பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினேன். இந்த விருப்பம் சுகவாழ்க்கையின் ஆசைக்கு முரணுகிறது. இவ்வாறு என் உள்ளத்தில் ஒரே குழப்பம். என்றாலும் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனெனில் வாழ்க்கையைப் பற்றி முடிவான தீர்மானம் செய்யவேண்டிய காலம் வெகுதூரத்திலிருந்தது. இதற்கிடையே, காலம் உல்லாசமாய்ப் போய்க்கொண்டிருந்தது. தேகத்தையும் அறிவையும் நன்றாகப் பயிற்சி பண்ணிக்கொண்டு வந்தேன். புதிய புதிய உலகங்கள், காட்சியில் தோன்றின. எவ்வளவோ பார்க்கவேண்டும், எவ்வளவோ செய்யவேண்டும், புதிதுபுதிதான பாதைகளில் செல்லவேண்டும் என்ற ஆசைகளில் ஆழ்ந்தேன். குளிர்காலத்தில் மாலையில் கணப்புச் சட்டிக்குப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு, பேச ஆரம்பிப்போம். பொழுதுபோவதே தெரியாது. நடுராத்திரிக்குமேல் பொழுது சென்றிருக்கும். அதைப்பற்றி நினைவே இல்லாமல், பேசிக்கொண்டிருக்கையில், கணப்புச்சட்டி தீ, கரியில்லாமல் அவிந்துபோகும். உடனே குளிர்நடுக்க நடுக்க, நாங்கள் படுக்கச் செல்வோம். சிலசமயங்களில் பலமாக வாதங்கள் நிகழும். ஒரே கூப்பாடுதான். தொண்டை கிழிந்துபோகும்படி சப்தம் செய்து வாதிப்போம். ஆனால் இதெல்லாம் போலிவாதமே. மனிதவாழ்க்கை சம்பந்தமான பிரச்னைகளை விளையாட்டாக நாங்கள் வாதஞ் செய்தோம். ஏனென்றால், இப்பிரச்சினைகள் உண்மையாக எங்கள் வாழ்க்கைமுன் இன்னும் தோன்றவில்லை. உலகின் சிக்கலான விஷயங்களில் மாட்டிக்கொண்டு இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் கடமை ஏற்படவுமில்லை.

இந்தசமயம் மகாயுத்தத்திற்கு முன் இருபதாம் நூற்றாண்டின் ஆதிபாகம். விரைவில் பழைய உலகம் மடிந்துபோய், புதிய உலகம் இளைஞர்களுக்கு நாசத்தையும் ஆறாத் துயரத்தையும், மனோவேதனையையுங் கொடுக்கும்படியாக பயங்கரத்துடன் வந்துகொண்டிருந்தது. ஆனால் வரப்போ

ஆகும் இந்தப் புரட்சியை காலமென்னும் திரை மறைத்துக் கொண்டிருந்தது. நிலைத்த மகிழ்ச்சியும் முற்போக்கும் இருந்துவளர்ந்துகொண்டு வருவதாகவே, நாங்கள் எண்ணி ஞேம். இதை அனுபவிக்கச் செல்வம்படைத்தோருக்கு சுக மாகத்தான் இருந்தது. அந்தக்காலத்தில் என் உள்ளத்தில் பரவிக்கிடந்து என்னை மாற்றிவந்த கருத்துக்களையும், தத்து வத்தையும் பற்றிச் சொன்னேன். ஆனால் அப்பொழுது இந்தவிஷயங்களைப்பற்றி, நான் தெளிவாக யோசித்ததாகவா வது, எண்ணங்கள் தெளிவாக இருக்கவேண்டியது அவசியம் தான் என்று நான் கருதினதாகவாவது, நீங்கள் எண்ணிக் கொள்வது தவறாகும். அவைகள் என்னுடைய உள்ளத்தில் மிதந்துகொண்டு சென்ற வெறும் கற்பனைகளாகும். ஆயினும், அவற்றின் பிரபாவம் என்மனதில் ஓரளவு பதிந்தது. இந்த சிந்தனைகள் என்மன அமைதியைக் கலைக்கவில்லை. வேலை, விளையாட்டு, களியாட்டம், இவைகளில் முழுதும் ஈடு பட்டிருந்தேன். எப்பொழுதாவது எனக்கு மனக்கவலை உண்டானால், அது இந்தியாவின் விடுதலைப்போராட்டத்தைப் பற்றி நினைக்கும் பொழுதுதான். கேம்பிரிட்ஜில் நானிருக்கும் பொழுது மெரிடித் டௌன்செண்ட் எழுதிய "ஆசியாவும் ஐரோப்பாவும்" என்ற நூலைப்படித்தேன். அதனால் என் உள்ளத்திலே அரசியல் சம்பந்தமான உணர்ச்சி அதிகமாக ஏற் பட்டது.

1907-ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பல ஆண்டுக ளுக்கு, இந்தியாவில் கிளர்ச்சியும் குழப்பமும் அதிகரித்துக் கொண்டேவந்தன. 1856-ம் வருஷத்திற்குப்பிறகுதான் அன் னிய ஆட்சிக்கு உடன்படாமல், இந்தியா முதல்முதலாக தீவிர மாகப்போராடத் தலைப்பட்டது. திலகர் ஸ்வராஜ்யப் பிரசாரம் செய்ததும், அவர் தண்டனையும், அரவிந்தகோஷ் செய்தியும் வங்காளத்திலே பாமரமக்களும்கூட சுதேசிவிரதத்தைக் கொண்டு அன்னிய ஆடைகளைப் பகிஷ்கரித்த மனோதிடத் தையும் நாங்கள் பத்திரிக்கைகளில் படித்தோம். இங்கிலாந்தில் அப்பொழுது வசித்த இந்தியர்களுக்குள் தீவிரபரபரப்பு உண் டாயிற்று. தீவிரவாதிகள் என்று அழைக்கப்பட்ட திலகரின் கோஷ்டியைத்தான் நாங்கள் ஆதரித்தோம். எங்களுக்கு அந்தக்கட்சியின் திட்டத்திலேதான் பிடித்தம்.

கேம்பிரிட்ஜில் இந்தியர்கள் "மஜ்லிஸ்" என்ற சங் கத்தை அமைத்திருந்தார்கள். நாங்கள் அங்கே அடிக்கடி அர

சியல் பிரச்னைகளைப்பற்றி விவாதம் செய்வோம். ஆனால் சரியான ஆராய்ச்சி முறையில், முடிவைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் வாதிப்பதில்லை. பார்லிமெண்டு சபையிலோ, பல்கலைக்கழக சங்கத்திலோ, பெரியார்கள் எவ்வாறு ஆடம்பரத்துடனும் பாஷா விமரிசையுடனும் பேசுவார்களோ, அவ்விதம் பேசப்பழகுவதுதான் எங்கள் முக்கிய உத்தேசம். நான் அடிக்கடி "மெஜ்லிசு" க்குப்போவேன். ஆனால் நான் இருந்த மூன்றுவருஷ காலத்தில், அதில் வாய்திறந்ததே இல்லை. என்னால் என்னுடைய கூச்சத்தையும் சங்கோசத்தையும் போக்கிக்கொள்ள முடியவில்லை. "மேக்பி அண்டு ஸ்டம்ப்" என்ற எங்களுடைய கல்லூரி விவாதசபையிலும் கூட, எனக்கு இதே தொல்லை தான். என்னால் பேசமுடியாது. ஆறுமாதத்தில் ஒருதடவையாவது ஒவ்வொரு அங்கத்தினரும் பேசவேண்டும் என்பது சங்கத்தின் விதியாகும். பேசாவிட்டால் அபராதம் செலுத்தவேண்டும். அடிக்கடி நான் அபராதம் செலுத்திவந்தேன். தான் இந்தியா மந்திரியாவதற்கு முன்னே, எட்வர்ட் மாண்டேகு அவர்கள் எங்களுடைய "மெக்பி அண்டு ஸ்டம்ப்" சங்கத்திற்கு அடிக்கடி வருவார். அவர் டிரினிட்டி கல்லூரியின் பழைய மாணவர். கேம்பிரிட்ஜ் தொகுதிக்கு அவர் பார்லிமெண்டு மெம்பராக அப்பொழுது இருந்தார். அவரிடமிருந்துதான் முதல்முதலாக பக்தி என்ற வார்த்தைக்குச் சரியான நவீன வியாக்கியானத்தைத் தெரிந்து கொண்டேன்.

பகுத்தறிவுக்கு உண்மையல்லவென்று தோன்றும் பொருளில் நம்பிக்கை கொள்வதே வாஸ்தவமான பக்தியாகும். நம் அறிவுக்கு ஒத்த விஷயத்தில் பக்திக்கு அவசியமே இல்லை என்று கூறினார். நான் இயற்கை சாஸ்திரங்களைப் படித்து வந்ததினால், அவற்றின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டேன். அவற்றிற்குட்படாத எவ்வித உண்மையும் இருக்கமுடியாது என்று எண்ணினேன். தற்காலம், இந்தக்கொள்கைகளில் பல சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பௌதிக சாஸ்திரத்திற்கு ஐயமற்றதாகவும், உலகின் செல்வக் களஞ்சியத்திற்கு ஒரே சாவியாகவும் பலரால் கருதப்பட்டது.

எங்களுக்குள்ளேயும் மெஜ்லிஸிலும் இந்திய மாணவர்களாகிய நாங்கள் இந்திய அரசியலைப்பற்றி வாதம்செய்கையில், கடுமையான சொற்களைப் பொழிந்துவிடுவோம். வங்காளத்

தில் அப்பொழுதுதான் தலைதூக்கி வெளிவந்த துப்பாக்கி வெடிகுண்டு வேட்டுகளை ஆதரித்துக்கூட, இந்திய மாணவர்கள் பேசுவது வழக்கம். இத்தகைய வாய்வீரரில் பலர் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறி, ஜில்லாக் கலெக்டர்களானார்கள். ஹைகோர்ட்டு நீதிபதிகளாகவும், கனம்பொருந்திய பிரபல வக்கீல்களாகவும் மாறினார்கள். இவர்களில் ஒரு சிலர்கூட இந்தியாவின் விடுதலைப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பாக எதுவும் பின்னர் செய்யவில்லை. அந்தக்காலத்தில் இந்தியாவின் பிரபலஅரசியல் தலைவர்களிற் பலர் எங்களை கேம்பிரிட்ஜில் வந்து பார்த்தார்கள். அவர்களிடத்திலே எங்களுக்கு மரியாதைதான். இருந்தாலும் அவர்களைக் காட்டிலும் நாங்கள் சற்று உயர்ந்தவர்கள் என்ற எண்ணமும் எங்கள் மனதிலே ஒளிந்து கொண்டிருந்தது. எங்களுடைய கேம்பிரிட்ஜ் கல்வியும் தாராளமான கருத்துகளும் அவர்களுக்கில்லை என்ற கர்வம் கொண்டிருந்தோம்.

எங்களை வந்துபார்த்தவர்களுக்குள் மூவர் - பாபு விபின் சந்திரபால், லஜபதிராய், கோகளே. எங்களுடைய சிறிய அறைகளொன்றில் நாங்கள் விபின்பால் அவர்களை வரவேற்றோம். அங்கே கூடியிருந்தது ஒரு டஜன் பேர்வழிகள்தான். என்றாலும் பதினாயிரக்கணக்கான ஜனங்களின் முன்னிலையில் பிரசங்கம் செய்வதுபோல நினைத்துக்கொண்டு, விபின்பாபு கோடையிடியைப்போலச் சப்தம் போட்டுப் பேசினார். அந்த சப்தத்தில், அவர் பிரசங்கம் சரியாக எனக்கு அர்த்தமாகவில்லை. லாலாஜி எங்களிடம் அமைதியுடன் பேசினார். பேச்சு ஆணித்தரமாக இருந்தது. விபின் பாபு பேசினதைக் காட்டிலும் லாலாஜீ பேசினது எனக்குப் பிடித்ததென்று நான் அப்பாவுக்கு கடிதம் எழுதினேன். அவருக்கு ரொம்ப சந்தோஷம். ஏனென்றால் அவருக்கு அக்காலத்திய தீவிர வங்காள தேசியவாதிகளிடம் அனுதாபம் கிடையாது. கோகளே கேம்பிரிட்ஜில் பகிரங்க மேடையில் ஒரு பிரசங்கம் செய்தார். பிரசங்க முடிவில் எ. எம். க்வாஜா அவர்கள் கேள்விகேட்டதுதான் முக்கியமாக எனக்கு ஞாபமிருக்கிறது. பிரசங்க மண்டபத்தின் நடுவிலே, க்வாஜா உட்கார்ந்திருந்தவர், எழுந்து நின்றார். ஒரு கேள்விகேட்க ஆரம்பித்தார். ஆனால் அக்கேள்வி பிரசங்கம் போல் நீண்டு, தலைகால் புரியாமல் போய் விட்டது.

இந்திய மாணவர்களுக்குள் அப்பொழுது பேர்பெற்று விளங்கியவர் லாலா ஹரிதயாள். நான் கேம்பிரிட்ஜுக்குப்

போகுமுன்னரே, அவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறி விட்டார். ஹேரோவில் நான் படிக்கிற காலத்தில் அவரை இரண்டொரு முறை லண்டனில் சந்தித்திருக்கிறேன். கேம்பிரிட்ஜில் என்னோடு கூடப்படித்த இந்தியர்களிற் பலர், பின்னர் இந்திய அரசியல் கிளர்ச்சியில் தீவிரமாக வேலை செய்திருக்கிறார்கள். நான் கேம்பிரிட்ஜுக்குப் போனதும், ஜே. எம். சென்குப்தா அதைவிட்டதும், சரியாயிருந்தது. ஸைபுடின் கிச்சிலு, சையதுமாமுத், தஸதுக் அகமது ஷெர்வானி, இவர்கள் அநேகமாக என்காலத்தியவர்கள் தான். இப்பொழுது அலகாபாத் உயர்தர நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருக்கும் எஸ். எம். சுலைமான் அவர்களும் அப்பொழுது கேம்பிரிட்ஜில இருந்தவர்தான். என்னோடிருந்த ஏனையோர்கள் மந்திரிகளாகவும், ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களாகவும் மலர்ந்திருக்கின்றனர். லண்டனில் சியாம்ஜி கிருஷ்ணவர்மாவையும் அவருடைய இந்திய விடுதியையும் பற்றி நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் நான் அவரைச் சந்தித்ததுமில்லை; அந்த விடுதிக்குச் சென்றதுமில்லை. சிலநேரங்களில், நாங்கள் அவருடைய "இந்தியன் ஸோஷியாலஜிஸ்ட்" என்ற பத்திரிகையைப் பார்ப்பதுண்டு. வெகுகாலத்துக்குப் பின்னர் 1926-ம் ஆண்டில் ஜினிவாவில் சியாம்ஜியைக் கண்டேன். அவருடைய சட்டைப் பைகளில் "இந்தியன் ஸோஷியாலஜிஸ்ட்" பத்திரிகையின் பழையபிரதிகள் நிறைந்திருந்தன. அவரிடத்தில் ஒரு விநோதம் உண்டு. அவரிடம் எந்த இந்தியன் கிட்டநெருங்கினாலும், அவனை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அனுப்பிய போலீஸ் உளவாளியாகவே மதித்துவிடுவார்.

லண்டனில் இந்திய ஆபீசால் ஸ்தாபிக்கப்பட்ட மாணவர் விடுதி ஒன்று உண்டு. இந்திய மாணவர்களின் உளவு அறிவதற்காக ஏற்படுத்தப் பட்ட அமைப்பு என்று இந்தியர்கள் இதைக் கருதினார்கள். அதற்கு தக்க ஆதாரம் இருந்தது; என்றாலும் இந்தியமாணவர்களில் பலர், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அதில் சேரவேண்டி வந்தது. இந்த ஸ்தாபனத்தின் சிபார்சு இல்லாமற் போனால், இங்கிலாந்திலுள்ள எந்தச் சர்வகலாசாலையிலும், சேருவது சாதாரணமாக சாத்யமில்லை.

இந்தியாவிலே அரசியல் போக்குமாறிக் கொண்டுவந்தது. எனவே என்னுடைய தகப்பனாரும் தீவிரமாக அரசியலில்

கலந்து கொள்ளத் தலைப்பட்டார். அவருடைய அரசியல் போக்கு எனக்குப் பிடிக்காவிட்டாலும், அவர் அரசியலில் கலந்து கொண்டதைப்பற்றி சந்தோஷம் அடைந்தேன். அவர் மிதவாதக் கும்பலில் சேர்ந்து கொண்டார். அது இயற்கைதான். அவர்கள் ஏற்கனவே தகப்பனாருக்கு தெரிந்தவர்கள். அவர்களில் பலர் வக்கீல் தொழில் தோழர்கள். ஐக்கிய மாகாணத்தில் ஒரு மாகாண மகாநாட்டுக்கு அவர் தலைமை வகித்தார். வங்காள, மகாராஷ்டிர, தீவிரவாதிகளின் கொள்கைகளைக் கண்டித்து தலைமைப்பிரசங்கம் செய்தார். அவர் ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் ஆனார். 1907-ம் ஆண்டில் காங்கிரசில் குழப்பம் ஏற்பட்டு, சூரத்தில் பிளவுபட்ட பொழுது, அவர் அங்கேயிருந்தார். சூரத் நிகழ்ச்சிக்குப் பின்னர், காங்கிரஸ் மருக்கலப்பில்லாத மிதவாதக் காங்கிரசாக ஆகிவிட்டது.

சூரத் பிளவுக்குப் பிறகு, பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்த பேர்பெற்ற பத்திரிகாசிரியர் எச். டப்ளியு. நெவின்சன். அலகாபாத்தில் என்னுடைய தகப்பனாரின் விருந்தினராக சில நாட்கள் தங்கியிருந்தார். "மோதிலால், தம்முடைய உதாரகுணத்தில் தவிர, மற்றெல்லாவற்றிலும் மிதவாதி" என்று அவர் தகப்பனாரை வர்ணித்திருக்கிறார். இது தவறான மதிப்பாகும். ஏனெனில், அரசியலில் தவிர, தகப்பனார் வேறெதிலும் மிதவாதியாகயிருந்ததேயில்லை. அரசியலிலும்கூட, படிப்படியாக அவர் மிதவாதக் கோஷ்டியை அறவே விட்டுவிட்டு, தீவிரவாதியாக ஆனார். அவர் எவ்வாறு மிதவாதியாய் இருக்கமுடியும்? தீவிர உணர்ச்சிகொண்டவர், கடுமையான ஆத்திரம் உள்ளவர்; எல்லையற்ற கர்வம் படைத்தவர்; உறுதியான உள்ளம் வாய்ந்தவர். மிதவாதத்திற்கும் அவர் சுபாவத்திற்கும் வெகுதூரம்; என்றாலும் 1907-8 லும், பின்னர் சில வருஷங்களிலும், அவர் மிதவாதிகளுக்குள் சிறந்த மிதவாதியாக இருந்துவந்தார். அவருக்கு தீவிரவாதிகளின் பேரில் கனத்தகோபம். லோகமான்யதிலகரிடம் மட்டிலும் அவருக்கு மதிப்பு உண்டு.

அவர் ஏன் இவ்வாறு மிதவாதியானார்? நீதி சாஸ்திரங்களையும், அரசியல் ஸ்தாபனச் சரித்திரங்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்தவர். எனவே அரசியலில் சட்டவரம்புக்குட்பட்ட கிளர்ச்சியை ஆதரிப்பது சகஜம். தகுந்த காரியமில்லாமல், கடுமையாகப் பேசுவதால்மட்டும் யாதொருபல

ஞும் ஏற்படாது என்று அவருடைய கூரியமதிக்குத் தெளி வாகப் புலப்பட்டது. அரசியலில், பலன்தரக்கூடிய வேலைத் திட்டம் ஒன்றும் அவர் கண்ணில் அப்பொழுது படவில்லை. சுதேசிக் கொள்கையாலும், பகிஷ்கார இயக்கத்தாலும் நக்க பயன் விளையும் என்று அவரால் நம்பமுடியவில்லை. மேலும் இந்த இயக்கங்களுக்கு, அடிப்படைத் தூண்டுதல், மதத்தை ஆதாரமாகக்கொண்ட தேசீயம் ஆனதால், அவருக்குப் பிடிக்க வில்லை.

இந்தியாவின் பழங்கால நாகரிகத்தைப் புனருத்தாரணம் செய்ய அவர் விரும்பவில்லை. அதனுடைய பழைய சமூக வழக்கங்களிலும் வருணாசிரம தர்மத்திலும் அவருக்கு சிறிது கூட அனுதாபம் கிடையாது. அவை பிற்போக்கான வழக் கங்கள் என்று கருதினர். மேனுடுகளிலே, காணப்படும் முற்போக்கைக்கண்டு, அதில் மோகங்கொண்டார். பிரிட்ட னுடைய சம்பந்தத்தால்தான் இந்தியாவுக்கு முன்னேற்றம் ஏற் படுமென்பது அவருடைய அக்காலத்திய நம்பிக்கை.

1907-ம் ஆண்டில் தோன்றிய இந்திய தேசீய இயக்கம் பிற்போக்கான கொள்கைகளைத் தழுவியது என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தியாவிலும் சரி, ஆசியாவின் ஏனைய பகுதிகளிலும் சரியே, மதத்தை ஆதாரமாகக் கொண்டு தான் தீவிரதேசீய இயக்கங்கள் தோன்றமுடியும். ஆசார சீர்திருத்த விஷயங்களில் மிதவாதிகள் முற்போக்குடையவர் களாக இருந்தார்கள். ஆனுல் அவர்களுடைய தொகையைக் கைவிரல்களால் எண்ணிவிடலாம். ஆமை கிணற்றிலும், அணில் கொம்பிலும் என்பது போல, மிதவாதிகள், பொது மக்களோடு யாதொரு சம்பந்தமும் இல்லாமல் வாழ்ந்துவந்தார் கள். இந்தியாவின்பொதுவான பொருளாதார அபிவிருத் தியைப்பற்றி, அவர்கள் அதிக சிந்தனை செய்யவில்லை. தங் களைச் சேர்ந்த நடுத்தரவகுப்பினர் செழிக்கவேண்டும் என் பதுதான் அவர்களுடைய நோக்கமாய் இருந்தது. இவர் களுடைய முற்போக்குக்குத் தடையாய் நிற்கும் ஜாதிக் கட்டுப் பாட்டைச் சிறிது தளர்த்தவும் மற்றும் சில ஆசார திருத் தங்களுக்காகவும், பிரசாரம் செய்தார்கள். மிதவாதத்தை மேற்கொண்டபோதிலும், அதிலும் தீவிரவழியை நாடினின்றார். வங்காளத்திலும், புனவிலும் உள்ள சில தலைவர்களைத் தவிர அநேகமாக மற்ற எல்லாத் தீவிரவாதிகளும் இளைஞர்களே. இந்த இளைஞர்கள் பிடிவாதம் பிடித்து, தங்கள் வழி செல்ல

வாவது என்று அவர் ஆத்திரப்பட்டார். இந்த இளைஞர்கள் முட்டாள்கள் என்றெண்ணினார். தமக்கு மாறான அபிப் பிராய முடையவர்களிடம் அவருக்கு சகிப்புத்தன்மையே கிடையாது. தீவிரவாதிகளுக்குச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் சாட்டைகொடுப்பதில் அவர் தயங்குவதேஇல்லை. நான் கேம் பிரிட்ஜை விட்டு வந்தபிறகு என்று தான் ஞாபகம். அவர் எழுதிய வியாசம் ஒன்றைப் படித்தேன். எனக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. நான் அவருக்கு அதிகப் பிரசங்கித்தன மான கடிதம் ஒன்று எழுதினேன். "தங்களுடைய அரசியல் கொள்கைகளையும் பிரசாரங்களையும்கண்டு, பிரிட்டிஷ் அர சாங்கத்தார் மிகவும் ஆனந்தம் அடைந்திருப்பார்கள் என நம்புகிறேன்" என்று அதில் கண்டிருந்தேன். இப்படி எழு தினால் அவருக்கு வெறிபிடித்துவிடும் என்று எனக்குத் தெரி யும். அவர் ரொம்பவும் ஆத்திரப்பட்டாராம். என்னை விரை வில் இங்கிலாந்திலிருந்து வீட்டுக்குவரவழைத்து விடவேண்டு மென்றும் எண்ணினாராம்.

கேம்பிரிட்ஜில் நான் இருக்கும்பொழுது, என் தொழிலைப் பற்றிய பிரச்னை எழுந்தது. ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்குப் போகலாம் என்று முதலில் யோசிக்கப்பட்டது. அந்தக் காலத்திலே, ஐ.ஸி. எஸ். பரீக்ஷயிலே எல்லாருக்கும் மோகம். ஆனால் எனக்கும் சரி, தகப்பனாருக்கும் சரி, இதிலே அதிக விருப்ப மில்லாததால், இந்த யோசனை விட்டுவிடப்பட்டது. இதற்கு வேறொரு முக்கியமான காரணமும் ஒன்று உண்டு. ஐ. ஸி. எஸ். ஸுக்குத் தேவையான வயது எனக்கு இன்னும் வரவில்லை. எனவே, பி. ஏ. பட்டம் பெற்று 3, 4 வருடங்க ளாவது இங்கிலாந்தில் இருக்கவேண்டி வரும். நான் கேம் பிரிட்ஜில் பி. ஏ. பட்டம் பெற்றபொழுது, எனக்கு வயது இருபது. அந்தக் காலத்தில் ஐ. ஸி. எஸ். ஸுக்கு வயது 22 லிருந்து 24. பரீக்ஷயில் தேறினால், இங்கிலாந்தில் மேலும் ஒரு வருஷம் இருக்கவேண்டும். நான் இங்கிலாந்துக்குப் போய்ப் பல வருஷங்களாகி விட்டபடியால், என்னைப் பிரிந் திருக்க என் பெற்றோர்கள் விரும்பவில்லை. மேலும், ஐ. ஸி. எஸ். தேறி எனக்கு உத்தியோகம் கிடைத்தால், நான் பெற்றோர்களோடு வீட்டிலிருக்க முடியாது; பல இடங்களுக்கு உத்தியோகத்தின் பொருட்டு, என்னை மாற்றுவார்கள். நான் அவர்களை ஒரு கணமும் பிரிந்திருக்கக்கூடாது என்று பெற் றோர்கள் தீர்மானித்து விட்டார்கள். எனவே, தகப்பனாரின்

வக்கீல் தொழிலை மேற்கொண்டு "இன்னர் டெம்பிளி"ல் சேர்ந்து சட்டம் படிக்கத் துவக்கினேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு வியப்பான சங்கதி குறிப்பிடத்தக்கது. நானோ அரசியலில் தீவிர வாதி. என்றாலும் ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்குப் போவதில், எனக்கு யாதொரு வெறுப்பும் உண்டாகவில்லை. பரீக்ஷை தேறினால் பிரிட்டிஷ் அரசாங்கம் என்ற இயந்திரத்தின் சக்கரங்களில் நானும் ஒரு பல்லாகவேண்டி நேருமே என்று சிந்தனை செய்து அருவருப்படைந்ததும் இல்லை. சில ஆண்டுகளுக்குப் பின்னர் தான், இந்த வெறுப்பு தெளிவாக எனக்கு ஏற்பட்டது.

1910-ம் ஆண்டில், பட்டம் பெற்றதும், நான் கேம்பிரிட்ஜை விட்டு விட்டேன். விசேஷ கீர்த்தியுடன் பரீக்ஷையில் தேறவில்லை. ஆனர்ஸ் பட்டம் பெற்றேன். இரண்டாவது வகுப்பு. அடுத்த இரண்டு வருஷம் நான் லண்டனில் அலைந்து சுற்றிக் கொண்டிருந்தேன். சட்டம் படிப்பதில் அதிகமாக எனக்கு சிரமம் உண்டாகவில்லை. அதிகமான காலமும் செலவழிந்து விடவில்லை. சட்டப் பரீக்ஷைகளில் ஒவ்வொன்றாகத் தேறினேன். எதிலும் முதல்தர ஜயமுமில்லை. அவமானப் படக்கூடிய தோல்வியுமில்லை. இந்தக் காலத்தில் பொதுவாகப் பல நூல்களைப் படித்தேன். பேபியன் அபேதவாத சங்கத்தில் சேர்ந்து, அபேதவாதக் கொள்கையிலும் கருத்துக் களிலும் கற்றுத் தேர்ந்து, அவைகளில் கலந்து கொண்டேன். பெண்கள் வாக்குரிமைக்காகப் பாடுபட்ட கிளர்ச்சியிலும், அயர்லாந்தின் பேரிலும், என்னுடைய கவனம் முக்கியமாகச் சென்றது. 1910-ம் ஆண்டு கோடை காலத்தில் நான் அயர்லாந்துக்குப் போயிருந்தேன். அப்பொழுது ஏற்பட்ட சின்பின் கட்சியில் எனக்கு பிடித்தம் உண்டாயிற்று.

என்னுடைய பழைய ஹாரோ நண்பர்களில் சிலரைச் சந்தித்தேன். அவர்களோடு சேர்ந்து கொண்டு, பணத்தை ஊதாரியாகச் செலவழிக்கும் பழக்கங்களை விருத்தி செய்து கொண்டேன். தகப்பனார் எனக்கு நிரம்ப பணம் அனுப்புவார். அதையும் மீறி நான் செலவு செய்ததைப் பார்த்து நான் மைனர் வாழ்க்கையில் இறங்கி விட்டேனோ என்று பயந்து மிகுதியும் உள்ளங் கலங்கினார். நகரத்திலே வீணாகச் சுற்றித்திரியும் மூளை இல்லாத பணக்கார இங்கிலீஷ் காரர்களைப் போல, என்னைப் பாவித்துக்கொண்டு ஊதாரிச் செலவில் விழுந்து விட்டேன். இந்த லட்சியமில்லாத வாழ்க்கையால்

யாதொரு நன்மையும் எனக்கு உண்டாகவில்லை. என்னுடைய உற்சாகங்கள் குறைந்து கொண்டே வந்தன. அகம்பாவம் மட்டும் அதிகரித்தது.

விடுமுறை நாட்களில் நான் பிரான்சு, ஜெர்மனி முதலிய தேசங்களுக்குப் போவதுண்டு. 1909-ம் வருஷத்தில் கோடை விடுமுறையில் தகப்பனர் இங்கிலாந்துக்கு வந்திருந்தார். அவரும் நானும் பெர்லினுக்குப் போனோம். கான்ஸ்டன்சு ஏரிக்கரையிலிருந்த பிரடரிக்ஷாவன் என்ற ஊரிலிருந்து ஸெப்ளின் பிரபு பெர்லினுக்குத் தன்னுடைய புதிய ஆகாயக்கப்பலில் பறந்து வருவதைப் பார்த்தோம். ஸெப்ளின் அவர்கள் முதன் முதலாக நீண்ட பிரயாணம் செய்தது இது தான் என்று எண்ணுகிறேன். இந்த அற்புதச் செயலை ஜனங்கள் பெருந்திரளாகக் கூடி கொண்டாடினார்கள். கெய்சர் ஸெப்ளின் பிரபுவை வரவேற்றார். கூட்டத்தில் பத்து லட்சத்திலிருந்து இருபது லட்சம் ஜனங்கள் வரையிலும் இருந்திருப்பார்கள். ஸெப்ளின் ஆகாயக்கப்பல் குறிப்பிட்ட நேரத்தில் வந்துசேர்ந்து, எங்களுக்கு மேலே. ஆகாயத்தில் அழகாக வட்டமிட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் அதிகாரிகள் கௌண்ட் ஸெப்ளின் அவர்கள் படமொன்றை ஒவ்வொரு விருந்தாளிக்கும் கொடுத்தார்கள். அப்படம் இன்னும் என்னிடம் இருக்கிறது. இரண்டு மூன்று மாதங்கள் கழித்து பாரிஸில் முதன்முதலாக ஆகாய விமானத்தைக் கண்டோம். அது நகரமுழுவதும் பறந்து ஐபெல் கோபுரத்தைச்சுற்றி வந்து கொண்டேயிருந்தது. பறந்த விமானியின் பெயர் காம்ட்டி. லாம்பர்ட். இது நடந்து பதினெட்டு வருஷங்கள் இருக்கும். மறுபடியும் நான் பாரிஸ் நகரில் இருக்கும் பொழுது, அமெரிக்காவிலிருந்து அட்லாண்டிக் மகாசமுத்திர வழியாக ஜோதி மயமான அம்பைப்போல ஆகாயத்தைத் துளைத்துக் கொண்டு லிண்ட்பர்க் ஆகாயவிமானத்தில் வந்து சேர்ந்தார்.

1910-ம் ஆண்டில், கேம்பிரிட்ஜில் பட்டம் பெற்றதும், வேடிக்கைப்பார்க்க நார்வேக்குப்போனேன். அங்கே நான் ஓர் அபாயத்திலிருந்து தப்பிப்பிழைத்தது தம்பிரான் புண்ணியமாயிற்று. நாங்கள் மலைநாட்டு வழியாக நடந்துகொண்டிருந்தோம். குறிவைத்திருந்த இடத்துக்கு போய்ச்சேர்ந்த பொழுது, வியர்த்துக்களைத்துப் போனோம். போன இடம் ஒரு சிறிய ஹோட்டல். நீராடவேண்டும் என்று ஹோட்டலில்

கேட்டோம். ஸ்நானம் செய்யவாவது! இந்தச் செய்தியை அவர்கள் கேள்விப்பட்டதே இல்லை.

எனவே ஸ்னானத்துக்குத்தக்க வசதி யொன்றும் அந்தக் கட்டிடத்தில் ஏற்படுத்தப்படவில்லை. பக்கத்திலே ஒரு நீரோடை இருக்கிறது. அங்கே போய் நீங்கள் தாராளமாக நீராடலாம் என்று சொன்னார்கள். ஹோட்டல்காரர் உடம்பைத் துடைத்துக்கொள்வதற்காக, எங்களுக்கு ஒரு துண்டு கொடுத்தார். நானும் ஒரு இங்கிலீஷ் இளைஞனும் ஸ்நானம் செய்யப்போனோம். நீரோடை கரடுமுரடான மலைச்சரிவில் மிகுந்த சப்தத்தோடு ஓடிவருவதைக் கண்டோம். முதலில் நான் தண்ணீரில் குதித்தேன். ஆழமில்லை. ஆனால் குளிர் பொறுக்க முடியவில்லை. அடித்தரையோ மிகவும் வழுக்கல். நான் வழுக்கி விழுந்து விட்டேன். பனியைப் போல குளிர்ந்திருக்கும் நீரினால், என்னுடைய உடம்பு உணர்ச்சியற்றுப்போய்விட்டது. என்னுடைய கைகால்களை நீட்ட மடக்க முடியவில்லை. தரையிலும் என்னால் நிலைத்து நிற்க முடியவில்லை. ஓடை வேகமாக என்னை அடித்துக் கொண்டு போயிற்று. என்னுடைய தோழன் இங்கிலீஷ்காரன், தண்ணீரிலிருந்து கரையிலேறி, கரைவழியாக ஓட்டமாக ஓடிவந்து, என்னைக் காலைப்பிடித்திழுத்து கரையிலே தூக்கிப்போட்டான். கணநத்தப்பினால் மரணம். இன்னும் இருநூறு கஜங்கள் என்னை அடித்துக்கொண்டுபோயிருந்தால், அங்கே வீரமுழக்கத்துடன் விழுந்து கொண்டிருந்த அழகான நீர் வீழ்ச்சியிலே அகப்பட்டுக்கொண்டு, பரலோகப் பிரயாணம் செய்திருப்பேன்.

1912-ம் ஆண்டு கோடையில் நான் பாரிஸ்டர் ஆனேன். அதேவருஷம் நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தேன். ஆக மொத்தம் இங்கிலாந்தில் நான் தங்கியிருந்தது ஏழுவருஷத்துக்குக் கொஞ்சம் அதிகம். இந்த ஏழுவருஷகாலத்தில், இரண்டுமுறை நான் இந்தியாவுக்கு வந்திருக்கிறேன். இப்பொழுது என்படிப்பு முடிந்து தாய் நாட்டிலேயே ஸ்திரவாசம் செய்ய வந்துவிட்டேன். நான் அகம்பாவமுள்ள ஒருடம்பாச்சாரியாகத்தான் பம்பாயில் வந்திறங்கினேன் என்று ஒத்துக் கொள்ளவேண்டும்.

# இந்தியாவின் போர்க்காலத்து அரசியல்

1912-ம் ஆண்டுக் கடைசியில் இந்தியாவின் அரசியல் போக்கு மிகவும் மந்தமாயிருந்தது. லோகமான்ய திலகர் சிறைக்குள் இருந்தார். அதிகார வர்க்கத்தினர் தீவிர தேச பக்தர்களை அடக்கிவிட்டார்கள். அவர்களுக்கு சரியான தலைவர்கள் இல்லை. வங்காளப் பிரிவினையை இந்திய மந்திரி மார்லி அவர்கள் ரத்து செய்தபின்னர், வங்காளம் அடங்கி விட்டது. மிதவாதிகளைத் திரட்டி மார்லி-மிண்டோ சீர்திருத்தங்களை ஏற்று நடத்தும் படியாக பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் செய்துவிட்டார்கள். வெளிநாடுகளில் வசித்துவரும் இந்தியர்கள் சம்பந்தமாக, இந்தியாவிலே சிறிதளவு அக்கரையிருந்தது. குறிப்பாக தென்னாப்பிரிக்காவில் வசித்துவந்த இந்தியர்களிடம இந்தியாவில் மிகுந்த அக்கரை காண்பிக்கப்பட்டு வந்தது. "காங்கிரஸோ ஒரு மிதவாதக்கும்பல். வருடந்தோறும் கூடும். சாரமில்லாத சில தீர்மானங்களைச் செய்யும். பொது ஜனங்களுக்கு அதனிடம் பிடிப்பு உண்டாகவில்லை."

1912-ம் ஆண்டில் காங்கிரஸ் பங்கிபூரில் கூடிற்று. கிறிஸ்துமஸ் சமயம். நான் பிரதிநிதியாக காங்கிரஸுக்குச் சென்றேன். அது ஒரே இங்கிலீஷ் படித்த கூட்டமாயிருந்தது. ஒரே வெள்ளைக்காரருடைதான்! அரசியலில் பற்றும் ஆவலும் இல்லாத ஜனங்கள் விருந்துக்குக் கூடிக்கொண்டால் எப்படியிருக்குமோ, அப்படி காங்கிரஸ் இருந்தது. கோகலே அப்பொழுதுதான் தென்னாப்பிரிகாவிலிருந்து திரும்பி வந்திருந்தார். அவர் காங்கிரஸில் பிரசன்னமாயிருந்தார். அவருக்குத்தான் அப்பொழுது காங்கிரஸில் தனிச்செல்வாக்கு. தேச சேவையைத் தன் கடமையாகக்கொண்டு, அதன் பொறுப்பை வகிப்பதில் மிகவும் கவலை கொண்டவர். சலிக்காமல் உழைப்பவர். பொது விஷயங்களில் அக்கரை யோடும், தீவிரமான உணர்ச்சியோடும் கலந்து கொண்டிருந்த ஒரு சில இந்தியர்களுள், அவர் ஒருவர் என்று எனக்குத் தோன்றிற்று. எனக்கு அவரிடம் கவர்ச்சி உண்டாயிற்று.

கோகலே அவர்கள் பங்கிபூரை விட்டுச் செல்லுகையில், விநோத சம்பவமொன்று நேர்ந்தது. அவர் அப்பொழுது பப்ளிக் சர்விஸ் கமிஷனில் ஒரு அங்கத்தினராயிருந்தார். எனவே ரெயிலில் முதல் வகுப்பு அறை ஒன்றை, தான் பிரத்யேகமாக உபயோகித்துக்கொள்ளும் உரிமை அவருக்கு இருந்தது. அவருக்கு உடம்புக்கு சுகமில்லை. கூட்டத்தைக் கண்டாலும் தமது சுபாவத்துக்கு ஏற்காதவர்களைக் கண்டாலும், அவருக்கு மனக்கலக்கம் உண்டாகும். தனித்து இருப்பதில் அவருக்கு இஷ்டம். ஆகவே காங்கிரஸ் கலவரம் முடிந்தபின், ஏகாந்தமாகப் பிரயாணம் செய்யவேண்டுமென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய தனி முதல் வகுப்பு அறை அவருக்குக் கிடைத்தது. ஆனால், ரெயிலிலோ கல்கத்தாவுக்குத் திரும்பிப்போகிற பிரதிநிதிகளின் கூட்டம் ஏராளம். சிறிது நேரத்துக்கெல்லாம் பூபேந்திரநாத்வசு (பின்னர் இவர் லண்டனிலிருக்கும் இந்தியா மந்திரி சபையில் ஒரு அங்கத்தினராக உத்தியோகம் வகித்தவர்) கோகலேயிடம் வந்தார். "எனக்கு இடம் வசதியாகக் கிடைக்கவில்லை. நானும் உங்களுடன் உங்கள் அறையில் பிரயாணம் செய்யலாமா" என்று வசு கோகலேயைக் கேட்டார். வசு அவர்கள் மூச்சு விடாமல் பேசுகிறபேர்வழியானதால், கோகலே சிறிது பயந்து போனார். ஆனாலும், வாருங்கள், சரி, என்று சொல்லிவிட்டார். இரண்டொரு நிமிஷங்கள் கழிந்தன. மறுபடியும் வசு அவர்கள் கோகலேயிடம் வந்தார். மற்றோர் நண்பரையும் அந்த அறைக்கு அழைத்துவரலாமா என்று கூசாமல் கேட்டார். கோகலே அவர்கள் ஈனசுரத்தில் சரி என்றார். ரயில் புறப்படும் சமயம். "நானும் என் நண்பரும் மேல் தட்டுகளில் படுத்துக்கொண்டால், எங்களுக்குத் தூக்கம் வராது; தயவுசெய்து நீங்கள் மேலே ஏறிப்படுத்துக்கொண்டால் எங்களுக்கு சௌகரியமாகவிருக்கும்" என்று வசு அவர்கள் சொன்னார். முடிவிலே, இந்த ஏற்பாடுதான் நிலைத்து, கோகலே மேல்தட்டில் ஏறிப்படுத்துக்கொண்டு, தூக்கமின்றி இரவு முழுதும் பிரயாணம் செய்யவேண்டியிருந்ததென்று நம்புகிறேன்.

வக்கீல் தொழிலை ஆரம்பித்து, அலகாபாத் உயர்தர நீதி மன்றத்துக்குச் சென்றுகொண்டு வந்தேன். ஓரளவு, தொழிலில் எனக்குப் பிடித்தம்தான். ஐரோப்பாவிலிருந்து நான் திரும்பிவந்த சில மாதங்கள்வரையிலும், எனக்குக் குஷியாகத்தான் இருந்தது. வீடு திரும்பிவந்ததில் எனக்கு சந்தோ

ஷம். ஆனால் வெகு சீக்கிரத்தில், அந்த மகிழ்ச்சி சிறிது சிறிதாகத் மதய்ந்து மாய்ந்துபோக ஆரம்பித்துவிட்டது. மற்றும் என்போன்றவர்போல், சாரமற்ற பயனற்ற வாழ்க்கையில் நான் அகப்பட்டுக்கொண்டேனே என்று வருந்தத்தொடங்கினேன்.

என்னுடைய, "கழுதையிலும் சேராத, குதிரையிலும் சேராத படிப்பு"த்தான் எனக்கு அதிருப்திக்குக் காரணமோ, என்னவோ? சென்ற ஏழு வருஷகாலமாக நான் இங்கிலாந்தில் என்னிடம் வளர்ந்து வந்த வழக்கங்களுக்கும் கருத்துக்களுக்கும், என்னைச்சுற்றி நான் அலகாபாத்தில் பார்த்த வாழ்க்கைக்கும் எள்ளளவும் பொருத்தமே இல்லை. ஆனால், அதிர்ஷ்டவசமாக என்னுடைய வீட்டு தோரணைகள் என் மனதிற்கிசைந்தவைகளாகவே இருந்தன. அது ஓரளவு சௌகரியமாக விருந்தது. ஆனால் அது போதுமானதாயிருக்கவில்லை. போயும் போயும் வக்கீல்மார்களின் லைப்ரரியும் (வாசகசாலை) கிளப்பும்தான் இருந்தன. இரண்டிடங்களிலும் ஒரேவகைக் கூட்டந்தான். எல்லோரும் வக்கீல்மார்கள். அவர்கள் திருப்பித்திருப்பி தங்கள் தொழிலைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருப்பார்கள். இவர்களுடைய சங்கத்தினால் புத்தி கூர்மையடைந்து தெளிவுபடுவதற்கும் வழிகிடையாது. இதனால் எனக்கு வாழ்க்கையில் கூட ஒருவிதப்புளிப்பு உண்டாக ஆரம்பித்தது. நல்விளையாட்டுகளும் பொழுதுபோக்குகளும் கூட கிடையாது.

இ. எம். பார்ஸ்டர் அவர்களால் எழுதப்பட்ட லோஸ் டிக்கின்சனுடைய ஜீவிய சரித்திரத்தில் இந்தியாவைப்பற்றிய ருசிகரமான குறிப்பு ஒன்று காணப்படுகிறது. இந்தியாவில் இந்தியர்களும் வெள்ளைக்காரர்களும் ஏன் தாராளமாகக் கூடி வாழமுடியாது? இந்தியர்களின் போக்குகளை இங்கிலீஷ்காரர் சகிக்க முடியாதிருப்பதுதான். இதுதான் இவ்விஷயத்தின் முக்கியகாரணம் என்று டிக்கின்சன் சொன்னாராம். இங்கிலீஷ்காரர்களில் பெரும்பான்மையோர் இவ்வாறு எண்ணிக்கொண்டிருப்பார்களாகில், ஆச்சரியமேஇல்லை. பார்ஸ்டர் அவர்கள் எழுதிய வேறொருநூலில், இன்னொரு குறிப்பு காணப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொரு இங்கிலீஷ்காரனும் இந்நாட்டைஜெயித்து அதை அடக்கி ஆண்டுவரும் சேனையின் ஒரு அங்கத்தினனாகத் தன்னைமதித்துக் கொள்ளுகிறான். ஒரு இந்தியனும், வெள்ளையனும் சந்தித்தால், ஒருவரை

யொருவர் ஏமாற்றி விசேஷகௌரவம்பெற முயன்றவண்ண மாகவே இருக்கின்றனர். அதனால் உள்ளூர பரஸ்பர அரு வருப்பு உண்டாகின்றது. காரியத்தை முடித்துக்கொண்டு சீக்கிரம் பிரிந்துபோகவேண்டும் என்ற ஆசை இருவருக்கும் உண்டாகின்றது. இவ்விதஉணர்ச்சி இருக்கும்வரையில்; இவ் விரண்டு ஜாதியினரும், ஒருவர் மற்றவருடன் அகமகிழ்ச்சி யோடு தாராளமாக கூடிக்கலக்க முடியாது.

இந்தியாவில் வசிக்கும் இங்கிலீஷ்காரன், உத்தியோகத்தி லுள்ள இந்தியர்களைத்தான் சந்திக்கிறான். அபூர்வகுணமுள்ள இந்தியர்களை காண்பதேஇல்லை. கண்டாலும் அவர்களின் மனத்திற்குட்புகுந்து சல்லாபம் செய்யும் ஆற்றலும் ஆவலும் அவனுக்கு இல்லை. இந்தியாவில் ஏற்பட்ட ஆங்கில ஆட்சி யால் உத்யோகஸ்தர்களுக்கே மிகுந்தசெல்வாக்கு உண்டா யிருக்கிறது. ஆனால், இவர்களைப்போல் மழுங்கியபுத்தியும், குறுகிய நோக்கமுடைய வகுப்பார் வேறெவருமில்லை. புத்திக் கூர்மையுள்ள ஆங்கிலயுவன்கூட இந்தியாவுக்கு வந்தவுடன், தன்புத்தியின் பிரகாசத்தையிழந்து, தூங்குமூஞ்சி ஆய்விடு கிறான். ஜீவகளையைத்தரும் கருத்துக்களிலும் இயக்கங்களி லும் அவனுக்கு யாதொருசம்பந்தமு மில்லாமல் போய்விடு கின்றது. ஒவ்வொருநாளும் அவனுக்கு ஒரேவிதமான ஆபீஸ் வேலை. பிறகு, கொஞ்சம் தேகப்பயிற்சி. கடைசியாக, இங்கிலீஷ் கிளப்புக்குப்போய்த் தன்னுடைய இனத்தாரோடு கலந்துகொண்டு விஸ்கி குடிப்பான். "பஞ்ச்" என்ற விகடப் பத்திரிகையைப் படிப்பான்; இங்கிலாந்திலிருந்து வந்திருக் கும் சித்திர வாரப்பத்திரிகைகளில் ஆழ்ந்துவிடுவான். புதி தாக ஒரு புஸ்தகத்தையும் படிப்பதுஇல்லை. புஸ்தகம்படிக்க எண்ணினாலும், தான் ஏற்கனவே படித்த பழைய புத்தகத் தையே மீண்டும் படிக்க முயலுவான்.

இந்த மாதிரி அவன் சீர் கெட்டுவிட்டு, அதற்குக் கார ணம் இந்தியா என்பான். இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியை அவன் சபிப்பான். அவனுக்கு தொந்தரவைக் கொடுக்கும் அரசியல் கிளர்ச்சிக் கூட்டத்தார்தான் எல்லா அனர்த்தங் களுக்குக் காரணம் என்பான். தன்மதி ஒளியிழந்து உணர்ச் சிகள் மந்தமானதின் உண்மையான காரணத்தை அவன் தெரிந்துகொள்வதே இல்லை. மனித உணர்ச்சியற்ற ஏதேச் சாதிகார அரசாட்சி முறையினால் தான் அவன் சீர் குலைந்து போகின்றான் என்பதை அறிவதில்லை, எத்தனையோ விடு

முறை நாட்களும், நீண்ட கால ரஜாக்களும் உள்ள ஆங்கில உத்தியோகஸ்தர்களே இவ்வாறு சீர் கெட்டுப் போவார்களானால், அவர்களுக்குக் கீழே உத்தியோகம் வகிக்கும் இந்தியர்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இந்திய உத்தியோகஸ்தன் அவனுடைய இங்கிலிஷ் குருவைப் போலத்தான் நடந்துகொள்வான். இந்த இங்கிலீஷ்—இந்திய உத்தியோகஸ்தர்கள் கூடிக்கொண்டால், (அதுவும் புதிய டில்லியில் அந்த அதிசயத்தைக் காண வேணும்) திருப்பித் திருப்பி ப்ரமோஷன், ரஜா விதிகள், விடுமுறைகள், உத்தியோக இடமாற்றம் முதலியவைகளைப் பற்றித்தான் பேசுவார்கள். அல்லது சகோதர உத்யோகஸ்தர்களைப்பற்றி வம்பு பேசுவார்கள். இவர்களின் சம்பாஷணையைக் கேட்பதைப் போல் ரஸமில்லாதபொழுது போக்கைக் கண்டு பிடிப்பதரிது. இங்கிலீஷ் படித்த இதர நடுத்தர இந்தியர்களும் இந்த உத்தியோகஸ்தர்களின் வாழ்க்கையை மேற்கொண்டார்கள். பம்பாய், கல்கத்தா முதலிய மாநகர்களில் மட்டும் இதற்கு விலக்கான சில சுதந்திர புருஷர்களைக் காணலாம்.

வக்கீல்கள், டாக்டர்கள் முதலியவர்களுக்குக்கூட இத்தகைய உத்தியோக மனப்பான்மை வந்துவிட்டது. அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் சர்வகலாசாலைகளிலும் இது வியாபித்து நின்றது. இவர்கள் வாழ்ந்து வந்த உலகம் தனி உலகம். இவர்களுக்கும், ஏழை எளியவர்களான பொது ஜனங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. மேல் வகுப்பார்களுக் கிடையேதான், அரசியல் பேச்சு நடைபெற்று வந்தது. 1906-ம் வருஷத்தில் வங்காளத்தில் தொடங்கிய தேசீய இயக்கத்தால் ஓரளவு பொது மக்களுக்குக்கூட ராஜீய உணர்ச்சி ஏற்பட்டது. பின்னர், காந்திஜியின் தலைமையில் நடைபெற்ற இயக்கத்தால் சாதாரண ஜனங்கள் பூரணமாகக் கண் விழித்துக்கொண்டார்கள். தேசீயப் போராட்டத்தால் மக்களுக்கிடையே உயிர்த் துடிதுடிப்பு ஏற்பட்டாலும், அது ஒரு குறுகிய எல்லை கொண்டதாகும். அந்தப் போராட்டத்தால் வேறு பல முயற்சிகளுக்கு சாவகாசமும், சக்தியும் இல்லாமற் போய்விடுகின்றன. நான் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததும், என்னைச் சுற்றி நாலா பக்கங்களிலும நடைபெற்றுவந்த வாழ்க்கையில், எனக்கு அதிருப்தி உண்டாயிற்று. என்னுடைய தொழிலிலே எனக்கு பூரணமான உற்சாகமும் ஏற்படவில்லை. அன்னிய ஆட்சியை

எதிர்த்துத் தீவிரப் போராட்டம் செய்ய இயலாத அரசியலிலும் எனக்குப் பிடிக்கவில்லை.

நான் காங்கிரஸில் சேர்ந்தேன். அவ்வப்போது நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொண்டேன். பிஜித் தீவில் இந்திய ஒப்பந்தத் தொழிலாளிகள் படும் கஷ்டத்தைப் பற்றியோ அல்லது தென் ஆப்பிரிக்கா இந்திய பிரச்னையைப் பற்றியோ சிறப்பாக இந்தியாவில் கிளர்ச்சி நேர்ந்தால், மிக்க உற்சாகத்துடன் அதில் கலந்துகொண்டு கடுமையாக உழைப்பேன். ஆனால் இவைகள் அவ்வப்போது நேரிடும் சில்லரை வேலைகள். வேட்டை முதலிய விநோதங்களிலும் என் பொழுதைப் போக்கினேன். ஆனால் வேட்டையிலே எனக்குத் தனியான சாமர்த்தியமோ அல்லது ருசியோ இருந்ததாகச் சொல்ல முடியாது: வெளியே சென்று காட்டில் அலைந்து திரிவதற்கு நான் ஆசைப்படுவேன். ஆனால் கொல்லுவதற்கு மனம் கிடையாது. அநேகமாக நாம் எதையும் கொன்றதில்லை. என்னையறியாமலே காஷ்மீரத்தில் ஒரு சமயம் ஒரு கரடியைக் கொன்றுவிட்டேன். ஒரு சமயம் ஒரு கலைமானைக் கொன்றேன். இந்த சாதுவான மிருகம் காயமடைந்த பின், என் காலிலேயே விழுந்து, அதனுடைய விசாலமான பெரிய கண்களிலிருந்து நீர் பெருக, என்னைப் பார்த்துக்கொண்டே இறந்துபோய்விட்டது. அந்தக் கண்கள் இன்றும் சில சமயம் என் கண் முன் தோன்றுகின்றன. கலைமான் இறந்ததோடு என்னுடைய வேட்டையாசையும் ஒழிந்தது.

அந்தக் காலத்தில் கோகலே அவர்கள் அமைத்த இந்திய ஊழியர்கள் சங்கத்தில், எனக்குக் கவர்ச்சி யுண்டாயிற்று. அதனுடைய மிதவாத அரசியல் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. மேலும் என்னுடைய வக்கீல் தொழிலை விட்டுவிட, அப்பொழுது எனக்கு நோக்கமும் கிடையாது. எனவே அந்தச் சங்கத்தில் சேர்வதற்கு நான் எண்ணம் கொண்டதில்லை. பொது ஜன ஊழியத்துக்காகக் கொஞ்சப் பணத்திலே ஜீவனம் நடத்தும் அந்தச் சங்கத்தின் அங்கத்தினர்களிடத்தில் எனக்கு பெரு மதிப்பு. சரியான வழியில் சங்கம் நடைபெறாவிட்டாலும், அது விடாமுயற்சியுடன் தொடர்ந்த வேலைத் திட்டத்தைத் தாங்கி உண்மையாக உழைத்து வந்தது என்று நான் எண்ணினேன்.

ஆனால திரு. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளின் ஓர் செய்கை என்னைத் திடுக்கிடச் செய்தது. அது அரசியல் சம்பந்தமானதல்ல. அவர் அலகாபாத்தின் மாணவர் கூட்டத்தில்,

பிரசங்கம் செய்கையில், "மாணவர்களே, உங்களுடைய உபாத்தியாயரிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் மரியாதையுடன் நடந்துகொள்ளுங்கள். அவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். சட்ட திட்டத்தால் ஏற்பட்ட அதிகாரத்துக்கு நீங்கள் பயந்து நடக்க வேண்டும். கல்லூரி விதிகளை மீறி நீங்கள் நடக்கலாகாது" என்று உபதேசம் செய்தார். இந்த வழவழப்பான உபதேசங்கள் எனக்கு சற்றேனும் பிடிக்கவில்லை. அதிகாரத்துக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று அடிமை இந்தியாவில் அழுத்திப்பேசுவது கூடாது என்பது என் கருத்து ஆகும். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அதிகார வர்க்கத்தினரின் ஜாடைக்கோ அல்லது ஆக்கினைக்கோ இணங்கி, இவ்வாறு உபதேசம் செய்தார் என்று நான் எண்ணினேன். கடைசியாக ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் பேசியது எனக்கு அளவில்லா வருத்தத்தைக் கொடுத்தது:

"மாணவர்களே, நீங்கள் ஒருவர் மற்றவர்களுடைய குறைகளையோ, அதிக்கிரமங்களையோ, நன்றாகக் கவனித்து, அவைகளை உங்களுடைய மேலதிகாரிகளிடம் தெரிவிக்கவேண்டும்" என்று சொன்னார். அதாவது எல்லோரும், உளவர்களாயும், கோட் சொல்லிகளாயும் ஆகவேண்டும் என்பது சாஸ்திரியாரின் ஆசைபோலும்! நான மேலே குறிப்பிட்டபடி வார்த்தைகளை சாஸ்திரியார் உபயோகப்படுத்தாமலிருக்கலாம். ஆனல் அவருடைய பேச்சின் சாரம் நான் குறிப்பிட்டதுதான் என்று எனக்குத் தெளிவாகப் பட்டது. இந்தப் பெரியாரின் உபதேச மொழிகளைக்கேட்டு, நான் திகைத்துப்போனேன். அப்பொழுதுதான் நான் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்திருக்கிறேன். இங்கிலாந்தில பள்ளியிலும, கல்லூரியிலும் மிகவும் அழுத்தமாக எனக்கு போதிக்கப்பட்ட பாடம், எக்காரணத்தாலும தோழரைக் காட்டிக் கொடுக்கலாகாது என்பதுதான். கோழைத்தனத்துக்கு ஆட்பட்டு, தோழன்பேரில் கோள் சொல்லி அவனைக் கஷ்டத்துக்கு ஆளாக்குவதைக்காட்டிலும், பெரிய பாபம் வேறு ஒன்றுமே கிடையாது என்று நான்போதிக்கப்பட்டு வந்தவன். இந்தக் கொள்கையைமாற்றி சாஸ்திரியார் சொல்லவே, அவருடைய தர்மத்துக்கும் எனக்கு போதிக்கப்பட்ட கொள்கைக்கும் வெகுதூரமென்று எனக்குத் தோன்றிற்று.

உலகப் போர் 1914-ல் வந்துவிட்டது. அது எங்களுடைய முழுக் கவனத்தையும் இழுத்தது. எங்கேயோ

வெகுதூரத்தில் போர்நடந்துகொண்டிருந்தது. இந்தியாவிலே இந்தியர்களுடைய வாழ்க்கையில், அதன் பிரபாவம் சீக்கிரம் படவில்லை. போரின் முழுக் கொடுமையையும் இந்தியா அனுபவித்ததுமில்லை. அரசியல் கிளர்ச்சி அடியோடு இறந்து விட்டது என்று சொல்லாம். "இந்தியப் பாதுகாப்புச் சட்டம்" என்ற சட்டமொன்றை அதிகாரவர்க்கத்தினர் ஆக்கிக் கொண்டார்கள். அந்தச் சட்டத்தில் அகப்பட்டுக்கொண்டு இந்தியா விழிபிதுங்கிக்கொண்டிருந்தது. போரின் இரண்டாவது ஆண்டில், பல சதியாலோசனைக் கூட்டங்கள், துப்பாக்கி வெடிகள் முதலிய செய்திகள் காதுக்கெட்டின. பஞ்சாபில் பலாத்காரமாகச் சேனைக்கு ஆள்சேர்க்கிறார்கள் என்றும் அதனால் கொடுமைகள் பல நேர்ந்தனவென்றும் செய்திகள் உலவின.

இந்தியாவில் எல்லோரும் நாவால் உரக்க ராஜபக்தி பேசினாலும், பிரிட்டிஷாரிடம் அனுதாபம் சிறிதும் இல்லை. ஜெர்மானியர்கள் வெற்றிபெற்றார்களென்றால், அதைச் சந்தோஷத்துடன் மிதவாதிகளும், தீவிரவாதிகளும் ஒன்று சேர்ந்து பேசிக்கொள்வார்கள். ஜெர்மனியிடம் இந்தியர்களுக்கு அன்பு கிடையாது. ஆனால் தங்களை ஆளுபவர்களுக்கு கர்வபங்கம் ஏற்படவேண்டும் என்பதுதான் இந்தியர்களின் ஆசை. இது கையாலாகாத மனிதன் எதிரியைப் பழிவாங்க நினைக்கும் யோசனையேயாகும். ஐரோப்பிய போரைப்பற்றி, இந்தியாவிலே பலபல அபிப்பிராயங்கள் உலவிவந்தன. என்னைப் பற்றியவரையிலும் எனது பூரண அனுதாபம் பிரான்சின் பக்கம்தான் இருந்துவந்தது. நேசக்கட்சியார்கள் சார்பாக, சளைக்காமல் வெட்கமின்றிச் செய்யப்பட்ட பொய்ப் பிரசாரத்தால், அதில் சிறிதளவு நம்பிக்கை உண்டானபோதிலும், ஜெர்மனிக்கு விரோதமாக எதையும் அதிகமாக நாங்கள் நம்பவில்லை.

சிறிது சிறிதாக இந்திய அரசியல் கிளர்ச்சி புத்துயிர் பெற்றுக்கிளம்பிற்று. பர்மாவில் மாண்டலே நகரில், காவலில் ஆறு வருஷகாலம் வைக்கப்பட்டிருந்த லோகமான்ய திலகர் விடுதலைபெற்று இந்தியாவக்கு வந்துசேர்ந்தார். அவரும் பெசண்டு அம்மையாரும் சேர்ந்து சுய ஆட்சி சங்கங்களை அமைத்தார்கள். நாடுமுழுதும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பெற்றன. இருவர் தனித்தனியே அமைத்த சங்கங்களிலும் சேர்ந்துகொண்டேன். ஆனால் பெசண்டு அம்மையாரின் சங்

லும், வேறு சிலர் திடசித்தத்துடன் முன்னணியில் நின்று போராடினார்கள். அந்த சமயம் அரசாங்கத்தார் இந்தியப் பாது காப்புப்படை என்ற ஒரு படையை அமைப்பதற்காக ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். இந்தியாவில் இருக்கும் ஐரோப் பியப் பாதுகாப்புப் படையைப்போலவே, இதையும் அமைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தாரின் கருத்து. இந்தப் படை யமைப்பைப்பற்றி இந்தியத் தலைவர்களுக்குள், கடுமையான அபிப்பிராய பேதமும் வாதமும் நிகழ்ந்துவந்தன. ஐரோப்பியப் படையைக் காட்டிலும் பலவிதங்களில் கீழ்மையாக இந்தியப் படை நடத்தப்பட்டது. இந்த மானக்கேடான வித்தியாசங் களை ஒழித்தாலொழிய, அரசாங்கத்தாரோடு இந்தியத் தலைவர் கள் ஒத்துழைக்கக்கூடாது என்று எங்களிற் பலர் எண்ணி னார்கள்.

என்ன கேவலமான நிபந்தனைகள் இருந்தாலும், நம்மு டைய இளைஞர்களுக்கு ராணுவப் பயிற்சி அவசியமாக இருக் கவேண்டு என்று தலைவர்கள் தீர்மானித்தார்கள். எனவே ஐக் கிய மாகாணம் சம்பந்தப்பட்ட வரையிலும் நாங்கள் அரசாங் கத்தாரோடு ஒத்துழைக்கவேண்டுமென்று தீர்மானித்தோம். புதிய படையில் சேருவதற்காக நான் மனுப்பண்ணிக் கொண் டேன். படை சம்பந்தமான திட்டத்தை நிறைவேற்றி வைப் பதற்காக அலகாபாத்தில் நாங்கள் ஒரு கமிட்டியை ஏற்படுத் தினோம். இந்தத் தருணத்தில் பெசண்டம்மையார் விசாரணை யின்றிக் காவலில் வைக்கப்பெற்றார். எனக்கு ஆத்திரம். சர்க் காரின் இந்த அடக்கு முறையைக் கண்டிப்பதற்காக படை திரட்டும் கமிட்டியை—இதில் என் தகப்பனார், டாக்டர் தேஜ் பகதூர் சாப்ரு, ஸி. ஒய். சிந்தாமணி முதலிய மிதவாதித் தலை வர்கள் இருந்தனர்—கூட்டுவதில்லையென்றும், காப்புப் படை சம்பந்தமான எந்த வேலையையும் செய்வதில்லை என்றும், தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கருத்துக்களைத் தழுவி, அவர்கள் ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட்டார்கள். போர்காலத்தில் இவ்வித முரட்டுக் காரியம் செய்து, அதிகாரி களைத் அதிருப்தி செய்ததற்காகப் பின்னர் இவர்களிற் சிலர் வருந்தியதாகக் கேள்விப் பட்டேன்.

பெஸண்டம்மையாரின் காவலினால் என்னுடைய தகப் பனாரும், வேறு சில மிதவாதத் தலைவர்களும் சுய ஆட்சி சங் கத்தில் சேர்ந்துகொள்ளத் தூண்டுதல் ஏற்பட்டது. சில மாதங்கள் கழித்து, இந்த மிதவாத அங்கத்தினர்களில் அநே

-கர் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டார்கள். ஆனால் என் தகப்பனார் மட்டும் விலகவில்லை. அவர் அலகாபாத் கிளைச் சங்கத்துக்குத் தலைவரானார். சிறிது சிறிதாக என்னுடைய தகப்பனார் பழைய வைதீக மிதவாத நிலைமையினின்றும் மாறிக்கொண்டே வந்துவிட்டார். நம்மை அவமானப்படுத்தி அலட்சியம் செய்யும் அரசாங்கத்துக்கு அடங்கி நடப்பதாலும், பணிவான முறையில் மனுப் பண்ணிக்கொள்வதாலும் காரியமில்லை என்று எண்ணினார். மேலும் கீழ்ப்படிகிறது என்பதே அவருக்குப் பிடிக்காது. ஆனால் பழைய தீவிர வாதத் தலைவர்களிடமும் அவருக்கு நம்பிக்கை யில்லை. அவர்களுடைய ஆடம்பர பேச்சுத் தோரணையும், செயல் முறைகளும் அவருக்குப் பிடிக்கவில்லை. பெஸண்டம்மையாரின் காவலாலும், அதன் பின் நேர்ந்த நிகழ்ச்சிகளாலும் தகப்பனார் மிகுதியும் மாறிவிட்டார். ஆனால் தீவிர வாதி கோஷ்டியில் முடிவாகச் சேர்ந்துகொள்ளவும், அவர் சிறிது தயங்கினார். மிதவாத யுக்திகள் பலிக்காது என்றும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டாலொழிய அழுத்தமாக எத்தகைய கிளர்ச்சியும் செய்ய முடியாது என்றும் அவர் அந்தக் காலத்தில் அடிக்கடி சொல்லுவது வழக்கம். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு வழியேற்பட்டுவிடில், தாம் இளைஞர்களிலும், இளைஞர்களோடு சேர்ந்து போராட்டத்தில் முன்னணியில் நிற்கத் தயார் என்று வாக்குறுதி கொடுப்பார்.

1916-ம் ஆண்டில் லட்சுமணபுரியில் காங்கிரஸ் கூடிற்று. அதே சமயம் முஸ்லிம் லீக்கும் அங்கே கூடிற்று. இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து இணைக்கும்படியான திட்டம் ஒன்றை யோசிப்பதற்காக; அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் எங்கள் வீட்டில் கூடினார்கள். எங்கள் வீட்டில் முடிவு செய்யப்பட்ட திட்டத்தை லட்சுமணபுரி காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. இதிலே தகப்பனாருக்கு அதிக மகிழ்ச்சி. இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக உழைப்பதற்கு வழி திறந்துவிட்டது. பழைய மிதவாத நண்பர்களை விட்டுப் பிரிந்துகூட வேலை செய்வதற்கு அவர் தயாராகிவிட்டார். அந்தச் சமயம் இந்தியா மந்திரி எட்வின் மாண்டேகு இந்தியாவுக்கு விஜயம்செய்தார். அப்பொழுது எல்லோரும் ஒற்றுமையாகவே இருந்தார்கள். மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தயாதாஸ்து வெளியானவுடனே, ஐக்கிய மாகாணத்து அரசியல் வாதிகளுக்குள் பிளவு உண்டாயிற்று.

1918-ம் ஆண்டில் ஐக்கிய மாகாணத்தில் ஒரு விசேஷ மகாநாடு லட்சுமணபுரியில் கூடிற்று. அந்த மகாநாட்டுக்குத் தகப்பனார் தலைமை வகித்தார். இந்த மகாநாட்டில் மாண்டேகு - செம்ஸ்போர்ட் யோசனைகள் ஏற்கப்படமாட்டா என்று எண்ணி, மிதவாதிகள் இந்த மகாநாட்டுக்கு விஜயம் செய்யாமல், அதைப் பகிஷ்காரம் செய்தார்கள். இதே மாதிரி விசேஷ காங்கிரஸையும் அவர்கள் பின்னர் பகிஷ்கரித்து விட்டார்கள். அதற்குப் பிறகு, அவர்களுக்கும் காங்கிரஸுக்கும் தொடர்பு விட்டுப்போய்விட்டது.

இந்த மாதிரி மிதவாதிகள் காங்கிரஸை விட்டு மெதுவாக நழுவிப் போனது எனக்குப் பிடிக்கவில்லை. மகாநாடுகளில் பெரும்பான்மையோர் அவர்களுக்கு விரோதமாக இருந்தால் என்ன? தங்களுடைய நோக்கங்களையும், கட்சி வாதங்களையும் அவர்கள் ஏன் தெளிவாக எடுத்துரைக்கலாகாது? அதற்காக அவர்கள் போராட வேண்டாமா? தாங்கள் பொது ஜன ஊழியர்கள் என்பதை மறந்து, சமயத்தில் நழுவிப் போனது, அவர்களுக்குத் தகுதி யல்ல வென்றும், கௌரவக் குறைவு என்றும் எனக்குத் தோன்றிற்று. என்னைப் போலவே நாட்டில் பெரும்பான்மையோர் எண்ணினார்கள்.

இந்திய அரசியல் கிளர்ச்சியில் மிதவாதிகள் அடியோடு செல்வாக்கு இழந்ததற்குக் காரணம் அவர்களுடைய கோழைத்தனம்தான் என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். மிதவாதிகள் அனைவரும் ஒரு கூட்டமாகக் காங்கிரஸை விட்டு வெளியேறினபோதிலும், மிதவாதத் தலைவர்களில் ஒருவரான கனம் சாஸ்திரியார், சில காங்கிரஸ் கூட்டங்களில் பிரசன்னமாய் இருந்து தம்முடைய கட்சியை எடுத்துரைத்தார். இதனால் அவர் பொது ஜன மதிப்பில் உயர்ந்தார்.

போர் ஆரம்பமான காலத்தில், பொதுவாக அரசியலிலோ பொதுஜன ஊழியத்திலோ கலந்துகொண்டு திட்டமாக எதையும், நான் செய்யவில்லை. மேடைப் பிரசங்கம் செய்ததே இல்லை. அப்பொழுதும் கூச்சம் தெளிந்தபாடில்லை. பொதுக் கூட்டங்களில் பேசுவதென்றால் எனக்கு நடுக்கம். மேலும் பிரசங்கங்களை இங்கிலீஷில் செய்யக்கூடாது என்பது என் எண்ணம். ஹிந்துஸ்தானியில் விரிவாக என்னால் பேச முடியுமோ என்று நான் மிகுதியும் சந்தேகப்பட்டேன்.

முதன் முதல் அலகாபாத்தில் நான் பேசநேரிட்டபொழுது சம்பவித்த சிறிய நிகழ்ச்சி யொன்று எனக்கு ஞாபகமிருக்கிறது. அநேகமாக 1915-ல் என்று நினைக்கிறேன். ஆனால் தேதி முதலியவை எனக்கு தெளிவாக ஞாபகமில்லை. அச்சுக்கூடங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் வாய்ப்பூட்டு போடுவதற்காக, அரசாங்கத்தார் புதிய சட்டம் ஒன்றை ஆக்கிக்கொண்டார்கள். அதை ஆக்ஷேபிக்கும பொருட்டு, ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. நான் சுருக்கமாக இங்கிலீஷில் பேசினேன். கூட்டம் முடிந்தது. உடனே நான் திகைத்துப் போகும்படியாக, டாக்டர் தேஜ்பகதூர் ஸாப்ரூ என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு, மேடையிலேயே எல்லோருக்கும் தெரியும்படியாக என்னை முத்தமிட்டார். அவர் இவ்வாறு செய்தது நான் திறமையாகப் பேசிவிட்டேன் என்பதற்கல்ல. மேடையில் வந்து பேச, எனக்கு தைரியம் ஏற்பட்டதைக் குறித்து, அவருக்கு அடங்காத மகிழ்ச்சி. பொது வேலைக்குப் புதிதாக ஒரு போர்வழி கிடைத்தானே என்று அவருக்குச் சந்தோஷம்! அக்காலத்தில் பொதுவேலையில் பேச்சுத்தான் பிரதானம். வேறொன்று மில்லையென்று கூறுவது மிகையாகாது.

அலகாபாத்தில் என்னைப் போன்ற பல இளைஞர்கள் டாக்டர் ஸாப்ரு அரசியலில் தீவிரவாதியாவாரென்று சிறிது நம்பினோம். மிதவாதிகளுக்குள்ளே, அவர்தான் அவ்வாறு செய்யக் கூடுமென்று நாங்கள் எண்ணினது உண்டு. ஏனெனில் அவருக்குத்தான் உணர்ச்சியும், உற்சாகமும் அதிகம். சிற்சில சமயங்களில் அவர் உற்சாகத்திலே மூழ்கிப் போய்விடுவார். அவருக்கு ஒப்பிட்டுப் பார்த்தால், என் தகப்பனார் உணர்ச்சியற்றவராகத் தோன்றினார். வெளித் தோற்றம் இப்படியிருந்தும், அவர் உள்ளத்தில் வீரக் கனல் குமுமி யிருந்ததென்று எனக்குத் தெரியும். ஆனால் தகப்பனார் மிகவும் பிடிவாதக்காரர். எனவே, அவர் எங்களுக்குத் தலைவராக வரக் கூடும் என்று நம்புவதற்கு இடமில்லை. டாக்டர் ஸாப்ரு அவர்கள் வரக் கூடுமென்று எதிர்பார்த்தோம். நீண்ட காலமாகப் பொது ஜன ஊழியத்தில் ஈடுபட்டிருந்த பண்டித மதன் மோகன் மாளவியா அவர்களிடத்தில், எங்களுக்கு அபிமானமும், கவர்ச்சியும் உண்டு. தைரியமான பாதையில் தேசத்தை நடத்திச் செல்லுங்களென்று நாங்கள் அவரை யெத்தனையோ தடவைகள் வற்புறுத்தி வேண்டிக்கொண்டிருக்கிறோம்.

வீட்டிலே, அரசியல் பிரச்னைகளை எடுத்து, அந்தக் காலத்தில் வாதஞ் செய்வதென்றால், பேராபத்துத்தான். அபிப்பிராயப்பேதங்கள் கடுமையாகப்போய்விடும். நான் சிறிது சிறிதாகத் தீவிரக்கட்சியை நாடிப்போய்க் கொண்டிருக்கிறேன் என்பது தகப்பனாருக்குத் தெரியும். பேச்சுகூடாது என்றும் ஏதாவது காரியம் செய்யவேண்டுமென்றும் அடிக்கடி நான் கூறிவந்ததைத் தகப்பனார் கேட்டிருக்கிறார். ஆனால் என்ன காரியம் செய்வது என்பது தெளிவாகப் புலப்படவில்லை. வங்காள வெடிகுண்டு இளைஞர்களுடைய கூட்டத்திலே நானும் சேர்ந்து விடுவேனோ என்று அவர் சந்தேகிக்கலானார். அவருக்கு மிகவும் கவலையாகிவிட்டது. ஆனால், உண்மையாகவே எனக்கு பலாத்கார இயக்கத்தில் பிடிப்பு உண்டாகவில்லை. அநீதிக்குப் பயந்து குனிந்து கொடுக்கக் கூடாதென்றும், ஏதாவது தீவிரக்கிளர்ச்சி செய்யத்தான் வேண்டுமென்ற எண்ணமும் என்னுடைய உள்ளத்தில் வேரூன்றத் தலைப்பட்டது. தேசீய விடுதலைக்குரிய வேலைக்கடினமென்று எனக்குத் தெரியும். ஆனால் ஜனங்களின் மனப்பான்மையிலேனும் எதிர்ப்பு எண்ணம் உண்டாக்கி, அந்நிய ஆட்சியைக் களைந் தெரியவேண்டும் என்று கிளர்ச்சிசெய்தல் இந்தியர்களின் சுயமரியாதைக்கும், இந்தியாவின் தன்மதிப்புக்கும் அவசியமானது என்ற முடிவுக்கு வந்தேன்.

தகப்பனாருக்கும் மிதவாத தத்துவத்தில் அதிருப்தி உண்டாயிற்று. அவருடைய மனத்தினுள்ளே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு அவர் எளிதிலே மாறக்கூடியவர் அல்ல. மிகவும் பிடிவாதக்காரர். ஆனால் வேறுவழி இல்லை என்று தோன்றினால், அவர் மாறுவதற்கும் தயங்கக் கூடியவரல்ல. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கவேண்டுமானாலும், அதற்காக அவரது உள்ளத்தில் முதலிலேயே கடுமையாக போராட்டம் நடைபெறும். முன்னோக்கிச் செல்லவேண்டும என்று தீர்மானம் கொண்டுவிட்டால், அவர் திரும்பி பார்க்கவேமாட்டார். அவர் எதையும் உற்சாகமேலிட்டால் செய்ததில்லை. நன்றாக ஆற அமர யோசித்து முடிவுக்கு வந்த பின்னர்தான், எதையும் செய்வார். அவ்வாறு முடிவுக்கு வந்தபின்னர் பின்னடி வைக்க அவருடைய கர்வம் சிறிதும் இடங் கொடுக்காது. அவருடைய அரசியல் போக்கில் வெளிப்படையாக மாறுதல் உண்டானது பெசண்டம்மையாரின் சிறைவாச காலத்திலே.

அதிலிருந்து ஒவ்வொரு அடியாக அவர் முன்சென்று கொண்டேபோனார். அவருடைய பழைய மிதவாத நண்பர்களைப் பிரிந்து வெகுதூரம் முன்னே சென்றுவிட்டார். கடைசியாக 1919-ம் ஆண்டில் பாஞ்சாலப் படுகொலை நிகழ்ந்த பின்னர், அவர் தமது புழைய வாழ்க்கையை அடியோடு மாற்றிக்கொண்டார். தம்முடைய தொழிலையும் உதறித் தள்ளிவிட்டார். காந்திஜீ துவக்கிய புதிய இயக்கத்தில் பூர்ண மனதுடன் சேர்ந்து கொண்டார். ஆனால் அது 1919-ம் வருடத்திலே. 1915 லிருந்து 1917 வரையிலும், என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. எப்பொழுதும் மனக்குழப்பம். எப்பொழுதும் என்னைப்பற்றி ஓயாத கவலை. எனவே, அந்தக் காலத்தில் பொதுவான விஷயங்களைப்பற்றிப் பேசினால், திடீரென்று அவருக்குக் கோபம் வந்துவிடும். அநேக தடவைகளில் அவருடைய கோபத்தினால், எங்களுடைய பேச்சும் நின்றுவிடும்.

1916-ம் ஆண்டில் கிறிஸ்மஸ்காலத்தில், லக்ஷ்மணபுரியில் காங்கிரஸ் கூடிற்று. அந்த சமயம்தான் நான் காந்திஜீயை முதன் முதலாகக் கண்டேன். தென் ஆப்பிரிக்காவில் அவர் செய்த வீரப்போராட்டத்தால், நாங்கள் எல்லோரும் அவரை மிகவும் மதித்தோம். ஆனால், இளைஞர்களாகிய நாங்கள் அவர் அரசியல் தந்திரி யல்லவென்றும் சரசமாக நெருங்கி பழகக்கூடியவரல்ல வென்றும் எண்ணினோம். காங்கிரஸிலோ அல்லது நாட்டின் அரசியல் கிளர்ச்சியிலோ கலந்துகொள்ள அவர் அப்பொழுது மறுத்துவிட்டார். அவரது கவனம் முழுதும் தென் ஆப்பிரிக்கா இந்தியப் பிரச்னையில் பதிந்து கிடந்தது. பிறகு அவர் பீஹார் மாகாணத்திலுள்ள சம்பராணுக்குச் சென்று அங்கே வெள்ளைத் தோட்டக்காரர்களுக்குக் கீழ் பண்ணைவேலை செய்துவந்த இந்தியக் குடியானவர்களின் சார்பாக கிளர்ச்சிசெய்து வெற்றிபெற்றது எங்கள் உள்ளத்தில் உற்சாகத்தை நிரப்பிவிட்டது. தன் செயல் முறைகளை இந்தியாவிலும் பிரயோகிக்க அவர் தயாராயிருந்தாரென்றும் அவைகளால் இந்தியர்களுக்கு வெற்றிவரக் கூடுமென்றும் நாங்கள் தெரிந்துகொண்டோம்.

லக்ஷ்மணப்புரிக் காங்கிரஸுக்குப் பிறகு ஸ்ரீமதி சரோஜினி நாயுடு அலகாபாத்திற்கு வந்து, பல உருக்கமான பிரசங்கங்கள் செய்தார். அவைகளால் என் மனம் கரைந்துவிட்டது. அவரது பேச்சு முழுதும் தேசீயமயம். தேச

பக்தி மயம். அச்சமயம் நானும் சுத்த தேசியவாதியாக இருந்தேன். நான் எனது கல்லூரிப் படிப்புக் காலத்திலே நான் கைக்கொண்டிருந்த, தெளிவுபெறாத அபேதவாத எண்ணங்கள் மங்கி உள்ளே புதைந்துகிடந்தன. 1916-ம் ஆண்டில் ஐரிஷ் தேசபக்தர் ரோஜர்கேஸ்மண்ட் அவர்கள் ராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பெற்றார். அப்பொழுது அவர் விசாரணைக் கூண்டிலிருந்து உருக்கமாகச் செய்த பிரசங்கமே, அடிமை ஜாதியாருக்கு உகந்த கொள்கையென்று நான் எண்ணினேன். அயர்லாந்தில் நிகழ்ந்த ஈஸ்டர் கலகத்தின் தோல்வியே அதனிடம் எல்லோருக்கும் கவர்ச்சி உண்டாக்கிற்று. தோல்வி நிச்சயமென்றுதெரிந்தும், அதைப்பரிகசித்து, மனிதனுடைய விடுதலை தாகத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் மிருகபலத்தைக்கொண்டு அழித்துவிட முடியாது என்பதை நிலைநாட்டியதல்லவோ சுத்தவீரம்!

இத்தகைய எண்ணங்கள் என் மனதிலே ஊசலாடிக் கொண்டிருந்தன. தேசியம் என்ற கொள்கையில், சிறிது சிறிதாக என்னிடம் மாறுதல் ஏற்பட்டு, அபேதவாதக்கருத்துகளைப்பற்றி மீண்டும் சிந்திக்கலானேன். அப்பொழுது அவைகள் தெளிவுபெறாத கருத்துகள்; ஜீவகாருண்யத் தோற்றங்கள்; மனக்கோட்டைத் திட்டங்கள்; சாஸ்திரீயமுறையில் ஆராய்ந்து நிர்ணயிக்கப்பட்ட தத்துவங்களல்ல. போர்க்காலத்திலும், அதற்குப் பின்னரும் ஆசிரியர் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் எழுதும் நூல்களில் எனக்கு அதிகப்பற்று உண்டாயிற்று. இந்த எண்ணங்களாலும், ஆசைகளாலும் என்னுடைய உள்ளத்தில் கடுமையான போராட்டம் நிகழ ஆரம்பித்துவிட்டது. சட்டத் தொழிலிலே எனக்கு அதிருப்தி உண்டாயிற்று. செய்வதற்கு வேறொன்று மில்லாமையால், வக்கீல் தொழில் நடத்திவந்தேன். ஆனால் வக்கீல் தொழிலையும் தீவிரமான பொதுஜன சேவையும் இணைத்து ஒன்று சேர்த்து, வாழ்க்கையை நடத்தமுடியாது என்ற முடிவு நாள்தோறும் வலுவடைந்துவந்தது. வக்கீல் தொழிலுக்கும் அரசியல் தொண்டிற்குமுள்ள முரண்பாடு அடிப்படையான தத்துவ விஷயமல்ல. இவ்விரண்டிற்கும் போதியகாலமும், சக்தியும் இருக்காதென்பதுதான்.

பெயர் பெற்ற கல்கத்தா வக்கீல் ஸர் ராஷ்பிகாரிகோஷ் அவர்கள், எக்காரணத்தினாலோ என்னிடம் பிரியம் கொண்டார். என் தொழிலில் நான் உயரக்கூடிய வழிகளைப்பற்றிப்

பல்புத்திமதிகளை அவர் எனக்குச் சொன்னார். என்க்கிஷ்டமான ஒரு சட்டப் பகுதியைப்பற்றி ஒரு நூல்எழுதுவதே வக்கில்தொழிலில் நுழைவதற்கு மேன்மையான வழி யாதலால், என்னை அவ்வாறுசெய்யும்படி வற்புறுத்தினார். அதை எழுதும் பொழுது, எனக்குத் தேவையான உதவிசெய்வதாயும், நான் எழுதிய கையெழுத்துப் பிரதியைத் தாம் திருத்திக்கொடுப்பதாயும், அவர் எனக்கு வாக்குக் கொடுத்தார். ஆனால் இந்த யோசனைகள் எல்லாம் பயன்படாமல் போயின. சட்ட நூல்களை எழுதிக் காலங்கழிப்பதைக் காட்டிலும் எனக்கு அருவருப்புக் கொடுக்கக்கூடியவேலை வேறொன்றுமே தோன்றவில்லை.

ஸர் ராஷ்பிகாரி கோஷ் அவர்கள் மிகவும் வயது சென்றவர். அவருக்கு வயதாக வயதாகக் கோபம் அதிகரித்துக் கொண்டே வந்தது. அவருக்குக்கீழ் தொழில் நடத்திவந்த இளைஞர்களான வக்கீல் மார்களுக்கு அவரைக்கண்டால் நடுக்கம். ஆனால் அவரிடம் எனக்குப் பிரியம். அவருடைய குற்றங்குறைகள்கூட எனக்கு அவரிடம் கவர்ச்சியை உண்டாக்கின என்று சொல்லலாம்.

1918-ம் ஆண்டில் என் தகப்பனாரும் நானும் சிம்லாவில், அவருடைய விருந்தினர்களாயிருந்தோம். அப்பொழுது தான் மாண்டேகு-செம்ஸ் போர்டு யாதாஸ்து வெளிவந்திருந்தது என்பது என் நினைவு. ஒருநாள் சாயங்காலம், அவர் சில நண்பர்களை விருந்துக்கு அழைத்திருந்தார். அவர்களிலொருவர் கிழ கபர்தே. விருந்து முடிந்தது. விருந்து முடிந்ததும், ராஷ்பிகாரியும் கபர்தேயும் உரக்கப்பேச ஆரம்பித்துவிட்டார்கள். வாதம் வலுத்து இருவரும் ஓங்கிப்பேச ஆரம்பித்தார்கள். அவர்கள் இரண்டுபேரும் அரசியலில் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

ஸர் ராஷ்பிகாரி பழுத்தமிதவாதி. கபர்தேயோ திலகர் கோஷ்டியில் முதல்வர் என்று அக்காலத்தில் மதிகப்பட்டார். (பின்னர் கபர்தே புறாவைப்போல் சாதுவாகி பழுத்த மிதவாதிகளுக்குள்ளும் மிதவாதியாக ஆகிவிட்டார்) கபர்தே காலஞ்சென்ற கோகலேயைத் தூற்ற ஆரம்பித்தார். தாம் லண்டனில் இருக்கும் பொழுது, கோகலே பிரிட்டிஷ் அரசாங்கத்தினருக்காக தன்பேரில் உளவுவேலை செய்ததாகக் குற்றம் சாட்டினார்.

ராஷ்பிகாரிக்கு பொறுக்க முடியவில்லை. "கோகலே உத்தமர்; என்னுடைய நெருக்கமான நண்பர்; அவருக்கு விரோதமாக யாரும் ஒரு வார்த்தை கூட சொல்வதற்கு நான் விடமாட்டேன்" என்று ராஷ்பிகாரி கத்தினார். கபர்தே கோகலேயைவிட்டுவிட்டு, ஸ்ரீனிவாச சாஸ்திரியின்மேல் பாய்ந்தார். ராஷ்பிகாரிக்கு இதுவும் பிடிக்கவில்லை. ஆனால் இதைப்பற்றி அதிகமாக அவர் ரோஷப்படவில்லை. கோகலேயிடம் அவருக்கு எவ்வளவு மதிப்பு இருந்ததோ, அவ்வளவு மதிப்பு சாஸ்திரியாரிடம் இல்லையென்பது காரணமாயிருக்கலாம். கோகலே உயிரோடு இருக்கும் வரையில் தான், இந்திய ஊழியர் சங்கத்துக்கு சாஸ்திரியார் பொருளுதவி செய்து வந்தார் என்றும் அவர் இறந்தபின் அதை நிறுத்தி விட்டதாகவும் ஸர் ராஷ்பிகாரி சொன்னார்.

உடனே கபர்தே திலகரைப்புகழ ஆரம்பித்துவிட்டார். லோகமான்ய திலகரா! அவர் மஹாபெரியமனிதர்! அவர் ஒரு ஆச்சரியமான புருஷன்! மகரிஷி என்று அடுக்கிக் கொண்டே போனார். திடீரென்று, "மகரிஷியா! எனக்கும் ரிஷிகளுக்கும் சம்பந்தமில்லை. அவர்களைக்கண்டால் எனக்கு அருவருப்பு" என்று ராஷ்பிகாரி பேச்சைக் கத்தரித்து விட்டார்.

VI

# என்னுடைய கலியாணமும் இமயமலை பிரயாணமும்

1916-ம் ஆண்டில் டில்லிமா நகரில் என்னுடைய கலியாணம் நடைபெற்றது. வசந்த பஞ்சமி அன்றைக்கு எனக்கு விவாகம். அந்த வருஷக்கோடையில், நாங்கள் சில மாதங்கள் காஷ்மீரில் கழித்தோம். என்னுடைய குடும்பத்தாரைப் பள்ளத்தாக்கில் விட்டுவிட்டு, நானும் என்னுடைய சகோதரர் ஒருவரும் பல வாரங்கள் மலைமீதிலேறிக்காலங் கழித்து, "லாடக்" ரஸ்தா வழிவரையும் போனோம். மலைச்சரிவுகளின் மூலமாக திபெத்து பிராந்தியத்திற்குச் செல்லும் ஒடுக்கமான ஒற்றை யடிப்பாதைகளும் ஒடுங்கிக் கிடந்த பள்ளத்தாக்குகளும் ஆகாயத்தில் இருப்பதைப்போல் தோன்றின. இக்காட்சிகள் எனக்குப்புதிது. சோஜீலாக் கணவாயின் உச்சியிலிருந்து பார்த்தால், பசுமை தவழ்ந்திருக்கும். மலைச்சரிவுகளை ஒருபக்கத்தில் காணலாம்; இன்னொரு பக்கத்தில் பசுமை யென்பது மருந்துக்குக்கூட காணமுடியாத குன்றுகள் கண்ணில் படும்.

நாங்கள் போனது ஒடுக்கமான பள்ளத்தாக்குப் பாதை. இரு மருங்குகளிலும் மலைகள். மலைச்சிகரங்களில் அடர்ந்த பனி. உறைந்த பனிக்குன்றுகள் சிறிது சிறிதாக கரைந்து எங்கள் காலடி வரையில் வந்து விழும். நல்ல குளிர்காற்று. ஆளை அடிப்பதுபோல வீசும். ஆனால் பகலிலோ வெயில் கொளுத்திவிடும். ஆகாயத்திலே தூசி ஒன்றுமிருக்காது. ரொம்பதூரம் வரையிலும் பார்க்கலாம். எனவே தூரத்திலிருக்கிற பொருள்கள் கிட்ட இருப்பதாக எண்ணி, பல தடவைகளில் நாங்கள் ஏமாந்து போயிருக்கிறோம். ஒரே தனிமை. புல் பூண்டுகள் கிடையாது. செடிகொடிகள் இல்லை. மரங்களையும் காணமுடியாது. சில சமயங்களில் அழகான மலர்கள் கண்களில் தென்படும். அவைகளைத் தவிர மனதுக்கினிய பொருள்களைக் காணமுடியாது. குன்றும் பனியும் பனிக்கட்டிகளும்தான்; என்றாலும் இந்த பயங்கரமான இயற்கையின் தோற்றங்களைக்கண்டு, என் உள்ளத்திலே ஒரு

வித அபூர்வ உவகை உண்டாயிற்று. எனக்கு அடங்காத உற்சாகமும், சந்தோஷமும் ஏற்பட்டன. இவ்வாறு நாங்கள் பிரயாணம் செய்ததில், ஒரு அதிசய சம்பவம் எனக்கு உண்டாயிற்று. சோஜீலா கணவாயைத் தாண்டி, வெகு தூரம் அப்பால் போய்விட்டோம். அங்கே ஒரு இடத்துக்கு மாதாயான் என்று பெயர். அந்த இடத்திலிருந்து அமர்நாத் குகை எட்டுமைல்தான் என்று சொன்னார்கள். நடுவே பிரம்மாண்டமான மலை படுத்துக்கொண்டிருந்தது. மலையின்பேரில் ஒரே பனி. இவைகளைக் கடந்துசெல்ல வேண்டும். "ஆமாம்! அதனால் என்ன? எட்டுமைல்தானே! முடியாத காரியமா? உற்சாகத்தாலும் அனுபவக் குறைவாலும், இந்த எட்டு மைலைக்கடந்துவிடுகிறதென்று தீர்மானங் கொண்டோம். இப்பொழுது நாங்கள் கடற்கரையிலிருந்து 11,500 அடி உயரம் உள்ள ஒரு மலைமீது இருந்தோம். இந்த இடத்தைவிட்டு நாங்கள் ஒரு சிறு கூட்டமாகச் சேர்ந்து புறப்பட்டோம். வழியிலிருந்த் ஆடு மேய்ப்பவர் ஒருவர் எங்களுக்கு வழி காட்டிக்கொண்டே போனார். பனி மலைச் சரிவுகளிற் கயறுகளைப் பிடித்துக் கொண்டு ஏறினோம். ஏற ஏற எங்களுடைய கஷ்டங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன. தாராளமாக மூச்சுவிடுவது கூடக் கஷ்டமாகப் போயிற்று. எங்களுடைய சாமான்களைப் போர்ட்டர்கள் தூக்கிவந்தார்கள். சுமை அதிகக் கனமில்லை. இருந்தாலும் அவர்கள் உடம்பினரத்தங்கக்க ஆரம்பித்து விட்டார்கள். பனி பெய்தது, உறைந்த பனிக்கட்டிகள் வழுக்க ஆரம்பித்து விட்டன. ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும், மூச்சு வாங்க ஆரம்பித்தது. என்றாலும் இந்த முட்டாள் தனமான முயற்சியில் பிடிவாதங் கொண்டு சென்றோம். நாங்கள் முகாம் போட்டிருந்த விடுதியை விட்டுக் காலையில் 4 மணிக்குப் புறப்பட்டோம். விடாமல் 12 மணி நேரம் மேலே ஏறினோம். அங்கே விஸ்தாரமான, ஓர் பனி மைதானக் காட்சியைக்கண்டோம். நாலு பக்கங்களிலும் பனிச் சிகரங்களோடு தேவர்கள் நர்த்தனஞ் செய்யும் நடன மண்டபம்போல் அற்புதக் காட்சியாக விருந்தது. ஆனால் புதிதாகப் பெய்துகொண்டிருந்த பனியாலும், மூடுபனியாலும் இந்தக்காட்சி சீக்கிரம் எங்களுடைய கண்களிலிருந்து மறைந்து போயிற்று. நாங்கள் எவ்வளவு உயரத்தில் இருந்தோம் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. அமர்நாத் குகையைக் காட்டிலும் உயரத்தில் இருந்ததால், 15,000 லிருந்து

16,000 அடி இருக்கலாம். இந்த பனி மைதானத்தைத் தாண்டி அரை மைல் போனால், குகையின் இன்னொரு பக்கத்துக்கு வந்து விடலாம். மலை ஏற்றம் முடிந்து விட்டதால், இனி அதிமான கஷ்டம் இருக்காது என்று நாங்கள் எண்ணினோம். எனவே, சோர்ந்துபோனாலும், உற்சாகத்துடன் கீழே இறங்கத் தொடங்கினோம். ஆனால் மிகவும் மோசடியான காரியமாகி விட்டது. இடை இடையே குன்றுகள் மீது இருந்த பனி மூட்டங்களால் எங்கே ஆபத்து இருக்கிறதென்று அறியக்கூடவில்லை. ஒரு புதிய பனிக்குன்றிலே காலை வைத்தேன். அது உடைந்துபோய், தனது பேய்வாயைத் திறந்து கொண்டிருந்த குகைக்குள் நான் விழுந்துவிட்டேன். அது ஒரு ஆழம் அண்டாத குகை. அதிலே போனவர்கள் யுக யுகாந்தரங்கள் கழிந்தாலும் அதனுள்ளே பத்திரமாக இருப்பார்கள். ஆனால் நான் பிடித்துக் கொண்டிருந்த கயறு அறுந்து போகவில்லை. எனவே நான் அந்த பிலத்துவாரத்தின் கங்கிலே தொத்திக்கொண்டேன். கயிற்றைப் பிடித்து என்னை வெளியே இழுத்து விட்டார்கள். இந்த விபத்தினால் எங்களுக்கு நடுக்கம் உண்டாயிற்று. ஆனாலும் மேலே செல்ல பிடிவாதம் கொண்டோம். இத்தகைய விபத்துகள் அதிகரித்துக்கொண்டே வந்தன. இவைகளைக் கடப்பதற்கான வசதிகள் எங்களிடம் இல்லை. எனவே, கடைசியாகத் திரும்பி விட்டோம். ஏக்கமும் சோர்வும் அதிகம். அமர்நாத் குகையை நாங்கள் காணமுடியாமல் போயிற்று.

காஷ்மீரத்தின் மலைகளும் பள்ளத்தாக்குகளும் என் கண்களைக் கவர்ந்தன. எனவே சீக்கிரத்தில் திரும்பி வந்து இவைகளைக் காண வேண்டுமென்று தீர்மானங் கொண்டேன். இதைப்பற்றி எத்தனையோ திட்டங்கள் போட்டேன். ஒரு திட்டம் போடும்பொழுதே எனக்கு அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று. திபெத்தில் தெய்வீக ஏரியான மானசரோவருக்குப் போய், அதன் அருகேயிருக்கும் பனி நிறைந்த கைலாச பர்வதத்தைக் காணவேண்டுமென்பதுதான். இந்தத் திட்டம் போட்டு இப்பொழுது 18 வருஷங்கள் ஆகின்றன. இன்னும் மானசரோவரும் கைலாசமும் மனக்கோட்டையில்தான் பார்க்கப்பட்டு வருகின்றன.

எவ்வளவோ ஆசைப்பட்டும் காஷ்மீரத்துக்குக் கூட இரண்டாவது முறை என்னால் போகமுடியவில்லை. அர

சியல், பொதுஜன சேவை, என்ற வலைகளிலே அதிகமாக வர வர சிக்கிக்கொண்டேன். மலைகளிலே ஏறியும் கடல்களைக் கடந்தும் வேண்டிய எனது யாத்திரா மோகத்தை திருப்தி செய்ய சிறைக்குள் வந்து திருப்தி செய்ய நேரிட்டது. இன்னமும் நான் திட்டம் போட்டுக் கொண்டுதானிருக்கிறேன். சிறையில் கூட திட்டம் போடும் ஆனந்தத்தை என்னிடம் இருந்து யாரேனும் பறிமுதல் செய்துவிடக்கூடுமா? மேலும் திட்டம் போடுவதைத்தவிர சிறையிலே என்னதான் செய்ய முடியும்?

இமய மலைத் தொடர்களில் திரிந்து கடந்து, கடைசியில் என் ஆசைக் களஞ்சியங்களான அந்த மானசரோவர் ஏரியை அடைந்து கைலாச மலையில் ஏறப்போவதாக என்றும் கனவு காண்கின்றேன். ஆனால் வாழ்க்கையோ ஒவ்வொரு நாளாக கழிந்துகொண்டே செல்கின்றது. இளமை அழிந்து நடுத்தர வயது வந்துவிட்டது. அதுவும் அழிந்து பயங்கரமான முதுமையும் ஏற்பட்டுவிடும். அப்பொழுது கைலாசத்துக்கும் மானசரோவருக்கும் எப்படிப்போவேன் என்று நான் சில சமயங்களில் ஏங்குவதுண்டு. முடிவு கண்ணில் படவில்லையானாலும், அதற்காகப் பிரயாணத்தை நிறுத்திவிடலாமோ? முயற்சிக்குத் தக்க பயனுண்டு. ஓர் கவியின் மொழிகள் எனக்கு ஞாபகம் வருகின்றன.

“ஆமாம்! இந்த மலைகள் என்மனக்கண்களில் தோன்றுகின்றன. அவற்றின் அபாயம்நிறைந்த குன்றுகளும் குகைகளும் மாலை நேரத்தின் அழகு வெள்ளத்தால் ரோஜாவர்ணம் பூசப்பட்டிருக்கின்றன. அதைக் கண்ட என் ஆத்மா அம்மலைகளின் சாந்த மயமான பனிச்சிகரங்களுக்கு அடங்கா ஆசை கொண்டு என்னைக் கண்கொட்ட விடுவதில்லை.”

# VII

## காந்தியின் பிரவேசம்

## அமிருதசரசும்' சத்தியாக்கிரகமும்

மகாயுத்தத்தின் முடிவில் இந்தியா உள்ளூரக்கொதித்துக் கொண்டிருந்தது. தொழிற் சாலைகள் இந்தியாவில் அதிகரித்தன. முதலாளிக் கூட்டம் செல்வத்திலும் அதிகாரத்திலும் செழித்தது. ஜனசமூகத்தின் உச்சியிலே வீற்றிருக்கும் இந்தச் சிறுதொகையினர் கொழுத்து, தாங்கள் மீத்த பணத்தைத் தொழிலில் போட்டு விருத்தி செய்ய, மீண்டும் அதிகாரத்திற்கும், வசதிகளுக்கும் பேராசை கொண்டார்கள். ஆனால் பெரும்பான்மையான பொதுமக்களுக்கு, இத்தகைய அதிர்ஷ்டம் உண்டாகவில்லை. தங்களை அழித்து நாசமாக்கும் கடன் முதலிய சுமைகள் எப்படியாவது குறையுமோ என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். புதிதாக அரசியல் சீர்திருத்தங்கள் கிடைக்குமென்றும் அதனால் ஓரளவு சுய ஆட்சி பெற்று தாங்கள் வளரக்கூடிய வசதிகள் பலவற்றை அதன் மூலமாகப் ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும் நடுத்தர வகுப்பினர் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அரசியல் கிளர்ச்சி அமைதியாகவும், சட்டவரம்புக்குள்ளாகவும் நடந்துவந்த போதிலும், இது தன் எல்லையை அடைந்து விட்டதாகக் காணப்பட்டது. ஜனங்கள் சுய நிர்ணயத்தைப்பற்றியும், சுய ஆட்சியைப் பற்றியும், வெகுவாகப் பேசத் தலைப்பட்டார்கள். பொது ஜங்களிடத்தும் விவசாயிகளிடத்தும் கிளர்ச்சிக் கலக்கம் பரவிற்று. பாஞ்சாலத்துக் கிராமங்களில் பலாத்காரத்துடன் சேனைக்கு ஆள் சேர்த்ததைப்பற்றி, ஜனங்களின் மனம் புண்ணாகவே இருந்தது. "கொமகாட்டமாரு" என்ற ஜப்பானியக் கப்பலில் கனடாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட இந்தியர்கள் பலாத்காரமாக அடக்கப்பட்டதும், சதியாலோசனை வகுப்புகள் மூலம் இவர்களும் ஏனைய தேசபக்தர்களும் ஒடுக்கப்பட்டதும் ஜனங்களின் ஆத்திரத்தை அதிகரித்தன.

உலகப் போருக்காக பல யுத்தகளங்களுக்குச் சென்றிருந்த இந்திய சிப்பாய்கள், இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும்

அவர்கள் முன்போல் சுயபுத்தியில்லாத இயந்திரங்களாக விருக்க சம்மதிக்கவில்லை. அவர்களிடம் புதிதானதொரு தன் மதிப்பு காணப்பட்டது. அவர்கள் மனதிலே வளர்ச்சிபெற்று விட்டதால், தங்கள் நிலைமையில் மிகவும் அதிருப்தி கொண்டிருந்தார்கள்.

துருக்கி சம்பந்தமாகவும் கிலாபத் பிரச்னை சம்பந்தமாகவும், சரியான தீர்ப்பு கிடைக்கவில்லை யென்று முஸ்லிம்கள் ஆத்திரப்பட்டார்கள். அவர்களுக்குள்ளும் கிளர்ச்சியும் அதிருப்தியும் வளர்ந்துவந்தன. துருக்கியோடு செய்யப்பட்ட சமாதான உடன்படிக்கை இன்னும் கையெழுத்தாக வில்லை. ஆனால் நிலைமை பயங்கரமாய்த்தான் இருந்தது. முஸ்லீம்கள் கிளர்ச்சி செய்துகொண்டே முடிவை எதிர் பார்த்திருந்தார்கள். இந்தியா முழுதுமே, எல்லோரும் ஆவலுடன் எதையோ எதிர் பார்த்துக் கொண்டும், அதற்காக காத்துக் கொண்டும் இருப்பதாகத் தோன்றிற்று. ஆனால் எதிர்பார்த்தது கிடைக்காதோ என்ற பயமும் கவலையும் கூடவே இருந்தன. கடைசியாகக் கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல், ரௌலட் சட்டங்கள் தோன்றின. கைது செய்வதற்கும், விசாரணை செய்வதற்கும், சாதாரணமாக சட்டப்படி என்னென்ன முறைகள் தேவையோ, அவை ஒன்றுகூட இல்லாமல் சந்தேகத்தின் பேரில் போலீசார் யாரையும் கைது செய்யலாம் என்ற எதேச்சாதிகாரம் அந்தச் சட்டங்களில் காணப்பட்டது. பாரதஜனங்கள் எல்லோருக்கும் அடங்காக்கோபம். மிதவாதிகளும் இதில் சேர்ந்துகொண்டார்கள். தங்களால் இயன்றவரை, இந்தச் சட்டங்கள் நிறைவேறாமல் இருப்பதற்கு எதிர்த்துப் போராடினார்கள். இந்தியாவில் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து, இந்த மசோதாக்களை எதிர்த்தார்கள். என்றாலும் அதிகாரவர்க்கத்தினர் இந்த மசோதாக்களைச் சட்டமாக்கினார்கள். பொதுஜனக் கிளர்ச்சிக்கு அதிகார வர்க்கத்தினர் காண்பித்த சலுகை ஒன்றே ஒன்றுதான். இந்தச்சட்டத்தை மூன்று வருஷகாலம் வரைக்கும்தான் உபயோகப் படுத்துவது என்பதாக ஒப்புக் கொண்டார்கள்.

பதினைந்து ஆண்டுகள் கழிந்த பின்னர், இந்த மசோதாக்களைப்பற்றியும் அவைகளால் ஏற்பட்ட எழுச்சியைப் பற்றியும், சிந்தனை செய்வதில் பயனுண்டு. அவைகள் சட்டமானது என்னவோ உண்மைதான். எனக்கு தெரிந்தவரை,

யிலும் அதிகாரவர்க்கத்தினர் அந்தச் சட்டங்களுக்கு எல்லை குறிப்பிட்டிருந்த மூன்று வருஷ காலத்துக்குள், ஒரு தடவையேனும் அவைகள் பிரயோகம் செய்யப்பட வில்லை. என்றாலும் அந்த மூன்று வருஷங்களிலேதான் இந்தியாவிலே 1857-ம் வருஷக்கலகத்துக்குப் பின்னர், பிரிட்டிஷ் அரசாங்கம் கலங்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. பொது ஜனங்கள் ஏகமனதாக இந்த மசோதாக்களை எதிர்த்து அதிகார வர்க்கத்தினர் அவைகளைச் சட்டமாக்கிக் கொண்டு, அந்தச் சட்டத்தை ஒரு தடவைகூட பிரயோகம் செய்ய வில்லை யானால், பொதுஜன எழுச்சியை அரசாங்கத்தாரே வரவழைத்துக் கொண்டது போலத்தானே ஆகும்? வேண்டுமென்று சர்க்கார் இந்த மசோதாக்களைக் கொண்டு வந்து கஷ்டத்தை விலைகொடுத்து வாங்கினார்கள் என்று சொல்வது பொருந்தும். இன்னொரு வேடிக்கையான விஷயம்! 15 ஆண்டுகளுக்குப் பின்னர், இன்றைக்கு சட்ட நூலில், எத்தனையோ கடுமையான சட்டங்கள் ஆக்கப்பட்டு இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ரௌலட் மசோதாக்களைக் காட்டிலும் கொடுமைகொண்டவை. அந்தச் சட்டங்களை அரசாங்கத்தார் நாள்தோறும் பிரயோகம் செய்து வருகிறார்கள். இந்தப் புதிய சட்டங்களோடும் ஆர்டினன்சுகளோடும் ரௌலட் மசோதாக்களை ஒப்பிட்டுப் பார்த்தால் ரௌலட் மசோதாக்கள் ரொம்பச் சாது வென்றும் சுதந்திரப்பட்டார் என்றும் கூடக் கூறிவிடலாம். ஆனால் ஒரு வித்தியாசம். 1919-ம் ஆண்டுக்குப் பிறகு, இந்தியர்களுக்கு ஒன்று கிடைத்தது. அது சுய ஆட்சியில் ஒரு பெரிய பகுதியாம்! அதற்கு மாண்டேகு-செம்ஸ்போர்டு திட்டம் என்று பெயர். இப்பொழுதோ இன்னொரு புதிய திட்டம் இந்தியர்களுக்குக் கிடைக்கப் போவதாகச் சொல்லப் படுகிறது. இது முற்போக்குதானே!

1919-ம் ஆண்டில் காந்திஜீக்கு கடுமையான நோய். ரௌலட் சட்டத்துக்கு அனுமதிகொடுக்க வேண்டாமென்று வைஸ்ராயை காந்திஜீ அவர்கள் படுக்கையிலிருந்தே கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். ஏனைய மனுக்களைப் போலவே இதுவும் நிராகரிக்கப்பட்டது. ஆகவே, தான் ராஜீயக் கிளர்ச்சியில் தலையிட விருப்ப மில்லாதிருந்தும், இக் கிளர்ச்சிக்கு அவர் முதன் முதலாக தலைமையை ஏற்றுக் கொண்டார். காந்திஜீ சத்தியாக்கிரக சபையை அமைத்தார். தன்பேரில்

பிரயோகிக்கப்பட்டால் ரௌலட் சட்டத்தை மீறுவதாகவும், அவ்வப்போது குறிப்பிடப்படும் இதர சட்டங்களையும் மீறுவதாகவும் அதன் ஒவ்வொரு அங்கத்தினரும் உறுதி மொழி கொடுக்கவேண்டும்.

சுருங்கச் சொல்லின், சத்தியாக்கிரகிகள் பகிரங்கமாகவும் மனப் பூர்வமாகவும் சிறைக்குச் செல்ல வேண்டும்.

பத்திரிகைகளில் இந்த யோசனையை நான் படித்ததும், என்மனதிற்குப் பெரிய ஆறுதல் உண்டாயிற்று. "இனி குழப்பம் இல்லை. வழிதிறந்து விட்டது. வேலை செய்வதற்கான முறையும் தோன்றிவிட்டது. அதனால் நல்ல பயன் கிடைக்கும் என்று எண்ணினேன். எனவே என்னுடைய உற்சாகத்திற்கு அளவில்லை. உடனே சத்தியாக்கிரக சபையில் சேரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். சத்தியாக்கிரகத்தில் பலன்களை அதாவது சட்டம் மீறுதல், சிறைக்குச் செல்லல் முதலியசம்பவங்களைப்பற்றி நான் ஆழ்ந்துயோசிக்கவில்லை. நான் யோசித்தவரையிலும், அவைகளைப்பற்றி கவலைப்படவே இல்லை. ஆனால் திடீரென்று என்னுடைய உற்சாகத்திற்கு பங்கமேற் பட்டது. என் இஷ்டம்போல் நடப்பது சுலபமல்லவென்று கண்டேன். இந்தப் புதிய யோசனைக்குத் தகப்பனார் நேர் விரோதமாய் இருந்தார். புதிய யோசனைகளைக் கண்டு, புதிது என்ற காரணத்தால் மதிமயங்கும் வழக்கம் அவரிடம் கிடையாது. ஏதாவது ஒன்றை அவர் புதிதாக செய்யு முன்னர், அதனுடைய லாப நஷ்டங்களைப் பற்றி நுட்பமாக யோசிப்பார். சத்தியாக்கிரக சபையையும் அதன் திட்டத்தையும் பற்றி, அவர் யோசிக்க யோசிக்க அதனிடம் அவருக்கு விரோதம் வளர்ந்து கொண்டே வந்தது. நூற்றுக் கணக்கானவர்கள் ஜெயிலுக்கு போவதனால் என்ன லாபம்? அதனால் அரசாங்கத்தாருக்கு என்ன கஷ்டம் என்று வாதித்தார்.

இந்த பொதுவான காரணங்களைத் தவிர, சத்தியாக்கிரக சபைக்கு, அவர் நேர் விரோதமாக இருந்ததற்கு, ஒரு சொந்தக் காரணம் இருந்தது. நான் சிறைக்குப் போவது என்ற எண்ணமே சகிக்கக் கூடாததாக விருந்தது. இப்பொழுது போல், சிறைவாசம் சர்வ சாதாரணமாகி விடவில்லை. அக்காலத்தில் மிகவும் அருவருப்பாக விருந்தது. தகப்பனாருக்கு தன் குழந்தைகளிடம் எல்லை கடந்த வாத்சல்யம். தன் பிரியத்தை அவர் ஆடம்பரமாக வெளியே காண்பித்துக்

கொள்வதில்லை. ஆனால் உள்ளே அன்பு பொங்கிக் கிடந்தது. பல நாட்கள் எங்கள் மனதில் போராட்டம் நிகழ்ந்து வந்தது. இந்தப் பிரச்னைகளால் எங்களுடைய வாழ்க்கையே தலைகுப்புற மாறும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதாக நாங்கள் எண்ணினோம். எனவே ஒருவர் உள்ளத்தை மற்றவர் அறிந்துகொண்டு, பரஸ்பரம் சாவதானத்துடன் பழக முயன்றோம். கூடியவரையில், அவருடைய மனவேதனையைக் குறைக்கவேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். ஆனால் சத்தியாக்கிரகப் பாதையில் செல்வதே எனது கடமையென்பதில் சந்தேகம் சிறிதும் ஏற்படவில்லை. எங்களுடைய பரஸ்பர மனவேதனையைச் சொல்லிமுடியாது. புண்பட்ட மனத்துடன், இந்த சங்கடத்திலிருந்து வெளியேறும் வழியைச் சிந்தித்துக் கொண்டு இரவுதோறும் வெகுதூரம் உலவுவேன். நான் சிறை சென்றால் தரையில் படுத்துக் கொள்ள வேண்டியிருக்குமே; அது எப்படி இருக்குமென்று அனுபவத்தால் அறிந்து கொள்வதற்காக அவர் படுக்கை ஒன்றுமில்லாமல், வெறும் தரையில் படுத்துப் பழகிப்பார்த்தாரென்று பின்னால் தெரிந்தது.

தகப்பனாரின் அழைப்புக் கிணங்கி காந்திஜீ அலகாபாத்துக்கு வந்தார். அவர்கள் இருவரும் எனக்கு மறைமுகமாக நீண்ட நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அந்த சம்பாஷணையின் பலனாக, என் தந்தையின் மன முடைந்து போகும்படி திடீரென்று எதையும் செய்து விடவேண்டாம் என்று காந்திஜீ எனக்கு புத்திமதி கூறினார். இதனால் எனக்குச் சற்று வருத்தம்தான். ஆனால் வேறுபல நிகழ்ச்சிகளால், நிலைமை அடியோடு மாறிப்போய் விட்டது; சத்தியாக்கிரக சபை தனது வேலையை நிறுத்திக்கொண்டது. சத்தியாக்கிரக நாள்! இந்தியா முழுதும் ஹர்த்தால்கள்—நாடெங்கும் வியாபார நிறுத்தம்—டில்லியிலும் அமிருதசரஸிலும் போலீசாராலும் இராணுவத்தாராலும் துப்பாக்கிப் பிரயோகம்—அதனால் பலரின் மரணம்—அமிருத சரஸிலும் ஆமதாபாதிலும் பொது ஜன எழுச்சியும் கலகமும்—ஜலியன்வாலாப் படுகொலை—பாஞ்சாலத்தில் இராணுவ அமுல்—அதன் கொடுமை—பாஞ்சால ஜனங்கள் அடைந்த சொல்லொணுத் துன்பமும் அவமானமும்! பாஞ்சால தேசத்தின் மற்ற பாகங்களிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டது. வெளியிலிருந்து யாரும் அங்கே போகக்கூடாது. பாஞ்சாலத்தைத் திரை

போட்டு மூடிவிட்டார் போலத் தோன்றிற்று. பாஞ்சாலத்தைப்பற்றி வெளி உலகத்திற்கு ஒன்று கூடத் தெரியவில்லை.

அங்கிருந்து யாதொரு செய்தியும் கிடையாது. அந்த நகரத்திலிருந்து தப்பிக்கொண்டு, வெளியேவந்த சிலர் திகிலடைந்துபோய், மனங்குழம்பி, தெளிவாக வரலாறு ஒன்றும் சொல்ல சக்தியற்றவர்களாக விருந்தனர். வெளியிலிருந்த நாங்களோ திக்கற்றவர்களாகவும், கையாலாகதவர்களாகவும் உள்ளூரப் புகைந்துகொண்டிருந்தோம். எங்களிற் சிலர் பாஞ்சாலத்துக்கு பகிரங்கமாகப்போய், இராணுவ அமுலை மீறவேண்டும் என்று ஆசைப்பட்டோம். ஆனல் எங்களை தடுத்துவிட்டார்கள். பாஞ்சாலத்தின் துயரத்துக்குப் பரிகாரம் செய்து நிவாரணம் உண்டாக்குவதற்காகவும், கொடுமைகளைப்பற்றி விசாரணை செய்வதற்காகவும், காங்கிரஸின் சார்பாக பெரிய கமிட்டியொன்று அமைக்கப்பட்டது.

முக்கிய ஸ்தலங்களிலிருந்து இராணுவச்சட்டம் எடுபட்டு அங்கே வெளியார்கள்வர அனுமதிகிடைத்ததும், பிரபல காங்கிரஸ் வாதிகளும் ஏனையோரும் பாஞ்சாலத்துக்குள் சென்று தங்களாலியன்ற சேவையைச் செய்ய ஆரம்பித்தார்கள். பண்டித மதன்மோகன மாளவியாவும் ஸ்வாமி சிரத்தானந்தரும் நிவாரண வேலையைத்துவக்கி நடத்திவந்தார்கள். விசாரணைவேலை என் தகப்பனரிடத்திலும் தேசபந்து தாஸிடத்திலும் ஒப்படைக்கப்பட்டது. இந்த வேலையில் காந்திஜீ மிகுதியும் கலந்துகொண்டு சிரத்தையுடன் வேலை செய்தார். மற்றவர்கள் அடிக்கடி அவரிடம் யோசனை கேட்பார்கள். விசாரணைக்காக தேசபந்து தாஸ் அமிருதசரஸ் பகுதியை எடுத்துக்கொண்டார். அவருடன்சென்று, என்னுலியன்ற உதவிபுரிவதற்காக நான் அனுப்பப்பட்டேன். தேசபந்து தாஸோடு, அவருக்குக்கீழ் நான் வேலை செய்தது அதுதான் முதல் சந்தர்ப்பமாகும். அந்த அனுபவத்தை நான் மிகவும் பெரிதாக மதித்தேன். அவர்பேரில் எனக்கு உண்டான ஆர்வமும் நன்மதிப்பும் பெருகின. ஜலியன்வாலாப் படுகொலையைப்பற்றிய சாக்ஷியம்—அந்தப்பாழான சந்தில் இந்தியமக்கள் தங்கள் வயிற்றினல் ஊர்ந்துசெல்ல வற்புறுத்தப்பட்ட நிகழ்ச்சிகளைப்பற்றிய சாக்ஷியம்—இவைகள் எங்கள் முன்னிலையில் எடுக்கப்பட்டன. ஜலியன்வாலாத் தோட்டத்துக்கு நாங்கள் அடிக்கடிபோய், அதன் ஒவ்வொருபாகத்தையும் நன்ருக கவனித்துப் பார்த்து சோதனை செய்தோம்.

ஜலியன்வாலாத் தோட்டத்தி லிருந்து வெளியே போவ வற்குப் பலவழிகள் இருந்ததாக, சேனுபதி டயர் எண்ணிக் கொண்டார் என்றும், இதனுலேதான் அவர் நீண்டநேரம் சுடக் கட்டளையிட்டார் என்றும் எட்வர்ட் தாம்சன் சமாதானங் கூறுகிறுர். அவ்வாறு எண்ணி டயர் சுட்டிருந்தாலும், அல்லது நிஜமாகவே பலவழிகள் இருந்திருந் தாலும், அவருடைய குற்றப்பொறுப்பு அதனுல் இம்மியளவும் குறைந்துபோய் விடாது. ஆனுல் டயர் இவ்வாறு எவ்விதம் எண்ணக்கூடும் என்று புரியவில்லை. பீரங்கிப் பிரயோகம் நடந்தபொழுது, டயர் நின்றுகொண்டிருந்த மேடான பூமியி லிருந்து அவர் தோட்டத்தின் எல்லாப் பக்கங்களையும் கஷ்ட மில்லாமல், தெளிவாகப் பார்த்திருக்க முடியும். தோட் டத்தைச்சுற்றி நாலாபக்கங்களிலும், பல மெத்தைகள் கொண்ட வீடுகள் இருந்தன. ஒரேயொரு கங்கிலேமட்டும் நூறடி தூரத்துக்கு வீடில்லாமல் ஐந்தடி உயரமுள்ள சுவர் ஒன்று இருந்தது. டயர் கொடியகுண்டுப் பிரயோகம்செய்த பொழுது, எப்படியாவது வெளியேறவேண்டுமென்று ஆயிரக் கணக்கான ஜனங்கள் இந்தச் சுவரின் பக்கமாக ஓடிவந்து அதன்மேல் ஏறமுயன்றுர்கள். அப்பொழுது டயர் அந்த சுவரைப்பார்த்துச் சுடும்படி கட்டளையிட்டதாகக் கூறப்படு கிறது. அந்தச் சுவரிலே இன்றைக்கும் குண்டுகள் அடி பட்டதுளைகளை அடையாளங்களாகக் காணலாம். வெடி தீர்ந்த பிறகு சுவரின் இரண்டு புறங்களிலும் கும்பல் களாகச் சவங்களும், காயப்பட்ட ஜனங்களும் நிறைந்து கிடந்தன.

1919-ம் ஆண்டு இறுதியில் நான் அமிருதசரசிலிருந்து டில்லிக்கு இரவு வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந் தேன். ரயிலிலே பெரிய கூட்டம். நான் நுழைந்த அறையும் அநேகமாகக் காலியாயிருக்கவில்லை. ஓரேயொரு மேல் தட்டுமட்டும் காலியாகவிருந்தது. மற்றையத் தட்டு களில் பிரயாணிகள் படுத்துறங்கிக்கொண்டிருந்தார்கள். காலியாய் இருந்த தட்டில் நான் ஏறிப்படுத்துக் கொண் டேன். என்னுடன் வண்டியில் பிரயாணம்செய்தவர்கள் யாவரும் இராணுவ உத்தியோகஸ்தர்கள் என்று மறு நாட் காலையில் தெரிந்துகொண்டேன். என்காதில்படும்படி, அவர் கள் சத்தம்போட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் வெற்றிக் குரலோடு மிகவும் ஜோராகவும் அழுத்த

மாகவும் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அவர்தான் டயர் என்று எனக்கு விரைவில் தெரிந்துவிட்டது.

அவர் தம்முடைய அமிருதசரஸ் அனுபவங்களை வர்ணித்துக் கொண்டிருந்தார். "அமிருதசரஸ் நகர் முழுதும் என் காலடியிலே யிருந்ததாக வைத்துக்கொள்ளலாம். கலகஞ்செய்த அந்த நகரத்தைச் சாம்பல் மேடாக அடித்துவிட வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் அதன் மேல் பரிதாபங்கொண்டு, அவ்வாறு செய்யாமல் நிறுத்திக் கொண்டேன்" என்று அவர் வர்ணித்தார். பஞ்சாப் சம்பவங்களைப்பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஹண்டர் கமிட்டியின் முன்பாக, டயர் லாகூரில் சாட்சியம்கொடுத்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார் என்று எனக்குத் தெரிந்தது. அவருடைய சம்பாஷணையைக்கேட்டும், அவருடைய பொறுப்பற்ற தன்மையைக் கண்டும், நான் மிகுதியும் ஸ்தம்பித்துப்போனேன். அவர் டில்லி ஸ்டேஷனில் சிகப்புக்கோடுபோட்ட பைஜமாவும், கௌனும் கூடிய உடையில் இறங்கிப் போய்விட்டார்.

பாஞ்சால விசாரணைக் காலத்தில், காந்திஜீயிடம் வெகுவாக நெருங்கிப்பழக அவகாசம் கிடைத்தது. எங்கள் கமிட்டிக்கு அவர் அடிக்கடி யோசனை கூறுவார். அந்த யோசனைகள் புதிதாகவும் விநோதமாகவும் இருப்பதாகக் கமிட்டிக்கு தோன்றும். அவைகளை ஏற்றுக்கொள்ள கமிட்டி எளிதிலே சம்மதிக்காது. ஆனால் விசித்திரமாக வாதம் செய்து, தமது யோசனைகளைக் கமிட்டி ஏற்கும்படியாகச் செய்துவிடுவார். அவருடைய யோசனைகளின் சாதுர்யத்தை பின்னர் நேர்ந்த நிகழ்ச்சிகள் விளக்கமாகக் காண்பித்துவிட்டன. அரசியலில் காந்திஜி மிகுதியும் புத்திக் கூர்மை வாய்ந்தவர் என்ற நம்பிக்கை அப்பொழுதுமுதல், என் உள்ளத்தில் வளரத்துவங்கிற்று. பாஞ்சால நிகழ்ச்சிகளாலும் பின்னர் நடைபெற்ற விசாரணையாலும், தகப்பனாருடைய உள்ளத்தில் பலமான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அவர் முன்கொண்டிருந்த எண்ணங்கள், நம்பிக்கைகள் யாவும் பொத்துப் பொத்தென்று நழுவிவிழுந்து விட்டன. சிறிது சிறிதாகமாறி ஒரு ஆண்டுக்குள் அவர் புதியமனிதராக மாறிவிட்டார். தம்முடைய பழையமித வாத நிலைமையினின்றும் ஏற்கனவே அவர் மாறியிருந்தார். அலகாபாத்திலே லீடர் என்ற மிதவாதப் பத்திரிகையொன்று நடந்துவந்தது. அந்தப் பத்திரிகையின் போக்கில் தகப்ப

ஞருக்குத் திருப்தியேஇல்லை. எனவே 1919-ம் வருஷத் துவக்கத்தில், அலகாபாத்தில் அவர் "இண்டிபெண்டண்ட்" என்ற தினசரிப்பத்திரிகை யொன்றை ஆரம்பித்தார்.

துவக்கம் முதலே இந்தப் பத்திரிகை பொதுஜனங்களால் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது. ஆனால், இந்தப் பத்திரிகையின் நிர்வாக ஊழல்களைச் சொல்லமுடியாது. இந்த ஊழல்களுக்கு டைரக்டர்கள், ஆசிரியர்கள், நிர்வாகஉத்தியோகஸ்தர்கள் முதலிய அனைவரும் பொறுப்பாளிகளாவர். டைரெக்டர்களிலே நான் ஒருவன். அந்த வேலைக்கு ஏற்ற பழக்கம் சிறிதுகூட எனக்கு இருந்ததில்லை. பத்திரிகை சம்பந்தமான சண்டைகளையும், தொந்தரவுகளும் சகிக்க முடியாமலிருந்தன. நானும் தகப்பனாரும் பாஞ்சாலத்துக்குச் செல்லவேண்டியதாயிற்று. நாங்கள் இல்லாத காலத்தில், பத்திரிகை மிகவும் சீரழிந்துபோய் ஏகப்பட்ட கடனும் ஏற்பட்டது. அந்த நிலைமையிலிருந்து அதற்கு ஒரு நாளும் விமோசனம் ஏற்படவில்லை. 1920-21-ம் ஆண்டுகளில், மீண்டும் அதற்குச் செல்வாக்கு ஏற்பட்டபோதிலும், நாங்கள் சிறைக்குச் சென்றதும், பத்திரிகை நாசமாகப்போய்விட்டது. கடைசியாக 1923-ம் ஆண்டில் அது மறைந்தும் போயிற்று. இந்த அனுபவம் எனக்கு மிகுதியும் திகிலையுண்டாக்கிவிட்டது. அதுமுதல் எந்தப் பத்திரிகையிலும் டைரக்டர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நான் மறுத்து வந்திருக்கிறேன். மேலும் நான் பொறுப்பை வேறு காரணத்தைக் கொண்டும் ஏற்றிருக்க முடியாது. அந்தநாள் முதல் இதுவரையில், ஜெயிலுக்குப் போவதும், வெளியே வருவதும் திரும்பி உள்ளே போவதும், திரும்பி வெளியேவருவதுமாகக் காலத்தைக் கழித்துக்கொண்டு வருகிறேன்.

1919-ம் ஆண்டில் கிறிஸ்துமஸ் காலத்தில், காங்கிரஸ் அமிருதசரசில் கூடிற்று. அதற்குத் தகப்பனார் தலைமை வகித்தார். "இராணுவ அமுலின் கொடுமைகளை நீங்கள் கண்டும் கேட்டுமிருப்பீர்கள். இவைகளால் இந்தியாவிலே அரசியல் சம்பந்தமாகப் புதியதொரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே எனது மிதவாத நண்பர்களே! தயவுசெய்து நீங்கள் அனைவரும் காங்கிரசில்வந்து சேருங்கள்" என்று அவர் உருக்கமாக மனுச்செய்துகொண்டார். "பாஞ்சாலத்தின் புண்பட்ட உள்ளம் உங்களைக் கூவியழைக்கின்றது" என்று அவர் வினயத்துடன் சொல்லியும் பார்த்தார். மித

வாதிகள் அந்த அழைப்புக்கிணங்கி காங்கிரசில்வந்து சேர்ந்தார்களா? இல்லை. அவர்கள் அவரது அழைப்புக்கு இணங்கவில்லை. அப்பொழுது அவர்களுடைய கண்களுக்கு முன்னே, நின்று காட்சிகொடுத்தவை மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களாகும். அவர்கள் மறுத்ததைக்கண்டு தகப்பனுருக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. எனவே அவருக்கும் அவருடைய தோழர்களாகிய மிதவாதிகளுக்குமிடையே இருந்தபிளவும் விரிவாகப் போய்விட்டது.

அமிருதசரஸ் காங்கிரஸ்தான் முதலாவது காந்தி காங்கிரசாகும். காங்கிரசுக்கு லோகமான்ய திலகரும் விஜயம் செய்திருந்தார். அவர் நடவடிக்கைகளில் சிறப்பாகப் பங்கெடுத்துக்கொண்டார். ஆனால் பிரதிநிதிகளும் பொதுஜனங்களும் காந்தியின் தலைமையை வேண்டிநின்றார்கள் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. அன்று முதல் "மகாத்மா காந்தி கீ ஜே" என்ற கூப்பாடு, இந்திய அரசியலின் வீரமுழக்கமாக ஒலிக்க ஆரம்பித்தது. அமிருதசரஸ் காங்கிரஸ் நடக்கையிலேதான் அலி சகோதரர்கள் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். உடனே அவர்கள் காங்கிரசில் சேர்ந்து கொள்ளவே, தேசீய இயக்கம் புதிய உருவமும் உயிரும்பெற்று விளங்கத் துவக்கிற்று.

கிலாபத் தூதுகோஷ்டியில் சேர்ந்து கொண்டு, முகம்மது அலி ஐரோப்பாவுக்குச் சென்றார். இந்தியாவில் நாளடைவிலே கிலாபத் கமிட்டிகள் காந்திஜீயின் ஆதிக்கத்துக்குக் கீழ்வந்து விட்டன. முஸ்லீம்களும் சாத்வீக ஒத்துழையாமைக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். டில்லியில் 1920-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கிலாபத் தலைவர்களும் மௌல்விகளும் உலேமாக்களும் ஒரு மகாநாடு கூடினார்கள். வைசிராயிடம் ஒரு கிலாபத்தூது கோஷ்டி ஒன்று போகவேண்டுமென்றும் அதில் காந்திஜீ கலந்துகொள்ள வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. காந்திஜீ டில்லிக்கு வருமுன்னரே, தூதுகோஷ்டியார் வைசிராய்க்காக தயாரித்த மனு பத்திரத்தின் பிரதி யொன்று வைசிராய்க்கு அனுப்பப்பட்டது.

காந்திஜீ டில்லிக்கு வந்து சேர்ந்தார். இந்தப் பிரதியைப் படித்துப் பார்த்தார். அதன் வாசகங்களை, அவர் கடுமையாக ஆக்ஷேபித்தார். இந்தப் பிரதியை பல அம்சங்களில் மாற்றிவைக்கா விட்டால், தாம் தூதுகோஷ்டியில்

சேர்ந்து வரமுடியாது என்றும் சொல்லிவிட்டார். "இந்தப் பிரதி தெளிவான வாசகத்தில் அமைக்கப்படவில்லை, வார்த்தைகளை மட்டும் நிறையக் கொட்டியிருக்கிறீர்கள். குறைந்த பட்சமாக, இன்னதுதான் முஸ்லீம்களுக்கு பரிகாரம் தேவை என்பது இந்த மனுவில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இது எல்லா கட்சியார்களுக்கும் நியாயம் இல்லை: வைசிராய்க்கும் நியாயம் இல்லை ; பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் நியாயமில்லை ; பொது ஜனங்களுக்கும் தகாது ; தூது கோஷ்டியாகிய நமக்கும் சரியன்று. உங்களுடைய தேவைகளை மிகைப்படுத்திக் கூறி பின்னர் பலவற்றை வாபஸ் வாங்கிக்கொள்வதில் பயனில்லை. குறைந்ததைத் தெளிவாகச் சொல்லுங்கள். சந்தேகமறத் தெரிவியுங்கள். அது கிடைக்காவிட்டால், சாகும்வரையில் போராடித் தீருவோம் என்று உறுதி கொள்ளுங்கள். உங்களுக்கு கிலாபத் விஷயத்தில் அக்கரை இருக்குமாகில், இவ்வாறு செய்வதுதான் சரியான வழியாகும். கௌரவமான முறையாகும்" என்று காந்திஜீ அவர்களுக்கு யோசனை கூறினார்

இந்த வாத முறை மிகவும் புதிதாக விருந்தது. அரசியலிலும் சரி, வேறு கூட்டங்களிலும் சரி, இந்தியாவில் இந்த மாதிரியாரும் வாதம் செய்ததே இல்லை. மிகைப்படுத்திக் கூறுவதும் சொற்களால் ஆகாயப் பந்தல் போடுவதும் அக்காலத்தில் இந்தியர்களுக்கு வழக்கம். அதிகமாக் கேட்டு பேரம் பண்ணவேண்டு மென்பது அவர்களுடைய பழக்கம். ஆனால் காந்திஜீயோ தாம் பிடித்ததைச் சாதித்துவிட்டார். அவர் வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசிக்கு ஒரு கடிதம் எழுதினார். "ஏற்கனவே வைசிராய் அவர்களுக்கு, கிலாபத் கமிட்டியால் அனுப்பப்பெற்ற மனுவில், சில குறைகள் இருக்கின்றன. மனுவில் கண்ட வேறு சிலவிஷயங்களை தெளிவுபடுத்தவேண்டும்" என்று கடிதமெழுதி, இன்னும் சில பாராக்களைப்பத்திரத்தில் இணைத்து வைசிராய்க்கு அனுப்பிவிட்டார். இந்தப் பாராக்களிலேதான் கிலாபத் கமிட்டியின் குறைந்த தேவை குறிப்பிட்டிருந்தது. ஆனால் வைசிராயின் மறுமொழியோ மிகவும் விநோதமாயிருந்தது. புதிதாய் இணைக்கப்பட்ட பாராக்களை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார். முதலில் அனுப்பப்பெற்ற மனுவே ஒழுங்காய் இருக்கிறது என்று தாம் கருதுவதாக வைசிராய் பதிலெழுதிவிட்டார். இந்தக் கடிதத்தால் தம்முடையகருத்தும் நிலைமையும் கிலாபத்கமிட்

டியாரின் நோக்கமும் நிலைமையும் நன்ருகத் தெளிவுப் பட்டுப் போயின என்று காந்திஜீ அபிப்பிராயப் பட்டார். எனவே, அவர் தூது கோஷ்டியோடு சேர்ந்து சென்று வைசிராயைப் பேட்டி கண்டார். கிலாபத் கமிட்டியின் கோரிக்கைகளை அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது வெளிப்படையாயிற்று. எனவே போராட்டம் நேரப்போவதும் நிச்சயமென்று புலப்பட்டது. மௌல்விகளுக்குள்ளும், உலேமாக்களுக்குள்ளும் நீண்டகாலம் வாதங்கள் நிகழ்ந்தன. ஒத்துழையாமையைப்பற்றியும், அஹிம்ஸையைப்பற்றியும், அவர்கள் அலசி அலசிப் பேசினுர்கள். முக்கியமாக அஹிம்ஸையைப் பற்றித்தான் அவர்கள் மிகுதியும் வாதஞ் செய்தார்கள்.

"நான் தயாராய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். உங்களுடன் சேர்ந்து உழைக்க நான் தயார். ஆனல், நீங்கள் எல்லோரும் அஹிம்ஸைக் கொள்கையைப் பூரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மனதிலே யாதொரு கபட எண்ணமும் இருக்கக் கூடாது. அஹிம்ஸை முறையைக் குலைக்கும் வழி தேடக்கூடாது. அது பலாத்காரத்திற்கு முதற்படி யாகவும் எண்ணக் கூடாது" என்று காந்திஜீ வற்புறுத்திக் கூறினுர். காந்திஜீயின் இந்தக் கருத்தை மௌல்விகள் உணர்வது எளிதான காரியமல்ல. ஆனுல் கடைசியில் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். "அஹிம்ஸையை நாங்கள் ஒரு தற்கால உபாயமாகத்தான் ஏற்றுக்கொள்ள முடியும். நித்தியக் கொள்கையாக அதை ஏற்றுக் கொள்ள முடியாது. தர்மத்தை நிலைநிறுத்தபலாத்காரத்தை உபயோகப்படுத்த எங்கள் மதம் அனுமதி கொடுக்கிறது" என்றும அவர்கள் தெளிவு படுத்தி விட்டார்கள்.

கிலாபத் இயக்கமும் அரசியல் கிளர்ச்சி இயக்கமும் ஒன்றிற் கொன்று துணையாக நின்று விருத்தியடைந்து வந்தன. 1920-ம் ஆண்டில் அவைகளுடைய நோக்கமும குறியும் ஒரேபாதையில் சென்று வந்தன. காங்கிரஸ் காந்திஜீயின் சாத்வீக ஒத்துழையாமையை ஏற்றுக் கொண்டதும், ஒன்று சேர்ந்து வேலை செய்தன. முதலிலே கிலாபத் கமிட்டி இந்த் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. போராட்டத்தைத் துவக்குவதற்கு ஆகஸ்டு மாதம் முதல் தேதி குறிப்பிடப் பட்டிருந்தது.

இவ்வாண்டின் துவக்கத்திலேயே, இந்தத்திட்டத்தைப் பற்றி ஆலோசிக்க அலகாபாத்தில் முஸ்லிம்கள் கூடினார்கள். அது முஸ்லிம் லீக்கின் நிர்வாக சபைக் கூட்டமென்று நான் நினைக்கிறேன். சையது ரஸா அலி அவர்களின் வீட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது, மௌலானா முகமது அலி ஐரோப்பாவிலிருந்தார். ஷௌக்கத் அலி அவர்கள் கூட்டத்தில் ஆஜராயிருந்தார். இந்தக் கூட்டம் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ஏனெனில், அந்தக் கூட்டத்தினால் நான் அதிக ஏமாற்ற மடைந்தேன்.

ஷௌக்கத் அலி அவர்கள் மட்டும் உற்சாகம் நிறைந்திருந்தார். ஆனால் மற்றவர்கள் முகத்திலே ஈயாடவில்லை. அவர்கள் இந்தத் திட்டத்தை எதிர்த்துப் பேச தைரியங் கொள்ளவில்லை. ஆனால் எதையும் சாகஸமாகச் செய்வதற்கும் அவர்கள் தைரியங்கொள்ளவில்லை. "இவர்களா புரட்சி இயக்கத்தை நடத்தப் போகிறார்கள்? ஆங்கில சாம்ராஜ்யத்தை எதிர்க்கப் போகிறார்கள்?" என்று நான் ஏங்கினேன்.

காந்திஜீ பேசினார். அதைக் கேட்ட பிறகு, அவர்கள் இன்னும் அதிகமாகத் திகிலடைந்து போனார்கள். காந்திஜீ தனது இயற்கையான கம்பீரத்தோடு பேசினார். மிகவும் நேர்த்தியாகவும் அடக்கத்துடனும், தெளிவாகவும் பேசினார். ஆனால் அப்பேச்சின் நடுவில் வைரத்தைப்போன்ற உறுதியும் பிரகாசித்தது. பதட்டமின்றி இனிமையாகப் பேசினார். ஆனால், அவர் சொற்களில் அஞ்சா நெஞ்சமும், அடங்கா ஆத்திரமும் ஜொலித்தன. சாதாரணமாக, அவருடைய கண்களில் ஆழ்ந்த அமைதி குடிகொண்டிருந்தது. இப்பொழுது அவைகளி லிருந்து வீர சக்திப்பொறிகள் பறந்தன.

"இனி ஒரு பெரிய போராட்டம். அற்ப சொற்பமாக நினைத்து விடவேண்டாம். எதிரியோ மகத்தான வல்லமை பொருந்தியவன். போராட்டத்தை ஏற்று நடத்துவதாயிருந்தால், எல்லாவற்றையும் இழக்க நீங்கள் தயாராய் இருக்க வேண்டும். கடுமையான கட்டுப்பாட்டுக்கும், கலப்பற்ற சாத்வீகத்துக்கும் நீங்கள் அடிமைகளாக வேண்டும். யுத்தம் நேர்ந்து விட்டால், இராணுவ அதிகாரம் அமுலுக்கு வந்து விடும். நம்முடைய சாத்வீகப் போரிலும் ஜெயமடைவதற்கு சர்வாதிகாரமும் இராணுவ அமுலும் ஏற்பட வேண்டிவரும். என்னை உதறித் தள்ளிவிட உங்களுக்கு உரிமையுண்டு. எந்த நேரத்திலோ, எந்த வகையிலோ உங்களுக்குத் தோன்றுகிற

பிரகாரம் எனக்குத் தண்டனை யளிக்க உங்களுக்குப் பாத்தியம் உண்டு. வேண்டுமானால், என் தலையையும் நீங்கள் கேட்கலாம். ஆனால், என்னை நீங்கள் தலைவராகத் தேர்ந்து எடுத்துவிட்டால், அதன் பின்னர், நான் சொல்லும் நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். என் சர்வாதிகாரத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இராணுவ அமுலுக்கு அடங்கி நடக்கவேண்டும். நீங்கள் எந்தக் காலம் வரையிலும் மனப்பூர்வமாக அதை ஒப்புக்கொண்டு, என்னோடு ஒத்துழைக்கிறீர்களோ, அந்தக்காலம் வரையிலும்தான் என்னுடைய சர்வாதிகாரமும் நிலைத்திருக்க முடியும். நான் தேவையில்லையென்று உங்களுக்கு எந்த நிமிஷம் தோன்றுகிறதோ, என்னைத் தூக்கி எறிந்து விட்டு மிதித்துத் தள்ளிவிடுங்கள். அதற்காக நான் வருத்தப்படமாட்டேன்" என்று காந்திஜீ சொன்னதாக என்னுடைய ஞாபகம்.

அவரது பிரசங்கத்தி னிடையே காணப்பட்ட இராணுவ உவமைகளாலும் அவருடைய அளவில்லா மன உறுதியாலும் அவரைக் கேட்டவர்களின் உள்ளம் குழைந்துபோயிற்று. உடல் நடுங்கிற்று. ஆனால் மௌலானா ஷவுகத் அலியோ, அவர்களுக்கு உற்சாகம் ஊட்டி, தயங்கினவர்களைச் சரிப்படுத்தி விட்டார். வோட் எடுக்கும் சமயத்தில், பெரும்பான்மையோர் மௌனமாகத் தலை குனிந்துகொண்டு இந்தத் திட்டத்துக்கு சாதகமாக வோட் செய்தார்கள். எவ்வித் யுத்த வீரர்கள்!

கூட்டத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பி வருகையில், காந்திஜீயை நான் "ஒரு பெரிய போராட்டத்தை இப்படித்தான் துவக்குகிறதோ" என்று கேட்டேன். கூட்டத்திலே உற்சாகத்தையும் ரோஷத்தையும் கண்களில் தீப்பொறிகளையும் எதிர்பார்த்திருந்தேன். ஆனால் நான் கண்ட தென்ன? அங்கு வந்திருந்தவர்களோ திடசித்தமில்லாத நடுத்தர வயதுள்ள புருஷர்கள். என்றாலும் இவர்கள் ஏன் சத்தியாக்கிரகப்போருக்கு சாதகமாக வோட் செய்தார்கள்? தேசத்திலே அப்பொழுது பொதுஜனக் கொதிப்பு அவ்வளவு தீவிரமாகவிருந்தது. முஸ்லிம் லீக்கைச்சேர்ந்த பெரும்பான்மையோர் போராட்டத்தில் கலந்துகொள்ளாமல் மெதுவாக நழுவி விட்டார்கள். அவர்களிற் பலருக்கு அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்கள் கிடைத்தன. எந்தக்காலத்திலும் முஸ்லிம்களுக்கு இந்த முஸ்லிம் லீக் பிரதிநிதி ஸ்தாபனமல்ல என்

பதை நிச்சயமாகச் சொல்லலாம். 1920-ம் வருஷம் அமைக்கப்பெற்ற கிலாபத் கமிட்டிக்கு வல்லமையும் ஏராளமான செல்வாக்கும் இருந்தது. இந்தக் கமிட்டிதான் போராட்டத்தில் புகுந்து உற்சாகத்துடன் அதை நடத்திவந்தது.

ஆகஸ்ட் மாதம் ஒன்றாந் தேதியன்று காந்திஜீ ஒத்துழையாமைத் திட்டத்தை ஆரம்பிக்க நிச்சயம் செய்திருந்தார். அத்திட்டத்தைக் காங்கிரஸ் இன்னும் இதுவரை ஏற்கவில்லை. ஆனாலும் தன் சொந்தப்பொறுப்பில் அதைத்துவக்கத் தீர்மானித்திருந்தார். அன்றைக்குத்தான் பம்பாயில் லோகமான்ய திலகர் மறைந்துபோனார். அன்றுகாலையில் காந்திஜீ சிந்துமாகாணத்தில் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு பம்பாய் வந்துசேர்ந்தார். நான் அவருடன் இருந்தேன். திலகரிடம் ஜனங்களுக்கு இருந்த பேரன்பை உலகிற்கு விளக்கி, பம்பாய் வாசிகளான பத்து லக்ஷம் ஜனங்களும் அவர் பிரேதத்தைப் பின் தொடர்ந்து சென்றார்கள். இந்த மகத்தான ஊர்வலத்தில் நாங்களும் கலந்துகொண்டோம்.

## நான் கடத்தப்பட்டதும் அதன் விளைவுகளும்

இதர நடுத்தர வகுப்பினர் கொண்டுள்ள மனப்பான்மை தான் எனக்கும் அந்தக்காலத்தில் அரசியலில் இருந்துவந்தது. மிதவாதிகளா யிருந்தாலும் சரி தீவிரவாதிகளா யிருந்தாலும் எல்லா அரசியல் வாதிகளும் இவ்வகுப்பாரின் பிரதிநிதிகளாக விருந்தனர். இவ்வகுப்பின் முன்னேற்றத்தையே கோறினர். இன்னும் அப்படியேதான். மிதவாதிகள் ஆங்கில ஆட்சியால் செழிப்படைந்து பணம்பெற்ற நடுத்தர வகுப்பினரின் பிரதிநிதிகள். திடீரென்று புதிய சமூக மாறுதல்கள் ஏற்பட்டால் இக்கூட்டத்தார் நஷ்டமடையக் கூடுமென்று அவற்றை எதிர்த்தார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தோடு நெருக்கம் அதிகம். பெரிய நிலச்சுவான்தார் களுடனும் அவர்களுக்கு நெருங்கிய சம்பந்தமுண்டு.

ஆனால் தீவிர வாதிகளோ ஏழைகளான நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகள். போருக்குப் பிறகு தொழிற்சாலைத் தொழிலாளிகளின்தொகை அதிகரித்துக் கொண்டுவந்தது. அவர்கள் சிற்சில விடங்களில்தான் சங்கங் களிற் சேர்ந்து கட்டுப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு அரசியலில் செல்வாக்கு இல்லை. விவசாயஞ் செய்யும் குடியானவர்களோ தரித்திரத்திலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்தார்கள். ஆறாத்துயரத்தில் ஆழ்ந்து கிடப்பவர்கள். அவர்கள் தங்களுடையதிக்கற்றவாழ்க்கை விதியின்பயன் என்றெண்ணி சகித்துக்கொண்டிருந்தனர். அரசாங்கத்தார், மிராசுதார்கள், வட்டி லேவாதேவிக்காரர்கள், சில்லரை உத்தியோகஸ்தர்கள்; போலீஸ்காரர்கள், வக்கீல்கள், புரோகிதர்கள் முதலிய எல்லோரும் இக்குடியானவர்களை ஏமாற்றிக் கசக்கிப் பிழிந்து ஜீவித்து வந்தனர்.

பத்திரிகைகளைத் திறந்து பார்த்தால், கோடிக்கணக்கில் இந்தியாவில் வாழ்ந்துவரும் குடியானவர்களைப்பற்றி ஒரு செய்தியையும் பார்க்கமுடியாது. அந்த மாதிரி பெரியதொரு கூட்டம் இந்தியாவில் இருப்பதாகவே தெரியாது. இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களால் நடத்தப்பெறும் பத்திரிகைகளிலே

உயர்ந்த உத்தியோகஸ்தர்களைப்பற்றிச் செய்திகள்தான் நிரம்பியிருக்கும். பெரிய நகரங்களிலும் சுகாதார ஸ்தலங்களாக அமைந்திருக்கும் மலை இடங்களிலும் "கச்சேரிகள்" நடந்ததாகவும், விருந்துகளும், நாடகங்களும் நடைபெற்றதாகவும், கற்பனை உடைகள் தரித்து "டான்ஸ்" ஆடினதாகவும், ஆங்கில வாழ்க்கையைப்பற்றி அந்த பத்திரிகைகளில் நீண்ட செய்திகள் வரும். இந்தியச் செய்திகளையே அந்தப் பத்திரிகைகளில் காணமுடியாது. பொதுவாக இந்தியர்களின் நோக்கம் இதுதானென்று அந்தப் பத்திரிகைகளினின்றும் தெரிந்துகொள்ள முடியாது. காங்கிரஸ் நடந்தாலும், அதைப் பற்றிப் பத்திரிகையில் ஒரு மூலையில் இரண்டொரு வரிகளைத் தான் காணலாம். காங்கிரஸை இந்தியன் எவனுவது மதிப்புக் குறைவாகப் பேசினுலும், அல்லது திட்டினுலும் அதை இந்தப்பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் பிரசுரஞ் செய்யும். மற்றப்படி இந்தியாவில் நடைபெறும் பெரிய நிகழ்ச்சிகளைக் கூட இவைகள் செய்திகளாகக் கருதுவதில்லை. சில சமயங்களில் வேலை நிறுத்தத்தைப்பற்றி இரண்டொரு குறிப்புகள் சுருக்கமாகக் காணப்படும். ஏதாவது கலகம் நடந்தாலொழிய கிராமங்களைப்பற்றி இந்தப் பத்திரிகைகளில் பேச்சு மூச்சே இருக்காது.

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் நடத்திய பத்திரிகைகளின் தோரணையைப் பின்பற்றியே இந்தியர்களும் தங்கள் பத்திரிகைகளை நடத்திவந்தார்கள். ஆனுல் தேசீய இயக்கத்துக்கு அவர்கள் அதிகமான சிறப்பு காண்பித்தார்கள். இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கிடைக்கவேண்டுமென்பதைப் பற்றித்தான், இந்தப் பத்திரிகைகள் அதிகமாகச் சிரத்தை காட்டின. யாராவது ஒரு உத்தியோகஸ்தர் மாற்றப்பட்டால், அல்லது அவருக்கும் மேல்பதவி கிடைத்தால் அவருக்கு விருந்து நடைபெறும். அதில் "மிகுந்த உற்சாகம் காணப்பட்டது" என்று இந்தப் பத்திரிகைகளில் பிரசுரமாவது வழக்கம். நிலங்களுக்குப் புதிய செட்டில்மெண்டு (வரி நிர்ணய ஏற்பாடு) ஏற்படும் காலத்தில், அநேகமாகப் பழையவரியை, அரசாங்கத்தார் அதிகப் படுத்திவிடுவார்கள். இந்த ஏற்பாட்டினுல் மிராசுதார்களுக்கு அதிக நஷ்டம் உண்டாகும் என்று இந்தப்பத்திரிகைகள் கிளர்ச்சி செய்து சத்தம் போடும். ஆனுல் ஏழைக் குடியானவனைப்பற்றி ஒருவரும் கவலைப்பட்டதேயில்லை. இந்தப் பத்திரிகைகளின் சொந்தக்

காரர்கள் பெரும்பாலும் முதலாளிகளும் பெரிய-நிலச்சுவான் தார்களும் இருப்பார்கள். 'தேசீயப் பத்திரிகைகள் என்று இவைகள்தான் அழைக்கப்பட்டன. எப்படியாவது மிராசு தார்களின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற கருத் துக்கொண்டு, நடுத்தர வகுப்பார்கள் நிறைந்திருந்த காங்கிரஸ், பண்டைய நாட்களில் மற்ற லக்ஷ்யங்களுக்குள், ஒரு சீர்திருத் தத்துக்காக வலுவாக கிளர்ச்சி செய்துவந்தது. நிலவரி நிர்ணயிப்பதில் அரசாங்கத்தார் அடிக்கடி திட்டத்தை மாற் றிக்கொண்டே போகக்கூடாது என்றும் சாசுவதமாகத் திட் டம் ஒன்றைப் பைசல் செய்துவைத்து விடவேண்டுமென்றும் காங்கிரஸ் கிளர்ச்சிசெய்தது. ஆனால் குடியானவர்களைப் பற்றி யாதொன்றும் பேசுவதில்லை.

சென்ற 20 வருடங்களுக்குள் தேசீய இயக்கத்தின் வளர்ச்சியால் இந்நிலை பெரிதும் மாறிவிட்டது. இங்கிலீஷ் காரர்களுக்குச் சொந்தமான பத்திரிகைகள்கூட இந்திய சந்தாதார்கள் குறையாமலிருக்கவேண்டி, அவைகளும் இந்திய அரசியல் பிரச்னைகளுக்கு அதிகமாக இடஞ் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும் அவை கள் தங்களுக்கு ஏற்ற முறைகளிலேதான் இதைச் செய்கின் றன. இந்தியப் பத்திரிகைகளுக்கு இன்னும் கொஞ்சம் பரந்த நோக்கம் ஏற்பட்டுவிட்டது. அவைகள் தொழிலாளிகளைப் பற்றியும், குடியானவர்களைப்பற்றியும் கருணையோடு பேசு கின்றன. அப்படிப் பேசுவதுதான் இக்காலத்தில் அழகென்று எண்ணப்படுவதல்லாமல், தொழிற்சாலை, கிராமம் இவை சம் பந்தமான பிரச்னைகளில், பத்திரிகை படிப்பவர்களுக்கு அதிக மான சிரத்தை ஏற்பட்டு விட்டதால் இந்தியப் பத்திரிகைகள் இவ்விஷயங்களில் கவனம் செலுத்துகின்றன. என்றாலும் அவைகளுக்குத் தங்கள் சொந்தக் காரர்களான இந்திய முத லாளிகளின், மிராசுதார்களின் லாபத்திலேதான் திருஷ்டி. அவர்களுடைய நலங்களையும் உரிமைகளையும் பற்றித்தான் மிகைப்படுத்தி எழுதும்.

இந்திய சமஸ்தானாதிபதிகளிற் பலர், சில பத்திரிகை களுக்கு முதல்கொடுத்து உதவியிருக்கிறார்கள். கொடுத்த பணத்துக்கீடாக, அவர்கள் பத்திரிகைகளிடமிருந்து போதிய பிரதிப்பிரயோசனம் பெற்று விடுகிறார்கள். என்றாலும் இந்தப் பத்திரிகைகளில் பலவற்றிற்கு 'காங்கிரஸ் பத்திரிகைகள்' என்றும் பெயர்! வேடிக்கை என்னவெனில், இந்தப்பத்திரிகை

களில் பலவற்றை நடத்திவரும் அன்பர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களாகக் கூட இருக்கமாட்டார்கள். ஆனால், தேசத்திலே காங்கிரஸ் என்றசொல்லுக்கு அபரிமிதமாக செல்வாக்கு ஏற்பட்டுவிட்டதைக் கண்டு, தனி நபர்களும் கூட்டத்தார்களும் தங்கள் தங்கள் லாபத்துக்காக அந்தப்பெயரை உபயோகப்படுத்திக்கொள்ள துணிந்துவிட்டார்கள். உண்மையாகத் தீவிரக் கொள்கைகளைப் பிரசாரம்செய்யத் துணிந்த பத்திரிகைகளோ கொடிய அச்சுச் சட்டங்களுக்கு இலக்காகி அபராதத்திற்கும், அடக்குமுறைக்கும் சதா பயந்து காலங் கழிக்கின்றன.

1920-ம் ஆண்டில் தொழிற்சாலைகளிலும் கழனிகளிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நிலைமையைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அப்பொழுது நடுத்தர வகுப்பார்களின் அரசியல் மனப்பான்மைதான் என்னுள்ளத்தில் முற்றிலும் கொண்டிருந்தது. தொழிலாளிகள் சொல்லொணாத வறுமையில் ஆழ்ந்து துயரப்படுகிறார்கள் என்று எனக்குத்தெரியும். இந்தியா விடுதலையடைந்தபிறகு, முதன்முதலில் இந்தப்பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்று நான் உணர்ந்தேன். ஆனால், ஆங்கில ஆட்சிக்கு அடுத்தபடியாக, இந்தியாவில் நேரக்கூடியது இந்திய நடுத்தர வகுப்பார்களின் ஆட்சிதானென்று எனக்குத் தோன்றிற்று.

பீஹார் மாகாணத்தில் சம்பரானிலும் குஜராத்தில் காய்ராவிலும் காந்திஜீ நடத்திவந்த குடியானவர்களின் இயக்கங்களுக்குப் பின்னர், நான் குடியானவர்களைப்பற்றி அதிகமாகக்கவனம் செலுத்தத் தொடங்கினேன். ஆயினும் 1920-ம் ஆண்டில் தோன்றிய அரசியல் எழுச்சிகளிலும், ஜோதியுடன் உதயமாகிக்கொண்டிருந்த ஒத்துழையாமையிலும் என் முழு கவனமும் சென்றது.

இந்தச் சமயத்தில் என்னுடைய வாழ்க்கையில் புதிதான ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. அதனால் என்னுடைய வாழ்க்கையே பெரும்பாலும் மாறிவிட்டதென்று சொல்லலாம். என்னை மீறியே நான் குடியானவர்களோடு கலந்துகொள்ளும் படியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. சந்தர்ப்பம் உண்டான வழி விநோதமானது. என்னுடைய மனைவி கமலாவும் என்னுடைய தாயாரும் சுகவீனமடைந்தார்கள். 1920-ம் வருடம் மே மாதத் துவக்கத்தில்,நான் அவர்களை முசோரிக்கு அழைத்துச் சென்றேன். தகப்பனாருக்கு வேலை ஜாஸ்தி. மும்மு

மாகப் பெரிய சமஸ்தான வழக்கொன்றை நடத்திக்கொண்டிருந்தார். எதிர்க்கட்சிக்கு வக்கீல் தேசபந்து சித்தரஞ்சன தாஸ். தாயாரும் மனைவியும் நானும் முசோரியில் சவாய் ஹோட்டலில் தங்கியிருந்தோம்.

அமானுல்லா அவர்கள் ஆப்கானிஸ்தானத்துச் சிங்காதனம் ஏறியவுடன், இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கும் போர் நிகழ்ந்தது. அந்தப் போர் முடிந்து, சமாதானத்துக்குத் துவக்கியவுடயன், ஆப்கன் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும முசோரியில் கூடி சமரஸ நிபந்தனைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆப்கன் கோஷ்டியார் அப்பொழுது அதே சவாய் ஹோட்டலில் தங்கியிருந்தனர். அவர்கள் அந்நியர்களோடு கலக்கவில்லை. தனிமையாகவே இருந்தார்கள். தனிக்கோஷ்டியாக உண்டார்கள். பொது அறைகளுக்கு அவர்கள் வந்ததும் இல்லை. அவர்களிடம் சிறப்பாக எனக்கு யாதொரு சிரத்தையும் ஏற்படவில்லை. ஒரு மாத காலம்வரை, இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த யாரையும நான் கண்டதே இல்லை. அகஸ்மாத்தாகக் கண்டபோதிலும், உரையாடியதும் இல்லை. திடீரென்று ஒரு நாள் மாலை, போலீஸ் சூப்பிரண்டு என்னிடம் வந்தார். அவர் என்னிடம் ஒரு கடிதத்தைக் காண்பித்தார். அது மாகாண அரசாங்கத்தாரிடமிருந்துவந்த தாக்கீது! ஆப்கன் தூதுகோஷ்டியாருடன் யாதொரு உறவும் வைத்துக்கொள்வதில்லை என்று நான் அரசாங்கத்துக்கு உறுதிமொழி, எழுதிக்கொடுக்க வேண்டுமென்று உத்திரவு காணப்பட்டது.

எனக்கு இது வெகு ஆச்சரியமாக யிருந்தது. நான் தங்கியிருந்த ஒரு மாத காலத்தில், ஆப்கன் பிரதிநிதிகளைப் பார்த்ததுமில்லை. இனிப் பார்க்கவும் நேராது. ஆப்கன் கோஷ்டியாரை இந்திய உளவுப் போலிஸ் மூலமாக, அரசாங்கத்தார் கடுமையாகக் கண்காணித்து வந்ததால், நான் ஆப்கன் பிரதிநிதிகளோடு பேசினதில்லை என்பது போலிஸ் சூப்ரண்டுக்கு, நன்றாகத்தெரியும். ஆனால் ஒப்பந்தம் எழுதிக் கொடுப்பது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆகவே, சூப்ரண்டிடம் அவ்வாறு சொல்லிவிட்டேன். ஜில்லா மாஜிஸ்டிரேட்டை நான் பார்க்குமாறு, அவர் என்னை வேண்டிக்கொண்டார். நான் பார்த்தேன், ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க, நான் மறுத்தபடியால், "டேராடூன் ஜில்லாவை விட்டு 24 மணி நேரத்தில் நீங்கள் வெளியே போகவேண்டும்"

என்று என்பேரில் ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்திரவொன்றைச் சாதராசெய்தார். அதாவது இரண்டொரு மணி நேரத்துக்குள் நான் முசோரியை விட்டுப் போய்விடவேண்டும். சுகவீனமாயிருக்கும் தாயாரையும் மனைவியையும் விட்டுவிட்டுப் போக, எனக்குத் துணியவில்லை. இருந்தாலும் உத்தரவை மீறி நடப்பது சரியென்றும் தோன்றவில்லை. அச்சமயம் சட்டமறுப்பு தொடங்கவில்லை. எனவே, நான் மட்டும் முசோரியை விட்டு, அலகாபாத்துக்கு வந்து சேர்ந்தேன்.

ஐக்கிய மாகாணங்களுக்கு அப்பொழுது கவர்னராக இருந்தவர் ஸர் ஹார்கோர்ட் பட்லர். அவரைத் தகப்பனருக்கு நன்முகத் தெரியும். நட்பு முறையில் அவருக்குத் தகப்பனர் ஒரு கடிதம் எழுதினர். "இப்பேர்ப்பட்ட முட்டாள்தனமான உத்தரவைத் தாங்கள் பிறப்பித்திருக்க மாட்டீர்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். சிம்லாவிலிருக்கும் யாரோ ஒரு புத்திசாலிக்குத்தான் இந்த கற்பனை உதயமாகி இருக்கவேண்டும் என நான் நினைக்கிறேன்" என்று தகப்பனர் கவர்னருக்குக் கடிதம் எழுதினர். அதற்கு ஹார்கோர்ட் பட்லர், "இந்த உத்தரவு ரொம்ப சாதுவான உத்தரவாகும். ஜவஹர்லால் அதற்கிணங்கி நடந்திருக்கலாம். அதனாலே அவருடைய கௌரவம் கொஞ்சங்கூடச் சிதைந்து போயிருக்காது" என்று பதிலெழுதினர். கவர்னர் எழுதிய சமாதானத்தைத் தகப்பனர் ஏற்கவில்லை. "உத்தரவை வேண்டுமென்றே மீறவேண்டும் என ஜவஹருக்கு எண்ணமில்லை. ஆனல் தன் தாயாருக்கோ, மனைவிக்கோ உடம்பு கேவலமாகப் போய்விட்டால், அவன் நிச்சயமாக முசோரிக்குத் திரும்பிப்போவான். உத்தரவு இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி கவலைப்படப் போவதே இல்லை" என்று தகப்பனர் பதிலெழுதிவிட்டார். தாயாருடைய உடல் நிலை கேவலமாகிக்கொண்டே வந்தது; எனவே தகப்பனரும் நானும் முசோரிக்குப் புறப்பட்டோம். புறப்பட்டுக்கொண்டிருக்கையில் தடையுத்தரவு ரத்துச் செய்யப்பட்டதாக எங்களுக்குத் தந்தி கிடைத்தது.

அடுத்த நாள் காலையில், நாங்கள் முசோரிக்குப் போய்ச் சேர்ந்தோம். ஹோட்டல் வாயற்படியில் முதன்முதலாக நாங்கள் பார்த்தது ஒரு ஆப்கானியரைத்தான். அவர் என்னுடைய குழந்தை இந்திராவைத் தூக்கி மார்பில் அணைத்து வைத்துக்கொண்டிருந்தார். அவர் ஒரு மந்திரி

யென்றும், ஆப்கானிய் கோஷ்டியில் ஒரு அங்கத்தினரென்றும் எனக்குத் தெரிந்தது. நான் முசேரியில் இருக்கக்கூடாது என்ற உத்தரவை இவர்கள் பத்திரிகைகளில் படித்தார்களாம். அதைப் படித்ததும், அவர்களுக்கு எங்கள் குடும்பத்தினிடம் மிகுந்த அக்கரையும் அனுதாபமும் ஏற்பட்டதாம். அவர்கள் தினமும் பழங்களும் பூக்களும் தாயாருக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்களாம். ஆப்கானியப் பிரதிநிதிகளில் ஒருவரைப் பின்னர் தகப்பனாரும் நானும் சந்தித்தோம். "நீங்கள் ஆப்கானிஸ்தானத்துக்கு வரவேண்டும்" என்று எங்களை அவர்கள் மிகுந்த பரிவுடன் வேண்டிக்கொண்டார்கள். இந்த அன்புநிறைந்த அழைப்புக் கிணங்கி, ஆப்கானிஸ்தானத்துக்குச் செல்ல எங்களால் முடியவில்லை. இப்பொழுதிருக்கும் புதிய ஆப்கானிய அரசாட்சிக் காலத்திலும் அந்த அழைப்பு செல்லுமோ என்பது எனக்குத் தெரியாது.

முசோரியைவிட்டு, வெளியே போக உத்தரவு பிறப்பித்ததன் பயனாக, நான் அலகாபாத்தில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தேன். அந்தக் காலத்திலே தான், நான் குடியானவர்களின் இயக்கத்தில் சிக்கிக்கொள்ளநேர்ந்தது. இந்த உறவு கொஞ்சம் கொஞ்சமாக நாளடைவில் விருத்தியாகி, என்னுடைய மனப்போக்கை பெரிதும் மாற்றிவிட்டது. முசோரியிலே தடையுத்தரவு பிறக்காமலிருந்து, அலகாபாத்துக்கு, நான் வராமலிருந்திருந்தால், என்ன நேர்ந்திருக்கும் என்று நான் யோசித்துப்பார்ப்பதுண்டு. குடியானவர்களியக்கத்தில் நிச்சயமாகக் கலந்துகொண்டுதான் இருப்பேன். கலந்து கொள்ளும் காலமும், வகையும் வேறு மாதிரியாக போயிருக்கலாம். அதனால் என்னிடம், ஏற்பட்ட மாறுதல்களும் வேறு விதமாக விருந்திருக்கும்.

1920-ம் வருஷம் ஜூன்மாதம் ஆரம்பம்; பிரதாப்கர் ஜில்லாவின் நடுமத்தியிலிருந்து, சுமார் 200 குடியானவர்கள் 50 மைல் நடந்து அலகாபாத்துக்கு வந்துசேர்ந்தார்கள். தங்களுடைய திக்கற்ற நிலைமையை, பிரமுகர்களான அரசியல் வாதிகளிடம் முறையிட்டுக்கொண்டு, பரிகாரம் அடைவதற்காக அவர்கள் வந்தார்கள். அவர்களுக்குத் தலைவராக இருந்தவரின் பெயர் ராமச்சந்திரா. அவர் பிர்தாப்கர் ஜில்லா குடியானவரல்ல இந்த 200 பேரும் யமுனைநதிக்கரையிலே உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டு, சில நண்பர்களுடன் அவர்களைப் போய்ப்பார்த்தேன். "ஜமீன்

தார்கள் எங்களை எப்படி நசுக்குகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் எங்களை விலங்குகளைப்போல நடத்துகிறார்கள். இனி எங்கள் நிலைமை சகிக்க முடியாது. எங்களுடன் வாருங்கள். விசாரித்துப்பாருங்கள். நாங்கள் அலகாபாத்துக்குவந்து உங்களிடம் முறையிட்டுக்கொண்டதற்காக, ஜமீன்தார்கள் ஆத்திரத்துடன் இருக்கிறார்கள். அவர்களுடைய கொடுமையினின்றும் எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று பரிதாபத்துடன் அவர்கள் எங்களை வேண்டிக்கொண்டார்கள். "எங்களால் ஒன்றும் ஆகாது" என்று சொல்லிப்பார்த்தோம். அதை ஏற்க அவர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்கள் எங்களை ஒரேபிடியாகப் பிடித்துக்கொண்டார்கள். இரண்டுமூன்று நாட்களுக்குப் பிறகு, அவர்களுடைய ஊருக்கு வருவதாக நான் கடைசியில் வாக்குக்கொடுத்தேன்.

சில நண்பர்களோடு நான் அங்கு சென்றேன். ரயிலுக்கு வெகு தூரத்திலுள்ள கிராமங்களுக்குப் போனோம். நல்ல பாதை கிடையாது. மூன்று நாட்கள் இந்தக் கிராமங்களில் தங்கியிருந்தோம். அவற்றின் நிலைமையைக் கண்டு திடுக்குற்றுக் கண் விழித்தேன். இந்த நாட்டுப்புறங்களில் ஓர் புதிய உற்சாகமும், விநோதமான பரபரப்பும் இருப்பதை நாங்கள் கண்டோம். ஒரு வார்த்தை சொல்லியனுப்பினால் போதும்; சிறிது நேரத்திற்கெல்லாம் ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடிவிடுவார்கள். ஒரு கிராமம் அடுத்த கிராமத்துக்குச் செய்தியனுப்பும். அடுத்த கிராமம் அதற்கடுத்த கிராமத்துக்கு; இப்படியே செய்தி சொல்லியனுப்பி, கிராமங்கள் எல்லாம் திரண்டு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் சேர்ந்து வயல்களின் மார்க்கமாக, மகாநாடு கூடும் இடத்துக்கு வந்து சேர்ந்துவிடுவார்கள். அவர்கள் வரும்போது, ஒவ்வொரு ஊரிலும் "சீதாராம்" என்று உரக்கச் சத்தம் போடுவார்கள். இதைக் கேட்டு மற்றக் கிராமங்களிலிருந்து அவர்களும் "சீதாராம்" போடுவார்கள். பிறகு திரள் திரளாக ஜனங்கள் வருவார்கள். சில சமயம் வேகமாக ஓடியும் வருவார்கள். அவர்கள் உடுத்தியிருந்தது கந்தைத் துணிகள்தான். ஆனால் அவர்களுடைய முகங்களிலே ஒரு விதவெறி உற்சாகம் குடிகொண்டிருந்தது. அவர்களுடைய விழிகளில் ஒளி மிகுந்து நின்றது. ஏதோ மாயா வித்தையால் தங்களுடைய நீண்ட கால வறுமை ஒழியப் போகிறதென்று

அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டு வந்ததாகத் தோன்றிற்று.

அவர்கள் தங்களது அன்பை எங்கள்பேரில் சொரிந்தார்கள். நாங்கள் அவர்களுக்கு நல்ல செய்தி கொண்டு வந்திருப்பவர்கள் போல, எங்களைப் பாவித்து சந்தோஷமடைந்தார்கள். அவர்களுடைய விடுதலைக்கு வழி காட்டும் தோழர்கள் நாங்கள்தானென்று எங்களை மதித்தார்கள். அவர்களுடைய வறுமையையும், வழிந்தோடும் அன்புப் பெருக்கையும் நான் பார்த்து வெட்கி மனமுருகிப்போனேன். பாதி நிர்வாணமாக இருக்கும் இந்தியாவின் இந்தப்புதல்வர்களையும்,புதல்விகளையும் அலட்சியம் செய்து, நகரத்தில் நான் செய்து வரும் உல்லாஸ வாழ்க்கையும், எனது அரசியலில் கிளர்ச்சியின் அல்ப லக்ஷியங்களையும் நினைத்துத் தலை குனிந்தேன். பாரதத் தாயின் கொடிய வறுமையையும், சீரழிந்த நிலையையும் கண்டு துக்கித்தேன். என் கண் முன்னே, இந்தியா புதிய உருவெடுத்துத் தோன்றிற்று. நிர்வாணமும், துன்பமும், வறுமையும், திக்கற்ற நிலைமையும் சூழ்ந்து பரந்து கிடக்கும் இந்தியாவின் காட்சியைக் கண்டேன். குடியானவர்கள் எங்களிடம் காண்பித்த அன்பினாலும், நம்பிக்கையாலும் நான் திகைப்படைந்து போனேன். இதனால் என் மனதிலே புதியதொரு பொறுப்பு தோன்றிற்று. அந்த பொறுப்பைத் தாங்க முடியுமோவென்று நான் திகிலடைந்து போனேன்.

குடியானவர்களுடைய துயரங்களை சாங்கோபாங்கமாகக் கேட்டேன். அவர்களை அழுத்தி, அவர்களுக்கு விமோசனமில்லாமல் அடிக்கும் குத்தகை, சட்டத்துக்கு மீறி அவர்களிடமிருந்து வசூல் செய்யப்படும் வர்த்தனைகள், பயிர் செய்யும் நிலத்திலிருந்து அவர்களைத் துரத்தி யடித்தல், அவர்களுடைய மண் குடிசைகள், அவர்களை அடித்து ஹிம்ஸை செய்தல், இத்தகைய கொடுமையான வரலாறுகளை, அவர்களிடமிருந்து தெரிந்துகொண்டேன். அவர்களைச் சுற்றி நாலா பக்கங்களிலும் அநேக கழுகுகள் கொத்திப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தன. ஜமீன்தாரின் ஏஜெண்டுகள், வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள், போலிஸ்காரர்கள் முதலியோர் இவர்களின் இரத்தத்தைக் குடித்துக்கொண்டிருந்தனர். குடியானவர்கள் நாள் முழுதும் சலிக்காமல் உழைத்தும் முடிவு என்ன ? தாம் பயிர் செய்ததில், ஒன்றும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. உதைகள், சாபங்கள், பட்டினி வயிறு இவ்வ

கள்தான் வேலையின் கூலியாகக் கிடைத்தன. கூட்டத்திற்கு வந்திருந்த பலருக்கு சொந்த நிலம் கிடையாது. அவர்கள் பயிர் செய்த நிலங்களிலிருந்து, முதலாளிகளால் தள்ளப்பட்டு விட்டார்கள். குடியிருக்கக் குடிசையும், பயிர் செய்யும் நில மும் அவர்களுக்குக் கிடையாது. நிலம் செழிப்பானதுதான்; ஆனால் அதற்காக செலுத்த வேண்டிய கட்டணமோ மிகவும் பளுவானது. பயிர் செய்யப்பட்ட நிலங்கள் சிறு சிறு துண் டுகளாக இருந்தன. இந்தத் துண்டுகளுக்குப் போட்டி போட்டு பயிர் செய்யும் குடியானவர்கள் அபரிமிதமாக இருந் தார்கள். நிலம் குறைவாயும், குடியானவர்கள் அதிகமாயும் இருக்கும் நிலைமை ஜமீன்தார்களுக்குத் தெரியும். தங்களுக்குச் சேர வேண்டிய கட்டணங்களைச் சட்டப்படிக்கு அவர்கள் அதிகப்படுத்த முடியாது; என்றாலும் சட்டத்துக்கு மீறியே குடியானவர்களிட மிருந்து ஏராளமாக முன் பணம் வசூல் செய்யத் தலைப்பட்டார்கள். பணம் செலுத்த வேறு வழி யில்லாமல் குடியானவன், வட்டிக்காரர்களிட மிருந்து பணம் கடன் வாங்கி, ஜமீன்தார். சட்டம் மீறிக் கேட்கும் தொகையை யெல்லாம் கொடுக்க வேண்டியிருந்தது. இவ் வாறு அவன் எவ்வளவு காலம் செய்துகொண்டிருக்க முடி யும்? அவனால் அவனுடைய கடனைக் கட்ட முடியவில்லை. குத்தகைப் பணமும் செலுத்த முடியவில்லை. எனவே, வீடு, வயல் இவைகளிலிருந்து, ஜமீன்தார்கள் அவனைத் துரத்தி விடுவார்கள். அவன் எல்லாவற்றையும் தோற்று, அன்னக் காவடியாவான். இந்த சம்பிரதாயம் மிகப் புராதன வழி யாகும். நீண்ட காலமாகக் குடியானவர்கள், சிறிது சிறிதாக ஏழையாகிக்கொண்டே வந்தார்கள். நெருக்கடி ஏற்படுத்தி, கிராமவாசிகளை இப்பொழுது தட்டி யெழுப்பியது யாது? பொருளாதார நிலைமைதான். இந் நிலைமை அயோத்திப் பிராந்தியம் முழுதும் பொதுவாக இருந்தது. ஆனால் 1920-21-ஆம் ஆண்டுகளில் எழுந்த குடியானவர்களின் கிளர்ச்சி பிரதாப்கர், ராய்பெரலி, பைசாபாத் மூன்று ஜில் லாக்களிலும் மட்டும்தான் விசேஷமாகப் பரவி யிருந்தது. இந்த எழுச்சிக்கு ஒருவாறு காரணமாய் இருந்தவர் ராமச் சந்திரா என்பவர். ராமச்சந்திரா ஓர் அபூர்வத் தலைவர்; ஜனங்களால் "பாபா" ராமச்சந்திரா என்று பிரியத்து டன் அழைக்கப்பட்டார், ராமச்சந்திரா அயோத்திப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவர் மகாராஷ்ட்ரர், ஒப்பந்தத் தொழிலாளியாக பிஜித் தீவுக்குப் போய், இந்தியா

வுக்குத் திரும்பி வந்தவர். அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும், அயோத்தியில் இந்த ஜில்லாக்களில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார். அவர் ஜனங்களுக்கு துளசி தாஸ் இராமாயணத்தைப் படித்துக்கொண்டிருப்பார். குடியானவர்களின் கஷ்ட நிஷ்டூரங்களைக் கவனமாய் காது கொடுத்துக் கேட்பார். அவர் அற்பப் படிப்பாளி. குடியானவர்களைச் சிறிதளவு தமது சொந்த நலத்துக்காகவே அவர் உபயோகப் படுத்திக்கொண்டார் என்றும் சொல்லலாம். என்றாலும் குடியானவர்களை ஒன்று சேர்த்து, அமைப்பில் கூட்டி வைக்கும் படியான வல்லமை அவரிடம் அபரிமிதமாகக் காணப்பட்டது. கூட்டம் கூடி, தங்கள் குறைகளைப் பற்றி வாதஞ் செய்ய வேண்டுமென்று அவர் அவர்களுக்குக் கற்பித்தார். இவ்வாறு செய்து அவர் அவர்களுக் கிடையே, ஒற்றுமை யுணர்ச்சியை உண்டாக்கினார். சில சமயங்களில் ஆயிரக் கணக்கான விவசாயிகள் கூட்டம் கூடுவார்கள். தங்களுடைய பெருமித கூட்டங்களைக் கண்டு விவசாயிகளுக்கு ஒரு வித தைரியமும், வல்லமையும் ஏற்பட்டது. "சீதாராம்" என்று ஒருவருக்கொருவர் கூப்பிட்டுக்கொள்வது ஒரு பழைய வழக்கம். ஆனால் இந்த "சீதா ராமுக்கு", ராமச்சந்திரா புதிதாக ஒரு பொருளையும், தொனியையும் ஏற்படுத்திக் கொடுத்து விட்டார். இதையே யுத்த முழக்கமாகவும், நெருக்கடியைக் காண்பிப்பதற்கு ஒரு கூக்குரலாகவும் செய்துவிட்டார். இந்த மந்திரத்தால் கிராமங்களை ஒன்று சேர்த்துப் பிணித்து விட்டார். ⊕

பைசாபாத், பிரதாப்கர், ரார்ய்பெரலி, இம்மூன்று ஜில்லாக்களும் பழை அயோத்தி ராஜ்யத்தின் பகுதிகளாகும். எனவே, ராமனையும் சீதையையும்பற்றிப் பல கதைகள் இந்த ஜில்லாக்களில் உலவிவந்தன. பொது ஜனங்களுக்கு மிகுதியும் பிடித்த புஸ்தகம் துளசிதாசருடைய ஹிந்தி ராமாயணம். "ஜனங்கள் இந்த ராமாயணத்தி லிருந்து நூற்றுக்கணக்கான பாட்டுகளை ஒப்பிப்பார்கள். இந்த ராமாயணத்திலிருந்து பொருத்தமான மேற்கோள்களை, ராமச்சந்திரா எடுத்துக் காண்பித்துக் குடியானவர்களை உற்சாகப்படுத்துவார். அவர்களை, ஒரு அமைப்பாக அவர் சேர்ந்தபோதிலும், சாத்தியமில்லாத பலவற்றை அவர்களுக்குச் சாதித்துக்கொடுப்பதாக ராமச்சந்திரா வாக்குறுதிசெய்தார். ஜனங்கள் அவைகளைக் கேட்டு உற்சாகம் அடைந்தார்கள். அவரிடம் எத்தகைய வேலைத் திட்டமும்

கிடையாது. ஆனால் அவர் ஜனங்களின் உற்சாகத்தை உச்ச நிலைக்கு கொண்டுவந்துவிட்டதால், பொறுப்பை எப்படியாவது பிறர்பேரில் சுமத்திவிட முயச்சிசெய்தார். இதனாலேதான் அவர் அநேகக் குடியானவர்களை அழைத்துக்கொண்டு அலகா பாத்துக்கு வந்து சேர்ந்தார். இவர்களிடம் பிரமுகர்கள் அக்கரை கொள்ளும்படியாகச் செய்யவேண்டுமென்ற நோக்கமும் அவருக்கு இருந்தது.

குடியானவர்களின் இயக்கத்தில், ராமச்சந்திரா ஒருவரு ஷகாலம்வரை தலைவராக இருந்து உழைத்துவந்தார். இரண்டு மூன்று தடவைகள் சிறைக்குப் போனார். ஆனால் இறுதியில், அவர் பொறுப்பில்லாத ஆசாமியாகவும், நம்பத்தகாத பேர்வழி யாகவும் மாறிவிட்டார்.

குடியானவர்களின் இயக்கத்துக்கு ஏற்ற பிராந்தியம் அயோத்தி. இந்தப் பிராந்தியத்திலேதான், தாலுக்காதாரர்கள் (அவதப்பிரபுக்குள் என்று இவர்கள் தங்களை பட்டம் சூட்டிக்கொண்டார்கள்) மிகுதியும் வசித்து வருகிறார்கள். ஜமீன்தாரின் திட்டத்தின் கொடுமை இப்பிராந்தியத்தில்தான் மித மிஞ்சிக் காணப்பட்டது. ஜமீன்தார்கள் குடியானவர்களை தாங்கமுடியாதவாறு உறிஞ்சிக்கொண்டே வந்தார்கள். தாங்க முடியாமல் நிலமில்லாத விவசாயிகளின் தொகை அதிகரித்துக் கொண்டே வந்தது. குடியானவர்களுக்குள்ளே பல வகுப்புகளில்லை. எல்லோரும் ஒரே தரத்தில் இருந்தபடியால், ஒன்று சேர்ந்து காரியம் செய்யமுடிந்தது.

இந்தியாவை இரண்டு கூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, ஜமீன்தாரித் திட்டம் அமுலிலிருக்கும்பாகம். அங்கே பெரிய ஜமீன்தார்கள் அதிகமாக இருப்பார்கள். சொந்தக்காணியைப் பயிரிட்டு வரும் விவசாயிகள் மற்றைய பாகத்தில் வசித்து வந்தார்கள். வங்காளம், பீகார், ஐக்கியமாகாணங்கள் இந்த மூன்றிலும் ஜமீன்தாரித் திட்டம் வழக்கத்திலிருந்தது. இந்தப் பிராந்தியங்களில் வசித்து வந்த குடியானவர்களைக் காட்டிலும், சொந்த வயல்களை உழும்குடியானவர்கள் கொஞ்சம் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள் என்று சொல்லலாம், பாஞ்சாலத்திலும், குஜராத்திலும் இருக்கும் குடியானவர்கள், ஜமீன்தாரிப் பிராந்தியத்திலிருக்கும் குடியானவர்களைக் காட்டிலும் சிறிதளவு சுகத்தோடிருக்கிறார்கள். ஜமீன்தாரிப் பிராந்தியங்களில் சாசுவதக் குத்தகை, வருஷாந்திரக் குத்தகை, பெரியகுத்தகைக் காரனிடம் உள் குத்தகை என்று பலவகைகள்

இருக்கின்றன. இந்த இனங்களில் சேர்ந்த குடியானவர்களுக்குள் ஒற்றுமையிருக்க முடியாது. அந்தந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த நலத்தைக் கருதி மற்றவர்களோடு ஒன்றுசேர எண்ணமாட்டார்கள். அயோத்திப் பிராந்தியத்தில் 1920-ம் ஆண்டில் சாசுவதக் குத்தகைக்காரர்கள் இல்லை. வெறும் குத்தகைக்காரர்கள்தான் இருந்தார்கள். யார் அதிகமாகக் குத்தகைப் பணம் கொடுத்தார்களோ, அவர்களுக்குப் பயிர்த்தொழிலுக்காகநிலம் கொடுக்கப்படும். பழைய குத்தகைதார்கள் வாயில் மண்தான். அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள். இவர்கள் யாவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களானபடியால், அவர்களை எளிதிலே ஒன்று சேர்த்துக் கிளர்ச்சிசெய்ய சாத்தியமாக விருந்தது.

அயோத்திப் பிராந்தியத்தில் ஜமீன்தார்கள் குத்தகைப் பத்திரங்களைக்கூட மதிப்பதில்லை. தாங்கள் குடியானவர்களிடமிருந்து வாங்கும் குத்தகைப் பணத்திற்கு அநேகமாக ரசீது கொடுப்பதுமில்லை. எனவே, “நீ குத்தகைப்பணம் கொடுக்க வில்லை. உனக்கு நிலம் கிடையாது. இனி நிலத்தை நீ பயிர் செய்யவேண்டாம்” என்று சொல்லி, குடியானவனைத் தள்ளிவிடக்கூடும் தாங்கள் குத்தகைப் பணம் கொடுத்துவிட்டதாகக் குடியானவர்களால் ருஜுப்படுத்த முடியாது. குத்தகைப்பணத்தைத் தவிர வேறு எத்தனையோ சட்டத்திற்கு விரோதமான அக்கிரம வர்த்தனைகள் வசூலிக்கப்பட்டன. ஒரு தாலுகாவில் ஜமீன்தார்கள் குடியானவர்களிடமிருந்து ஐம்பது வகைகளில் பணம் பறித்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஐம்பது என்பது மிகப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் தங்களுக் கேற்படும் ஒவ்வொரு விசேஷச் செலவுகளுக்கும் தாலுக்தாரர்கள் குடியானவர்களிடமிருந்து வசூல் செய்வது உலக மறிந்த விஷயம். தங்கள் குடும்பத்தில கலியாணம் நேர்ந்தால், அதற்காக வசூல் செய்வார்கள். தங்கள் பிள்ளைகள் அந்நிய நாடுகளில் கல்வி பயின்றால், அந்தச் செலவுக்காகப் வரி கேட்பார்கள். கவர்னருக்கோ, அல்லது உயர்ந்த உத்தியோகஸ்தருக்கோ கச்சேரி நடத்தினாலும், அதற்காக குடியானவர்களிடமிருந்து நன் கொடை கேட்பார்கள். ஜமீந்தார், மோட்டார்கள் அல்லது யானை வாங்கினாலும், அதற்கும் குடியானவர்கள் கிஸ்தி கொடுக்க வேண்டும். அந்தப்பணம் வசூலிப்பதற்கு விநோதமான பேர் உண்டு. மோட்டார் வரிக்கு “மோட்டாரானு” (மோட்-

டார் பணம்) என்று பெயர். யானை வரிக்கு "ஹாதீ ஆணு" (யானைப்பணம்) என்று பெயர்.

எனவே, அயோத்திப் பிராந்தியத்தில் மகத்தான குடியானவர்களின் எழுச்சி ஏற்பட்டது ஆச்சரியமே இல்லை. நகரத்து பேர்வழிகளோ, அன்னியர்களோ 'அரசியல் வாதிகளோ தலையிடாமல், இந்த எழுச்சி ஏற்பட்டதைப் பற்றித் தான் எனக்கு ஆச்சரியம். காங்கிரசுக்கும், குடியானவர்கள் எழுச்சிக்கும், யாதொரு சம்பந்தமுமில்லை. குடியானவர்கள் இயக்கத்துக்கும் அப்பொழுது தான் உருவெடுத்துத் தோன்றிக் கொண்டிருக்கும் ஒத்துழையாமைக்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால் இந்த இரண்டு செல்வாக்குள்ள இயக்கங்களுக்கும் அடிப்படையான காரணங்கள் பொதுவானவை யென்று கூறுவதுதான் மிகவும் பொருத்தமானதாகும். 1919-ம் ஆண்டில், காந்திஜீ கட்டளையிட்ட பெரியபெரிய ஹர்த்தால்களில குடியானவர்கள் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். கிராமத்துக் குடியானவன் காந்திஜீயின் பேரைத் தனக்கு ஒரு ரக்ஷா மந்திரமாகப் பாவித்துக் கொண்டான்.

நகரங்களில் இந்த மகத்தான குடியானவர் இயக்கத்தைப் பற்றி, யாதொரு தகவலும் கிடைக்க வில்லை. எந்தப் பத்திரிகையிலேனும் இதைப்பற்றி ஒரு வரிகூட காணமுடியாது. நகரங்களுக்கும், பத்திரிகைகளுக்கும், கிராமங்களைப் பற்றி கொஞ்சம்கூட அக்கரையே இல்லை. இதுதான் எனக்கு வியப்பைத் தந்தது. பெரும்பான்மையோரான ஜனங்களிடமிருந்து கத்தரிக்கப்பட்டு அவர்களை லக்ஷியம் செய்யாமல் பிரத்தியேகமான ஒருசிறிய உலகத்தில் வாழ்ந்துகொண்டு, அதன் குறைகளைப்பற்றியே கிளர்ச்சிசெய்து வருகிறோமென்பதைத் தெளிவாக உணர்ந்தேன்.

# IX

## விவசாயிகளோடு கலத்தல்

கிராமங்களில் மூன்றுநாள் நான் தங்கியிருந்தேன். அல்காபாத்துக்குத் திரும்பி வந்தேன். மீண்டும் கிராமங்களுக்குச் சென்றேன். எங்களுடைய பிரயாணத்தில் நாங்கள் பல கிராமங்களில் சுற்றித்திரிந்தோம். அவர்களோடு உணவு உண்டோம். அவர்களுடைய மண் குடிசைகளில் படுத்து உறங்கினோம். நீண்டநேரம் அவர்களோடு சம்பாஷித்தோம். அடிக்கடி மகாநாடு கூட்டி, அதிலே பிரசங்கம் செய்தோம். நாங்கள் முதன்முதலாக சின்ன மோட்டார்காரில் பிரயாணம் செய்தோம். எங்களுடைய கார் எல்லாக் கிராமங்களுக்கும் செல்லுவதற்காக, நூற்றுக்கணக்கான குடியானவர்கள் வயல்களில் புதியதாக தற்காலிகமான பாதைகளை எங்களுக்காக அமைத்திருந்தார்கள். அநேக சமயங்களில் கார் உளையில் மாட்டிக் கொள்ளும். குடியானவர்கள் அப்படியே காரைத் தூக்கி வெளியே எழுப்பிவிடுவார்கள். கடைசியாக நாங்கள் காரை விட்டுவிட்டு, நடையாகச் செல்லவேண்டி யிருந்தது. எங்கு சென்றாலும் எங்கள் நிழல்போல் ரகசியப் போலீசார்கள் எங்களைப் பின்தொடர்ந்து வந்தார்கள். லக்ஷ்மணபுரியிலிருந்து டெபுடி கலெக்டர் ஒருவரும் எங்களைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார். நாங்கள் வயல்மார்க்கமாகச் சலிப்பில்லாமல் நடந்துகொண்டிருந்தோம். எனவே அவர்கள் அலுத்துப் போய்விட்டார்கள். டெபுடி கலெக்டர் கொஞ்சம் மிருதுவான பேர்வழி. விலையுயர்ந்த பூட்ஸ் போட்டுக்கொண்டு வந்திருந்தார். அவரால் நடக்கவே முடியவில்லை. கொஞ்சம் மெதுவாக நடக்கும்படி அவர் எங்களைச் சிலசமயம் வேண்டிக்கொள்வார். கடைசியில் எங்களோடு நடந்துவரமுடியாமல் நின்று விட்டார்.

நல்ல வெயிற்காலம். ஜூன்மாத வெயில் கொளுத்திற்று. கண் சரியாகத் தெரியவில்லை. வெயிலில் நடந்து எனக்குப் பழக்கமில்லை. நான் இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்த பின்னர், கோடையில் இளைப்பாறுவதற்காக மலைவாசம் செல்வேன். இப்பொழுதோ நாள்முழுதும் வெயிலில் நடந்தேன். தொப்பி கூட இல்லை. தலையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டிருந்

தேன். மனது பல்வேறு விஷயங்களில் சென்றுகொண்டிருந்ததால், வெயில் ஞாபகமே எனக்கு ஏற்படவில்லை. அலகாபாத்துக்குத் திரும்பிவந்த பின்னர், என்னுடைய உடம்பைப் பார்த்தபிறகுதான், எனக்கு நிலைமை விளங்கிற்று. உடம்பு முழுதும் ஒரே கருப்பாகக் கருத்துப்போயிருந்தது. இதனால் எனக்குச் சந்தோஷம். வெயிலுக்குப் பயந்தது தப்பிதமென்றும், கடுமையான வெயிலையும் என்னால் தாங்கமுடியுமென்றும் நான் தெரிந்துகொண்டேன். ரொம்பவும் சிரமப்படாமல் எவ்வளவோ உஷ்ணத்தையும், எவ்வளவோ குளிரையும், நான் தாங்கமுடியும் என்பது இதனின்றும் தெரிந்தது. இதனால் எனக்கு உற்சாகம் உண்டாயிற்று. ஜெயிலிலும் சரி, வெளியே வேலைசெய்த காலத்திலும் சரி, சோர்வும் அசதியும் ஏற்படவில்லை. என்னுடைய உடல்வலிமையும், தேகப்பயிற்சி வழக்கமும் தான் இதற்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை. என்னுடைய தகப்பனரிடமிருந்து நான் தேகப்பயிற்சி வழக்கத்தைப் பிடித்துக்கொண்டேன். அவர் ஒரு பயில்வான். அவருடைய இறுதிக்காலம் வரை, அவர் தமது தினசரி தேகப் பயிற்சியை நிறுத்தினதே இல்லை. அவர் தலை முழுதும் வெள்ளை மயிர்தான். அவருடைய முகம் "டொங்கு" விழுந்து, கிழடுதட்டியும் சோர்வுற்றதுபோலும் காணப்படும். ஆனால் அவருடைய உடம்பு மிகவும் கெட்டியாகவும், இருபது வயது குறைந்ததாகவும் காண்பிக்கும்.

1920-ம் வருஷம் ஜூன் மாதம் பிரதாப்கருக்கு நான் செல்லும் முன்னமேகூட, கிராமங்கள் வழியாகப் பிரயாணம் செய்து அங்கே தங்கி, விவசாயிகளிடம் அடிக்கடி பேசியிருக்கிறேன். பெரிய மேளாக்கள் (கும்பமேளா, மாகமேளா) முதலிய விழாக்கள் காலத்தில், அவர்கள் பதினாயிரக் கணக்கில் கங்கைக்கரையில் கூடும்பொழுது பார்த்திருக்கிறேன், நாங்கள் அவர்களுக்கு அப்பொழுது சுய ஆட்சிப் பிரசங்கமும் செய்வதுண்டு. ஆனால் விவசாயிகள் என்பவர் யாவர், அவர்களுக்கு இந்தியாவில் எத்தகைய பங்கு உண்டு என்பதை நான் அப்பொழுது சரியாக உணர்ந்ததில்லை. அவர்களும் ஏதோ இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்று ஏனையோர் அலட்சியமாக எண்ணுவதுபோல் நானும் எண்ணிவந்தேன். ஆனால் என்னுடைய பிரதாப்கர் பிரயாணங்களிலிருந்து, இந்தியாவைப்பற்றி வேறுவகை காட்சி தோன்றலாயிற்று. நிர்வாணமான, பட்டினி கிடக்கும் விவசாயிகள்தான் என் கண்ணில் இந்தியாவாகத்

தோன்றினார்கள். இது ஒத்துழையாமைப் பிரசாரத்தாலேற்பட்ட மின்சார சக்தியாக இருக்கலாம். என் மனப் பக்குவத்தின் பலனாகவும் இருக்கலாம். அது என்னவோ எனக்குத் தெரியாது. எனது உள்ளத்தில் ஆணிபோல் பதிந்து, அந்தக் காட்சிகள் என்னைவிட்டுப் பிறகு ஒருகணமும் அகலவேயில்லை.

இந்த விவசாயிகள் என்னுடைய கூச்சத்தை அடியோடு போக்கி விட்டார்கள். என்னை பிரசங்கம் செய்யப்பழக்கி விட்டார்கள். அதுவரையில் பிரசங்க மேடையில் நான் அதிகம் ஏறினதில்லை. ஏறுவதென்றால் எனக்குத் திகில். ஹிந்துஸ்தானியில் பேசவேண்டுமே என்று நடுக்கம்! ஆனால் இந்த விவசாயிகளின் கூட்டத்திலே, நான் எவ்வாறு பேசாதிருக்க முடியும்? எதற்காகக் கூச்சப்படவேண்டும்? பிரசங்கம் செய்யும் தோரணையும் வித்தையும் எனக்குத் தெரியாது. எனவே ஒரு மனிதன் இன்னொருவரிடம் பேசுவதைப்போல நான் சம்பாஷணை நடையில் பேசினேன். என்னுடைய உள்ளத்தில் இருந்ததையெல்லாம், அவர்களிடம் மனதைத்திறந்து வெளியிட்டேன். கூட்டத்திலே சிலரே இருந்தாலும் சரி, பதினாயிரம் பேர்கள் இருந்தாலும் சரி, எனது சம்பாஷணை நடையிலேதான் அவர்களிடம் பேசினேன். பிரசங்கத்திலே எது குறைவாயிருந்தாலும் பாதகமில்லை. நான் சொல்லுவதை அவர்கள் புரிந்துகொள்ளாவிட்டாலும் பாதகமில்லை. என்னுடைய கருத்தோ பேச்சோ அவர்களுக்கு எளிதாக இல்லாமலிருக்கலாம். கூட்டம் அதிகப்பட்டால், என்னுடைய பேச்சு அவர்கள் காதில் விழாமலிருக்கலாம். இதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தவில்லை. அவர்கள் என்னை நம்பினார்கள். அதே அவர்களுக்குப் போதுமானது.

தாயாரையும் மனைவியையும் பார்க்க, நான் திரும்பவும் முசோரிக்குப் போனேன். ஆனால் என்னுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்தவர்கள் குடியானவர்கள் தான். அவர்களிடம் திரும்பிப் போக, நான் ஆவலுடன் இருந்தேன். திரும்பினதும் மீண்டும் கிராமங்களுக்குச் சென்றேன். குடியானவர்களின் இயக்கம் வளர்ந்து வருவதைக் கவனித்துக் கொண்டிருந்தேன். நீண்டகாலமாக மிதிபட்டுக்கிடந்த குடியானவனுக்குப் புதியதொரு தன்னம்பிக்கை உண்டாயிற்று. அவன் தலை நிமிர்ந்து நடக்கத்துவக்கினான். ஜமீன்தாரின் ஏஜண்டுகளையும் போலீஸையும் பார்த்து அவன் பயந்து வந்தது, கொஞ்சம் குறைந்தது. ஒரு குடியானவனை ஜமீன்தார்

விலக்கிவிட்டால், அவன் பயிர் செய்துவந்த நிலத்தை ஒப்புக் கொண்டு விவசாயம்செய்ய, மற்றக் குடியானவர்கள் மறுத்து விட்டார்கள். ஜமீன்தார்கள் சட்டவிரோதமாகப் பலவகை களிலும் பணம் பிடுங்கி வந்தது குறைந்தது. ஜமீன்தார் ஏஜண்டுகளின் மிரட்டலும் அடியும் ஓய்ந்தன. ஏதே னும் ஒரு சமயத்தில், இத்தகைய அக்கிரமம் நடக்குமாகில், உடனே இது எங்களுக்கு அறிவிக்கப்பட்டு, உடனே விசாரணை யும் செய்யப்பட்டது. இதனால் போலீஸாம் ஜமீன்தார் ஏஜெண்டுகளும் தங்கள் கொடுமைகளைக் குறைத்துக் கொண் டார்கள். தாலுக்தார்களுக்கு நடுக்கம் உண்டாயிற்று. அவர் கள் தங்களுக்கு எவ்விதக் கெடுதியும் நேரிடாதவாறு பார்த் துக்கொண்டிருப்பதோடு திருப்தியடைந்தார்கள். அயோத்தி விவசாயச் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதாக, மாகாண அரசாங்கத்தார் வாக்குக் கொடுத்தார்கள்.

ஜனங்களின் இயற்கையான தலைவர்கள் என்று தங் களைப் பறைசாற்றிவந்த இந்த தாலுக்தார்களும், பெரிய ஜமீன் தார்களும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் செல்வக் குழந்தை கள். இவர்களுக்கு சர்க்கார் சிறப்பாகக் கொடுத்த கல்வியின் பிரபாவத்தால், தங்கள் சொந்தமூளைகளை உபயோகிக்கும் திறமையற்றவர்களாகச் செய்யப் பட்டிருந்தனர். இதர தேசத்து நிலச்சுவான்களைப்போல் தங்கள் குடியானவர் களுக்கு யாதொரு நன்மையையும் செய்ததில்லை. வெறும் அட்டையைப்போல் ஒட்டிக்கொண்டு பூமியின் சாரத்தையும், குடியானவர்களின் ரத்தத்தையும் உறிஞ்சி வந்தனர். ஸ்தல அதிகாரிகளை எப்படியாவது கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதிலேதான் அவர்களுடைய கவலையும் கருத் தும் சென்றன. அதிகாரிகளின் தயவின்றி இவர்கள் நிலைத் திருக்க முடியாது. தங்களது பிரத்தியேக நலங்களையும், உரிமைகளையும் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்று சர்க்காருக்கு சதா மனுப் பண்ணிக்கொள்வது தான் இவர் களுடைய வேலையாயிருந்தது.

ஜமீன்தார் என்ற சொல் ஏமாற்றத்தைத் தரக்கூடியது. எல்லா ஜமீன்தார்களும் பெரிய பூமியாளர்கள் என்று யாரும் நினைப்பது சகஜம். ஆனால், ரயத்துவாரி மாகாணங்களிலே ஜமீன்தார் என்றால் பூமியின் சொந்தக்காரன் என்று அர்த் தம். ஜமீன்தாரித் திட்டம் அமுலிலிருக்கும் மாகாணங்களில் கூட, ஜமீன்தார் வர்க்கத்தில் பலதரப்பட்டவர்கள் இருப்பார்

கள். பெரிய பூமியாளர்கள், ஆயிரக்கணக்கான சில்லரை மிராசுதார்கள், குடியானவர்களைக் காட்டிலும் அதிக அந்தஸ் தில்லாத லட்சக்கணக்கானவர்கள், இந்த ஜமீன்தார் வர்க்கத் தைச் சேர்ந்தவர்களாவர். எனக்குத் தெரிந்தவரை, ஐக்கிய மாகாணத்தில் 15 லட்சம் ஜமீன்தார்கள் இருப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே நூற்றுக்கு தொண்ணூறு பேர்வரை, சாதாரணக் குடியானவர்களின் நிலைமையில்தான் இருக்கிறார்கள். மற்றும் 9 பேரிடம் சுமாரான நிலம் உண்டு. மாகாணம் முழுமையிலுமே பெரிய ஸ்திதியுள்ளவர்கள் 5000 பேர்கள் இருப்பார்கள். இந்தத் தொகையிலும் 500 பேர்வழி களைத் தான் தாலுகாதார்கள் என்றும் பெரிய ஜமீன்தார்கள் என்றும் சொல்லாம்.

சில இடங்களில் சிறிய மிராசுதார்களைக் காட்டிலும் பயிர்த்தொழில் செய்யும் குடியானவர்கள் நல்ல நிலைமையி லிருக்கிறார்கள். இந்த ஏழை மிராசுதார்களும் சாதாரண ஜமீன்தார்களும் அறிவீனர்களாகக் காணப்படினும், அரிய குணங்கள் பொருந்திய ஜனங்கள் என்பதில் சந்தேகமில்லை. தக்க படிப்பின் மூலமாக, அவர்களை நேர்த்தியான பிரஜை களாக ஆக்கிவிடமுடியும். அவர்கள் தேசீய இயக்கத்தில் மும் முரமாகக் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவர் இருவரைத் தவிர பெரிய ஜமீன்தார்களும் தாலுகாதார்களும் தேசீய இயக்கத்தில் கலந்து கொண்டதே இல்லை. பிரபுக்களுக்கு இயல்பாக விருக்கும் சில நல்ல தன்மைகள் கூட அவர்களி டம் இல்லை. உடலிலும் சரி, அறிவிலும் சரி அவர்கள் சீர் கெட்டுப் போனவர்கள். அவர்களுடைய காலம் மலையேறிவிட் டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் ஒத்தாசை யிருக்கும் வரையில்தான் இவர்கள் நிலைத்திருக்கமுடியும்.

1921-ம் ஆண்டு முழுதும் நான் கிராமங்களுக்குப்போய், சுற்றித்திரிந்துகொண்டிருந்தேன். இவ்வாறு செய்ததில், ஐக் கிய மாகாணம் முழுதும் நான் சுற்றிப்பார்க்க நேர்ந்தது. ஒத் துழையாமையும் நன்றாகத் தொடங்கிவிட்டது. மூலை மூடுக்கு களிலுள்ள கிராமங்களிற்கூட, ஒத்துழையாமையும் அத னுடைய வேகமும் எட்டிவிட்டது. அநேக தொண்டர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் கிராமங்களுக்குப் போனார்கள். அவர்கள் நூதனமான இந்த ஒத்துழையாமையைப் பற்றிப் பிரசங்கம் செய்ததில், குடியானவர்களுடைய கஷ்டங்களுக் கும் விரைவில் நிவர்த்தி யேற்பட்டுவிடு மென்று சேர்த்துச்

சொல்லிக்கொண்டேபோனுர்கள். ஸ்வராஜ்யம் என்பது ஒரு பொதுவான வார்த்தையாகும். அதற்கு என்ன வேண்டு மானுலும் பொருள் செய்துகொள்ளலாம். ஒத்துழையாமை இயக்கமும் குடியானவர்களியக்கமும் தனித்தனி இயக்கங் கள். ஐக்கிய மாகாணத்திலே ஒன்றினுல் மற்றென்றுக்கு பரஸ் பரம் செல்வாக்கு உண்டாயிற்று என்லாம். காங்கிரஸ் பிரசங் கங்களினுல் வியாஜ்யங்கள் வெகுவிரைவில் குறைந்து கொண் டே வந்தன. தங்களுக்குள்ளிருந்த வம்புகளையும் சச்சரவுகளை யும் தீர்த்துக்கொள்ள கிராமங்கள் தங்கள் பஞ்சாயத்துகளை ஏற்படுத்திக்கொண்டன. காங்கிரஸ் சாத்வீகத்தை மேற் கொண்டிருந்தது யாவரும் அறிந்த விஷயம். காங்கிரஸ் தொண் டர்கள் எங்கு சென்றுலும் சாத்வீகத்தையே வற்புறுத்திய வண்ணமாக இருந்தனர். சாத்வீகத்தின் பொருளோ அல்லது தேவையோ ஜனங்களால் நன்றுக உணரப்படாமலிருக்கலாம்; அறியப்படாமலிருக்கலாம். ஆனுல் குடியானவர்கள் பலாத் காரத்திலிறங்காமல், இந்த சாத்வீகப் பிரசாரம் தடுத் தது.

இது ஒரு மகத்தான பலன் என்றுதான் சொல்லவேண் டும். எங்கும் குடியானவர்களின் எழுச்சி, பலாத்காரத்தி லும் கலகத்திலுந்தான் முடியும். அந்தக் காலத்தில் அயோத் திப் பிராந்தியத்திலிருந்த குடியானவர்கள் எல்லா நம்பிக்கையு மிழந்து எதற்கும் துணிந்தவர்களாக விருந்தார்கள். ஒரு சிறிய பொறி பறந்தால் போதும்; காட்டுத்தீ பரவியிருந்திருக் கும். என்றுலும் அவர்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் சாத்வீகத்துட னிருந்தார்கள். பலாத்காரம் ஒரே ஒரு இடத் தில்தான் நேர்ந்தது என்று எனக்கு ஞாபகம். தாலுகாதார் ஒருவர் தமது வீட்டில் வீற்றிருந்தார். அவரைச்சுற்றி அவரது நண்பர்கள் அமர்ந்திருந்தார்கள். இந்த சமயத்தில் குடியானவ னெருவன் தட தடவென்று வீட்டுக்குள் நுழைந்து, தாலுகா தாரரின் கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விட்டான். அத் தாலுகாதார் அயோக்கியனுக விருந்ததற்காகவும், தன் மனைவியைத் துன்புறுத்தியதற்காகவும் இவ்வாறு செய்தான்!

வேறு விதமான பலாத்காரமும் ஏற்பட்டது. இதனுல் குடியானவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் விரோதம் ஏற்பட் டது. இந்த சண்டை கண்டிப்பாக எப்பொழுதேனும் வந்துதா னிருக்கும். குடியானவர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் வல்ல மையைப் பெருக்கிக்கொள்வதை சர்க்காரால் பொறுக்கமுடியு

வில்லை. ரயில் வண்டிகளில் டிக்கட்டு இல்லாமல் நூற்றுக் கணக்கான குடியானவர்கள் பிரயாணம் செய்யத் துவக்கினார்கள். முக்கியமாக 60, 70 ஆயிரம் ஜனங்கள் கூடும்படியான பெரிய மகாநாடுகளுக்குப் போகவேண்டும்பொழுது பிரயாணம் இவ்வாறு செய்தார்கள். அவர்களை எந்த வழியிலும் திருப்ப முடியவில்லை. "டிக்கட்டா! பழைய காலம் மலையேறிவிட்டது" என்று குடியானவர்கள் ரயில்வே அதிகாரிகளிடம் பகிரங்கமாகச் சொல்லத் துணிந்துவிட்டார்கள். டிக்கட் இல்லாமல் ரயிலில் போகலாம் என்று குடியானவர்களை யார் தூண்டியதோ, அது எனக்குத் தெரியாது. நாங்கள் அந்த யோசனையை அவர்களுக்குச் சொல்லவில்லை. இம்மாதிரி அவர்கள் செய்திருக்கிறார்களென்று திடீரென ஒருநாள் நாங்கள் கேள்விப்பட்டோம். ரயில்வே அதிகாரிகள் அதிகமான பந்தோபஸ்து செய்து, இதைத் தடுத்துவிட்டார்கள்.

1920-ம் ஆண்டில் கல்கத்தாவில் விசேஷக் காங்கிரஸ் நடைபெறுகிற சமயம்; குடியானவர்களின் சில தலைவர்கள் சிறிய குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டார்கள். அவர்களை பிரதாபகரில் விசாரிக்கவேண்டும். ஆனால் விசாரணையன்று ஆயிரக்கணக்கான குடியானவர்கள் கச்சேரி காம்பவுண்டு முழுதும் நிறைந்துகொண்டார்கள். தலைவர்களை வைத்திருந்த சிறைக்குப் போகும் பாதை முழுதும் குடியானவர்கள பத்தி பத்தியாக நின்றுகொண்டிருந்தார்கள். மாஜிஸ்திரேட்டின் நரம்பு இந்தக் காட்சியைக்கண்டதும் தளர்ந்ததால், மறுநாள் விசாரணை ஒத்திப்போடப்பட்டது. ஆனால் கூட்டமோ அடுத்த நாள் அதிகரித்து, சிறையைக் கூட வளைத்துக்கொண்டு விட்டது. கை நிறையக்கொஞ்சம் காய்ந்த தானியங்களை வைத்துத் தின்று கொண்டு, குடியானவர்கள் 2, 3 நாள் வரையிலும் காலத்தைத் தள்ளிவிடுவார்கள். ஜெயிலுக்குள் தலைவர்களை ஏதோ விசாரிக்கிறது போலப் பாவனை செய்து, அவர்களை விடுதலை செய்துவிட்டார்கள். இந்த விடுதலை எப்படி நேர்ந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் குடியானவர்களுக்கோ இது ஒரு மகத்தான வெற்றியாகத் தென்பட்டது: கூட்டமாகச் செய்தால், தாங்கள் எதையும் ஜெயித்துவிடலாம் என்று குடியானவர்கள் எண்ணத் துவங்கினார்கள். இந்த நிலைமையை அரசாங்கத்தார் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? சிறிது காலத்துக்குள், இதே போன்ற மற்றோர் சந்தர்ப்பம் எழுந்தது. ஆனால் அதன் முடிவு வேறுவிதமாயிற்று.

1921-ஆம் ஆண்டு ஜனவரி மாதத் துவக்கம்; நாகபுரி காங்கிரஸிலிருந்து அலகாபாத்துக்கு அப்பொழுதுதான் வந்தேன். வந்ததும் ராயபெரிலியிலிருந்து தந்தியொன்று எனக்குக் கிடைத்தது. "நெருக்கடியான நிலைமை ஏற்படக்கூடும். உடனே தாங்கள் வந்து சேரவும்" என்று தந்தியில் கண்டிருந்தது. மறுநாட் காலை புறப்பட்டுப் போனேன். சில தினங்களுக்கு முன்னர், குடியானவர்களின் நாட்டாண்மைக்காரர்களிற் சிலர் கைது செய்யப்பட்டு, பக்கத்து ஊரி லிருந்த சிறையில் வைக்கப்பட்டிருந்தார்கள் என்ற சங்கதியைத் தெரிந்துகொண்டேன். பிரதாப்கரில் தாங்கள் வெற்றி பெற்றது போல, இப்பொழுதும் வெற்றி பெறலாமென்று நினைத்து, பதினாயிரக் கணக்கான குடியானவர்கள் ராயபெரிலி நகரத்துக்கு, மீதச்மே திரண்டு வந்ததுபோல நடந்து சென்றார்கள். ஆனால் இந்தத் தடவை பழைய உபாயம் பலிக்கும்படியாகச் சர்க்கார் விட்டுவிடவில்லை. அதிகமான போலீஸையும், இராணுவத்தையும் கொண்டுவந்து, நிறுத்தி, வழியிலேயே குடியானவர்களைத் தடுத்துவிட வேண்டுமென்று தீர்மானங் கொண்டார்கள். ராயபெரிலி நகரத்துக்கு வெளியே, ஆற்றின் அக்கரையில் பெரும்பான்மையான குடியானவர்கள் தடுக்கப்பட்டார்கள். ஆனால் வேறு பல திக்குகளிலிருந்து குடியானவர்கள் ராயபெரிலியில் பிரவேசித்துக்கொண்டிருந்தார்கள். ராயபெரிலி ஸ்டேஷனுக்கு நான் வந்து சேர்ந்ததும், நிலைமை இன்னதென்று தெரிந்துகொண்டேன். உடனே, குடியானவர்களை ஆற்றின் கரையில் ராணுவத்தார் மறித்துக்கொண்டிருந்த இடத்துக்கு நேரே சென்றேன். போய்க்கொண்டிருக்கையில் வழியிலே, ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து கடிதமொன்று எனக்குக் கிடைத்தது. உடனே திரும்பிப் போகும்படி அவர் குறிப்பிட்டிருந்தார். "இந்த உத்தரவு எந்தச் சட்டத்தின் கீழ், எந்தப் பிரிவின் கீழ் என்று பதிலனுப்பவும். அது கிடைக்கும் வரையிலும் நான் ஆற்றுக்குப் போகத்தான் செய்வேன்" என்று அவர் அனுப்பின கடிதத்தின் பின்புறத்தில் பதிலெழுதி யனுப்பினேன். ஆற்றை நோக்கிப் போனேன். ஆற்றின் மற்றக் கரையிலிருந்து துப்பாக்கி வெடிச் சத்தம் காதில் விழுந்தது. பாலத்திலே ராணுவத்தார் என்னைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். நான் அங்கேயே நின்றுகொண்டிருந்தேன். ஆற்றின் இக்கரையின் கழனிகளில் நடுங்கிப் போய் ஒளிந்துகொண்டிருந்த குடியானவர்கள் என்னைக் கண்டதும், வந்து சூழ்ந்துகொண்டார்கள்.

சுமார் 2,000 பேர்களுக்கு அதிக மிருக்கும். உடனே ஒரு கூட்டங் கூடி "பதற வேண்டாம், பயப்பட வேண்டாம்" என்று அவர்களை தைரியப்படுத்த முயன்றேன். மிகவும் அசாதாரணமான காட்சி. கூப்பிடு தூரத்தில்; ராணுவத்தார் இதர குடியானவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டிருந்தார்கள். இங்கேயோ கூட்டம் கூடிப் பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. என்றாலும், கூட்டம் மிகவும் சாவதானமாய் நடைபெற்றது. குடியானவர்களின் உள்ளத்தில் புகுந்துகொண்ட அச்சமும் ஒருவாறு கழிந்தது. சிறிது நேரத்துக்குப் பின், ஜில்லா மாஜிஸ்ட்ரேட், சுடுகிற இடத்திலிருந்து திரும்பி வந்தார். தம்மோடு நானும் அவர் வீட்டுக்கு வர வேண்டும் என்று அவர் என்னை வேண்டிக் கொண்டார். என்னை வீட்டில் வைத்துக்கொண்டு, ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, இரண்டு மணி நேரத்துக்கதிகமாக் கடத்திவிட்டார். குடியானவர்களிடமிருந்தும், நகரத்திலிருந்த என்னுடைய தோழர்களிடமிருந்தும் எப்படியேனும் என்னைப் பிரித்துவிட வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கமாய் இருந்திருக்க வேண்டும்.

துப்பாக்கிப் பிரயோகத்தால் பலர் மாண்டுபோயினர் என்று பின்னர், எங்களுக்குத் தெரிந்தது. தங்கள் கூட்டத்தைக் கலைத்துவிட்டு வீடுபோய்ச் சேருவதற்குக் குடியானவர்கள் மறுத்துவிட்டார்கள். மகாசாத்வீகமான முறையில் அவர்கள் நடந்துகொண்டார்கள். மாஜிஸ்டிரேட் இல்லாமல், நானே அல்லது அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்ற வேறு யாரோ அங்கேபோய் தயவுசெய்து கலைந்து போய்விடுங்கள் என்று சொன்னால் அவர்கள் கலைந்துபோயிருப்பார்கள் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அவர்கள் நம்பிக்கை வைக்காத அதிகாரிகளின் கட்டளைகளுக்குப் பணிந்து நடக்க அவர்கள் மனங்கொள்ளவில்லை.

நான் வரும் வரையில் சற்றுப் பொறுத்துக் கொள்ளும்படி யாரோ ஒருவர் மாஜிஸ்ட்ரேட்க்கு யோசனை சொன்னாராம். ஆனால் அவர் அதை ஏற்றுக் கொள்வாரா? தாம் செய்யக்கூடாத காரியத்தில் கிளர்ச்சிக்காரனொருவன் செய்யக் கூடுமென்பதைக் காண்பிக்க அவர் இடம் கொடுப்பாரா? போலி மதிப்பை ஆதாரமாகக் கொண்ட அந்நிய ஆட்சி, இவ்வித நடத்தைக்கு சம்மதிக்காது.

அக்காலத்தில் ராயபெரிலி ஜில்லாவில், இரண்டு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இன்னும்,

கேவலமாக பயங்கர ஆட்சி ஏற்பட்டது. பிரபல குடியான வர்கள் பஞ்சாயத்தார்கள் இயக்கத்தை நசுக்கிவிடுமென்று அரசாங்கத்தார் தீர்மானம் கொண்டுவிட்டார்கள். காங்கிரஸின் பிரசாரத்தால், அப்பொழுதுதான் ராட்டினத்தில் நூற்பது, குடியானவர்களுக்குள் பரவி வந்தது. எனவே, ராட்டினம் என்பதை ராஜ நிந்தனைக்கு அறிகுறியாகக் கருதி, அதற்குடையவனைத் தொந்திரவு செய்தார்கள். பல தடவைகளில் ராட்டினத்தை தீக்கிரையாக்கிவிடுவார்கள். ராயபெரலி, பிரதாப்கர் ஜில்லாக்களில், கிராமாந்திரங்களில் காங்கிரஸ் இயக்கத்தையும், குடியானவர்களின் இயக்கத்தையும் நூற்றுக் கணக்கானவர்களைக் கைது செய்தும் வேறு வழிகளாலும், நசுக்கிவிட, அரசாங்கத்தார் பெரிதும் முயன்றார்கள்.

சிறிது காலங் கழித்து, 1921-ம் வருஷத்தில் பைசாபாத் ஜில்லாவிலும் அடக்குமுறை ஆட்சி தலை விரித்தாடத் துவக்கிற்று. அங்கே ஒரு தனி வகையில் தகராறு ஏற்பட்டது. சில கிராமங்களிலிருந்து குடியானவர்கள் சேர்ந்துகொண்டு, தாலுக்காதார் ஒருவரின் வீட்டைக் கொள்ளையடித்துவிட்டார்கள். இந்தத் தாலுகர்தாருக்கும், பக்கத்திலிருந்த ஜமீன்தாருக்கும் விரோதம். பக்கத்து ஜமீன்தாரின் ஆட்கள்தான் மேற்சொன்ன கிராமத்தார்களைத் தூண்டிவிட்டு கொள்ளையிடச் செய்தார்கள் என்று பின்னர் தெரிந்தது. தாலுக்காதாரின் வீட்டில் கொள்ளையடிக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி விரும்புகிறார் என்று அறியாத கிராமவாசிகள் சில போக்கிரிகளால் உபதேசம் செய்யப்பட்டார்கள். கிராமவாசிகளும் இந்த யோசனையை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு, கொள்ளையடிக்கத் துணிந்து, "மகாத்மா காந்திக்கு ஜே" என்று உரக்கச் சத்தமிட்டுக்கொண்டு கொள்ளையடித்தார்களாம்.

"இதைக் கேட்டதும் எனக்கு அடங்காத கோபம். இரண்டொரு நாட்களில், நான் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். பைசாபாத் ஜில்லாவில் அக்பர்பூருக்குச் சமீபம்; நான் போய் சேர்ந்த அன்றைக்கே கூட்டம் கூட்டினேன். 2, 3 மணி நேரத்துக்குள் 10 மைல் சுற்று வட்டத்துக்குள்ளிருந்த கிராமங்களிலிருந்து, குடியானவர்கள் வந்து சேர்ந்தார்கள். 5,000, 6,000 பேர்கள் இருக்கும். நான் அவர்களிடம் மிக்வும் கடுமையாகப் பேசினேன். "என்ன அவமானம்! உங்களுக்கும் அவமானம், நமது இயக்கத்துக்கும் அவ

மானம்! நீங்கள் இவ்வாறு செய்யலாமா? மகா பாதகமான செயல்! உங்களுடைய குற்றங்களைப் பகிரங்கமாக, நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தக் கொள்ளையில் கலந்து கொண்டது யார் யாரோ, அவர்கள் எல்லோரும் கையைத் தூக்க வேண்டும்.'' என்று சொன்னேன். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அவ்விடத்தில் கூடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பக்கத்திலேயே இருக்கிறார்கள் என்ற கவலை கூட யில்லாமல், இரண்டு டஜன் பேர்கள் தங்கள் கைகளைத் தூக்கினார்கள். இதனால் அவர்களுக்குக் கஷ்டம் வருமென்று தெரியும். அந்தக் காலத்தில் எனக்குக் காந்திஜியின் சத்தியாக்கிரக நெறியிலிருந்து சிறிதளவும் விலகக் கூடாதென்ற அபிப்ராயம்.

பின்னர் அவர்களில் பலரோடு தனிமையில் பேசினேன். அவர்கள் சொன்ன கதையைக் கேட்டதும், எனக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. பக்கத்து ஜமீன்தாரின் ஆட்களின் சூழ்ச்சியை தெரிந்துகொள்ளாமல் இந்த சாதுவான முட்டாள் கிராமவாசிகளை நான் காட்டிக்கொடுத்து, அவர்களை நீண்டகால் சிறைத்தண்டனைக்கு ஆளாக்கினேன் என்று மிகவும் வருந்தினேன். ஆனால் தண்டனைக்குள்ளானவர்கள் கையைத்தூக்கின இருபது முப்பது குடியானவர்கள் மட்டுமல்ல. இந்தச்சந்தர்ப்பத்தை அரசாங்கத்தார் கைநழுவ விட்டுவிடுவார்களா? குடியானவர்களின் இயக்கத்தை நசுக்கத் தருணம் வாய்த்தது என்று அதிகாரிகள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆயிரம்பேருக்கதிகமாகக் கைதுசெய்யப்பட்டார்கள். ஜில்லாச்சிறை நிரம்பிப்போயிற்று. விசாரணை ஒருவருஷ காலம் நடந்தது. அநேகர் விசாரணைக்காலத்தில் சிறையிலேயே இறந்துபோனார்கள். மற்றும் பலருக்கு நீண்டகால சிறைவாசம் கிடைத்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், நான் சிறைசென்றபொழுது இவர்களை அங்கே சந்தித்தேன். இவர்களில்பலர் இளைஞர்கள். தங்கள் இளமைப்பருவத்தைச் சிறையில் கழிக்க நேர்ந்தது. நீண்ட காலம் எதிர்த்துப்போராட வல்லமையும் பிடிவாதமும் இந்தியக்குடியானவர்களுக்கு இல்லை. பஞ்சமும், தொத்துநோயும் வந்தால், அவர்கள் லட்சக்கணக்கில் மாண்டுபோவார்கள். இப்படியிருக்க ஜமீன்தார்களும் அரசாங்கத்தாரும் ஒன்றுசேர்ந்து, அவர்களை அடக்கப்பார்த்தாலும், ஒரு வருஷகாலம் எதிர்த்துப் போராடினார்கள். இது ஆச்சரியமதான. என்றாலும் அவர்கள் சிறி

தளவு தளர்ச்சியை காண்பிக்கவே, சர்க்கார் பிடிவாதமாக அவர்களுடைய இயக்கத்தின் முதுகெலும்பை முறிக்கப் பார்த்து தாற்காலிகமாக வெற்றி பெற்றார்கள். ஆனால் இயக்கம் இறங்கவில்லை. உள்ளுக்குள்ளாகவே புகைந்து கொண்டிருந்தது. பழைய நாட்களைப்போல, பெருந்திரளான கூட்டங்கள் இல்லை. ஆனால் பழைய தொண்டர்கள் மனமுடையாமல், கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து சலிக்காமல் உழைத்து, இயக்கத்தைக் காப்பாற்றிவந்தார்கள். சுயராஜ்யப்போரில், 'சிறை செல்வதற்கு காங்கிரஸ் உத்தரவு கொடுத்தது 1921-ம் ஆண்டுக் கடைசியிலே. ஆனால் அதற்கு வெகுகாலம் முன்னமேயே குடியானவர்கள் தங்கள் இயக்கத்துக்காகச்சிறை சென்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டில் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்தும் குடியானவர்கள் காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டு, ஏராளமாகச் சிறைக்குச் சென்றார்கள்.

அரசாங்கத்தார், குடியானவர்களின் இயக்கத்தைக் கண்டு பயந்து, ஒரு குடிவார சம்பந்தச்சட்டத்தை துரிதமாக இயற்றினார்கள். இந்தச் சட்டத்தினால் குடியானவர்களுக்கு ஓரளவு பரிகாரம் கிடைக்கும்போல் முதலில் தோன்றிற்று. ஆனால் இயக்கம் அடக்கப்பட்டுவிட்டது என்று தெரிந்ததும், இந்தச் சட்டத்தின் பரிகார ஷரத்துக்களைக் குறைத்துவிட்டார்கள். ஒரே ஒரு முக்கியமான மாறுதல்தான் இந்தச் சட்டத்தினால் ஏற்பட்டது. அயோத்திக் குடியானவனுக்கு சாசுவதக் குத்தகைப் பாத்தியம் கிடைத்தது. இது குடியானவனுக்குச் சொல்லளவிலே, இனிப்பைக் கொடுத்தாலும், அவனுடைய வாழ்க்கையிலே சிறிதளவுகூட செழிப்பு ஏற்படவில்லை. அயோத்தியில் நில சம்பந்தமான சிறிய கலவரங்கள் எழுந்துகொண்டேயிருந்தன. 1929-ம் வருடத்தில் துவக்கிய உலகப்பொருளாதார மந்தத்தினால் தானியங்களின் விலை குறைந்துபோகவே, மீண்டும் பெரியதொரு நெருக்கடி ஏற்பட்டுவிட்டது.

X

## ஒத்துழையாமை

அயோத்திக் குடியானவர்களின் எழுச்சியைப்பற்றி, விவரமாகச் சிறிதுகூறினேன். ஏன்? தேசீயவாதிகள் கவனம் செலுத்தாத ஒரு முக்கியப்பிரச்சினையை இந்த எழுச்சி எங்களுக்கு அறிமுகம் செய்வித்தது. நில சம்பந்தமான கஷ்டங்கள் அடிக்கடி இந்தியாவில் ஏதாவதொரு பகுதியில் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. குடியானவர்களின் நீடித்த அதிருப்திதான் இதற்குக்காரணம். 1920-21-ம் ஆண்டுகளில் அயோத்தியின் சில பகுதிகளிலேற்பட்ட குடியானவர்களின் கிளர்ச்சி இந்த அதிருப்திக்கு ஓர் அடையாளமாகும். ஆனால் இது சிலவிதங்களில் ஆச்சரியமாகவும், எங்களுக்குப் படிப்பினை கற்பிக்கக்கூடியதாகவும் இருந்தது. ஆரம்பத்தில் அவ்வெழுச்சிக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை. அரசியல் வாதிகள் அதைத் தூண்டிவிடவும் இல்லை. வெளியார்களின் வேலை ஒன்றும் கடைசிவரையில் அதன்போக்கை மாற்றவில்லை. அகில இந்தியப் பிரச்னை சம்பந்தப் பட்டவரையிலும், இது தனிப்பிரதேசச் சம்பவமென்று கருதப்பட்டது. இதைப் பற்றி சிறிதளவு கூடக் கவனம் செலுத்தப்படவில்லையென்பது உண்மை. ஐக்கிய மாகாணப் பத்திரிகைகள்கூட, இந்தச் செய்திகளை மிகவும் அலட்சியம் செய்துவந்தன. கிராமத்திலே வசிக்கும் பாதி நிர்வாணக் குடியானவர்களது செயல்களும் துயரங்களும் பத்திரிகை படிக்கும் நகரவாசிகளுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் கவனிக்கத்தக்க விஷயங்களாக இருக்கவில்லை.

ஜனங்கள் பாஞ்சாலப் படுகொலையையும் கிலாபத் அநீதிகளையும் பற்றித்தான், அப்பொழுது பேசிக்கொண்டிருந்தார்கள். இந்த அநீதிகளுக்குப் பரிகாரம் தேடுவதற்காக எழுந்த ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றி நாடெங்கும் ஒரே பேச்சு. தேச விடுதலை அல்லது சுயராஜ்யம் என்ற பெரிய பிரச்னையைப்பற்றி யாவரும் வற்புறுத்திப் பேசவில்லை. நிச்சய சங்கற்பமில்லாத பெரும் லக்ஷ்யங்களை ஏற்றுக்கொள்வது எப்பொழுதும் காந்திஜிக்குப் பிடிக்காது. குறிப்பிட்ட தெளிவான லக்ஷியங்களில் தமது முழுக்கவனத்தையும் செலுத்துவது

தான் அவரது வழக்கம். என்றாலும் ஸ்வராஜ்யமென்பது ஜனங்களின் கருத்திலே மிதந்துகிடந்தது. எங்கும் இதைப் பற்றி நினைப்பு. பெரிய பெரிய மகாநாடுகளிலும் கூட்டங்களிலும் இதைப்பற்றி அடிக்கடி பேசிவந்தார்கள்.

1920-ம் ஆண்டில் கல்கத்தாவில் விசேஷ காங்கிரஸ் கூடிற்று. ஒத்துழையாமையைப்பற்றி தீர்க்கமாக ஆலோசித்து முடிவுக்குவருவதற்காகவும் நாட்டின் நிலைமையைக் கருதி, என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்பதை முடிவுகட்டுவதற்காகவும் இந்த விசேஷக் காங்கிரஸ் கூட்டப்பெற்றது. இந்தியாவிலிருந்து பல ஆண்டுகளாகப் பிரிந்து, அமெரிக்க ஐக்கிய தேசங்களில் வசித்துவந்த லாலா லஜபதிராய் அச்சமயம்தான் இந்தியாவுக்குவந்தார். விசேஷ காங்கிரசுக்கு அவர் தலைமை வகித்தார். புதிய யோசனையான ஒத்துழையாமை அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் அதை எதிர்த்தார்.

அவரைத் தீவிரவாதியாகப் பொதுஜனங்கள் இந்தியாவில் மதிப்பது வழக்கம். ஆனால் அவருடைய பொதுவான மனப்பான்மை மிதவாதத் தன்மைகொண்டதாகும். சட்டவரம்புக்குட்பட்ட கிளர்ச்சிதான் அவருடைய நோக்கம். சந்தர்ப்பங்களின் சூழ்ச்சியால், அவர் லோகமான்ய திலகர் முதலிய தீவிரவாதிகளோடு கட்சி சேரும்படியாக நேர்ந்தது. அவருடைய கொள்கைகளால் அல்ல; அவர் நீண்ட காலம் வெளிநாடுகளில் வசித்துவந்ததால், ஆசாரத்திருத்த, பொருளாதாரத் துறைகளில் அவருடைய கவனம் அதிகமாகச் சென்றுவந்தது. எனவே இவரிடம் ஏனைய இந்தியத் தலைவர்களைக் காட்டிலும் அதிகமாகப் பரந்தநோக்கம் இருந்தது.

(கவி லார்டு பைரனின் மருமகனை) வில்பிரெட் ஸ்காவன்பிளண்ட் என்பவர் தமது டயரியில், 1909-ம் வருஷத்தில், கோகலே, லாலாஜி முதலியவர்களைப்பற்றி குறிப்புகள் எழுதியிருக்கிறார். கோகலேயும், லாலாஜீயும் அதிக ஜாக்கிரதை யுள்ளவர்கள்என்றும், நிலைமையை உள்ளபடி அறிந்து அதற்கேற்றவாறு நடக்க அச்சங்கொண்டவர்களென்றும் அவர் இவர்களைப்பற்றிக் கடுமையாக எழுதியிருக்கிறார். என்றாலும் லாலாஜி மற்ற இந்தியத் தலைவர்களைக்காட்டிலும் தைரியமாகவே நடந்துகொண்டிருந்தார். பிளண்ட் அவர்கள் வரைந்த குறிப்புகளினின்றும் நாம் அறியக்கூடியது ஒன்றேயொன்றுதான். அக்காலத்தில் நம் தலைவர்களின் மனப்போக்

கும், நம்முடைய அரசியல் கிளர்ச்சியின் தன்மையும், அனுபவமுள்ள புத்திசாலியான அன்னியர் ஒருவருக்கு எவ்வாறு தோன்றிற்று என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடும். ஆனால் பத்துவருஷ வித்தியாசத்தினால், இவைகள் பெரிதும் மாறிப் போய்விட்டன.

ஒத்துழையாமையை லாலாஜிமட்டும்தான் எதிர்த்தார் என்று எண்ணவேண்டாம். மிகக் கீர்த்திவாய்ந்த இந்தியத் தலைவர்கள் கோஷ்டி அவரோடு சேர்ந்து ஒத்துழையாமையை எதிர்த்தது. காந்திஜியின் ஒத்துழையாமைத் தீர்மானத்தைப் பழைய காங்கிரஸ் தலைவர்கள் எல்லோருமே ஒருமுகமாக எதிர்த்தார்கள் என்று சொல்லலாம். இந்த எதிர்ப்புக்குத் தலைமையாக நின்றவர் தேசபந்துதாஸ். இந்தத் தீர்மானத்துக்கு அஸ்திவரமாய் இருந்த மனப்பான்மையில் தேசபந்துவுக்கு மிகவும் பற்றுதல்தான். காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தைக் காட்டிலும் இன்னும் தீவிரமாகச் செல்லத் தயாராக விருந்தார். ஆனால் அவருக்குச் சட்டசபை பகிஷ்காரம் பிடிக்கவே இல்லை.

பழைய காங்கிரஸ் தலைவர்களுக்குள் என்னுடைய தகப்பனார் ஒருவர்தான் காந்திஜிக்குச் சாதகமாக அப்பொழுது இருந்தார். அவர் அப்படி காந்திஜிக்குச் சாதகமாக இருந்தது எளிதான காரியமல்ல. எதிர்க்கட்சியில் நின்றுகொண்டு போராடும் தமது பழைய சகாக்கள் கூறும் ஆட்சேபங்களில் என்னுடைய தகப்பனாருக்கும் நம்பிக்கையுண்டு. வழிதெரியாத புதுப்பாதையில் போவதென்றால் அவருக்குப் பிடிக்காது. அவர் மிகவும் தயங்கினார். என்றாலும் அவருக்குச் செயலில் மிகவும் ஆசை. தாம் நினைத்ததுபோல் ஒத்துழையாமைத் திட்டத்தில் அமைக்கப்படாவிட்டாலும், காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தால் தேசத்தில் வெறும் பேச்சு பேசுவது நின்றுபோய், செயலுக்குக் தூண்டுதல் ஏற்படுமென்று அவருக்குத் தோன்றிற்று. நீண்டகாலம் யோசித்து, யோசித்துக் கடைசியாக முடிவுக்குவந்து, காந்திஜி சொல்வதை ஏற்றுக்கொண்டார். அவர் காந்திஜியோடும் தேசபந்துவோடும் நீண்டகாலம் தர்க்கவாதம் செய்தார். தேசபந்துவும் என் தகப்பனாரும் ஒரு பெரிய ஜமீன்தார் வழக்கில் எதிர்க் கட்சிகளில் ஆஜராகி இருந்தபடியால், அவர்கள் அடிக்கடி கலந்துபேசுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. அவர்களிருவருடைய மனப்பான்மைகளும் பொதுவானவை; அவர்

கள் இருவரும் ஒரே முடிவைத்தான் கொண்டவர்கள். ஆனால் அவர்களின் சுபாவங்களில் சொல்பவித்தியாசம் அவர்களிரு வரையும் எதிர்க்கட்சியில் கொண்டுபோய் தள்ளிவிட்டது. மூன்று மாதங்களுக்குப்பிறகு அவர்களிருவரும் மீண்டும் நாகபுரி காங்கிரஸில் சந்தித்தார்கள். அதன்பின்னர் ஒன்று சேர்ந்து நாளுக்குநாள் நெருக்கமாகப் பழகத்துவக்கினார்கள்.

கல்கத்தா விசேஷக் காங்கிரசுக்கு முன்பு நான் தகப்பனாரை அதிகமாக சந்தித்துப் பேசியதில்லை. ஆனால் அவரைப் பார்த்தபொழுதெல்லாம் அவர் இந்தியப் பிரச்னை யைப்பற்றிக் கடுமையாக யோசித்துக் கொண்டிருந்தார் என்று கண்டுகொண்டேன். இதிலே பல சிக்கல்கள் இருப்பி னும் ஒத்துழையாமையை ஏற்பதென்றால் தாம் அடியோடு மாறிவிட வேண்டுமே என்பதைப் பற்றி அவர் யோசித்தி ருக்கலாம். ஒத்துழையாமையென்றால் அவர் தமது வக்கீல் தொழிலை நிறுத்திவிட வேண்டும். அவருக்கு அப்பொழுது அறுபதாவது ஆண்டு நடந்துகொண்டிருந்தது. இந்தப்பருவத் தில் அவர் தமது பழைய வழக்கங்கள் யாவையும் மூட்டை கட்டி எறிந்துவிட்டு புதியவைகளைக் கைக்கொள்வதென்றால் சுலபமான காரியமல்ல. ஒத்துழையாமையைச் சேர்ந்தால் தன்தொழிலோடு பழைய நண்பர்களையும் சமூகவாழ்க்கை யையும் விட்டுவிடவேண்டும். மேலும் அவர் ஏராளமாகப் பணச்செலவு பிடிக்கும் பழக்கங்களை கைக்கொண்டிருப்பவர். தன் பெரிய வருமானத்தை இழப்பதென்பது ஒரு லேசான விஷயம் அல்ல. வருமானத்தை அவர் இழக்கவேண்டுமானால், தமது வாழ்க்கையை அவர் அடியோடு மாற்றிக்கொண்டு தான் ஆகவேண்டும். அவருடைய தன் மதிப்பு, அபிமானம் பகுத்தறிவு இவை மூன்றும் ஒன்றுசேர்ந்து "ஒத்துழையாமை யில் சேர்" என்று பிடரியைப்பிடித்து அவரைத் தள்ளிவிட் டன. பாஞ்சாலப் படுகொலை காலத்திலும் அதற்குப்பின் னரும் நேர்ந்த கொடுமையான நிகழ்ச்சிகளால் அவருடைய உள்ளத்தில் கோபக்கனல் கொழுந்துவிட்டு எரிந்துகொண் டிருந்தது. அநியாயத்தைக்கண்டு பொங்கினார். தேசத்தார் கிடந்து உழன்றுகொண்டிருந்த அவமான நிலைமையைப் பார்த்து அவர் மனதிலே மிகுந்த கசப்பு உண்டாயிற்று. இவை கள் எல்லாவற்றிற்கும் ஏதாவது ஒருபரிகாரம் வேண்டு மென்று ஆத்திரப்பட்டார். ஆனால் உற்சாக மேலீட்டால் எதையும் செய்பவர் அல்லர். லாபாலாபங்களைப் பற்றி

தமது கூர்மையான மதியைக்கொண்டு நன்றாக அலசிப் பார்த்த பின்னர்தான் அவர் ஒரு முடிவுக்கு வருவார். இந்த முறைப்படிதான் இப்பொழுதும் காந்திஜியுடன் போராட்டத்தில் சேர்ந்துகொண்டார்.

காந்திஜியின் குணங்கள் அவரைப் பரவசப்படுத்தின. இவையும் அவரைக் காந்திஜியோடு சேரும்படியாகத் தூண்டியிருக்க வேண்டும். ஏனெனில் யாரிடம் தகப்பனருக்கு வெறுப்போ; அந்தப் பேர்வழியுடன் அவர் ஒரு நாளும் சேர மாட்டார். அவருக்கு விருப்பு வெறுப்பு ரொம்ப அதிகம். தகப்பனரும் காந்திஜியும் ஒரு விநோதமான சேர்க்கையாக இருந்தது. காந்திஜி ஒரு ஸாது; ஒரு வைராகி; மதப் பற்றுகொண்டவர். உடலின்பம் கொடுக்கக் கூடிய எதையும் விரும்பாமல், அவைகளை ஆயுட் காலம் முழுதும் விலக்கி வைத்தவர். தகப்பனரோ வாழ்க்கையில் அபரிமிதமான ருசியைக் கண்டவர்; உடலின்பங்களை விரும்பி நாடுபவர்; இறந்த பிறகு என்ன நேரும் என்பதைப் பற்றி, ஒரு சிறிதும் கவலைப்படாதவர். மனோ தர்ம நிபுணர்களின் பாஷையில், உடலை வெறுத்து ஆத்மாவை நோக்கிச் சென்றவனும், ஆத்மாவை வெறுத்து வெளி நோக்கிச் சென்றவனும் சந்தித்ததென்று சொல்லலாம்.

என்றாலும் இவர்களுக்குள்ளே பொதுவான நோக்கங்களும் போக்குகளும் பல இருந்தன. ஆகவே சில ஆண்டுகளுக்குப் பின்னர் அரசியலில் இருவரும் அபிப்பிராய பேதம் கொண்டபோதிலும் அவர்களுக்குள் இருந்த நெருக்கமான நட்பு உடைந்து போகவேயில்லை. வாழ்க்கையை வெறுக்கும் வைராகியும் வாழ்க்கையை ருசியுடன் அனுபவிக்க ஆசை கொள்ளும் ரஸிகனும் இரண்டு எதிர்க்கோடிகளிலிருந்து, பிரயாணம் செய்தபோதிலும் எவ்வாறோ ஒருவரையொருவர் நன்றாக அறிந்துகொண்டு, நட்புடன் பழக விருப்பங்கொண்டவர்களாக ஆகிறார்கள் என்று வால்டர் பேடர் என்ற ஆசிரியர் தமது நூல்கள் ஒன்றில் எழுதியிருக்கிறார். வைராகியும் ரஸிகனும் வாழ்க்கையில் மனப்பூர்வமான சிரத்தை கொண்டவர்கள். இந்தச் சிரத்தையினாலே இருவரும் பல தடவைகளில் மனங்கூட சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

கல்கத்தா விசேஷக் காங்கிரஸிலிருந்துதான் அரசியல் உலகில் காந்தி ஸகாப்தம் துவக்கம். இன்று வரையில் அந்த ஸகாப்தம் வளர்ந்துகொண்டே வருகிறது என்று சொல்ல

லாம். நடுவே இரண்டொரு ஆண்டுகள் மட்டும் என் தகப்பனாரும், தேசபந்து தாஸும் சுயராஜ்யக் கட்சியை அமைத்துத் தேசத்தை நடத்திய காலத்தில், காந்திஜீ கொஞ்சம் பின் நின்றுகொண் டிருந்தார். காங்கிரஸின் தோற்றமே அடியோடு மாறிவிட்டது. ஐரோப்பிய உடைகள் மறைந்து போயின. எங்கு பார்த்தாலும் கதர் உடைதான். காங்கிரஸுக்கு வந்த பிரதிநிதிகளோ பழைய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே இருக்கும் நடுத்தர வகுப்பினர், ஏராளமாகக் காங்கிரஸில் வந்து சேர்ந்தார்கள். காங்கிரஸிலே வர வர அதிகமாக ஹிந்துஸ்தானி பாஷையில் பேச ஆரம்பித்தார்கள். சில சமயங்களில் அந்தந்த மாகாண பாஷைகளிலும் காங்கிரஸ் நடவடிக்கைகள் நடைபெறும். தேசீய வேலைக்கு அந்நிய பாஷையை உபயோகப்படுத்தலாகாது என்ற கொள்கையும் வளர்ந்துகொண்டே வந்தது. காங்கிரஸ் கூட்டங்களிலே புதிய உயிரும், உற்சாகமும், ஆர்வமும் காணப்பட்டன.

காங்கிரஸ் முடிந்ததும் காந்திஜீ அமிர்தபஜார் பத்திரிகையின் கனிந்து பழுத்த ஆசிரியரான ஸ்ரீஜத் மோதிலால் கோஷ் அவர்களை பார்க்கப் போயிருந்தார். மோதிலால் கோஷ் அப்பொழுது மரணப் படுக்கையில் இருந்தார். காந்திஜீயோடு கூட, நானும் போயிருந்தேன். பாபு மோதிலால் காந்திஜீக்கும், அவரது இயக்கத்துக்கும் வாழ்த்துக் கூறினர். "நானோ வேறு லோகங்களுக்குப் போகிறேன். அந்த லோகங்கள் எங்கே இருக்கின்றனவென்று எனக்குத் தெரியாது. ஆனல் எனக்கு ஒரு மகத்தான திருப்தி. ஆங்கில சாம்ராஜ்யக் கொடி பறக்காத ஒரு இடத்துக்கு நான் போய்ச் சேர்வேன் என்பது நிச்சயம். ஆங்கில சாம்ராஜ்ய எல்லையை விட்டுப் போகக் கூடிய காலம் வந்ததே என்று எனக்குச் சந்தோஷம்" என அவர் சொன்னர்.

கல்கத்தா விசேஷக் காங்கிரஸிலிருந்து நாங்கள் திரும்பிப் போகும் வழியில், காந்திஜீயோடு நானும் சாந்திநிகேதனத்துக்குப் போய், ரவீந்திரநாத் தாகூரையும், அவருடைய தமயனர் 'படே தாதாவையும்' பார்த்தேன். "படே தாதா" அன்பின் உருவம். நாங்கள் சில நாட்கள் அங்கே தங்கி யிருந்தோம். அப்பொழுது சி. எப். ஆண்ட்ரூஸ் அவர்கள் எனக்குச் சில புஸ்தகங்கள் கொடுத்தார். அந்த நூல்களால், நான் பெரிதும் பயன் அடைந்தேன். சாம்ராஜ்யக் கொள்கைகளின்

விளைவுகள் ஆப்பிரிக்காவில் வெகு தெளிவாக காணப்பட்ட வகையை இந்த நூல்கள் விரிவாக வர்ணித்திருக்கின்றன. "கறுப்பு மனிதனுடைய சுமை" என்று "மோரெல்" எழுதிய நூல் என்னை மிகுதியும் உருக்கிவிட்டது.

அந்தச் சமயத்திலோ அல்லது சிறிது காலங் கழித்தோ சி. எப். ஆண்ட்ரூஸ் அவர்கள் இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்யம் வேண்டும் என்று ஒரு துண்டுப் பிரசுரம் எழுதினார். "பூர்ண சுயராஜ்யம்-தற்போதைய தேவை" என்பது அந்தத் துண்டுப் பிரசுரத்தின் பெயர் என்று ஞாபகம். இந்தத் துண்டுப் பிரசுரம் 'ஸீலி' என்ற ஆசிரியர் ஏற்கனவே இந்தியாவைப் பற்றி எழுதிய கருத்துக்களைத் தழுவிய தாகும். இப்பிரசுரத்தில் காணப்பட்ட கட்சி வாதங்கள் அசைக்க முடியாதவைகளாக எனக்குத் தோன்றின. எங்களுடைய உள்ளக் கிடக்கைகளை, கண்ணாடியில் காட்டுவது போல இந்தப் பிரசுரம் காண்பித்திருப்பதாக எனக்குப் பட்டது. அவருடைய நடை எளிதாகவும், தெளிவாகவும், சிரத்தை மிகுந்ததாகவும் இருந்தது. எங்களுடைய அறைகுறையான ஆசைகள் எல்லாம் அவருடைய பாஷையின் மூலமாகத் தெளிவான உருவம் அடைந்ததாகத் தென்பட்டது. அவர் எழுதியதில் பொருளாதார அல்லது அபேதவாத அடிப்படைக் கொள்கைகள் ஒன்றும் காணப்படவில்லை. துண்டுப் பிரசுரம் முழுதும் தேசீய மயம். இந்தியா இருக்கும் மானக்கேடான நிலைமையை எப்படியேனும் மாற்றி, நம்முடைய சீர் குலைவைத் தடுக்க வேண்டும் என்பதைக் குறித்து அப்பிரசுரம் விரிவாக எழுதி யிருக்கிறது. சி. எப். ஆண்ட்ரூஸ் ஒரு அந்நியர். இந்தியாவை ஆளும் இனத்தாரைச் சேர்ந்தவர். அவர் நம்முடைய உள்ளத்தை அப்படியே எடுத்துக் கூறுவதென்றால், அது ஆச்சரியம் அல்லவா! ஒத்துழையாமை யென்பது என்ன என்பதைப் பற்றி ஸீலி என்பவர் நீண்ட காலத்துக்கு முன்னமேயே விளக்கிக் காண்பித்திருக்கிறார். அந்நியனுக்கு உதவி புரிந்து, அவனது ஆட்சியை நிலைபெறச் செய்தல் மானக்கேடான காரியம் என்ற எண்ணமே ஒத்துழையாமையாகும். "உள்ளம் பொங்கி எழுந்தால் ஒழிய, மீட்சிக்கு வழியில்லை.

"இந்த எழுச்சிக்குத் தேவையான வெடி சக்தி இந்தியாவின் ஆன்மாவிலேயே தோன்ற வேண்டும்; அந்த சக்தியை கடன் வாங்க முடியாது; தானமாகப் பெற முடியாது; சலு

கையாக அடைய முடியாது; ஸர்க்கார் அறிக்கைகளால் அந்த சக்தி தோன்ருது; பட்டயங்களாலும் உண்டாகாது; அந்த சக்தி ஜனசமூகத்தின் மனத்துள் இருந்து சீறி எழ வேண்டும். "விடுதலை பெறுங்கள்; இனியும் அடிமைகளாக இராதீர்கள்" என்று இந்தியாவுக்கு மகாத்மா காந்தி, மூல மந்திரோபதேசம் செய்தபொழுது, என் மனமும், ஆத்மாவும் விடுதலை பெற்று ஆனந்தக் கூத்து ஆடினேன். ஒரு பெரிய சுமை என் உள்ளத்திலிருந்து நீங்கியதாகக் கருதினேன். காந்திஜியின் உபதேசத்தை இந்தியா ஏற்றுக்கொண்டது மிகவும் மகிழ்ச்சி தரக் கூடிய விஷயமாகும். திடீரென்று பாரதத் தாயின் விலங்குகள் தளர்ந்து விடுதலையின் வழி திறந்து விட்டது என்று தீனபந்து ஆண்ட்ரூஸ் எழுதியிருந்தார்.

அடுத்த மூன்று மாதம், தேசம் முழுதும் ஒத்துழையாமை அலை மோதி எழ ஆரம்பித்துவிட்டது. சட்டசபைத் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாதென்று காங்கிரஸ் அறிவித்தது. சட்டசபை பகிஷ்காரம் மிகுதியும் வெற்றியுடன் நடந்தேறிவிட்டது. ஒருவர்கூட பாக்கியில்லாமல் எல்லா வாக்காளர்களும் ஓட் போடாமல் பகிஷ்கரிக்கச் செய்வது அசாத்தியமான காரியம். அப்படியே சட்ட சபை ஸ்தானங்களையும் காலியாக வைத்திருப்பது சாத்தியமல்ல. சில வாக்காளர்கள் வோட்டுப் போட்டார்கள். அல்லது போட்டி யில்லாமல் தேர்தல் நடைபெற்றது. ஆனால் வாக்காளர்களில் பெரும் பான்மையோர் வோட்டுக் கொடுக்காமல் நின்றுவிட்டார்கள். தேசத்தில் அப்பொழுது இருந்த அபிப்பிராயத்தைப் பொருட்படுத்துவோர்கள் அபேக்ஷகர்களாக நிற்கத் துணியவில்லை. தேர்தல் சமயத்தில் ஸர். வாலண்டயின் ஷிரோல் என்ற கீர்த்தி பெற்ற பத்திரிகை நிருபர் அலகாபாத்திலிருந்தார். வோட்டுப் போடுமிடங்களைப் போய்ச்சுற்றிப்பார்த்தார். பகிஷ்காரத்தின் திறமையைக் கண்டு திகைத்தார். அலகாபாத் நகரத்துக்கு 25 மைல் தூரத்திலிருந்த ஒரு கிராமத்திலிருந்த வோட்டு போடும் இடத்துக்கு ஒரு வாக்காளர்கூடப் போகவேயில்லை யென்று அவர் கண்டார். அவர் இந்தியாவைப் பற்றி எழுதி யிருக்கும் நூல்களொன்றில் இந்த அனுபவங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

பகிஷ்காரம் செய்தது தவறு என்று தேசபந்து தாசும், ஏனையோரும் கல்கத்தா காங்கிரஸில் ஆட்சேபித்துப் பேசினார்கள். ஆனால் காங்கிரஸ், பகிஷ்காரத் தீர்மானம் செய்த

தும் அவர்கள் அதையேற்றுக்கொண்டு அதன்படி நடந்தார்கள். தேர்தல் நடந்தேறியதும், இந்த வித்தியாசமும் மறைந்து போயிற்று. எனவே 1920-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், நாகபுரியில் கூடிய காங்கிரஸில், தலைவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, ஒத்துழையாமையை ஏற்றுக்கொண்டார்கள். சந்தேகங்கொண்டு தயங்கினவர்கள் கூட, இயக்கத்தின் வெற்றியைக்கண்டு மனஉறுதி கொண்டார்கள். ❁

ஆனால், கல்கத்தா கூட்டத்திற்குப்பின் சிலபழைய தலைவர்கள் காங்கிரஸிலிருந்து விலகிக்கொண்டார்கள். இவர்களில் முக்கியமானவர் எம். ஏ. ஜின்னா அவர்கள். மிகவும் செல்வாக்கு உள்ளவர்; இவரை, ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்குத் தூதர் என்று சரோஜினி நாயுடு ஒருசமயம் பட்டம் சூட்டி இருந்தார். முஸ்லீம் லீக்கைக் காங்கிரசோடு சேர்ந்து வேலை செய்யும்படியாகத் தூண்டியவர் இவரே என்றும் சொல்லலாம். ஆனால் ஒத்துழையாமைத் திட்டத்தாலும் பொதுஜனங்களைப் பெருவாரியாகச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டுத் திருத்தியமைக்கப்பட்ட காங்கிரஸின் புதிய அமைப்பினாலும் ஏற்பட்ட மாறுதல்கள் ஜின்னாவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆயினும், அரசியல் சம்பந்தமான காரணங்களால் மட்டும் அவர் காங்கிரஸினின்றும் விலகிக்கொண்டதாகக் கூறமுடியாது. அவரைக் காட்டிலும் தீவிரத்தில் குறைந்தவர்களாக இருந்தவர்கள்கூட காங்கிரஸில் இருந்துவந்தார்கள். ஆனால் அவருக்குப் புதுக் காங்கிரஸின் போக்கில் அருவருப்பு ஏற்பட்டுவிட்டது. கதர் கட்டும் ஹிந்துஸ்தானியில் பேசும் கூட்டத்தில் கண்ணைக்கட்டி காட்டில் விடப்பட்டவர்போல் திகைத்தார். ஜனங்களுடைய உற்சாகத்தை வெறி என்று அவமதித்தார். லண்டன் மாளிகைக்கும் இந்தியக் குடிசைக்கும் உள்ள வேற்றுமை அவருக்கும் சாதாரண இந்தியமக்களுக்கும் இடையே இருந்தது. காங்கிரஸிலே, மெட்ரிகுலேஷன் பரீக்ஷை கொடுத்தவர்களைத்தான் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒருசமயம் ஜின்னா அவர்கள் யோசனை கூறினார். இந்த விநோதமான யோசனையை அவர் வேடிக்கையாகச் சொல்லியிருக்கலாம். ஆனால் அந்த மனப்பான்மைதான் அவருக்கு இயற்கையானது. எனவே அவர், காங்கிரஸைவிட்டு விலகி இந்திய அரசியலிலே அவர் தனிப் பேர்வழியானார். பின்னால் தம்முடைய பழைய ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை முயற்சியை அடியோடு மறந்துவிட்டு பிற்

போக்கான முஸ்லீம்களோடு சேர்ந்துகொண்டத் விசனிக்கத்தக்கது.

மிதவாதிகளுக்கும் காங்கிரசுக்கும் இடையே சம்பந்தம் அறவே ஒழிந்துவிட்டது. அவர்கள் காங்கிரஸைவிட்டு விலகிக் கொண்டதுமல்லாமல் அரசாங்கத்தாரிடம் ஐக்கியமாய்ப் போனார்கள். மந்திரிகள் ஆனார்கள்; புதியதிட்டத்தில், பெரிய அரசாங்க உத்தியோகங்களை அவர்கள் வகித்தார்கள். ஒத்துழையாமையையும் காங்கிரஸையும் எதிர்த்துப் போராடி அரசாங்கத்தாருக்கு ஒத்தாசை செய்தார்கள். அவர்கள் விரும்பினதெல்லாம் அவர்களுக்குக் கிடைத்து விட்டன. "சில சீர்திருத்தங்கள் கிடைத்துவிட்டன. இனிமேல் எதற்காகக் கிளர்ச்சிசெய்யவேண்டும்?" என்பதே அவர்கள் பல்லவி. தேசமெங்கும் பரபரப்பும் புரட்சி எழுச்சியும் பரவிக்கொண்டுவந்த தருணத்தில் மிதவாதிகள் சுயராஜ்யப் போருக்கு விரோதிகளாகவும் அரசாங்கத்தின் பங்காளிகளாகவும் மாறிவிட்டார்கள். அவர்கள் பொதுமக்களிடமிருந்து முற்றிலும் பிரிந்து போனார்கள். எந்த பிரச்னையையும் அரசாங்கத்தின் கண்களைக் கொண்டு பார்க்கும் வழக்கத்தை கைக்கொண்டு, அதைத் தங்கள் சுபாவமாகக் கொண்டு விட்டார்கள். உண்மையான ஒரு கட்சியாக அவர்களைக் கூறமுடியாது. ஒவ்வொரு மாகாணத்திலும் தனித் தனி பேர்வழிகளாக அவர்கள் இருந்துவந்தார்கள். சீனிவாசசாஸ்திரியார் சாம்ராஜ்ய தூதராக, விளங்கினார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளையும், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களையும் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவர் அந்நாடுகளில் இந்தியாவில் அப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருந்த போராட்டத்துக்காக காங்கிரசையும், தமது தேசத்தாரையும் பழிகூறுவதையே ஒரு முக்கிய வேலையாகக் கொண்டிருந்தார்.

இருந்தாலும், மிதவாதிகளுக்குச் சந்தோஷமும் திருப்தியும் ஏற்படவில்லை. தங்களுடைய சொந்தஜனங்களிடமிருந்தே பிரிந்துவாழ நேர்ந்த அனுபவம், அவர்களுக்கு இன்பத்தைத் தரவில்லை. தங்களிடம் ஜனங்களுக்கு வெறுப்பு என்பதை அவர்கள் அறிந்தார்கள். ஒரு மகத்தான பொது இயக்கத்தை எதிர்ப்பவர்களிடம் ஜனங்கள் பொறுமையிழப்பது சகஜம். காந்திஜீயின் உபதேசத்தால் இந்த ஆத்திரம் சிறிது சாந்தப்படுத்தப்பட்டது. எனினும் இந்த இயக்கத்தால் எப்படி ஒத்துழையாதார்களுக்கு உயிரும் ஊக்கமும் உண்டாயிற்றோ

அப்படியே அவர்களை எதிர்த்தவர்கள் மூச்சுத்திணறிப்போகும் படியாகவும் ஏற்பட்டது. பொதுஜன எழுச்சியைக்கொண்ட எந்த இயக்கத்திலும இத்தகைய இருவித விளைவுகளையும் காணலாம். பொதுஜனத் தலைவர்கள் என்று, மக்கள் யாரை ஆதரிக்கின்றார்களோ, அத்தகைய தலைவர்களின் செல்வாக்கு இந்த இயக்கங்களால் வெகு விரைவில் விருத்தியடைந்து விடும். பொதுஜன விரோதி என்று மதிக்கப்படுவோர்களை, ஜனங்கள் அழுத்திச் செல்வாக்கில்லாமல் செய்துவிடுவார்கள்.

ஒத்துழையாதார்கள் எதிர்க்கட்சியைச் சகிப்பவர்களல்ல என்று பழி அவர்கள்பேரில் சுமத்தப்பட்டது. அவர்கள் அனைவரும் சொந்த புத்தியை இல்லாமல், இயந்திரங்களைப் போல் வேலைசெய்கிறார்கள் என்றும் குறைகூறப்பட்டது. இந்த இரண்டு குறிப்புகளிலும் சிறிதளவு உண்மை உண்டு. ஆனால் பழி சுமத்துவதில் பயனில்லை. ஒத்துழையாமை என்பது பொதுஜன இயக்கம். அதை நடத்தியவரோ, உலகப் பிரசித்தமான ஒருவர். அவரிடம் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு மட்டற்ற பக்தி: எனவே, இதற்குமாறாக நிற்பவர்களுக்கு இடமில்லாததைப் பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை. மேலும், ஜனங்களுக்கு உள்ளத்தில் மகத்தான விடுதலையுணர்ச்சி ஏற்பட்டுத் தங்களுடைய திக்கற்ற நிலைமை நீங்கியதாக எண்ணிக்கொண்டார்கள். அவர்களை வருத்தி வந்த அச்சம் மாயமாய் மறைந்துபோய்விட்டது. தங்கள் முதுகை நிமிர்த்தித் தலையை உயர்த்தி, நடக்கத் துவக்கிவிட்டார்கள். மூலைமுடுக்குகளிலும் கடைத்தெருக்களிலும்கூட, சாதாரண ஜனங்கள் காங்கிரசைப்பற்றியும், சுயராஜ்யத்தைப் பற்றியும் பேச ஆரம்பித்துவிட்டார்கள். பாஞ்சாலப் படுகொலையைப்பற்றியும், கிலாபத்தின் பங்கத்தைப்பற்றியும் பேச ஆரம்பித்துவிட்டார்கள். கிராமாந்திரங்களில் இந்தக் கிலாபத் என்ற சொல்லுக்கு ஒரு விநோத அர்த்தம் செய்யப்பட்டது: உருது பாஷையில் கிலாப் என்று ஒரு வார்த்தைக்கு விரோதமாக என்று அர்த்தம். கிலாபத் என்பது கிலாப என்ற வார்த்தையிலிருந்து வந்ததாயும், அது சர்க்காருக்கு எதிராயுள்ள இயக்கமென்றும் கிராமவாசிகள் நினைத்தார்கள். அதிகமாகத் தங்களுடைய பொருளாதாரக் குறைகளைப்பற்றித் தான் அவர்களுக்குள் அதிகமாகப் பேச்சு நடைபெறும். அநேக கூட்டங்களாலும் மகாநாடுகளாலும் அவர்களுக்கு அரசியலில் அதிகமான அறிவு உண்டாயிற்று.

1921-ம் வருஷம் காங்கிரஸ் திட்டத்துக்காகப் பிரசாரம் செய்து உழைத்த எங்களுக்கு ஒருவித வெறி உண்டாயிற்று. ஒரேபரபரப்பு; நினைத்ததெல்லாம் கைகூடுமென்ற ஆசை எண்ணம்; தர்ம யுத்தத்தில் சண்டைபோடுவோரின் ஆனந்தம். எங்களிடம் மனத்தயக்கமோ சந்தேகமோ சிறிதுமில்லை. எங்கள் முன்னாலே, கர்ம மார்க்கம் தெளிவாகக் கிடப்பதாக எங்களுக்குத் தோன்றிற்று. மற்றவர்களது உற்சாகம் எங்களுக்கு ஊக்கம். எங்களுடைய உற்சாகமோ மற்றவர்களுக்கு ஊக்கம். இப்படி விரைவில் முன்சென்றோம். இதுவரையிலும் நாங்கள் உழைக்காதவாறுகடுமையாக உழைத்தோம். அரசாங்கத்தோடு போராட்டம் விரைவிலே நேரும் என்று எங்களுக்குத் தெரியும். சர்க்கார் பிடித்துக்கொண்டு போகுமுன்னமே, எவ்வளவு வேலை செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்துவிடவேண்டுமென்று நாங்கள் ஆசைகொண்டோம். மேலும் எங்களிடம் அபரிமிதமான விடுதலை யுணர்ச்சி ஏற்பட்டது. அதனால் எங்களது உள்ளத்தில் ஒருவகைச் செருக்கும் உண்டாயிற்று. "அடிபட்டுக் கிடக்கிறோம்" என்ற பழைய உணர்ச்சி அறவே தொலைந்து போயிற்று.

இத்தகைய செருக்கு ஏற்பட்டதும், நாங்கள் ஏன் காதோடு காதுவைத்து இரகசியமாகப் பேசவேண்டும்? சட்டவலையில் சிக்காதவாறு ஜாக்கிரதையாகப் பேசவேண்டிய அவசியமில்லை. மனதிலே தோன்றியதைப் பேசினோம். "வீடுகளின் கூரைமீது நின்றுகொண்டு" கூச்சல்போட்டோம். அதனால் வரும் கஷ்டங்களை சிறிதும் பொருட்படுத்தவில்லை. சிறைவாசம் ஏற்படாதா? அதற்காகத்தான் நாங்கள் காத்துக்கொண்டிருந்தோம். அது நேர்ந்தால், எங்களது இயக்கம் செழிக்குமென்பது எங்கள் திடமான நம்பிக்கை. நாங்கள் எதையும் ஒளிவுமறைவாகச் செய்யவே இல்லை. எங்களைச் சுற்றி நாலா பக்கங்களிலும் கூடிக்கொண்டிருந்த உளவர்களுக்கும் இரகசியப் போலீசாருக்கும், வேலை யில்லாமற்போயிற்று. அவர்களைப் பார்த்தால் பரிதாபகரமாயிருந்தது. அவர்கள் கண்டுபிடிப்பதற்கு ஏதேனும் இரகசியம் இருந்தால்தானே? எங்களுடைய துருப்புச்சீட்டுகளையெல்லாம் வெட்டவெளியாக்கத் திறந்து காண்பித்தபிறகு, அவர்களுக்கு வேலை ஏது?

நாங்கள் செய்துவந்த அரசியல் தொண்டினால், இந்தியா எங்கள் கண்ணின்முன்னாலேயே அற்புதமாய் மாறிக்கொண்டு

வருவதைப்பார்த்தும் விடுதலை விரைவில் வந்துவிடும் என்று நம்பியும் எங்களுக்கு அதிகமான சந்தோஷம் ஏற்பட்டது. அதைக்காட்டிலும் எங்கள் எதிரிகளைவிட நாங்கள் எத்தனையோ மடங்கு உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தால் அதிக திருப்தி உண்டாயிற்று. லட்சியத்திலும்சரி, தாங்கள் கையாளும் முறைகளிலுஞ்சரி, ஒத்துழையாதார்கள் அதிகாரவர்க்கத்தினரைவிட எத்தனையோ பங்கு உயர்ந்தவர்கள் என்று எண்ணினோம். தலைவரின் ஒப்பற்ற உயர்விலும், அவர் காட்டிய அற்புத வழியிலும் அளவில்லாப் பெருமைகொண்டோம். இதனால், அடிக்கடி கர்வமும் அடைந்தோம். நாங்கள் விளைவித்த சண்டையின் நடுவே, எங்களுக்கு ஒருவகை மன அமைதியும் உண்டாயிற்று.

எங்களுடைய மனோதைரியம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்துகொண்டுவந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கத்தாரின் உற்சாகம் குறைந்துகொண்டே வந்தது. இந்தியாவில் என்ன நேர்ந்துவருகிறதென்பது அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுக்குத்தெரிந்த பழைய இந்தியா சரிந்து விழுவதாக அவர்களுக்குத் தோன்றிற்று. நாடு முழுதும் தன்னம்பிக்கையும் அச்சமின்மையும் அதிகார வர்க்கத்தினரின் கீர்த்தி ஸ்தம்பம் வளைய ஆரம்பித்தது. அடக்குமுறை கொஞ்சமாகக் கையாளப்பட்டபொழுது, அதனால் இயக்கம் வலுவடைந்தது. பெரிய தலைவர்களைப் பிடிப்பதா இல்லையா என்பதைப் பற்றி அரசாங்கத்தார் நீண்டகாலம் யோசனை செய்தார்கள். தலைவர்களைத் தொட்டால், என்ன ஆகும் என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. இந்தியச்சேனை நம்பத்தக்கதா? அதிகாரிகளின் உத்தரவுகளை இந்திய போலீசார் அமுலுக்குக் கொண்டுவருவார்களா? இவ்வாறு யோசித்து அதிகார வர்க்கத்தினர் தடுமாற்றம் அடைந்தார்கள். 1921-ம் வருடம் டிசம்பர் மாதம் வைசிராய் லார்ட் ரீடிங் பின்னால் கூறியபடி மதிமயங்கி ஸ்தம்பித்துப் போய்விட்டார்.

1922-ம் வருஷம் கோடையில் ஐக்கியமாகாண அரசாங்கத்தார் தங்களுடைய ஜில்லா அதிகாரிகளுக்கு விநோதமான சுற்றறிக்கை யொன்றை ரகஸ்யமாக அனுப்பிவைத்தார்கள். இது பின்னர் ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. "இந்தப்போராட்டத்தின் போக்கை நிர்ணயிக்கும் சக்தி எதிரியான காங்கிரசினிடையே இருந்து வருவது விசனிக்கத்தக்க விஷயமாகும்" என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்

பட்டிருந்தது. இதில் சர்க்கார் எப்படி மூந்திக்கொள்வது என்பதைப்பற்றி பலவித யோசனைகள் கூறப்பட்டிருந்தன. அவற்றில் "அமான்சபை" களை ஸ்தாபிக்கவேண்டுமென்பதும் ஒன்று (அமான் சபைகள் என்றால் ராஜபக்தசபைகள் என்று அர்த்தம்). ஒத்துழையாமையை எதிர்த்துப்போராடுவதற்காக, இந்த வழியை மிதவாத மந்திரிமார்கள் அரசாங்கத்தாருக்கு சொல்லிக்கொடுத்தார்கள் என்று அப்பொழுது பிரஸ்தாபம்.

இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களில், பெரும்பான்மையோர் பொறுமை யிழந்தார்கள். ஒத்துழையாமைப் போராட்டத் தொல்லையை அவர்களால் தாங்கமுடியவில்லை. அதிகார வர்க்கத்தினருக்கு விரோதமாகத் தோன்றிய எழுச்சியும், எதிர்ப்பும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே போயிற்று. இதை அடக்குவதற்கு அதிகாரிகளுக்கு வழிதெரியவில்லை. ஒத்துழையாமை இயக்கத்தின் சாத்வீகப் போராட்ட முறை அதிகார வர்க்கத்தினருக்குப் பிடிகொடுக்கவில்லை. பலாத்காரமாக அதை அடக்க சந்தர்ப்பமே அகப்படவில்லை. ஒத்துழையாதார்களின் சாத்வீகப் பேச்சை ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் நம்பவில்லை. இந்த சாத்வீகம் ஒருமறை திரையென்றும், இதற்குப்பின்னால் பலாத்காரப்புரட்சிக்குக் கபடமாக சதியாலோசனை செய்யப்பட்டு வருகிறதென்றும், அது ஒரு நாள் திடீரென் வெடித்துவிடும் என்றும் அவர்கள் எண்ணினார்கள். ஆசியாவைப்பற்றியே வெள்ளைக்காரர்களுக்கு வக்கரமான எண்ணம் உண்டு. ஆசியாக்கண்டம் மூடமந்திரமான பூமி என்றும், அதன் சந்துகளிலும் கடைவீதிகளிலும் அடிக்கடி சதியாலோசனைகள் தோன்றுமென்றும், தன்னுடைய சிறு பிராயத்திலிருந்தே வெள்ளைக்காரன் போதிக்கப்பட்டு வந்திருக்கிறான். இத்தகைய போதனையில் வளர்ந்த இங்கிலீஷ்காரன் இந்தியாவைப்பற்றி சரியான எண்ணம் கொண்டு இருக்கமுடியுமா? அவனுக்கு எல்லாம் மூடமந்திரமாக காணப்படுவது ஆச்சரியமல்ல. ஆசியாவிலுள்ள ஜனங்களும் சாதாரண மனிதர்கள் என்று நினைத்து அவர்களைப்பற்றிய உண்மையை இங்கிலீஷ்காரன் தெரிந்துகொள்ள முயற்சி செய்வதே இல்லை. ஆசியா வாசியாகுமல்லாமல், உளவர்களும், சதியாலோசனைகளும் நிரம்பிய கதைகளைப் படித்துவிட்டு அவன் தனது கற்பனையைக் கட்டவிழ்த்துவிட்டு விடுகிறான். எனவே அவனுக்கு உண்மை ஒருநாளும் புலப்படுவதில்லை. 1919-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்

தில் பாஞ்சாலத்தில் இப்படித்தான் நடந்தது. அதிகாரிகள் திடீரென்று கிலிபிடித்துப் போனார்கள். பார்த்த விடத்திலெல்லாம் சதியாலோசனைகள் அவர்களுடைய கண்களில் பட்டன. கண்ட பக்கத்திலெல்லாம் கலகம் தோன்றிற்று. 1857-ம் வருஷத்துக்கடுத்தபடியான கலகம் தோன்றிவிட்டதாக, அவர்களுடைய எண்ணம். இந்தமாதிரி அவர்கள் மனதில் முடிவுகட்டிக் கொண்டவுடனே, இங்கிலீஷ்காரர்கள் தம்மை காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்ற குருட்டுத்தனமான முயற்சிகளைச் செய்தார்கள். அந்தமுயற்சிகளின் பயன்கள் தான் இந்தியர் என்றும் மறக்க வொண்ணாத பாஞ்சாலத்தில் ராணுவ அமுல், ஜாலியன்வாலாப் படுகொலை; அமிருதசரஸ் சந்திலே இந்தியர்கள் மார்பால் ஊர்ந்துசெல்லக்கட்டளை.

1921-ம் வருடம் ஒரு நெருக்கடியான வருஷம். அவ்வாண்டிலே, அதிகாரிகள் பொறுமையிழந்து ஆத்திரம் கொள்வதற்குப் பல காரணங்கள் இருந்தன. உள்ளபடியே நேர்ந்த நிகழ்ச்சிகளே அதிகாரிகளுக்குக் கோபம் உண்டாக்கக்கூடியவை. ஆனால் அதிகாரிகள் கற்பனையால்கண்ட சம்பவங்கள் அவர்களுக்கு இன்னும் அதிகமான தொல்லையைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தமாதிரி அதிகாரிகள் கற்பனை செய்து திகிலடைந்த ஒருசம்பவம் எனக்குநன்றாக ஞாபகமிருக்கிறது. 1921-ம் வருஷம மே மாதம் 10-ந் தேதி எனது சகோதரி ஸ்வரூபாவுக்குக் கலியாண நாளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. கலியாணம் அலகாபாத்தில் நடக்கவேண்டும். இதுதான் நல்ல நாளென்று நாள்பார்ப்பவர்கள் சொன்னார்கள். இதுசம்வத் பஞ்சாங்கப்படிக்கு கணிக்கப்பட்ட நாளாகும். காந்திஜி, அலி சகோதரர்கள் முதலிய பிரமுகர்களான காங்கிரஸ் காரர்கள் இந்த விவாகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய சௌகரியத்தைக் கருதி காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டமும் அதே தேதியில் அலகாபாத்தில் கூடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பெரிய தலைவர்களது வருகையை உபயோகப்படுத்திக்கொள்ள அலகாபாத் காங்கிரஸ்காரர்கள் இச்சைப்பட்டார்கள். உள்ளூர் காங்கிரஸ் வாதிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. எனவே பெரியதொரு ஜில்லா மகாநாட்டையும் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

அந்த மகாநாட்டுக்கு ஏராளமான குடியானவர்கள் சுற்றுப் பக்கங்களிலிருந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனவே இந்த அரசியல் கூட்டங்களினால் அலகாபாத்

தில் ஏற்பட்ட பரபரப்பும் உற்சாகமும் ஏற்பட்டன. இதனால் சில மனிதர்களின் நரம்புகளில் விநோதமான உணர்ச்சி உண்டாயிற்று. இந்தப் பரபரப்பினால், அலகாபாத்தில் வசித்து வந்த ஆங்கிலேயர்கள் மனம் தடுமாறிப்போய் நகரத்தில் கலகங்களை எதிர்பார்த்தார்களென்று ஒருநாள் எனது பாரிஸ்டர் நண்பர்களில் ஒருவர் என்னிடம் வந்து கூறினார். ஆங்கிலேயர்களுக்கு அவர்களுடைய இந்திய வேலைக்காரர்களிடம் அவநம்பிக்கை யேற்பட்டு எப்பொழுதும் தங்கள் கைத்துப்பாக்கிகளைச் சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டிருந்தார்கள். அலகாபாத் கோட்டையை நெருக்கடி சமயத்துக்கு ஒதுக்கிவைத்திருந்தார்களென்றும் தேவையானால் அங்கே எல்லா ஐரோப்பியர்களும் போய்த் தங்க வேண்டுமென்றும் திட்டம் போட்டு வைத்திருந்தார்களாம். இதைக் கேட்டதும் எனக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. சாத்வீகத்தின் குருவான காந்திஜி அலகாபாத்துக்கு விஜயம் செய்கிற தருணத்தில்கூட, இத்தகைய கலவரங்கள் சாதுவான அலகாபாத் நகரில் நேருமென்று ஒருவர் எவ்வாறு நினைக்கக் கூடுமென்று எனக்குப் புரியவே இல்லை. மே மாதம் 10-ந் தேதி கலியாணநாள் குறிப்பிடப்பட்டிருந்ததல்லவா ? அந்நாள் தான் 1857-ம் வருஷக் கலகத்தின் ஆரம்ப நாளாகும். அந்த தினத்தைக் கொண்டாட நாங்கள் ஏற்பாடுகள் செய்ததாக அதிகாரிகள் யோசனை செய்தார்களாம்.

1921-ம் ஆண்டில் கிலாபத் இயக்கத்துக்கு கொடுக்கப்பட்ட பிராதான்யத்தால், மௌல்விகளும், முஸ்லீம் உலமாக்களும், இஸ்லாம் மதத்தலைவர்களும் அரசியல் போராட்டத்தில் சிறப்பாகப் பங்கெடுத்துக்கொண்டார்கள். இதனால் முஸ்லிம்களுக்கிடையே அதிகமான பரபரப்பு உண்டாயிற்று. மேனாட்டு வழக்கங்களில் மூழ்கியிருந்த முஸ்லீம்களும் மதப்பற்று இல்லாமல் வாழ்ந்துவந்த முஸ்லீம்களும்கூட தாடி வளர்க்கத் துவக்கினார்கள். முஸ்லீம் ஆசாரப் பழக்கங்களைக் கைக்கொள்ள ஆரம்பித்தார்கள். புதிய கருத்துக்களாலும், மேனாட்டாரின் பழக்க வழக்கங்களாலும், குறைந்துவந்த மௌல்விமார்களுடைய செல்வாக்கும் கீர்த்தியும் மீண்டும் வளர ஆரம்பித்தன. மீண்டும் அவர்கள் முஸ்லீம்களின் பேரில் ஆதிக்கம் செலுத்தத் துவக்கினார்கள். அலி சகோதரர்களும் மதப்பற்றுக்கொண்டவர்கள். அவர்கள் இந்த மௌல்விகளின் ஆதிக்கத்துக்கு ஒத்தாசையாக இருந்தார்கள்.

காந்திஜீயோ, மௌலானாக்களுக்கும் மௌல்விகளுக்கும் மிகுந்த மரியாதை காண்பித்துவந்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தில் மதசம்பந்தமான அம்சத்தையும் பாரமார்த்திக உணர்ச்சியையும் காந்திஜீ எப்பொழுதுமே அழுத்திச் சொல்லிக்கொண்டுவந்தார். அவருடைய மதம் புராதன சம்பிரதாயங்களுக்குள் அடங்கிய மதமல்ல. ஆனால் வாழ்க்கையையே மத சம்பந்தங்கொண்ட உணர்ச்சிக்கண்களால் பார்க்கவேண்டுமென்பது காந்திஜீயின் ஆவல். எனவே பாமர ஜனங்கள் சம்பந்தப்பட்டவரையிலும், பழமை புத்துயிர் பெறுவதாக, அவர்களுடைய கண்களில் காணப்பட்டது. பெரும்பான்மையான காங்கிரஸ் தொண்டர்கள் காந்திஜீயைப் பின்பற்றி அவரைப்போல் எல்லாவற்றையும் செய்ய ஆரம்பித்தார்கள். அவருடைய பாஷையைக்கூட அப்படியே மனப்பாடமாக ஒப்பிக்கத் துவக்கினார்கள். இருந்தாலும் காரியக் கமிட்டியில் அங்கத்தினர்களாகவிருந்த காந்திஜீயின் தோழர்களில் பெரும்பான்மையோர், இந்த முதப்புற்றுக் கொண்டவர்கள் அல்ல. எனது தகப்பனார், தேசபந்து தாஸ், லாலாஜீ முதலியவர்கள் அரசியல் பிரச்னைகளை அரசியல் கண்களாலேயே பார்க்கவேண்டுமென்று வற்புறுத்திவந்தார்கள். அவர்கள் தங்களுடைய பிரசங்கங்களில், மதத்தைப் புகுத்தினதே இல்லை. ஆனால் அவர்கள் எப்படிப் பிரசங்கம் செய்தால் என்ன? அவர்கள் காந்திஜீயின் உபதேசப்படி தங்கள் வாழ்க்கைகளைத் திருத்தியமைத்துக்கொண்டதைத்தான் ஜனங்கள் விசேஷமாகக் கவனித்தார்கள். ஏனெனில், அவர்கள் உலகசுகங்கள் அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு எளிய வாழ்க்கையைக் கைக்கொள்ளவில்லையா? இதுவே மத உணர்ச்சிக்கு அடையாளமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதுதான் பழமை திரும்பிவரும் என்ற நம்பிக்கையைப் பரவச்செய்து வந்தது.

"நம்முடைய அரசியலில், இந்த மத வுணர்ச்சி புகுந்து வளர்ந்து வருவதில் எனக்குக் கவலை சில சமயங்களில் ஏற்பட்டது. எனக்கு இந்த மதப் பிரவேசம் பிடிக்கவே யில்லை. மௌல்விகளும், மௌலானாக்களும், சுவாமிகளும் பிரசங்க மேடைகளில் சொல்லிவந்த பல விஷயங்கள் கெடுதியை விளைவிக்கக் கூடியதாக எனக்குத் தோன்றின. அந்தப் பிரசங்கங்களில் நாட்டின் உண்மையான சரித்திரத்தையும், பொருளாதாரச் சரித்திரத்தையும், சமூக ஏற்பாட்டையும்

திரித்துக் கூறினார்கள். எனவே, அவர்கள் எதையும் தெளி வாக யோசிப்பதற்கு இடமில்லாமல் செய்துவிட்டார்கள். காந்திஜீ உபயோகப்படுத்திவந்த சில பதங்கள்கூட என்னு டைய காதுகளில் அபசுரமாகப் பட்டன. அவர் "ராமராஜ் யம்" திரும்பவும் ஏற்பட வேண்டும் என்று சொல்லும்போழுது அது எனக்கு மதவேதனையை உண்டாக்கும். ஆனால் நான் என்ன செய்ய முடியும்? அதைத் தடுக்க முடியுமா? ஆனால் ராமராஜ்யம் என்ற சொற்களைக் காந்திஜீ உபயோகப்படுத்த வேண்டிய காரணம் என்னவென்று யோசித்துப் பார்த்தேன். சாதாரண ஜனங்களுக்கு அது நன்றாகப் புரியும் என்ற கார ணத்தினால், காந்திஜீ அதை உபயோகப்படுத்தியிருக்கலாம் என்று சமாதானம் பண்ணிக்கொண்டேன். பாமர ஜனங் களின் உள்ளத்தில் நுழைவதற்கு, காந்திஜீ அபாரமான சக்தி படைத்தவர்

ஆனால் நான் இந்த விஷயங்களைப்பற்றி நினைத்து அதிக மாக வருத்தப்படவில்லை. ஒத்துழையா இயக்கம் வளர்வ தோடும், என்னுடைய வேலையும் அதிகரிக்க இச்சிறிய குறை களைப் பற்றி யோசிக்க எனக்கு மனமும் இல்லை; நேரமும் இல்லை. ஒரு பெரிய இயக்கத்திலே எத்தனையோ வகை மனி தர்கள் இருப்பார்கள். அதன் முக்கிய போக்கு சரியாயிருக் கும் வரையில், நடுவே தோன்றும் மேடு பள்ளங்களைக் கண்டு நாம் கவலைப்பட வேண்டியதில்லை யென்று எண்ணினேன். காந்திஜீயோ ஒரு கடினமான புருஷர். அவரைத் தெரிந்து கொள்வது ரொம்பவும் கஷ்டம். அவருடைய பாஷை, தற் கால நாகரீகத்தில் பயின்றவர்களுக்கு சில சமயங்களில் புரி யவே புரியாது. ஆனால் அவர் ஒப்பற்ற மாபெரும் தலைவர் என்றும் கீர்த்திவாய்ந்த மகான் என்றும் நாங்கள் உணர்ந்த படியால், அவர் கட்டளைகளனைத்தையும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள நிச்சயித்தோம். அடிக்கடி அவருடைய "கர் நாடகங்களை"ப்பற்றி நாங்கள் எங்களுக்குள்ளே பேசிக் கொள்வதுண்டு. சுயராஜ்யம் வந்த பிறகு, இந்தக் கர்நாடக எண்ணங்களை யெல்லாம் தொலைத்துவிட வேண்டுமென்று நாங்கள் வேடிக்கையாகப் பேசிக்கொள்வோம்.

எங்களிற் பெரும்பான்மையோர் ராஜீய விஷயங்களி லும், இதர வழிகளிலும் காந்திஜீயின் பிரபாவத்தில் மூழ்கி யிருந்தோம். எனவே மதப் பற்று இல்லாத எங்களிற் சில ருக்குக்கூட மத உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது போல எங்களுக்

குத் தோன்றிற்று. நேரடியாகக் காந்திஜி எங்களிடம் மதப் பிரசாரம் செய்திருந்தால், அந்தப் பிரசாரத்துக்குள் நாங்கள் மயங்கி விழுந்திருக்கமாட்டோம்; எதிர்த்திருப்போம். ஆனால் சூட்சுமமான வகைகளிலே அவர் இத்தகைய மத வுணர்ச்சியை எங்களிடம் புகுத்திவிட்டார். மதத்தினுடைய வெளி வேஷங்கள் எனக்குப் பிடித்ததேயில்லை. மதப் பற்றுக் கொண்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் மற்றவர்களைக் கொத்திப் பிடுங்கித் தின்பதைக் கண்டு நான் மனம் சகித்ததில்லை. என்றாலும் மதப் பற்று எனக்கும் ஏற்பட்டதுபோல நான் சிறிதளவு மாறிவிட்டேன். 1921-ஆம் ஆண்டில் எனக்கும் மதப் பற்றுக்கொண்ட மனப்பான்மை ஓரளவு ஏற்பட்டதாகச் சொல்லலாம். இத்தகைய மனப்பான்மை எனது சிறு பிராயத்திலிருந்து வேறெக்காலத்திலும் இருந்ததில்லை.

ஆனால் சத்தியாக்கிரக வழியின் நீதி முறையும், நல்வழியும் என்னை ஆட்கொண்டன. நான் சாத்வீகத்தை பரமார்த்திகக் கொள்கையாகக் கொள்ளவில்லையாயினும் அதனிடம் நாளுக்குநாள் அதிகப்பற்று அடைந்து வந்தேன். இந்தியாவின் தற்போதைய நிலைமைக்கும் அதனுடைய நாகரீகத்துக்கும் ஏற்றவழி சாத்வீக ஒத்துழையாமை தான் என்று நான் நம்பத் துவக்கினேன். அரசியலைப் பாரமார்த்திகத் தொண்டாகச் செய்யவேண்டுமென்று காந்திஜி பிரசாரம் செய்ததில் எனக்கு ஓரளவு கவர்ச்சி உண்டாயிற்று. குறுகிய மதப்பற்று கூடாது என்பதுதான் எனது நோக்கமாயிருந்தது. உயர்ந்த லட்சியங்களைக்கொண்டிருப்பவர்கள் உயர்ந்த முறைகளைத்தான் கையாளவேண்டும் என்பது நீதியும், தர்மமும் பொருந்திய தத்துவமாக எண்ணினேன். சாத்வீக ஒத்துழையாமை வெறும் சன்மார்க்க போதனையாக மட்டும் எனக்குத் தோன்றவில்லை. அது அனுபவத்துக்கொத்தது என்றும் தோன்றிற்று. ஏனெனில் நல்லவையல்லாத முறைகளால் லட்சியம் மறைபட்டுப்போகிற தென்றும் தகாதமுறைகளில் காரியங்களைச் செய்வதால், புதிய கஷ்டங்கள் தோன்றுகின்றன வென்பதும் அனுவபசித்தம். கேவலமான முறைகளைக் கையாளுவது, தேசத்தாருக்கு கௌரவத்தையும், தன்மதிப்பையும் அளிக்காது என்று எனக்குத்தோன்றிற்று. சேற்றில் காலை வைப்பவனுடைய உடம்பில் சேறு ஒட்டிக்கொள்ளாமல் இருக்க முடியுமா? கேவலமான முறைகளைக் கையாண்டால் கௌரவத் தோடும், வேகமாயும் நாம் முன்னேறிச் செல்ல முடியாது என்று முடிவு செய்துகொண்டேன்.

அந்தக் காலத்திலே இவ்வாறு நான் எண்ணிவந்தேன். என்னுடைய உள்ளத்துக்கு எது தேவையாயிருந்ததோ அதை நான் ஒத்துழையாமை மூலமாக அடையப் பெற்றேன். எனது மனம்நாடி நின்றது தேசத்தின் விடுதலை. ஏழைகள் பணம் சுரண்டப்படாமலிருக்கவேண்டும் என்பதும் ஒன்று. இவைகளைத்தான் ஒத்துழையாமை இயக்கம் கோறிற்று. அதன் முறைகளோ, மிக உயர்ந்த முறைகள். அவற்றால் எனக்கு ஆத்மதிருப்தியும் ஒருவித விடுதலை உற்சாகமும் உண்டாயிற்று. இம் மகிழ்ச்சியால் தோல்வியைப்பற்றி நான் கவலைப் படவேயில்லை. தோற்றாலும், அது தற்காலீகம் தானே! கீதையின் வேதாந்தப் பகுதி, எனக்குப் புரியவும் இல்லை, கவர்ச்சியை அளிக்கவுமில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் எப்படியிருக்கவேண்டும் என்று குறிப்பிடும் சுலோகங்களைக் காந்திஜீ ஒவ்வொருநாளும் சாயங்காலப் பிரார்த்தனையில் சொல்லுவார். இந்தச் சுலோகங்களைப் படிப்பதில் எனக்கு விருப்பம் அதிகம். "நோக்கத்திலுறுதியுடனும், அமைதியுடனும், கலங்காமலும், தனது வேலையைச் செய்து, அதன் பயனை ஒரு சிறிதும் எதிர்பார்க்காதவனே மனிதன்" என்பது அந்தச் சுலோகங்களின் சாரமாகும். எனக்கு உள்ளத்தில் அமைதி அதிகம் இல்லாமையினால், இந்த கீதாவாக்கியத்தில், எனக்குப் பிரியமும் பிடிப்பும் ஏற்பட்டிருக்கலாம்.

XI

## எனது முதல் சிறைவாசம்

1921-ம் ஆண்டு நமக்கு மிகவும் ஆச்சரியமான வருஷமாகும். இந்தியாவிலே அப்பொழுது தேசீயம், அரசியல், மதம் மூடபக்தி, மதவெறி இவைகள் யாவும் எப்படியோ விநோதமாகச் சேர்ந்துகொண்டன. இவற்றுடன் கிராமங்களில் குடியானவர் எழுச்சியும் நகரங்களில் தொழிலாளர்கள் இயக்கமும் உண்டாயிற்று. தேசவிடுதலை உணர்ச்சியின் மேலீட்டாலும் ஜனங்களுக்கு அந்த நாளில் ஏற்பட்ட தியாக ஆவலினாலும் பலதிறப்பட்ட மக்களையும், முரண்பட்ட நோக்கங்களையும் ஒன்று சேர்க்க சாத்தியம் ஆயிற்று. இந்த தேசியமும், பல வர்ணங்கள் கூடிய தேசீயமாகவிருந்தது. ஹிந்து தேசியம், பிற நாட்டு முஸ்லீம்களோடு உறவாடி நின்ற முஸ்லீம் தேசீயம் மூன்றாவது தேசவிடுதலையையே நாடிநின்ற உண்மையான இந்தியதேசீயம் இம்மூன்றும் பிணிந்துகிடந்தன. தற்காலிகமாக அவைகள் ஒன்றையொன்று எதிர்க்காமல் ஒன்று சேர்ந்து உழைத்தன. எங்கும் "ஹிந்து-முஸல்மான்கி ஜே" என்ற சப்தம்தான்.

மோகனாஸ்திரம் போட்டது போல் பலதிறப்பட்ட மக்களை ஒன்று சேர்த்து, ஒருமுகமாக வேலை செய்வித்த காந்திஜீயின் சக்தி ஆச்சரியமாக விருந்தது. "ஜனங்களின் தெளிவற்ற ஆசைகளின் பிரதிநிதி" என்று இன்னொரு தலைவரைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இது காந்திஜீக்குப் பொருத்தமாகும். இவ்வியக்கத்தில் இன்னொரு அதிசயம். இவ்வளவு அதிருப்தியும் உணர்ச்சியும் நாட்டில் வளர்க்கப்பட்டாலும், இந்தத் தேசத்தை ஆண்டுவரும் அந்நியர்களின் பேரில் அதிகப் பகைமை ஏற்படவில்லை. தேசீயம் என்றாலே எதிர்ப்பு உணர்ச்சியாகும். அது பகைமையாலும் கோபத்தாலும் வளரும் உணர்ச்சியாகும். அடிமை நாடுகளில் தேசீய உணர்ச்சி அந்நிய ஆக்ஷி நடத்தும் அதிகாரிகளின் பேரில் எழும் கோபத்தாலும் பகைமையாலும் வளர்வது வழக்கம்.

1921-ம் வருடத்தில் இந்தியாவில் இத்தகைய கோபமும் பகைமையும் இருந்தன. ஆனால் இதே அடிமை நிலையில் இருந்த

ஏனைய தேசங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவில் அத்தகையபகைமை யுணர்ச்சி மிகக்குறைந்தது என்று சொல்ல வேண்டும். காந்திஜீ சாத்வீகத்தை இடைவிடாமல் வற்புறுத்தியதுதான், இதன் காரணம். மேலும் இயக்கம் தோன்றி நாடு முழுதும் பரவி விடவே ஜனங்களுக்குள் ஒருவித ஒற்றுமையும் சக்தியும் ஏற்பட்டு எதிர்காலத்தில் வெகு விரைவில் வெற்றி வரப்போகின்றது என்ற நம்பிக்கையினால் கோபத்துக்கு அவசியம் இல்லாமற்போயிற்று. காரியங்கள் செவ்வனே நடைபெற்று வெற்றிபெறப் போகையிலே அனாவசியமாக எதற்காகக் கோபத்தையும் பகைமையையும் காண்பிக்க வேண்டும். எனவே தாராள சித்தத்துடன் இருக்கலாம் என்று நாங்கள் எண்ணினோம்.

ஆனால் இயக்கத்துக்கு எதிராக நின்ற சிறுஒத்துழைப்புக் கூட்டத்தாரிடம் இந்ததாராளநோக்கம் காண்பிக்கப்படவில்லை. அவர்களிடம் சரியாக நடப்பதுபோல வெளிப்பாவனையில் நாங்கள் காண்பித்துக் கொண்டாலும் அவர்களிடம் எங்கள் தாராள சிந்தனை செல்லவில்லை. அவர்கள் சிறு தொகையினர்கள். அவர்களுக்கு நாட்டில் செல்வாக்குக் கிடையாது. நாங்கள் அவர்களை அலக்ஷியம் செய்திருக்கலாம். கோழைத்தனத்தாலும் சுயநலத்தாலும் தேசத்தின் மானத்தையும் மதிப்பையும் குலைத்து நாட்டை அந்நியர்களுக்குக் காட்டிக் கொடுத்து விட்டார்களென்று கருதி அவர்களிடம் பொறுக்க முடியாத வெறுப்பு உண்டாயிற்று.

இவ்வாறு காலங் கழிந்து வந்தது. அடுத்தடுத்து சரியான வேலைத்திட்டம் இருந்துவந்ததால் எங்களுக்கு உற்சாகவெறி அதிகமாகிக்கொண்டே வந்தது. எங்களுடைய லட்சியம் யாதென்று தெளிவாக நாங்கள் யோசித்ததே இல்லை. எங்களுடைய லட்சியத்தைப் பற்றியும் இயக்கத்தின் தத்துவங்களைப் பற்றியும் நாங்கள் அப்பொழுது யோசிக்காமலிருந்ததை நினைக்க இப்பொழுது மிகவும் வியப்பாகவே இருக்கிறது. நாங்கள் எல்லோரும் ஸ்வராஜ்யத்தைப் பற்றி உருக்கமாகப் பிரசங்கம் செய்தோம் என்பது உண்மைதான். ஆனால் ஒவ்வொருவரும் தம் மனப் போக்குக்குத் தக்கவாறு ஸ்வராஜ்யத்துக்கு அர்த்தம் செய்துகொண்டோம். இளைஞர்களாகிய நாங்கள் ஸ்வராஜ்யத்துக்கு அரசியல் விடுதலையென்று அர்த்தம் செய்துகொண்டோம். ஸ்வராஜ்யமென்றால் ஜனநாயக ஆக்ஷி முறையென்று நாங்கள் பிரசங்கத்தில் சொல்லிக்கொண்டு

வந்தோம். ஸ்வராஜ்யம் ஏற்பட்டால், தொழிலாளர்களின் துன்பமும் குடியானவர்களது திக்கற்ற நிலைமையும் ஒருவாறு ஒழிந்துபோய் விடுமென்று எங்களிற் பலர் எண்ணினோம். ஆனால் எங்களுடைய தலைவர்களில் பெரும்பான்மை யோருக்கு ஸ்வராஜ்யம் என்றால் வேறு வகையான அர்த்தம் தோன்றிற்று. பூரண விடுதலையைப்பற்றியே அவர்கள் ஒரு பொழுதும் நினைத்ததே இல்லை. அதற்கு எவ்வளவோ குறைவான ஒரு நிலைமையை ஸ்வராஜ்யம் என்று பெயர் சொல்லி அழைத்தார்கள்.

காந்திஜீயோ இந்த விஷயத்தில் பிடிபடாமலே பேசிக் கொண்டுவந்தார். இதைப்பற்றித் தெளிவாக் யோசிப்பதற்கு அவர் இடங்கொடுக்கவே இல்லை. ஸ்வராஜ்யத்தால் ஏழை எளியவர்களுக்கு விமோசனம் உண்டு என்று மாத்திரம் உறுதியாகக் கூறிவந்தார். எங்களுக்கு இது ஒரு வகை ஆறுதலை யுண்டாக்கிற்று. ஸ்வராஜ்யத்தினால் முதலாளிமார்களுக்கும் நன்மையேற்படும் என்றும் காந்திஜீ கூறுவார். காந்திஜீ எப்பொழுதுமே பக்தியையும் நல்லொழுக்கத்தையும் பற்றி அழுத்தமாகப் பேசிக்கொண்டிருப்பார். மக்களின் சிந்தனைசக்தியை வளர்க்கவேண்டுமென்று அவருக்கு ஆவல் இல்லை. இந்திய மக்களின் ஆத்ம சக்தியையும் முதுகு கூனாமல் தலைநிமிர்ந்து நடக்கும் தைரியத்தையும் அற்புதமாக வளர்த்துவிட்டார். இது மகத்தான ஆச்சரியம் ஆகும். ஆனால் சிலர் கூனலுடம்பும், மந்தநோக்குமே பக்தியின் சின்னங்களாகக்கொண்டு வேஷதாரிகளானார்கள்.

பொது ஜனங்களின் அளவில்லா எழுச்சியைக் கண்டுதான் நாங்கள் மனதில் திடமும் நம்பிக்கையும் கொண்டோம். சீர்குலைந்து திக்கற்றுப்போய் உடைந்துகொண்டிருந்த ஜனங்கள் திடீரென்று தலைநிமிர்ந்து நடந்து, கட்டுப்பாடாக பயிற்சி பெற்றவர்களைப்போல வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதுவே அவர்களுக்கு அசைக்கமுடியாத வல்லமையைக் கொடுக்கும் என்று நாங்கள் எண்ணினோம். செயலுக்கு அஸ்திவாரமாகச் சிந்தனையும் தேவை என்பதை நாங்கள் மறந்து போனோம். லட்சியத்தின் குறியும் தத்துவமும் தெளிவாக இருக்கப்பெறாவிடின், ஜனங்களின் உற்சாகமும் ஊக்கமும் அநேகமாக வீணாகச் சிதறிப்போகும் என்பதையும் நாங்கள் கவனிக்கவில்லை.

பழைய நாகரீகத்தை மறுபடியும் நிலைநிறுத்தவேண்டு மென்ற எண்ணமும் சிறிது தூரம் பிரயோசனமாக விருந்தது. உலகத்துக்குப் புதியதோர் ராஜீய பொருளாதார இயக்கங்களை சாத்வீகமுறையில் நடத்துவதும் அதன்மூலம் அநியாயங்களுக்குப் பரிகாரம் தேடுவதும் நற்செய்தி என்றும், அதை உலகத்தாருக்கு அளிக்கும் பாக்கியத்தை இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிற தென்றும் நாங்கள் உள்ளம் பூரிப்பு அடைந்தோம். தாங்கள்தான் ஆண்டவனுடைய அனுக்கிரகத்திற்கு விசேஷ பாத்திரங்கள் என்று ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்களை எண்ணிக் கொள்வது ஒருவித மயக்கமாகும். அப்பேர்ப்பட்ட விநோத மயக்கத்துக்கு நாங்களும் இரையானோம். ஒத்துழையாமை யென்பது பலாத்காரப் போராட்டத்துக்கும் போருக்கும் ஒருவித மாற்றான கருவியாகும். அது வெறும் தர்ம சாஸ்திரம் அல்ல. அனுபவசித்தமான ஆயுதம். காந்திஜீ தற்கால நாகரீகத்தையும் இயந்திரங்களையும் கடிந்துபேசுவார். ஆனால் எங்களிற் பலர் அவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. தற்கால நாகரீகத்தையும் இயந்திரங்களையும் அழிப்பது சாத்தியமல்லவென்றும், தம்முடைய கொள்கைகள் பரமார்த்திக ஆதர்ச உலகத்தைச் சேர்ந்தவென்றும் காந்திஜீயே நினைத்தாரென்று எங்களுக்குத் தோன்றிற்று. எங்களிற் பலர் தற்கால நாகரீகத்தின் வெற்றிகளை அடியோடு தள்ளிவிடத் தயாராய் இருக்கவில்லை. இந்திய நிலைமைகளுக்கு ஏற்றவாறு தற்கால மேனாட்டு நாகரீகத்தை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும் என்றுமட்டும் தான் ஒப்புக்கொள்ளத் தயாராக விருந்தோம்.

விரைவில் பிராயணம் செய்வதிலும் பெரிய இயந்திரங்களிலும் எனக்கு எப்பொழுதும் அதிகவிருப்பமுண்டு. காந்திஜீயின் கருத்துக்கள் இயந்திரங்களினால் ஏற்படக்கூடிய பலாபலன்களை அலசிப்பார்க்கும்படி பலரைத் தூண்டின. நாங்கள் எதிர்கால முற்போக்கை வேண்டியும் மற்றவர்கள் இந்தியாவின் பண்டைய நிலைமையை விரும்பியும் நின்றார்கள். என்றாலும் இந்த இரண்டு கூட்டத்தார்களும் ஒன்றுசேர்ந்து வேலை செய்ய ஆசைப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும். இதனால் தன்னல மறுப்பும் ஆத்மத் தியாகமும் எளிதான காரியங்களாகின. நானோ இயக்கத்தில் முழுதும் ஆழ்ந்துபோனேன். என்னைப்போலவே அநேகம் பேர்கள் ஆழ்ந்துபோனார்கள். என்னுடைய ஏனைய பிரவிருத்திகளை, பழைய நண்பர்களை,

கூட்டுறவுகளை, புஸ்தகங்களை, பத்திரிகைகளை இவைகள் யாவற்றையும் விட்டுவிட்டேன். அவைகள் கையிலிருக்கிற வேலைக்கு ஒத்தாசையாக இருக்கும் அளவில் அவைகளை உபயோகித்துக்கொண்டேன். நவீன நூல்களைப் படிக்கும் வழக்கம் என்னிடம் இருந்தது. உலக நிகழ்ச்சிகளையும் கவனித்து வருவேன். ஆனால் அவைகளுக்கு இப்பொழுது நேரம் கிடைக்கவில்லை. என்னுடைய குடும்ப வாழ்க்கை மிகவும் அந்நியோன்யமாக விருந்தபோதிலும், நான் குடும்பத்தையும் மனைவியையும் பெண்ணையும் அநேகமாக மறந்துபோனேன். அவர்களுக்கு எத்தகைய சுமையாயும் சோதனையாயும் நான் அந்தக்காலத்தில் இருந்திருக்கவேண்டும் என்பதை நெடுங் காலம் சென்ற பிறகுதான், உணர்ந்துகொண்டேன். எனது மனைவி காண்பித்த பொறுமையும், பிரியமும் எவ்வளவு அபாரமானது என்பது பின்னர்தான் தெரிந்தது.

காங்கிரஸ் காரியாலயங்களிலும் கமிட்டிக் கூட்டங்களிலும் ஜனத்திரள்களின் மத்தியிலும் நான் காலத்தைப் போக்கி வந்தேன். "கிராமங்களுக்குப் போங்கள்" என்பது தலைவரின் கட்டளையாகும். எனவே வயல், வாய்க்கால், வரப்பு முதலியவைகளைத் தாண்டி வெகுதூரம் நடந்து, கிராமங்களுக்குப் போய்க் குடியானவர்களுக்குப் பிரசங்கம் செய்தோம். திரளான மக்களின் மனத்தைக்கவர்ந்து அவர்களின்போக்கை மாறச்செய்வதால் ஏற்படும் வெறிக்களிப்பை நான் அனுபவித்தேன். கூட்டத்தின் மனப்பான்மை இன்னதென்று சிறிதளவு அறியலானேன். நகரத் தொழிலாளர்களுக்கும் கிராமக் குடியானவர்களுக்கும் வித்தியாசமில்லை என்று புலப்பட்டது. கூட்டத்தின் அசௌகரியமும் தூசியும் எனக்கு எவ்வித அருவருப்பையும் கொடுக்கவில்லை. கூட்டத்தில் அடித்துப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போவதிலே ஒரு உற்சாகம். கூட்டம் கட்டுப்பாடாகவும் ஒழுங்குடனும் இல்லையேயென்று மட்டும் எனக்குப் பல தடவைகளில் கோபம்வரும்.

அந்தக் காலத்துக்குப் பின்னர், சிலதடவைகளில் கோபம் நிறைந்த கூட்டங்களுக்குள், நான் இருந்திருக்கிறேன். எதிர்ப்பு அதிகமாயிருந்த கூட்டங்களிலும் இருந்திருக்கிறேன். ஒரு பொறி பறந்தால் ,தீப்பற்றிக்கொள்ளும்படியான கூட்டங்கள்! இருந்தாலும் என்னுடைய ஆரம்பக்காலத்து அனுபத்தாலும், அதனால் ஏற்பட்ட ஒரு நம்பிக்கையாலும், நான் சமாளித்திருக்கிறேன். சிறிதுகூடத் தயங்காமல், நான் கூட்

டத்துக்குள் நேராகப்போய்விடுவேன். எனக்கும் கூட்டத்துக்கும் இடையே ஒற்றுமையும் அன்பும் ஏறபடாவிட்டாலும், கூட்டம் எப்பொழுதுமே என்னிடத்தில் மரியாதையாக நடந்துகொண்டிருக்கிறது. அவமரியாதையாகக் கூட்டம் ஒன்றும் செய்யாது என்று நான் கொண்டிருந்த நம்பிக்கையே அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், கூட்டங்கள் ஸ்திரபுத்தி கொண்டவைகளல்ல. எனவே எதிர்காலத்தில் எனக்கு என்ன அனுபவங்கள் நேருமோ என்பது எனக்குத் தெரியாது.

பொது ஜனங்களுக்கும் எனக்கு மிடையே ஒருவித பரஸ்பர நட்பு உண்டாயிற்று. பொதுஜனக் கூட்டத்தைக் கண்டால் எனக்குப் பிரியம். என்னைக்காணில் கூட்டத்துக்குப் பிரியம். ஆனால், பொது மக்களோடு நான் முழுதும் கலந்து மூழ்கிப் போய்விடவில்லை. நான் வேறுபட்ட ஏகாங்கியாகவே இருந்தேன். எனக்குச் சொந்தமான மனப்பான்மையைக் கொண்டு எளியவர்களின் வாழ்வை, ஆராய்ந்து பார்த்து வந்தேன். எனக்கும், அவர்களுக்கும் வாழ்க்கையிலுஞ்சரி மனப்பான்மையிலுஞ்சரி, யாதொரு சம்பந்தமும் இல்லை. பழக்கங்களில் வித்தியாசம்; ஆசைகளில் வித்தியாசம். மனப்பான்மையில் வித்தியாசம். மோட்ச சம்பந்தமான நோக்கத்திலும் வேற்றுமை! இத்தனை வித்தியாசங்களிருந்தும், இந்தக் கூட்டங்களின் நன் மதிப்பையும், நம்பிக்கையையும் நான் எவ்வாறுபெற்றேன் என்பதைப்பற்றி என்றும் ஆச்சரியப்பட்டுக் கொண்டுவந்திருக்கிறேன். அவர்கள் என்பேரில் தப்பெண்ணங்கொண்டு மதித்தார்களா? சரியாக தெரிந்துகொள்ளும் பக்ஷத்தில், அவர்கள் என்னைப் பொறுத்துக்கொண்டிருப்பார்களா? பாசாங்கு செய்து, நான் அவர்களுடைய நன்மதிப்பை பெற்றுவந்தேனா? அவர்களிடம் என்மனதில் தோன்றியவற்றை ஒளிக்காமல் சொல்ல முயன்று வந்தேன். அவர்களுடைய மூடப் பழக்கவழக்கங்களையும், பக்தியையும் நான் மிகவும் கடுமையாக அவர்களிடம் கண்டித்துப் பேசியிருக்கிறேன். இருந்தாலும், அவர்கள் என்னை ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

ஆனாலும் உண்மையான ஜவஹர்லாலைத் தள்ளிவிட்டுக் கற்பனை ஜவஹர்லாலை மனதிலெண்ணிக்கொண்டு என்னிடம் அன்பு காண்பிக்கிறார்கள் என்ற எண்ணம் என்னைவிட்டு அகன்றதே இல்லை. இந்த பொய் மதிப்பு எவ்வளவுகாலம்

நீடித்திருக்கும் ? அது நீடித்திருக்கும்படியாக ஏன் விடவேண்டும் ? அந்தப் பொய் மதிப்பு கீழேவிழுந்து உடைந்துபோய் அவர்கள் என்னை உள்ளபடியே தெரிந்துகொண்டால் என்ன நேரும் ?

பல விஷயங்களில் எனக்கு அகம்பாவமுண்டு. அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சாதுக்களான பொதுஜனக் கூட்டங்களினிடம் எவ்வித தற்பெருமையும் எழவேமுடியாது. அவர்களிடம் பித்தலாட்டம் கிடையாது. ஏமாற்று இல்லை. இவை யாவும், அவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த எங்களிடம் தான் இருந்தன. இவர்கள் மந்த ஸ்வபாவமுடையவர்களா யிருக்கலாம், தனித்தனி புருஷராகக் கவனித்தால் மூடர்களாக விருக்கலாம். ஆனால் அவர்களைக் கூட்டமாகக் கண்டு விட்டாலோ, அவர்களிடம் எல்லையற்ற பரிதாபம் உண்டாகி விடும்.

எங்கள் தொண்டர் மகாநாடுகளிலோ வேறுகதை. நான் உள்பட தொண்டர்கள் அனைவரும் செய்த பிரசங்கங்கள் வேடிக்கையாயிருக்கும். எங்கள் பேச்சுக்கள் யாவும் ஆகாயப் பந்தல்தான். ஒரே டம்பம்! வேஷதாரிகளாக நாங்கள் நடித்ததாகத்தான் சொல்லவேண்டும். எங்கள் யாவருக்குமே ஓரளவில் இந்தக்குற்றச்சாட்டு பொருத்தமுள்ளதா யிருக்கும். ஆனால் சில குட்டிக்கிலாபத் தலைவர்கள் தான் இதில் பரிசுபெற்றார்கள். பெரிய கூட்டங்களில் சரசமாக நடப்பது சுலபமல்ல; எங்களுக்கு அனுபவமும் கிடையாது. எனவே பெரிய கூட்டங்களின் மத்தியிலே இயற்கையான தன்மையோடு இருக்க, எங்களால் முடியவில்லை. எங்களைப் பெரிய தலைவர்களாக நினைத்துக்கொண்டோம். தலைவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறையிலே நாங்களும் நடந்துகொள்ள வேண்டுமென்று யோசனையில் ஆழ்ந்திருப்பதாக முகத்தை வைத்துக் கொள்வோம். சில்லரைப்பேச்சு பேசமாட்டோம். சிரிக்கமாட்டோம். கம்பீரமாக இருப்பதாக எண்ணம்! நாங்கள் நடக்கையிலோ, பேசுகையிலோ, புன்சிரிப்புச் சிரிக்கையிலோ, ஆயிரக்கணக்கான கண்கள் எங்களை இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருக்கின்றன என்ற எண்ணங்கொண்டு அதற்கேற்றாற்போல நடந்துகொள்ள முயற்சி செய்தோம். எங்களுடைய பிரசங்கங்கள் மிகுதியும் சொற்பெருக்கு கொண்டவைகளாக விருக்கும். ஆனால், கருத்துக்

-கள் சுஷ்கமாகவே இருக்கும். கண்களில் காணப்படுவது போல் நாம் நம்மைப்பார்த்துக்கொள்வது முடியாத காரியம். எனவே எனது குற்றங்களை நானே அறிந்துகொள்ளமுடியாம லிருந்தாலும், நான் மற்றவர்களுடைய நடவடிக்கைகளை ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தேன். இவ்வாறு கவனித்து வந்ததில் பரிகசிப்பதற்கான பல அம்சங்கள் கிடைத்தன. இதேபோல என்னையும் பார்த்து மற்றவர்கள் சிரிக்கவும் கூடும் என்ற திகிலும் என் உள்ளத்தில் தோன்றியது.

1921-ம் வருஷம் முழுதும் தனித் தனியாகக் காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப் பெற்று தண்டனையடைந்தார்கள். கூட்டமாகக் கைது செய்யப்படவில்லை. இந்தியச் சேனையின் மத்தியில் அதிருப்தியை உண்டாக்க, முயற்சி செய்தார்கள் என்று ஆலி சகோதரர்களுக்கு நீண்ட கால சிறைவாசம் விதிக்கப்பட்டது. எந்தப் பிரசங்கத்துக்காக அவர்கள் சிறை சென்றார்களோ, அதே பிரசங்கத்தை ஆயிரக் கணக்கானவர்கள் நூற்றுக் கணக்கான மேடைகளிலிருந்து திரும்பவும் செய்தார்கள். அந்த வருஷக் கோடை காலத்தில் நானும் பயமுறுத்தப்பட்டேன். நான் செய்த பிரசங்கங்கள் சிலவற்றில் ராஜத் துரோகம் இருந்ததாம். என்பேரில் நடவடிக்கையொன்றும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆயினும் வருஷக் கடைசியில் நெருக்கடி உண்டாயிற்று. வேல்ஸ் இளவரசர் இந்தியாருக்கு விஜயம் செய்துகொண்டிருந்தார். அவர் சம்பந்தமான எல்லா விழா நிகழ்ச்சிகளையும் தேசத்தார் பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் உத்தரவு பிறப்பித்திருந்தது. நவம்பர் மாதக் கடைசியில், வங்காளத்தி லிருந்த காங்கிரஸ் தொண்டர் படை சட்டத்துக்கு மீறிய கூட்டத்தார் என்று அரசாங்கத்தாரால் விளம்பரம் செய்விக்கப்பட்டது. இத்தகைய அமுல் ஐக்கிய மாகாணங்களிலும் செய்யப் பெற்றது.

தேசபந்து தாஸ், இதைப் பார்த்ததும், வங்காளத்துக்கு உருக்கமான செய்தி யொன்றை விடுத்தார். "என்னுடைய மணிக்கட்டுகளில் விலங்குகள் போட்டிருப்பதாயும், என்னுடைய உடம்பை இரும்புச் சங்கிலிகளால் பிணித்திருப்பதாகவும பாவிக்கின்றேன். இது அடிமைத்தனத்தின் அறிகுறியாகும். என்னுடைய மன வேதனையை நான் என்னவென்று சொல்வேன்? இந்தியா முழுதும் ஒரு விஸ்தாரமான சிறையாகும். காங்கிரஸ் சேனையை நிறுத்தாமல் நடத்திக்கொண்டு

தான் போகவேண்டும். நான் வெளியே இருந்தாலென்ன, சிறைக்குக் கொண்டுபோகப்பட்டாலென்ன? நான் இருந்தாலென்ன, இறந்தாலென்ன"? இவ்வாறு தேசபந்து வங்காளத்துக்கு மனுச்செய்துகொண்டார். ஐக்கிய மாகாணத்தில், நாங்களும் அரசாங்கத்தாரின் போரழைப்பை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டோம். எங்களுடைய தொண்டர் படை கலையாமல் வேலை செய்துகொண்டிருக்கும் என்று அறிவித்துவிட்டு, தினசரி பத்திரிகைகளில் தொண்டர்களின் பெயர்களைப் பிரசுரித்து வந்தோம். தொண்டர்களின் முதல் ஜாப்தாவில் முதல் பெயர் எனது தகப்பனுருடையதாகும். அவர் தொண்டரல்ல. ஆனுல் அரசாங்கத்தாரின் உத்திரவை மீறி நடப்பதற்காக, அவர் தொண்டர் படையில் சேர்ந்து தம்முடைய பெயரைக் கொடுத்தார். டிஸம்பர் மாதத் துவக்கத்தில் வேல்ஸ் இளவரசர் எங்கள் மாகாணத்துக்கு வரும் சில தினங்களுக்கு முன்னர், கூட்டமாகத் தொண்டர்களைக் கைது செய்ய ஆரம்பித்தார்கள்.

கடைசியாக விஷயங்கள் முற்றிப் போய்விட்டன வென்பதைத் தெரிந்துகொண்டோம். காங்கிரஸுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே நேருமென்று வெகு காலமாக எதிர்பார்த்திருந்த போராட்டம் ஆரம்பமாகும் காலம் வந்துவிட்டதென்று தெரிந்தது. என்ருலும் சிறை வாசத்தைப் பற்றி எங்களுக்கொன்றும் தெரியாது. அதற்குள் செல்லுவதென்பதும் புதிதான சங்கதி. காங்கிரஸ் வேலை ரொம்பவும் தேக்கிக் கிடந்து போய்விட்டதால், அதைச் செய்து முடிப்பதற்காக, அலகாபாத் காங்கிரஸ் காரியாலயத்தில் ஒரு நாள் நான் உட்கார்ந்து வேலை செய்துகொண்டிருந்தேன். பரபரப்புடன் ஒரு குமஸ்தா என்னிடம் ஓடி வந்தார். "நம்முடைய காரியாலயத்தைச் சோதிப்பதற்காக வாரண்டுடன் போலீஸார்கள் வந்திருக்கிருர்கள். அவர்கள் நமது கட்டிடத்தை சூழ்ந்து வளைந்துகொண்டிருக்கிருர்கள்" என்று அவர் என்னிடம் கூறிஞர். நானும சிறிது பரபரப்பு அடைந்தேன். இதுதானே என்னுடைய முதல் அனுபவம்? ஆனுலும், இதைப் பற்றி யாதொரு லட்சியமும் இல்லாதவன் போலக் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை யுண்டாயிற்று. "போலீஸார் வந்தால் என்ன? போனுல் என்ன? அதைப் பற்றி நமக்கென்ன கவலை? அவர்கள் வேலையை அவர்கள் செய்துகொண்டிருக்கையில், நம் வேலையை நாம் செய்துகொண்

டிருக்க வேண்டும், எதற்காக பரபரப்பு? நிதானமாக இருக்க வேண்டும்" என்ற மனப்பான்மையை வெளியே காண்பிக்க வேண்டும் என்று விரும்பினேன்.

உடனே, ஒரு குமஸ்தாவைக் கூப்பிட்டேன். "நீர் போலீஸார்களோடு போய், அவர்களுக்குக் கட்டிட முழுவதையும் காண்பித்துவிட்டு வாரும். மற்றவர்கள், போலீஸார் இங்கே இருக்கிறார்கள் என்ற எண்ணமேயில்லாமல், தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு வர வேண்டும்" என்று கட்டளையிட்டேன். சிறிது நேரத்துக்கெல்லாம், தோழர் ஒருவர் என்னிடம் வந்தார். அப்பொழுதுதான் அவரைப் போலீஸார் கைது செய்திருந்தார்கள். காரியாலயத்துக்கு வெளியே கைது செய்யப்பட்ட அவர், உள்ளே வந்து என்னிடம் சொல்லிக் கொண்டு போக வேண்டுமென்ற ஆவலுடன் என்னை நெருங்கினார். அவர் பக்கத்தில் ஒரு போலீஸ்காரன் இருந்தான். கைது செய்யும் இந்த நிகழ்ச்சிகளை தினசரி சம்பவங்களாக நான் மதிப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற கர்வம் என் உள்ளத்தில் நிறைந்து கிடந்தது. எனவே, கொஞ்சங்கூட உணர்ச்சியும், அன்புமில்லாததுபோல, நான் என் தோழரிடம் நடந்துகொண்டேன். "கொஞ்சம் பொறுங்கள். ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன். அது முடிந்ததும், உங்களிடம் பேசுகிறேன்" என்று நண்பரிடமும், போலீஸ்காரரிடமும் சொன்னேன். விரைவில் நகரத்தில் வேறு செய்திகள் வந்து குவிந்தன. பலர் கைது செய்யப்பட்டனர். வீட்டுக்குப் போய், அங்கே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று பார்க்கத் தீர்மானங் கொண்டு வீட்டுப் பக்கம் போய்க்கொண்டிருந்தேன். எங்களுடைய பெரிய வீட்டின் ஒரு பகுதியைப் போலீஸார் சோதனை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். என்னையும், தகப்பனாரையும் கைது செய்வதற்காக, அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்தது.

அதிகாரிகள் அடக்குமுறை ஆரம்பிக்காமலிருந்தால், வேல்ஸ் இளவரசரின் பகிஷ்காரத் திட்டம் அவ்வளவு பூர்த்தியாக நிறைவேறியிராது. அதிகாரிகள் வேல்ஸ் இளவரசரை எங்கெல்லாம் கூட்டிச்சென்றார்களோ அந்த இடங்களில் ஹர்த்தால்கள் நேர்ந்தன. தெருக்களில் யாரும் நடமாடவில்லை. அலகாபாத்துக்கு அவர் விஜயம் செய்தபொழுது, நகரம் இறந்தோர் நகரமாகக் காணப்பட்டது. நடமாட்டமே இல்லை. இரண்டொருதினங்கள் கழித்து, அலகாபாத்தில் மீநர்ந்

ததுபோலவே, கல்கத்தாவிலும் நேர்ந்தது. இதனால் இளவரசருக்கு மனவருத்த உண்டாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இதையடைய அவர் எவ்வித குற்றமும் செய்யவில்லை. அவரிடம் ஜனங்களுக்கு சிறிதளவுகூட வெறுப்பே கிடையாது. ஆனால் இந்திய அதிகார்வர்க்கத்தினர் அவரை இந்தியாவுக்கு வரும்படி செய்து, அவருடைய பெயரைக்கொண்டு, குறைந்து வரும் தம் செல்வாக்கை மீண்டும் ஸ்தாபிக்க முயன்றனர்.

நாடெங்கும் முக்கியமாக ஐக்கிய மாகாணத்திலும், வங்காளத்திலும் ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்தமாகாணங்களில் பிரபலஸ்தர்களாயிருந்த காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் கைதுசெய்யப்பட்டனர். சாதாரணத் தொண்டர்களோ, ஆயிரக்கணக்கில் சிறை சென்றார்கள். இவ்வாறு முதன்முதலாக சிறை சென்றவர்களில் பெரும்பான்மையோர் நகரவாசிகள். சிறைசெல்லும் தொண்டர்களின் எண்ணிக்கை கணக்குக்கடங்காததுபோலத் தோன்றிற்று. ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கூட்டம் நடக்கையில் அவன் அங்கத்தினர்கள் 55 பேர்களும் ஏக காலத்தில் கைது செய்யப்பட்டார்கள். காங்கிரசிலாவது, பொதுஜனத் தொண்டிலாவது, இதுவரையிலும் ஈடுபடாத பலர் உற்சாக மேலீட்டால், தங்களையும் கைது செய்யவேண்டுமென்று போலீஸ்காரர்களிடம் வற்புறுத்தினார்கள். என்னென்ன விநோதக் காட்சிகள் நடைபெற்றன! மாலையில், அரசாங்கக் கச்சேரியிலிருந்து குமாஸ்தாக்கள் வீட்டுக்குப் போயிக்கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் வீட்டுக்குப் போகாமல், சிறைக்குப் போய்விடுவார்கள். அவ்வளவு உற்சாகம்! இளைஞர்களும், பையன்களும், போலீஸ் மோட்டார் லாறியில் ஏறி உட்கார்ந்துகொண்டு, இறங்கமாட்டார்கள். ஜெயிலுக்குத்தான் போவோம் என்று பிடிவாதமாகச் சொல்லுவார்கள். ஒவ்வொருநாள் சாயங்காலமும், காந்திக்கு ஜே, முதலிய காங்கிரஸ் கூப்பாடுகளைப் போட்டுக்கொண்டு லாறிகளிலே, வெளியே இருந்து தொண்டர்களும், மற்றோர்களும் சிறைக்குவந்து சேறுவார்கள். அந்தக்கூப்பாடுகள் எங்களுக்கு நன்றாகக் கேட்கும். சிறைகள் நிரம்பிவிட்டன. இந்த அசாதாரணமான நிகழ்ச்சியினால், என்ன செய்வதென்று சிறையதிகாரிகளுக்குத் தெரியவேயில்லை. சில சமயங்களில், போலீஸ் லாறிவரும், போலீஸ்காரர்கள் வாரண்டு வைத்திருப்பார்கள். வாரண்டிலே, கைது செய்யப்பட்டவர்களின் பெயர்கள் குறிக்

க்கப்பட்டிருக்கமாட்டா. மொத்த எண்ணிக்கை மாத்திரம் கண்டிருக்கும். சில சமயங்களில், வாரண்டுகளில் காணப்பட்ட எண்ணிக்கையைக்காட்டிலும் அதிகமான பேர்வழிகள் லாறிக ளிலிருந்து கீழே இறங்குவார்கள். அப்பொழுது என்ன செய் வது என்று தெரியாமல் சிறை அதிகாரிகள் திக்குமுக்காடிப் போய்விடுவார்கள். இதைப்பற்றி ஜெயில் திட்ட நூலில் ஒன் றும் காணப்படவில்லை. பாவம், சிறையதிகாரிகள் என்ன செய்வார்கள் !

சிறிது சிறிதாக அரசாங்கத்தார் கண்டவர்களையெல் லாம் கைதுசெய்யும் முறையை விட்டுவிட்டார்கள். குறிப் பிட்ட நபர்களை மட்டும்தான் பிடித்துக்கொண்டார்கள். கொஞ் சங்கொஞ்சமாக ஜனங்களுடைய உற்சாகமும் குறைந்து கொண்டே வந்தது. திடசித்தமுள்ள ஊழியர்கள் சிறைக் குள் அகப்பட்டுக்கொண்டமையால், மேலே என்ன செய்வ தென்று தெரியாமல் ஜனங்கள் திகைத்தனர். இத்தளர்ச்சி வெளிப்படையாகக் காணப்பட்டாலும், உள்ளூர இயக்கம் தீவிரமாகவே இருந்தது. புரட்சி சின்னங்கள் நாடெங்கும் காணப்பட்டன. 1921-ம் வருடம் டிசம்பரிலும், 1922-ம் வருடம் ஜனவரியிலும், ஒத்துழையாமை இயக்க சம்பந்த பாகச்சிறை சென்றவர்கள் முப்பதினாயிரம் பேர்கள் என்று கணக்கிடப்பட்டது. முக்கியமான தலைவர்களும், ஊழியர்க ளும் கைது செய்யப்பட்டாலும், போராட்டத்துக்குத் தலைவ ராக நின்று, அதை நடத்திவந்த மகாத்மா காந்தி இன்னும் வெளியேதான் இருந்தார். ஒவ்வொருநாளும் அவர் பொது ஜனங்களுக்குச் செய்திகளும், உத்திரவுகளும் அனுப்பிக் கொண்டேவந்தார். இதனால் ஜனங்கள் ஒருபுறத்தில் ஆவே சம் அடைந்தார்கள். இன்னொருபுறத்தில் அவர்கள் தகாத செயல் செய்யாமல் தடுக்கப்பட்டார்கள். அரசாங்கத்தார் அவரை தொடுவதற்கு அஞ்சினார்கள். மகாத்மாவைத் தொட் டால், இந்தியப் போலீசாரும், இந்தியச் சேனையும் ஒருக்கால் கலகம் செய்வார்களோ என்று அரசாங்கத்தார் பயந்தார்கள்.

1922-ம் வருஷம் பிப்ரவரி மாதம் திடீரென்று நிலைமை அடியோடு மாறிவிட்டது. சட்டமறுப்பு இயக்கத்தை காந்திஜி தற்காலிகமாக நிறுத்திவிட்டார் என்றும் சர்க்காரை எதிர்க் கும் காரியங்கள் நின்றுவிட்டனவென்றும் நாங்கள் சிறையில் கேள்விப்பட்டோம். எங்களுக்கு ஏற்பட்ட திகைப்பும் திகி லும் இவ்வளவுதான் என்று சொல்லமுடியாது. சௌரி

சௌரா கிராமத்திலே, கிராமவாசிகளின் ஒரு கூட்டம் போலீஸ் ஸ்டேஷன் ஒன்றுக்குத் தீவைத்துக் கொளுத்தி, சுமார் ஆறு போலீஸ்காரர்களைப் பொசுக்கிவிட்டதாம். இந்த நிகழ்ச்சிக்காக, ஒத்துழையாமையின் சட்டமறுப்பு நிறுத்தி வைக்கப்பட்டது என்று நாங்கள் பத்திரிகையில் படித்தோம். எல்லாப் போர்முனைகளிலும் நாங்கள் வெற்றியுடன் முன்னேறிச் செல்வதாக, எண்ணிக்கொண்டிருந்த இந்த சமயத்தில், சட்டமறும்பு நிறுத்தப்பட்டது என்று கேள்விப்பட்டவுடன், எங்களுக்கு மிகவும் கோபம் உண்டாயிற்று. ஆனால் சிறையிலிருந்த எங்களுடைய கோபமும், ஏக்கமும் எதற்குப் பயன்படும் ? சட்டமறுப்பு நின்று போயிற்று. ஒத்துழையாமையும் புகைந்து போயிற்று. பல மாதங்களாகத் திணறிக் கொண்டிருந்த சர்க்கார் தாராளமாக மூச்சுவிடத் துவக்கினார்கள். காங்கிரஸைத் தாக்குவதற்கு இதுவரையிலும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதுவரையிலும் அவர்கள் தற்காப்பிலேயே கவனம் செலுத்தவேண்டியிருந்தது. இனி, காங்கிரஸைத் தாக்கி உடைத்தெறிவதற்கு, அவர்களுக்கு சந்தர்ப்பம் வாய்த்தது. சில வாரங்களுக்குள் அவர்கள் காந்திஜியைக் கைதுசெய்து, நீண்டகாலத் தண்டனையையும் அவருக்குக் கொடுத்து விட்டார்கள்.

## XII

## அஹிம்சையும், க்ஷத்திரிய தர்மமும்

சௌரி சௌரா சம்பவத்தால் ஒத்துழையாமை இயக்கத்தை காந்திஜீ திடீரென்று நிறுத்திவிட்டதற்காக காங்கிரஸி லுள்ள முக்கியமான இதர தலைவர்களுக்கெல்லாம் கோபமும், வருத்தமும் உண்டாயின. அந்த சமயத்தில் சிறையிலிருந்த என் தகப்பனார் மிகுதியும் கலக்கமுற்றுப்போனார். இளைஞர் களோ, இயற்கையாகவே நெஞ்சம் பதை பதைத்தார்கள். எங்களுடைய ஆசைகள் எல்லாம், ஏறிக்கொண்டுபோனவை, கவிழ்ந்துவிட்டன. மனதிலே ஒருவிதமான சோர்வு உண்டா யிற்று. இது எதிர்பார்க்கக்கூடியதுதான். ஆனால் இயக் கத்தை நிறுத்தியதைக்காட்டிலும், அதை நிறுத்தியதின் கார ணங்கள்தான், எங்களுக்கு மிகுதியும் வருத்தத்தைத் தந்தன. இக்காரணங்கள் பொருத்தமானவைகளாக விருந்தால் நம் மியக்கத்திற்குப் பெரும் ஆபத்து விளையுமென்று கருதினோம். சௌரி சௌரா சம்பவம் விசனிக்கத்தக்கதுதான். அது சாத்வீக இயக்கத்துக்கு முற்றிலும் மாறுபட்டதுதான். ஆனால் மூலையிலிருக்கும் ஒரு கிராமத்தில், யாரோ ஒரு சிலர் வெறிபிடித்து, ஏதேனும் விபரீதமாகச் செய்தால், அதற்காகத் தேசீயப் போராட்டத்தை, விடுதலைப் போரை நிறுத்திவிட வேண்டுமா? தனித்து எழும் இத்தகைய பலாத்காரத்தினால் இயக்கம் நின்றுபோகுமானால், சாத்வீக தத்துவத்திலும், அதைக் கையாளும் முறையிலும் ஏதோ குறையிருக்க வேண்டும். ஏனெனில், சௌரி சௌராவைப்போல இன் னொரு சம்பவம் நேராதென்று யார் ஜாமீன் கொடுக்கமுடி யும்? 36 கோடி இந்தியர்களையும் சாத்வீகக் கொள்கையில் பயிற்சிசெய்து, அவர்கள் அதில் தேர்ந்த பின்னர்தான், போராட்டத்தை நடத்தவேணடுமா? அப்படியே, அவர்களைப் பயிற்சி செய்வதாக வைத்துக்கொள்வோம். போலீசாருடைய கொடுமையான அராக்கிரகச் செயல்களைக் கண்டும், எத்தனை பேர்கள் சாத்வீகத்துடனிருக்க முடியுமென்று யார் சொல்ல முடியும்? இதையும் தடுத்துவிட்டதாக வைத்துக்கொள் வோம். தேசபக்தர்களைப்போல வேஷம்போட்டுக்கொண்டு நடிக்கும் போலீஸ் உளவர்கள், இத்தகைய பலாத்காரச் செயல்

களைத் தாங்களே செய்து அவர்கள் பிறரையும் தூண்டினால், அதை எவ்வாறு தடுக்கமுடியும்? இவ்வித வரம்பு கட்டிவிட்டால், சாத்வீக எதிர்ப்பு ஒருநாளும் வெற்றிபெறாது. எப்பொழுதும் தோற்றுத்தான் போகும்.

சாத்வீக ஒத்துழையாமை நிச்சயமாக பலிக்குமென்ற நம்பிக்கையாலேதான், அந்த முறையை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். அதனாலேதான் காங்கிரசும் ஏற்றுக்கொண்டது. இந்தமுறை சரியானது என்று மட்டுமல்ல, நமது நோக்கத்தைப் பூர்த்திசெய்யக்கூடிய இணையற்ற சாதனமென்று சொல்லித்தான், காந்திஜீ இதை நாட்டாருக்கு உபதேசம் செய்தார். ஒத்துழையாமையென்று எதிர்மறைப் பெயரால் அது அழைக்கப்பட்டாலும், அது வல்லமையை வளர்க்கும் ஒரு சாதனமாகும்; கொடுங்கோலனுடைய இச்சையை எதிர்த்துப் போராடும் முறையாகும். சோம்பலைப் போர்த்துக் கொண்டு வேதாந்தம் பேசும் கோழையின் அடைக்கலமல்ல. சாத்வீக ஒத்துழையாமை நாட்டின் அடிமையை ஒழிக்கும் வீரசபதம். யாரோ நான்கு பேர் கூடிக்கொண்டு ஆத்திரப்பட்டுக் காரியத்தைச் செய்து, ஒத்துழையாமையைக் கவிழ்த்திருக்கக் கூடுமானால் அந்த ஆயுதத்தின் பயனென்ன? அதைக் கையாளுபவர்களில் பெரும்பாலோர் தீரர்களாக விருந்துதான் என்ன? ஜனங்களின் மனத்தைக் கவரும் தனது அபாரசக்தி முழுதையும் உபயோகித்து காந்திஜீ அஹிம்ஸையையும், ஒத்துழையாமையையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். அவருடைய பாஷை மிகவும் சரளமானது; நடையில் படாடோபமும், அலங்காரமும், அணிகளும், மருந்துக்கும் காணப்படமாட்டா. அவருடைய குரலும், தோற்றமும் மகா சாந்தமானவை; படபடப்பே சிறிதும் காண முடியாது. ஆனால் வெளித் தோற்றத்திலே, பனிக் கட்டியைப்போல் குளிர்ந்து நின்றாலும், உள்ளத்தினுள்ளே கனல் பொங்கி எழுந்தது. உருட்டித் திரட்டிய உறுதி, அந்தக் குரலிலும் உள்ளத்திலும் காணப்பட்டன. அவர் வெளியிடும் சொற்களுக்கு எப்படியோ இறக்கை முளைத்து எங்களுடைய மனதுகளில் ஆழத்திலும் ஆழத்தில் பதிந்துகொண்டு, விநோதமான எழுச்சியையும், புகைச்சலையும் உண்டாக்கிவிடும். அவர் காண்பித்த வழியோ மிகவும் கரடுமுரடானது. ஆனால், அது வீரர் செல்லும் மார்க்கம். விடுதலையுலகில் இந்தியர்களை அது கொண்டு போய்ச் சேர்க்குமென்று நம்பினோம். அந்த நம்பிக்கையைக்

கொண்டுதான் நாங்கள் சாத்வீக ஒத்துழையாமையை ஏற்றுக் கொண்டு, முன் செல்லத் துணிந்தோம்.

1920-ஆம் ஆண்டில் காந்திஜீ சிறப்பான கட்டுரை யொன்று எழுதினார். அதற்கு "க்ஷத்திரிய தத்துவம்" என்று பெயர். அந்தக் கட்டுரையில் காந்திஜீ பின் வருமாறு எழுதியிருக்கிறார் :—

"கோழைத்தனம், பலாத்காரம் இவ்விரண்டி லொன்றையே நாம் கைக் கொள்ள வேண்டுமாயின், பலாத்காரத்தைக் கைக்கொள்ளுங்கள் என்றுதான் நான் யோசனை கூறுவேன். ஆராத் துயரத்துக்கும், அவமானத்துக்கும் கோழைத்தனத்தால் இந்தியா ஆட்பட்டுக் கிடப்பதைக்காட்டிலும், தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, பலாத்கார ஆயுதங்களைக் கைக் கொள்ளலாம் என்றுகூட நான் சொல்லத் துணிவேன்.

ஆனால் சாத்வீகவீரம் பலாத்காரத்தைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்ததாகும். கொடுமையைக்காட்டிலும் க்ஷமை தான் ஆண் தன்மையாகும். வீரனுக்கு அணிகலமாகத் திகழ்வது மன்னிக்கும் தன்மைதான். ஆனால் க்ஷமை எப்பொழுது கிடைக்கப்பெறும்? தண்டிக்கவல்லமையிருந்து, அதை உபயோகப்படுத்தாமலிருப்பதுதான் மன்னிப்பு செய்வதாகும். திக்கற்றவன் பொறுப்பதாகப் பாசாங்கு செய்வதற்கு அர்த்தமே கிடையாது. பூனை எலியைத் துண்டு துண்டாகப் பிய்த்து எறிந்து விடுகிறது. அப்பொழுது எலி க்ஷமையால், பூனையைப் பொறுத்துக்கொண்டிருக்கிறதோ?......... ஆனால் இந்தியா திக்கற்ற நிலைமையில் இருப்பதாக நான் நம்பவில்லை. என்னையும் திக்கற்றுப் போனவனாக நான் மதித்துக்கொள்ளவில்லை.........என்னை யாரும் தப்பர்த்தம் செய்துகொள்ள வேண்டாம். வல்லமை உடல் வலிமையினால் மட்டும் ஏற்படுவதல்ல. சக்தி என்பது அசைக்கமுடியாத உள்ளத்திலிருந்து பெருக்கடையும் ஊற்று நீராகும்.

நான் வெறும் வீண்கனவு காண்பவனல்ல. சாத்தியமான லக்ஷ்யத்தைக்கொண்டு, அதனையடைய முயற்சிசெய்பவன். சாத்வீகமென்ற பதம் ரிஷிகளுக்காகவும் சாதுக்களுக்காகவும் மட்டும் ஏற்பட்டதல்ல. சாதாரண ஜனங்களுக்கும் ஏற்பட்டதாகும். விலங்கினத்துக்கு பலாத்காரம் எவவாறு பொருத்தமான சட்டமாகுமோ, அவ்வாறே சாத்வீகம் மனித வர்க்கத்

த்துக்கு உற்ற வியாதியாகும். விலங்கின் ஆத்மா உறங்கிக்கிடக்கின்றது; உடல் வலியைத்தவிர அதற்கு வேறொரு வரம்பும் தெரியாது. ஆனால் மனித கௌரவமோ தன் உயர்ந்த தன்மைக்கு ஏற்றபடியாக வேறொரு உயர்ந்த சட்டத்தை ஏற்று நடக்கவேண்டும். அதுதான் ஆத்ம பலமாகும். தன் புராதன விதியான ஆத்மத் தியாக வழியை மீண்டும் இந்தியாவின் முன்னே வைக்க, நான் துணிந்திருக்கிறேன். ஒத்துழையாமை சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் என்பவையெல்லாம் புதுப் பெயர்களாயிருக்கலாம். ஆனால் அவைகள் யாவும் இந்த நாட்டின் பழைய ஆத்மத்தியாக தர்மத்தையே குறிப்பிடுகின்றன. பலாத்காரத்துக்கு நடுவே சாத்வீகம் என்ற இயற்கை விதியைக் கண்டுபிடித்த ரிஷிகள், நியூட்டன் என்ற விஞ்ஞான சாஸ்திரியைக் காட்டிலும் மிக உயர்ந்த மேதாவிகளாகும்; வெலிங்டன் என்ற போர் வீரனைக்காட்டிலும் அவர்கள் மிகச் சிறந்த வீரர்கள் ஆகும். அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி தெரியும் ஆனால், அதனுடைய பயனற்ற தன்மையை உணர்ந்துகொண்டார்கள். சாத்வீகத்தினால்தான் உயர்வு என்றும், பலாத்காரத்தினால் விடுதலை ஏற்படாதென்றும், தீச்செயல்களால் சீர்குலைந்து போன உலகத்துக்கு அவர்கள் உபதேசம் செய்தார்கள். காரிய சொரூபத்தில், அஹிம்சை யென்றால் மனப்பூர்வமாகப் பிறர் இழைக்கும் துன்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்று பொருள். கேடுசெய்பவனுக்குக் குனிந்துகொடுத்துக்கொண்டு அடங்கியிருத்தல் என்று அர்த்தமே இல்லை. கொடுங்கோலனுடைய இச்சையை எதிர்த்துச் சாத்வீகத்தின் முழுச் சக்தியையும்கொண்டு போராடவேண்டும் என்பதுதான் ஒத்துழையாமைக்கு அர்த்தமாகும். இந்த இயற்கை விதியை ஏற்றுக்கொண்டு நடந்தால், எந்தத் தனிமனிதனும் நிகரற்ற வல்லமை பெற்று, அநியாயமான ஏகச்சக்ராதிபத்தியத்தையும் தனியே நின்று எதிர்த்துப் போராடி, தன்மானத்தையும் மதத்தையும் ஆன்மாவையும் காப்பாற்றிக்கொள்ள முடியும். அதன் மூலமாக அந்த அரசாங்கத்தின் அழிவுக்கோ அல்லது புத்துயிருக்கோ அவன் அடிகோல முடியும்.

இந்தியா பலவீனமான நிலையில் இருக்கிறது என்றெண்ணிச் சாத்வீகத்தைக் கைக்கொள்ளுங்கள் என்று நான் யோசனை கூறவில்லை. தனது பலத்திலும் சக்தியிலும் திடமான நம்பிக்கைகொண்டுதான் இந்தியா சாத்வீகத்தை ஏற்கவேண்டுமென்கிறேன். அழியாத ஆத்மா தனக்கு

உண்டென்றும் தன் தேகத்தின் பலஹீனங்களை ஜயித்துக் கொள்ளும் தெய்வ வல்லமையைக்கொண்டு, உலகத்தின் பலாத்காரம் அனைத்தையும் எதிர்த்துப் போராடமுடியும் என்ற நம்பிக்கை கொண்டுதான், இந்தியா சாத்வீகவழியைக் கொள்ளவேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன்.

இந்த ஒத்துழையாமைக்கும் அயர்லாந்தில் நடைபெற்ற சீன்பீன் போராட்டத்துக்கும் சம்பந்தமே இல்லை. பலாத்காரத்தோடு இணைத்து ஒத்துழையாமைப் போராட்டத்தை நடத்தமுடியாது. இந்த சாத்வீக ஒத்துழையாமையைச் சோதித்துப்பார்க்கவேண்டுமென்று பலாத்காரக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன். ஒத்துழையாமை தனக்கு இயல்பாயுள்ள குறையினால் தோற்றுப் போகாது. ஜனங்கள் சரியாக ஏற்றுக்கொண்டு நடக்காவிட்டால்தான் அதற்குத் தோல்வி ஏற்படலாம். அப்பொழுதுதான் அதற்கு உண்மையான ஆபத்துக் காலம் வந்துவிட்டதெனலாம். நாட்டின் அவமானத்தை இனியும் பொறுத்திருக்க முடியாதென்று துடிக்கும் தீவிர தேசபக்தர்கள் தங்களுடைய கோபத்தைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசைப்படலாம். அவர்கள் பலாத்கார வழியைக் கைக்கொள்ளலாம். தங்களையும் தங்களுடைய நாட்டையும் தீமையிலிருந்து விடுவிக்காமலே, அவர்கள் மரிக்க வேண்டிவருமென்று நினைக்கிறேன். இந்தியா க்ஷத்திரிய தத்துவத்தை ஏற்குமாகில், அதற்குத் தற்காலிகமாக வெற்றி கிடைக்கலாம். ஆனால் இந்தியா என் மனோரதமா யிருப்பது நின்றுவிடும். என்னிடம் நல்ல தன்மைகள் இருப்பின், அந்தத் தன்மைகளுக்கு எல்லாம் அவள்தான் தாய். அவளுக்கு நான் தாஸன். உலகத்துக்கு ஓர் ஒப்பற்ற தர்ம மார்க்கத்தை அளிக்க இந்தியாவுக்கு வல்லமையும் சந்தர்ப்பமும் இருக்கின்றனவென்று நான் பூரணமாக நம்புகிறேன்."

காந்திஜீயின் இந்த அபூர்வ வாதத்தால் நாங்கள் கரைந்துபோனோம். ஆனால் எங்களுக்கும் காங்கிரசுக்கும் சாத்வீக முறையென்பது மதமாக, அசைக்கமுடியாத கொள்கையாக அல்லது வாழ்க்கைத் திட்டமாக ஒருநாளும் ஆகமுடியாது. சில பலன்களைத் தரக்கூடிய ஒருகாரியசாதனமாக அதைக் கைக்கொண்டோம். எனவே, அதை அதனால் விளையும் பலன்களைக் கொண்டுதான் இறுதியில் மதிப்பிட

முடியும். தனி நபர்கள் அதை முடிவான மதமாக மதிக்கலாம்; ஆனால் எந்த அரசியல் ஸ்தாபனமும் தன் ராஜீய லக்ஷ்யங்களை விட்டுவிட்டு சாத்வீக முறையை மதமாகக் கருதமுடியாது.

சௌரி சௌராவையும், அதனுடைய பின் விளைவுகளையும் நாங்கள் திரட்டி யோசித்துப் பார்த்து, சாத்வீக முறையை எடை போட்டோம். போராட்டத்தை நிறுத்துவதற்குக் காந்திஜீ சொல்லும் வாதம் போது மானதாக இருந்தால், நம்முடைய எதிரிகள் சிற்சில பலாத்கார நிகழ்ச்சிகளைத் தூண்டிவிட்டுப் போராட்டத்தை நிறுத்திவிடும்படியாக எப்பொழுதும் செய்ய முடியும். எனவே இது சாத்வீக முறையின் குறையா, அல்லது சாத்வீக முறையைக் காந்திஜீ தவறாக வியாக்கியானம் செய்திருக்கிறாரா? என்ன சொல்லி என்ன? காந்திஜீதானே ஒத்துழையாமையின் நாயகன்; ஒத்துழையாமையின் ஆசிரியன். எனவே, எது ஒத்துழையாமை, எது ஒத்துழையாமையல்ல, என்று நிர்ணயிப்பதற்கு அவரைக் காட்டிலும், உரிமை படைத்த நீதிபதி வேறு யாருமே இருக்கமுடியாது. அவர் இல்லாவிட்டால் நம்முடைய இயக்கம் எங்கு இருந்து தோன்றியிருக்க முடியும்?

1930-ம் ஆண்டுச் சட்டமறுப்பு இயக்கம் துவக்குவதற்கு சிறிது காலத்துக்கு முன்னர், காந்திஜீ இச்சந்தேகத்தைத் தீர்த்து விட்டார். எங்களுக்கு மிகுதியும் திருப்தி உண்டாயிற்று. "ஏதோ சில இடங்களில் துண்டாக பலாத்காரச் செயல்கள் நிகழ்ந்தாலும், அதற்காக இயக்கத்தை நிறுத்திவைக்கக்கூடாது" என்று அவர் கூறிவிட்டார். சாத்வீக இயக்கத்தின் நடுவிலேகூட, சில சமயங்களில் எதிர்பாராதவாறு பலாத்கார நிகழ்ச்சிகள் நேரக்கூடும். அதனால் அந்த இயக்கம் நடைபெறாமல் தடைபட்டுப்போனால், சாத்வீகப் போராட்டம் எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றதொரு முறையல்ல என்பது வெளிப்படையாகிவிடும். இந்த முடிவை, காந்திஜீ ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. உபாயம் சரியானதாக இருந்தால் அது எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தினதாகத் தானிருக்க வேண்டும். இயக்கம் நடைபெறமுடியாமல், மாறான நிலைமை ஏற்பட்டாலும், அந்தச் சமயத்திலும் சாத்வீகமுறை நன்றாக வேலை செய்யத்தான் வேண்டும். குறுகிய எல்லைக்குள்ளேனும் போராட்டம் நடந்தேதீரவேண்டும். இவ்வாறு காந்திஜீ சாத்வீக ஒத்துழையா-

-மைக்கு இப்பொழுது வியாக்கியானம் செய்தார். இதனுல், சாத்வீக ஒத்துழையாமையின் எல்லையும், வேலையும் விரிவு அடைந்தன. ஒத்துழையாமைத் தத்துவங்கள் காந்திஜீயின் உள்ளத்தில் விரிவடைந்து வந்ததை இந்த வியாக்கியானம் காண்பித்ததோ, என்னவோ அது எனக்குத் தெரியாது.

உண்மையில் 1922-ம் வருடம் பிப்ரவரி மாதம் காந்திஜீ சட்டமறுப்பை நிறுத்தியது சௌரிசௌரா நிகழ்ச்சிக்காக் மட்டுமல்ல. சௌரி சௌராச் சம்பவத்துக்காகமட்டும் நிறுத்தினுரென்று பலர் எண்ணியது தவருகும். சௌரி சௌரா கடைசிக் காரணம். காந்திஜீ அடிக்கடி இயற்கை உணர்ச்சியால் காரியம் செய்வது வழக்கம். அவருக்கு பாமர ஜனங்களுடன் நீண்டகால நெருங்கின பழக்கம் உண்டு. இந்தப் பழக்கத்தால், மற்றும் சில மாபெரும் பொதுஜனத் தலைவர்களுக்கு ஏற்படுவதைப்போல காந்திஜீக்கும் ஒருவிதச் சூசனை சக்தி உண்டாயிருந்தது. அவ்வப்போது பொது ஜனங்கள் எவ்வாறு உணர்ச்சி பெற்றிருக்கிருர்கள், அவர்கள் என்ன செய்கிருர்கள் அல்லது அவர்களால் என்ன செய்ய முடியும் என்பதை இந்த சக்தியினின்றும் திடீரென்று எப்படியோ அவர் தெரிந்துகொள்கிருர். அவ்வாறே தம்முடைய காரியத்தையும் மாற்றி அமைத்துக்கொள்கிருர். இந்த முடிவைக்கண்டு, ஆத்திரமும் ஆச்சரியமும் படும் தோழர்களுக்கு, தன் முடிவுகள் தீர்க்காலோசனைக்குப் பின் செய்யப் பட்டவைபோல் காரணங்களை காண்பிக்க முயலுகின்ருர். இக்காரணங்கள் அநேக சமயங்களில் திருப்திகரமாக இருப்ப தில்லை. சௌரி சௌரா சமாதானத்தை இந்தியர்கள் அப் படியே விழுங்கிவிட மனங்கொள்ளவில்லை. அந்தக் காலத் தில், நமது இயக்கம் செழித்துப் பரவிவந்ததாகக் காணப்பட் டாலும், அது தூள்தூளாக உடைந்துபோய்க் கொண்டிருந் தது. கட்டுப்பாடும், திட்டமும் சீர்குலைந்துபோய்க் கொண் டிருந்தன. எங்களுடைய சிறந்த தொண்டர் யாவரும் அநேக மாகச் சிறையிலிருந்தார்கள். எனவே தன்னந்தனியாக தலை வர்களில்லாமல், தாங்களே போராட்டத்தை நடத்துவ தற்குப் பொதுஜனங்களுக்குப் பயிற்சி, இதுவரையிலும் ஏற் பட்டதேயில்லை. எவனுக்கு இஷ்டமிருந்தாலும், அவன் யாராயிருப்பினும் சரியே, காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகத் தை யேற்றுக்கொள்ளும்படியான நிலைமை யேற்பட்டது. இதனுல் விரும்பத்தகாத மனிதர்களிற் பலர், காங்கிரஸ்

அமைப்புகளுக்குள்ளும், கில்பத் கமிட்டிகளுக்குள்ளும் புகுந்து வேலை செய்யத் துவக்கிவிட்டார்கள். இவர்களிலே பலர் போலீசாரின் உளவர்கள். இதைத்தடுப்பதற்கு வழியில்லாமலிருந்தது.

இத்தகைய சம்பவம் பெர்து ஜனப் போராட்ட இயக்கத்தில் நேர்வது சகஜம்தான். தலைவர்கள் சிறை செல்வதற்கு வழி காட்டி, தாங்கள் முதலில் செல்ல வேண்டும். தங்களுக்குப் பின்னர், மற்றவர்கள் போராட்டத்தை நடத்துவார்கள் என்ற நம்பிக்கையுடனேதான், அவர்கள் சிறை செல்ல முடியும். எது சாத்யமென்றால், பொது ஜனங்களைச் சிற்சில வேலைகளுக்குப் பழக்கவும், அவர்களைச் சில தகாத காரியங்கள் செய்யாமல் தடுக்கவும்தான் முடியும்.

அத்தகைய பயிற்சி சிறிது காலமாக ஜனங்களுக்கு ஏற்பட்டிருந்தது. எனவே 1930-32 இந்த இரண்டு ஆண்டுகளிலும் நடைபெற்ற சட்ட மறுப்பு போர் வல்லமையும், கட்டுப்பாடும் பொருந்திய நிகழ்ச்சியாக இருந்தது. ஆனால் 1921-22-ல் இத்தகைய கட்டுப்பாடும், சக்தியும் இல்லை. ஜனங்களுக்குள்ளே வெறியும், உற்சாகமும் இருந்தனவே தவிர, உண்மையான கட்டுப்பாடு காணப்படவில்லை. எனவே அப்பொழுது போராட்டம் நீடித்து நடைபெற்றிருக்குமாகில், அநேக இடங்களில், பலாத்காரம் தலை தூக்கி யிருக்கும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இந்த பலாத்காரத்தை இரத்த வெள்ளப் பெருக்குடன் அரசாங்கத்தார் அடக்கியிருப்பார்கள். பயங்கர ஆட்சி அமுலில் வந்திருக்கும். ஜனங்களும் மிகவும் கேவலமாகச் சீரழிந்து போய், நாடு முழுதும் ஏக்கம் உண்டாயிருக்கும்.

காந்திஜியின் உள்ளத்தில் இத்தகைய காரணங்கள்தான் தோன்றி யிருக்க வேண்டும். சாத்வீகப் போரின் முறைப்படி இயக்கத்தை நடத்த வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டால், காந்திஜி வந்த முடிவு மிகவும் சரியானதுதான். இயக்கத்தின் சீரழிவைத் தடுத்து, புதிதாக அமைக்க வேண்டிய பொறுப்பு அவருடையதுதான்.

வேறொரு நோக்கப்படி பார்த்தால் அவரது முடிவு தவறு என்று சொல்லலாம். ஆனால் அந்த நோக்கத்துக்கும் சாத்வீக முறைக்கும் ஒவ்வாது. இரண்டுவிதமுறைகளையும், ஏககாலத்தில் கையாள்வது சாத்தியப்படாத சங்கதியாகும். அரசாங்

கத்தார் ஒருசில இடங்களில் பலாத்காரம் ஏற்பட்டதைக் காரணமாகக்கொண்டு, தேசீய இயக்கத்தை அப்பொழுது ஒடுக்கி விட்டாலும், தேசீய இயக்கம் நசித்துவிட்டிருக்காது. சாம்பலிலிருந்து தீ பிடித்துக்கொள்வதைப்போல, இந்த இயக்கங்கள் தீப்பிடித்துக் கொள்ளும் தன்மை கொண்டவை. நடுவிலே வளர்ச்சிக்குத் தடையேற்படுவதால் சிலவேளை நன்மையும் ஏற்படலாம். ஏனெனின் இயக்கத்தின் நோக்கத்தையும் அதன் சம்பந்தமான பிரச்னைகளையும் தெளிவாக யோசித்து முடிவுக்கு வரக்கூடிய சாவகாசம் அப்பொழுது கிடைக்கும்.

அதனால் இயக்கத்துக்கு ஒருவகை உறுதியேற்படலாம். ஒரு இயக்கத்துக்குத் தடைகள், அல்லது, தற்காலிக தோல்விகள் ஏற்படுவதால் பாதகமில்லை. அதனுடைய கொள்கைகளிலும், லட்சியங்களிலும் தோல்வியோ, தடையோ ஏற்படலாகாது. இந்தக் கொள்கைளைப் பொதுஜனங்கள் கெடாமல் காப்பாற்றிவிட்டால், இயக்கம் தோற்றுப் போனாலும், விரைவில் புத்துயிர்பெற்று எழுந்துவிடும். 1921-22-ம் வருடங்களில், நமது நோக்கமும் கொள்கைகளும் என்ன? தெளிவு பெறாத ஸ்வராஜ்யமாகும். இதுதான் நம்முடைய நோக்கமாகவும் சாத்வீகப் போராட்டம் நமது வழியாகவும் இருந்தன. தேசத்தில் பெரிய அளவில், புலாத்காரம் நேர்ந்திருக்குமாகில் சாத்வீகம், தானாகவே மடிந்து போயிருக்கும். ஸ்வராஜ்யமோ இன்னதென்று அப்பொழுதும் தெளிவுபட்டிருக்காது. ஜனங்கள் பற்றிக்கொண்டு நிற்பதற்கு தெளிவான லக்ஷியம் இருந்திருக்காது. நீண்ட காலத்துக்குத் தாங்களே தனித்து நின்று போராட்டத்தைநடத்த ஜனங்கள் வல்லமையற்றவர்களாக இருந்தார்கள். நாடுமுழுதும் அந்நிய ஆட்சியிலே ஒரு வெறுப்பும், காங்கிரசினிடம் ஒரு அனுதாபமும் கொண்டிருந்தாலும், உறுதியும் கட்டுப்பாடும் ஏற்படவில்லை. என்வே அந்த உணர்ச்சிகள் நிலைத்து நிற்கக் கூடியவையல்ல. சிறை சென்ற கூட்டங்கள் கூட, உற்சாகத்தினால் சென்று விரைவில் போராட்டம் வெற்றியுடன் முடிந்துவிடுமென்று தப்பாசை கொண்டிருந்தன. 1922-ம் வருஷம் சட்டமறுப்பைக் காந்திஜீ நிறுத்தத் தீர்மானங்கொண்ட முடிவு சரியானதென்றே தோன்றுகிறது. ஆனால், அந்த நிறுத்தம் செய்யப்பட்டவகை அவ்வளவு திருப்திகரமாகவிருக்கவில்லை. அதனால், நாட்டில் ஓரளவு மனத்தளர்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு திடீரென்று ஒரு பெரிய இயக்கத்தை நிறுத்தியது

ஒரு துக்ககரமான மாறுதலுக்கு காரணமாக இருந்திருக்க லாம். விடுதலைப் போரில் உண்டான பலாத்கார இயக்கம் நின்றுவிட்டது. ஆனால் அடக்கி வைக்கப்பட்ட இந்த பலாத் கார உணர்ச்சி வெளி வந்துதானே ஆக வேண்டும்? இதனால் தான் வகுப்புச் சண்டைகள் மும்முரமாகச் சில வருஷங்க ளாகச் செழித்து வருகின்றனவோ, என்னவோ? வகுப்பு வாதிகள், அரசியல் சம்பந்தப்பட்ட வரையிலும் மிகவும் பிற் போக்குக் கொண்டவர்கள். ஒத்துழையாமைக்கும், சட்ட மறுப்பு இயக்கத்துக்கும் நாட்டார் காண்பித்த பெருமித ஆத ரவினால், இவர்கள் தலை காட்ட முடியாமல் மறைந்தே நின் றார்கள். சட்ட மறுப்பு நிறுத்தப்படவே, அவர்கள் தங்கள் மறைவு வாழ்வினின்றும் வெளித் தோன்றினார்கள். ரகசி யப் போலீஸின் உளவாளிகளும், வகுப்புக் கலவரத்தை யுண் டாக்கி அதிகாரிகளைத் திருப்தி செய்ய எண்ணினவர்களும் மற்றும் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். மலையாளத்தில் மாப்பிள்ளைமார் கலகம் ஏற்பட்டதும், அதை அரசாங்கத்தார் எவ்வளவு பயங்கரக் கொடுமையுடன் அடக் கினதும், முற்றிலும் மூடப்பட்ட ரயில் வண்டிகளில் மாப் பிள்ளைக் கைதிகளைப் புழுங்கும்படியாக வைத்து மடிய விட்ட தும் இவைகள் வகுப்புப் போராட்டத்துக்குத் தூண்டுதல்க ளாக ஏற்பட்டன. சட்ட மறுப்பை நிறுத்தாமல் நடத்திக் கொண்டே போயிருந்து, அப்பொழுது அதை அரசாங்கத் தார் ஒடுக்கியிருப்பார்களாகில், அதனால் வகுப்பு விரோதம் குறைந்து போய் பின்னர் நேர்ந்த இந்து முஸ்லீம் கலகங் களுக்குத் தேவையான உணர்ச்சி நாட்டில் இல்லாமல் போ யிருக்கலாம் எனவும் தோன்றுகிறது.

சட்டமறுப்பை நிறுத்துவதற்கு முந்தி, ஒரு சம்பவம் நேர்ந்தது. அதனால் வேறொருபலனும் ஏற்பட்டிருக்கக்கூடும். சட்டமறுப்பின் அலை மோதிக்கொண்டு வருவதைப் பார்த்து சர்க்கார் வியந்தும், பயந்தும் போனார்கள். தாம் கலங்கித் திகைத்துப் போனதாக அப்பொழுது வைசிராயாகவிருந்த ரீடிங்பிரபு பிரசங்கமொன்றில் சொன்னார். வேல்ஸ் இளவரசர் அப்பொழுது இந்தியாவில் இருந்தார். அதனால், அரசாங் கத்தினுடைய பொறுப்பு அதிகமாகப் போய்விட்டது. 1921-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் கூட்டம் கூட்டமாகத் தொண்டர்களைக் கைதுசெய்தவுடனே, அரசாங்கத்தார் காங் கிரஸோடு ராஜிக்கு வர முயன்றார்கள். அதுவும் வேல்ஸ்

இளவரசர் கல்கத்தாவுக்கு விஜயம் செய்யுமுன்னர், எப்படி யாவது ராஜி ஏற்பட்டுவிடவேண்டுமென்று அரசாங்கத்தார் துடிதுடித்துக்கொண்டிருந்தார்கள். தேசபந்து தாஸ் அப்பொழுது சிறையிலிருந்தார். அவருக்கும் வங்காள அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையே, சமாதானப் பேச்சு நடந்தது. காங்கிரஸும் சர்க்காரும் சேர்ந்து வட்டமேஜையில் கூடவேண்டும் என்று ஒரு யோசனை கூறப்பட்டது. இந்த வட்டமேஜை மகாநாட்டில், கராச்சி சிறையிலிருந்த மௌலானா முகமதுஅலியும் பிரசன்னமா யிருக்கவேண்டும் என்று காந்திஜீ வற்புறுத்தினர். அரசாங்கத்தார் இதற்கு இணங்கச் சம்மதிக்கவில்லை. எனவே, யோசனை பொத்தென்று விழுந்துவிட்டது.

இந்த விஷயத்தில் காந்திஜீ காண்பித்த மனப்பான்மையை தேசபந்து தாஸ் ஏற்கவில்லை. பின்னர், அவர் சிறையிலிருந்து வெளிவந்தவுடனே பகிரங்கமாகக் காந்தியைக் கண்டித்து, "காந்திஜீ தவறுசெய்துவிட்டார்" என்று சொன்னர். எங்களிற் பலர் அப்பொழுது சிறையிலிருந்த படியால், நடந்த விவரங்கள் எங்களுக்குத் தெரியாது. விவரங்கள் இல்லாமல் தீர்ப்புச் செய்வது கஷ்டம். ஆனல் அந்த நிலைமையில் மகாநாட்டினுல் துளிகூட நன்மை யேற்பட்டிருக்குமென்று தோன்றவில்லை. கல்கத்தாவுக்கு இளவரசர் விஜயஞ்செய்யுங்காலையில், யாதொரு நெருக்கடியும் நேராமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தாரின் முக்கிய நோக்கமாகும். நாட்டின் அடிப்படையான குறைகளுக்கும் பிரச்னைகளுக்கும் பரிகாரம் ஏற்பட்டிருக்காது. பின்னர் ஒன்பது வருடங்களுக்குப் பிறகு, காங்கிரஸ் எவ்வளவோ வலுவுள்ளதாக இருந்தபோதிலும், லண்டனில் கூடிய வட்டமேஜை மகாநாட்டினுல் மகத்தான நன்மைகள் இந்தியாவுக்குக் கிடைக்கவே இல்லை. நல்ல பலன்கள் ஏற்பட்டிருக்குமா இருக்காதா என்ற பிரச்னை ஒருபுறமிருக்க, மகாநாட்டில் முகமதுஅலி பிரசன்னமாயிருக்க வேண்டுமென்று காந்திஜீ வற்புறுத்தியது முற்றிலும் சரியானது என்று எனக்குத் தோன்றுகிறது. முகமதுஅலி பிரபல காங்கிரஸ் தலைவர் என்பதும் தவிர, அவர் கிலாபத் இயக்கத்தின் தலைவருமாவர். காங்கிரஸ் திட்டத்தில் கிலாபத் பிரச்னை அப்பொழுது ஒரு முக்கியமான பிரச்னையாக இருந்தது எனவே மௌலானா முகமதுஅலி மகாநாட்டில் கண்

டிப்பாகப் பிரசன்னமாய் இருந்திருக்கவேண்டும். தோழனைக் கைவிடக்கூடிய உபாயமோ முறையோ ஒருநாளும் சரியான தல்ல. அரசாங்கத்தார் முக்மதுஅலியைச் சிறையிலிருந்து விடுவிக்கத் தயாராக இல்லாததே மகாநாட்டிலிருந்து நல்ல விளைவு தோன்றியிருக்கிறது என்பதற்கு அத்தாக்ஷி.

எனக்கும் என் தகப்பனருக்கும் ஆறு மாதச் சிறைத் தண்டனை. வெவ்வேறு வகைகளில் வெவ்வேறு கோர்ட்டார் களால் குற்றஞ்சாட்டப் பட்டோம். விசாரணைகள் வெறும் பாசாங்குகள். ஒத்துழையாமை வழக்கப்படி நாங்கள் விசாரணையில் கலந்துகொள்ளவில்லை. எங்களுடைய பிரசங் கங்களிலும் வேலைகளிலும் தண்டனைக்குரிய குற்றங்களை எளிதாகக் கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் எங்கள்பேரில் சாட்டப்பெற்ற குற்றமோ விநோதமானது. சட்டம் மீறிய கூட்டமான காங்கிரஸ் தொண்டர்களில் ஒருவர் என்று தகப்பனர் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார். அதற்குச் சாட்சியமாக ஹிந்தியில் கையெழுத்திட்ட ஒரு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. கையெழுத்து அவருடை யதுதான். ஆனால் அவர் வழக்கமாக ஹிந்தியில் இதற்கு முன் கையெழுத்துச் செய்ததில்லை. எனவே, ஒரு சிலர்கூட அவருடைய கையெழுத்தை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. ஒரு கிழவரைக் கொண்டுவந்து நிறுத்தி, கை யெழுத்தை ருஜுப்பண்ண முயன்றார்கள். கிழவர் படிப்பு இல்லாதவர். அவர் பத்திரத்தைச் சோதித்துப் பார்க்கை யில், அதைத் தலைகீழாகப் பிடித்துக்கொண்டிருந்தார். தகப் பனரின் விசாரணை நடைபெற்றபொழுது அவர் என்னுடைய பெண்குழந்தையைத் தோளிலே சாய்த்து, விசாரணைக் கும் வைத்துக்கொண்டிருந்தார். அவளுக்கு அப்பொழுது நான்கு வயதிருக்கும். அவள் கூண்டிலேறிய முதல் அனுப வம் அதுதான்.

ஹர்த்தால் செய்யவேண்டுமென்று விளம்பர நோட்டீஸ் களை விநியோகஞ் செய்ததாக என் பேரில் குற்றச்சாட்டு. அப்பொழுதிருந்த சட்டப்படி, அது ஒரு குற்றமல்ல. இப் பொழுது குற்றமாயிருக்கலாம். ஏனெனில், நாம் விரைவில் குடியேற்ற நாட்டுப் பதவிக்கு முன்னேறிக்கொண்டு வருகின் றோம் அல்லவா! குற்றம் இல்லாவிட்டாலும் எனக்குத் தண்டனை கிடைத்தது. என்னுடைய தகப்பனருடனும் ஏனையோருடனும் நான் சிறையிலிருக்கையில், மூன்று மாதங்

களுக்குப் பின்னர் ஒரு ஆச்சரியமான செய்தி எனக்குக் கிடைத்தது. என்னைத் தண்டித்தது தவறென்றும் நான் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் வழக்குகளைத் திருப்பிப் பரிசோதனை செய்து பார்க்கும் அதிகாரியொருவர் தீர்ப்புக்கூறி விட்டாராம். எனக்கு இது வியப்பாக இருந்தது. சட்டமறுப்பு நிறுத்தப்பட்டதால், திருப்பிப் பார்க்கும் நீதிபதிகள் இவ்வாறு நியாயம் வழங்கினார்கள் போலும்! தக்பனாரைச் சிறையில் வைத்துவிட்டு வெளியேபோக எனக்கு மனமில்லை.

உடனே ஆமதாபாத்துக்குப் போய், காந்திஜியைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானங் கொண்டேன். ஆனால் நான் அங்கே போய்ச் சேரு முன்னமே, அவர் கைது செய்யப்பட்டார். எனவே அவருடன், எனக்குப் பேட்டி சமர்மதி சிறையிலேதான் கிடைத்தது. நான் அவருடைய விசாரணைக் கால முழுதும் பிரசன்னமா யிருந்தேன். அது ஒரு மறக்க முடியாத தருணமாகும். பிரசன்னமா யிருந்த நாங்கள் அதை ஒரு நாளும் மறக்க முடியாது. நீதிபதி ஒரு இங்கிலீஷ்காரர். அவர் கௌரவத்துடனும், நல்லசுபாவத்துடனும் நடந்துகொண்டார். காந்திஜி கோர்ட்டாருக்குச் சமர்ப்பித்த வாக்குமூலமோ, மிகவும் உருக்கமானது. அது எங்களை மிகவும் கலக்கிவிட்டது. அந்த வாக்குமூலத்தில் காணப் பெற்ற வர்ணனைகளும், அழுத்தமான கருத்துக்களும் எங்களுடைய உள்ளத்தில் அழுந்திப் பதிந்தன.

நான் அலகாபாத்துக்குத் திரும்பி வந்தேன். என்னுடைய நண்பர்களும், தோழர்களும் சிறையிலிருக்க, நான் மட்டும் தனியாக வெளியே இருந்ததால் எனக்கு மிகவும் துயரம். காங்கிரஸ் கமிட்டி சரியாக வேலை செய்யாததால் அதை நிமிர்த்த வேண்டும் என்று முயன்றேன். அந்நியத் துணி பகிஷ்காரத்தில் எனக்கு அதிகமான ஊக்கம் உண்டு. சட்ட மறுப்பை நிறுத்திவிட்டாலும், எங்கள் திட்டத்திலிருந்து இந்தப் பகிஷ்காரப் பகுதியை நீக்கிவிடவில்லை. அலகாபாத்தில் இருந்த ஜவுளி வியாபாரிகள் அந்நியத் துணிகளை வரவழைப்பதில்லை யென்று உறுதி கொடுத்து, அதற்காக ஒரு சங்கத்தை யமைத்துக்கொண்டார்கள். இந்த உறுதியை மீறி நடந்தால், அபராதம் விதிக்கப்படும் என்று சங்க விதிகளில் காணப்பட்டது. பெரிய வியாபாரிகளிற் பலர், தங்கள் வாக்குறுதியை மீறி அந்நியத் துணிகளை இறக்குமதி செய்

தார்கள் என்று எனக்குத் தெரிந்தது. இவ்வாறு செய்தது வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்களுக்கு நஷ்டமல்லவா? நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். பயனில்லை. இதைத் தடுக்க ஜவுளிக் கடைக்காரர்களின் சங்கத்துக்கும் சக்தி போதவில்லை. எனவே, அந்நியத் துணிகளை விற்கும் வியாபாரிகளின் கடைகளை மறியல் செய்வது என்று தீர்மானித்தோம். மறியல் என்று ஜாடையாகப் பேசியதே போதுமானதாக இருந்தது. அபராதங்கள் செலுத்தப்பட்டன. புதிய வாக்குறுதிகள் செய்தார்கள். அபராதப் பணம் ஜவுளிக் கடைக்காரர்களின் சங்கத்துக்கு மூலதனமாக சேர்ந்தது.

இரண்டு மூன்று நாள் கழித்து வியாபாரிகளோடு சமாதானப் பேச்சு நடத்தி வந்த நானும், எனது நண்பர்களிற் பலரும் கைது செய்யப்பட்டோம். பயமுறுத்திப் பணம் வாங்கியதாக, எங்கள்பேரில் குற்றச்சாட்டு! என்பேரில் வேறு சில குற்றங்களும் சாட்டப் பெற்றன. அவைகளிலே ஒன்று ராஜ நிந்தனை யாகும். நான், கோர்ட்டில் எதிர் வாதம் செய்யவில்லை. நீண்டதொரு வாக்குமூலம் மட்டும் கொடுத்தேன். மூன்று குற்றச்சாட்டுகளுக்கு தண்டனை கிடைத்தது. ராஜ நிந்தனைக் குற்றத்தைத் தொடரவில்லை. எனக்குக் கிடைத்த தண்டனை போதும் என்று நினைத்து, இந்தக் குற்றச்சாட்டை நீக்கினார்களோ, என்னமோ தெரியாது. மூன்று தண்டனையுமாகச் சேர்ந்து எனக்கு ஒரு வருஷம் ஒன்பது மாதம் சிறை வாசம். இது எனது இரண்டாவது தண்டனையாகும். ஆறு வாரம் வெளியே இருந்துவிட்டு, மீண்டும் நான் சிறைக்குள் புகுந்தேன்.

## XIII

# லக்ஷ்மணபுரி ஜில்லாச் சிறை

1921-ம் ஆண்டில் அரசியல் குற்றத்துக்காகச் சிறை செல்வது என்பது இந்தியாவிற்கு புதிதான சங்கதிஅல்ல. வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சி கால முதல், தேசபக்தர்கள் தொடர்ச்சியாகச் சிறை சென்றுகொண்டே இருந்தார்கள். அப்பொழுதெல்லாம் நீண்டகால சிறை தண்டனை. விசாரணையில்லாமல் காவலில் வைப்பதும் உண்டு. அக்காலத்திய ஒப்பற்ற இந்தியத்தலைவர் லோகமான்ய திலகர். தமது முதுமைப் பருவத்தில் ஆறுவருஷம் சிறைவாசம் பெற்றார். ஐரோப்பியப்போரினால் சிறையிலிடுவதும், விசாரணையின்றி காவலில் வைப்பதும் நாட்டில் மலிந்துபோயின. சதிவழக்குகளும் அதிகரித்து குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனையோ அல்லது தீவாந்தரசிக்ஷையோ கிடைக்கும். போர்க் காலத்தில் அலி சகோதரர்களும், மௌலானா ஆபுல்கலாம் ஆசாத்தும் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டார்கள். யுத்தம் முடிந்தபிறகு, பாஞ்சாலத்திலிருந்த ராணுவ அமுலில் பலர் தண்டிக்கப்பட்டனர். சதிவழக்குகளும், சுருக்கு விசாரணைகளும் நூற்றுக்கணக்கானவர்களை சிறைக்கு அனுப்பிவிட்டன. எனவே அரசியலுக்காகச் சிறை செல்வது இந்தியாவிலே சாதாரண சம்பவமாயிற்று. ஆனால் இதுவரையிலும் தேசபக்தர்கள் வலுவிலே சிறையைக் கோரினதில்லை. அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கும் பொழுது, சிறை நேரலாம், அல்லது ரகசியப் போலீசாருக்கு தேசபக்தர்கள் பேரில் பிடித்தம் இல்லாமல்போய், பொய்வழக்கால் சிறை செல்ல நேரலாம். கோர்ட்டிலே எதிர்வாதம்செய்து எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று முயற்சித்தார்கள். தென்னாப்பிரிக்காவிலே காந்திஜீ வேறொரு முறை கற்பித்திருந்தார். அவரது சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பின்பற்றி ஆயிரக்கணக்கானவர்கள் வலுவிலே சிறை சென்றார்கள்.

ஆனாலும் 1921-ம் வருஷத்தில் சிறை என்பது அனுபவமில்லாத இடமாயிருந்தது. அதனுடைய பயங்கரமான காவுகளுக்குள்ளே சென்றுவிட்டால், புதிய கைதிக்கு என்ன

நேரும் என்பது யாருக்கும் தெரியாது என்றே சொல்லலாம். சிறையினுள்ளே இருப்பவர்கள் போக்கிரிகள் என்றும், எதற்கும் துணிந்த குற்றவாளிகள் என்றும், நாங்கள் குருட்டுத்தனமாக எண்ணிக்கொண்டிருந்தோம். சிறையிலே அவமானமும் துன்பமும் அதிகமாக நேரும் என்றும் நினைத்தோம். சிறைவாசத்தின் தன்மையை அறியாததே அதில் அதிக அச்சத்தை உண்டாக்கிற்று. 1920-ம் ஆண்டுமுதல், அடிக்கடி சிறை செல்வதைப்பற்றிப் பேச்சு. எங்களுடைய தோழர்களிற் பலர் சிறைக்குச் சென்றார்கள். சிறை செல்லக்கூடாது என்று இருந்த வெறுப்பும், அலுப்பும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டே வந்தன. மனதிலே எவ்வளவு திடம்செய்துகொண்டு, சிறைவாயிற்படி நுழைந்தாலும், முதன்முதல் ஜெயிலுக்குள்ளே போகும்பொழுது, எங்களுடைய தேகமும் மனமும் துடிதுடித்ததைத் தடுக்கமுடியவில்லை.

சென்ற பதின்மூன்று வருஷங்களாக அரசியல் குற்றங்களுக்காக இந்தியாவில் சிறைசென்ற ஆண்களும் பெண்களும் மூன்று லட்சத்துக்கு அதிகமாக இருப்பார்கள் என்பது எனது கணக்கு. இந்த தொகையில் ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளேபோய் வெளியே வருவதும், மீண்டும் உள்ளே போவதுமாய் இருந்துகொண்டிருந்தார்கள். கூடுமானவரையில் சிறையினுடைய மந்த, ஆபாச வாழ்க்கைக்கு எவ்வளவுதூரம் தங்களை அமைத்துக்கொள்ளலாமோ அவ்வளவு தூரம் அமைத்துக்கொள்ள அவர்கள் முயன்றிருக்கிறார்கள். சாதாரணமாக எதுவும் பழக்கத்தினால் சகஜமாகப் போய்விடும். அவ்வாறே நாங்கள் சிறைப் பழக்கமடைந்து போனோம். என்றாலும் ஒவ்வொருதரம் சிறைசெல்லும்பொழுதும், தேகத்திலே கொஞ்சம் பரபரப்பும், மயிர்க்கூச்சலும் உண்டாகின்றன. சிறை செல்வதற்குமுன், சிறைக்கு வெளியே இருக்கும் விஸ்தாரமான பிரதேசங்களையும், புசும்புற்றரையையும், ஏதேச்சையாக நடமாடிக்கொண்டிருக்கும் ஜனங்களையும், வண்டிகளையும், எப்பொழுது இனிகாண்போம் என்ற எண்ணத்தினால், கடைசியாக ஒருமுறை பார்க்க அவா உண்டாகும். அறியாமலே, சரேல் என்று ஒருதரம் திரும்பிப் பார்ப்போம்.

முதன்முதலில் நான் சிறையிலிருந்த மூன்று மாதகாலமும் எங்களுக்கும், சிறையதிகாரிகளுக்கும் விந்தையும்,

திட்டமாற்றும் கூடியகாலமாகவிருந்தது. இந்தப் புதுமாதிரியான கைதிகள் சிறைக்கு வந்ததும் ஜெயில் அதிகாரிகளுக்கு இன்னது செய்வதென்று தோன்றாமல், திகைத்துப் போனார்கள். நாளுக்குநாள் சிறைக்கு வருவோர்களது எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருந்தது. ஓயாத வெள்ளமாகிப் பழையகரைகளை எல்லாம் உடைத்துவிடுமோ? புதிதாக சிறை புகும் ஆசாமிகளோ சிறை அதிகாரிகளின் மன அமைதியைக் கலக்கக்கூடியவர்களாக விருந்தார்கள் என்று அதிகாரிகள் கலங்கினார்கள். சிறைக்கு வரும் புது ஆள் இந்தக் கூட்டத்தில், கலந்த கட்டியாக எல்லா வகுப்பார்களுமிருந்தார்கள். சிறப்பாக சொத்திலும், பதவியிலும் நடுத்தரமாயுள்ள வகுப்புப் பேர்வழிகள்தான் அதிகம். ஆனால் இந்தப் புதுக் கைதிகள் எந்த வகுப்பைச் சேர்ந்திருந்தாலும், அவர்கள் எல்லோரிடத்திலும் பொதுவான ஒரு தன்மை இருந்தது. அவர்கள் பழைய கைதி இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களை பழைய முறையில் சிறையதிகாரிகள் நடத்தமுடியாது. இதை சிறை அதிகாரிகள் தெளிவாகத் தெரிந்துகொண்டார்கள். ஆனால் அமுலிலிருக்கும் சிறைவிதிகளை எப்படி மாற்றுவது? எப்படித் திருத்தி யமைத்துக்கொள்வது? பழைய அனுபவமுமில்லை; சம்பிரதாயங்களுமில்லை. சாதாரணமாக காங்கிரஸ்காரருக்குக் கைதி குனிந்துகொடுத்துக் கொண்டிருக்கும் சாதுப் பேர்வழியல்ல. சிறைக்குள்ளேயும் காங்கிரஸ்காரர்கள் கூட்டமாயிருந்ததால், அவனுக்கு ஒரு விதத் தெம்பு உணர்ச்சியும் உண்டாயிற்று. வெளியிலே நடக்கும் கிளர்ச்சியும் சிறைக்குள் நடக்கும் விஷயங்களைப்பற்றிப் பொதுஜனங்களுக்குண்டான அக்கரையும் இவ்வுணர்ச்சியைப் பலப்படுத்தின. என்றாலும், கூடுமானவரையில், நாங்கள் சிறையதிகாரிகளோடு ஒத்துழைத்தோம். எங்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிடின், சிறையதிகாரிகளின் நிலைமை மோசமாய்ப்போயிருக்கும். அடிக்கடி சிறையதிகாரிகள் எங்களிடம் வந்து காங்கிரஸ் தொண்டர்களுக்கு உபதேசம் செய்து, சிறைவிதிகளை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்று எங்களை வேண்டிக் கொள்வார்கள்.

எங்களுடைய சொந்த இச்சையினால், நாங்கள் சிறைக்கு வந்தவர்கள். தொண்டர்களிற் பலர், சர்க்கார் அழைக்காமலே போட்டிபோட்டுக் கொண்டு சிறைக்குள் வந்தவர்கள். எனவே சிறையைவிட்டுத் தப்பியோடவேண்டும் என்ற எண்ணமே

யாருக்கும் இருந்ததில்லை. சிறைக்குவெளியே போகவேண்டுமானால், மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் போதும். இனிமேல் இந்த மாதிரி காரியம் செய்வதில்லையென்று எழுதிக் கொடுத்தாலும் போதும். சிறையைவிட்டுத் தப்பியோட முயன்றால் அதனால் அவமானம்தான் கிடைத்திருக்கும். அரசியல் கிளர்ச்சியில் பின்னால் கலந்துகொள்ளவே முடியாது. எங்களுடைய லக்ஷ்மணபுரி ஜெயில் சூப்பிரண்டுக்கு இது நன்றாகத் தெரியும். அவருக்குக் கீழிருந்த ஜெயிலர் கான் சாஹிபு பட்டம் பெற்றவர். "கான் சாஹிபு! நீங்கள் மட்டும் ஏதாவது சில காங்கிரஸ் கைதிகளைச் சிறையிலிருந்து தப்பியோடும்படியாகச் செய்துவிட்டீர்களானால், உங்களுக்குக் கான் பகதூர் பட்டம் கொடுக்கும்படியாக நான் அரசாங்கத்தாரிடம் சிபார்சு செய்கிறேன்" என்று சூப்பிரண்டு கேலியாகச் சொல்வார்.

எங்களில் பெரும்பான்மையோரைச் சிறைக்கு நடுவிலே இருந்த நீண்ட விடுதிகளில் வைத்திருந்தார்கள். என்னையும் மற்றும் பதினேழு பேரையும் பொறுக்கியெடுத்து, பழைய நெசவுசாலை யொன்றில் வைத்தார்கள். சாலைக்கு வெளியே நல்ல திறந்த வெளி. தகப்பனாருக்கும், என்னுடைய சகோதரர்கள் இருவருக்கும், எனக்கும் 20 அடி நீளம், 16 அடி அகலமுள்ள ஒரு தனி அறை கொடுக்கப்பட்டது. ஒரு கட்டிடத்திலிருந்து மற்றொரு கட்டிடத்துக்குப் போய் வர எங்களுக்குச் சுதந்திரம் இருந்தது. வெளியிலிருந்து உறவினர்கள் எங்களை அடிக்கடி பேட்டி காண அனுமதிக்கப்பட்டார்கள். தினசரிப் பத்திரிகைகள் வந்துகொண்டிருந்தன. போராட்டத்தின் ஒவ்வொரு நாள் எழுச்சியையும், நிகழ்ச்சிகளையும் இப்பத்திரிகைகளில் படிக்கும்பொழுது எங்களுக்குப் பரபரப்பைக் கொடுத்தது. அடிக்கடி கட்சி வாதங்கள் நேரும். பெரும் பகுதி நேரம் அதிலே செலவழிந்து போகும். படிக்கவாவது உருமானமற்ற வேலை செய்யவாவது, எனனால் முடியவில்லை. காலை நேரத்தில் எங்களுடைய அறையை, கூட்டி மெழுகுவேன். பின்னர் என் துணிகளையும், தகப்பனாருடைய துணிகளையும் துவைத்துக் காயவைப்பேன். பிறகு நூல் நூற்பேன். இப்பொழுது குளிர் காலம்; வட இந்தியாவிலே இதுதான் நல்ல பருவமாகும். முதலிரண்டு மூன்று வாரங்களுக்குத் தொண்டர்களுக்கு ஹிந்தி, உருது முதலிய சில்லறை விஷயங்களைக் கற்றுக்கொடுக்க அனுமதிக்கப்பட்

டோம். மத்தியானங்களில் நாங்கள் "வாலி"ப் பந்தாடு வோம். பத்திரிகைகளிலே, ஒரு கேவலமான கதையொன்று பிரசுரிக்கப்பட்டது. பல தடவைகளில் அதைப் பொய் யென்று மறுத்தும் பிரசுரம் மட்டும் நின்றபாடில்லை. இந்தக் கதையின்படி, அப்பொழுது ஐக்கிய மாகாணத்துக் கவர்னரா யிருந்த ஸர் ஹார்கோர்ட் பட்லர், சிறையில் என் தகப் பனுருக்கு "சாம்பெயின்" சாராயம் அனுப்பினுராம். ஸர் ஹார்கோர்ட் தகப்பனுருக்குச் சிறையில் யாதொன்றையும் அனுப்பினதில்லை. சாம்பெயினே அல்லது வேறு எந்தச் சரக்கோ யாரும் அவருக்கு அனுப்பினதும் இல்லை. தகப் பனுர் 1920-ம் வருடம் காங்கிரஸ் ஒத்துழையாமைத் திட் டத்தை ஏற்றுக்கொண்டதும், சாராயம் குடிப்பதை விட்டு விட்டார். எனவே அந்தக்காலங்களில் எதையும் குடித்த தில்லை.

சிறிது சிறிதாக, சிறையில் நிர்ப்பந்தங்கள் அதிகப்பட் டன. எங்களுடைய எல்லைகளுக்கு வெளியே போகக்கூடா தென்றும் வேறு கட்டிடங்களில் துண்டாக வைக்கப்பட் டிருந்த தொண்டர்களை நாங்கள் சந்திக்கக் கூடாதென்றும் கட்டளை யிட்டார்கள். தொண்டர்களது படிப்பு நின்று போயிற்று. இந்தச் சமயத்தில் விடுதலைபெற்று வெளியே வந்தேன்.

மார்ச்சு மாதத் துவக்கத்தில் வெளியே வந்தேன். ஆறு ஏழு வாரங்கழித்து, ஏப்ரல் மாதத்திலேயே, மறுபடியும் சிறைக்குள் சென்றேன். பழையநிலைமை முழுதும் அடியோடு மாறிவிட்டதைக் கண்டேன். தகப்பனுரை நைனிடால் சிறைக்கு மாற்றிவிட்டார்கள். அவர் சென்றபிறகு, சிறைஅதி காரிகள் புதிய விதிகளை அமுலுக்குக் கொண்டு வந்திருந்தார் கள். நெசவு சாலையில் இருந்த கைதிகள் எல்லோரையும் உள் சிறைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டார்கள். ஒருவிடு திக்கும் மற்றைய விடுதிக்கும் சம்பந்தமில்லை; பேச்சுவார்த்தை கூடாது. இதுசிறைக்குள் சிறையாகும். மாதம் ஒரு தடவை தான் உறவினர்கள் பேட்டி காணலாம். உறவினர்களுக்குக் கைதிகள் மாதமொரு கடிதந்தான் எழுதலாம். உணவும் குறைந்து விட்டது. ஆனுல் நாங்கள் வெளியிலிருந்து, சிலவற் றை வரவழைத்துக் கொள்ளமட்டும் அனுமதி கிடைத்தது. நான் இருந்த விடுதியில், நாங்கள் ஐம்பது கைதிகள் இருந்தோம். ஒரே புளி மூட்டைகளாக அடைந்துகிடந்தோம். ஒரு

படுக்கைக்கும் இன்னொரு படுக்கைக்கும் நடுவே, மூன்று அல்லது நான்கு அடி அகலம்தான் இடைவெளி இருக்கும். நல்லவேளையாக அந்த விடுதியிலிருந்த எல்லோருமெனக்குத் தெரிந்தவர்கள். பலர் எனது நண்பர்கள். ஆனால்இரவு பகல் எந்த நேரத்திலும் ஏகாந்தமாக இருக்கமுடியாது. எனவே பொறுக்க முடியவில்லை. எப்பொழுதும் அதேகூட்டம்; அதே சில்லரை மனஸ்தாபங்கள். இவைகளிலிருந்து தப்பித்துப் போய் தனித்திருக்க வேண்டும் என்றால் இடங்கிடையாது. நாங்கள் பகிரங்கமாகத்தான் ஸ்நானம் செய்யவேண்டும். வேஷ்டி துவைப்பதும் அப்படியே. தேகப் பயிற்சிக்காக விடுதியைச் சுற்றிச் சுற்றி ஓடிவருவோம். பிறகு ஓயாத பேச்சுத்தான். பேச்சு ரஸமில்லாமல் புளித்துப் போகும் வரையில், கட்சிவாதம் செய்து கொண்டிருப்போம். இச்சிறை வாழ்க்கை சாரமற்ற குடும்ப வாழ்க்கையைப் பன்மடங்கு பெருக்கிச் சுமத்தியதுபோ லிருந்தது. குடும்ப வாழ்க்கையிலே சிற்சில நயங்களுண்டு; சிற்சில பலன்களுண்டு. ஆனால் பல்திறப்பட்ட மனிதர்கள் கூடிக்கொண்டிருக்கும் சிறையிலே, ஒரே கசப்பு வாழ்வுதான் உண்டு. இந்த நிலைமையை எங்களால் சகிக்கமுடியவில்லை. நரம்பு தாங்க முடியாமல் போயிற்று. அடிக்கடி நான் தனிமையை வேண்டினேன். பின் வருஷங்களில் நான் விரும்பியதற்கு அதிகமாகத் தனிமை யேற்பட்டுவிட்டது. அக்காலங்களில் ஜெயிலதிகாரி யொருவரை, எப்போதாவது காணக் கிடைக்கும். பல மாதங்கள், வேறொருவரையும் காணமுடியாது. அந்தக் காலத்திலும் எனது நரம்பு தாங்க முடியவில்லை. அப்பொழுது தோழர் யாராவது இருந்தால், நன்றாயிருக்கும் என்று தோன்றும். பிற்காலத்தில் நான் தனித்துச் சிறையிலிருந்த சிலசமயங்களில், 1922-ம் வருஷம் லக்ஷ்மணபுரி ஜில்லாச் சிறையில் கூட்டத்தின் நடுவே நான் வாழ்ந்த வாழ்க்கையை, மிகவும் இன்பங் கொண்டதாகக் கருதலானேன். இருந்தாலும் கூட்டத்திலிருப்பதைக் காட்டிலும், தனிமையை விரும்புவது தான் என் சுபாவம். விசேஷமாக படிக்கவும் எழுதவும் வசதிகள் கிடைத்தால் தனிமைதான் எனக்குப் பிடித்தம்.

சிறையில்கூட இருந்தவர்கள் தங்கமான மனிதர்கள்; இனிமை பொருந்தியவர்கள். நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தோம். என்றாலும் ஒவ்வொரு சமயம் கூட்டத்தில் சலிப்படைந்து, தனிமை வேண்டுமென்று

தோன்றிற்று. சிறிது நேரமாவது பேசாமல் இருக்கக் கூடாதா என்று தோன்றும்! விடுதிக்கு வெளியே மதிலுக்குப் பக்கத்தில் திறந்த வெளியில் போய் உட்கார்ந்திருந்தால் தான், சிறிது தனிமை கிடைக்கும். மாரி காலமானதால் மேகங்கள் தவழ்ந்துகொண்டே இருக்கும்; எனவே திறந்த வெளியில் உட்கார முடிந்தது. அடிக்கடி வெயிலும் அடிக்கும்! மழையும் தூறும். ஆனால் அந்த இடத்தை விட்டு நான் அசைவதில்லை. விடுதியைவிட்டு வெளியில் கூடுமான வரையில் காலம் கழிப்பேன்.

வெட்டவெளியிலே, படுத்துக்கொண்டு ஆகாயத்தையும், மப்பு மந்தாரங்களையும் பார்த்துக்கொண்டிருப்பேன். ஒவ்வோர் கணமும் மாறிக்கொண்டேயிருக்கும். அவற்றின் வர்ணங்களின் பேரழகை இப்பொழுதுதான் முற்றிலும் அனுபவித்தேன். "மாறி மாறிக்கொண்டு செல்லும் மேகங்களை கவனிப்பது இன்பமே. மண்ணில் படுத்து, காலத்தின் சுகப் போக்கை உணர்வதும் இன்பமே" என்ற கவியின் சொற்கள் ஞாபகத்திற்கு வந்தன,

எங்களுக்கோ காலம் ஒரு பாரமாகத்தான் இருந்தது. எனினும், பருவ மழைக் காலத்தில், ஆகாயத்தில் விரைந்து சென்றுகொண்டிருக்கும் மேகக் கூட்டங்களைக் கண்டு களித்த காலம் எனக்கு இன்பத்தையும், ஆறுதலையும் கொடுத்தது. காணாத ஒன்றைக் கண்டுவிட்டதாக எனக்கு ஆனந்தம். சிறையிலிருந்து விடுதலை பெற்றதாக ஒரு உணர்ச்சி! அந்தப் பருவக் காலம் மட்டும் எனக்கு ஏன் இவ்வளவு இன்பத்தைக் கொடுத்ததென்று எனக்குத் தெரியவில்லை. அதற்கு முன்னும் அப்படி யிருந்ததில்லை; பின்னும் அப்படி இருக்கவில்லை. பல நாட்களில் அற்புதமான சூரியோதயத்தையும், சூரியாஸ்தமனத்தையும் மலைகளிலும், கடல்களிலும் ஆச்சரியப்படத்தக்க வகையில் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். அவைகளுடைய கம்பீரத்தினால் மனம் பூரித்திருக்கிறேன். ஆனால், பார்த்து மகிழ்ந்த பின்னர், என் கவனம் மற்ற விஷயங்களில் எளிதாகச் சென்றுவிடும். சிறையிலோ, காண்பதற்குச் சூரியோதயமும் கிடையாது. சூரியாஸ்தமனமும் இல்லை. சிறை மதில்களினால் அவைகள் எங்கள் பார்வையினின்றும் மறைபட்டுக் கிடந்தன. ஒவ்வொரு காலையிலும் நீண்ட நேரத்துக்குப் பிறகு தான், சூரியன் எங்கள் கண்களில் மதில் சுவருக்கு மேல் தோன்றும்.

சிறையில் எங்கேயும் பலவகை வர்ணங்கள் கிடையாது. மண் நிறச்சுவரும் நாங்களிருந்த விடுதியும் தான் எப்பொழுதும் எங்கள் காட்சிக்கு முன் இருந்ததால், எங்களுடைய கண்களும் மந்தமடைந்து போய்விட்டன. எங்கள் பார்வையும் பிரகாசத்தை இழந்துவந்தது. என் கண்களுக்கு வர்ணங்களில் ஆசை ஏற்பட்டிருக்கவேண்டும்; பருவக்கால மேகங்கள் ஆகாயத்தில் அலங்காரமாகத் தவழ்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து நான் ஆச்சரியம் அடைந்தேன்; ஆனந்தப்பட்டேன். பல வேறு உருவங்களை அமைத்துக் கொண்டு வானத்தில் ஊர்ந்து செல்லும் மேகங்களைக் கண்டு, சமாதியி லிருப்பதுபோல் பரவசப்பட்டுப் போவேன். சில சமயங்களில் மேகங்கள் கலைந்து போகும். இரண்டு மேகங்களுக்கிடையே தோன்றும் சந்துவழியாக, ஆச்சரியப் படும் படி வானத்தின் நீல நிறம் அழகாகப் பரந்து கிடப்பதைக் கண்டு களிக்கக் கூடும். அநந்தமான ஆகாசப்பிரம்மத்தைக் கண்டது போலிருக்கும்.

நாளுக்கு நாள் சிறையில் நிர்ப்பந்தங்கள் அதிகமாயின. கடுமையான விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. எங்களுடைய இயக்கத்தின் வல்லமையை அரசாங்கத்தார் கணக்கிட்டுவிட்டு தங்களை எதிர்த்த துணிச்சலுக்காக அவர்களுடைய பூரா அதிருப்தியையும் அனுபவிக்கச் செய்ய வேண்டுமென்று அவர்கள் எண்ணம் கொண்டார்கள். புதிய விதிகளைச் சிறையில் ஏற்படுத்தியதும், அவைகளை அமுலுக்குக் கொண்டுவந்தவகையும், அரசியல் கைதிகளுக்கும் சிறையதிகாரிகளுக்கும் இடையே தகராறுகளை உண்டாக்கிவிட்டன. லக்ஷ்மணபுரிச் சிறையில் நாங்கள் பல நூறு பேர்கள் அப்பொழுது இருந்தோம். இந்தப் புதிய விதிகளை ஆட்சேபித்து, பல மாதங்களுக்கு எங்கள் உற்றார் உறவினர் பேட்டி எங்களுக்குத் தேவையில்லையென்று விட்டுவிட்டோம். எங்களில் சிலர் சிறையதிகாரிகளால் விஷமக்காரர்களெனக் கருதப்பட்டார்கள். எனவே சிறையின் வேறு பகுதியில், முக்கியமான கட்டிடங்களுக்கு வெகு தூரத்திலிருந்த ஒரு இடத்தில், எங்களில் ஏழு பேர்களைக் கொண்டுபோய் வைத்தார்கள். இந்த மாதிரி பிரிக்கப்பட்டவர்களில் புருஷோத்தமதாஸ் தாண்டன், மகாதேவ தேசாய், ஜார்ஜ் ஜோசப், பால கிருஷ்ண சர்மா, நான், தேவதாஸ் காந்தி முதலியவர்கள்.

நாங்கள் சிறியதொரு அடைப்புக்குள்ளே வைக்கப்பட்டோம். அங்கே வசிப்பதில் அநேக அசௌகரியங்கள் உண்டாயின. என்றாலும், இந்த மாற்றத்தில் எனக்கு மகிழ்ச்சி, இங்கே கூட்டம் கிடையாது. அதிகமான பகிரங்கம் இல்லை. அமைதியுடன் இங்கே வசிக்கமுடியும். படிப்பதற்கோ, அல்லது வேறு வேலை செய்வதற்கோ அதிகமான நேரம் கிடைத்தது. சிறையிலிருந்த ஏனைய தோழர்களிடமிருந்தும், வெளியுலகத்தில் இருந்தும், நாங்கள் முற்றிலும் பிரிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டோம். இப்பொழுது அரசியல் கைதிகளுக்குப் பத்திரிகைகொடுக்கும் வழக்கத்தையும் நிறுத்திவிட்டார்கள்.

எங்களுக்குப் பத்திரிகைகள் வரவில்லை. ஆனாலும் வெளியிலிருந்து எப்படியாவது சில செய்திகள் வந்துகொண்டே இருக்கும். சிறையின் சம்பிரதாயம் இதுதான். மாதக்கடைசியில் எங்களுக்குக் கிடைக்கும் கடிதங்களாலும், பேட்டிகள் மூலமாயும் சிறிதளவு செய்திகள் கிடைக்கும். எங்களுடைய இயக்கம் அடங்கிக்கொண்டே வருவதைக்கண்டோம். "மந்திரசக்தி" நிறைந்தகாலம் மறைந்துவிட்டதாயும், வெற்றி கிடைப்பது அரிதென்றும் தோன்றிற்று. வெளியே காங்கிரசில் இரண்டு பிளவுகள் தோன்றின. மாறுதல் வேண்டாதார் என்று ஒரு கட்சி; மாறுதல் வேண்டுபவர் ஒரு கட்சி; மாறுதல் வேண்டும் என்ற கட்சிக்குத் தேசபந்து தாசும், எனது தகப்பனாரும் தலைவர்கள். சட்டசபைத் தேர்தல்களில் கலந்துகொண்டு, இந்தச் சட்டசபைகளைக் கைப்பற்றவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். பழைய ஒத்துழையாமைத் திட்டத்தில் யாதொரு மாறுதலும் இருக்கக்கூடாதென்று சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரை தலைவராகக்கொண்ட மாறுதல் வேண்டாதார்கள் ஆக்ஷேபித்தார்கள். அப்பொழுது காந்திஜியோ சிறையிலிருந்தார். எங்களைப் போர்முனையில் இழுத்துச்சென்று ஊக்கம் ஊட்டி வந்த இயக்கத்தின் நேர்த்தியான லட்சியங்கள் யாவும் மறைந்துபோய் சில்லறை மனஸ்தாபங்கள் தலைதூக்கி நின்று, காங்கிரசுக்குள் அதிகாரம்பெற, சூழ்ச்சிகள் வலுவாக ஏற்படத் துவக்கிவிட்டன. உற்சாகம் நிறைந்த காலத்தில், மகத்தான ஆபத்துக்கிடமான செயல்களைக்கூடச் செய்வது எளிதென்றும், அந்த உற்சாகம் மறைந்துபோனால் சாதாரண தினசரி வேலையைச் செய்வதுகூடக் கஷ்டமாய்ப் போய்விடு

கிறதென்பதையும் நாங்கள் உணர்ந்தோம். வெளியிலிருந்து வந்த செய்திகளால், நாங்கள் மனச்சோர்வடைந்தோம். அதோடுகூட சிறைவாழ்வினுல் ஏற்படும் சில்லரை மனக்கலக்கங்களும் சேர்ந்துகொள்ளவே, வாழ்க்கை மிகவும் கஷ்டமாகப்போய்விட்டது. ஆனுல் எங்களுடைய சுயமதிப்பையும், கௌரவத்தையும் நாங்கள் காப்பாற்றிக் கொண்டோமென்றும், பயன் எப்படியானுலும், நாங்கள் சரியான முறையில் நடந்துகொண்டோ மென்றும் எங்கள் உள்ளத்தினுள்ளே ஒருவித மகிழ்ச்சி மட்டும் இருந்து கொண்டிருந்தது.

எதிர்கால வானம் கருத்திருந்தது. அது எத்தகைய உருவம் படைத்தபோதிலும், எங்களிற் பலர் வாழ்வின் பெரும் பகுதியைச் சிறையில்தான் கழிக்க நேரிடும் என்று தோன்றிற்று. எனவே எங்களுக்குள்ளே நாங்கள் இதைப் பற்றி அடிக்கடி பேசிக்கொள்வோம். ஒரு நாள், ஜார்ஜ் ஜோசப்பிடம் சம்பாஷணை செய்து கொண்டிருந்தபொழுது, இந்த முடிவுக்கு வந்தது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. அந்நாட்களுக்குப் பின்னர், ஜோசப் எங்களை விட்டுப்பிரிந்து வெகு தூரம் போய்விட்டார். காங்கிரஸ் காரர்களுடைய செயல்களைக் கடுமையாகக் கண்டிப்பவராக மாறிவிட்டார். லக்ஷ்மணபுரி ஜில்லாச் சிறையில் “சிவில்வார்டு”ப் பகுதியில் இலையுதிர்காலத்தில், ஒரு நாள் மாலையில் நாங்கள் பேசிக்கொண்டிருந்தது ஜோசப்புக்கு இப்பொழுது ஞாபகம் இருக்கிறதோ, என்னவோ ?

வேலையும் தேகப்பயிற்சியும் மாமூலாகச் செய்ய ஆரம்பித்துவிட்டோம். நாங்கள் இருந்த அடைப்பைச் சுற்றிச் சுற்றி, தேகப்பயிற்சிக்காக ஓடி, இரண்டு காளைமாடுகள் பூட்டப்பட்டதுபோல, நாங்கள் இரண்டு பேராய்ச் சேர்ந்து, கிணற்றிலிருந்து பெரிய தோல்வாளியால் நீரை இழுப்போம். இவ்வாறு செய்து, எங்கள் அடைப்புக்குள் ஒரு சிறிய காய்கறித் தோட்டத்தைப் பயிர்செய்து விட்டோம். எங்களில் பெரும்பாலோர் ஒவ்வொருநாளும், சிறிது நூல்நூற்போம். ஆனுல், பகலிலும், குளிர்காலத்தின் நீண்டமாலையிலும் ஓயாமல் படிப்பதே எனது முக்கிய பொழுது போக்காகவிருந்தது. சிறை சூப்பிரெண்டு வரும்போதெல்லாம், அநேகமாக நான் படித்துக் கொண்டிருப்பதைக் காண்பார். எனக்குப் படிப்பிலிருந்த மோகம் அவருக்கு ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது. “என் சம்பந்தப்பட்டவரையிலும் என்னுடைய

படிப்பெல்லாம் பன்னிரண்டு வயதிலேயே முடிந்துவிட்டது" என்று அவர் என்னிடம் ஒரு சமயம் சொன்னார். அவருடைய படிப்பு பன்னிரண்டு வயதிலேயே முற்றுப்பெற்றுவிட்டதால், சிக்கலான பிரச்சினைகளைப்பற்றிச் சிந்திக்கவேண்டிய சிரமும் பொறுப்பும் அவருக்கு இல்லாமல் போயிற்றுபோலும்! பின்னர் அவர் ஐக்கிய மாகாணத்தின் சிறையிலாகாத் தலைவராவதற்கும் இது உதவியிருக்கலாம்.

குளிர் காலத்தில், இந்தியாவில் மேகமின்றி தெளிவான வானத்தில் நக்ஷத்திர மண்டலம் மனத்தைக் கவரும். சில படங்களை வைத்துக்கொண்டு பல நக்ஷத்திரங்களின் பெயர்களையும், இடங்களையும் ஒவ்வொரு நாளும் அவைகளின் வருகையை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்போம். பழைய நண்பர்களை உபசரிப்பது போல வரவேற்று மகிழ்ச்சியடைவோம்.

இவ்வாறு எங்கள் காலம் சென்று வந்தது. நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும் நீண்டன. எங்கள் மாமூல் வாழ்க்கை சகஜமாகிவிட்டது. ஆனால் சிறைக்கு வெளியில், வாழ்க்கையின் சுமை மற்றவர்கள் தலையில்தான், உண்மையாக விழுந்தது. எங்கள் தாய்மார்கள், சகோதரிகள், மனைவிமார்கள், தங்கள் அன்பிற்குரிய புருஷர்கள் சிறையிலிருந்து எப்பொழுது வெளியே வருவார்கள் என்று எதிர்பார்த்து, அவர்கள் சலித்துப் போனார்கள். நாங்கள் ஜெயிலில் இருக்கும்பொழுது, அவர்கள் வெளியே சுதந்திரத்துடனிருப்பதுகூட அவர்களுக்கு மனக்குறையாக தோன்றிற்று.

1931ஆ டிஸம்பர்மீ, முதல் முதலாக நாங்கள் கைது செய்யப்பட்டதும், அலகாபாத்தில் இருந்த எங்கள் ஆனந்த பவன் வீட்டுக்குப் போலீஸார் அடிக்கடி வர ஆரம்பித்தார்கள். எனக்கும், தகப்பனாருக்கும் கோர்ட்டில் விதித்த அபராதங்களை வசூல் செய்வதற்காக அவர்கள் அங்கே வந்தார்கள். அபராதங்களைச் செலுத்தக் கூடாது என்று காங்கிரஸின் ஆணை. எனவே, ஒவ்வொரு நாளும் போலீஸார் வந்து சில சாமான்களை எடுத்துக்கொண்டு போனார்கள். என்னுடைய பெண் இந்திராவுக்கு அப்பொழுது வயது நான்கு. போலீஸார் அடிக்கடி வந்து சாமான்களை எடுத்துச் செல்வது அவளுக்கு ஆத்திரத்தை தந்தது. சாமான்களை எடுத்துக் கொண்டு போகக் கூடாது என்று அவள் போலீஸாரிடம் கடு

மையாக ஆட்சேபித்தாள். இந்த வயதிலே அவள் உள்ளத்தில் பதிந்த காட்சி அவளுடைய ஆயுள் முழுதும் போலீஸாரிடம் அருவருப்பை உண்டாக்கும் என்று அஞ்சுகிறேன்.

சாதாரணக் கைதிகளோடு சிறையில் எங்களைச் சேர்த்து வைக்காமல் பிரித்து வைக்க, அதிகாரிகள் மிகவும் பிரயத்தனப் பட்டார்கள். சாதாரணமாக அரசியல் கைதிகளுக்குத் தனியான சிறைகள். ஆனால் இரண்டு இனத்தாரையும் முழுதும் பிரித்து வைப்பது சாத்தியப்படாமற் போயிற்று. அடிக்கடி நாங்கள் சாதாரண கைதிகளோடு சந்தித்துப் பேசுவோம். ஜெயில் வாழ்க்கையின் உண்மையான நிலைமைகளை அவர்களிட மிருந்தும் எங்கள் சொந்த அனுபவத்தைக் கொண்டும் தெரிந்து கொண்டோம். அனாவசிய பலாத்காரமும் லஞ்சமும் அக்கிரமங்களும் சிறையதிகாரத்தின் முக்கியாம்சங்களாக இருக்கின்றன. உணவின் கேவலத்தையோ சொல்ல முடியாது. பலதடவைகளில ருசிபார்த்திருக்கிறேன். மனிதன் சாப்பிடத் தக்கதல்ல. அதிகாரிகள் தங்கள் வேலைக்கு யோக்கிதை இல்லாதவர்கள். அவர்களுக்குச் சம்பளமும் மிகக்குறைவு. சந்தர்ப்பம வாய்த்தபோதெல்லாம் அவர்கள் கைதிகளிடமிருந்தும் அவர்களுடைய உறவினர்களிடமிருந்தும் பணம் பறிக்கத் தவறுவதே இல்லை. சிறைச் சட்டதிட்ட நூல்படிக்கு ஜெயிலர், அவருக்குக் கீழிருக்கிற கங்காணிகள், மற்றும சில்லரை உத்தியோகஸ்தர்கள் இவர்கள் செய்யவேண்டிய வேலைகளும், ஏற்க வேண்டிய பொறுப்புகளும் ரொம்பவும் அதிகம். மனச் சாட்சியுள்ள ஒருவன் அவைகளைத் திறமையுடன் செய்யவேமுடியாது. பொதுவாக சிறை நிர்வாகத்தில் விநோதம் என்னவெனில், கைதிகளின் நடத்தையைச்சீர்திருத்த முயற்சிசெய்வதே இல்லை. அவனுக்குத்தொழில் யாதும் கற்பிக்கப்படுவதும் இல்லை. கைதியைச் சிறையிலே கிலேசப்படுத்துவதுதான் சிறைத்திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். கைதியைப் பயமுறுத்தி அவனை எல்லாக் கொடுமைகளுக்கும் கீழ்ப்படியும் படியாகச் செய்வது நோக்கம். அதாவது சிறையைப்பற்றி அவனுக்கு பயத்தையும் திகிலையும் உண்டாக்கினால்தான், அவன் வெளியே போனதும் திரும்பவும் சிறைக்கு வாராமலும், குற்றம் செய்யாமலும் இருப்பான் என்பது அவர்களின் நோக்கம்.

சென்ற சில ஆண்டுகளாகத் தேவையான சிலசீர்திருத்தங்கள் சிறைகளில் ஏற்பட்டிருக்கின்றன. சாப்பாடு சிறிதுநன்று

யிருக்கிறது; உடை, மற்றுமுள்ள சங்கதிகளிலும் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது. சிறையிலிருந்து வெளியே சென்ற அரசியல் கைதிகள், கிளர்ச்சி செய்ததன் பயனாக இந்தச்சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. ஒத்துழையாமையினால் சிறைவார்டர்களுக்கு (கங்காணிகளுக்கு) நல்லசம்பள உயர்வு கிடைத்தது. ஏனெனின் அவர்கள் அரசாங்கத்தாரிடம் விசுவாசத்துடன் இருக்கவேண்டுமே! இளைஞர்களுக்கும் சிறையில் எழுதப் படிக்க கற்றுக்கொடுக்க முயற்சியும் செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த சீர்திருத்தங்கள் சிறை நிர்வாகத்தின் முக்கிய ஊழல்களைத் தொடவேயில்லை; நிர்வாகத்தினுடைய பழைய நோக்கம் மாறவே இல்லை.

சாதாரணக் கைதிகளுக்கு ஏற்பட்ட திட்டப்படிதான், அரசியல் கைதிகளில் பெரும்பான்மையோரும் நடத்தப்பட்டனர். அவர்களுக்குத் தனியான சலுகைகள் காண்பிக்கப்படவில்லை. விசேஷ உரிமைகள் கிடையாது. ஆனால் அவர்கள் சாதாரணக் கைதிகளைக்காட்டிலும் அதிகமான புத்தியும், தைரியமும் உள்ளவர்களாதலால், அவர்களிடம் சிறை யதிகாரிகளின் அக்கிரமம் பலிக்கவில்லை. அவர்களிடத்திலிருந்து கை லஞ்சமும் பறிக்க முடியவில்லை. இதனாலேயே சிறையதிகாரிகளுக்கு இவர்களைக் கண்டால் பிடிப்பதில்லை. சமயம் வாய்த்தபோதெல்லாம், அரசியல் கைதிகள் ஏதாவது தவறு செய்தால், அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டு வந்தது. இத்தகைய தவறு ஒன்றுக்குப் பதினைந்து பதினாறு வயதுள்ள இளைஞர் ஒருவர் தண்டிக்கப்பட்டார். அவருக்கு ஆசாத் என்று பெயர். கசையடி கொடுக்க வேண்டுமென்ற தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனைக்காக ஏற்பட்டிருக்கும் மரக் கட்டையில் அவரைக் கட்டி, அவருடைய உடுப்புகளை உரிந்துவிட்டு, அடிகொடுக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு அடியும் அவர்பேரில் விழுந்து, அவருடைய தோலைப் பிய்க்கிறபொழுது, அவர் "மகாத்மா காந்திக்கு ஜே" என்று உரக்கக் கத்துவார். ஒவ்வொரு அடிக்கும் இவ்வாறே கோஷித்துக்கொண்டிருந்து, கடைசியாக அவர் மூர்ச்சையடைந்தார். பின்னர், வட இந்தியாவிலிருந்த பலாத்காரப் புரட்சிக்காரர்களுக்கு அவர் ஒரு தலைவரானார்.

# XIV

## மீண்டும் வெளியே

சிறையில் பல பொருள்கள் கிடைப்பதில்லை. மாதர் குரலையும், குழந்தைகளின் சிரிப்பையும் மற்றவைகளைக் காட்டிலும் கேட்க முடியாமலிருப்பது பெரிய குறை யாகும். வழக்கமாக ஒருவன் சிறையில் கேட்கக்கூடிய சப்தங்கள் இனிப்பாக இருக்காது. அதிகாரிகள் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கட்டளையிடுவார்கள். கேட்பதற்கு நாராசமாயிருக்கும். அவர்கள் பேசுகிற பேச்சோ மகாக் கேவலமா யிருக்கும். ஒருசமயம் புதிதாக ஒரு ஆசை எனக்கு உண்டாயிற்று. நான் லக்ஷ்மணபுரி ஜில்லாச்சிறையிலிருந்த சமயம். ஏழு எட்டு மாதமாக நாய் குலைப்பதைக் கேட்க வில்லையே என்று வருந்தினேன்.

1923-ம் வருஷம் ஜனவரிமாதம் கடைசித்தேதியில் லக்ஷ்மணபுரிச் சிறையிலிருந்த அரசியல் கைதிகளெல்லோ ரையும் விடுதலை செய்தார்கள். அப்பொழுது மேல் வகுப்புக் கைதிகளாக நூறிலிருந்து இருநூறு பேர்கள் அந்தச் சிறையி லிருந்தார்கள். 1921-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், அல் லது 1922-ம் வருஷத் துவக்கத்தில் ஒரு வருஷமோ குறை வாகவோ தண்டனை பெற்றவர்களுடைய தண்டனை காலம் பூர்த்தியாகி வெளியே சென்றுவிட்டனர். அதிக தண்டனை பெற்றவர்களும் மீண்டும் சிறைக்கு வந்தவர்களும்தான் பாக் கியாக சிறையில் இருந்தார்கள். திடீரென்று விடுவித்தது எங்களுக்கு வியப்பாய் இருந்தது. பொதுவாக விடுதலை ஏற் படப்போகின்றது என்ற அறிவிப்பு செய்யப் படவில்லை. ஐக் கிய மாகாணச் சட்ட சபையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேறிற்று. இத் தகைய தீர்மானத்தை அரசியல் நிர்வாகிகள் லட்சியம் செய் வதே இல்லை. ஆனால் அந்தசமயம் விடுதலை செய்தால் பாதக மில்லை யென்று அரசாங்கத்தாருக்குத் தோன்றிற்று.

காங்கிரசும் அரசாங்கத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்யவில்லை. தங்களுக்குள்ளாகவே காங்கிரஸ்காரர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். மேலும் அப்பொ

மூது பிரபலமான காங்கிரஸ்காரர்களும் அநேகமாக தண்டனை தீர்ந்து சிறைக்கு வெளியேதான் இருந்தார்கள். எனவே அரசியல் கைதிகளை விடுதலை செய்தார்கள்.

சிறையிலிருந்து வெளிவரும்பொழுதுதெல்லாம், ஒரு வித ஆறுதலும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. நல்ல காற்று, திறந்தவெளி, நடமாடும் தெருக்காட்சி, பழைய நண்பர்களுடன் சந்திப்பு, இவைகள் யாவும் சேர்ந்து மயக்கத்தை உண்டாக்கி விடுகின்றன. முதன்முதலாக வெளியே வந்ததும், இத்தகைய வெறி அநேகமாக எல்லோருக்கும் உண்டாகும். எங்களுக்கு மிகுதியும் மகிழ்ச்சிதான். ஆனால் இந்த மகிழ்ச்சி நீடித்திருக்கவில்லை. ஏனெனில் காங்கிரசின் நிலைமை வருந்தத்தக்கதாக இருந்தது. உயர்ந்த லட்சியங்கள் மறைந்து, சூழ்ச்சிகள் தோன்றின. காங்கிரஸ்காரர்களுக்குள்ளே தனித் தனி கோஷ்டிகள் ஏற்பட்டு, காங்கிரஸ் ஸ்தாபனங்களைக் கைப்பற்ற வேண்டுமென்று முயற்சி செய்தன. இவ்வித காலங்களில் அந்த கோஷ்டிகள் சாதாரணமாக உபயோகிக்கும் முறைகளோ மகா கேவலமானவை. அவைகளால், அரசியல் கிளர்ச்சியின் பேரிலேயே பலருக்கு வெறுப்பு உண்டாகும். எனக்குச் சட்டசபைப்பிரவேசம் முற்றிலும் பிடிக்கவேயில்லை. ஏனெனில் இந்தப் பிரவேசத்தினால் நம்முடைய நோக்கம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டேவருமென்றும், பலவீனமான ராஜி மனப்பான்மை யேற்படுமென்றும் நான் கருதினேன். ஆனால் உண்மையிலேயே தேசத்தில் இதைத் தவிர, வேறொரு அரசியல் திட்டமும் இல்லை.

மாறுதல் வேண்டாதார் நிர்மாணத்திட்டத்தை வற்புறுத்திவந்தனர். இது ஒருவகை சமூகச்சீர் திருத்தத் திட்டம். இந்தத் திட்டத்தினால் காங்கிரஸ் தொண்டர்களுக்குப் பொது மக்களோடு பழகச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால் அரசியல் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு, இந்தத் திட்டத்தினால் மட்டும் திருப்தி யேற்படாது. சட்ட மறுப்பு இயக்கம் எழுந்து நின்று, சிறிது காலம் நடைபெற்று அடங்கியவுடன் சட்டசபைப் பிரவேசம்தான் சகஜமான திட்டமாகிவிடும். சட்டசபைப் பிரவேசத்துக்கு நாயகர்களான தேசபந்து தாஸும் எனது தகப்பனாரும் சட்டசபைக்குள்ளும் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று விரும்பினார்கள். ஒத்துழைப்புக்காக சட்டசபைக்குள் செல்லவில்லையென்றும் உறுதி கொடுத்தார்கள்.

தேசீயப் போராட்டத்தை நடத்துவதற்காகச் சட்ட சபைகளில் பிரவேசம் அவசியம் செய்யவேண்டுமென்று தேச பந்துதாஸ் எப்பொழுதும் அபிப்பிராயப்பட்டு வந்திருந்தார். என்னுடைய தகப்பனருக்கும் ஏறக்குறைய இதேவித நோக்கம்தான். 1920-ம் ஆண்டில் தகப்பனர் சட்டசபைப் பஹிஷ்காரத்தை ஏற்றுக்கொண்டது தன்னுடைய நோக்கத்தை காந்திஜீக்காகவே விட்டுக்கொடுத்ததாகும். போராட்டத்தில் தன் முழுபலத்தையும் செலுத்த வேண்டுமென்று விரும்பினர். அவ்வாறு செய்வதற்கு காந்திஜீயின் திட்டத்தை முழுதும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். இளைஞர்களுக்கு அந்தக்காலத்தில் ஐரிஷ் ஸீன்பீன் கட்சியாரின் உபாயங்கள் மிகுதியும் கவர்ச்சி கொடுத்தன. ஸீன்பீனர்கள் ஆங்கிலப் பார்லிமெண்டில் ஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொண்டு, பார்லிமெண்டில் பிரவேசம் செய்யாமல் வெளியே நின்றுகொண்டனர். இத்தகைய உபாயத்தையும் நாடலாம் என்று 1920-ம் ஆண்டில் காந்திஜீயிடம் நான் சொல்லிப்பார்த்தேன்; பலிக்கவில்லை. இத்தகைய விஷயங்களில் அவர் "குரங்குப்பிடி" தான். மகமது அலியோ அப்பொழுது இந்தியாவில் இல்லை. கிலாபத் தூது கோஷ்டியோடு, அவர் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தார். அவர் திரும்பி வந்ததும், சட்டசபைப் பகிஷ்காரம் தவறென்று வருந்தினர். ஸீன்பீனர்களின் வழியைப் பின்பற்றியிருக்கவேண்டும் என்றும் கருதினர். ஆனல் யார் இந்த விஷயத்தில் எவ்வாறு நினைத்தால்தான் என்ன? முடிவிலே காந்திஜீ சொல்வதைத் தான் நாட்டிலே கேட்பார்கள். அவர் வார்த்தைதான் எடுபடும். இந்த இயக்கத்தின் நாயகர் அவர்தான். எனவே அதன் விவரங்களில் அவருக்குப் பூரண சுதந்திரம் இருக்கவேண்டுமென்று கருதப்பட்டது.

காந்திஜீ ஸீன்பீன் உபாயத்தை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லையென்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஸீன்பீனர்களுடைய பலாத்காரவழியைக் காந்திஜீ ஏற்கவில்லை. மேலும் சுத்தப்பகிஷ்காரம் என்றால்தான், பொதுமக்களுக்குத் தெளிவாகத் தெரியும் என்றும் தேர்தலில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுச் சபைகளுக்குள் செல்லாவிடின், அதை அறிந்துகொள்ள முடியாமல் பொதுமக்கள் குழப்பமடைவார்களென்றும் அவர் கருதினர். தவிரவும் நம்மவர்கள் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், அவைகளின் பேரில்

மோகம் ஏற்படும்; பிற்காலத்தில் அவர்களைச் சட்டசபைக்குப் போகாமல் தடுப்பது கஷ்டமாய்ப்போய்விடும். ஒத்துழையாமை இயக்கத்தில் பாதி கட்டுப்பாடும் சக்தியும் இல்லை. எனவே தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸ்காரர்கள் கட்டளையை மீறிச் சட்டசபைக்குள் புகவும் கூடும். அதனின்றும் படிப்படியாகச் சீர்குலைவு உண்டாகி காங்கிரஸ்காரர்களும் ஸர்க்கார் சலுகையை விரும்பும்படியான நிலைக்குக்கூட வந்து விடுவார்கள்.

இவ்வாறு காந்திஜி கருதினார். இந்த காரணங்கள் மிகவும் அர்த்தபுஷ்டியானவை என்பதை எவரும் மறுக்கமுடியாது. அவற்றின் உண்மையைப் பின்னர் ஸ்வராஜ்யக் கட்சியில் நேர்ந்த நிகழ்ச்சிகள் ருசுப்படுத்திவிட்டன. ஆனால் 1920-ம் வருஷத்தில் சட்டசபைகளைக் கைப்பற்றும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டிருந்தால், என்ன நேர்ந்திருக்குமென்று நான் சிந்தித்ததுண்டு. அந்தக் காலத்தில் காங்கிரசுக்கு கிலாபத் கமிட்டியின் பேராதரவு இருந்தது. எனவே மாகாண சட்டசபைகளிலும் இந்தியச் சட்டசபையிலும் பொதுஜனங்களுக்கிருந்த ஸ்தானங்கள் எல்லாவற்றையும் காங்கிரஸ் கைப்பற்றியிருக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைக்கு (1934 ஆகஸ்ட் மாதம்) சட்டசபைகளைக் காங்கிரஸ் கைப்பற்றவேண்டும் என்று பேச்சு பிறந்திருக்கிறது. அதற்கென்று "பார்லிமெண்டரி போர்டு" என்றும் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் 1920-ம் ஆண்டுக்குப்பின்னர், நமது சமூகத்திலும், அரசியல் கிளர்ச்சியிலும் பல பிளவுகள் ஏற்பட்டுவிட்டன. எனவே எதிர்காலத்தில் காங்கிரஸ் சட்டசபை சம்பந்தமாக எவ்வளவு வெற்றிபெற்றாலும், அது 1920-ம் ஆண்டில் நேர்ந்திருக்கக்கூடிய வெற்றிக்குச் சமமாக இருக்க முடியாது.

சிறையிலிருந்து நான் வெளியே வந்ததும், எதிர்க் கட்சிகளை சமரசப்படுத்தி, ஒன்று சேர்க்கமுயன்றேன். என்னுடன் சில நண்பர்களும் ஒத்துழைத்தார்கள். ஆனால் எங்களுடைய முயற்சி பலிக்கவில்லை. மாறுதல் வேண்டாதார் மாறுதல் வேண்டுபவர் இவர்களின் சண்டைகள் எனக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி என்ற ஹோதாவில் காங்கிரஸ் ஸ்தாபனத்தைத் திருத்தியமைக்கும் வேலையில் என்னுடைய காலத்தைச் செலவிட்டு வந்தேன். சென்றவருஷக் கலகத்தினால், காங்கி-

ரஸ் ஸ்தாபனம் சீர்குலைந்து கிடந்தது. நான் கடுமையாக உழைத்தேன், ஆனால் தெளிவான நோக்கத்தோடு வேலை செய்யவில்லை. என் மனம் குழம்பிக்கிடந்தது.

விரைவில் புதியதொரு தொண்டு எனக்குக் கிடைத்தது. விடுதலைபெற்ற சில வாரங்களுக்குள், அலகாபாத் நகரசபை யின் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். இந்தத் தேர்தல் சிறிதும் எதிர்பார்க்கப்படவே இல்லை. தேர்தல் நடைபெறுவதற்கு 45 நிமிஷங்களுக்கு முன், யாரும் என் பெயரை நினைக்கவுமில்லை; பிரஸ்தாபம் செய்யவுமில்லை. ஆனால் கடைசி நிமிஷத்தில் காங்கிரஸ்காரர்கள் என்னைப் பிரேரணை செய்தால்தான், தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று முடிவுக்கு வந்தார்கள்.

இந்தவருஷத்தில் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் நகரசபை களில் தலைமைப் பதவியேற்றனர். தேசபந்து தாஸ் கல்கத்தா நகர சபை மேயரானார். விட்டல்பாய் படேல் பம்பாய் கார்ப் பொரேஷன் தலைவரானார். ஆமதாபாத் நகர சபைக்கு ஸர் தார் வல்லபாய் படேல் தலைமை வகித்தார். ஐக்கிய மாகா ணங்களிலோ, அநேக நகர சபைகளுக்குக் காங்கிரஸ்காரர்கள் தலைவர்கள் ஆனார்கள்.

நகர சபை வேலை எனக்குப் பிடித்ததாய் இருந்தது. அந்த வேலையில் நான் அதிகமான காலத்தைச் செலவிட்டு வந்தேன். நகர சபை சம்பந்தமான எல்லா விஷயங்களை யும் நூல்களிலிருந்து பயின்றேன். நகர சபையில் மகத்தான சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் நகர சபைகள் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் முறையில், எத்தகைய சீர்திருத்தத்துக்கும் வழியும் வசதி யும் இல்லை யென்பதைப் பின்னர் தெரிந்து கொண்டேன். இருந்தாலும் நிறைய வேலை இருந்தது. நகர சபைக் காரியால யத்தை ஒழுங்குபடுத்தி, நிர்வாக வேலையை துரிதமாக செய்ய வேண்டிய தேவை இருந்தது. அந்த வேலையில் ஒருமனப் பட்டு ஆழ்ந்திருந்தேன். அந்தச் சமயத்தில் என்னுடைய காங்கிரஸ் வேலையும் வளர்ந்துகொண்டே போயிற்று. ஏற் கெனவே நான் ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாக விருந்தேன். இப்பொழுது அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கும் காரியதரிசியாக செய்துவிட்டார் கள். இந்தப் பலவேறு வேலைகளால், நான் நாளொன்றுக்குப் பதினைந்து மணிநேரம் வேலைசெய்ய வேண்டி வந்தது. வேலை

முடிந்ததும் கை கால்களை அசைக்க முடியாமல், அப்படியே அயர்ந்துபோவேன்.

சிறையிலிருந்து நான் வீட்டுக்கு வந்ததும், என் கண்ணில் பட்ட முதல் கடிதம் அப்பொழுது அலகாபாத் உயர்தர நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஸர் க்ரிம் வுட்மியர்ஸ் அவர்களிடமிருந்து வந்திருந்தது. நான் விடுதலையடையுமுன்பே அந்தக்கடிதம் எழுதப்பட்டிருந்தது. ஆனால் நான் விடுதலை அடைவேன் என்று தெரிந்துகொண்டுதான், தலைமை நீதிபதி அதை யெழுதியிருக்கவேண்டும். அடிக்கடி தம்மைவந்து சந்திக்கும் படியாக அந்தக்கடிதத்தில் அழைப்பு இருந்தது. கடிதமும் பழகினதோழர் நடையில் எழுதப்பட்டிருந்தது. இதைக் கண்டு நான்சிறிது வியப்படைந்தேன். அவரை எனக்கு முன்னே தெரியவே தெரியாது. அவர் 1919-ம் வருஷம் அலகாபாத்துக்கு வந்தவர். அப்பொழுது அநேகமாக நான் தொழிலை நிறுத்திய சமயம். அவருடைய முன்னிலையில் ஒரே ஒரு வழக்கைத் தான் நடத்தியதாக எனக்கு நினைவு. அதுவே ஹைக்கோர்ட்டில் நான் நடத்திய கடைசி வழக்காகும். என்ன காரணத்தாலோ தெரியவில்லை, அவர் என்னுடன் அதிகபரிச்சய மில்லாமலே, என்னிடம் அன்பு வைக்கத் துவக்கினார். நான் பெரிய மனிதனாவேனென்றும் என்னை நல்வழியில் போகும்படி செய்து, பிரிட்டிஷாரின் நோக்கத்தையும் நான் செவ்வனே அறிந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் என்னிடம் பின்னர் சொன்னார். அவருடைய வழி சூக்ஷமமானது. இந்தியாவிலே இங்கிலீஷ்காரர்களுக்கு விரோதமாகத் தீவிர இந்திய அரசியல் வாதிகள் தோன்றியதற்குக் காரணம் இங்கிலீஷ்காரர்களால் நடைமுறையில் இந்தியர்கள் சமமாகக் கருதப்படவில்லை, நடத்தப்படாததுதான் என்று அவர் எண்ணினார். இவரைப்போலவே எண்ணிய இங்கிலீஷ்காரர்கள் பலருண்டு. இங்கிலீஷ்காரர்கள் உயர்ந்த தோரணையில் நடந்துகொள்வதால், இந்தியாவிலே ஆத்திரமும் கசப்பும் தீவிரவாதமும் ஏற்பட்டன என்று அவருடைய எண்ணம்.

ஒரு கதை உண்டு. இந்தக்கதை சுத்தப்பொய். இதற்கு ஆதாரமே கிடையாது. என்னுடைய தகப்பனாரை ஒரு இங்கிலீஷ் கிளப்பில், சேர்த்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்லிவிட்டார்களாம். இதனாலே தான், என் தகப்பனார் இங்கிலீஷ்காரர்களுக்கு விரோதமாயும் அதிதீவிர வாதியாக

வும் ஆகிவிட்டார் என்று சொல்லப்பட்டது. ஆனால் இத்தகைய கதைகளால் இங்கிலீஷ்காரர்களுக்கு தேசீய இயக்கத்தின் காரணம் இதுதான் என்று எளிதிலே சமாதானம் ஏற்பட்டுவிடுகிறதல்லவா? கதை உண்மையா இல்லையா என்பதைப்பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை. எனக்கும் என் தகப்பனருக்கும் இத்தகைய துறைகளில் எவ்வித மனக்குறையும் ஏற்பட்டதே இல்லை. எங்களுக்கு எப்பொழுதுமே இங்கிலீஷ்காரர்களிடமிருந்து தக்க மரியாதை கிடைத்துவந்தது. நாங்கள் அடிமைகள் என்று அதிகமாக ஆத்திரப்பட்ட போதிலும், சாதாரண இங்கிலீஷ்காரனோடு சமமாகப் பழகி வந்தோம். இன்றைக்கும் நான் இங்கிலீஷ்காரனோடு சவுஜன்யமாய்ப் பழகிக்கொண்டுதான் வருகிறேன். அவன் ஒரு உத்தியோகஸ்தனயிருந்து, அப்பொழுது அவன் என்னைத் தட்டிக்கொடுக்கப்பார்த்தால், எனக்குச் சிறிதளவு ஆத்திரம் உண்டாகும். அப்பொழுதும் நான் என்னுடைய நகைச்சுவையை இழந்ததில்லை. இங்கிலீஷ்காரனோடு இந்தியாவில் ஒத்துழைக்கும் மிதவாதிகளையும், ஏனையோரையும் பார்க்கிலும் எனக்கும் அவனுக்கும் பொதுவான தன்மைகள் அதிகம் என்பது என் கருத்து.

இந்தியர்கள் மரியாதையுடன் வரவேற்கப்படாத் குறையால் ஆத்திரப் படுகிறார்கள் என்ற அடிப்படையான கசப்பைப் போக்கிவிடவேண்டு மென்பது ஸர் கிரிம்வுட் அவர்களது கருத்து. அடிக்கடி என்னைத் தம்மிடம் வரச்சொல்லுவார். நானும் பல தடவைகளில் சென்றேன். நகரசபை வரி ஒன்றை ஆக்ஷேபிக்க வந்ததுபோலப் பாசாங்கு செய்துகொண்டு, அவர் என்னிடம் வருவார். மற்ற விஷயங்களைப்பற்றிக் கலந்து பேசுவார். ஒரு சமயம் அவர் இந்தியமிதவாதிகளைப்பற்றி அலட்சியமாகத் தாக்கிப் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கோழைகள்! தொடை நடுங்கிகள்! சமயோஜிதவாதிகள்! முதுகெலும்பே கிடையாது! நடைத்திறனும் இல்லையென்று இவ்வாறு அவர் மிதவாதிகளைப்பற்றிக் கடுமையான சொற்களை அடுக்கிக்கொண்டே போனார். "அவர்களிடம் எங்களுக்கு மரியாதையுண்டென்று நீங்கள் நினைக்கிறீர்களா" என, அவர் என்னைக்கேட்டார். இவ்வாறு அவர் ஏன் என்னிடம் பேசவேண்டுமென்று நான் ஆச்சரியப்பட்டேன். இந்த மாதிரி என்னிடம் அவர் பேசினல்தான், எனக்குச் சந்தோஷமாகஇருக்குமென்று எண்ணிப்பேசினரோஎன்னவோ.

புதிய சட்டசபைகளையும் மந்திரிமார்களையும்பற்றி மெதுவாக சம்பாஷணையில் பேச ஆரம்பித்தார். தேசத்துக்குத் தொண்டுசெய்யக்கூடிய அரிய சந்தர்ப்பங்கள் இந்த மந்திரி மார்களுக்கு வாய்த்திருக்கின்றன என்று அவர் சொல்லுவார். "கல்வி மந்திரியை எடுத்துக்கொள்வோம். கல்வி நிர்வாகத்தை நடத்துவதில் அவருக்குப் பூரண சுதந்திரம் இருப்பின் கோடிக் கணக்கான மனிதர்களின் வாழ்க்கையை மாற்றிவிட அவருக் குச் சந்தர்ப்பம் ஏற்படாதா? யோசித்துப்பாருங்கள். நொடிப் பொழுதில் மாற்றிவிடலாமே! தங்களையொத்த யோக்கியரும் புத்திசாலியுமான ஒருவர் சுறுசுறுப்பாக லட்சியத்தைக் கைக் கொண்டு, வேலைசெய்யத் துவக்கி மாகாணத்தில் கல்வியைப் பரப்ப எண்ணினால், எவ்வளவோ அற்புதங்களைச் செய்ய லாமே! தாங்கள் ஏன் மந்திரியாகக் கூடாது? சமீபத்தில் நான் கவர்னரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் கல்வி விஷயமாகத் தங்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க முடியுமென்று தெரிவித்தார்" என்று மியர்ஸ் அவர்கள் என் னிடம் சொன்னார். பேச்சை அதிகமாக வளர்த்துவிட்டதாக எண்ணினாரோ என்னவோ! "இதெல்லாம் என்னுடைய சொந்த யோசனை. எந்த உத்யோகஸ்தரது யோசனையென் றும் எண்ணிவிடக்கூடாது" என்று பேச்சை முடித்து விட்டார்.

கிரிம்வுட் அவர்களது ராஜதந்திரத்தையும் வளைத்துப் பேசும் தன்மையையுங்கண்டு எனக்குச் சிரிப்புவந்தது. சர்க் காரிடம் ஒரு மந்திரிவேலை பார்ப்பதென்பது என்னால் கனவி லும் சகிக்கக்கூடாத, அருவருப்பான காரியம். நிர்மாணத் திட்டத்தின்மூலமாக நிலைத்த உருப்படியான வேலையைச் செய்வதில் எனக்கு எப்பொழுதுமே ஆசைதான். அழிப்ப தும் கிளர்ச்சி செய்வதும் ஒத்துழையாமையும் மனிதர்களுக்கு சாதாரண அலுவல்களல்ல.

என்றாலும் போராட்டமும், அழிவும் முடிந்த பின்னர் தான், புதிதாக ஒன்றைக் கட்டக் கூடிய காலதேசங்களை அடைவோம். அது நமது தலை விதியாகும். மணலில் கோட்டை கட்ட முயற்சி செய்து போராடி வியர்த்து அலுத் துப் போய், நம்மில் பலர் மறைந்து போகலாம். நமக்குப் பின் வரும் குழந்தைகளோ அல்லது அவர்களது குழந்தை களோ நமது வேலையைப் பூர்த்தி செய்து கட்டிடத்தைக் கட்ட வேண்டி வரும்.

ஐக்கிய மாகாணங்களில் மந்திரிகளாக ஆவது அந்நாட்களில் மிகவும் சுலபமான காரியம். ஒத்துழையாமைக் காலத்தில் வேலை பார்த்து வந்த இரண்டு மிதவாத மந்திரிமார்களும் சென்றுவிட்டார்கள். ஒத்துழையாமை இயக்கத்தினால் அரசாட்சி ஆட்டம் கண்டபோது, காங்கிரஸை எதிர்த்துப் போராடும்படியாக மிதவாத மந்திரிகளை அரசாங்கத்தார் பூர்ணமாக உபயோகப்படுத்திக்கொண்டார்கள். அப்பொழுது அரசாங்கத்தார் அவர்களைக் கௌரவத்துடனும், மரியாதையுடனும் நடத்தி வந்தார்கள். அரசாங்கத்தை ஆதரிக்கும் இந்தியர்கள் உண்டு என்று அந்த நெருக்கடி காலத்தில், ஜனங்களின் கண்களில் காண்பிப்பதற்கு இவர்கள் ஏற்ற சாதனமாக இருந்தனர். இந்தக் கௌரவமும், மரியாதையும் தங்களுடைய சொந்த யோக்கியதையால் கிடைக்கவேண்டிய உரிமைகளென்று மிதவாத மந்திரிமார்கள் எண்ணியிருக்கலாம். காங்கிரஸினுடைய தாக்குதலுக்குப் பிரதி உபாயமாக அரசாங்கத்தார் தங்களை மரியாதையுடன் நடத்தி வந்தார்கள் என்பதை மந்திரிமார்கள் உணரவில்லை. அரசாங்கத்தைத் தாக்கும் வேலையைக் காங்கிரஸ் நிறுத்திவிடவே திடீரென்று அரசாங்கத்தாருக்கு மந்திரிமார்களிடம் மதிப்பும், கௌரவமும் இல்லாமற்போயிற்று. மந்திரிமார்கள் இதைக் கண்டு ஆத்திரப்பட்டார்கள். ஆனால் அதனால் என்ன பயன்? சீக்கிரத்தில் தங்கள் வேலைகளை ராஜிநாமாச் செய்யும்படியான நிலைமைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அரசாங்கத்தார் புதிய மந்திரிமார்களுக்காக வலை போட்டுத் தேட ஆரம்பித்தார்கள். இந்த முயற்சி எளிதிலே பலிக்கவில்லை. சட்டசபையிலிருந்த மிதவாதிகள் தங்கள் தோழர்களான மந்திரிமார்களுக்கு நேர்ந்த அவமானத்தைக் கண்டு, அவர்கள்பேரில் அனுதாபப்பட்டு அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்க விரும்பவில்லை. மற்றவர்களிற் பெரும்பான்மையோர் ஜமீன்தார்கள். அவர்களில் பலருக்கு மிதமாகக்கூட கல்விப் பயிற்சி உண்டென்று சொல்ல முடியாது. சட்ட சபையைக் காங்கிரஸ் பகிஷ்காரம் செய்துவிட்டதால், அவைகளுக்குள் நுழைந்த கோஷ்டி மிகவும் விநோதமானதாக இருந்தது. ⊗

இந்தச் சமயத்திலோ இதற்குக் கொஞ்சம் பின்னரோ, ஐக்கிய மாகாணத்தில் ஒரு பேர்வழிக்கு, மந்திரி பதவியைக் கொடுப்பதாகச் சொன்னார்களாம். அவர் விடுத்த மறுமொழி மிகவும் ரஸமானது. "நான்ரொம்பவும் கெட்டிக்காரன் என்ற

தற்பெருமை கிடையாது. ஆனாலும் சாதாரண புத்தியுண்டென்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஒரு வேளை சராசரியைக் காட்டிலும் சிறிதளவு மேலாகவும் ஜனங்கள் நினைப்பதாக நம்புகிறேன். மந்திரிப்பதவியை யேற்றுக்கொண்டு இந்த நன்மதிப்பை யிழந்து உலகத்தாரிட மிருந்து நான் முட்டாள் பட்டத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது, அரசாங்கத்தாரின் ஆசையா ?" என்று அவர் பதில் எழுதினாராம்.

இந்த ஆக்ஷேபனைக்குக் கொஞ்சம் ஆதாரம் உண்டு. மிதவாத மந்திரிமார்களுக்குக் குறுகிய மனப்பான்மை இருக்கலாம். அரசியலிலும் சமூக சீர்திருத்தத்திலும் தாராளமான நோக்கு இல்லாமலிருக்கலாம். அது மலடு தட்டிய மிதவாதக் கொள்கையின் குற்றமாகும். ஆனால் அவர்கள் உயர்ந்த தொழில்களில் இருந்தவர்கள். அதனால் புத்தி கூர்மையும், தங்கள் வேலையை மாமூல்படி திறமாகவும், மனச்சாக்ஷி யுடனும் செய்தார்கள். அவர்களுக்குப் பின் வந்த மந்திரி மார்களிற் சிலர், ஜமீன்தார் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குப் படிப்புக் கலம் பூஜ்ய மென்றே சொல்லலாம். கையெழுத்துப் போடத்தெரிந்தவர்கள் என்று மட்டுமே சொல்லலாம். கவர்னர் இந்தக் கனவான்களைத் தெரிந்தெடுத்து, மந்திரிகளாக ஏன் செய்யவேண்டும் ? இந்தியர்கள் திறமையில்லாதவர்கள் என்று உலகத்தாருக்குக் காண்பிக்கும் பொருட்டே இவ்வாறு செய்தார் போலும் ! "லட்சுமிகடாட்சம் இருந்தால், எதுதான் சாத்தியப்படாது ? என்று எல்லோரும் சொல்லுவதற்காக, எனக்கு அதிஷ்டம் ஏற்பட்டது" என்ற பழமொழி இவர்களுக்கு நன்கு பொருந்திற்று. படிப்பு இருந்தாலென்ன இல்லா விட்டாலென்ன ! இந்த மந்திரிமார்களுக்கு பக்க பலமாக ஜமீன்தார் வோட்டுகள் இருந்தன. மேலும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஆனந்தமான விருந்துக் கச்சேரிகள் இவர்கள் நடத்தி வந்தார்கள். பட்டினி கிடந்து தவிக்கும் விவசாயிகளிடமிருந்து, இவர்கள் வசூல் செய்யும் பணத்துக்கு, வேறு கண்ணியமான செலவும் உயர்வான உபயோகமும் இருக்க முடியுமா ?

## XV

## சந்தேகமும் மனப் போராட்டமும்

பல வேலைகளில் ஓயாது ஈடுபட்டு என்மனத்தைக் கலக்கி வந்த சிக்கலான பிரச்னைகளிலிருந்து தப்பமுயன்றேன். ஆனால், இந்தப் பிரச்னைகளைத் தள்ளிவைக்க முடியவில்லை. திரும்பத்திரும்ப என் மனதிலே அவைகள் தோன்றிக் கொண்டேயிருந்தன. திருப்திகரமான சமாதானமும் ஏற்பட வில்லை. 1920-21 வருஷங்களில் என்வேலைமுன்போல் எனது மனப்பூர்வமான லக்ஷ்யங்களை அடைவதற்காக செய்யப்பட வில்லை. அவைகளிலிருந்து ஓடிப்போவதற்கு ஒரு மார்க்க மாகவிருந்தது. என்னுடைய சிறிய உலகத்திலிருந்து வெளி வந்து இந்திய நிலைமையை சுற்றுமுற்றும் பார்த்தேன். இப் பொழுதோ, அந்தக் காட்சிகளில் நான் இதுவரையில் கவனி யாத பலவித மாறுதல்கள் தோன்றிவிட்டன. கருத்துக்களும் புதிய புதிய வித்தியாசங்களும் காணப்பட்டன. ஒளிக்குப் பதி லாக இருள் சூழ்வதை உணர்ந்தேன். காந்திஜீயின் தலைமை யில் எனக்கிருந்த நம்பிக்கை குறையவில்லை. இருந்தாலும். அவருடைய திட்டத்தில் பல அம்சங்களை ஊன்றிக் கவனிக் கத் துவக்கினேன். அவர் சிறையிலிருந்தார். அவரைப் போய்ப் பார்க்க முடியாது. எனவே, அவருடைய யோசனை கிடைக்கமுடியாமல் போயிற்று. காங்கிரஸுக்குள்ளிருந்த மாறுதல் வேண்டாதார், சட்டசபைக் கக்ஷி, என்ற இரண்டு கோஷ்டிகளும் எனக்குப் பிடிக்கவில்லை. சட்டசபைக் கூட் டம் மறுபடியும் சட்ட வரம்புக்குட்பட்ட கிளர்ச்சியையும், சில்லரை சீர்திருத்தத்தையும் விரும்புவதாக எனக்குத் தோன்றிற்று. இது ஒரு குருட்டுச் சந்தாகும். வெளியேவர வழி கிடையாது. மாறுதல் வேண்டாதார்களோ மகாத்மா வின் தீவிர சீடர்கள் என்று கருதப்பட்டவர்கள். அவர்கள் மகாத்மாவின் உபதேசத்தின் உயிரை விட்டுவிட்டு கூட்டை மட்டும் எடுத்துக்கொண்டார்கள். பிறருக்கு ஆவேசமளிக் கக்கூடிய அம்சம் அவர்களிடம் ஒன்றுமே இல்லை. சாதுக்க ளாகவும், பக்தியுள்ள சீர்திருத்தக்காரர்களாகவும் இருந்தனர். அவர்கள் வேலையில் ஒரு மேன்மை இருந்தது. அவர்கள் ஏழை விவசாயிகளுடன் தொடர்பை வைத்துக்கொண்டிருக்

தார்கள். ஸ்வராஜ்யக் கக்ஷியாரோ, இத்தகைய தொடர்பு ஒன்றுமில்லாமல், சட்டசபை நடவடிக்கைகளிலேயே ஊன்றிப் போய்விட்டார்கள்.

நான் சிறையிலிருந்து வெளிவந்ததும் என்னை ஸ்வராஜ்யக் கக்ஷியின் கொள்கைக்கு இணங்கும்படி செய்ய தேசபந்து தாஸ் முயன்றார். ஆனால் நான் அவருடைய வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. என்றாலும் என்ன செய்வதென்று எனக்கு மனதிலே தெளிவுமுண்டாகவில்லை. என் தகப்பனார் அந்தக்காலத்தில் ஸ்வராஜ்யக் கக்ஷியில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். அந்தக் கக்ஷியில் சேரும்படி, எந்த வகையிலும் அவர் என்னைத் தூண்டியதே இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய போராட்டத்தில், அவரோடு நான் கலந்துகொண்டிருந்தால், அவர் மிகுதியும் மகிழ்ச்சி அடைந்திருப்பார். ஆனால், அதற்காக என்னை யாதொரு தொந்தரையும் செய்யவில்லை. என்னிஷ்டப்படி விட்டு விட்டார்.

இந்தக்காலத்தில் தகப்பனாருக்கும் தாஸுக்கும், இடையே நெருங்கிய நட்பு உண்டாயிற்று. வெறும் அரசியல் சம்பந்தமான நெருக்கம் மட்டுமல்ல; முதிய பருவத்தில் புதியநட்புகள் அமைவது அருமையென்று சொல்லுவார்கள். இருந்தாலும் இவர்களிருவரும் நெருங்கி நெருங்கி, நட்பை பெருக்கிக் கொண்ட வகையைப் பார்க்க, நான் சிறிது ஆச்சரிய மடைந்தேன். தகப்பனாருக்கு அறிமுகமானவர்கள் நூற்றுக்கணக்கிலிருக்கலாம். அவர்களிடம் சிரித்துச் சல்லாபம் செய்வார். ஆனால் அவர்களில் ஓரிருவர்தான் அவருடைய நண்பர்களாயிருந்தார்கள். நெருக்கமான நட்பில் அவர் மிகவும் செட்டாயிருந்தார். நட்பைப்பற்றிக் கேலிகூடச் செய்வார். என்றாலும், தேசபந்துவுக்கும் அவருக்கும் இடையே, இருந்த தடைகளெல்லாம் விலகி அவர்கள் பரஸ்பரம் மகத்தான அன்பு கொண்டுவிட்டார்கள். தேசபந்துவைவிடத் தகப்பனார் ஒன்பது வயது மூத்தவர். ஆனால், தேகசுகத்திலும், உடல் வலிமையிலும் தகப்பனார் தாஸைவிட மேம்பட்டவர். இருவருக்கும் பொதுவான சட்டப் பயிற்சியும், தொழிலில் வெற்றியும் இருந்தபோதிலும், அவர்களுக்குள் அநேக வகைகளில் வித்தியாசங்களிருந்தன. தாஸ் வக்கீலாய் இருந்தபோதிலும், ஒரு கவிஞர். உணர்ச்சிப் பெருக்குகொண்டவர். வங்காளியில் நேர்த்தியான கவிதையை அவர் எழுதியிருக்கிறார். அவர்

நாவன்மைபடைத்த பிரசங்கி. அவருக்கு மதப்பற்றுகொண்ட மனப்பான்மை உண்டு. என் தகப்பனுரோ காரியவாதி. உணர்ச்சிப் பெருக்கை வெளியே காண்பிக்காதவர். காரியங்களை அமைப்பாகக் கோர்த்து அரண்செய்வதில் மிகவும் சாமர்த்தியசாலி. அவருக்கு மதப்பற்று துளிகூடக் கிடையாது. வாதத்தில் மிகவும் பிரியங்கொண்டவர். இதிலே, பிறருக்கு அடியும் கொடுப்பார், தானும் வாங்கிக்கொள்ளுவார். முட்டாள்களை எளிதிலே பொறுத்துக்கொள்ள மாட்டார். எதிர்ப்பை சகிக்காதவர். யாராவது எதிர்த்தால், அவரைத் துடைப்பத்தால் அடிக்கவேண்டுமென்று அவருக்கு ஆசையுண்டாகும். தகப்பனுரும் தேசபந்துவும் சில வகைகளில் வேற்றுமைப்பட்டிருந்தாலும், அவர்களிருவரும் சேர்ந்து ஒரு ராஜீயக்கக்ஷியைத் தலைமைவகித்து நடத்த அபூர்வ ஜோடியாயிற்று. ஒருவர் தமது குணங்களால் மற்றவருடைய குறைகளைப் பூர்த்திசெய்தார். அவர்களுக்குள்ளே பரஸ்பரம் பூரணமான நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஒருவர் மற்றவருக்குத் தெரிவிக்காமலே, மற்றவருடைய கையெழுத்தை போட்டு அறிக்கை வெளியிடும்படியானவரைக்கும் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. முன்னடியே ஒருவருக்கொருவர் கலந்து கொள்ளவேண்டிய தேவையில்லாமல் போய்விட்டது.

இந்த ஒற்றுமையினல், ஸ்வராஜ்யக்கட்சி நாட்டில் நிலைத்து செல்வாக்கையும் வலுவையும் பெற்றது என்று சொல்லவேண்டும். இந்தக்கட்சிக்குள் சமயோசிதமாய் நடந்துகொண்டு தங்கள் காரியத்திலே கண்ணுயிருந்தவர்கள் சிலர் இருந்தார்கள். வேறு சிலர் சட்டசபைகளின் மூலமாக உத்தியோகமோ, வேறு எவ்விதலாபமோ பெறலாமென்று இந்தக் கக்ஷியில் சேர்ந்துகொண்டார்கள். சில உண்மையான மிதவாதிகளும் இந்தக்கட்சியிலிருந்தார்கள். அவர்கள் அரசாங்கத்தாருடன் ஒத்துழைப்பை நாடினர்கள். இத்தகைய வித்தியாசங்கள் தேர்தலுக்குப் பின்னர் வெளித் தோன்றவே, அவைகளைக் கக்ஷித்தலைவர்கள் கடுமையாகக்கண்டித்தார்கள். "அழுகிப்போன அங்கத்தை வெட்டிவிடுவதுபோல, கட்டுப்பாட்டுக்கு அடங்காத அங்கத்தினரைக் கக்ஷியைவிட்டு விலக்கத் தயங்க மாட்டேன்" என்று தகப்பனர் சொல்லிவிட்டார். அவர் அவருடைய வார்த்தைப்படியே நடந்தும் கொண்டார்.

1923-ம் வருஷத்திலிருந்து, அதற்கு அதிகநேரம் கிடைக்காவிடினும் எனக்குக் குடும்ப வாழ்க்கையின் மூலமாக

ஆறுதலும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன. இவ்விஷயத்தில் நான் மிகுந்த பாக்கியசாலிதான். கஷ்ட காலத்திலும் நெருக்கடியி லும் எனது குடும்பத்தார் என்னை அரவணைத்து ஆறுதல் அளித்தார்கள். 1920-ம் வருஷம் முதல் நான் அவளைப்பற்றி அதிகம் சிந்திக்காதபோதிலும், என்மனைவி எவ்வளவு தாராள குணத்துடன் என்னிடம் நடந்துகொண்டாள் என்பதை நினைத்துப் பார்த்தால், எனக்கு வெட்கமாகத்தானிருக்கிறது. ரோஷமும், அகம்பாவமும் கூடினவளாகவிருந்தும் என்தாறு மாறான போக்குகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு தேவை யான பொழுதெல்லாம், ஆறுதலும் மகிழ்ச்சியும் அளித்து வந் தாள்.

1920-ம் வருஷம் முதல் எங்கள் குடும்பவாழ்க் கையில் பலமாறுதல்கள் ஏற்பட்டன. வேலைக்காரர்களின் தொகை குறைந்தது. சிறிதுஎளிய வாழ்க்கையைஏற்றுக்கொண்டோம். அப்படி யிருந்தாலும், முக்கியமான எந்த சௌகரியத்திலும் குறைவு ஏற்படவில்லை. செலவுக்குப் பணம் கண்டுபிடிப்பதற் காகவும் அதிகப்படியான சாமான்களை ஒழித்துவிடுவதற்காக வும், அநேக சாமான்களையும், குதிரைகளையும், வண்டிகளையும் விற்றோம். இவைகளில் பலவற்றை ஏற்கனவே, போலீசார் எடுத்துக் கொண்டுபோய் விற்று விட்டார்கள்.

நாற்காலி சோபாக்களும் வேலைக்காரர்களும் குறையவே முன்போல் எங்கள் வீடுஅழகாகத் தோன்றவில்லை. தோட்டக் காரர்கள் இல்லாததால், தோட்டம் காடாகப்போயிற்று. சுமார் 3வருஷகாலம் வீட்டைப் பற்றியும், தோட்டத்தைப் பற்றியும், கவனமே செலுத்தப் படவில்லை. தாராளமாய்செலவு செய்து பழகியவராதலால் தகப்பனுருக்கு அநேகவகைகளில் செட்டுச் செய்வது பிடிக்கவில்லை. எனவே, கோர்ட்டுக்கும் போகாமல் கக்ஷிக்காரர்களுக்கு வீட்டிலிருந்தபடியே யோசனை சொல்லி அதனின்றும் பணம் சம்பாதிப்பதென்று தீர்மானித்தார். இதற்கு அதிகமான ஓய்வுநேரம் அவருக்குக் கிடையாது. இருந்தாலும் நிறைய சம்பாத்தியம் செய்தார். பணத்துக்குத் தகப்பனுரை நான் அண்டியிருக்கவேண்டியதைக் குறித்து எனக்கு மிகுதியும் துக்கமுண்டாயிற்று. என்னுடைய தொழி லை விட்டதுமுதல் எனக்குவருமானமே கிடையாதென்று சொல்லலாம். சில கம்பெனிகளின் பங்குகள் என்பேரில் இருந்ததால் அதன்மூலம் சிறிதளவு வருஷவருமானம் வந்தது. அவ்வளவுதான்; எனது மனைவியும் நானும் அதிகமாகச்செலவு

செய்யவில்லை. நாங்கள் செலவழிக்கும் அற்பத்தொகையைப் பார்த்து, எனக்கே ஆச்சரியமுண்டாயிற்று, 1921ம் வருஷத்தில் இந்த உண்மையைக்கண்டு மிகுதியும் திருப்தியடைந்தேன். கதர்த் துணிகளுக்கும் மூன்றுவது வகுப்பு ரெயில் பிரயாணத்துக்கும் அதிகமாகபணம் தேவையில்லை. ஆனால், வேறுபல் இனங்களில் குடும்பச்செலவு எவ்வளவு அதிகமாயிருந்ததென்பதை தகப்பனாரோடு நாங்களிருந்ததால் அப்பொழுது என்னால் அறிய முடியவில்லை. என்றாலும் பணமில்லையே என்றபயம் என்னை ஒருநாளும் தொந்தரவு செய்ததில்லை. தேவையானால், பணம்சம்பாதிக்க முடியும். சிக்கனமாயும் வாழமுடியும். இந்தத்தைரியம் எனக்கு எப்பொழுதும் உண்டு. நாங்கள் தகப்பனார்பேரில் அதிகசுமையாக இருக்கவில்லை. சுமையென்று நாங்கள் நினைப்பதாக காதில் பட்டாலும் அவருக்கு மனத்துயரம் மிகுதியும் உண்டாகிவிடும். என்றாலும், என்னுடைய நிலைமை எனக்குப்பிடிக்கவில்லை. இந்தப் பிரச்னையைப்பற்றி மூன்றுவருஷம் யோசித்துப்பார்த்தேன். பயனில்லை. சம்பளம் கிடைக்கக்கூடிய உத்தியோகம் எனக்கு எளிதிலே கிடைக்கும். ஆனால், அதையேற்றுக் கொண்டால், பொதுஜன ஊழியத்தை நான் குறைத்துக் கொள்ளவேண்டும் அல்லது விட்டுவிடவேண்டும்.

காங்கிரஸ் வேலைக்கும் நகரசபை வேலைக்கும் என்னுடைய முழுநேரத்தையும் செலவிட்டு வந்தேன். பணம் சம்பாதிப்பதற்காக, அவைகளை விட்டுவிலகுவதென்பது எனக்குப் பிடிக்கவில்லை, பெரிய கம்பெனிகளிலிருந்து என்னை அழைத்தார்கள். நிறையப்பணம் கிடைத்திருக்கும், எனக்கு விருப்பமில்லை. வேண்டாமென்று சொல்லி விட்டேன். என் திறமையைக் கண்டு உயர்ந்தசம்பளம் கொடுக்க அவர்கள் முன்வரவில்லை. என்னுடைய பெயரை உபயோகப்படுத்திக் கொண்டால், லாபம் என்று கருதியிருக்கலாம். இந்தமுறையில், எந்தப்பெரிய தொழில்சாலையோடும் சம்பந்தம் வைத்துக் கொள்ள எனக்குப்பிரியமில்லை. மீண்டும், வக்கீல் தொழிலில் புகுவதென்பது எண்ணக்கூடாததாகவிருந்தது. அதன்பேரிலிருந்தவெறுப்பு வளர்ந்துகொண்டே போயிற்று.

காங்கிரஸின் பொதுக்காரியதரிசிகளுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று 1924-ம் வருஷக் காங்கிரசில் ஒரு யோசனை கொண்டுவரப்பட்டது. அப்பொழுது நான் காரியதரிசிகளில் ஒருவனாயிருந்தேன். எனவே, இந்தயோசனையை

வரவேற்றேன். ஒருவனுக்குச் சோற்றுக்குக்கூடக் கொடுக்காமல் அவனிடமிருந்து பூரா நேரம் வேலைவாங்குவது தவறு என்று எனக்குத் தோன்றிற்று. இல்லாவிட்டால் சொத்துள்ள ஒருவனை பொறுக்கி யெடுத்து, இத்தகையவேலைக்கு வைக்கவேண்டும். ஆனால், சொத்து உள்ளவர்கள் அரசியல் சம்பந்தப்பட்டவரையிலும் அவ்வளவு சரியாக நடந்துகொள்வதில்லை. மேலும், அவர்களிடம் பொறுப்பான வேலைவாங்க முடியாது. அதிகமாகப் பணம்கொடுக்கக் காங்கிரஸிடத்தில் பணம்கிடையாது. எங்களுக்குக் கொடுப்பதாக யோசித்த தொகையும் ரொம்பக் குறைவு. பொதுஜன நிதியிலிருந்து சம்பளம் பெறுவதில், இந்தியாவிலே அர்த்தமில்லாத அதிக அருவருப்பு ஏற்பட்டிருக்கின்றது. என்னசெய்யமுடியும் ? மேலும், சம்பளம் வாங்கிக்கொண்டு ஊழியம் செய்வது தகப்பனுருக்கு கட்டோடு பிடிக்கவே யில்லை. உடன்காரியதரிசியாயிருந்த நண்பருக்கும் பண முடைய்பதிகம். ஆனால், காங்கிரஸிலிருந்து பணம் வாங்கிக்கொள்வது கௌரவக்குறைவென்று அவர் நினைத்தார். இந்த விஷயத்தில் எனக்கு இத்தகைய "கௌரவம்" ஒன்றுமே இல்லை. சம்பளம்வாங்கிக் கொள்ளத் தயாரர்யிருந்தேன். என்றாலும் அந்த யோசனை ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

பணவிஷயத்தில் அவர் கையைப் பார்த்திருக்கவேண்டியிருக்கிறதே என்று தகப்பனாரிடம் ஒரேஒரு சமயம்தான் பிரஸ்தாபம் செய்தேன். இது எனக்குப் பிடிக்கவில்லையென்றுஞ்சொன்னேன். அவருக்கு மனநோவு உண்டாகாத முறையில் மெதுவாக இதை பிரஸ்தாபித்தேன். கொஞ்சம் பணம் சம்பாதிப்பதற்காகப் பூராநேரத்தையும் செலவழித்துப் பொதுஜன வேலையைவிட்டுவிடுவது மிகவும் முட்டாள்தனமான வேலையாகுமென்று அவர் என்னிடம் சொன்னார். எனக்கும் எனது மனைவிக்கும் வருஷம் முழுதுக்கும் தேவையான பணத்தை இரண்டொரு நாட்களில தாம் சம்பாதித்து, எனக்குக் கொடுக்கமுடியுமென்றும் கூறினார். சமாதானம் சரியாகத்தானிருந்தது. ஆனால் அச்சமாதானம் எனக்கு திருப்தியைத் தரவில்லை. என்றாலும், அவருடைய யோசனைப்படியே நடந்து கொண்டேன்.

1923 முதல் 1925 முடிய குடும்பக் கவலைகளும், பணத்தொல்லைகளும் இருந்துவந்தன. இடையே அரசியல் நிலைமை மாறிக்கொண்டேவந்தது. என் விருப்பமில்லாமலே, அகில

இந்திய காங்கிரஸில் பொறுப்புள்ள வேலையை ஏற்கவேண்டிய தாயிற்று. 1923-ம் வருஷத்தில் நிலைமை வெகு அசாதாரண மாகவிருந்தது. கயா காங்கிரசுக்கு தேசபந்துதாஸ் தலைவர். எனவே, 1923-ம் வருஷத்திய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கும் விதிப்படி அவரே தலைவர். ஆனால் இந்தக் கமிட் டியிலிருந்த பெரும்பான்மை அங்கத்தினர்கள் இவருக்கும் இவருடைய சுயராஜ்யக் கக்ஷிக்கும் விரோதமானவர்கள். ஆனால்; இரண்டு கக்ஷிகளின் தொகையிலும் அதிக வித்தியா சம் கிடையாது.

1923-ம் வருஷம் கோடைகாலத்தில், பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சண்டை முற்றிவிட்டது. தேசபந்துதாஸ் தமது தலைமைப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். மத்யஸ்தமாக ஒரு கூட்டம் தோன்றி, அது காங்கிரஸின் புதிய காரியக்கமிட்டியாக அமைந்தது. இந்த மத்தியஸ்தக் கமிட்டிக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஆதரவு கிடையாது. ஸ்வராஜ்யக் கக்ஷியையோ அல்லது மாறுதல் வேண்டாதார் கக்ஷியையோ ஒட்டிக்கொண்டிருக்கவேண்டிய நிலைமையிலிருந்தது. ஒரு கக்ஷியோடு இந்தக் கமிட்டி சேர்ந்தால், இன்னொரு கக்ஷி மைனாரிட்டி யாகிவிடும். புதிய காரியக் கமிட்டிக்கு டாக்டர் அன்சாரி தலைவர். நான் காரியதரிசிகளிலொருவன்.

விரைவில் எங்களுக்கு இரண்டு கக்ஷிகளிலிருந்தும் தொல்லையேற்பட்டது. குஜராத் மாகாணம், மாறுதல் வேண்டாத கக்ஷியின் கோட்டையாகும். தலைமைக் காரியால யத்தின் கட்டளைகளை நிறைவேற்றிவைக்க, குஜராத் மாகா ணக்கமிட்டி மறுத்துவிட்டது. அதே வருஷம் கோடை காலத்தில் நாகபுரியில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. கொடிப் போராட்டம் நாகபுரியில் நடந்து கொண்டிருந்த சமயம். மத்யஸ்தமாயிருந்த எங் களுடைய காரியக்கமிட்டிக்குச் சீட்டுக்கொடுக்க வேண்டிய காலமேற்பட்டுவிட்டது.

செல்வாக்கில்லாத இந்தக் கமிட்டி என்ன செய்யமுடியும்? காங்கிரஸில் உண்மையான சக்தி யாரிடமிருந்ததோ, அவர்களி டம் இந்தக் கமிட்டியினதிகாரம் பலிக்காமற் போய்விட்டது. காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கட்டளையை மீறி குஜராத்மாகா ணம் நடந்ததற்காக, கண்டிக்கப்படவேண்டுமென்ற முயற்சி

பலிக்காமற்போகவே, காரியக்கமிட்டி ராஜிநாமா செய்தது. இந்த ராஜிநாமாவினால் எனக்குமிருந்த ஆறுதலும் சந்தோஷமும் ஏற்பட்டதென்று இன்றைக்கும் ஞாபகமிருக்கிறது. காங்கிரஸுக்குள்ளே கக்ஷிச்சூழ்ச்சிகள் நடைபெறுவது எனக்குப் பொறுக்கமுடியவில்லை. பிரபலஸ்தர்களான காங்கிரஸ் வாதிகள்கூட எவ்வளவு சாமர்த்தியமாக சூழ்ச்சி செய்யக்கூடும் என்பதைக்கண்டு நான் திகைப்படைந்து போனேன்.

பம்பாய் கூட்டத்தில், என்னைக் கடின சித்தக்காரன் என்று தேசபந்துதாஸ் ஏசினார். அவர் கூறியது சரியென்றே தோன்றுகிறது. எனது தோழர்களோடு என்னை ஒப்பிட்டுப் பார்த்தால், நான் கடின சித்தக்காரன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் உணர்ச்சிப் பெருக்காலும், ஆத்திரத்தாலும் தடுமாற்றமடையாதிருக்க வேண்டுமென்று எப்பொழுதும் கவலைப்பட்டு வந்திருக்கிறேன். கடினசித்தனாக ஆவதற்கு பல வருஷங்களாக முயன்று வந்திருக்கிறேன். ஆனால், இதில் நான் அடைந்திருக்கும்வெற்றி வெளித்தோற்றத்தில் தான் என்றஞ்சுகிறேன்.

# XVI

## நாபாவில் நடந்த விடுகதை

ஸ்வராஜ்யக் கக்ஷியினருக்கும் மாறுதல் வேண்டாதார்களுக்கும் இடையே நடைபெற்றுவந்த போட்டி வலுத்துக் கொண்டே வந்தது. ஸ்வராஜ்யக்கக்ஷியினர் நாளுக்குநாள் வலுவடைந்துகொண்டு வந்தார்கள். 1923-ம் வருஷம் டில்லியில் கூடிய தனிக்காங்கிரசில் ஸ்வராஜ்யக்கக்ஷிக்கு அதிகமான ஆதரவு கிடைத்தது. இந்தக்காங்கிரஸ் முடிந்ததும் விநோதமான எதிர்பாராத சம்பவம் ஒன்று எனக்கு நேர்ந்தது.

பாஞ்சாலத்தில் அரசாங்கத்தாருக்கும் சீக்கியர்களுக்கும் இடைவிடாமல் மனஸ்தாபம் ஏற்பட்டுக் கொண்டே வந்திருந்தது. சீக்கியர்களுக்குள் அகாலியர்கள் என்று ஒரு சீர்திருத்த வகுப்புத் தோன்றி, சீக்கிய ஜனசமூகத்தில் சீர்திருத்தங்களைச் செய்யப் பாடுபட்டுவந்தனர். தங்களுடைய குருத்துவாரங்களிலிருந்து (கோயில்களிலிருந்து) அயோக்கிய மகந்துமார்களை (தர்மகர்த்தாக்களை) விரட்டியடித்து, தர்மசொத்தைக் கைப்பற்றிக்கொண்டு கோயில்களையும் சீர்திருத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். சீக்கியர்கள் இவ்வாறு செய்வதை அரசங்கத்தார் குறுக்கிட்டுத் தடுத்தார்கள். குருத்துவார் இயக்கமே ஒத்துழையாமை எழுச்சியால் தோன்றியதாகும். இந்தப்போராட்டம் சாத்வீகமுறையில் நடத்தப்பட்டுவந்தது. இந்தப் போராட்டத்தில், அநேக சம்பவங்கள் நேர்ந்தன. இவைகளிலே முக்கியமாக குருகாபாக் போராட்டம் குறிப்பிடத்தக்கது. லாகூரில் குருகாபாக் சம்பவத்தில் கலந்துகொண்டவர்களில், அநேகர் மாஜி சிப்பாய்கள். இந்த சீர்திருத்தகூட்டத்தார் அணிவகுத்து குருகாபாக் என்ற தோட்டத்தைக் கைப்பற்ற முன்னேறுகையில், போலீசார்கள் அவர்களை படுகாயமடையும்படியாக தடிகொண்டு தாக்கினார்கள். ஆனால் அகாலியர்களோ தங்கள் கைகளைத் தூக்கவுமில்லை; அடி பொறுக்க மாட்டாமல் திரும்பிச் செல்லவுமில்லை. இப்பேர்ப்பட்ட பிடிவாதத்தையும் தைரியத்தையும் கண்டு இந்தியதேசம் திகைத்து ஸ்தம்பித்தும்போய் விட்டது. குருத்துவாரக்

கமிட்டி சட்டத்துக்கு மீறிய கூட்டமென்று சர்க்கார் அறிவித்தார்கள். என்றாலும் போராட்டம் சில ஆண்டுகள் நடைபெற்று முடிவில் சீக்கியர்களுக்கு வெற்றி உண்டாயிற்று. காங்கிரசுக்கு இந்த இயக்கத்தில் பூரண அனுதாபம். எனவே அகாலிய இயக்கத்தோடு தொடர்பு வைத்துகொண்டு விஷயங்கள் அனைத்தையும் கவனித்து வரும்படியாகக் காங்கிரஸ், ஒரு உத்தியோகஸ்தரை அமிருதசரஸில் வசித்து வரும்படியாகக் கட்டளையிட்டது.

நான் சொல்லப்போகும் சம்பவத்துக்கும், பொதுவாக நடைபெற்றுவந்த சீக்கிய அகாலி இயக்கத்துக்கும் நேரான தொடர்பு கிடையாது. ஆனாலும் சீக்கியர்களுடைய எழுச்சியினால்தான், இந்தச்சம்பவம் நேர்ந்தது. பாஞ்சாலத்திலே இரண்டு சீக்கிய சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு பாடியாலா, நாபா என்று பெயர். இவ்விரண்டு சமஸ்தானங்களின் அதிபதிகளுக்குள் தீராத பகைமை. இறுதியில் நாபா மகாராஜாவை இந்திய அரசாங்கத்தார் சிம்மாசனத்திலிருந்து விலக்கிவிட்டார்கள். இம்மாதிரி இந்திய அரசாங்கத்தார் செய்தது சீக்கியர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கிற்று. அவர்கள் இதற்கு விரோதமாக நாபாவிலும், வெளியேயும் கிளர்ச்சி செய்தார்கள். மகாராஜாவை விலக்கியபின், நாபாவிலே அரசியல் நிர்வாகம் செய்ய நியமிக்கப்பட்டவர் ஒரு இங்கிலீஷ்காரர். சீக்கியர்கள், நாபா சமஸ்தானத்தில் ஜெயிதோ என்ற இடத்தில் நடத்தவேண்டிய மதசம்பந்தமான விழாவொன்றை இவர் தடுத்துவிட்டார். இதைச்சீக்கியர்கள் ஆக்ஷேபித்தார்கள். தடுத்தவிழாவைக் கொண்டாட வேண்டுமென்ற நோக்கத்தோடு குருத்துவாரக் கமிட்டி சிறு சிறு கூட்டங்களாக சீக்கியத் தொண்டர்களை ஜெயிதோவுக்கு அனுப்பிவந்தது.

இந்தக்கூட்டங்கள் நடுவே தடுக்கப்பட்டன. போலீஸ்காரர்கள் அவர்களை அடித்தும், பயமுறுத்தியும், கைது செய்தும், பக்கத்திலிருந்த காட்டுக்குள்ளே கொண்டுபோய் விட்டுவிட்டு வருவதுமாக இருந்தார்கள். அடிக்கடி இந்தத்தடியடிகளைப்பற்றி நான் பத்திரிகைகளில் படித்தேன். டில்லியில் நடந்த விசேஷ காங்கிரசுக்குப்பின், இன்னொரு அகாலிஜாதா நாபாவுக்குள் செல்லப்போவதாகக் கேள்விப்பட்டேன். நானும் கூடவே போய் நடப்பதை தெரிந்துகொள்ள எண்ணினேன். அகாலியர்களும் என்னைப் பெரிதும் வேண்டிக்கொண்-

டார்கள். அதை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டேன். ஜெயிதோ டில்லிக்கு வெகு சமீபத்தில் இருந்ததால், இரண்டொரு நாட்கள்தான் தாமதமாகும், பாதகமில்லையென்று எண்ணினேன். நானும் ஏ. டி. கித்வானியும் சென்னை கே. சந்தானமும் போனோம். நாங்கள் கூடியவரையில் ரயிலில் சென்று, பிறகு வண்டியில் நாபாசமஸ்தானத்தைத்தாண்டும் பொழுது ஜாதாவோடு சேர்ந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் நாங்கள், கட்டைவண்டியில் பிரயாணம்செய்து, ஜெயிதோ போய்ச் சேர்ந்தோம். எங்களுக்குப் பின்னால் கூட்டம் வந்துகொண்டிருந்தது. ஜெயிதோ வந்து சேர்ந்ததும், போலீசார் கூட்டத்தைத் தடுத்துவிட்டார்கள். உடனே என்பேரில், இங்கிலீஷ் அதிகாரி கையெழுத்திட்ட உத்திரவு ஒன்று சர்தரா செய்யப்பட்டது. நான் நாபாவுக்குள் நுழையக்கூடாதென்றும் ஏற்கெனவே நுழைந்திருந்தால், உடனே நாபாவைவிட்டு வெளியே செல்லவேண்டுமென்றும் உத்திரவில் கண்டிருந்தது. இதே மாதிரி உத்திரவுகள் கித்வானியின் பேரிலும், சந்தானத்தின் பேரிலும் சாதரா செய்யப்பட்டன. அவர்களுடைய பெயர்கள் நாபா அதிகாரிகளுக்குத் தெரியாததால், அவர்களுடைய பெயர்கள் உத்திரவில் குறிப்பிடப்படவில்லை. நானும் என் தோழர்களும் அகாலியர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்லவென்றும், வேடிக்கை பார்க்க வந்தவர்களென்றும் நாபா சமஸ்தானத்தின் சட்டமெதையும் மீறுவது எங்கள் நோக்கமல்லவென்றும் போலீஸ் அதிகாரிக்குத் தெரிவித்துக்கொண்டோம். மேலும் நாங்கள் ஏற்கெனவே, நாபாவில் இருப்பதால், நாபா மண்ணில் காலடி வைக்கக் கூடாது என்று சொல்லுவதில் அர்த்தமில்லை. நாங்கள் திடீரென்று ஆகாயத்தில் மறைந்துபோக முடியுமா? ஜெயிதோவிலிருந்து ரயில் புறப்படுவதற்கு இன்னும் 4, 5 மணி நேரம் செல்லும்; எனவே அதுவரைக்கும் நாபாவில் நாங்கள் இருக்கத் தீர்மானித்திருப்பதாகப் போலீஸ் அதிகாரியிடம் தெரிவித்துக்கொண்டோம். உடனே எங்களைக் கைது செய்து சிறைச்சாலைக்குக் கொண்டுபோனார்கள். எங்களைக் கொண்டுபோன பிறகு ஜாதாவை வழக்கமாக நடத்துவது போல், இந்தத் தடவையும் செய்துவிட்டார்கள்.

பகல் முழுதும் நாங்கள் "லாக்கப்" பில் இருந்தோம். மாலையில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு நடத்திக்கொண்டு

போகப்பட்டோம். என்னுடைய இடது கைக்கும் சந்தானத்தின் வலது கைக்கும் சேர்த்து விலங்கு பூட்டி, நடுவிலே ஒரு சங்கிலியை வைத்து, அதை ஒரு போலிசார் பிடித்துக் கொள்ள, எங்களை நடத்திச் சென்றார்கள். கித்வானிக்கும், விலங்கும் சங்கிலியும் போட்டு எங்களுக்குப் பின்னே நடத்திக் கொண்டு வரப்பட்டார். ஜெயிதோ தெருவில் எங்களை இவ்வாறு கொண்டுபோனது நாயைச்சங்கிலிபோட்டு அழைத்துச் செல்வது போலிருந்தது. முதலில் எங்களுக்கு மிகவும் ஆத்திரம்; ஆனால், சீக்கிரம் வேடிக்கையாக மாறிவிட்டது. மொத்தத்தில் சந்தோஷமான அனுபவமாகவே அதைக்கருதினோம். ஆனால் அன்றிரவின் அனுபவம் சுகமாக இருக்கவில்லை. கூட்டமாகக் கூடி இருந்தது மூன்றாவது வகுப்பு அறை. ரயிலோ வேகமாக ஓடவில்லை. நடு இரவில் வேறு ரயிலுக்கு மாற வேண்டியிருந்தது. கடைசியாக நாபாச் சிறையில் வாசம்! நாங்கள் கைதுசெய்யப்பட்ட காலத்திலிருந்து மறுநாள் முற்பகல்வரை, எங்களுடைய விலங்கையும், கனமான சங்கிலியையும் அவர்கள் எடுக்கவே இல்லை. மற்றவருடைய ஒத்தாசையின்றி எங்களில் இன்னொருவர் நகரமுடியாது; ஜோடியாகத்தான் எதுவும் செய்யவேண்டும். ஒரு இரவு முழுதும் மறுநாள் பகலில் பாதியும் இவ்வாறு மற்றொருவரோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டுக் காலங்கழிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. இஃது மறுமுறை விரும்பத்தக்க வேடிக்கையல்ல.

நாபா சிறையில் மூவரும் ஒரே அறையில் இருந்தோம். மகா மோசமான அறை. மிகவும் சிறியது. ஒரே ஈரம். நிமிர்ந்து நின்றால் உச்சி இடிக்கும். இரவில் நாங்கள் தரையில் படுத்து உறங்கினோம். நள்ளிரவில் திடுக்கிட்டு விழித்துக் கொள்வேன். என்முகத்தின் பேரில் எலியோ சுண்டெலியோ ஓடுவதைக் கண்டு நடுங்குவேன்.

இரண்டு மூன்று நாட்களுக்குப்பின், எங்களை விசாரணை கோர்ட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். ஒவ்வொருநாளும் விசாரணை மிகவும் வேடிக்கையாக தென்னாலிராமன் கதை போல் நடக்கும். விசாரித்த நீதிபதிக்கோ எழுத்து வாசனை கூட இருக்காது என்று தோன்றிற்று. அவருக்கு நிச்சயமாக இங்கிலீஷ் தெரியாது. சமஸ்தான பாஷை உருதுவாவது சரியாக எழுதத் தெரியுமோ என்பதும் சந்தேகம்தான். ஒருவாரம் நாங்கள் அவரைக் கவனித்துவந்தோம். அவர்

தமது சொந்தக் கையால், ஒருவரிகூட எழுதவில்லை. ஏதாவது எழுதவேண்டுமானால், கோர்ட் குமாஸ்தாவை யெழுதும் படியாக அவர் கட்டளையிடுவார். நாங்கள் சில்லரை சில்லரையாகப் பல மனுக்கள் செய்துகொண்டோம். ஆனால், அவர் அவ்வப்போது அந்த மனுக்களின் பேரில், யாதொரு உத்தரவும் செய்வதில்லை. அந்த மனுக்களைத் தூக்கிக் கொண்டுபோவார். யாரோ ஒரு வரி எழுதிய எழுத்தோடு மனுக்கள் மறுநாள் திரும்பிவரும். நாங்கள் எதிர்க்கட்சியாடவே இல்லை. ஒத்துழையாமை இயக்கக் காலத்தில், எதிர்வாதம் செய்யாமல் சிறை செய்வது பழக்கமாகப் போயிருந்தது. நாபா ஸமஸ்தானத்தில் நியாயமாக எதிர்வாதம் செய்திருக்கலாம். ஆயினும் அவ்வாறு செய்வது கேவலமென்று எங்களுக்குத்தோன்றிற்று. நடந்த சம்பவங்களை வர்ணித்தும் பிரிட்டிஷ் அதிகாரியின்கீழ் நாபா சமஸ்தானத்து நிர்வாகம் எவ்வாறு நடைபெற்றுவருகிறது என்பதைப்பற்றி என் அபிப்பிராயத்தை உணர்த்தும் நீண்டவாக்குமூல மொன்றைத் தாக்கல் செய்தேன்.

எங்கள் வழக்கோ மிகவும் எளிதானது. என்றாலும் ஒவ்வொரு நாளும் முடிவில்லாமல், ஒத்திப்போடப்பட்டுவந்தது. திடீரென்று ஒருநாள் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அன்று பிற்பகல் கோர்ட் கலைந்ததும், எங்களை அந்தக் கட்டிடத்திலேயே நிறுத்தி வைத்திருந்தார்கள். மாலை 7 மணியிருக்கும். இன்னொரு அறைக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு மேஜை. மேஜைக்கு அருகே ஒருவர் வீற்றிருந்தார். அவரைச்சுற்றி 4, 5 பேர்களிருந்தார்கள். எங்களை ஜெயிதோவில் கைது செய்த எங்களுடைய பழைய நண்பர் போலீஸ் அதிகாரி, அங்கே பிரசன்னமாயிருந்தார். நாங்கள் போனதும் அவர் எழுந்து வாக்குமூலமொன்றைக் கொடுக்கத் துவக்கினார். நாங்கள் எங்கே இருக்கிறோம்? என்ன நடக்கிறது? என்று கேட்டேன். அது கச்சேரியென்றும் சதியாலோசனைக் குற்றத்திற்காக நாங்கள் விசாரிக்கப்படுவதாயும் சொன்னார்கள். இது ஒரு புதுக் கேஸ். இதுவரையிலும் நாபா சமஸ்தானத்தில் பிரவேசிக்கக்கூடாது என்ற உத்தரவை மீறியதாக எங்கள் பேரில் வழக்கு. இப்பொழுதோ, புதிதாக சதியாலோசனைக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. உத்தரவை மீறியதற்குத் தண்டனை ஆறுமாத காலம்தான். ஆனபடியால் அந்தத் தண்டனை போதாதென்று அதிகாரிகள்

கருதி, புதிதாக பெரிய குற்றமொன்றைக் கண்டுபிடித்தார்கள் போலும்! சதியாலோசனைக்கு மூன்று பேர்கள் போதாது, என்பதற்காக எங்களுக்குத் துளிக்கூட சம்பந்தமில்லாத நாலாவது ஆள் ஒருவர் கைது செய்யப்பட்டு எங்களுடன் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். இவர் ஒரு சீக்கியர். எங்களுக்கு முன்பின் பழக்க மில்லாதவர். ஜெயிதோவுக்கு நாங்கள் வரும்பொழுது, இவரை வயல் காடுகளில் பார்த்தோம். அவ்வளவுதான்.

முன்பின் ஆலோசனையின்றி திடீரென்று சதியாலோசனை வழக்கை நாபா அதிகாரிகள் எங்கள்பேரில் கொண்டு வந்தவுடனே, என் வக்கீல் புத்தி திடுக்கிட்டுப் போயிற்று. வழக்கோ முற்றிலும் பொய்யான வழக்காகும். என்றாலும் சட்ட முறைப்படி நடவடிக்கைகளேனும் சரியாயிருக்கவேண்டாமா? இந்த வழக்கைப்பற்றி எங்களுக்கு யாதொரு நோட்டீஸும் கொடுக்கப்படவில்லை யென்றும், நாங்கள் எதிர்வாதம் செய்ய ஏற்பாடுகள்செய்யவும் கூடுமென்றும் நீதிபதிக்கு நான் தெரிவித்துக்கொண்டேன். ஆனால், இதைப்பற்றி அவர் கவலைப்படவே இல்லை. அது 'நாபா வழி' போலும்! நாங்கள் எதிர்வாதஞ் செய்வதற்காக, வக்கீல் ஒருவரை அமர்த்த வேண்டுமானால், நாபாவில்தான் யாராவது ஒருவரை அமர்த்த வேண்டும் என்று சொல்லப்பட்டோம். சமஸ்தானத்துக்கு வெளியே இருந்து வக்கீல் ஒருவரை நான் வரவழைக்கக்கூடு மென்று நீதிபதிக்கு நான் தெரிவித்துக்கொண்டபொழுது, அவ்வாறு செய்வது, நாபா சட்டத்துக்கு ஏற்றதல்லவென்று அவர் சொல்லிவிட்டார். நாபா நடவடிக்கைகளில் இன்னும் சில விநோதங்களை நாங்கள் தெரிந்துகொண்டோம். அதிக வெறுப்பு உண்டாயிற்று. தாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்றும், நாங்கள் விசாரணை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளப்போவதில்லை யென்றும், நீதிபதியிடம் நாங்கள் தெரிவித்துக் கொண்டோம். ஆனால் இந்தத் தீர்மானத்துக்கு முழுதும் இணங்கி, என்னால் நடக்கமுடியவில்லை. எங்களைப்பற்றியோ கோர்ட்டில் நகைக்கத்தக்க பொய்கள் சொல்லப்பட்டன. இதைக் கேட்டுக்கொண்டு சும்மாயிருக்க முடியுமா? எனவே, நடுவே நடுவே சாக்ஷிகளைப்பற்றி எங்கள் அபிப்பிராயத்தைச் சுருக்கமாகவும், குறிப்பாகவும் தெரிவித்துக்கொண்டோம். நடந்ததை விஸ்தாரமாக எழுதி வாக்குமூலமொன்றைத் தயாரித்து, அதை நாங்கள் கோர்ட்டா

ருக்குச் சமர்ப்பித்தோம். எங்களுடைய சதியாலோசனை வழக்கை விசாரணைசெய்த இரண்டாவது நீதிபதி, அவர் முந்தின போர்வழியைக் காட்டிலும் கொஞ்சம் புத்திசாலி ; படித்தவருங்கூட.

இரண்டு வழக்குகளும் நடந்துகொண்டே இருந்தன. தினமும் கச்சேரிக்குப் போகுந் தருணத்தை நாங்கள் மகிழ்ச்சியுடன் எதிர் பார்த்துக்கொண்டிருப்போம். ஏனெனில் எங்களுடைய துர்க் கந்தம் வீசும் கேவலமான அறையிலிருந்து, அந்தக் காலத்துக்கேனும் விடுதலை யேற்படாதா என்று எண்ணுவோம். நடுவே நாபா நிர்வாகியின் சார்பாக, சிறை ஸுபெரண்ட் எங்களை வந்து பார்த்தார். நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, நாபாவி லிருந்து போய்விடுவதாக எழுத்தில் உறுதி கொடுத்தால், எங்கள்பேரிலிருந்த நடவடிக்கைகள் நிறுத்திக்கொள்ளப்படும் என்று ஸுபெரண்ட் சொல்லிப் பார்த்தார். மன்னிப்புக் கேட்டுக்கொள்வதற்கு நாங்கள் யாதொன்றும் செய்யவில்லையென்றும் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டிய போர்வழி நாபா சமஸ்தானத்து அதிகாரிதானென்றும் நாங்கள் பதில் சொல்லியனுப்பினோம். மேலும் எவ்வித உறுதி மொழியும் கொடுக்க நாங்கள் தயாராக விருக்கவில்லை.

எங்களைக் கைது செய்து 15 நாளிருக்கும். அப்பொழுது இரண்டு விசாரணைகளும் முடிவு பெற்றன. நாங்கள் எதிர் வாதம் செய்யாவிட்டாலும், ப்ராஸிகூஷன் தரப்பில் வழக்கை ருஜுப்படுத்த இவ்வளவு நாட்கள் எடுத்துக்கொண்டார்கள். ஏதாவது சிறு தகவல் நேர்ந்தாலும், உடனே விசாரணை ஒத்திப் போடப்படும். மேலதிகாரிகளைக் கலந்துகொண்ட பிறகு தான், விசாரணை நடைபெறும். சமஸ்தானத்தை நிர்வாகம் செய்து வரும் ஆங்கில உத்தியோகஸ்தரைக் கலந்துகொண்டு தான், எதுவும் நடக்க வேண்டும். ப்ராஸிகூஷன் தரப்புக் கட்சி முடிந்த கடைசி நாளில், நாங்கள் எங்கள் வாக்குமூலங்களை எழுத்தில் எழுதிக் கோர்ட்டாருக்குக் கொடுத்தோம். முதல் கோர்ட்டார் வாயிதாப் போட்டார்கள். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த நீதிபதி கோர்ட்டுக்கு வந்து, உருது பாஷையில், எழுதப்பட்டிருந்த நீண்டதொரு தீர்ப்பைக் கொண்டுவந்தார். நடுவே யிருந்த சிறிது நேரத்திற்குள் அவர் இந்தத் தீர்ப்பை எழுதியிருக்க முடியாது. எங்கள் வாக்குமூலங்களைக் கொடுப்பதற்கு முன்னமேயே, அவர் இந்தத் தீர்ப்பை எழுதியிருக்க வேண்டும். நீதிபதி தீர்ப்பைப் படிக்க

வில்லை. நாபாவை விட்டுப் போகவேண்டும் என்ற உத்தரவை நாங்கள் மீறியதற்காக எங்களுக்கு ஆறு மாதம் சிறைதண்டனை என்று மட்டும் அவர் சொன்னார்.

சதியாலோசனை வழக்கில் எங்களுக்கு 18 மாதமோ அல்லது இரண்டு வருஷமோ சிறை வாசம் கிடைத்தது. இது வேறு துண்டான தண்டனை. முன் ஆறு மாதத்தோடு சேர்ந்ததல்ல. மொத்தத்தில் இரண்டு அல்லது இரண்டரை வருஷமோ கிடைத்தது.

எங்களுடைய விசாரணை முழுவதிலும் ஆச்சரியமான நிகழ்ச்சிகள் பல நேர்ந்தன. அதிலிருந்து இந்திய சமஸ்தானங்களின் நிர்வாகத்தைப் பற்றிய உண்மைகள் எங்களுக்குத் தெரிந்தன. அதிலும் இந்திய சமஸ்தானத்தை ஒரு இங்கிலீஷ் உத்தியோகஸ்தர் நிர்வாகம் செய்கையில், என்ன நேருமென்பது எங்களுக்குத் தெரிந்தது. முழுதும் போலி நடவடிக்கை. இந்தக் காரணம் பற்றியோ என்னவோ, பத்திரிகையைச் சேர்ந்த யாரும் கோர்ட்டுக்குள் அனுமதிக்கப்படவில்லை. தங்களுக்கு இஷ்டம்போல் போலீஸார் காரியத்தைச் செய்தார்கள். ஜட்ஜைப் பற்றி அவர்களுக்கு இலட்சியமே இல்லை. அவர்கள் நீதிபதியின் உத்திரவுகளுக்கு அடங்கி நடக்கவுமில்லை. அந்தப் பரிதாபமான நீதிபதி, இதையெல்லாம் வணக்கத்துடன் பொறுத்துக்கொண்டிருந்தார். இவ்வாறு அவர் ஏன் செய்ய வேண்டும் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. பல தடவைகளில் இதைச் சகிக்க முடியாமல், நீதிபதியின் கட்டளைக்குக் கீழ் படிந்து போலீஸார் நடக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். சில சமயங்களில் போலீஸார் மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து சில தஸ்தாவேஜுகளை வெடுக்கென்று பிடுங்கிக்கொள்வார்கள். ஆனால் நீதிபதியோ ஒன்றுஞ் செய்வதற்கு வகை யில்லாமற்போய் விழிப்பார். கச்சேரியில் ஒழுங்கை நிறுவ, அவரால் முடிவதில்லை. அந்தச் சமயங்களில் நாங்கள் அவருக்கு ஒத்தாசை செய்து, அவருடைய வேலையைச் செய்வோம். நீதிபதியின் நிலைமையோ மிகுதியும் துக்ககரமான நிலைமையாகும். அவருக்கு போலீஸைக் கண்டால் பயம். எங்களைக் கண்டும் பயந்துபோனார் என்று தோன்றிற்று. ஏனெனில் நாங்கள் கைது செய்யப்பட்டதைப்பற்றி, பத்திரிகைகள் கூப்பாடு போட்டன. எங்களைப் போன்ற சிறிது பிரபல ராஜீய வாதிகளின் கதியே இப்படி யிருக்க

மாயின், ஊர், பெயர் தெரியாதவர்கள் அகப்பட்டுக்கொண்டால், என்ன நேரும் என்று எப்படி சொல்ல முடியும் ?

இந்திய சமஸ்தானங்களைப்பற்றி சிறிதளவு என் தகப்பனருக்குத் தெரியும். எனவே நாபாவில் நான் எதிர்பாராத வகையில் கைதுசெய்யப்பட்டதைக் குறித்து அவர் மிகுதியும் கலங்கிப்போனார். கைது செய்யப்பட்ட செய்திமட்டும் அவருக்குத் தெரியும். மற்றைய விவரங்களெதுவும் துளிகூட வெளியேவரவில்லை. துக்க மேலீட்டால், என்னைப்பற்றிச் செய்தி தெரிந்துகொள்வதற்காக தகப்பனர் வைஸ்ராய்க்கும் தந்திகொடுத்துப் பார்த்தார். அவர் என்னைச் சிறையில் பேட்டி காண முடியாதவாறு இடையூறுகள் செய்யப்பட்டன. ஆனல் இறுதியில் என்னைச் சிறையில் பேட்டிக்காண அவருக்கு அனுமதி கிடைத்தது. நான் எதிர்வாதம் செய்யாமையால், அவர் எனக்கு எந்த வகையிலும் ஒத்தாசை செய்ய முடியாமற் போயிற்று. அலகாபாத்துக்குப் போய் என்னைப் பற்றி கவலைப்படாமலிருக்குமாறு, அவரைப்பெரிதும் வேண்டிக்கொண்டேன். அவர் திரும்பிப்போனார். ஆனல் எங்களுடைய வக்கீல் தோழரின் ஒருவரான கபிலதேவ மாளவியாவை, நாபாவில் வைத்துவிட்டு விசாரணையைக் கவனித்து வரும்படி, அவரிடம் சொல்லிவிட்டுச் சென்றார். நாபா சமஸ்தானத்து கோர்ட்டு நடவடிக்கைகளால் கபிலதேவரின் சட்டஞானமும் கோர்ட்டு நடைமுறை அனுபவமும் அதிகரித்திருக்க வேண்டும்! நடுக் கோர்ட்டிலேயே, போலீஸார் அவரிடமிருந்து சில தஸ்தாவேஜுகளைப் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யத் துணிந்தார்கள்.

பெரும்பான்மை இந்தியச் சமஸ்தானங்களின் நிலைமை மிகவும் பிற்போக்கானது. அவைகளில் ஏதேச்சாதிகாரந்தான் காணமுடியும். சாமர்த்தியமும், நல்ல குணங்களும்கூட அவர்களிடம் காணமுடியாது. சமஸ்தானங்களில் எத்தனையோ விநோத சம்பவங்கள் நடைபெறும். ஆனல் அவைகள் வெளிக்கு வரமாட்டா. அவர்களுடைய திறமைக் குறைவினல், சில சமயங்களில் ஜனங்களுக்கு ஒருவகையில் நன்மையேற்பட்டாலும் ஏற்படலாம். அவர்கள் பலவீனர்களாக இருக்கின்றமையால், நிர்வாகத்திலும் பலவீனம் நிரம்பி ஜனங்களின் சுமை சிறிதுகுறையக்கூடும். இதனல் கொடுங்கோலாட்சி சகிக்கத்தக்கதென்பதல்ல. அதன் கொடுமை ஒருவாறு மந்தமாகின்றது. சமஸ்தான நிர்வாகம் பிரிட்டிஷ் உத்தியோகஸ்த

-ரிடம் போய்ச் சேர்ந்தவுடன், விநோதமான பலன் ஒன்று தோன்றிற்று. பழைய கொடுங்கோன்மை இருந்தது. பழைய சட்டங்களும், நடவடிக்கைகளும் அப்படியே இருந்தன. பழைய தடைகள் யாவும் மாற்றப்படவே இல்லை. தனிப் பேர்வழியின் சுதந்திரத்தைப்பற்றிக் கவலையே கிடையாது. ஆனால், முக்கியமான ஒரு அம்சத்தில் மாறுதல் ஏற்பட்டது. நிர்வாகம் திறமையடைந்து பழைய கொடுமைகளைக் கடுமை யாக்கி விடுகின்றது. பழைய வழக்கங்களையும் சட்டங்களை யும் சிறிதுசிறிதாகப் பிரிட்டிஷ் நிர்வாகி மாற்றிவைக்கக்கூடும். ஏனெனின், வியாபாரச் செழிப்புக்கும், திறமையான அரசி யல் நிர்வாகத்துக்கும் குறுக்கே இவைகள் நிற்கின்றன என்ப தில் சந்தேகமில்லை. ஆனால், ஆரம்பத்திலே இந்தப் பழைய சட்டங்களை எவ்வளவுவரையில் உபயோகப்படுத்தித் தங்கள் ஆளுகையை வலுப்படுத்திக்கொள்ள முடியுமோ, அவ்வளவு வகையில் உபயோகப்படுத்திக்கொள்ள பிரிட்டிஷ் நிர்வாகிகள் பின்வாங்கினதே இல்லை. கடுமையான கொடுங்கோலாட்சி ஸ்தாபிக்கப்படுகின்றது.

நாபாவில் இவ்வாறு நடப்பதைக்கண்டேன். நாபாமன் னனை விலக்கிய பின்னர், அந்தச் சமஸ்தானத்தின் நிர்வாகம் ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் கைக்கு வந்து சேர்ந்தது. அவர் ஐ. சி. எஸ். கூட்டத்தைச் சேர்ந்தவர். இந்திய அரசாங் கத்துக்குக் கீழ்ப்படிந்து அவர் நடக்கவேண்டுமென்பதைத் தவிர, அவருக்குப் பூர்ணமான யதேச்சாதிகாரங்கள் அளிக் கப்பட்டிருந்தன. ஆனால் சில்லரை உரிமைகள்கூட எங்க ளுக்கும் கிடைக்க முடியாமற்படிக்கு செய்ய, அவர் நாபாவின் சட்டங்களைச் சுட்டிக்காட்டி சாக்குப்போக்கு சொல்லுவார். எனவே, கொடுங்கோலனுடைய கருணையும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. பழைய கர்நாடக முறையின் சலுகையும் எங்களுக்கு ஏற்படவில்லை.

எங்களுடைய விசாரணை முடிந்தது. நாங்கள் தண்டிக் கப்பட்டோம. தீர்ப்புகளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. நீண்டகாலம் சிறைவாசம் என்று கேட்டவுடனே, சிறிது சாவதானமாக விருக்கவேண் டும் என்று எண்ணினேம். தீர்ப்புகளின் நகல்கள் எங்களுக்கு வேண்டும் என்றேம். மாமூல்படி மனுச் செய்துகொள்ள லாம் என்று சொல்லிவிட்டார்கள்.

அன்றைக்கு மாலையில் சிறையில் சூப்ரண்டு எங்களைக் கூப்பிட்டனுப்பினார்; நாங்கள் போனோம். எங்களுடைய தண்டனைகளை ஏதோ ஒரு பிரிவின் கீழ் நிறுத்தி வைத்திருப்பதாகச் சமஸ்தான நிர்வாகியின் உத்தரவு ஒன்றை காண்பித்தார். உத்தரவில் யாதொரு நிபந்தனையும் காணப்படவில்லை. சட்டப்படி பார்த்தால், அந்த உத்தரவுப்படி உங்களுடைய தண்டனை முடிவடைந்துவிட்டது என்று சொல்லவேண்டும். சூப்ரண்டு அடுத்தாற்போல இன்னொரு உத்தரவைக் காண்பித்தார். நாங்கள் நாபாவைவிட்டு வெளியே போகவேண்டுமென்றும், விசேஷ அனுமதிபெற்றாலொழிய சமஸ்தானத்துக்குள் திரும்பி வரக்கூடாதென்றும் அந்த உத்தரவில் கண்டிருந்தது. அந்த இரண்டு உத்தரவுகளுக்கும் நகல் காப்பிகள் கேட்டேன். ஆனால் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். எங்களை ரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய், அங்கே விடுதலை செய்தார்கள். எங்களுக்கு நாபாவில் ஒருவரையும் தெரியாது. வழக்கம்போல் அன்றிரவும் நகரக் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன. அம்பாலாவுக்கு ஒரு வண்டி அப்பொழுதுதான் புறப்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டோம். இந்த ரயிலில் ஏறி அம்பாலாவுக்குப் போய்ச் சேர்ந்தோம். அம்பாலாவிலிருந்து நான் டில்லிக்குச் சென்று, அங்கிருந்து அலகாபாத்துக்குப் போனேன்.

அலகாபாத்திலிருந்தபடியே நாபா சமஸ்தான நிர்வாகிக்கு ஒரு கடிதம் எழுதினேன். "தங்களுடைய இரண்டு உத்தரவுகளுக்கும் நகல்கள்வேண்டும். ஏனெனின், எங்களுக்கு உண்மையான நிலைமை இன்னதுதான் என்று தெரியவேண்டும், இரண்டு தீர்ப்புகளுக்கும் காப்பிகள் வேண்டும். தயவுசெய்து அனுப்புவீர்களாக" என்று அவருக்குக் கடிதம் எழுதினேன். எதையும் அனுப்பமுடியாது என்று சொல்லிவிட்டார். நான் அப்பீல் செய்துகொள்ள வேண்டியிருக்குமென்று எழுதிப் பார்த்தேன். அப்பொழுதும் அவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

எத்தனையோ முயற்சிகள் செய்து பார்த்தேன். எனக்கும் என் தோழர்களுக்கும் இரண்டரை வருடம் சிறைவாசம் அளித்த இந்தத் தீர்ப்புகளை வாசிக்க முடியாமலே போய்விட்டது. இன்னும் இந்த தண்டனைகள் என்பேரில் தொங்கிக்

கொண்டிருப்பதால் அதை நகர அதிகாரிகளும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் இஷ்டப்பட்டபோது அமுலுக்குக் கொண்டு வரப்படலாம்.

இந்த விநோதமான வகையில் நாங்கள் மூவரும் விடுதலை பெற்றோம். ஆனால் சதியாலோசனை வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்ட நாலாவது பேர்வழியான சீக்கியருக்கு என்ன நேர்ந்தது என்று என்னால் அறியக் கூடவில்லை. அநேகமாக அவரை அதிகாரிகள் விடுதலை செய்யாமலிருக்கலாம். அவருக்குச் செல்வாக்கு உள்ள நண்பர்களும் இல்லை. பொதுஜனங்களும் அவரைப்பற்றி சிரத்தை யெடுத்துக் கொள்ள வில்லை. எனவே மற்றும் பலரைப் போல, திக்கற்ற நிலைமையில், அவர் சிறையில் இருந்திருக்கவேண்டும். ஆனால், நாங்கள் அவரை மறக்க வில்லை. எங்களால் முடிந்ததை, (அது மிகவும் குறைந்ததாயிருந்தாலும்) நாங்கள் செய்தோம். அவருடைய வழக்கில் குருத்துவாரக் கமிட்டி சிரத்தை யெடுத்துக்கொண்டதாக என் ஞாபகம். அவர் "கொமகாட்ட மாரு" என்ற ஜப்பானியக் கப்பலில் கானடாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து கல்கத்தாவிலிறங்கி, சர்க்காருக்கு விரோதமாகக் கலகம் செய்ததற்காக தண்டிக்கப்பட்டவர்களில் ஒருவர் என்றும் அப்பொழுதுதான் அவர் சிறையினின்றும் நீண்ட காலத்திற்குப் பிறகு வெளிவந்திருந்தார் என்றும் எங்களுக்குத் தெரிந்தது. அப்பேர்ப்பட்டவர்களை வெளியில் விட்டிருக்கப் போலீசார் சம்மதிப்ப தில்லை. எனவே, அவரை எங்களோடு சதியாலோசனையில் சேர்த்தார்கள்.

கித்வானி, சந்தானம், நான் மூவரும் நாபா சிறையிலிருந்து, விரும்பத்தகாத ஒரு தோழனை எங்களுடன் கூட்டிக் கொண்டு வந்தோம். பித்தவாத சுரத்தைக் கூட்டிக்கொண்டு வந்தோம். எனக்கு ரொம்பக் கொடுமையாகவிருந்தது. ஆபத்து வந்துவிடுமோ, என்று பயந்தார்கள். என்றாலும், மூன்று பேருக்குள் என்னுடைய காய்ச்சல்தான் குறைந்த ரகமாகும். மூன்று நான்கு வாரங்கள் நான் படுக்கையிலிருந்தேன். மற்ற இருவரும் பல மாதங்கள் இந்தக் காய்ச்சலுக்கு ஆட்பட்டுக்கிடந்தார்கள்.

இந்த நாபா சம்பவத்துக்கு மற்றோர் தொடர்ச்சி நேர்ந்தது. ஆறுமாதத்துக்குப் பின்னர் நேர்ந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். காங்கிரசின் பிரதிநிதியாக குருத்துவாரக் கமிட்டிக்கு ஒத்தாசை செய்யும்பொருட்டு, கித்வானி அமிருத

சரஸில் தங்கியிருந்தார். ஜெயிதோவுக்கு 500 பேர்கள் கொண்ட சிறப்பான ஒரு ஜாதாவை அனுப்பிவைக்கவேண்டு மென்று கமிட்டியார் தீர்மானம் கொண்டார்கள். இந்த ஜாதாவோடு நாபா எல்லை வரையிலும் கூடப்போக, கித்வானி எண்ணங்கொண்டார். நாபாவுக்குள் பிரவேசிக்க அவருக்கு விருப்பமே கிடையாது. பக்தர்களின் திருக்கூட்டம் நாபா எல்லை வந்து சேர்ந்ததும், போலீசார் அவர்களைச் சுட்டார்கள்: பலர் இறந்தனர். இன்னும் பலர் பலத்த காய மடைந்தனர். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கு, கித்வானி முயன்று கொண்டிருக்கையில், போலீசார் அவர் பேரில் பாய்ந்து, அவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் விட்டார்கள். நடவடிக்கைகள் ஒன்றுமே கிடையாது. சுமார் ஒரு வருஷம் வரையிலும் அவர் சிறையில் வைக்கப் பட்டிருந்தார். அவருடைய தேக சுகம் உடைந்து போகும் படியான தறுவாயில் அவரை விடுதலை செய்தார்கள்.

கித்வானியைக் கைது செய்து சிறையில்வைத்தது நிர்வாக அதிகாரியின் யதேச்சாதிகாரத்தின் கொடிய தாண்டவமாகும். நாபாவில் இன்னும் அதே இங்கிலீஷ் அதிகாரி நிர்வாகியாயிருந்தார். "நீங்கள் இவ்வாறு கித்வானியை ஏன் நடத்தவேண்டும்" என்று நான் அவருக்கு எழுதினேன். அனுமதியில்லாமல், நாபா சமஸ்தானத்து எல்லைக்குள் நுழையக் கூடாது என்று போட்டிருந்த உத்தரவை மீறியதற்காக, கித்வானி சிறையில் வைக்கப்பட்டார் என்று அவர் எனக்குப் பதிலெழுதினார். இந்த தர்க்க முறையை நான் ஆக்ஷேபித்தேன். மேலும் காயம் பட்டவர்களுக்கு ஒத்தாசை செய்பவரைக் கைது செய்யலாமாவென்றும் அந்த உத்தரவை எனக்கு அனுப்பவேண்டும், அல்லது அதைப் பிரசுரிக்க வேண்டும் என்றும் நான் நாபா நிர்வாகிக்கு எழுதிக்கேட்டேன்.

அவர் பதில் கூற மறுத்துவிட்டார். நானும் நாபாவுக்குப் போய், கித்வானியை நிர்வாகி நடத்தியதுபோல என்னையும் நடத்தும்படியாக அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென எண்ணினேன். தோழரைக் கைவிடக்கூடாது என்பது என் எண்ணம். ஆனால் நண்பர்கள் பலர் வேறுவிதமான யோசனைசொல்லி அவ்வாறு நான் செய்யக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். நண்பர்களுடைய யோசனையின் கீழ் நான் அடைக்கலம் புகுந்துகொண்டேன் என்

னுடைய பலவீனத்தை மறைத்துக்கொள்ள, அதை யொரு சாக்காக வைத்துக்கொண்டேன். நாபாச் சிறைக்கு மறு முறைசெல்ல விரும்பாததே என் கோழைத் தனத்திற்குக் காரணம். ஒரு தோழரைக் கைவிட்டதற்காக, நான் இன்னும் வருந்திக்கொண் டிருக்கிறேன். தைரியத்தைக் காட்டிலும் விவேகம் உயர்ந்தது என்ற சாக்கு உலகத்தில் சகஜம்.

## XVII

## காகிநடா காங்கிரஸும், மௌலானா மகமதலியும்.

1923-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் காகிநடாவில் காங்கிரஸ் கூடிற்று. மௌலானா மகமது அலி தலைமை வகித்தார். அவருடைய வழக்கப்படியே நீண்ட பிரசங்கத்தைப்படித்தார். ஆனால் அது ருசிகரமாயிருந்தது. முஸ்லீம்களுக்குள் ராஜீய வகுப்புணர்ச்சிகள் வந்தவரலாற்றை அவர் வர்ணித்தார். 1908-ம் ஆண்டில் ஆகாகான் தலைமையில் முஸ்லீம் தூது கோஷ்டியார் வைசிராயிடம் பேட்டிகண்ட பிறகு தனித்தொகுதிகள் ஏற்பட்ட கதையை விஸ்தாரமாகஎழுதி, இந்தத்தூது கோஷ்டி அரசாங்கத்தின் தூண்டுதலால் ஏற்பட்டதென்று தெளிவாககாணபித்தார். தான் காங்கிரசுக்குத் தலைமைவகித்த வருஷத்தில் அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசியாக இருக்க வேண்டுமென்று மௌலானாமகமதுஅலி என்னைவற்புறுத்தினர் எனக்குப் பிடிக்கவில்லை. காங்கிரசின் எதிர்காலக்கொள்கையும் வேலைத்திட்டமும் தெளிவில்லா திருக்கும்பொழுது நிர்வாகப் பொறுப்பு எதையும் ஏற்றுக்கொள்ள எனக்கு இச்சையில்லை. ஆனல் மௌலானாவின் விருப்பத்துக்கு விரோதமாகப்போக, என்னல் முடியவில்லை. வேருெரு காரியதரிசியும் புதிய தலைவரோடு நேசத்துடன் ஒத்துழைக்க முடியாதுஎன்றும் நாங்களிருவரும் எண்ணினேம். அவருக்கு விருப்பும் வெறுப்பும் மிகவும் அதிகம். அதிர்ஷ்டவசமாக நான் அவரது விருப்பிலே சேர்ந்த ஒருவன். எங்களிருவருக் குள்ளும் அன்பும் பரஸ்பர மரியாதையும் இருந்துவந்தன. அவர் மிகுதியும் மதப்பற்று கொண்டவர். அவ்வளவு மதப்பற்றுடனிருப்பது விவேகக் குறைவு என்பது என் எண்ணம். எனக்கோ மதப்பற்று துளிக்கூடக் கிடையாது. ஆனல் அவருடைய சிரத்தையிலும் அபரிமிதமான ஊக்கத்திலும் அவரது கூர்மையான அறிவிலும், எனக்கு மிகவும் கவர்ச்சி உண்டு. பரிகாசவன்மை அவரிடம் இருந்தது. ஆனல் சிலவேளை இந்தப் பரிகாசம் அம்புபோல் பாய்ந்து அவர் நண்பர்கள் பலரை இழக்க நேர்ந்தது. புத்திசாலித்தனமான வசனம் ஒன்று அவருடைய மூளையில் தோன்றுமாகில் என்ன நஷ்டம் நேர்ந்தாலும் அதைஉடனே பகிரங்கமாகச் சொல்லி தீர்க்காமல் இருக்கமுடியாது.

அவருடைய தலைமை உத்தியோக வருஷத்தில் நாங்கள் இருவரும் அதிகமான வேற்றுமைகளில்லாமல் ஒற்றுமையுடன் உழைத்து வந்தோம். புதிதாக அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் காரியாலயத்தில் ஒரு வழக்கத்தை ஏற்படுத்தி இருந்தேன். பட்டம் பதவி முதலிய யாதொன்றையும் குறிப்பிடாமல் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களின் பெயரைமட்டும் குறிப்பிட்டுக் கடிதமெழுத வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தேன். இந்தியாவிலே, பட்டங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. மகாத்மா, மௌலானா, பண்டிட், ஷேக், சைய்து, முன்ஷி, மௌல்வி, ஸ்ரீஜத், ஸ்ரீ, மிஸ்டர், எஸ்கொயர் முதலிய பட்டங்கள் இந்தியாவில் உண்டு. அவைகள் அடிக்கடி அநாவசியமாக உபயோகப் படுத்தப் பட்டபடியால், அதிலே சீர்திருத்தம் செய்யவேண்டுமென எண்ணினேன். ஆனால் என் எண்ணம் நிறைவேறவில்லை. மகமது அலி அவர்கள் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் எனக்கு அவசரத் தந்தி யொன்றை அனுப்பிவைத்தார். "பழைய வழக்கத்தை மாற்ற வேண்டாம். முக்கியமாக, காந்திஜியை எப்பொழுதும் மகாத்மா என்று அழைக்கவும்" என்று தந்தியடித்தார்.

நாங்கள் அடிக்கடி ஈசுவரனைப்பற்றி வாதஞ் செய்வோம். காங்கிரஸ் தீர்மானங்களில்கூட ஆண்டவன் என்ற சொல்லை எப்படியோ சாமர்த்தியமாக மகம்மது அலி கொண்டுவந்து புகுத்திவிடுவார். நன்றி செலுத்துவதற்காகவோ அல்லது பிரார்த்தனையின் பொருட்டோ, ஏதோ ஒரு காரணத்தை வைத்து, அவர் கடவுளைக் கொண்டுவந்து நிறுத்திவிடுவார். நான் இதை ஆக்ஷேபிப்பேன். அவர் என்னுடைய "நாஸ்திகத் தன்மையை"க் கண்டு பெரிய கூப்பாடு போடுவார். நான் நாஸ்திகனைப்போல வெளியே தோன்றினாலும் என்னுடைய மனப்பான்மையில் நான் மதப் பற்று கொண்டவன் என்பது நிச்சயம் என்று அவர் என்னிடம் சொல்லுவார். இவ்வாறு அவர் சொல்லுவதில் எவ்வளவு தூரம் உண்மை யிருக்கக் கூடும் என்று நினைத்து நானே ஆச்சரியப்படுவதுண்டு. மதமென்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் கொடுக்கிறோமோ, அதைப் பொறுத்து ஒருவன் மதப் பற்று உள்ளவன் அல்லது இல்லாதவன் என்று வகுக்கலாம்.

மத விஷயத்தைப் பற்றி நான் அவரிடம் பேசுவதில்லை. பரஸ்பரம் கோபம் வருமென்று எனக்குத் தெரியும்; மேலும்

நான் அவரை எனது சொற்களால் புண்படுத்திவிடவும் கூடும். என்மதத்திய தீவிரமான பக்தர்களோடும் வாதஞ் செய்வது எப்பொழுதுமே கஷ்டமான வேலையாகும். அதுவும் முஸ்லீம்களோடு வாதஞ் செய்வது அசாத்தியம். குர்ஆனை விட்டு விலகி எதையும் யோசிக்க முஸ்லீமுக்கு அதிகாரங் கிடையாது. முஸ்லீமுடைய பாதை நேராயும், குறுகியதாயுமிருக்கும். முஸ்லீம் பக்தன் எந்தப் பக்கத்திலும தவறிப் போய் விடக் கூடாது.

ஹிந்துக்களிலும், இவ்வித மாணவர்களைக் காணக்கூடு மென்றாலும், சாதாரணமாக அவர்கள் இப்படியல்ல. ஆசாரத்தில் அவர்கள் வைதீகர்களாக இருக்கலாம். மிகுதியும் பிற் போக்கு கொண்ட பழக்க வழக்கங்களை அவர்கள் அனுசரித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் எவ்விதக்கொள்கையையும் பற்றித் தாராளமாக அவர்கள் வாதஞ் செய்யத் தயாராயிருப்பார்கள். தற்கால ஆரிய ஸமாஜத்தார் மட்டும் தாராள நோக்குடன் எதையும் வாதிப்பதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. முஸ்லீம்களைப்போலவே அவர்கள் குறுகிய பாதையில் நேராகச் சென்று வருகிறார்கள். வேதாந்த சம்பிரதாயமே ஹிந்துக்களின் இந்த தாராள மனப்பான்மைக்குக் காரணம். பல வித சம்பிரதாயங்களும் இவ்வித சகிப்புத் தன்மையை உண்டாக்கி யிருக்கலாம். ஹிந்து மதமென்பது தனியொரு மதமல்லவென்று சொல்வதுண்டு. என்றாலும் மக்கள் அதை எவ்வளவு பிடிவாதத்துடன் பின் பற்றி வருகிறார்கள் என்பதைப் பார்க்க ஆச்சரியமா யிருக்கிறது. ஹிந்து ஒருவன் பழைய காலத்து ஹிந்து தத்துவ சாஸ்திரி சார்வாகரைப்போல நாஸ்திகனா யிருக்கலாம். ஆனால் அவன் ஹிந்துவல்ல என்று யாரும துணிந்து கூற முடியாது. ஹிந்து மதம் ஹிந்துக்களுக் கிடையே அவ்வாறு பின்னிக் கொண்டு கிடக்கிறது. அது பிறந்தவுடனே குழந்தைகளின் பேரில் ஒட்டிக்கொள்கிறது. நான் ஒரு பிராமணனாய்ப் பிறந்தேன். மத சம்பந்தமாகவோ ஆசார சம்பந்தமாகவோ நான் எவ்வாறு நடந்துகொண்டபோதிலும், பிராம்மணன் தான் என்று ஹிந்து உலகம் எண்ணிக்கொண்டிருக்கிறது. நான் பண்டிட் ஜவஹர்லால். பண்டிட் என்ற பட்டம எனக்கு வேண்டாமென்று பிடிவாதம் செய்தாலும், இந்தியர்கள் பண்டிட் பட்டத்தை விட்டுவிடுவதில்லை. ஒரு சமயம் ஸ்விட்ஜர்லாந்து தேசத்தில், ஒரு துருக்கி வித்துவானைச் சந்தித்தேன். அவ

ருக்கு என்னைப் பற்றி நண்பரொருவர் கொடுத்திருந்த அறிமுகக் கடிதத்தை முன்னுல் அனுப்பி வைத்திருந்தேன். அதிலே பண்டிட் ஜவஹர்லால் நேரு என்று என் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே தொண்டு கிழமான ஒரு பண்டிதரை தாம் சந்திக்கப் போவதாக அவர் மனத்தில் எண்ணிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் மிகவும் திகைத்துப் போனுர்.

இதனுல், மௌலானு மகமது அலியும் நானும் மதத்தைப்பற்றி வாதம் செய்வதில்லை. ஆனுல் மௌனமாயிருக்குங்குணம் அவரிடம் இல்லை. சில ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது 1925-26-ம் வருஷங்களில் மதத்தைப்பற்றி பேசாமல் அவரால் இருக்கமுடியவில்லை. ஒருநாள் டில்லியிலே, அவரது வீட்டுக்குப்போய்ச் சந்தித்தேன். மதத்தைப்பற்றி என்னுடன் பேசித்தான் ஆகவேண்டுமென்று அவர் வற்புறுத்தினுர். "நம்மிருவர் நோக்கங்களும் வெவ்வேருனவை. எனவே நாமிருவரும் எளிதிலே ஒருவரையொருவர் மாற்றமுடியாது" என்று காரணம்காட்டி வாதத்தைத் தடுக்க முயன்றேன். ஆனுல் அவரை தடுக்கமுடியவில்லை. நாமிருவரும் வாதஞ் செய்து தானே ஆகவேண்டும் நான் ஒரு வெறிபிடித்தவனென்று நீர் எண்ணுகிறீரா? அப்படிப்பட்டவன் நான் அல்ல என்பதை உமக்கு ருஜுப்படுத்தப் போகிறேன்" என்று ஆரம்பித்து "நான் மதத்தைப்பற்றி ஆழ்ந்தும், விரிவாகவும் படித்திருக்கிறேன். இதோபாருங்கள் அலமாரி நிறையப் புத்தகங்கள்! இஸ்லாம், கிறிஸ்தவமதம் முதலியவற்றைப்பற்றி, நான் ஏராளமாகப் படித்திருக்கிறேன். சண்டைக்காலத்தில் நான் காவலிலிருந்தபொழுது குர்ஆனைத் திருப்பித் திருப்பிப் படித்து அந்த நூல் சம்பந்தமான எல்லா வியாக்கியானங்களையும் சோதித்துப் பார்திருக்கிறேன். அந்த ஆராய்ச்சியின் பயனுக, குர்ஆன் ஷரீபிலிருப்பதில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு வரை பகுத்தறிவுக்கு முற்றிலும் ஏற்றதாகும். பாக்கி நூற்றுக்கு மூன்று, என்னுடைய பகுத்தறிவுக்கு ஏற்றதாக இல்லையாயினும், நூற்றுக்கு 97 வரையிலும் சரியாயிருக்கக் கூடிய குர்ஆன் பாக்கிலும் சரியாகத்தானிருக்கவேண்டும். என்னுடைய தர்க்க புத்தி குறைந்துகொண்டதா யிருக்க வேண்டுமே யொழிய, குர்ஆன் தவருக இருக்கமுடியாது. ஆகையால் அதை நான் முழுதும் ஒப்புக்கொள்கிறேன்" என்று முடிவாக என்னிடம் கூறினுர்.

இந்தத் தர்க்கமுறை எனக்கு விளங்கவில்லை. வாதஞ் செய்வதற்கும் எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் பின்னல் அவர் சொன்னது உண்மையிலேயே எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. "மாசிலாத உள்ளத்துடன் யார் ஒருவர் குர் ஆனைப்படித்தாலும், அவர் தன் உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். காந்திஜீ குர்ஆனை ஊன்றிப்படித்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். எனவே, இஸ்லாத்தின் உண்மையில் இஸ்லாத்தின் தத்துவத்தில், அவர் ஈடுபட்டுப் போயிருக்கவேண்டும். ஆனால், அவரது அகம்பாவத்தினால் முஸ்லீம் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளாமல் இருக்கிறார்" என்று மகமது அலி என்னிடம் சொன்னார்.

அவருடைய தலைமை வருஷம் கழிந்ததும், மகமது அலி சிறிது சிறிதாகக் காங்கிரஸை விட்டுவிலக ஆரம்பித்து விட்டார். அவரைவிட்டுக் காங்கிரஸ் விலகிக் கொண்டே போய்விட்டதென்று ஒருவேளை அவர் கூறியிருப்பார். இப் பிரிவு சிறிது சிறிதாக நேர்ந்தது. காங்கிரஸ் கூட்டங்களில், அவர் பிரசன்னமாயிருந்து சிறப்பான பங்கெடுத்துக் கொள்வார். ஆனால், அபிப்பிராயபேதம் அகலமாகப் போய்விட்டதும், அவர் பிரிந்தே போய்விட்டார். இதற்கு யாரையும் பழி சுமத்த முடியாது. இது தேசத்தில் அப்பொழுதிருந்த நிலைமையின் பயனாகும்.

இருந்தாலும் இந்தத் துர்ப்பாக்கிய விளைவைக் கண்டு எங்களிற் பலர் மனவருத்தப்பட்டார்கள். வகுப்புவாத சம்பந்தமாக அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும், அரசியல் நோக்கில் சிறிதளவும் மகமது அலிக்கும் எனக்கும் அபிப்பிராய பேதம் இருந்ததில்லை. இந்தியாவுக்கு பூரண ஸ்வராஜ்யம் வேண்டும் என்பது அவருடைய பிடிவாதமான கருத்து. இந்தக் கருத்தில் அவருக்கும் மற்றவர்களுக்கும் ஒற்றுமை இருந்ததால் வகுப்புவாதப் பிரச்னையில்கூட, அவருடன் திருப்திகரமான ஏற்பாட்டுக்கு வந்திருக்கமுடியும். அவருக்கும் வகுப்புவாதக் கொள்கைகளின் வீரர்கள் என்று நடக்கும் பிற்போக்காளர்களுக்கும் இடையே யாதொரு ஒற்றுமையும் கிடையாது.

1928-ம் வருஷம் கோடையில் மௌலானா மகமது அலி இந்தியாவைவிட்டு ஐரோப்பாவுக்குப் போனார். போனது இந்தியாவின் துர்ப்பாக்கியமாகும். வகுப்புப் பிரச்னையைத்

தீர்க்க, அப்பொழுது பெருமுயற்சி செய்யப்பட்டு வந்தது. அநேகமாக வெற்றி ஏற்படும் போலவும் காணப்பட்டது. மகமது அலி மட்டும் அப்பொழுது இந்தியாவில் இருந்திருப்பாரானால், வகுப்புப் பிரச்னை அநேகமாகத் தீர்ந்திருக்கும். ஆனால், அவர் இந்தியாவுக்குத் திரும்பி வருகிற காலத்தில் ராஜி முறிந்து போய்விட்டது. ராஜி முறிவதற்குக் காரணமாயிருந்த கூட்டத்தில் மகமது அலி சேர்ந்துகொண்டார்.

1930-ம் வருடத்தில் அதாவது இரண்டு வருஷத்துக்குப் பிறகு, தேச மக்கள் திரளாகச் சிறைசென்று சட்டமறுப் பியக்கம் உச்ச ஸ்தாதியில் ஓங்கி நின்ற காலத்தில், மகமது அலி அவர்கள் காங்கிரஸின் தீர்ப்பை அலட்சியம் செய்து லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மகாநாட்டுக்குச் சென்றார். அவர் போனதிலே, என்மனம் புண்பட்டுப் போயிற்று. இவ்வாறு அவர் செய்ததில் அவருக்கே திருப்தியில்லை என்று எண்ண, அவர் லண்டனில் செய்துவந்த அலுவல்களில் போதுமான அத்தாக்ஷி இருக்கின்றது. உண்மையிலேயே, தாம் இந்தியாவில் நடக்கும் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், லண்டன் மகாநாட்டுக்குச் செல்லுவது சாரமற்ற வேலையென்றும் அவர் உணர்ந்திருந்தார். அவர் லண்டனிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்திருந்தால், போராட்டத்தில் நிச்சயமாகக் கலந்துகொண்டிருப்பார் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவருடைய உடல் நிலைமையோ மிகவும் கேவலமாக இருந்தது. சில ஆண்டுகளாக அவர் நோய் வாய்ப்பட்டு, அதற்குச் சிறிது சிறிதாக இரையாகிவந்தார். லண்டனில் அவரிருந்தகாலையில் அவருக்கு ஓய்வு மிகவும் தேவை. ஆனாலும் இந்தியாவுக்கு நிலைத்த நன்மையாக ஏதேனுமொன்றைச் செய்யவேண்டு மென்ற கவலையாலும், ஆவலினாலும் ஓய்வே எடுத்துக்கொள்ளாமல் வேலைசெய்து, தமது மரணத்தை விரைவில் வரவழைத்துக்கொண்டார். நயினி சிறையில் நான் அவர் இறந்ததைக் கேள்விப்பட்டதும் அப்படியே உணர்வற்றுப்போனேன்.

கடைசித் தடவையாக அவரை நான் 1929-ம் வருடம் டிஸம்பர் மாதத்தில், லாகூர் காங்கிரஸ் காலத்தில் சந்தித்தேன். என்னுடைய தலைமைப் பிரசங்கத்தில் பல பகுதிகள் அவருக்குப் பிடிக்கவில்லை. அவைகளை அவர் கடுமையாக ஆக்ஷேபித்தார். காங்கிரஸ் முன்னேறி வருவதையும், அர

சியலில் கடுமையான போராட்டத்துக்கு தயாராகி வருவதை யும், அவர் கண்டார்.

அவரே முன்னணியில் நிற்பவர்; எனவே, வேறு எவ ரேனும் தனக்குமுன் நின்று தீவிரமாக வேலை செய்தால், பின்னே நின்று வேலை செய்வதில் அவருக்குப் பிடித்தமா யிருப்பதில்லை. அவர் எனக்கு ஒரு எச்சரிக்கை செய்தார். "உன்னுடைய தற்போதைய தோழர்கள் உன்னை விட்டு நழுவிவிடுவார்கள். நெருக்கடி சமயத்தில், பிரிந்துபோய், அவர்கள் உன்னை தொங்கலில் விட்டுவிடுவார்கள். உன் னுடைய சொந்தத் தோழர்களான காங்கிரஸ்காரர்களே, உன்னைத் தூக்குமேடைக்கு அனுப்பிவிடுவார்கள்" என்று எச்சரிக்கை செய்தார். என்ன பயங்கரமான ஆருடம்?

1923-ம் வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற காக்கி னடா காங்கிரஸில் எனக்கு வேறு வகையில் விசேஷ சிரத்தை யேற்பட்டது. ஹிந்துஸ்தான சேவாதளம் என்ற அகில இந்தியத் தொண்டர் படையை அமைக்க வேண்டுமென்று அந்தக் காங்கிரஸிலேதான் அடிகோலப்பட்டது. அமைப்பு வேலைக்கும், சிறை செல்வதற்கும், இதற்கு முன் எத்தனையோ தொண்டர்களின் கூட்டங்கள் இருந்தன. ஆனால் அவை களிலே கட்டுப்பாடும் ஒற்றுமையும் குறைவு.

காங்கிரசின் பொதுவான ஆதரவின் கீழ், தேசத்தொண் டைச் செய்வதற்காக 'பயிற்சி' பெற்ற அகில இந்தியப் படை யொன்றை, நிறுத்த வேண்டுமென்று டாக்டர். என். எஸ். ஹார்டிகர் யோசனை கொண்டார். என்னை அவருடன் சேர்ந்து ஒத்துழைக்கும்படி வற்புறுத்தினார். அவரது யோசனை எனக்குப் பிடித்தமாயிருந்ததால், மகிழ்வுடன் அவ ருடன் சேர்ந்து வேலை செய்தேன். காகினடாவில் இதற் கான ஆரம்பம் செய்யப்பட்டது. ஆனால் பிரபல காங்கிரஸ் வாதிகள் இந்த சேவாதள யோசனையைப் பின்னர் எதிர்த்தார் கள். எங்களுக்கு இது வியப்பாகவிருந்தது. காங்கிரசில் ராணுவ அம்சத்தைப் புகவிடுவது போல, அவர்களுக்கு இந்த யோசனை இருந்ததாம்! இறுதியில் இந்தத் தொண்டர் படை காங்கிரசையே ஆட்டிவைத்துவிடுமென்றும் அபாயகரமான மாறுதலென்றும் சிலர் பேசிக்கொண்டார்கள். தொண்டர் களுக்குப் பயிற்சி ஒன்றும் தேவை இல்லை. காங்கிரஸ் அதி காரிகள் இடும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தெரிந்

தால் போதுமானது. தொண்டர்களுக்கு அணிவகுத்துச் செல்லும் பயிற்சி வேண்டாமென்று சிலர் கருதினார்கள். காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருக்கும் சாத்வீகத்துக்கும் பயிற்சி பெற்ற தொண்டர் படைக்கும் பொருத்தம் கிடையாது என்று மற்றும் சிலர் கருதினார்கள். ஆனால் ஹார்டிகரோ எதைப் பற்றியும் கவலைப்படாமல், தமது வேலையைச் செய்யத் துவக்கினார். சில ஆண்டுகள் பொறுமையுடன் வேலை செய்தபின்னர், பயிற்சி பெற்றதால் காங்கிரஸ் தொண்டர்கள் அதிகமான திறமையுடனும், சாத்வீகத்துடனும் இருந்தார்கள் என்பதை அவர் ருசுப்படுத்திவிட்டார்.

1924-ம் வருடம் ஜனவரிமாதத்தில் காகிநாடாவிலிருந்து நான் அலகாபாத்துக்குத் திரும்பி வந்ததும், புதிதாக ஒரு அனுபவம் எனக்குக் கிடைத்தது. இதை ஞாபகத்திலிருந்து எழுதுகிறேன். எனவே தேதிகளைப் பற்றி ஏதாவது குழப்பம் ஏற்படலாம். அலகாபாத்தில் கங்கைக் கரையில் நடந்த கும்பமேளா விழா வருஷமென்று நினைக்கிறேன்.

அர்த்தோதய புண்ணிய காலத்தில் திரளான யாத்ரீகர்கள் அலகாபாத்துக்கு வந்து கங்கையும், யமுனையும், கற்பனை நதியான சரஸ்வதியுடன் கலக்கும் திரிவேணி என்ற க்ஷேத்திரத்தில் கங்கையில், நீராட வருவார்கள். கங்கை ஒரு மைல் அகலம் இருக்கும். ஆனால் குளிர் காலத்தில் ஆற்றிலே நீர் குறைந்து, இரண்டு பக்கங்களிலும் மணல் வெளிகள் இருக்கும். இந்த மணல் வெளிகள், யாத்ரீகர்கள் முகாமடித்துத் தங்குவதற்கு உபயோகமாக இருக்கும். கங்கை பல தடவைகளில் பக்கம் மாறி ஓடும். 1924-ம் ஆண்டில் கங்கை திரிவேணி கட்டத்தில் ஓடினது மிகவும் அபாயத்தை விளைவிக்கத்தக்கதாக இருந்தது. ஜனங்கள் ஸ்நானம் செய்வது கூடாத காரியம். ஆனால் சில எச்சரிக்கைகள் செய்து, ஸ்நானஞ் செய்பவர்களுடைய தொகையை அடக்கிப் பிரயாணிகளை நீராட்டத்துக்கு விட்டுக்கொண்டிருந்தால், அபாயம் மிகுதியும் குறைந்து போகும்.

புண்ணிய காலங்களில் ஆற்றில் ஸ்நானம் செய்து புண்ணியம் சேர்க்கவேண்டும் என்ற ஆவல் எனக்குத் துளிகூடக் கிடையாது. எனவே கும்பமேளாப் பிரச்னையில் எனக்குச் சிரத்தையே கிடையாது. திரிவேணி சங்கமத்தில் யாரும் நீராடக்கூடாது என்று ஐக்கிய மாகாண அரசாங்கத்தார்

உத்தரவு போட்டுவிட்டார்கள். இதைப்பற்றி பண்டித மதன் மோகன் மாளவியா பத்திரிகைகளில் கிளர்ச்சி செய்து வந்ததை, நான் பார்த்தேன். சங்கமத்தில் நீராடக்கூடாது என்று அரசாங்கத்தார் தடுப்பது மத விரோதமாகும் என்று மாளவியாஜி கக்ஷி சொன்னார். ஆனால் ஆபத்து நேராமல் காப்பதும் அதிகமாகச் சாவுகள் நேராமல் பார்ப்பதும், சர்க்காரின் கடமையாகும். அதற்கென அவர்கள் முன்னெச்சரிக்கை யெடுத்துக்கொள்வதில் யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லமுடியாது. ஆனால் வழக்கம்போல் ஜனங்களுக்கு ஆத்திரம் மூட்டக்கூடிய மூர்க்கவழியில் இந்தக்கடமையைச் செய்ய முயன்றார்கள்.

கும்பமேளா தினத்தன்று அதிகாலையிலேயே ஆற்றுக்குப் போனேன். ஸ்நானஞ் செய்வதற்காக அல்ல; மேளாவைப் பார்ப்பதற்காக. ஆற்றங்கரை வந்துசேர்ந்ததும், ஒரு செய்தி கேள்விப்பட்டேன். திரிவேணியில் நீராடுவதற்கு அனுமதி தரவேண்டுமென்று மாளவியாஜி ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்குக் கடுமையாகவே ஒரு மனு அனுப்பிவைத்தாராம். மாளவியாஜி கலங்கி நின்று கொண்டிருந்தார். ஒரே மனக்கொதிப்பு. மாஜிஸ்டிரேட் உத்தரவு கொடுக்க மறுத்துவிட்டார். உடனே சத்தியாக்கிரகம் செய்வதென்று மாளவியாஜி தீர்மானங் கொண்டார். இருநூறு பேர்கள் பின் தொடர, மாளவியாஜி சங்கமத்தை நோக்கிச் சென்றார். விஷயம் இப்படி முற்றவே, அதில் எனக்கு உற்சாகம் ஏற்பட்டது. யாதொரு யோசனையுமில்லாமல், சத்தியாக்கிரகக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டேன். சங்கமத்தில் ஸ்நானஞ் செய்யாதபடி ஜனங்களைத் தடுக்கப் பெரிய உயரமான தடையொன்று கட்டப்பட்டிருந்தது. இந்தத் தடையின் அருகில் நாங்கள் வந்து சேர்ந்தோம். எங்களைப் போலீசார் தடுத்தார்கள். எங்கள் கையிலிருந்த ஏணியை அவர்கள் பிடுங்கிக்கொண்டார்கள். நாங்களோ சாத்வீக சத்தியாக்கிரகிகள். எனவே தடைவேலியின் அருகில் மணலில் உட்கார்ந்து கொண்டோம்.

இவ்வாறு காலை முழுதும் கழிந்தது. மத்தியானத்தில் ஒரு பகுதியும் சென்றது. நாழிகையாக ஆக, வெயில் கொடுமையாக எரித்தது. மணலில் சூடோ பொறுக்க முடியவில்லை. எங்கள் எல்லோருக்கும் பசி. குதிரைப் போலிசாரும், சாதாரணப் போலிசாரும் எங்களுக்கு இரண்டு பக்கங்களிலும் பாராக்கொடுத்துக் கொண்டு நின்றார்கள். குதிரைப்

படையும் அங்கே இருந்ததாக என் நினைவு. எங்களிற் பலர் பொறுமை யிழந்தோம். ஏதாவது செய்யவேண்டுமென எண்ணினோம். அதிகாரிகளும் தங்கள் பொறுமையை இழந்து விட்டார்கள். விஷயத்தை எப்படியாவது முடித்து விட வேண்டுமென்று அவர்கள் தீர்மானம் கொண்டார்கள். குதிரைப் படைக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. அவர்கள் எங்களைத் தாக்கித் துரத்தப்போகிறார்கள் என்று எண்ணினேன். மேலும், வெறுமனே மணலில் உட்கார்ந்து கொண்டிருப்பதும் பிடிக்கவில்லை. தடையின் பேரில் ஏறலாமென்று எனக்குப் பக்கத்திலிருந்தவர்களுக்கு யோசனை கூறினேன். நான் திடீரென்று தடைவேலியின் பேரில் ஏறிவிட்டேன். திமு திமு வென்று நாற்பது ஐம்பது பேர் என்னைப் பின்பற்றி ஏறிவிட்டார்கள். சிலர் வேலியில் கட்டப்பட்டிருந்த கம்புகளைப் பிடித்திழுத்து, நுழைய வழி உண்டாக்கிக்கொண்டார்கள். யாரோ ஒருவர் என்னிடம் தேசியக் கொடி ஒன்றைக் கொடுத்தார். தடை வேலியின் உச்சியில் உட்கார்ந்து கொண்டு, கொடியை அதில் சொருகி பறக்கவிட்டேன். எனக்கு பரபரப்பு உண்டாயிற்று. ஜனங்கள் வேலியின்பேரில் ஏறுவதையும், ராணுவத்தார் அவர்களைப் பிடித்துத் தள்ளுவதையும் பார்த்துக்கொண்டு, வேலியின் பேரில் உல்லாசமாக வீற்றிருந்தேன். அதிகமான தொந்தரவு கொடுக்காமல், ராணுவத்தார் தங்கள் வேலையைச் செய்தார்கள் என்று சொல்லவேண்டும். தங்களுடைய கைகளிலிருந்த மரக் கொம்புகளை வீசி, அவைகளால் ஜனங்களை அப்பால் தள்ளினார்கள். ஆனால், உடம்பில் யாதொரு காயமும் உண்டாக்கவில்லை. புரட்சிக்காலத்தில், தெருக்களில் தடைகளை ஆக்கிக் கொண்டு, புரட்சிக்காரர்கள் போராடும் சரிதையின் நினைவு எனக்கு உண்டாயிற்று.

கடைசியாக அடுத்த பக்கத்தில் இறங்கினேன். நான் செய்த வேலையால் உடம்பில் அதிகமான உஷ்ணம் ஏற்பட்டு விட்டது. ஆகவே, கங்கையில் குதித்து ஸ்நானம் செய்தேன். திரும்பி வந்து பார்த்தேன். மாளவியாஜீயும் மற்றவர்களும் அதே மணலில் முன்போலவே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதென்ன மாறுதலென்றால் தடைக்கும், சத்தியாக்கிரஹிகளுக்கும் மத்தியிலேயே, ராணுவத்தாரும் போலிஸாரும் நெருக்கமாக நின்றுகொண்டு, சத்தியாக்கிரஹிகளைத் தடுத்துக் கொண்டிருந்தார்கள். எப்படியோ

சுற்றிக்கொண்டுபோய், மறுபடியும் மாளவியாஜீயின் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டேன். இவ்வாறு சிறிதுகாலம் சென்றிருக்கும். மாளவியாஜீயின் உள்ளம் கலங்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன். பலமான ஆத்திர உணர்ச்சியை அவர் அடக்க முயன்று கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றிற்று.

திடீரென்று யாருக்கும் யாதொரு தகவலும் கொடுக்காமல் போலிஸாருக்கும், குதிரைகளுக்கும் இடையே, அதிசயிக்கும் படியாக எப்படியோ மாளவியாஜீ குறுக்கே பாய்ந்து சென்றுவிட்டார். சாதாரணமாக இவ்வாறு செய்வது எல்லோருக்குமே சாத்தியப்படாத சங்கதியாகும். அதுவும், பலவீனமான வயதுமுதிர்ந்த மாளவியாஜீ செய்வதென்றால், அது மிகவும் வியக்கத் தக்கதாகும்! நாங்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றோம். எல்லோரும் குதிரைப் படைக்குள் குறுக்கே பாய்ந்தோம். போலீஸாரும், ராணுவத்தாரும் எங்களைத் தடுக்கப் பார்த்தார்கள். சிறிது நேரத்துக்குப் பின், அந்த முயற்சியையும் விட்டுவிட்டு அவர்கள் ஒதுங்கிக்கொண்டார்கள். கடைசியாக, அதிகாரிகள் போலீஸ்படையும் ராணுவமும் அங்கே இருக்கவேண்டாமென்று கட்டளையிட்டு விட்டார்கள்.

எங்கள் பேரில் அரசாங்கத்தார் ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்கள் என்று சிறிது எதிர் பார்த்தோம். ஆனால், அந்த மாதிரி ஒன்றும் நேரவில்லை. மாளவியாஜீயின் பேரில் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள அரசாங்கத்தார் விரும்பவில்லை. ஆகவே சின்ன மீன்களாகிய நாங்கள் தப்பித்துக் கொண்டோம்.

## XVIII

## எனது தகப்பனாரும் காந்திஜீயும்

1924-ம் வருஷத் துவக்கத்தில் காந்திஜீ சிறையில் கொடுநோயால் அவஸ்தைப்பட்டார் என்றும், பிறகு அவரைச் சிறையினின்றும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் ரண சிகிச்சை (ஆப்ரேஷன்) செய்தார்கள் என்றும் தூக்கிப் போட்டாற்போலச் செய்தி கிடைத்தது. இந்தியா முழுதும் ஒரே கவலை. நாங்கள் மூச்சுக்கூட விடவில்லையென்று கூற லாம். அளவில்லா பயத்தோடு காத்துக்கொண்டிருந்தோம். நெருக்கடி நீங்கிற்று. தேசத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் பூனாவுக்குப்போய் அவரைப்பார்க்க முயன் றார்கள். அவர் ஆஸ்பத்திரியிலிருந்தாலும் இன்னும் கைதி தான். குறிப்பிட்ட சில நண்பர்களுக்குத் தான் அவரைக் காண அனுமதி கிடைத்தது. தகப்பனாரும் நானும் அவரை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தோம்.

காந்திஜீ ஆஸ்பத்திரியிலிருந்து மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்படவில்லை. அவர் குணமாகிக்கொண்டு வருகையில், அரசாங்கத்தார் அவரது பாக்கித் தண்டனையை ரத்துசெய்து விடுதலை செய்துவிட்டார்கள். அவருக்கு விதிக் கப்பட்ட ஆறுவருஷ தண்டனையில் இரண்டு வருஷம் அவர் சிறையிலிருந்தார். பம்பாய்க்கு அருகில் கடற்கரையிலிருக் கும் ஜுஹு என்ற இடத்துக்குப்போய் காந்திஜீ தமது உடம் பைத் தேற்றிக்கொண்டார்.

எங்கள் குடும்பமும் ஜுஹுவுக்குப் போயிற்று. நாங்கள் கடலுக்குப் பக்கத்திலிருந்த சிறு குடிசையொன்றில் குடி யிருந்தோம். சில வாரங்கள் அங்கு தங்கினோம். இந்தக் காலத்தை என்னுடைய மனதுக் கேற்றவாறு கழித்தேன். கடலில் நீந்தினேன்; கடற்கரையில் ஓடினேன்; மணலில் குதிரை சவாரி செய்தேன்.

நாங்கள் ஜுஹுவில் தங்கியது ஓய்வுக்காகவல்ல. காந் திஜீயோடு கலந்து பேச எங்களுக்கு விருப்பம். ஸ்வராஜ்யக் கக்ஷித் திட்டத்தை காந்திஜிக்குத் தகப்பனார் விளக்கிக் காண்

பித்து, அவருடைய பூரண ஒத்துழைப்பைப் பெற முடியா விடினும், அரைகுறைச் சம்மதத்தையேனும் பெற எண்ணினார். என்னுடைய மனதிலே ஊசலாடிக் கொண்டிருக்கும் பிரச்னைகளுக்கும் ஏதேனும் விளக்கம் ஏற்படுமோ என்று நான் ஆவலுடனிருந்தேன். எதிர்காலத்தில் காரியத்திட்டம் இன்னதென்று தெரிந்துகொள்ள நான் ஆசைப்பட்டேன்.

ஸ்வராஜ்யக்கக்ஷியார் சம்பந்தப்பட்ட வரையிலும் ஜுஹு சம்பாஷணையால் காந்திஜீயைத் தங்கள் கக்ஷிக்கு எள்ளளவும் மாற்றமுடியவில்லை. சம்பாஷணையில் நட்பாவது மரியாதையாவது துளிகூட குறையவில்லை. ஆனால் ராஜிமட்டும் ஏற்படவில்லை. தங்களுக்குள்ளிருந்த அபிப்பிராய பேதங்களை அப்படியே வைத்துக் கொள்வதென்று தீர்மானங்கொண்டார்கள். தங்களுடைய கக்ஷிகளை விளக்கமாக எடுத்துக் காண்பித்து, இருவரும் தேசத்தாருக்கு அறிக்கை விடுத்தார்கள்.

ஜுஹுவிலிருந்து சிறிது ஏமாற்றமடைந்தவனாக நான் திரும்பி வந்தேன். ஏனெனில் காந்திஜீ என்னுடைய சந்தேகங்களில் ஒன்றையாவது தீர்த்துவைக்கவில்லை. வழக்கம் போல அவர் எதிர்காலத்தைப்பற்றி சிந்தனைசெய்ய மறுத்து விட்டார். நீண்டதொரு திட்டம் அமைக்கவும் அவர் இஷ்டங்கொள்ளவில்லை. காங்கிரஸின் நிர்மாண ஆசாரத் திருத்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து, மக்களுக்குப் பொறுமையுடன் தொண்டு செய்யவேண்டுமென்றும், சமயத்தை எதிர்பார்த்து சட்டமறுப்புக்குத் தயாராயிருக்கவேண்டுமென்றும் அவர் யோசனை கூறினார். ஆனால் என்மனத்தில் உண்மையான கஷ்டம் என்னவெனில் சட்டமறுப்புக்கு சந்தர்ப்பம் வாய்ப்பதாக வைத்துக்கொண்டாலும், அந்தச் சந்தர்ப்பதைச் சௌரிசௌராவைப்போன்ற நிகழ்ச்சியொன்று நேர்ந்து, வீணாக அடித்துவிட்டு இயக்கத்தையே தடுத்துவிடாதா என்பதுதான். இந்தக் கேள்விக்கு காந்திஜீ அப்பொழுது யாதொரு மறுமொழியும் கொடுக்கவில்லை. மேலும் நம்முடைய நோக்கம் இன்னது தான் என்று அவர் தெளிவாகவும் குறிப்பிடவில்லை. காங்கிரஸ் தன்னுடைய லட்சியம் இன்னதுதான் என்று தேசமக்களுக்கு அறிவிக்காவிட்டாலும், அந்த லட்சியம் இன்னது தானென்று தெளிவாகத் தலைவர்களுக்குக்கேனும் தெரிந்திருக்கவேண்டுமென்று எங்களிற்பலர் விரும்பினோம். நாம் பூரண சுதந்திரத்தையும் சமூகச் சீர்திருத்தத்தையும் லட்சியமாகக்கொண்டு

உண்மக்கப் போகின்ருேமா? அல்லது குறைந்த லட்சியத்தில், தலைவர்கள் ராஜிசெய்து கொள்வார்களா? சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற ஐக்யமாகாண மகாநாட்டில், நான் தலைமை வகித்தபோது, இந்தியர்கள் பூரண சுதந்திரத்திற்காகப் பாடு படவேண்டும் என்று என் பிரசங்கத்தில் வற்புறுத்தியிருந் தேன். நாபாவிலிருந்து நான் திரும்பிவந்த சிறிது காலத்துக் குப் பின்னர் 1923-ம் ஆண்டில் இந்த மகாநாடு நடைபெற்றது. நாபா சிறையில் எனக்குப் பரிசாகக் கிடைத்த பித்தவாதக் காய்ச்சலிலிருந்து அப்பொழுதுதான் நான் குணமடைந்து கொண்டு வந்தேன். என்ஞல் மகாநாட்டுக்குப் போகமுடிய வில்லை. படுக்கையிலே காய்ச்சலோடு எழுதிய என்னுடைய தலைமைப் பிரசங்கம் மட்டும் மகாநாட்டில் படிக்கப்பட்டது.

காங்கிரஸ் பூரண சுதந்திரத்தை லட்சியமாகக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டோம். ஆனுல் மித வாதிகளோ சாம்ராஜ்யத்தின் பெருமையை வானமளாவப் புகழ ஆரம்பித்துவிட்டார்கள். சாம்ராஜ்யம் இந்தியர்களை மிதிசாக்கர்க உபயோகப் படுத்திக்கொண்டாலும், மிதவாதி களுக்குக் கவலையுண்டாகவில்லை. வேற்று நாடுகளுக்கு இந்தி யர்கள் வரக்கூடாது என்று சட்டம் இருப்பதைப்பற்றியும், மிதவாதிகள் பொருட் படுத்தவில்லை. கனம் சாஸ்திரியார் சாம்ராஜ்யத் தூதராய் பழுத்துவிட்டார். "பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்திற்கு அஸ்திவாரமாயும் அணிகலனுயும் இருப்பது என்னுடைய தாய்நாடு இந்தியா என்று கர்வத்துடன் நான் சொல்ல முடியும்" என்று ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ 1923-ம் வருஷத்தில் லண்டனில் நடைபெற்ற சாம்ராஜ்ய மகாநாட்டில் தெரிவித்துக்கொண்டார்.

எங்களுக்கும், மிதவாதிகளுக்குமிடையே பெருங் கடல் பரந்து கிடந்ததுபோல வித்தியாசங்க ளிருந்தன. நாங்கள் வெவ்வேறு உலகங்களில் வசித்து வந்தோம். வெவ்வேறு பாஷைகள் பேசி வந்தோம். எங்கள் கனவுகளும் வெவ்வேறு. எனவே, இந்தியாவின் லக்ஷியத்தைப் பற்றி தெளிவாகச் சொல்லப்பட வேண்டியது அவசியம் அல்லவா?

இந்தக் கருத்துகளைக் கொண்டவர்கள் அப்பொழுது ஒரு சிலர்தான். தேசீய இயக்கத்தில் எதையும் தெளிவாகச் சொல்ல முடியாது. தெளிவாக லக்ஷியத்தைக் குறிப்பிடு வது பெரும்பான்மையோருக்குப் பிடிப்பதில்லை. 1928-ம்

வருஷத் துவக்கத்தில், ஸ்வராஜ்யக் கக்ஷி மாகாணச் சட்ட சபைகளிலும், இந்தியா சட்ட சபைகளிலும் செய்து வந்த வேலையை தேசத்தார் ஊன்றிக் கவனித்து வந்தார்கள். சட்ட சபையில் புகுந்து முட்டுக்கட்டை வேலை செய்து, சபைகளை உடைக்கப் போவதாக இவர்கள் கம்பீரமாகப் பேசினார்களே! இப்பொழுது என்ன செய்யப் போகிறார்கள்? அந்த வருஷத்து அரசாங்க வரவுசெலவுக் கணக்கை இந்தியா சட்ட சபை ஏற்கவில்லை. இந்திய விடுதலைப் பிரச்னையைத் தீர்க்க, ஒரு மகாநாடு கூட்ட வேண்டுமென்ற தீர்மானத்தைச் சட்ட சபையில் நிறைவேற்றி வைத்தார்கள். தேசபந்துவின் தலைமையின் கீழ், வங்காளச் சட்ட சபையும், அரசாங்கத்தாரின் வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இந்தியா சட்ட சபையிலும், மாகாண சபைகளிலும் வைஸிராயும், கவர்னர்களும் விசேஷ அதிகாரத்தினால், வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டனர்.

சட்ட சபைகளில் ஸ்வராஜ்யக் கக்ஷியார் கம்பீரமாகப் பேசினார்கள். கொஞ்சம் பரபரப்பும் இருந்தது. தாற்காலிகமாக வெற்றியுணர்ச்சியும் அவர்கள் அடைந்தார்கள். இவைகளைப் பற்றி பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வெளி வந்தன. இவ்வளவுதான்! இதற்கு மேல் அவர்களால் என்ன செய்ய முடியும்?

இதே காரியத்தை அவர்கள் திருப்பித் திருப்பிச் செய்து கொண்டேயிருக்க முடியும். ஆனால் அதனாலேற்பட்ட புதுமையும், பரபரப்பும் மறைந்து போகவே, பொது ஜனங்கள் வழக்கம்போல வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி ஏற்பட்டது. அடுத்தபடியாகச் செய்ய வேண்டிய வேலை சட்ட சபைக்குள் செய்யப்பட வேண்டிய வேலையல்ல; அது ஸ்வராஜ்யக் கக்ஷியாரின் சக்திக்கு மீறியதாகும்; அது சட்ட சபைகளுக்கு வெளியே செய்யப்பட வேண்டிய வேலையாகும்.

1924-ஆம் ஆண்டு மத்தியில் ஆமதாபாத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எதிர்பாராதபடி காந்திஜிக்கும், ஸ்வராஜ்யக் கக்ஷியாருக்கும் அபிப்பிராயப் பேதம் உண்டாகிக் கடுமையான வாதம் நிகழ்ந்தது. சில விநோத சம்பவங்களும் நேர்ந்தன. காங்கிரஸ் அமைப்பில் அடிப்படையாக சில மாறுதல்

களைச் செய்ய நினைத்து, வாக்கு உரிமையிலும், சில விதிகளி லும் மாறுதல்களை உண்டாக்க எண்ணி, காந்திஜீ ஒரு தீர்மா னம் கொண்டுவந்தார். காங்கிரஸின் லக்ஷியம் ஸ்வராஜ்யம் என்றும் அதை அமைதியும், நேர்மையுமான முறைகளால் அடைய வேண்டுமென்றும் வகுக்கப்பட்டிருந்த காங்கிரஸ் விதியை ஒப்புக்கொண்டு, நாலணுக் கொடுத்து எவரும் காங்கிரஸ் அங்கத்தினராக ஆகலாம் என்று இது வரை இருந்தது. அதைக் காந்திஜீ இப்பொழுது மாற்றி, ஒவ் வொருவரும் கையால் நூற்ற நூல் ஓரளவு கொடுக்க வேண்டும் என்று பிரேரணை கொண்டு வந்தார். இது வாக்குரிமையின் விரிவை மிகுதியும் குறைப்பதாக விருந்தது. இந்தத் தீர்மானத்தை முடிவுக்குக் கொண்டு வர, அகில இந்தி யக் காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் தம்முடைய நோக்கம் பூர்த்தியாக வேண்டுமானல், இத்தகைய விதித் தடைகளை காந்திஜீ லக்ஷியம் செய்வதே இல்லை. காங் கிரஸ் அமைப்புக்கே விபத்து வந்துவிட்டதாக எண்ணி நான் வருந்தினேன். எனது காரியதரிசி பதவியை ராஜிநாமாச் செய் வ்தாகக் காரியக் கமிட்டிக்கு எழுதிவிட்டேன். ஆனால், வேறு சில சம்பவங்கள் திடீரென நேர்ந்தன. எனவே, எனது ராஜி நாமாவை நான் வற்புறுத்தவில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் மகாத்மாஜியின் யோசனையை தகப்பனரும், தாஸும் கடுமையாக எதிர்த்தார் கள். அவர்களுக்கு இந்த யோசனையில் பிடித்தம் சிறிதுகூட இல்லையென்று காண்பிப்பதற்காக ஓட் எடுக்குமுன் அவர்கள் இருவரும் தங்கள் சிஷ்யர்களுடன் வெளியேறிவிட்டார்கள். தீர்மானத்துக்கு விரோதமா யிருந்த வேறு சிலர் வெளியே போகாமல் இருந்துவிட்டாலும், தீர்மானம் பெரும்பான்மை யோரால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஆனால் இறுதியில் தீர்மானம் வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்டது.

ஸ்வராஜ்யக் கக்ஷியார்கள் வெளியேறியதும், தாஸும் தகப்பனரும் பிடிவாதமாக யோசனையை எதிர்த்ததும், காந்தி ஜீயின் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்துவிட்டன. அவர் மிகுதியும்கலக்கமடைந்துபோனார். யாரோ ஒரு அங்கத்தினர் அலக்ஷியமாகச் சொன்ன ஒரு சொல் அவர் மனத்தில் அம்பு போல்பாய்ந்தது. அந்தசமயத்தில், அவர் செய்த பிரசங்கத்தின் உருக்கத்தை என்னல் வர்ணிக்கமுடியாது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களிற் பலர் காந்திஜியின்

பிரசங்க கால முழுவதும் அழுதுகொண்டே யிருந்தார்கள். மிக உருக்கமான அசாதாரணமான காக்ஷியாகவிருந்தது. நூல் சந்தாவை அங்கத்தினர்களின் கட்டாய நிபந்தனையாகச் செய்ய காந்திஜீ ஏன் இவ்வளவு ஆத்திரம் காண்பித்தாரென்பது எனக்கு விளங்கவேஇல்லை. இந்த சந்தாவைக் கடுமையாக எதிர்ப்பார்களென்று அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும். அவருடைய கதர் முதலிய நிர்மாணத் திட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்தான் காங்கிரஸில் இருக்கவேண்டும் என்றும் மற்றவர்கள் இதற்கு இணங்கவேண்டும் அல்லது காங்கிரஸை விட்டு விலகவேண்டும் என்றும் அவர் எண்ணியிருக்கலாம்.

பெரும்பான்மையோர் அவருக்கு சாதகமாயிருந்தாலும், அவர் தமது தீர்மானத்தைத் தளர்த்திக் கொண்டு மற்றவர்களோடு ராஜி செய்துகொள்ள எண்ணினார். அடுத்த இரண்டு மூன்று மாத காலத்துக்குள், அவர் இந்தப் பிரச்னை சம்பந்தமாகத் தமது அபிப்பிராயத்தை பல தடவைகள் மாற்றிக் கொண்டார். திக்குத்தெரியாமல் நடு சமுத்திரத்தில் தவிக்கும் படகு போல் தோன்றினார். இவ்வாறு அவர் மாறிஇருக்கக் கூடுமென்று நான் நினைத்ததே இல்லை. எனவே, மிகவும் ஆச்சரியப்பட்டேன்! இந்தப் பிரச்னை மிகவும் முக்கியமானதல்ல. வாக்குரிமைக்கு உழைப்புத்தகுதி தேவையென்பது நல்ல யோசனைதான். ஆனால் நூல் சந்தாவை மட்டும் வற்புறுத்தியதால் இந்த யோசனையின் கருத்து மங்கிப்போயிற்று. நன்றாகப் பரிச்சயமில்லாத துறைகளில் புகுந்ததினால் அவருக்கு இவ்வித கஷ்டங்கள் ஏற்பட்டனவென்று எனக்குத் தோன்றிற்று. சத்தியாக்கிரக யுத்தத்தில் அவர் இணையற்றவர். அந்த இலாகாவில் அவருடைய அறிவில் யாதொரு மாசும் ஏற்படுவதில்லை. ஒவ்வொரு படியும் அவருக்கு சுபாவசித்தமாகத் தெரியும். பொதுஜனங்களின் சமூக சீர்திருத்தத்திற்காக தான் உழைப்பதிலும், பிறரை உழைக்கும்படி செய்வதிலும் அபார சாமர்த்தியம் வாய்ந்தவர். போர் என்றால் அவருக்குத் தெரியும். அல்லது சமாதானம் என்றாலும தெரியும். ஆனால் போருக்கும் சமாதானத்துக்கும் இடையே ஒரு நிலைமை உண்டு என்பதை அவர் ஏற்பதில்லை. சட்டசபைக்குள் போராட்டத்தை நடத்தலாமென்று ஸ்வராஜ்யக்கக்ஷியார் போட்ட திட்டத்தில் அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. சட்டசபைக்கு ஒருவன் போக எண்ணினால், அவன் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து நல்ல சட்டங்களை ஆக்கிக்கொள்வ

தற்குத் தான் போகவேண்டுமேயொழிய, வெறும் எதிர்ப்புக்காகப் போகக்கூடாதென்பது அவரது கருத்தாகும். இவ்வாறு செய்ய மனமில்லாதவர்கள் சட்டசபைக்கே போகாமல் வெளியில் நின்றுவிடலாமேயென்று காந்திஜீ சொன்னர். ஆனல் இந்த இரண்டிலொரு யோசனையையும் ஸ்வராஜ்யக் கக்ஷியார் ஏற்கவில்லை. அதனுலேதான் காந்திஜீ அவர்களுடன் வேலைசெய்வதில் தகராறு ஏற்பட்டது.

இறுதியில் அவர்களோடு ஒத்துழைக்கலானர். பழைய நால்ஞு சந்தாவோடு நூல் சந்தாவும் விதியில் சேர்க்கப்பட்டது. ஸ்வராஜ்யக்கக்ஷியார் சட்டசபைகளில் செய்யப்போகும் வேலையை அவர் வாழ்த்தினர். ஆனல் அவர்களோடு சேராமல் ஒதுங்கியே நின்றுவிட்டார். அவர் அரசியலிலிருந்து விலகிவிட்டதாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவருடைய செல்வாக்கும் சக்தியும் அழிந்துபோய் விட்டன என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் உத்தியோகஸ்தர்களும் நம்பினர்கள். தாஸும் நேருவும் காந்திஜீயைப் பின்பக்கத்திலே தூரத்தி, தாங்கள் முன்னுக்கு வந்துவிட்டதாகக் கூறப்பட்டது. அரசியல் மேடையில் அவர்கள்தான் முக்கியஸ்தர்கள் என்று சொல்லப்பட்டது. சென்ற 15 ஆண்டுகளாக பலசமயங்களில் இவ்வித பொய்க் கூற்றுகள் உலவின. ஆனல் இந்த வதந்திகள் இந்திய மக்களின் மனப்பான்மையை அறிந்துகொள்ள அரசாங்கத்தாருக்கு சாமர்த்திய மில்லை யென்ற உண்மையைத் தான் விளக்கின.

என்றைக்கு காந்திஜீ அரசியல் மேடையின்பேரில் ஏறினரோ, அன்றைய நாளிலிருந்து பொதுமக்கள் சம்பந்தப்பட்டவரையிலும் அவருடைய செல்வாக்குக்கு யாதொரு பங்கமும் நேர்ந்ததேயில்லை. நாளாகநாளாக, அவருடைய செல்வாக்கு வளர்ந்துகொண்டேவருகிறது. இன்றைக்கும் அது வளர்ந்து கொண்டு தானிருக்கிறது. சாதாரண மனித சுபாவத்தின் பலவீனத்தால், காந்திஜீ சொல்வதைப் பொது மக்கள் செய்யமுடியாமலிருக்கலாம். ஆனல் அவர்களுடைய உள்ளத்தில் காந்திஜீ குடிகொண்டுவிட்டார். தக்க சந்தர்ப்பங்கள் நேர்ந்தால், அவர்கள் மகத்தான இயக்கத்தில் கலந்துகொள்வார்கள். மற்ற சமயங்களில் சாய்ந்து கொடுப்பார்கள்.

மந்திரவாதி செய்வதைப்போல திடீரென்று பொதுஜன இயக்கத்தை எந்தத்தலைவரும் தோற்றுவிக்க முடியாது.

சாதகமான நிலைமைகள் ஏற்படும்போது அவைகளைத் தலைவர் உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடும். பெரிய போராட்டத்துக்காக தலைவர் நிலைமைகளைச் சிறிது தயார்செய்ய முடியும். ஆனால், அவற்றை முற்றிலும் சிருஷ்டிசெய்ய முடியாது. படித்தவர்களிடம் காந்திஜீயின் செல்வாக்கு சிறிது சிறிதாக குறைந்துகொண்டுவருகிறது என்றுதான் சொல்லவேண்டும். உற்சாக காலங்களில் அவர்கள் காந்திஜீயைப் பின்பற்றுகிறார்கள். ஆனால் உற்சாகம் தணிந்து போனவுடனே, அவர்கள் காந்திஜியின் திட்டத்தையும் தத்துவத்தையும் நுட்பமாக ஆராய்ந்து குறைகூறத் தலைப்படுகிறார்கள். என்றாலும் அவர்களில் பெரும்பான்மையோர் அவருக்குக் கீழ்படிந்தே நடக்கிறார்கள். காரணமென்னவெனில் காந்திஜியின் திட்டத்தைக்காட்டிலும் பயன்தரக்கூடிய திட்டமொன்று இல்லாததே. இந்தக் கூட்டத்தில் மிதவாதிகளையும் அவர்களைப் போலொத்தவர்களையும் சேர்க்கத் தேவையில்லை. நவீன உலகம் பலாத்காரச் செயல்களைக்கொண்டு புரட்சிசெய்வதில் நம்பிக்கையிழந்து வருகின்றது. சமதர்மத்திட்டம் இன்னும்சரியாகப் பெரும்பான்மையோருக்கு விளங்கவில்லை. காங்கிரஸில் இருக்கும் பணக்காரர்களுக்கு சமதர்மம் என்றால் திகிலாய் இருக்கிறது.

1924-ம் ஆண்டில், சிறிதுகாலத்துக்குத் தகப்பனருக்கும் காந்திஜிக்கும் கருத்து வேற்றுமை இருந்தது. ஆனால் வெகுவிரைவிலே அவர்களுடைய பழைய நட்பு வெளித்தோன்றி, அவர்களிருவரும் முன்னிலும் அதிகமாக நெருக்கமாகப் பழகத்தொடங்கினார்கள். ஒருவர் மற்றொருவரிடமிருந்து எவ்வளவோ மாறுபட்டபோதிலும், பரஸ்பர அன்பும் மரியாதையும் குறைந்ததே இல்லை. எதற்காக அவர்கள் ஒருவருக்கொருவர் மரியாதை காண்பித்துக்கொண்டார்கள்? காந்திஜீ எழுதிய எழுத்துக்களில் சிலவற்றைத்தொகுத்து 'Thought Currents' "கருத்து ஓட்டங்கள்" என்ற பெயரின் கீழ் நூல் ஒன்று பிரசுரிக்கப்பட்டது. அதற்குத் தகப்பனார் சுருக்கமான முன்னுரையென்று எழுதியிருக்கிறார். அதிலே தம்முடைய அபிப்பிராயத்தை நன்றாகத் தெளிவுபடுத்திக் காண்பித்திருக்கிறார்.

தகப்பனர் எழுதியதாவது:— "நான் மகரிஷிகளையும் அவதார புருஷர்களையும் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்கு நேர்ந்த

தில்லை. எனவே அத்தகைய பெரியார்கள் உலகத்தில் இருக்கிறார்களோ என்பது எனது சந்தேகம். எனக்கு மனிதர்களிலும் பொருள்களிலும் தான் நம்பிக்கை. இந்த நூலில் கோர்க்கப்பட்டிருக்கும் கருத்து ஓட்டங்கள் ஒரு ஆண்மகனிடமிருந்து தோன்றியவையாகும். அவைகளிடம் ஆண்மைத்தனம் காணப்படுகின்றது. மனித சுபாவத்தில் இரண்டு பெரிய குணங்கள் உண்டு. அவைகள் நம்பிக்கையும் சக்தியுமாவன. இவை இரண்டும் இந்த நூலின் எழுத்துக்களில் பரந்து கிடக்கின்றன.

"நம்பிக்கையும் சக்தியுமில்லாத ஒருவன், இதெல்லாம் எங்கே கொண்டுபோய்விடப்போகின்றது என்று கேட்கிறான். வெற்றி அல்லது மரணம் என்ற இரண்டிலொன்றுக்குக் கொண்டுபோய்விடும் என்று சொன்னால், அவனுக்குத்திருப்தி உண்டாவதில்லை. இதற்கிடையே, தைரியத்தோடும் வினயத்தோடும் கூடிய ஒரு சிறிய உருவம் இந்திய மேடையில் தலை நிமிர்ந்து நிற்கின்றது. அசைக்கமுடியாத நம்பிக்கையின்பேரிலும், தோற்கடிக்கமுடியாத சக்தியின்பேரிலும், அவர் கால்களை ஊன்றிக்கொண்டு நிற்கின்றார். தாய்நாட்டுக்கு தியாகம் செய்யவேண்டும் என்று அவர் செய்தி அனுப்பிக்கொண்டே இருக்கிறார். இந்தச்செய்தி மக்களின் உள்ளங்களில் ஊடுருவிப்பாய்ந்து பிரதி ஒலி எழுப்புகின்றது. 'பஞ்சபூதங்களையும் ஆட்டிவைக்கின்ற புருஷ சிம்மங்கள்' என்று கவி கூறிய சிரேஷ்டர்களில் இவர் ஒருவர்".

இவ்வாறு காந்திஜீயைப்பற்றி தகப்பனார் எழுதியிருக்கிறார். காந்திஜீ சாது அல்லது மஹாத்மா என்ற காரணத்தினால், தாம் அவருக்கு மரியாதை செய்யவில்லையென்றும் அவர் ஒரு வீரபுருஷன் என்பதற்காக மரியாதை காண்பிப்பதாகவும் தகப்பனார் நன்றாக வற்புறுத்தியிருக்கிறார். தகப்பனாரோ, மிகவும் சக்திவாய்ந்தவர். அவர் "வணங்கா முடிமன்னன்." எனவே, மற்றவர்களிடம் சக்தி காணப்பட்டால், அதற்கு மரியாதை செய்யத் தயங்கினதே இல்லை. காந்திஜீ என்ற மெல்லிய உடல்தாங்கிய உருவம், எஃகினாலும் மலையின் கருங்கல் பாறையினாலும் ஆக்கப்பட்டதோ, என்று தகப்பனார் நன்கு உணர்ந்தார். அந்த உருவத்தை எதுவும் எவ்வளவு மகத்தானதாயிருந்தாலும் சரி, பயமுறுத்தி அசைக்கமுடியாது என்று அவருக்கு புலப்பட்டது. வெளித்தோற்றமோ கம்பீரமானதல்ல. முழங்கால்வரையிலும் தான்

துணி கட்டிக்கொள்கிறார். உடம்பை மூடிக்கொள்வதில்லை. இருந்தாலும், அரசனுடைய தன்மை, அவரிடம் இருப்பதாகத் தோற்றுகின்றது. கண்டால் கீழ்ப்படியாமலிருக்க முடியவில்லை. துளிகூட அவரிடம் அஹம்பாவமே கிடையாது. அடக்கம் நிறைந்தவர். இருந்தாலும் அதிகாரம் செய்வதில் பின் வாங்கியதே இல்லை. தம்மிடத்திருக்கும் சக்தி அவருக்குத் தெளிவாகத் தெரியும். சில சமயங்களில் மற்றவர்கள் கட்டாயமாகப் பணிந்து போகும்படியாகக் கடுமையான உத்தரவுகளிடுவார். அவருடைய ஆழ்ந்த கண்கள் சாந்த மயமானவை; ஆனால் பிறர் உள்ளம் பூராவையும் துளைத்து தெரிந்து கொண்டுவிடும். அவருடைய குரலோ மிகவும் மெதுவானது; ஆயினும் அது கேட்பவர் உள்ளத்தில் போய் ஒட்டிக்கொண்டு உணர்ச்சியை எழுப்பிவிடும். கேட்பவர், ஒருவரிருந்தாலுஞ்சரி, ஆயிரம் பேரிருந்தாலுஞ்சரியே, காந்திஜீயின் சக்தி காந்தத்தைப்போல் அவர்களைப்போய்த் தாக்கும். ஒவ்வொருவரும் காந்திஜீயுடன் ஒட்டிக்கொண்டதாக எண்ணிக்கொள்வார்கள். இந்த ஒட்டுதலுக்கும் அறிவுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அறிவை காந்திஜீ அலட்சியம் செய்ததாகக் கூறமுடியாது. ஆனால் தர்க்கமும், புத்தியும் இரண்டாவது பட்சமாகக்கருதப்பட்டன. இவ்வாறு மனிதர்கள் மயங்கிப்போவது அவருடைய நாவன்மையால் அல்ல. வாக்கியங்களின் அமைப்பாலும் அல்ல. அவருடைய பாஷை மிகவும் எளிதானதாகும். எதையும் வளைத்துப்பேசமாட்டார். அநாவசியமாக ஒரு வார்த்தையையும் அவரது எழுத்திலும் பிரசங்கத்திலும் காணமுடியாது. அவருடைய சிரத்தையும், பௌருஷமும்தான் மேற்சொன்ன மாறுதல்களை உண்டாக்குகின்றன. அவரைப் பார்த்தால், எல்லையற்ற சக்திக்களஞ்சியமாகத் தோன்றும். காந்தியைப் பற்றி எழுந்த பிரசாரமும் வரலாறுகளும் இத்தகைய பிரபாவத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம். காந்தியைப் பற்றிக் கேள்விப்படாத ஒருவன், அவருடைய பிரசங்கத்தைக்கேட்டால், ஏனையோர்கள் மயங்கிப் போவதைப்போல சொக்கிப்போகாமலிருக்கலாம்; என்றாலும் காந்திஜீயிடம் சிறப்பான தன்மை ஒன்று இருக்கின்றது. எதிரியைத் தமதுகக்ஷிக்கு வளைத்துக்கொண்டு வருவதில், அவர் இணையற்றவர். எதிரிகள் தம்மிடம் கோபங்கொள்ளாதவாறு, அவர் சமாதானம் செய்து விடுவார்.

காந்திஜீக்கு இயற்கை வனப்பில் கவர்ச்சி உண்டு. ஆனால் மனிதனால் ஆக்கப்பட்ட பொருள்களில் வனப்பு

இருப்பதாக அவருக்குத் தோன்றுவதில்லை. தாஜ் மஹால் கட்டிடத்தைக்கண்டால், அவருக்கு வருத்தம். தொழிலாளிகளைக் கட்டாயப்படுத்தி கட்டின கட்டிடம் என்று தாஜ் மஹாலைப்பற்றி முடிவாக முடித்துவிடுவார். அவருக்கு முகரும் சக்தியும் அதிகமாகக் கிடையாது. என்றாலும் அவருடைய தனிவழியில், தமது வாழ்க்கையை அழகு வாய்ந்த ஒரு சித்திரமாக அமைத்துக்கொண்டு விட்டார். அவரது ஒவ்வொரு செயலிலும், பொருளும், அருளும், ஒளியும் கூடியது. அதிலே குறை எதையும் காணமுடியாது. முரட்டுத் தன்மைகள், பிறர்பேரில் ஈட்டியைப் போல்பாயும் கேவலமான தன்மைகள், ஆபாசப்பேச்சுகள், அநாகரிகச் சின்னங்கள் எதையும் அவரிடம் துளிக்கூட காணமுடியாது. உள்ளத்திலே அவர் அமைதியைப் பெற்றுவிட்டார். எனவே, வாழ்க்கையில் திடமாக, சளைக்காமல் நடந்துகொண்டு, பிறருக்கும் அத்தகைய தன்மைகளை ஊட்ட அவரால் முடிந்தது.

என் தகப்பனாரோ அவரிடமிருந்து எவ்வளவு வேற்றுமைகொண்டவர் ! அவரிடமும் அபரிமிதமான சக்தியும், ராஜரீகமும் காணப்பட்டன. எந்தக் கூட்டத்திலும் அவர் எப்பொழுதும் தலைநாயகமாக இருப்பார். அவர் எங்கே உட்கார்ந்து கொண்டிருந்தாலும், அந்த இடம் பிரதானமாக இருக்கும். அங்கே, எல்லோருடைய கவனமும் செல்லும். அவர் அடக்கம் கொண்டவர் அல்ல ; வினயஸ்தரும் அல்ல. தமக்கு எதிர்க்கக்ஷி விரும்புவர்களை, எளிதிலே விட்டுவிடவே மாட்டார். சாட்டை கொடுத்துக் கொண்டே இருப்பார். இந்தத் தன்மையைக் காந்திஜீயிடம் காணமுடியாது. தகப்பனார், அகம்பாவமும் ராஜரீகத் தன்மையும் மிகுதியும் படைத்தவர். எனவே, ஜனங்கள் ஒன்று, அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள் ; அல்லது மும்முரமாக விரோதக் கக்ஷியில் இருப்பார்கள். அவர் சம்பந்தப்பட்டவரையிலும், யாரும் அலக்ஷியமாய் இருக்க முடியாது. ஒன்று, அவரை நேசிக்கவேண்டும் ; அல்லது பகைக்கவேண்டும். வேறு வழி கிடையாது. தகப்பனாருக்கு விசாலமான நெற்றி ; கெட்டியான உதடுகள் ; பிடிவாதங்கொண்ட முகவாய்க்கட்டை ; இவைகளைப் பார்த்தால், பழையகால ரோமன் சக்கிரவர்த்திகளுடைய ஞாபகம் நமக்கு உண்டாகும். அவருடைய படத்தைக் கண்ட பல இத்தாலிய நண்பர்கள் இவ்வாறே கூறியிருக்கிறார்கள். பின்னாட்களில், அவருடைய தலை முழுதும் நரைத்துப் போய்விட்

'டது. ஆனால், தலையில் வழுக்கையே கிடையாது. வெண்மை நிறைந்த அவருடைய தலையைப் பார்த்தால், கம்பீரமாக இருக்கும். அப்போப்பட்ட கம்பீரத் தன்மையை இப்பொழுது காண்பதரிது. என் தகப்பனாரானதால், நான் அன்பின் மிகுதியால் இவ்வாறு பேசுகிறேனே, என்னவோ? ஆனால், பலவீனமும் சில்லரைத்தனமும் நிறைந்திருக்கும் இந்த உலகத்தில், அவர் இப்பொழுது இல்லையே என்று நான் மிகுதியும் ஏங்குகின்றேன். அவருடைய கம்பீர நடையையும் மகத்தான சக்தியையும் நான் வேறு யாரிடமும் காணமுடியவில்லையே?

1924-ம் ஆண்டில், தகப்பனாருடைய படம் ஒன்றைக் காந்திஜீக்கு நான் காண்பித்தேன். அது ஸ்வராஜ்யக் கக்ஷியாரோடு காந்திஜீ மல்யுத்தம் போட்டுக் கொண்டிருக்கிற தருணம். இந்தப் படத்தில் தகப்பனாருக்கு மீசை இல்லை. அதுவரையிலும் காந்திஜீ, தகப்பனாரை நேர்த்தியான மீசையுடன்தான் பார்த்திருந்தார். இந்தப் படத்தைப் பார்த்ததும், காந்திஜீ திடுக்கிட்டுப்போய், நீண்டநேரம் அதை உற்று நோக்கினார். மீசை இல்லாததால், தகப்பனாருடைய முக வாய்க்கட்டையின் கெட்டித் தன்மை நன்றாக விளங்கிற்று. "நான் எதோடு போராடவேண்டி யிருக்கிறது என்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது" என்று காந்திஜீ உலர்ந்த புன்முறுவலுடன் சொன்னார். அடிக்கடி சிரித்துச் சிரித்து அதனால் ஏற்பட்ட கோடுகளால், தகப்பனாரின் முகம் மிருதுத்தன்மையை அடைந்து விட்டது. இந்த மிருதுத்தன்மைக்கு ஓரளவு கண்களும் காரணமாயிருக்கலாம். சில சமயங்களில் அவரது கண்களில் தீப்பொறி பறக்கும்.

வாத்து தண்ணீரில் எவ்வளவு லாகவமாக நீந்துமோ, அதைப்போலவே அவ்வளவு லாகவமாக தகப்பனார் சட்டசபை வேலையைச் செய்து வந்தார். அவருக்கு அவருடைய சட்டப் பயிற்சி மிகுதியும் துணையாக நின்றது. சட்ட சபை வேலை சத்யாக்கிரகத்தைப்போல் அல்ல. சத்யாக்கிரக விதிகளும், விளைவுகளும் தகப்பனாருக்குத் தெரியாது. ஆனால் சட்ட சபை வேலை அவருக்குத் தலைகீழ்ப் பாடம். ஸ்வராஜ்யக் கக்ஷியை கட்டுப்பாட்டுக்குள் அவர் வைத்துக்கொண்டிருந்ததும் அல்லாமல், ஏனைய கக்ஷிகளையும், அங்கத்தினர்களையும் ஸ்வராஜ்யக் கக்ஷியினரோடு சேர்ந்து உழைக்கும்படி

யாகவும் செய்தார். ஆனால் தனது கக்ஷிக்குள்ளிருந்தே அநேக தொல்லைகள் தோன்றின. ஸ்வராஜ்யக் கக்ஷி ஆரம்பத்தில், மாறுதல் வேண்டாத காங்கிரஸ்காரர்களோடு போராட வேண்டி யிருந்தமையால், ஸ்வராஜ்யக் கக்ஷியை காங்கிரஸுக்குள் வலுப்படுத்துவதற்காக, தகாத பல பேர்வழிகளை சேர்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிறகு தேர்தல்கள் வந்தன. தேர்தலுக்குப் பணம் வேண்டாமா? பணம் பணக்காரர்களிடத்திலிருந்துதானே வர வேண்டும்? எனவே இந்தப் பணக்காரர்களை தாஜாப் பண்ண வேண்டியதாயிற்று. அவர்களிற்சிலரை ஸ்வராஜ்யக் கட்சி அபேட்சகர்களாகவும் நிறுத்த வேண்டியதாயிற்று. அமெரிக்க சமதர்மி ஒருவர், அரசியலைப் பற்றி வேடிக்கையாக பேசி யிருக்கிறார். "அரசியல் ஒரு சாதுரியமான வித்தை. ஏழைகளைப் பணக்காரர்களிடமிருந்து காப்பாற்றுவதாகச் சொல்லி அவர்கள் ஓட்டையும், பணக்காரர்களை ஏழைகளிடமிருந்து ரட்சிப்பதாகக் கூறி அவர்கள் பணத்தையும் வாங்கும் சூக்ஷமம்தான் அரசியல்" என்று அவர் கேலி செய்திருக்கிறார்.

மேற்கூறிய தொல்லைகளால் ஸ்வராஜ்யக் கட்சி துவக்கம் முதலே, பலவீனப்பட்டு வந்தது. இந்தியா சட்ட சபையிலும், மாகாண சட்ட சபைகளிலும் ஸ்வராஜ்யக் கட்சி திறம்பட வேலை செய்ய வேண்டுமானால், அது மற்றக் கட்சிகளோடு ராஜி செய்துகொண்டுதான் வேலை செய்ய முடியும். கொள்கைகளைப் பற்றிக்கொண்டு முரட்டுத்தனமாக இருப்பதற்கு முடியாது. எனவே கட்சியின் தொனியும், கட்டுப்பாடும் சீர் குலைந்து போய், பலவீனர்களும், சுயநல வாதிகளும் கட்சியில் புகுந்துகொண்டு தொல்லை கொடுக்கத் துவக்கினார்கள். சட்ட சபைக்குள்ளிருந்து எதிர்ப்பு என்று விருது கூறிக்கொண்டு, ஸ்வராஜ்யக் கட்சியார் சட்ட சபைப் பிரவேசம் செய்தார்கள். இதே வேலையை மற்றவர்களும் செய்யலாமல்லவா? அரசாங்கத்தார் தங்கள் கை வரிசைகளைக் காண்பித்து, ஸ்வராஜ்யக் கட்சிக்குள்ளாகவே எதிர்ப்பையும், பிளவுகளையும் உண்டாக்கிவிட்டார்கள். ஸ்வராஜ்யக் கட்சியில் இருந்த பலவீனமான அங்கத்தினர்களுக்கு பெரிய உத்தியோகத்தாலும், சலுகையாலும் ஸர்க்கார் ஆசை காண்பித்தார்கள். இதில் மயங்கிப் போனவர்களை ராஜ தந்திரிகளென்றும், காரியவாதிகளென்றும் அரசாங்கத்தார் புகழ ஆரம்பித்தார்கள். அவர்களை இவ்வாறு கவர்ந்த பின்னர், அவர்களுக்

குத் தோதாக எல்லாவற்றையும் அமைத்துக் கொடுத்து நாக ரிகப் படியில் ஏற்றி வைத்தார்கள்.

ஸ்வராஜ்யக் கக்ஷியினரின் தொனி சிறிது சிறிதாகக் கீழே விழுந்துகொண்டுவந்தது. தனி நபர்கள் ஸ்வராஜ்யக் கக்ஷியை விட்டு விலகி, எதிர்க்கக்ஷிக்குள் புகுந்துகொண்டார்கள். எனது தகப்பனார் கூச்சல் போட்டார். "நோய் கண்ட அங் கத்தை வெட்டிவிடுவேன்" என்று இடிஇடிப்பதைப்போலப் பேசினார். ஆனால் "நோய் கண்ட அங்கம்" இதைப்பற்றி கொஞ்சம்கூடக் கவலைப்படவே இல்லை. அது மெல்லமெல்ல தானாகவே நகர்ந்து வெளியே போய்விட்டது. ஸ்வராஜ்யக் கக்ஷியில் சிலர் மந்திரிகளாகவும், நிர்வாக சபை அங்கத்தினர்க ளாகவும் பின்னர் ஆனார்கள். லோகமான்ய திலகர் வேறு சந் தர்ப்பத்தை யொட்டி, பரஸ்பர ஒத்துழைப்பு என்ற கொள்கை யைக்கொண்ட கக்ஷியை ஸ்தாபித்தார். அவருடைய சீடர்கள் இப்பொழுது உயிர்ப்பித்தெழச் செய்தார்கள். பரஸ்பர ஒத் துழைப்பு என்றால் வந்த உத்தியோகத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று இந்தக் கக்ஷியார் பொருள் செய்து கொண் டார்கள்போல தோன்றிற்று. இவ்வாறு அங்கத்தினர்கள் வில கிக்கொண்டே போனாலும், ஸ்வராஜ்யக் கக்ஷியின் வேலை நடந்துகொண்டே வந்தது. ஆனால் தகப்பனாரும் தாஸும் இந்த நிகழ்ச்சிகளினால் கிலேசம் அடைந்தார்கள். தங்கள் சட்டசபை வேலை பயனற்றதென்று கண்டு அதில் அலுத்துப் போனார்கள். வட இந்தியாவிலே அப்பொழுது ஹிந்து-முஸ் லீம் கலவரங்கள் அதிகரித்துக்கொண்டுவந்தன. இந்தப் பகைமையும், தகப்பனாருடைய அலுப்புக்கு ஒரு காரணமா யிருக்கலாம்.

1921-22-ம் வருஷங்களில் எங்களுடன் சிறைக்குச் சென்ற சில காங்கிரஸ்காரர்கள் இப்பொழுது மந்திரிகளாகி விட்டார்கள். வேறு சிலர் அரசாங்கத்தில் பெரிய உத்தியோ கங்களை ஏற்றுக்கொண்டார்கள். நாங்கள் சட்டத்துக்கு மீறிய கூட்டத்தார் என்று அரசாங்கத்தார் அறிவித்தார்கள். இந்த உத்தரவை 1921-ம் வருஷத்தில் அரசாங்கத்தார் பிறப் பித்தபொழுது, அந்த அரசாங்கத்திலே சில மிதவாதிகள் இருந்தனர். ஆனால் இப்பொழுதோ, சகோதரக் காங்கிரஸ் காரர்களாய் இருந்த அன்பர்கள் பெரிய பதவிக்குவந்து, எங் களைச் சட்டம் மீறிய கூட்டத்தார் என்று கூறும் பாக்கியம் எங்களுக்கு கிடைத்துவிடக் கூடியதாகவிருந்தது. இந்தப்

புதிய மந்திரிகள் பழைய மிதவாதிகளைக் காட்டிலும் வேலையில் திறமை படைத்தவர்கள். எங்களையும் எங்களுடைய பல வீனங்களையும் அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டவர்கள். எங்களுடைய பலவீனங்களை எப்படி உபயோகப் படுத்திக் கொள்வது என்பதும் அவர்களுக்குத் தெரியும். எங்களு டைய வழிகளும் அவர்களுக்கு நன்றாய்த்தெரியும். கூட்டங் களைப்பற்றி அவர்களுக்குப் பழக்கமுண்டு. பொதுஜனங் களின் உணர்ச்சி எப்படி இருக்கும் என்றும், அவர்களுக்கு ஒருவாறு தெரியும். ஜெர்மன் நாஸிக்கக்ஷியாரைப்போல, அவர் கள் புரட்சி முறைகளைச் சிறிதுகாலம் கைக்கொண்டு அனுப வம் பெற்றதால், பழைய மிதவாதி மந்திரிகளைக் காட்டிலும், வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் திறமை யுடனும் கொடுமையாகவும் தங்களுடைய பழைய தோழர் களாகிய காங்கிரஸ் காரர்களை அடக்கிவிட முடியும். தங் களுடைய பழைய அனுபவத்தை, இதற்கு நன்றாக உபயோ கப்படுத்திக் கொண்டார்கள்.

1924-ம் வருடம் டிசம்பர் மாதம் பெல்காமில் காங்கிரஸ் கூடிற்று. காந்திஜீ தலைமைவகித்தார். காந்திஜீ பிரஸிடெண்ட் பதவியை ஏற்றுக்கொண்டது அவரது பெருமைக்குக் குறை வேயாகும். ஏனென்றால், பல ஆண்டுகளாக பிரஸிடெண்டுகளுக் கெல்லாம் உயர்ந்த காயமான தலைமை ஸ்தானத்தை அவர் வகித்துவந்தார் என்று சொல்ல வேண்டும். அவருடைய தலை மைப் பிரசங்கம் எனக்குப் பிடிக்கவில்லை. அது புத்துயிர் அளிக்கக்கூடியதாயில்லை. காந்திஜீயின் வற்புறுத்துதலின் பேரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குக் காரியதரிசியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனக்கு விருப்பமில்லா விடினும், நான் காங்கிரஸுக்கு காயமான காரியதரிசியைப் போல ஆகிவிட்டேன்.

1925-ம் வருடம் கோடையில் தகப்பனாரின் உடம்பு குணமில்லை. அவருடைய பழைய காசநோய் அவரை மிகவும் தொல்லைப்படுத்திற்று. குடும்பத்தை யழைத்துக் கொண்டு அவர் ஹிமாலயத்தில் டல்ஹௌஸி என்ற இடத்திற்குச் சென்றார். சிறிது காலம் கழித்து நானும் டல்ஹௌஸிக்குச் சென்றேன். இமயமலையின் உட்புறத்திலிருந்த சாம்பாவுக்கு டல்ஹௌஸியிலிருந்து பிரயாணம் செய்தோம். நாங்கள் சாம்பாவுக்குப் போனது ஜூன் மாதக் கோடை வெயில் நாட்களில். மலைப் பாதைகளில் நடந்து நாங்கள் களைத்துப்

போனோம். சாம்பா சேர்ந்து இளைப்பாறிக் கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு தந்திவந்தது. சித்தரஞ்சன் தாஸ் இறந்து போனார் என்று தந்தி சொல்லிற்று. நீண்டநேரம் யாதொரு வார்த்தையும் சொல்லாமல், தகப்பனார் ஸ்தம்பித்துப்போய் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தார். துக்கம்தாங்க முடியவில்லை. இதுஅவருக்கு ஒருகடுமையான அடியாகும். இந்தமாதிரி அவர் துக்கத்தில் ஆழ்ந்திருந்ததை, நான் வேறு எப்பொழுதும் கண்டதே இல்லை. மற்றவர்களைக் காட்டிலும் நெருக்கமாகத் தகப்பனாருடன் பழகியவர் தாஸ்தான். அவர் திடீரென்று மறைந்து விட்டார். தகப்பனார் தனியாக இனி சுயராஜ்யக் கட்சிச் சுமையைச் சுமக்கவேண்டும். அந்தச் சுமை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு போயிற்று. தாஸும், தகப்பனாரும் ஜனங்களின் பலவீனங்களைக் கண்டு மிகவும் அலுத்துப் போனார்கள் என்று சொல்லவேண்டும். தேசபந்து கடைசியாக பரித்பூர் மகாநாட்டில் பேசிய பேச்சைக் கவனித்துப் பார்த்தால் அது களைத்துப்போன ஒருவருடைய பேச்சு என்று நிச்சயமாகத் தெரிந்துவிடும்.

அடுத்த நாள் காலையில், நாங்கள் சாம்பாவைவிட்டுப் புறப்பட்டு, மலைப்பாதைகளில் மீண்டும் நடந்து, டல்ஹௌஸிக்கு வந்து சேர்ந்தோம். அங்கிருந்து மோட்டாரில் பிரயாணம் செய்து, எட்டத்திலிருந்த ரயில்வே ஸ்டேஷனுக்குப்போய், அங்கிருந்து அலாகாபத்துக்கும், அலகாபாத்திலிருந்து கல்கத்தாவுக்கும் பிரயாணமானோம்.

குறிப்பு:—

பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் காந்திஜீ ஆத்திரப்பட்டதற்கு காரணம், வங்காள பலாத்கார புரட்சிக்காரரான கோபிநாத் ஸாஹா என்பவரைப் பற்றி கொண்டுவந்த தீர்மானமாகும். தீர்மானத்தில் ஸாஹாவின் தைரியம் புகழப்பட்டிருந்தது. இறுதியில் தீர்மானம் தோற்றுப்போனாலும், காந்திஜீ வருத்தப்பட்டார். வாயளவிலே பிரபல காங்கிரஸ்காரர்களில் பலர் சாத்வீகத்தை பாராட்டினாலும் உள்ளூர அவர்கள் பலாத்காரவாதிகளாக இருக்கிறார்கள் என்பதை 'யங் இந்தியா' வில் பின்னர் காந்திஜீ குறிப்பிட்டார்.

## XIX

# ஜாதி துவேஷத்தின் அட்டகாசம்

1923-ம் வருஷம் நாபா சிறையிலிருந்து, நான் வெளியேறியதும் எனக்குப் பித்தவாதக் காய்ச்சல் அடித்தது. இவ்வாறு நோய் வருவதும், காய்ச்சலாலோ அல்லது பலவீனத்தாலோ படுக்கையில் படுத்துக்கொள்வதும், எனக்கு வழக்கமே யில்லை. எனது தேக ஆரோக்கியத்தைப்பற்றி சிறிதளவு நான் கர்வப் படுவதுண்டு. என்னுடைய இளமைப்பருவத்தாலும் தேகக்கட்டினாலும் பித்தவாத ஜ்வரம் எனக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுக்கவில்லை. ஆனால் அபாயம் கழிந்ததும், நீண்டகாலம் பலவீனமான நிலைமையில், படுக்கையிலேயே படுத்துக்கிடந்து, கொஞ்சம் கொஞ்சமாகச் சுகமடைந்து வந்தேன். இந்தசமயத்தில் என்மனம் இதுவரை நான் ஈடுபட்டிருந்த ஜோலிகளில் பற்றிழந்தது. இதுவரை நிகழ்ந்த சம்பவங்களை எல்லாம் நடுநிலைமைவகித்து சம்பந்தமில்லாதவன்போல் சிந்தித்தேன். தனிமரங்களால் என் பார்வை மறைபடாமல், காடு முழுவதையும் பார்க்கக்கூடிய வல்லமையை நான் பெற்றுவிட்டதாக, எனக்குத் தோன்றிற்று. முன்னிருந்ததைவிட அதிகமான தெளிவும் அமைதியும் என் மனதுக்கு ஏற்பட்டுவிட்டதாகவும் எண்ணினேன். இத்தகைய அனுபவம் ஒவ்வொருவருக்கும் சாதாரணமாக க்டுமையான நோய்க்குப் பின்னர் வரும் என்று எண்ணுகிறேன். ஆனால் எனக்கு இது ஒருபரமார்த்திக அனுபவமாகத் தோனறிற்று. இந்த அனுபவத்தால் நான் பெரிதும் மாறிப்போனேன். உணர்ச்சியேபிரதானமான அரசியலிலிருந்து விடுதலைபெற்று என்னை அதில் பிணைத்த லக்ஷியங்களையும், கொள்கைகளைப்பற்றியும் தெளிவான முடிவுகளை அடைந்தேன். ஆனால் இவைகளினின்றும் புதிய பிரச்சினைகள் எழுந்தன. அவற்றிற்கு திருப்தியான சமாதானம் கிடைக்கவில்லை. ஒன்றுமட்டும் உறுதியாயிற்று. அரசியலையும் வாழ்க்கையையும் மதக்கண்களால் நோக்குவது தவறு என்று தீர்மானங்கொண்டேன். இந்த அனுபவத்தை விரிவாக என்னால் எழுதமுடியாது. அது ஒரு உணர்ச்சியாகும். அதை எழுத்தில வரைவதுகஷ்டம். அது நேர்ந்து பதினொரு வருஷங்கள்

ஆகின்றன. அதைபற்றி, வாடிவதங்கிய நினைவுமட்டுந்தான் எனக்கு இப்பொழுது மிச்சமாக இருக்கிறது. ஆனால் என் பேரில் இந்த உணர்ச்சியால் நித்தியமான பலன் உண்டாகிற்று. அடுத்த இரண்டு வருஷம் எதிலும் அதிகமாகப் பற்றுக் கொள்ளாமல், எனக்குக் கிடைத்த வேலையைத் தீவிரமாகச் செய்துவந்தேன்.

எனக்குப் பிடிக்காதளவும் என்னால் அடக்கி ஆளமுடியாதளவுமான நிகழ்ச்சிகளால், இத்தகைய பரிணாமம் என்னிடம் ஏற்பட்டிருக்கலாம். சில அரசியல் மாறுதல்களைப் பற்றி ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை வட இந்தியாவில், நாளுக்குநாள் சீர்குலைந்து வந்தது. பெரிய நகரங்களில் மிகக் கொடிய கலகங்கள் நேர்ந்தன. கோபத்தாலும் பரஸ்பர அவநம்பிக்கையாலும் புதிய புதிய சச்சரவுகள் தோன்றின. இத்தகைய சச்சரவுகள் நேரக்கூடியவை என்று எண்ணியிருக்க முடியாது. முன்னே பக்ரீத் நாளில் பசுவை வெட்டுவதால், ஹிந்து முஸ்லீம் கலவரம் ஏற்படுவது சகஜம். ஹிந்துத் திருவிழாவும் முஸ்லீம் திருவிழாவும் சேர்ந்து ஒரே நாளில் வந்தால், உதாரணமாக மொகரமும் ராம்லீலாவும் சேர்ந்து வந்தால், கலவரங்கள் நேரும். மொகரம் என்பது பழம் பெரும் தியாகத்தை நினைப்பூட்டும் திருவிழாவாகும். எனவே அந்தத் திருவிழாவில் துக்கமும் கண்ணீரும் அதிகமாகக் காணப்படும். ராம்லீலாவோ, மகிழ்ச்சிப் பெருநாள். அதர்மத்தின் பேரில் தர்மம் வெற்றி பெற்ற திருநாள். இரண்டு விழாக்களும் முரண்பட்டவை; நல்ல வேளையாக முப்பது வருஷத்துக்கொருதரம்தான், அவை இரண்டும் சேர்ந்துவரும்.

என்றைக்கும் சச்சரவு உண்டாக்கக்கூடிய ஒரு காரணமும் ஏற்பட்டது. பள்ளிவாசலின் முன்னே ஹிந்துக்கள் சங்கீதம் படிக்கலாமாவென்ற பிரச்னை கிளம்பிற்று. தாங்கள் பள்ளிவாசலில் தியானம் செய்துகொண்டிருக்கும் தருணத்தில் சங்கீதமோ, சப்தமோ தெருக்களில் இருத்தல் ஆகாது என்று முஸ்லீம்கள் ஆக்ஷேபித்தார்கள். ஒவ்வொரு நகரத்திலும் பல மசூதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஐந்து தடவைகள் முஸ்லீம்கள் தியானம் செய்வார்கள். ஊர்வலங்களாலும், மற்றும் நேரக்கூடிய கூட்டங்களாலும் சப்தம் சாதாரணமாக எழத்தான் செய்யும். எனவே சச்சரவுக்கு சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. விசேஷமாக அந்தி,

வேளைத் தொழுகை நடக்கும் பொழுது, பள்ளிவாசல்களின் பக்கமாக ஊர்வலங்கள் செல்லக்கூடாதென்று முஸ்லீம்கள் ஆக்ஷேபித்தார்கள். இதே சமயத்தில்தான், ஹிந்துக்கோயில்களில் மணிகளையடித்தும், சங்குகளை ஊதியும் சாயங்காலப் பூஜை நடக்கும். இதற்கு ஆரத்தி என்றுபெயர். ஆரத்தி, நமாஸ் சண்டைகள் பிரமாதமாகி விட்டன. மிகவும் எளிதிலே ராஜி செய்துவிடக்கூடிய இந்தப் பிரச்னை மகத்தான கசப்புக்கும் கலவரத்துக்கும் ஆதரவாக ஆனது மிகவும் ஆச்சரியமாக விருக்கிறது. ஆனால் மதவெறிக்கும் அறிவுக்கும் சம்பந்தமே இல்லை. நிதானமோ ராஜியோ ஏற்படாது. இவ்விருகட்சிக்கும் அதிகாரியான மூன்றாவது ஆள் ஒருவன் நடுவே வந்து தோன்றுவானாகில், அவன் இரண்டு கூட்டத்தையும் தூபம்போட்டு கலகத்துக்குத் தூண்டிவிடமுடியும்.

வட இந்தியாவின் சில நகரங்களில் நடந்த இக் கலகங்களை மிகைபடுத்திக் கூறுவது தவறு. இந்தக் கலகங்களைப் பற்றி கிராமங்களில் பேச்சே யில்லை. அநேகமாய் எல்லா நகரங்களிலும் சமாதானம் குலையவில்லை. ஆனால் ஒவ்வொரு சிறிய வகுப்புக் கலவரத்திற்கும் முக்கிய ஸ்தானம் கொடுத்து பத்திரிகைகள் பிரசுரம் செய்யத்தலைப்பட்டன. நகர ஜனங்களுக்கிடையே வகுப்பு வெறியும், துவேஷமும் அதிகப்பட்டன என்பது உண்மையே. இவைகளை வகுப்புத் தலைவர்கள் வளர்த்துக்கொண்டு வந்தார்கள். வகுப்புக்களுக்காக பிரத்தியேக உரிமைகள் வேண்டுமென்று சொல்வதற்கு, இவைகள் காரணமாகக் காண்பிக்கப்பட்டன. இந்த வகுப்பு வெறியால், ஒத்துழையாமைக் காலத்தில், ஒடுங்கி மறைந்து கிடந்த முஸ்லீம் பிற்போக்காளர்கள் இப்பொழுது வெளியே வந்து வேலை செய்யத் துவக்கினார்கள். இவர்களுடைய வேலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவும் கிடைத்தது. ஒவ்வொரு நாளும் புதிய புதிய உரிமைகளை முஸ்லீம்களுக்காக கேட்க ஆரம்பித்தார்கள். இந்த விசேஷ உரிமைகளின் மூலம் இந்தியாவில் ஒற்றுமையும், விடுதலையும் என்றும் ஏற்படக் கூடாத நிலைமை ஏற்பட்டுவிடக் கூடும். இந்துக்களின் சார்பாக சில அரசியல் பிற்போக்காளர்கள், தலைமைப் பதவிக்கு வந்து, ஹிந்துக்களுடைய உரிமைகளைக் காக்கும் சாக்கிலே, அரசாங்கத்தாரின் கைகளில் சிக்கிக்கொண்டார்கள். அவர்கள் தாங்கள் கோரிய எதிலும் வெற்றி பெற முடியவில்லை. அவர்கள் கையாண்ட முறைகளால், அவர்கள் கோரியது நிச்சயம் கை

கூடாது என்றும் சொல்ல முடியும். ஆனால், நாட்டின் வகுப்பு வாத வெறி அதிகரித்ததுதான் அவர்கள் செய்த காரியத்தின் பலன்.

காங்கிரஸோ உலையில் அகப்பட்டுக்கொண்டதுபோல தடுமாறிற்று. தேசத்தின் பொது உணர்ச்சிக்கு அறிகுறியாக நிற்கும் காங்கிரஸ் இவைகளினால் பாதிக்கப்படாமல் இருக்க முடியவில்லை. காங்கிரஸ்காரர்களிற் பலர் தங்களுடைய தேசீயப் போர்வையின் கீழ் வகுப்பு வாதிகளாய் இருந்தார்கள். சீக்கியர்களும் ஏனைய சிறுபான்மைக் கூட்டத்தாரும் தங்களுக்கு சிறப்பாக உரிமைகளை வேண்டினார்கள். காங்கிரஸ் தலைவர்கள் பிடிவாதமாக எவ்வித வகுப்பு வாதக் கட்சியையும் ஆதரிக்க மறுத்தனர். அதனால் காங்கிரஸ் சபை எல்லா வகுப்பு வாதிகளின் கண்டனத்திற்கும் பாத்திரமாயிற்று. ஒத்துழையாமையின் துவக்க காலத்திலோ அல்லது அதற்குச் சிறிது முன்னேயோ வகுப்புப் பிரச்னையைத் தீர்க்க, காந்திஜீ ஒரு திட்டம் சொன்னார். அன்பினாலும் தாராளத்தினாலும் தான் பெரும்பான்மையோரான ஹிந்துக்கள் முஸ்லீம்களைத் தங்களோடு சேர்க்க முடியுமென்றும், முஸ்லீம்கள் கேட்பதை அப்படியே கொடுக்க ஹிந்துக்கள் சம்மதிக்கவேண்டுமென்றும் காந்திஜீ கூறினார். முஸ்லீம்களோடு பேரம் செய்வதற்குக் காந்திஜீ விருப்பவில்லை. அவர்களுடைய அன்பைக் கவர்வதற்கு அவர் விரும்பினார். தீர்க்கதரிசனத்தோடும் விஷயங்களைப்பற்றி உண்மையான மதிப்போடும் அவர் நிலைமையை உள்ளபடி அறிந்து பரிகாரம் கூறினார். ஆனால் பேரத்தினால் மட்டும் எதையும் சாதிக்க முடியுமென்றும் பேரஞ்செய்யத் தங்களுக்கு நன்றாகத் தெரியுமென்றும் எண்ணி இறுமாந்த ஏனையோர், காந்திஜீயின் யோசனையை ஏற்காமல் பேரம் செய்ய ஆரம்பித்தார்கள். பேரத்துக்கு அதிகவிலை கொடுக்கவேண்டுமே என்று அவர்கள் மிகுதியும் வருந்தினார்கள். ஆனால் அவர்கள் எதற்காக பேரம் செய்தார்களோ, அந்தப் பொருளின் உண்மையான மதிப்பு அவர்களுடைய கண்களில் தெளிவாகப் படவில்லை.

குறை கூறுவதும் பிறர்பேரில் பழி சுமத்துவதும் எளிதான காரியம். ஒருவன் தான் தோற்றுப் போனதற்காக மேற்கூறியவாறு சாக்குப்போக்கு சொல்ல நினைப்பது சாதாரண நிகழ்ச்சியாகும். தங்களின செயல் முறையில், ஏதோ

தவறு இருக்கிறது என்று எண்ணிக்கொள்ள மனதில்லாமல், மற்றவர்களின் அக்கிரமத்தால் தோல்வி நேர்ந்தது என்று சொல்வது இயல்புதானே! நாமோ அரசாங்கத்தாரையும் வகுப்புவாதிகளையும் குறை கூறுகின்றோம். ஆனால் அவர்களோ காங்கிரஸைக் குறை கூறுவார்கள். முன்பும் இப்பொழுதும்கூட, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நமக்குள் பிளவுகளை உண்டாக்குவதைத் தங்கள் முறையாகக் கொண்டிருக்கிறார்கள். 'மித்திரபேதம்' செய்வது எப்பொழுதுமே சாம்ராஜ்யத்தின் மூல தத்துவமாகும். ஆளுகிறவர், ஆளப்படுகிறவரைக் காட்டிலும் எவ்வளவு வரையில் சாமர்த்தியசாலிகளோ அவ்வளவு வரையில் ஆளுபவர்களுக்கு, இந்த உபாயத்தில் வெற்றி உண்டாகக்கூடும். இதைப்பற்றி குறைகூறலும் ஆச்சரியப்படலும் வீண். இதைக் கண்டு கொள்ளாமலும் இதற்கு மாற்றுத் தேடாமல் இருப்பதும் தவறு ஆகும்.

அரசாங்கம் கையாளும் மித்திரபேதக் கொள்கைக்கு நாம் எவ்வாறு மாற்று தேடிக்கொள்வது? முஸ்லீம்களோடு "சந்தை பேரம்" செய்வதா? ஹிந்துக்கள் முஸ்லீம்களுக்கு எவ்வளவு கொடுக்கத்தயாராயிருக்கிறார்களோ அதைக்காட்டிலும் அதிகமாகக் கொடுக்க, மூன்றாவது கக்ஷியாகிய அரசாங்கம் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது. மேலும் அரசாங்கம் வாக்குக் கொடுத்தால் அதை எளிதிலே நிறைவேற்றிவைக்க முடியும். பொதுவான தேசீய நோக்கம் இல்லாவிடின், பொதுவான எதிரியோடு, எல்லோரும் சேர்ந்து போராட முடியாது. தற்போதிருக்கும் அரசியல் பொருளாதார அமைப்பைக் கருத்தில் கொண்டு, அதைச் சில்லரை அம்சங்களில் திருத்தம் செய்து உத்தியோகஸ்தர்களை இந்திய மயமாக்க வேண்டுமென்று எண்ணினால், பொதுஜனங்கள்யாவரும்ஒன்று சேர்ந்து போராடுவதற்குத் தேவையான தூண்டுதல்இல்லாமல் போய்விடுகிறது. இந்தியர்களுக்கு உத்தியோகம் என்ற நோக்கத்தால், கொள்ளையிலே பங்கு வேண்டும்என்றுஆகிவிடும். மூன்றாவது கக்ஷியான சர்க்கார தமக்குத் தேவையான ஆட்களுக்கு வேண்டுவன செய்து, எப்பொழுதும் நிலைமையை அடக்கி ஆண்டு கொண்டிருக்க முடியும். உத்தியோகத்தை அடியோடு மறந்து, இந்திய ஜனசமூகத்தை வேறுவிதமாக அமைக்க வேண்டுமென்று நோக்கம் கொண்டால் தான், உண்மையான அரசியல் அஸ்திவாரத்தைக் கொண்டு எல்லோ

ரையும் சேர்த்து போராடுவதற்கான வழியைத் தேட முடியும். பூர்ண ஸ்வராஜ்யம் கேட்கும் நோக்கம் தான் என்ன? அதிகார வர்க்கத்தை இந்திய மயமாக்க வேண்டு மென்பது நோக்கமல்ல; குடியேற்றநாட்டு அந்தஸ்தைப்பெற்று பிரிட்டிஷ் மந்திரிகள் பின்னிருந்து இழுக்க இந்திய பொம்மைகள் ஆடும் அரசியல்அமைப்பை ஏற்பதல்ல. இந்திய ஜனசமூகத்தை புதிதானவகையில் அமைக்கவேண்டும் என்பதை ஜனங்கள் உணரும்படி செய்வதுதான் பூர்ண ஸ்வராஜ்யத்தின் நோக்கம் ஆகும்.

நாங்கள் அப்பொழுது கோரிய அரசியல் சுதந்திரத்தில் ஜனங்களின் பொருளாதார சுதந்திரம் சேர்க்கப்படவில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலையைத்தான் அது குறிப்பிட்டது. ஆனால், ஆங்கில முதலாளிகளின் அதிகாரம் நீங்கினால் இந்தியா பொருளாதார சுதந்திரம் அடையும். பிறகு சமூகப்பொருளாதார மாறுதல்கள் சேர்வது எளிதாகும் என்று அப்பொழுது எண்ணினேன். ஆனால் இப்பொழுது என் அபிப்பிராயம் மாறிவிட்டது. அரசியல் விடுதலை தானாகவே வராதென்றும், சமூக விடுதலையோடு கூடித்தான் வருமென்று நம்புகிறேன். ஆனால் அநேகமாக நமது தலைவர்கள் எல்லோரும், பழைய அரசியல் அமைப்பின் தோரணையிலேயே யோசித்துக்கொண்டிருந்தார்கள். இந்த மனோபாவத்தைக் கொண்டே எல்லாவிதப் பிரச்னைகளுக்கும் பரிகாரம்தேட முயன்றார்கள். அதனால் அரசியல் அமைப்பை அடக்கி யாண்டு வரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வலையில் அகப்பட்டுக்கொண்டு, இவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நமது தலைவர்களில் பெருமபான்மையோர் சீர்திருத்தக்காரர்கள். புரட்சிக்காரர்கள் அல்ல. சில சமயங்களில் அவர்கள் சட்ட மறுப்பில் கலந்துகொண்டிருந்தபோதிலும், சமூக அமைப்பில் புரட்சி ஏற்படவேண்டுமென்ற முடிவில்லாதவர்களாக விருந்தமையால், அவர்களுக்கு வேறுவழியில்லை. ஆனால் சீர்திருத்த முறைகளினால் இந்தியாவின் பிரச்னைகளைத் திருப்திகரமாகத் தீர்த்துவைக்கும் காலம், வெகு காலத்துக்கு முன்னேயே சென்றுவிட்டது. புரட்சி மனப்பான்மை, புரட்சித் திட்டம், புரட்சிப் பிரசாரங்கள்—இவைகள் தான் நாட்டுக்கு இப்பொழுது தேவையானவையாகும். ஆனால் இவைகளை நாட்டுக்கு அளிக்கக்கூடியவர்கள், தலைவாகளில் யாருமே இல்லை.

நமது லட்சியத்திலும் போராட்டத்திலும் தெளிவான கருத்துக்கள் இருக்கப்பெறுமையால், வகுப்புவாத வெறி பரவத் துவக்கிற்று. தங்களுடைய துயரம்நிறைந்த தினசரி வாழ்க்கைக்கும் ஸ்வராஜ்யப் போராட்டத்துக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகப் பொதுஜனங்கள் காணமுடியவில்லை. அவர்கள் தங்களுடைய இயற்கை உணர்ச்சியைக் கொண்டு சில சமயங்களில் தீவிரமாகப் போராடினார்கள். ஆனல், இயற்கை உணர்ச்சிமட்டும் போதாது; ஆராய்ச்சி இல்லாமற்போனல், நெருக்கடிக் காலத்தில் வகுப்புவாதிகள் பொது மக்களின் இயற்கை உணர்ச்சியை மதத்தின் பேரால் துஷ்பிரயோகப் படுத்திக் கொள்வார்கள். மதத்தின் பேரைச் சொல்லி, பொது மக்களுக்கு துளிக்கூட சம்பந்தமில்லாத கோரிக்கைகளிலும் திட்டங்களிலும் நம்பிக்கையும் அனுதாபமும் உண்டாகும்படியாக சிலர் செய்தது ஆச்சரியமாகவே இருக்கிறது. வகுப்புவாதிகளின் கிளர்ச்சியின் நோக்கத்தைக் கூர்ந்து நோக்கினல், அது உத்தியோக வேட்டையிலே கொண்டு போய்விடும். உத்தியோகம் எத்தனை பேர்களுக்கு கிடைக்கமுடியும்? சில பிரத்தியேகமான ஸ்தானங்கள் தங்களுக்கு சட்டசபைகளில் வேண்டுமென்று வகுப்புவாதிகள் கிளர்ச்சி செய்கின்றார்கள். இதனுடைய கேடு பலருக்கு விளங்குவதே இல்லை. இந்தக் கிளர்ச்சியால் சிலருக்கு சௌகரியம் ஏற்படலாம். ஆனல் இவைகளால் தேசத்தின் ஒற்றுமைக்கும், முற்போக்குக்கும் தடைகள் ஏற்பட்டுவிடுகின்றன. இந்தச் சலுகைகளே அந்தந்த சமூகங்களின் உண்மையான கோரிக்கைகள் என்று சிலர் சாமர்த்தியமாகக் காண்பிக்கப் பார்ப்பது வேடிக்கையாக இருக்கிறது. இச்சலுகைகள் சாதாரண ஜனங்களுக்கு எவ்விதத்திலும் பயன்படமாட்டா என்ற உண்மையை மறைப்பதற்கு மதவெறி வளர்க்கப் பட்டது.

அரசியலில் பிற்போக்கானவர்கள் எல்லோரும் வகுப்புவாத மூலமாக அரசியல் அரங்கத்தில் ஏறித்தலைவர்களாகவும் ஆகிவிட்டார்கள். இவர்கள் தங்களுடைய வகுப்புக்களுக்காகப் பாடுபடவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் அல்ல. நாட்டின் அரசியல் முற்போக்கை எப்படியேனும் தடுக்க வேண்டுமென்பதுதான் இவர்களுடைய கருத்து. இவர்களுடைய எதிர்ப்பைத் தேசிய வாதிகள் நன்றாக எதிர்பார்த்த போதிலும், இந்த வகுப்புவாதிகள் எவ்வளவு கேவலமான

செயல்களுக்கும் தயாராய் இருக்கின்றனர் என்பதைக் காண வருத்தமாய் இருக்கிறது. முஸ்லீம் வகுப்புவாதத் தலைவர்கள், நம்பமுடியாத பல விஷயங்களை பகிரங்கமாகச் சொல்லத் துவக்கினார்கள். இந்திய தேசியத்துக்காவது இந்திய விடுதலைக்காவது, அவர்கள் கவலைகொண்டிருப்பதாக காணப்படவில்லை. ஹிந்து வகுப்புவாதத் தலைவர்களோ, தேசியப் போர்வையில் இருந்துகொண்டு அலங்காரமாகப் பேசினாலும், அனுபவத்தில் தங்கள் தேசியத்தைக் காண்பிப்பதே இல்லை. எப்பொழுதும் அரசாங்கத்தார்களுக்கு அடிபணியும் வழக்கத்தைக் கைக்கொண்டார்கள். ஆனாலோ, இரண்டு கட்சித் தலைவர்களும் அபேதவாத இயக்கங்களை கண்டிப்பதில் பின் வாங்குவதில்லை. முதலாளிமார்களின் உரிமைகளுக்குப் பங்கம் நேருவதாகத் தோன்றின், இந்த இரண்டு கூட்டத் தலைவர்களும் ஒன்று சேர்ந்துகொள்வார்கள். இந்திய தேசிய பொருளாதார விடுதலைகளுக்கு பாதகமாக பலவற்றை முஸ்லீம் வகுப்புத் தலைவர்கள் சொன்னார்கள். பலவற்றைச் செய்தார்கள். ஆனால் சர்க்காரிடமும் பொது ஜனங்களிடமும், அவர்கள் சிறிது தன் மதிப்போடு நடந்துகொண்டார்கள். ஆனால் இதே மாதிரி ஹிந்துவகுப்புவாதத் தலைவர்களைப் பற்றி சொல்ல முடியாது.'

காங்கிரசில் பல முஸ்லீம்கள் இருந்தனர். அவர்களது எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இந்தியாவில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த முஸ்லீம் தலைவர்களிற்பலர் காங்கிரஸில் சேர்ந்திருந்தார்கள். இந்தக் காங்கிரஸ் முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்துகொண்டு, தேசீய முஸ்லீம் கக்ஷி என்ற கக்ஷியை அமைத்து முஸ்லிம் வகுப்புவாதத் தலைவர்களின விஷமப்பிரசாரத்தைத் தடுத்துப் போராடினார்கள். ஆரம்பத்தில் அவர்களுக்கு சிறிதளவு வெற்றி ஏற்பட்டிருக்கலாம். படித்த முஸ்லிம்களிற் பலர் அந்தக் கக்ஷியை ஆதரித்ததாகத் தோன்றிற்று. ஆனால் அவர்கள் உயர்ந்த வகுப்பு முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பொது ஜனங்களின் மனத்தைக் கவரக்கூடிய தலைவர்கள் இல்லை. அவர்கள் தங்கள் தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள். வியாபாரம் செய்தார்கள். அவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் தொடர்பே கிடையாது. உண்மையிலேயே அவர்கள் பொது மக்களிடையே பிரசாரம் செய்ததும் இல்லை. அவர்கள் சிறிய அறைகளில் கூடிக் கலந்து கொள்வார்கள். அங்கே

ஒப்பந்தங்களும், ஏற்பாடுகளும் செய்து கொள்வார்கள். ஆனால் பயன் என்ன ? வகுப்புவாதத் தலைவர்களோ, இவர்களைக் காட்டிலும் சாமர்த்தியசாலிகள். வகுப்புத் தலைவர்கள் தேசீய முஸ்லிம்களின் மனப்பான்மையைச் சிறிது சிறிதாக மாற்றி இறுதியில், அவர்களுடைய கொள்கைகளையே விட்டுவிடும் படியாக செய்துவிட்டார்கள். தங்களுடைய தோல்வியைத் தடுத்துக் கொள்வதற்காக, வகுப்புவாதத் தலைவர்களோடு தேசீய முஸ்லிம்கள் ராஜி முயற்சி செய்வார்கள். இதனால் அடுத்தடுத்து தேசீய முஸ்லிம்களுக்கு தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டுக் கொண்டுவந்தது. இவ்வாறு தேசீய முஸ்லிம்கள் தங்கள் கொள்கைகளை ஒவ்வொன்றாக விட்டுக் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். கடைசியாக அவர்களுக்கு மிகுந்து நின்றது கூட்டு வாக்குத் தொகுதி ஒன்றுதான். சிறிய கஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற பழைய வேதாந்தப்படிக்கு யோசனை செய்து, தேசீய முஸ்லிம்கள் கூட்டுத் தொகுதிக் கொள்கையையும் பறிகொடுத்து விட்டார்கள். இன்றைக்கு அவர்களுடைய பழைய கொள்கைகளில் எதுவும் அவர்களிடம் இல்லை. அவர்களுடைய பழைய பெயர்தான் பாக்கியாக இருக்கிறது.

தேசீய முஸ்லிம்கள் இவ்வாறு குட்டிக்கரணம்போட்ட வரலாறு, மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது. அவர்கள் இன்னும் காங்கிரஸில் முக்கிய தலைவர்களாகத்தான் இருக்கிறார்கள். இந்த வரலாறு பூர்த்தியாவதற்கும் பல ஆண்டுகள் பிடித்தன. 1923-ம் ஆண்டிலும் அதன் பின்பு சில வருஷங்களிலும், தேசீய முஸ்லீம்கள் கட்டுப்பாடாகவும் தீவிரமாகவும், முஸ்லீம் வகுப்புவாதிகளுக்கு எதிராக நன்றாகப் போராடினார்கள். அநேக சமயங்களில் முஸ்லிம் வகுப்பு வாதிகளுடைய கோரிக்கைகளுக்கு இணங்க, காந்திஜீ தயாராக இருந்தார். வகுப்பு வாதிகளுடைய கோரிக்கைகள் காந்திஜீக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் ஏற்றுக்கொள்ள அவர் சம்மதித்தார். ஆனால் அவரது தோழர்களான தேசீய முஸ்லீம் தலைவர்கள் இதைத் தடுத்து விட்டார்கள். வகுப்புவாதிகளோடு உறவுகூடாது என்று ஆக்ஷேபித்து விட்டார்கள்.

1923-25-ம் வருஷங்களில் வகுப்பு வாதப் பிரச்னையை எப்படியாவது தீர்த்து வைக்கவேண்டுமென்று தலைவர்கள் பலதடவை கூடிக் கலந்துபேசினார்கள். ஒற்றுமை மகாநாடு

களைக் கூட்டினார்கள். இவைகளில் மிகுந்த சிறப்புடன் கூட்டப்பட்டது மகமது அலி அவர்களால் கூட்டப்பட்ட மகாநாடுதான். அவர் 1924-ம் வருஷத்திய காங்கிரஸ் பிரசிடெண்டு. காந்திஜீ 21 நாள் உண்ணாவிரத மிருந்தகாலையில், டில்லியில் இந்த மகாநாடு கூட்டப்பட்டது. நல்லெண்ணக்காரர்களும், சிரத்தை வாய்ந்தவர்களும் பலர் அந்த மகாநாடுகளில் ஒற்றுமையை நாட்டுவதற்கான முயற்சிகளைச் செய்தார்கள். ஏட்டளவில் உயர்ந்த பலதீர்மானங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டன. ஆனால் பிரச்னையின் அடிப்படையான சிக்கலுக்கு மாற்று ஏற்படவில்லை. இந்த மகாநாடுகளால் ஒற்றுமையை நாட்ட முடியாது. பெரும்பான்மையோரின் வோட்டுகளால், பரிகாரத்தைச் செய்ய முடியாது. ஏகமானதாக ஒற்றுமை யேற்பட்டால் தான், தேசத்தில் ஒற்றுமை கைகூடும். எந்த மகாநாடுகளிலும் தங்கள் கோரிக்கைகளை முற்றிலும் ஒப்புக்கொண்டாலொழிய் ஒற்றுமைக்கு வரக்கூடாத சில வம்பர்கள் இருந்தே தீருவார்கள். அநேக வகுப்பு வாதிகளுக்கு ஒற்றுமைவழி தேடுவதில், ஆவலிருந்ததாகவே சொல்லமுடியாது. அவர்களிற் பலர் அரசியலில் பிற்போக்காளர்கள். அரசியலில் தீவிர மாறுதல்களை வேண்டுபவர்களுக்கும் இந்தப் பிற்போக்காளர்களுக்கும் இடையே பொதுவான மனப்பான்மையே கிடையாது.

வகுப்புவாத வெறிக்கு உண்மையான காரணங்கள் வேறு. தனி நபர்கள் தவறான பாதைகளில் சென்றதனால், இந்த வகுப்புத் தொல்லைகள் ஏற்படவில்லை. தங்களுக்கு பிரத்யேக உரிமைகள் வேண்டுமென்று சீக்கியர்களும் உரக்கக் கூச்சல்போட ஆரம்பித்தார்கள். பாஞ்சாலத்திலே, சிக்கலான முக்கோண நிலை ஏற்பட்டுவிட்டது. ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சீக்கியர்களும் மூன்று கூறுகளாக பாஞ்சாலத்திலே பிரிந்து, தத்தமக்கு பிரத்யேக உரிமைகளை வேண்டினார்கள். வகுப்புவாதத்துக்கு பாஞ்சாலம் நிலைக்களமாக ஆகிவிட்டது. ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தைக் கண்டு பயந்ததனால், அந்த மாகாணத்தில் வெறியும் வெறுப்பும் தாண்டவமாடின. இன்னும் சில மாகாணங்களில் ஜமீன்தார்கள் ஹிந்துக்களாயும் பயிரிடும் குடிமக்கள் முஸ்லீம்களாயும் இருந்தமையால், அந்த மாகாணங்களிலும் வகுப்பு வெறி தோன்றலாயிற்று. இத்தகைய தொல்லை வங்காளத்தில் அதிகம். பாஞ்சாலத்திலும், சிந்துவிலும் பணக்காரர்களும் லேவா

தேவி நடத்துவோர்களும் பொதுவான ஹிந்துக்களாயிருந்தார்கள். கடன்காரர்களோ, முஸ்லீம் குடியானவர்கள். எனவே ஏழைக் கடன்காரன் தனது லேவாதேவிக்காரனிடம் கொண்ட துவேஷமும் வகுப்பு வாத வெறியில் சேர்ந்து கொண்டு துன்பத்தை விளைவித்து வந்தது. பொதுவாகவே, முஸ்லீம்கள் ஏழைகள். முஸ்லீம் வகுப்புவாதத் தலைவர்கள் இதைத் தங்கள் பிரசாரத்துக்கு நன்றாக உபயோகப் படுத்திக் கொண்டார்கள். பணக்காரர்களுக்கு விரோதமாக ஏழைகளைக் கிளப்பிவிட்டார்கள். இதனால் ஏழைகளுக்கு யாதொரு லாபமும் இல்லை. பெரும்பான்மையான முஸ்லீம்கள் ஏழைகளாய் இருந்தபடியால், முஸ்லீம் வகுப்புவாதத் தலைவர்கள் செல்வாக்கு பெற்று அவர்களுக்குப் பிரதிநிதிகளாக வேஷம் போட்டு பொதுஜனத் தலைவர்களைப் போல ஆகிவிட்டார்கள். ஹிந்து வகுப்புவாதத் தலைவர்களோ, பணக்காரர்களுக்கும் தொழில் நடத்தும் முதலாளிகளுக்கும் பிரதிநிதிகளைப்போல இருந்தார்கள். அவர்களுக்கும் ஹிந்து பொதுஜனங்களுக்கும் சம்பந்தமே இல்லை. ஹிந்துப் பாமர மக்கள் இந்தத் தலைவர்களுக்கு சில விசேஷ சமயங்களில் தவிர, சாதாரணமாக ஆதரவு அளிக்கவுமில்லை.

வகுப்புப் பிரச்னை பொருளாதாரத்தோடு கலந்திருக்கிறது என்பதை வெகு பேர்கள் தெளிவாக உணர்வதில்லை. இறுதியிலே இது தொழிலாளி போராட்டமாக முடியலாம். அந்தக்காலம் வரும்பொழுது, இப்பொழுது வகுப்புவாதத் தலைவர்களாயிருக்கப் பட்டவர்கள் இந்து முஸ்லீம் அல்லது சீக்கியரானாலும் சரியே, அவர்கள் யாவரும் முதலாளிகளை காப்பற்றுவதற்காக ஒன்றுசேர்ந்து கொள்வார்கள். ஏழைகள் நசுக்கப்படுவார்கள் என்பது உறுதி. தற்போதைய நிலைமையிலேயே இந்தப் பிரச்னைக்கு பரிகாரம் தேடுவது கஷ்டமான காரியம் அல்ல. ஆனால் மூன்றாவது கக்ஷி இருக்கும் வரையிலும், இது எளிதானதல்ல.

1924-ஆம் வருஷத்தில் டில்லியில் நடைபெற்ற ஒற்றுமை மகாநாடு முடிந்ததோ இல்லையோ, அலகாபாத்தில் ஹிந்து முஸ்லீம் கலகம் உண்டாயிற்று. அதிக உயிர்ச்சேதமில்லாததால், அந்தக் கலகத்தைப் பெரிதாகச் சொல்ல முடியாது. ஆனால் என்னுடைய சொந்த நகரத்தில் இந்த கலகங்கள் ஏற்பட்டதைக் கண்டு, எனக்கு மிகவும் வருத்தமாய் இருந்தது. நானும், சிலரும் டில்லியிலிருந்து அலகாபாத்

துக்கு விரைந்து சென்றோம். ஆனால் நாங்கள் அலகாபாத்துக்குப் போய்ச் சேரும் முன்னரே, கலகம் அடங்கிப் போய்விட்டது. மழை நின்றாலும் தூவானம் நிற்காததைப்போல், கலகம் முடிந்தும், அதன் பின் வெகு காலத்திற்கும் மனஸ்தாபமும், கோர்ட் வழக்குகளும் ஏற்பட்டன. கலகம் எப்படி உண்டாயிற்று என்பது எனக்கு ஞாபகமில்லை. அந்த வருஷமோ அதற்குப் பிறகோ, அலகாபாத்தில் ராம் லீலா விழா கொண்டாட்ட சம்பந்தமாகக் கொஞ்சம் தொல்லை ஏற்பட்டது. மசூதியின் முன்னே சங்கீதம் கூடாது என்று அதிகாரிகள் தடை உத்திரவு செய்ததால், திரளான கூட்டங்கள் கூடும் ராம் லீலா விழாவை ஹிந்துக்கள் கொண்டாட இஷ்டப்படவில்லை. சுமார் 8 ஆண்டுகளாக ராம் லீலா விழா அலகாபாத்தில் கொண்டாடப்படவே இல்லை. இந்தத் திரு விழா அலகாபாத் ஜில்லாவில் எத்தனை லட்சக் கணக்கான ஜனங்களுக்கு மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அளித்து வந்தது! விழா நின்று போய் அது வெறும் நினைவாக மட்டும் போய்விட்டது. நான் சிறு குழந்தையா யிருக்கும்பொழுது ராம் லீலாக் கொண்டாட்டத்தில் எவ்வளவு உற்சாகத்துடன் கலந்துகொள்வேன்! எங்களுக்கு எவ்வளவு குஷி உண்டாகும்! ராம் லீலா ஒரு ஹிந்து விழாவாக இருந்த போதிலும், திரளான முஸ்லீம்களும் அதில் கலந்துகொள்வார்கள். எங்கு பார்த்தாலும் கொண்டாட்டமும், மகிழ்ச்சியுமே காணப்படும். வியாபாரம் மிகுதியாக ஆகும். பல ஆண்டுகளுக்குப் பின்னர் இதே விழாவை நான் கண்ணுற்றபொழுது, எனக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை. ஊர்வலமும், கோலாகலமும் வெறுப்பை உண்டாக்கின. விழாக்களையும், கலைகளையும் பற்றி என் ருசிகள் மாறிவிட்டன.

என்றாலும் விழாவைத் திரளான ஜனங்கள் பெரு மகிழ்ச்சியுடன் அனுபவித்தார்கள். அது ஒரு பெரிய தமாஷாக் காலம். இப்பொழுது எட்டு ஒன்பது ஆண்டுகளாக, இந்த ராம லீலா விழாவைக் கண்டு மகிழ்ச்சியும், குதூகலமும் அடைவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பம் அலகாபாத் குழந்தைகளுக்கு இல்லாமற்போனது வருந்தத் தக்கது. இத்தகைய அரிய சந்தர்ப்பம் போய்விட்டது எதனாலே? அற்பச் சச்சரவுகளினாலே. மனிதனுடைய மகிழ்ச்சியை மதம் கெடுக்க வேண்டுமா? இது உண்மையானால் மதத்தை மகிழ்ச்சியின் கொலைஞன் என்று பெயரிட்டு ஏன் அழைக்கக் கூடாது?

# XX

## நகரசபை வேலை

இரண்டு வருஷத்துக்கு அலகாபாத் நகரசபை வேலையைச்செய்து கொண்டுவந்தேன். ஆனால் அதனிடம் எனக்கு வெறுப்பு அதிகரித்துக்கொண்டே வந்தது. நகரசபைத் தலைவன் என்ற முறையில், எனது உத்தியோக காலம் மூன்று வருஷம். இரண்டாவது வருஷம் முதலிலேயே, அந்தப் பொறுப்பை ஒழித்துவிடலாமா வென்று யோசிக்கலானேன். வேலை எனக்குப் பிடித்தமானதுதான். அது சம்பந்தமாக எனது கவனத்தை முழுதும் செலவிட்டுவந்தேன். எனது வேலையிலும் நான் ஓரளவு வெற்றிபெற்றேன். என்னுடைய தோழர்களின் நன்மதிப்பையும் அடைந்தேன். மாகாண அரசாங்கம்கூட, என்னிடமிருந்த அதனுடைய வெறுப்பை ஒருவாறு நீக்கிக்கொண்டு, என்னுடைய நகரசபை வேலைகளைப் புகழவும் செய்தது. என்றாலும், உண்மையான தொண்டு செய்யமுடியாதபடி, நாலாபக்கங்களிலும் எனக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. வேண்டுமென்றே உண்டாக்கிய தடைகள் அல்ல. உண்மையிலேயே என்னோடு எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால் ஒரு பக்கத்திலே அரசாங்கம், மற்றொரு பக்கத்திலே நகரசபை அங்கத்தினர்களின் பொறுப்பின்மை. பொது மக்களும் அக்கரை எடுத்துக்கொள்வதில்லை. அரசாங்கத்தால் இரும்புக் கூடுபோல் அமைக்கப்பெற்ற நகரசபையின் நிர்வாகத்தில் எத்தகைய மாறுதலையும், சீர்திருத்தத்தையும் எளிதில் செய்யவே முடியாது.

நகரசபையோ, பணத்துக்கு எப்பொழுதும் அரசாங்கத்தைத் தொங்கிக்கொண்டேயிருக்கவேண்டும். தற்போதிருக்கும் நகரசபைச் சட்டங்களின் கீழ், எத்தகைய சீர்திருத்தத் திட்டத்தையும் வரி விதிக்கும் திட்டத்தையும் அமுலுக்கு கொண்டுவர முடியாது. சட்டப்படிக்கு உள்ள திட்டங்களுக்கும் அரசாங்கத்தின் அனுமதிவேண்டும். இந்த அனுமதி அரசாங்கத்தினிடமிருந்து எத்தனை ஆண்டுகள் கழித்து கிடைக்குமோ, அதைத் திட்டமாகச் சொல்ல முடியாது.

அரசியல் நிர்வாக யந்திரம் எவ்வளவு மெதுவாகவும் திறமைக் குறைவுடனும் இயங்கி வந்தது என்பதைக் காண, எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நிர்மாணத் திட்டத்தை, நகரசபையில் கொண்டுவந்தால், அதை அரசாங்கம் எளிதிலே அங்கீகாரம் செய்யாமல், மழுப்பிக் காலம் கடத்திக்கொண்டேவரும். ஆனால், காங்கிரஸ்கார எதிரியை அடக்கவோ அல்லது அடித்துக் கீழே தள்ளவோ, வேண்டுமானால், அரசாங்கம் எவ்வளவு விரைவில் வேலை செய்யும் என்பதும் ஆச்சரியமாகத்தானிருக்கிறது. இந்த வித்தியாசம் குறிப்பிடத் தக்கதாகும்.

மாகாண அரசாங்கத்தில், ஸ்தல ஸ்தாபன இலாக்காவை ஒரு மந்திரி மேற்பார்த்து வந்தார். அநேகமாக இவருக்கு நகர சபை அலுவல்களும் பொதுஜன ஊழியமும் இன்னதென்றே தெரியாது. மேலும் இவரைக் கேட்டு ஒன்றும் செய்யப்படுவதுமில்லை. ஐ. ஸி. எஸ். கூட்டத்தைச் சேர்ந்த காயமான உத்தியோகஸ்தர்கள், இந்த இலாக்காவை முழுதும் நடத்திவந்தார்கள். அரசாங்கத்துக்கு 'போலீஸ் காவல்' வேலைதான் முக்கியமானது என்று இந்தியாவிலிருக்கும் சில உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்களே, அந்த எண்ணத்தைத் தழுவி, ஸ்தல ஸ்தாபன இலாக்காவை நிர்வாகஞ்செய்யும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலையைச் செய்துவந்தார்கள். பெரியோர் எளியோரிடம் சிறிது கிருபை செய்யவேண்டுமென்று நினைத்தார்களேயொழிய, ஜன சமூகத்தொண்டை விரிவாகச்செய்யவேண்டும் என்ற தேவையை இவர்கள் உணர்ந்ததாகவே தெரியவில்லை.

அரசாங்கத்தார், நகர சபைகளுக்குப் பணம் கடன் கொடுத்திருக்கிறார்கள். எனவே ரொக்கக் கடைக்காரர்களின் நோக்கைக்கொண்டு, அரசாங்கத்தார் நகர சபைகளைக் கவனித்துவருகிறார்கள். நகர சபைகள் தவணை தவறாமல் கடனைச் செலுத்திவருகின்றனவா? நகரசபையின் நாணயம் நன்றாயிருக்கிறதா? செலவுபோக கணிசமான மீதம் இருக்கிறதா? இவைகளைப்பற்றிதான் அரசாங்கத்தார் சாதாரணமாகக் கவலைப்படுவார்கள். இந்தக் கேள்விகள் நியாயமான, தேவையான கேள்விகள்தான். ஆனால் கல்வி, சுகாதாரம் முதலிய முக்கியமான தொண்டுகளை நகரசபை செய்ய வேண்டும் என்பதை அடிக்கடி மறந்துபோகிறார்கள். நகர சபைகள் கடன் வாங்கித் தவணை தவறாமல், திருப்பிக்கொடுக்

கும் ஸ்தாபனம் மட்டும் அல்ல என்பதை எப்பொழுது உணருவார்களோ? இந்திய நகரசபைகள் அளிக்கும் ஜன சமூகத்தொண்டுகள், மிகுதியும் குறைந்தவையாகும். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் இந்தத் தொண்டுகளும் நின்று போகும். பணம் இல்லையென்று கல்வியை நிறுத்திவிடுவார்கள். நகரசபைப் பள்ளிக்கூடங்களில் அரசாங்கக் கூட்டத்தார்களுக்கு அக்கறை இல்லை. அவர்களது குழந்தைகள் உயர்ந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு செல்வதால், அவர்களுக்கு ஏன் அக்கறை இருக்கவேண்டும்?

இந்தியாவிலிருக்கும் நகரங்களை இரண்டு கூறுகளாகப் பிரிக்கலாம். நகரத்தின் ஒரு பகுதியிலே ஜனநெருக்கமாயிருக்கும். இன்னொரு பகுதியிலே பங்களாக்களும் தோட்டங்களும் விஸ்தாரமான காம்பவுண்டுகள் கொண்ட வீடுகளும் இருக்கும். இந்த பங்களா தோட்டப் பகுதிக்கு "சிவில் லைன்ஸ்" என்று இங்கிலீஷ்காரர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்த சிவில் லைன்ஸ் பகுதியிலேதான் இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்கள், தொழில் நடத்தும் முதலாளிகள், உயர்தர இந்தியர்கள் முதலியவர்கள் வசிக்கிறார்கள். இந்தப்பகுதியிலிருந்து நகரசபைக்கு வரும் வருமானத்தைக்காட்டிலும் ஜனநெருக்கமான பகுதியிலிருந்துதான் அதிகமான வருமானம் வரும். ஆனால் சிவில் லைன்ஸ் பகுதிக்கு செலவழிக்கிற பணமோ ஏராளம்! ஏனெனில் இந்தப்பகுதி விஸ்தீரணத்தில் அதிகமாக இருக்கிறது. அதிகமான ரஸ்தாக்கள் தேவை. அவைகளைத் தண்ணீர் தெளித்து சுத்தப்படுத்தி பழுதுபார்த்து விளக்குப்போட வேண்டும். சாக்கடை வசதி, குடித்தண்ணீர் வசதி, சுகாதார வசதி இவைகள் அதிகமாகக் கவனிக்கப்படவேண்டும். ஆனால் நகரத்தின் நெருக்கமான பகுதியோ, எப்பொழுதும் அலட்சியம் செய்யப்பட்டு வருகின்றது. அதுவும் ஏழைகள் வசித்துவரும் பகுதிகளைப்பற்றி, சொல்லவே தேவை இல்லை. இந்தப்பகுதியில் சில பாதைகள்தான் நன்றாக இருக்கும். அதனுடைய குறுகிய சந்துகளில் அநேகமாக விளக்கே இருக்காது. சுகாதாரமும், சாக்கடை வசதிகளும் நன்றாக இருக்கமாட்டா. என்றாலும் அந்தப்பகுதி மக்கள் இவைகளையெல்லாம் பொறுமையுடன் சகித்துக்கொண்டு, முறையிடுவதே இல்லை. அப்படியே முறையிட்டுக்கொண்டபோதிலும் ஒன்றும் பலன் கிடைப்பதுமில்லை. அநேகமாக, "பெரிய சப்தங்களும் சின்ன சப்தங்களும்" சிவில் லைன்ஸ் பகுதியி

லேயே வசித்து வருகின்றன. அவர்களுக்குத்தான் நகரசபை வேண்டிய செளகரியங்களைச் செய்துகொடுக்கும்.

இந்த வரிச்சுமையை நேர்படுத்த எண்ணி, சில திருத்தங்களைச் செய்ய எத்தனித்து, நிலமதிப்பின்பேரில், ஒரு புதிய வரியை விதிக்க எண்ணினேன். இந்த யோசனையை நான் வெளியிட்டதுதான் தாமதம். உடனே அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் (அவர் ஜில்லா மாஜிஸ்டிரேட் என நினைக்கிறேன்) ஆட்சேபித்துவிட்டார். இந்த வரி விதிப்பு, ஏற்கனவே நிலசம்பந்தமாக இருந்த சட்டங்களுக்கு, விரோதமானது என்று காரணங்காண்பித்து, அவர் ஆட்சேபித்தார். ஆனால் உண்மை என்ன? இந்த புதிய வரியை விதித்திருந்தால், ஸிவில் லைன்ஸ்களில் வசிக்கும் பங்களா சொந்தக்காரர்களுக்கு அதிகமான வரி விதிக்கப்பட்டிருக்கும். ஏழைகளை மிகுதியும் வருத்தி, எல்லாச் சாமான்களுக்கும் விலைகளை உயர்த்தி வியாபாரத்தை நசுக்குகிற "ஆக்ட்ராய்" வரியை, அரசாங்கத்தார் அங்கீகரித்திருக்கிறார்கள். இந்த வரிதான் நகர சபையின் பெரும்பகுதி வருமானத்துக்கு ஆதாரமாகும். இந்த அநியாயமான வரியை ஆட்சேபிப்பதற்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு தோன்றவில்லையே?

நகரசபைத் தலைவன் என்ற ஹோதாவில் இரண்டு கூட்டத்தாரோடு நான் பழக நேர்ந்தது. ஒரு பக்கத்தில் அரசாங்கத்தாரோடும் இன்னொரு பக்கத்தில் நகரசபை அங்கத்தினர்களான எனது தோழர்களோடும் பழக நேர்ந்தது. அரசாங்கமோ பழைய சுவடுகளிற் சென்றுகொண்டேயிருக்கின்றது. அது வேகமாகவோ அல்லது வேறு பக்கமாகவோ செல்ல, பிடிவாதமாக மறுத்துவிடுகின்றது. என்னுடைய தோழர்களும் இதேபோன்று, தங்கள் பழைய பாதையிலேயே சென்று வந்தார்கள்.

நகரசபை அரசாங்கத்தினர்களிற் சிலர் மிகுந்த உற்சாகிகள். அவர்கள் தங்கள் வேலையை அக்கரையுடன் பார்த்து வந்தார்கள். ஆனால் நகரசபையை பொதுவாகநோக்குமிடத்து அங்கத்தினர்களிடம் சீர்திருத்தத்துக்கு ஆவலும் கருத்தும் இல்லை யென்றே சொல்லவேண்டும். "பழைய வழிகள்தான் நன்றாயிருக்கின்றனவே! புதிய முறைகளைக் கையாண்டு ஏன் சோதனை செய்யவேண்டும்? பலனில்லாமல் போனாலும் போகும்" என்று தோழர்கள் வாதம் செய்யத்துவக்கினார்கள். உற்சாகிகளாயிருந்த சிலரும், இந்த விஷப்புகை வாதத்திலே

கொஞ்சங்கொஞ்சமாகச் சிக்கிக்கொண்டார்கள். ஆனால் ஒரு விஷயத்திலே மட்டும் அங்கத்தினர்கள் யாவரும் மிகவும் உஷாராக இருந்தார்கள். நகரசபையார் நியமிக்கவேண்டிய உத்தியோகங்களில்மட்டும் மெம்பர்களுக்கு அக்கரை. எல்லோரும் சிபார்சு செய்யக் காத்துக்கொண்டிருப்பார்கள். உத்தியோகம், இந்தமுறையில் கொடுக்கப்படுமாகில், நிர்வாகம் நன்றாக நடைபெறுமா?

ஒவ்வொரு ஆண்டும் பத்திரிகைகளும் அரசாங்கத் தீர்மானங்களும், ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தைப் பற்றி விமர்சனம் செய்து அவைகளுடையபல குறைகளை எடுத்துக் காண்பிக்கின்றன. இந்தியாவுக்கு ஜனநாயக அமைப்புகள் ஏற்றவையல்லவென்று இந்த விமர்சனத்திலிருந்து முடிவுகட்டிவிடுவார்கள். அவைகளின் குறைகள் மிகுதியானவை என்பது உண்மைதான். ஆனால் ஸ்தல ஸ்தாபனங்களை எத்தகையை சட்டதிட்டத்தின்கீழ் வேலை செய்யவேண்டியிருக்கிறது என்பதைபற்றி யாரும் கவலைப் படுவதில்லை. இந்தச் சட்டதிட்டம் ஜனநாயகத்தையாவது எதேச்சாதிகாரத்தையாவது தழுவியதல்ல. இரண்டையும் ஒட்டிப் போட்ட வேலையாகும். எனவே, இரண்டினுடைய தீமைகளும் அதில் நிறைந்திருக்கின்றன. மேற்பார்வைக்கும் அடக்கியாள்வதற்கும் சில அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கு இருக்கவேண்டியது என்பதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். ஆனால், பொதுஜனங்களின் தேவைகளை உணர்ந்து ஜனநாயக வழியில், அரசியலை நடத்தினால் தான் மத்திய அரசாங்கத்துக்கு இத்தகைய அதிகாரங்களைக் கொடுக்கலாம். அப்படி இல்லாத வரையிலும் ஸ்தலஸ்தாபனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே எப்பொழுதும் மனஸ்தாபமும் கரகரப்பும் இருந்து கொண்டே இருக்கும். அல்லது ஸ்தலஸ்தாபனங்கள் அரசாங்கத்தின் விருப்பத்துக்கு அடங்கி நடக்க வேண்டிவரும். பொறுப்பில்லாமல் அதிகாரம் செலுத்தும் தத்துவத்தை நாடுவது விபரீதமல்லவா? இந்த நிலைமை திருப்தி அளிக்கக் கூடியதல்ல. ஜனநாயகதத்துவத்தை இது அடியோடு கெடுத்து விடுகின்றது. நகர சபை அங்கத்தினர்கள் தங்கள் தொகுதிகளிடம்கூட மரியாதை காண்பிப்பதில்லை. அவர்கள் அரசாங்கத்தை எப்பொழுதும் அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களும் நகரசபைக்கு மரியாதை செய்வதிலலை. தீவிரமான பிரச்னை

கள் நகரசபைக்குள் எழுவதே இல்லை. ஏனெனில், இவை கள் நகரசபைத் திட்டத்துக்குப் புறம்பே உள்ளவை. நகர சபையின் முக்கியமான அலுவல், வரிவசூலிப்பதாகும். வரி வசூலிப்பவர்களை யாரும் இந்த உலகத்தில் பிரியமாகக் கொண்டாடமாட்டார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வாக்குரிமைத் தகுதியும் சில ருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகுதியை அதிகமாக விரிவுபடுத்த வேண்டும். மிகப் பெரிய நகரமான பம்பாயில்கூட, நகர சபை வாக்காளர்கள் மிகவும் குறைவு. வாக்காளர்களின் ஜாபிதாவை விரிவுபடுத்த வேண்டுமென்று பம்பாய்க் கார்ப்பொரேஷனில் கொண்டுவரப்பெற்ற தீர்மானம் தோற்றுப் போயிற்று. அங்கத்தினர்களிற் பெரும்பான்மை யோருக்கு தாங்கள் இருக்கும் நிலை திருப்திகரமாகவே பட் டிருக்க வேண்டும். மாறுதல் வேண்டும் என்ற தேவையே அவர்களுக்கு தோன்றவில்லை போலும்! காரணம் என்ன ஆயினும் சரி, நம்முடைய ஸ்தல ஸ்தாபனங்கள் திறம்படவும், வெற்றியுடனும் நடத்தப்படுகின்றன என்று சொல்ல முடி யாது. மேனாட்டு நகர சபைகளோடு நமது நகர சபைக ளிற் சிலவற்றை ஒப்பிட்டுப் பார்த்துத்திருப்தி அடைய முடியும். இவைகளில் அநேகமாக லஞ்சப் பழக்கம் இருப்ப தில்லை. ஆனால் நிர்வாகத் திறமை போதாது. இவைகளுடைய லட்சிய நோக்கங்கள் யாவும் தவறானவை.

இவைகளெல்லாம் இயல்பாய் நேரக் கூடியவை. ஏனெ னின் ஜனநாயக அமைப்புகள் வெற்றியுடன் வேலை செய்ய வேண்டுமானால், அவைகளுக்கு அடிதாங்கிகளாக பொது ஜன அபிப்பிராயமும், பொறுப்பும் இருக்க வேண்டும். இவைகள் இந்தியாவில் இல்லை. எங்கு பார்த்தாலும் ஒரே அதிகாரத் தோற்றம்தான் கண்ணில் காட்சி தருகின்றது. ஜனநாயகத் துக்கு தேவையான சாதனங்கள் இல்லை. பொது மக்களுக்கு கல்வி ஊட்டப்படவில்லை. அனுபவத்துக்கு ஒத்த அறிவைக் கொண்டு, மக்களை பொது ஜனக் கிளர்ச்சிகளில் ஈடுபடும்படி செய்ய, தக்க முயற்சியும் யாரும் எடுத்துக்கொள்ளவில்லை. சில்லரைப் பிரச்னைகளைப் பற்றியோ அல்லது வகுப்புப் பிரச் னைகளைப் பற்றியோதான் பொது ஜனக் கிளர்ச்சி உண்டா கின்றது.

நகர சபைகளிலே அரசியலைக் கலக்கக் கூடாது என் பதை அரசாங்கம் வெகு உஷாராக கவனித்துக்கொண்டு வரு

கிறது. தேசீய இயக்கத்தில் அனுதாபம் காண்பித்து நகர சபையில் நிறைவேறும் தீர்மானங்களை அரசாங்கத்தார் நன்னோக்கத்துடன் பார்ப்பதில்லை. தேசீய மணங்கமழும் நூல்கள் நகர சபைப் பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களாக அனுமதிக்கப்படுவதில்லை. நாட்டுத் தலைவர்களின் படங்களையும் நகர சபைகளில் வைக்கக் கூடாதாம்! தேசீயக் கொடியை நகர சபையில் பறக்க விட்டால், அந்த சபையைக் கலைத்து விடுவோம் என்று அரசாங்கத்தார் பயமுறுத்திக் கொடியைக் கீழே இறக்கிவிடுகிறார்கள்.

நகரசபைகளில் காங்கிரஸ்காரர்கள் உத்தியோகம் வகித்தால், அவர்களை வேலையினின்றும் நீக்கும்படியாக மாகாண அரசாங்கங்கள் முயற்சி செய்தன. "குறிப்பிட்ட அந்த காங்கிரஸ் பேர்வழியை, நீங்கள் வேலையிலிருந்து நீக்குகிறீர்களா? இல்லையா? இல்லா விட்டால், நகரசபைக் கல்வி முதலிய இனங்களுக்கு சர்க்கார் கொடுக்கும் நன் கொடைகளை நிறுத்திவிடுவோம்" என்று உத்தியோகஸ்தர்கள் நகரசபைகளைப் பயமுறுத்தினார்கள். சில நகரசபைகள் சம்பந்தமாக புதிதாக சட்டம்கூட செய்யப்பட்டது. கல்கத்தா நகரசபையைப்பற்றிய சட்டம் விசேஷமாகக்குறிப்பிடத் தக்கது. சட்டமறுப்பில் கலந்துகொண்டு, சிறைக்குச் சென்றவர்களோ அல்லது வேறு எந்த அரசியல் இயக்கத்தில், சர்க்காருக்கு விரோதமாகக் கலந்து கொண்டு சிறைக்குப் போனவர்களோ, நகரசபையில் உத்தியோகம் வகிக்கத் தகுதியற்றவர்களென்ற ஷரத்து மேற்சொன்ன சட்டத்தில் வேண்டுமென்றே புகுத்தப்பட்டது. இதிலே, அரசியல் நோக்கத்தைத்தவிர வேறு எதுவுமில்லை. வேலைக்கு அபேட்சகர்களாக வந்தவர்களின் தகுதியைப்பற்றிக் கவலைப்படவில்லை. தேசபக்தர்களை நகர சபை நிர்வாகத்தில் புகவிடக்கூடாது என்பது தான் சட்டத்தின் நோக்கம்.

மேற்சொன்ன சில உதாரணங்களிலிருந்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு எவ்வளவு சுயேச்சை இருக்கிறதென்றும், எவ்வாறு ஜனநாயக முறையில், அவை நடத்தப்பட்டு வருகின்றனவென்றும் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். அரசியல் எதிரிகளை, ஸ்தல ஸ்தாபன உத்தியோகங்களிலிருந்து விலக்கி வைக்கப் பார்ப்பதைப் பற்றி சிறிது சொல்ல வேண்டும். சென்ற 14 வருட காலமாக 3 லட்சம் பேர்வழிகள் பல தடவைகளிலும் சேர்ந்து சிறைக்குச் சென்றிருக்கிறார்க

ளென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அரசியல் சம்பந்தம் ஒரு புறமிருக்கட்டும். இந்த மூன்று லட்சம் பேர்களில் தன்னலமில்லாதவர்களும், சமூகத் தொண்டில் ஆர்வம் படைத்தவர்களும், குறியும், நெறியும் கொண்ட வாலிபர்கள் பலரும் இருந்திருக்க வேண்டும். அவர்களிடத்தில் ஏராளமான ஊக்கம் இருந்தது. எதையும் சமாளித்து வேலை செய்யுந் தன்மை, அவர்களிடம் அதிகமாகக் காணப்பட்டது. எனவே, பொது ஜனங்களுக்காகப் பாடுபடும் எந்த இலாகாவும், அபேட்சகர்களை தேடினால், இந்தக் கூட்டத்திலிருந்து பொறுக்குவது தானே நியாயமாகும்? என்றாலும், இந்த ஆட்களை வேண்டுமென்றே விலக்கி வைத்து, அவர்களையும், அவர்களிடம் அனுதாபம் காண்பித்தவர்களையும் தண்டிக்க அரசாங்கம் அதிக முயற்சி செய்தது. "மடி நாயை"ப் போன்றவர்களை, நகர சபை உத்தியோகத்தில் அரசாங்கத்தார் அமர்த்திவிட்டு, ஸ்தல ஸ்தாபனங்கள் திறம்பட வேலை செய்யவில்லையே என்று பின்னர் குறை கூறினால் அது எப்படி இருக்கும்? ஸ்தலஸ்தாபனங்களில் அரசியலைக் கொண்டுபோய்ப் புகுத்தக் கூடாதென்று வாய்வேதாந்தம் பேசுகிற அரசாங்கம், தனக்கு தேவையான சந்தர்ப்பங்களில் அரசியல் நோக்கத்தை ஸ்தல ஸ்தாபனங்களில் எப்படி கொண்டுபோய் நுழைத்துவிடுகிறது என்பதை மேற்சொன்ன குறிப்புகளிலிருந்து கண்டுகொள்ளலாம். மேலும் ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளில் வாத்திமார்கள் அரசாங்கத்தின் சார்பாகக் கிராமங்களுக்குப் போய் பிரசாரம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அநேகமாக அவர்களுக்கு உத்தியோகம் போய்விடும்.

சென்ற 15 ஆண்டுகளாக காங்கிரஸ் ஊழியர்கள் அநேக விதத்தொல்லைகளையும், நெருக்கடி நிலைமைகளையும் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்கள் பெரிய பொறுப்புகளை ஏற்று நிர்வாகம் செய்தார்கள். அவர்கள் பலமான அரசாங்கத்தோடு போராடி, ஏறக்குறைய வெற்றியும் பெற்றார்கள். இந்தக் கடினமான வாழ்க்கைமுறையால் காங்கிரஸ்காரர்களுக்குத் தன்னம்பிக்கையும் திறமையும் வல்லமையும் உண்டாய்விட்டன. அன்னிய ஆட்சியின் மூலமாக இந்தியப் பொதுமக்கள், உயர்ந்த தன்மைகளை இழந்து சீர்குலைந்து நின்றார்கள். அத்தகைய உயர்ந்த தன்மைகளை மீண்டும் ஜனங்கள் பெறுவதற்கு, காங்கிரஸ் தூண்டுதலாயிருந்தது. எல்லாப்பொதுஜன இயக்கங்களிலும்போலவும், காங்கிரஸ்

இயக்கத்திலும், விரும்பத்தகாத பலர் இருந்தார்கள். முட்டாள்கள், திறமையில்லாதவர்கள், சில்லரைத்தனம் கொண்டவர்கள், இவர்கள் காங்கிரசில் இருந்திருப்பார்கள். ஆனால் சராசரி காங்கிரஸ் ஊழியனை எடுத்துப்பார்ப்போமானால், அவன் ஏனையோர்களைக்காட்டிலும் அதிகமான ஊக்கமும் திறமையும் கொண்டவன் என்பதில் யாருக்குமே சந்தேகம் வராது.

அரசாங்கத்தாரும் அவர்களுக்கு யோசனை கூறுபவர்களும் மேற்சொன்ன நிகழ்ச்சிகளால், ஏற்படக்கூடிய நிலைமையொன்றை சரியாக கவனிக்கவில்லை. காங்கிரஸ்காரர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கக்கூடாதென்று அவர்களை விலக்கி வைப்பதைக்கண்டு, உண்மையான புரட்சிக்காரன் ஆனந்தப்படுகிறான் என்றுசொல்லத் தேவையில்லை. சாதாரண காங்கிரஸ்தொண்டன் புரட்சிக்காரனல்ல. ஏதோ கொஞ்சகாலத்துக்கு புரட்சி வேலைகளிலீடுபட்டுப் பின்னர் சாதாரண வாழ்க்கையில் படிந்துக்கொள்கிறான். தொழிலில் ஈடுபட்டுப் போகிறான்; அல்லது உள்ளூர் கக்ஷிகளில் கலந்துகொண்டு மறைந்து விடுகிறான். பெரிய நோக்கங்கள் அவனுடைய மனதிலிருந்து, ஒவ்வொன்றாகக் கரைந்துவிடுகின்றன. அவனிடமிருந்த புரட்சி உற்சாகம் குறைந்துவிடுகிறது. உடம்பு பெருக்க ஆரம்பிக்கிறது; கடைசியாக யாதொரு ஆபத்தையும் வரவழைத்துக்கொள்ளாமல், பத்திரமாய் வாழவேண்டும் என்ற ஆசையும் அவனுக்கு உண்டாய்விடுகிறது. இவ்வாறு நேராமல் காங்கிரஸ்காரர்களைச் சட்டசபைகளிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் போகவிடாமல் பார்த்துக்கொள்வதும், அவர்கள் உத்தியோகம்பெற்று, பொதுஜனத்தொண்டிலிருந்து விலகிக்கொள்ளாமல் தடுப்பதும், புரட்சி மனப்பான்மை கொண்ட தலைவர்களது கடமையாக ஆகிவிட்டது. இந்த வேலையில், அரசாங்கத்தார் புரட்சிக்காங்கிரஸ்காரர்களோடு ஒத்துழைத்துவிட்டார்களென்றே சொல்லவேண்டும். காங்கிரஸ்காரனுக்கு அரசாங்கத்தார் உத்தியோகம் கொடுப்பதில்லை. எனவே, அவனுடைய புரட்சி ஆவல் தணியாமல் கூடிக்கொண்டே வருகிறது.

ஓரிரண்டு வருஷம் நகரசபை வேலைபார்த்தும், எனது ஊக்கத்தையும் காலத்தையும் நான் நல்ல முறையில் செலவிட வில்லையென்று எனக்குத் தோன்றிற்று. நகரசபை சம்பந்தமாக ஒன்றே ஒன்றுதான் என்னால செய்யமுடிந்தது.

வேலையைப் பாக்கிவைக்காமல் விரைவாகச்செய்து முடித்து, சபையின் நிர்வாகத்திறமையை அதிகப்படுத்துவதுதான் என்னுல் முடிந்தது. தீவிரமான மாறுதல் எதையும் நகரசபைக்குள் கொண்டுவந்து புகுத்த முடியவில்லை. தலைவர் பதவியை ராஜிநாமா செய்ய எண்ணினேன். ஆனல், நகரசபை அங்கத்தினர்கள் தடுத்து விட்டார்கள். அவர்கள் என்னிடம் காண்பித்த அன்பும் மரியாதையும் அளவிடத்தக்கதல்ல. எனவே அவர்கள் தடுப்பதை மறுத்துக் காரியம் செய்ய என்னுல் முடியவில்லை. என்ருலும் இரண்டாவது வருஷக்கடைசியில் நான் முடிவாக ராஜிநாமா செய்து விட்டேன். இது 1925-ம் வருஷத்தில் நேர்ந்தது. அதேவருஷம் எனது மனைவிக்கு கடுமையான நோய். பல மாதங்கள், அவள் லக்ஷ்மணபுரி ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாகக்கிடந்தாள். அந்த வருஷம் காங்கிரஸ் கான்பூரில் நடைபெற்றது. பைத்தியம் பிடித்தவனைப்போல், அலகாபாத்துக்கும் கான்பூருக்கும், லக்ஷ்மணபுரிக்கும் சுற்றிச்சுற்றிப் போய்க்கொண்டேயிருந்தேன். இந்த ஆண்டும் நான்தான் அகில இந்தியக் காங்கிரசின் காரியதரிசியாக இருந்தேன்.

எனது மனைவியை ஸ்விட்ஸர்லந்துக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்தால், நல்லதென்று யோசனை சொன்னுர்கள். இந்த யோசனையை உற்சாகத்துடன் வரவேற்றேன். ஏனெனில், இந்தியாவிலிருந்து எப்படியேனும் இப்பொழுது வெளியே போய்விட வேண்டுமென்று சாக்குப் போக்கைத் தேடிக்கொண்டிருந்தேன். என்மனதில் ஒரே குழப்பம். தெளிவான பாதையொன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை. இந்தியாவிலிருந்து வெளியேபோய் இந்தியச் சம்பவங்களைத் தீர ஆராய்ச்சிசெய்து பார்த்தால், அவைகளின் உண்மையானமதிப்பு கண்ணில் புலப்பட்டு எனது குழப்பம் நீங்குமோ, என்று எண்ணினேன். 1926-ம் வருஷம் மார்ச்சு மாதத்து வக்கத்தில், எனது மனைவியும் நானும் எங்கள் மகளும் பம்பாயை விட்டு, வெனிஸ் நகரத்துக்குப் பிரயாணம் ஆனேம். எங்களோடு கப்பலில் எனது சகோதரியும், அவளது புருஷன் ரஞ்சித எஸ். பண்டிட் அவர்களும் கூட வந்தார்கள். நாங்கள் ஐரோப்பாவுக்கு போவதாக யோசனை செய்வதற்கு முந்தியே, அவர்கள் தங்களுடைய ஐரோப்பிய பிரயாணத்தை திட்டம் போட்டிருந்தார்கள்.

# XXI

## ஐரோப்பாவில்

பதின்மூன்று வருஷங்கள்கழித்து மீண்டும், நான் ஐரோப்பாவுக்குப் போனேன். இந்தப் பதின்மூன்று வருஷங்களுக்குள், போரும் புரட்சியும், எத்தகைய மகத்தான மாறுதல்களும் ஏற்பட்டு விட்டன? மகாயுத்தத்தின் பயங்கரமான ரத்த வெள்ளத்தில், நான் முன்னேகண்ட பழைய ஐரோப்பா மறைந்து போய் என்னெதிரில்நின்ற ஐரோப்பிய உலகம் மிகவும் புதிதானது. ஆறு ஏழு மாதங்கள் ஐரோப்பாவில் தங்கி இருக்கலாம் என்று எதிர்பார்த்தேன். உண்மையிலேயே நாங்கள் ஒரு வருஷம் ஒன்பது மாதம் ஐரோப்பாவில் தங்கியிருக்க நேர்ந்தது.

இந்தக்காலத்தில் என் மனதுக்கும் உடலுக்கும் ஓய்வும் ஆறுதலும் கிடைத்தன. அநேகமாக ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் ஜினிவாவிலும், மோண்டானா என்ற மலைப்பிரதேசத்திலுள்ள ஆரோக்கிய ஸ்தலத்திலும் எங்கள் காலத்தைக் கழித்துவந்தோம். எனது சின்ன சகோதரி கிருஷ்ணா இந்தியாவிலிருந்து புறப்பட்டு 1926-ம் வருஷம் கோடை காலத்தில் எங்களிடம் வந்து சேர்ந்தாள். நாங்கள் ஐரோப்பாவில் தங்கி இருந்தவரையிலும், அவள் எங்கள்கூடவே இருந்தாள். நீண்டகாலம் என்மனைவியை தனியே விட்டுவிட்டுப்போக முடியவில்லை. எனவே, வேறு இடங்களுக்குச் சீக்கிரம் போய்த் திரும்பி வரவேண்டி வந்தது. பின்னர் மனைவிக்கு, கொஞ்சம் குணம் ஆனதும் நாங்கள் பிரான்சிலும் இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் பிரயாணம் செய்தோம். பனியால் சூழப்பட்ட மலைச்சிகரத்தில் நாங்கள் வசித்துவருகையில், எனக்கு இந்தியாவைப் பற்றியும் ஐரோப்பிய உலகத்தைப் பற்றியும் சம்பந்தமில்லைபோல் தோன்றிற்று. விசேஷமாக இந்தியாவும் அங்கே நடக்கும் சம்பவங்களும் வெகுதூரத்திலிருப்பதாகக் காணப்பட்டது. ஐரோப்பாவின் அரசியலையும் பொருளாதாரத்தையும் புதிதாக மனிதர்களுக்குள் ஏற்பட்டு வரும் சுதந்திரமான பழக்கவழக்கங்களையும் ஒருசாக்ஷிபோல் சிந்தனை செய்தும் அவைகளின் தன்மையைத் தெரிந்து

கொள்ள முயற்சி செய்தேன். ஜினிவாவில் தங்கிய காலத்தில், எனக்கு சர்வதேச சங்கத்தின் அலுவல்களிலும், சர்வதேச சங்கத்தின் தொழிலாளர் காரியாலயத்திலும் அக்கரை ஏற்பட்டது; அது இயற்கைதானே? குளிர்காலம் வந்ததும், அக்காலத்து விளையாட்டுகளினால், என்னுடைய கவனம் இவைகளினின்று விலகிவிட்டது. இந்த விளையாட்டுகளிலே சில மாதங்கள் கழித்தேன். பனிக்கட்டியில் வழுக்கிச்செல்லும் விளையாட்டு எனக்கு ரொம்பப்பிரியம். எனக்குப் பனிமலை யேறுவதென்பது புதிய அனுபவமாக ஆயிற்று. நான் அதனுடைய கவர்ச்சியில் ஈடுபட்டுப்போனேன். பனிமலை யேறுவது மிகவும் கஷ்டமாகத்தானிருந்தது. அநேக தடவைகளில் விழுந்திருக்கிறேன். என்றாலும், பிடிவாதத்தை விடாமல் தைரியமாக ஏறி, கடைசியில் அதன் ஆனந்தத்தை அனுபவித்தேன்.

மொத்தத்தில் இக்காலத்தில், விசேஷசம்பவங்கள் ஒன்றும் நடக்கவில்லை. நாட்கள் சென்றுகொண்டே போயின. எனது மனைவி சிறிது சிறிதாக குணமடைந்து வலுப்பெற்று வந்தாள். அதிகமாக இந்தியர்களை நாங்கள் சந்திக்கவில்லை. எங்களுடைய வீட்டுக்கு வெளியே எங்கேயும்போய், நாங்கள் யாரையும் சந்திக்கவே இல்லை. ஆனால் ஐரோப்பாவில் நாங்கள் தங்கின ஒருவருஷ ஒன்பது மாதகாலத்துக்குள், இந்தியாவிலிருந்து தேசப்பிரஷ்டமான பல தேசபக்தர்களையும் பழைய புரட்சிக்காரர்களையும், சந்தித்தோம். சியாமாஜீ கிருஷ்ண வர்மாவைக் கண்டோம். அவர் ஜினிவாவில் ஒரு வீட்டு மெத்தையில் குடியிருந்தார். அவருடன் அவரது மனைவியும் இருந்தாள். அவளுக்கு உடம்பு சுகமில்லை. தம்பதிகள் இருவரும் கிழவர்கள். அவர்களுக்கு வேலையாட்கள் கிடையாது. அவர்களுடைய அறைகளில் மூச்சுத்திணறும்படி குப்பை நிறைந்துகிடந்தது. சியாமாஜியிடம் அதிக பணமிருந்தது. ஆனால் அவரோ, செலவழிப்பதில் கொஞ்சம்கூட இஷ்டம் இல்லாதவர். ட்ராம் வண்டியில் போகாமல, நடந்துபோய், சில காசுகளைக்கூட அவர் மிச்சப்படுத்துவார். யாரைக் கண்டாலும் அவருக்கு சந்தேகம். அவர்கள் பிரிட்டிஷாரின் உளவர்களா யிருப்பார்களோ, அல்லது தமது பணத்தை அபகரித்துக்கொண்டுபோக வந்திருக்கிறார்களோ என்று எண்ணுவார். இந்தியன் ஸோஷியாலஜிஸ்ட் என்ற பெயரினால், அவர் நடத்திய பழைய பத்திரிகையின் பிரதிகள்

அவருடைய சட்டைப் பையில் நிறைந்துகிடக்கும். அவர் அவைகளை வெளியே எடுத்து, பல வருஷங்களுக்குமுன் தாம் எழுதிய கட்டுரையைப்பற்றி மிகவும் ஆவேசத்துடன் பேசத் துவக்கிவிடுவார்.

போன பழைய நாட்களைப்பற்றி அவர் பேசுவார். லண்டனில் ஹேம்ப்ஸ்டெட் என்ற விடத்தில் அவர் நடத்தி வந்த இந்திய விடுதியையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உளவு பார்க்க அவரிடம் அனுப்பியவர்களையும் அந்த உளவர்களை எவ்வாறு தாம் கண்டு கொண்டு ஏமாற்றினார் என்பதையும் பற்றி விரிவாகச் சொல்லுவார். அவருடைய அறைகளின் சுவர்களிலே பழைய புஸ்தகங்கள் நிறைந்த அலமாரிகள் இருந்தன. ஒரே குப்பை! அந்தப் புஸ்தகங்களை யாரேனும் பார்த்தால், பரிதாபமாயிருக்கும். தரையிலே தாறுமாறாகப் புஸ்தகங்களும், காகிதங்களும் கிடக்கும். அப்படியே பல வாரங்களாகவோ, மாதங்களாகவோ அவைகள் இருந்திருப்பதாகத் தோன்றும். அந்த அறை முழுதும் பார்க்க பயங்கரமாயிருக்கும். எல்லாம் நசித்துப் போனதுபோலக் காணப்படும். அந்த இடத்துக்கும் உயிருக்கும் சம்பந்தமில்லைபோலத் தோன்றும். இருளும், மௌனமும் நிறைந்த அந்த வீட்டின் பாதைகளில் நடந்தால், எமனே மூலைகளில் நிற்பதாகத் தோன்றக்கூடும். அறைகளிலிருந்து வெளியே வந்து சுத்தமான காற்றை உட்கொண்டால்தான், ஆறுதல் உண்டாகும்.

சியாமாஜீ, தமது பணத்தை எப்படி வினியோகம்செய்வது என்பதில் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். பொதுஜன வேலைக்காக, அதை தர்ம சொத்தாக வைத்துவிடவேண்டுமென்பது அவரது ஆசை. அந்நிய நாடுகளில் இந்தியர்கள் கல்வி கற்பதற்காக, இந்தப்பணத்தை உபயோகிக்கலாமென்று அவர் எண்ணினார். என்னை ஒரு டிரஸ்டியாக இருக்குமாறு அவர் வேண்டிக்கொண்டார். இந்தப் பொறுப்பையேற்பதற்கு எனக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இல்லை. அவருடைய பொருளாதார விஷயங்களில் சிக்கிக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. மேலும், எனக்கு அதிகமான அக்கறை இருப்பதாக நான் காண்பித்துக்கொண்டால், அவருடைய பணத்தை அபகரித்துக்கொள்ள வந்திருப்பதாக என்னிடமே, அவர் சந்தேகங்கொள்ளத்துவக்கிவிடுவார். அவரிடம் எவ்வளவு பணம் இருந்ததென்று ஒருவருக்கும் தெரியாது. ஜெர்மானிய நாணய வீழ்ச்சியில், அவர் பெரும் பணத்தை இழந்துவிட்டதாகச்

சொல்லப்பட்டது. ஜினிவாவுக்கு, பிரதானமான பல இந்தியர்கள் வந்தாலும், அவர்கள் உத்தியோக தரப்பைச்சேர்ந்தவர்களாதலால், சியாமாஜீ அந்த உத்தியோகஸ்தர்களிடம் கிட்ட நெருங்குவதில்லை. சர்வதேச தொழிலாளர்கள் காரியாலயத்துக்கு சில சமயம் காங்கிரஸ்காரர்கள் பிரதிநிதியாக வந்தால், அவர்களைச் சந்திப்பார். அவர்கள் சியாமாஜீயிடம் நெருங்கிப் பழக விருப்பம் கொள்வதில்லை. கூடுமானவரையில், அவரைச் சந்திக்காமலிருப்பதற்கு அவர்கள் வழிதேடுவார்கள்.

சியாமாஜீயும் அவரது மனைவியும் தனித்து வாழ்ந்துவந்தார்கள். குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள யாருமே இல்லை. அவர் பழையகாலத்துப் பேர்வழி. அவருக்கும் நிகழ்காலத்துக்கும் பொருத்தம் துளிகூடக் கிடையாது. என்றாலும், அவருடைய கண்களிலே, பழைய ஜோதி அப்பொழுதும் ஜொலித்துக் கொண்டிருந்தது. எனக்கும் அவருக்கும் எதிலும் ஒற்றுமை கிடையாது. என்றாலும் அவரிடம் அனுதாபமும் மரியாதையும்நான் காண்பிக்காமல் இருக்கமுடியுமா? அவரும் அவரது மனைவியாரும் இறந்துபோனதாக சமீபகாலத்துக்குமுன், செய்திகிடைத்தது. முதலிலே அவர் இறந்தாராம். பின்பு அவரது மனைவி. இந்த அம்மாள் குஜராத்தி; சாந்தஸ்வரூபிணி. இந்தியப் பெணமணிகளுக்கு ஐரோப்பாவில் கல்வி போதிப்பதற்காக, பெரும்பணத்தை இந்த அம்மாள் வைத்துவிட்டுப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சியாமாஜீ கிருஷ்ணவர்மாவைத் தவிர ஸ்விட்ஸர்லாந்தில் வேறொரு பிரசித்த இந்தியரையும் கண்டேன். அதுவரையிலும் நான் அவரைப்பற்றி அடிக்கடிகேள்விப் பட்டிருந்தேனேயல்லாமல் சந்தித்ததே இல்லை. அவர் பெயர் ராஜா மகேந்திரப் பிரதாப். மந்திரத்தால் மாங்கனிவிழும் என்று மனக்கோட்டை கட்டும் கூட்டத்தைசேர்ந்தவர். உண்மையை உணர்ந்து பலன்தரக்கூடிய காரியத்தால் பரிகாரம் தேட அவர் முயலுவதே இல்லை. நான்அவரை முதன்முதலாகச் சந்தித்ததும் திடுக்கிட்டுப்போனேன். அவர் விநோதமாக உடைதரித்துக் கொண்டிருந்தார். திபெத்தின் மேட்டுப்பூமிக்கு அந்த உடை உகந்ததாயிருக்கலாம். அல்லது குளிர் நிறைந்த சைபீரியாப் பள்ளத்தாக்குகளுக்கு ஏற்றதாயிருக்கலாம். ஆனால் அவருடையஉடை மாண்ட்ரோசில் கோடைகாலத்துக்கு ஒத்ததே அல்ல. உடையோ பாதி ராணுவ உடை. காலில் ருஷியாவில் செய்த உயரமான பூட்ஸ்கள். அவருடைய சட்டைகளில்

ஏராளமாக பெரிய பைகள் காணப்பட்டன. அந்தப் பைகளிலே காகிதங்களும் படங்களும் போட்டு நிரப்பி அவைகள் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. யுத்தகாலத்தில் ஜெர்மனியின் பிரதம மந்திரி யாயிருந்த பெத்மான் ஹால்வெக் அவர்களிடமிருந்து ஒருகடிதம், கெய்சர் அவர்களது கையெழுத்துப் போட்ட படம், திபெத்து தலை லாமாவினிடமிருந்து ஒரு நேர்த்தியான விகிதம், இவைகளும் மற்றும் பலபடங்களும் தஸ்தாவேசுகளும் அவருடைய சட்டைப்பைகளை நிரப்பிக் கொண்டிருந்தன. அவருடைய பைகளில் இத்தனை விநோதமான சாமான்கள் இருந்ததைக்காண ஆச்சரியமாயிருந்தது. சைனாவில் சிலஅருமையான தஸ்தவேசுகளை அவர் பெட்டியில் வைத்து இழந்து விட்டதாகச் சொன்னார். அந்த நிகழ்ச்சியிலிருந்து அவர் எதையும் பெட்டிக்குள் வைக்காமல் சட்டைக்குள்ளேயே வைத்துக் கொள்ளத் தீர்மானித்தாராம். அதனாலே தான் இத்தனை பைகள் என்றார்.

மகேந்திர பிரதாப் ஜப்பான், சைனா, திபேத், ஆப்கானிஸ்தானம் முதலிய தேசங்களில் மிகுதியாகப் பிரயாணம்செய்திருக்கிறார். இந்தப் பிரயாணகாலத்தில் நேர்ந்த வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் அவர் சொன்னார். அவைகள் மிகவும் ருசிகரமாயிருந்தன. இப்பொழுது அவர் ஒரேஒரு விஷயத்தில் தான் கவலையைச் செலுத்திக் கொண்டிருக்கிறார். ஆனந்த சமாஜம் என்ற ஒரு அமைப்பை அவர் ஸ்தாபித்திருந்தாராம். அந்தக் கூட்டத்தின் கொள்கை இன்பத்துடன் வாழ் என்பதேயாகும். இந்த சமாஜம் லாட்வியாவிலோ, லிதுவேனியாவிலோ செழித்துவருவதாகக் கூறினார்.

அவருடைய பிரசார முறையும் விநோதமானதாகும். ஜினிவாவிலும், வேறு இடங்களிலும் நடைபெறும் மகாநாடுகளுக்கு அவர் செய்திகள் அனுப்பிக்கொண்டிருப்பார். அச்சு அடித்த கார்டுகளிலே இந்தச் செய்திகள் இருக்கும். இந்தக் கார்டுகளை மகாநாடுகளுக்கு அவர் அனுப்பி வைப்பது வழக்கம். இந்தக் கார்டுகளில் தமது முழுப் பெயரையும் கையெழுத்துச் செய்யமாட்டார். தமது நீண்ட பெயரின் முதலெழுத்துக்களை மட்டும் சேர்த்துக்கொள்வார். அவர் வேறு பல பெயர்களையும் இதோடு இணைத்துக்கொள்வது வழக்கம். தாம் பிரயாணம் செய்த நாடுகளில் தமக்கு இஷ்டப்பட்ட நாட்டின் பெயரையும் தமது பெயருடன் இணைத்துக்கொள்வார். இப்படிச் செய்ததால், தாம் உலகத்தில் எல்லா நாடு

களுக்கும் பொதுவான ஊழியர் என்பதை அவர் உறுதிப்படுத்திக் காண்பித்தாராம்! மனித வர்க்கத்தின் ஊழியன் என்று கடைசியாகத் தனது பெயரோடு இணைத்துக்கொண்டிருந்தார். மகேந்திரப் பிரதாப் அவர்களின் செயலேயும், கூற்றையும் கேலிக் கூத்தாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். பத்தாம் நூற்றாண்டிலே பிறந்த டான்குயிக்ஸாட் என்ற பைத்தியக்காரர், இருபதாம் நூற்றாண்டில் மகேந்திரப்பிரதாப் என்ற பெயரோடு புனர் ஜன்மம் எடுத்திருப்பதாகத் தோன்றிற்று. ஆனால் அவருடைய சிரத்தையையும், நேர்மைத் தன்மையையும் துளிகூட சந்தேகப்பட முடியாது.

பாரிஸில் நாங்கள் ஸ்ரீமதி காமாவைக் கண்டோம். அவருக்கு வயதாகிவிட்டது. இருந்தாலும் அவருடைய பழைய பயங்கரத் தோற்றம் போகவே இல்லை. அவர் எங்களைச் சந்தித்து, எங்களிடம் வந்து முகங்களை ஊன்றிக் கவனித்துப் பார்த்து, 'நீங்கள் யார்?' என்று கேட்டார். இவ்வாறு அவர் யாரையும் கேட்பது வழக்கம். யார் என்ன பதில் சொன்னபோதிலும், அவருக்கு அதைப் பற்றி அக்கரையே இல்லை. முழுச் செவிடு என்று தோன்றிற்று. மேலும் அவர் ஒருவரைப் பற்றித் தாம் கொண்டிருக்கிற எண்ணங்களையே பிடிவாதமாகச் சொல்லிக்கொண்டிருப்பார். அவர் நினைத்துக்கொண்டிருப்பதற்கு விரோதமான தன்மைகள் மற்றவர்களிடம் காணப் பெற்றாலும் தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வதில்லை. மௌலவி உபயதுல்லாவை இத்தாலியில் நான் சந்தித்தேன். நெடுநேரம் அவருடன் இருக்க முடியவில்லை. அதிக சாமர்த்தியசாலியாக அவர் காணப்பட்டார். ஆனால் அது பழைய ரக சாமர்த்தியமாகும். பழைய தந்திர முறைகளைக்கொண்டு காரியங்களை சாதிக்க வேண்டுமென்பது அவருடைய கருத்து. நவீன அபிப்பிராயங்களுக்கும் அவருக்கும் சம்பந்தமே இல்லை. 'ஐக்கியக்குடியரசு இந்தியா' என்ற ஒரு திட்டத்தைப் போட்டிருந்தார். வகுப்புப்பிரச்னைக்கு அதில் ஒரு சாமர்த்தியமான ஒரு யோசனை இருந்தது.

தாம் இஸ்தாம்பூலில் (இஸ்தாம்பூல் என்பது கான்ஸ்தாந்திநோபிலின் துருக்கிப் பெயர்) பழைய காலங்களில் செய்துவந்த அலுவல்களைப்பற்றி அவர் என்னிடம் சொன்னார். அவைகளில் என் கவனம் செல்லவில்லை யாதையால், அவைகளை விரைவிலே மறந்து போனேன். சில

மாதங்கள் கழித்து அவர் லாலாலஜபதிராயைச் சந்தித்தார். என்னிடம் சொன்னதுபோல, அவர் லாலாஜீயிடம் தமது பழைய வரலாற்றைச் சொல்லியிருக்கிறார். லாலாஜீ இதைக் கேட்டு மிகுதியும் பரவசப்பட்டுப் போனார். இந்தக் கதையின் விளைவுகளிற் சில, அந்த ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற தேர்தல் காலத்தில் திடீரென்று தோன்றின. மௌல்வி உபயதுல்லா பின்னர் ஹெரட்ஜாசுக்கு போனார். சென்ற சில ஆண்டுகளாக அவரிடமிருந்தும், அவரைப்பற்றியும் எனக்கு யாதொரு தகவலும் கிடைக்கவில்லை.

இன்னொரு மௌல்வி; ஆனால் இவர் உபயதுல்லாவினின்றும் மாறுபட்டவர். இவருக்கு பார்க்கதுல்லா என்று பெயர். இவரை முதலில் பெர்லினில் சந்தித்தேன். மிகவும் நல்ல கிழவர். உற்சாகம் நிறைந்தவர். மிகுதியும் விரும்பத்தக்கவர். அவர் எளிய தோற்றம் கொண்டவர். அதிக புத்திசாலி அல்ல. ஆனால், புதிய கருத்துக்களைக் கிரகித்து, நவீன உலகத்தின் போக்கை நன்கு அறிந்து கொள்ள, மிகுதியும் சிரமமெடுத்துக்கொண்டிருந்தார். அவர் 1927-ம் வருடத்தில் அமெரிக்காவில் ஸான்பிரான்சிஸ்கோவில் இறந்துபோனார். அப்பொழுது நாங்கள் ஸ்விட்ஸர் லந்தில் இருந்தோம். அவர் இறந்துபோனதைக் கேள்விப் பட்டு, நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

சென்ற ஐரோப்பிய யுத்த காலத்தில், பெர்லின் நகரில் இந்தியக்கக்ஷி ஒன்றைஅமைத்துக்கொண்டு, இந்தியர்கள் பலர் வேலைசெய்து வந்தார்கள். ஆனால், அந்தக் கூட்டம் இப் பொழுது சிதறுண்டு போய்விட்டது. அவர்கள் பிளவுபட்டு தங்களுக்குள்ளாகவே சண்டைபோட்டுக் கொண்டார்கள். ஒருவர் மற்றவரைக் காண்பித்துக் கொடுப்பதாக, பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக்கொண்டார்கள். தாய்நாட்டைவிட்டு வேறு நாடுகளில் வாழும் தேசபக்தர்களின் கதி இதுதான் என்று தோன்றுகிறது. பெர்லினில் வாசஞ்செய்துவந்த இந்த இந்தியர்கள், பலவேறு தொழில்களில் அமர்ந்து சௌக்கியமாக இருந்தார்கள். ஆனால், யுத்தத்துக்குப் பின், ஜெர்மனியில் அவர்களுக்கு தொழில்கள் கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. இவர்கள் ஜீவனோபாயத்துக்காகத் தொழில்களில் ஈடுபட்டதும், தங்களுடைய பழைய புரட்சி மனப்பான்மையை அடியோடு இழந்துவிட்டார்கள். அரசியல் சம்பந்தமே வேண்டாமென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகி விட்டது. யுத்த

காலத்தில் இந்த பெர்லின் கூட்டத்தின் வரலாறு ருசிகரமாய் இருக்கும். 1914-ம் ஆண்டில் இவர்களில் பலர் ஜெர்மானிப் பல்கலைக் கழகங்களில் மாணவர்களாக இருந்து, கல்வி பயின்று வந்தார்கள். இவர்கள் ஜெர்மானிய மாணவர்களோடு நெருக்கமாகப் பழகினார்கள். அவர்களுடைய பாட்டுகளைப்பாடி, ஜெர்மானிய விளையாட்டுகளில் கலந்துகொண்டு அவர்களுடன் "பீர்" குடித்து, ஜெர்மானிய நாகரிகத்தை அனுதாபத்துடனும் மரியாதையுடனும் அனுபவிக்க முயன்றார்கள். யுத்தத்தில் இவர்களுக்கு சம்பந்தம் கிடையாது. ஆனால் ஜெர்மனிமுழுதும் பரவி தலைதூக்கிநின்ற தேசிய வெறியலையில் இவர்களும் சிக்கிக்கொண்டார்கள். இவர்கள் ஜெர்மானியர்களுக்கு நண்பர்கள் அல்ல. உண்மையிலேயே இவர்கள் பிரிட்டிஷார்களுக்கு விரோதிகள். தாங்கள் இந்திய தேசீயவாதிகள் என்ற முறையில், பிரிட்டனுக்கு எதிரிகளாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானங் கொண்டார்கள். இந்த இந்திய மாணவர்கள் தங்களை ஒரு கமிட்டியாக அமைத்துக்கொண்டு, ஹரிதயாளரை வரும்படியாக வேண்டிக்கொண்டார்கள். ஹரிதயாளர் அப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மேலண்டை சமுத்திரக்கரையில் வசித்துவந்தார். அவர் பெர்லின் இந்தியர்களது அழைப்புக்கிணங்கி, சில மாதங்கள் சென்றபின்னர் பெர்லின் நகருக்கு வந்துசேர்ந்தார். இதற்குள் கமிட்டிக்கு மிகுந்த பெருமை வந்துவிட்டது. இந்தப் பெருமை ஜெர்மானிய அரசாங்கத்தாரால் வேண்டுமென்று கொடுக்கப்பட்டதாகும். பிரிட்டனிடம் இந்த கமிட்டியாருக்கு இருக்கும் ஆத்திரத்தைத் தங்களுடைய சொந்த நன்மைக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது ஜெர்மானிய அரசாங்கத்தாரின் நோக்கம். ஆனால் இந்தியர்களோ இவ்வளவு எளிதாக, ஜெர்மானிய அரசாங்கத்தாரிடம் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை; போரினால் ஏற்படும் இந்த நெருக்கடியை இந்தியாவின் விடுதலைக்காக உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று தீர்மானம் கொண்டார்கள். ஜெர்மனியாரின் லாபத்துக்காக மட்டும் உழைக்க அவர்களுக்கு எண்ணம் கிடையாது. இந்த விஷயத்தில் அவர்களால் அதிகமாக பேரம்பண்ண முடியவில்லை; ஜெர்மனிக்கு ஏதோ கொஞ்சம் ஒத்தாசை செய்ய முடியும் என்று பெர்லின் இந்தியர்கள் எண்ணினார்கள். இந்த ஒத்தாசையை எப்படியாவது பெறவேண்டுமென்று ஜெர்மன் அதிகாரிகள் ஆவலுடன் இருந்தார்கள். இந்திய விடுதலையைப்

பற்றி ஜெர்மானிய அரசாங்கத்தார் வாக்குறுதிகள் தரவேண்டுமென்று இந்தியர்கள் வற்புறுத்தினார்கள். ஜெர்மன் அந்நிய நாட்டு இலாகாவுக்கும் இந்தியர்களுக்கும் ஒருவகை ஒப்பந்தம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. வெற்றி பெற்றால் இந்தியாவின் விடுதலைக்கு தாங்கள் பாடுபடுவதாக, ஜெர்மானிய அந்நிய நாட்டு மந்திரி வாக்கு கொடுத்தார். இந்த வாக்குறுதியின் பேரிலும் நிபந்தனையின் பேரிலும், வேறு சில சில்லரை ஷரத்துக்களின் பேரிலும், பெர்லின் இந்தியர்கள், போரில் ஜெர்மனிக்கு உதவிபுரிவதாக ஒப்புக்கொண்டார்கள். உத்தியோகமுறையில் இந்தக் கமிட்டிக்கு எல்லா வகைகளிலும் மதிப்பு கொடுக்கப்பட்டது. அந்நிய நாட்டுத் தூதர்கள் என்ற ஹோதாவில், இந்தக் கமிட்டியின் பிரதிநிதிகளை ஜெர்மானிய அரசாங்கத்தார் மதித்து வந்தார்கள்.

திடீரென்று இந்தக்கமிட்டிக்கு பெருமை ஏற்பட்டது கெடுதலாக முடிந்தது. இந்தக்கமிட்டியில் சேர்ந்தவர்கள் அனுபவமில்லாத இளைஞர்கள். ஜெர்மானிய அரசாங்கத்தாரிடமிருந்து மரியாதை கிடைக்கவே, அவர்கள் மதிமயங்கிப் போனார்கள். உலக சரித்திரத்தைப் பாதிக்கக்கூடிய பெரியதொரு வேலையில் பிரவேசித்து, மகத்தான செயல்களைச் செய்யப் போவதாக எண்ணிக் கொண்டார்கள். இவர்களிற் பலர் அநேக சமயங்களில் அபாயத்திற் குள்ளாகி உயிர் தப்பிப்பிழைத்ததே ஆச்சரியம். ஆனால் போர் நடக்க நடக்க, இவர்களுடைய பிராதான்யம் வெகுவாகக் குறைந்து போய் விட்டது. இவர்களை அரசாங்கத்தார் அலட்சியம் செய்யத் துவக்கினார்கள். அமெரிக்காவிலிருந்து வந்த ஹரிதயாள் வெகு விரைவிலே தள்ளப்பட்டார். அவருக்கும் கமிட்டிக்கும் ஒத்துவரவில்லை. அவர் நம்பத்தகாதவர் என்று கமிட்டியும் ஜெர்மானிய அரசாங்கமும் முடிவுக்குவந்து, அவரை விலக்கி விட்டன. 1926-27-ம் வருடங்களில் நான் ஐரோப்பாவில் இருந்தபொழுது, அங்கே வசித்துவந்த இந்தியர்கள் அனைவரும் ஹரிதயாளரைப் பற்றி ஆத்திரத்துடனும் கசப்புடனும் பேசியதைக்கான எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பொழுது ஹரிதயாளர் ஸ்வீடனில் வசித்துவந்தார். நான் அவரைச் சந்திக்கவில்லை. போரும் முடிந்தது. அத்துடன் பெர்லினிலிருந்த இந்தியக்கமிட்டியின் ஆயுளும் முடிந்தது. தங்களது நோக்கங்கள் யாவும் பலிக்காமல் போகவே, இந்தியர்களின் வாழ்க்கை மிகவும் பயங்கரமாகப் போய்விட்டது.

பெரிய பந்தயத்துக்காக விளையாடி, அவர்கள் எல்லா வற்றை யும் தோற்று விட்டார்கள். எப்படி யிருந்தபோதிலும் பரபரப் புடன் செயல்களைச்செய்து கொண்டுவந்து, திடீரென அவை கள் நின்று போகுமாகில், யாருடைய வாழ்க்கையும் ருசியில் லாமல் சாரமில்லாமல் போய்விடுமெல்லவா? ஆனால் இவர்க ளுக்கு சாதாரணமாக வாழ்வது கூட முடியாமற் போய் விட்டது.

பெர்லின் இந்தியர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவர முடிய வில்லை. அவர்கள் தோற்றுப்போன ஜெர்மனியில் இனியும் குடியிருப்பதென்பது எளிதான காரியம் அல்ல. அவர்களில் சிலர் இந்தியாவுக்குத் திரும்பி வரும்படியாக, பின்னர் பிரிட் டிஷ் அரசாங்கத்தாரால் அனுமதி கொடுக்கப்பட்டார்கள். ஆனால் அநேகர் ஜெர்மனியிலேயே தங்கவேண்டி வந்தது. அவர்களது நிலைமையோ விசேஷமாக ஆகிவிட்டது. அவர் கள் எந்த அரசாங்கத்தின் குடிமக்களும் அல்ல. சரியான பிர யாண அனுமதிச்சீட்டுகள் அவர்களுக்குக் கிடையாது. பெர் லினைவிட்டு வெளியே போய் பிரயாணம் செய்வது, அவர்க ளுக்கு முடியாமற் போய்விட்டது. ஜெர்மனியில் வசித்தாலும் போலீஸ்காரர்களின் தயவின்பேரில்தான் வசிக்க நேர்ந்தது. கஷ்டங்கள் மிகுதியாகிவிட்டன. தினசரி தொல்லையும் ஸ்திர மில்லாத வாழ்க்கையும் அதை நடத்துவதற்கு ஜீவனோபாய வசதி இல்லாமலுமாக, அவர்கள் திண்டாடினார்கள். 1933-ம் வருஷத்தில் தோன்றிய நாஜி ஆட்சியால், அவர்களுக்கு இன் னும அதிகமான கஷ்டங்கள் ஏற்பட்டன. நாஜிக்கொள் கையை ஏற்றுக்கொண்டலொழிய, அவர்கள் ஜெர்மனியில் வாழமுடியாது. நார்டிக் ஜாதியைச் சேராதவர்கள், சிறப்பாக ஆசியாவிலிருந்துவரும் அந்நியர்கள், ஜெர்மனியில் மதிக்கப் படவில்லை. அவர்கள் அதிகாரிகளை அனுசரித்து இருக்கும் வரையில் தான், ஜெர்மனியில் குடியிருக்க அனுமதிக்கப் படுவார்கள்.

இந்தியாவில் நடைபெறும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய ஆட்சியை ஆதரித்து ஹிட்லர் பேசியிருக்கிறார். இவ்வாறு பேசினால், பிரிட்டிஷாரின் தயவு ஜெர்மனிக்குக் கிடைக்கு மென்று எண்ணி செய்திருக்கலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதிருப்தியைச் சம்பாதித்துக்கொண்ட எந்த இந்தியர்களுக் கும் ஆதரவளிக்க ஹிட்லருக்கு விருப்பம் இல்லை. பெர்லினில்

இன்னொரு முக்கியமான இந்தியரை நாங்கள் சந்தித்தோம். அவர் பழைய "யுத்தகோஷ்டியை"ச் சேர்ந்தவர். அவருக்குச் சம்பகராமன் பிள்ளை என்று பெயர். அவர் ரொம்பப் படாடோபக்காரர். வாலிப இந்திய மாணவர்கள் அவருக்கு மரியாதை இல்லாத பட்டம் ஒன்றைக் கொடுத்திருந்தார்கள். அவருக்கு தேசீய விடுதலையில் மட்டும்தான் விருப்பம். சமூகத் திருத்தமும் பொருளாதார மாறுதல் களும் அவருக்குப் பிடித்தம் இல்லை. ஜெர்மானிய தேசீயக் கட்சியாரோடு அவர் மிகுந்த ஒற்றுமையுடன் இருந்தார். நாஜி ஆட்சியில் சௌகரியமாக ஜெர்மனியில் வாழ்ந்த ஒரு சில இந்தியர்களுள் அவர் ஒருவர். சில மாதங் களுக்குமுன்பு, அவர் பெர்லினில் இறந்து போன செய்தியைப் படித்தேன்.

வீரேந்திரநாதச் சட்டோபாத்தியா அவர்களைச் சந்தித்தோம். அவர் இந்தியாவில் பெயர்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் ஒரு தனிப் பேர்வழி. மற்றவர்களைப் போல இவர் நடந்துகொள்வதில்லை. இவருக்கு "சாட்டோ" என்று செல்லப் பெயர். மிகவும் சாமர்த்தியசலி. பழகுவதற்கு ருசிகரமானவர். எப்பொழுதும் அவருக்கு பணத் தொல்லைதான். உடைகளோ கிழிந்துபோகும் நிலைமைக்கு வந்து விடும். ஒருவேளை சாப்பாட்டுக்குக்கூட, சில சமயங் களில் அவரால் பணம் கண்டுபிடிக்கமுடிவதில்லை. ஆனால் அவ ருடைய நகைச்சுவையோ அபாரமானது. இங்கிலாந்தில் நான் படித்துக் கொண்டிருக்கையில், அவர் மேல் வகுப்புகளில் படித்துக்கொண்டிருந்தார். நான் ஹாரோ பள்ளியில் சேர்ந்த காலையில், அவர் ஆக்ஸ்போர்டில் ஒரு கல்லூரியிலிருந்தார். அந்த நாள் முதல்,. அவர் இந்தியாவுக்குத் திரும்பிவரவே இல்லை. பலசமயங்களில் இந்தியாவுக்கு வரவேண்டுமென்று, அவருக்கு ஆவல் உண்டாயிற்று. அவருடைய குடும்பப்பாசங் கள் அனைத்தும் ஏற்கனவேஅறுப்பட்டுபோய்விட்டன. ஆகவே அவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்தாலும், அவரால் சந்தோஷத்துடன் இருக்கமுடியாது. ஆயினும், எத்தனையோ ஆண்டுகள் அந்நியநாடுகளில் கஷ்டப்பட்டு அலைந்து திரிந்து, வீட்டு ஞாபகம் ஏற்பட்டால், அது கொடுமையாகத் தான் இருக்கும். "வீட்டு ஞாபகம், வீட்டு ருசி, இல்லாமல் வாழமுடியாது" என்று மாஜினி சொல்லியிருக்கிறார். தேசப் பிரஷ்டமான எந்த தேச பக்தரும் இந்த நோயினின்றும் தப் பித்துக் கொள்ளமுடியாது.

நான் வெளி நாடுகளில் சந்தித்த இந்திய தேசப் பிரஷ்ட தேச பக்தர்களில் பெரும்பான்மையோர்களிடம் எனக்கு அதிகமான மதிப்பு உண்டாகவில்லை யென்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுடைய தியாகத்தை நான் பெரிதும் மதித்தேன். அவர்களுடைய கஷ்டங்களையும், துயரங்களை யும் கண்டு அனுதாபப்பட்டேன். இந்த தேச பக்தர்கள் உல கம் முழுதும் பரவி நின்றமையால், அவர்களிற் பலரை என் னால் சந்திக்க முடியவில்லை. சிலரைத்தான் கீர்த்தியால், நம் மவர்களுக்குத் தெரிந்திருக்கும். மற்றவர்கள் தாய் நாட்டா ருக்கு சம்பந்தமில்லாமல் போய்விட்டார்கள். எந்த இந்தியர் களுக்கு அவர்கள் ஊழியம் செய்ய எண்ணிப் பிற தேசங்கள் சென்றார்களோ, அதே இந்தியர்கள் அவர்களை மறந்தும் போனார்கள். நான் சந்தித்த ஒருசிலரில், என் மதிப்பைப்பெற்ற வர்கள் வீரேந்திரநாத சட்டோபாத்தியாயரும், எம்.என்.ராயும் தான். ராய் அவர்களை நான் மாஸ்கோவில், அரை மணி நேரம் சந்தித்துப் பேசினேன். அவர் ஒரு முக்கியமான சம தர்மியாவார். ஆனால் பின்னர், அவருடைய சமதர்மக் கொள் கையில், சிறிது மாறுதல் ஏற்பட்டுவிட்டது. "சாட்டோ" அவர்களோ, ஒரு சமதர்மி அல்ல. ஆனால் சமதர்ம நோக்கங் களிலும், வழிகளிலும் அவருக்கு அனுதாபம் உண்டு. சென்ற மூன்று வருடங்களாக, ராய் அவர்கள் இந்தியச் சிறை ஒன்றில் இருந்து வருகின்றார்.

ஐரோப்பாவிலே பல இடங்களில் இந்தியர்கள் அனேகர் பரவி வசித்து வருகின்றார்கள். அவர்கள் புரட்சிப் பேச்சு பேசுகின்றார்கள். வீரமான யோசனைகளும், விநோதமான திட்டங்களும் போடுகிறார்கள். அவர்கள் கேட்கும் கேள்வி களோ மிகவும் விநோதமாக இருக்கும். பிரிட்டிஷ் ரகசியப் போலீஸின் முத்திரை அவர்களது முகத்தில் காணப்படுகின் றது. பல ஐரோப்பியர்களையும், அமெரிக்கர்களையும் நாங்கள் சந்தித்தோம். வெலநீவில், வில்லா ஆல்கா என்ற கட்டிடத் தில் வசித்து வந்த ரோமான் ரோலந்து அவர்களை, காந்திஜீ யிடமிருந்து சிபார்சு கடிதமொன்றைப் பெற்றுக்கொண்டு, பல தடவைகளில் ஜினிவாவிலிருந்து போய்ப் பார்த்திருக்கிறோம். அடுத்தாற்போல் எர்னஸ்டாலர் என்ற ஒருவரையும் சந்தித் தோம். அவரை மறக்கவே முடியாது. அவர் ஒரு ஜெர்மா னியர். இளமைப் பருவம் கொண்டவர். கவிஞர், நாடகாசி ரியர்; ஆனால் நாஜி ஆளுகையில், அவர் ஜெர்மானிய உரிமை

கள் யாவையும் இழந்திருக்கின்றனர். நியூயார்க்கில் மனித சுதந்திர சங்கத்தைச் சேர்ந்த ரோஜர் பால்டுவின் அவர்களை யும் சந்தித்தோம். ஜினிவாவில் நாங்கள் தனகோபால முகர்ஜி அவர்களது நட்பைப் பெற்றோம். முகர்ஜி ஒரு பிர பல ஆசிரியர். அவர் அமெரிக்காவில் குடியேறி, சுகமாக வாழ்ந்து வந்தார்.

ஐரோப்பாவுக்குப் போகுமுன்னர், நான் பிராங்க் புக் மென் அவர்களை இந்தியாவிலேயே சந்தித்துவிட்டேன். அவர், ஆக்ஸ்போர்ட் கூட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர் ஆகும். அவர் தமது இயக்க சம்பந்தமான பிரசுரங்களிற் சிலவற்றை எனக்குக் கொடுத்தார். அவ்வகளை நான் படித்து ஆச்சரியம் அடைந்தேன். விவேகம் உள்ளவர்கள் எவ்வாறு உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கி, தங்கள் கொள்கைகளை திடீரென்று மாற் றிக்கொள்ள முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை. சாதா ரணமாக புத்திசாலிகளாகத் தோன்றுவோர், வினோதமான பரவசத்துக்கு எப்படி ஆளாக முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இதைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள எனக்கு ஆசை உண்டாயிற்று. நான் பிராங்க் புக் மென் அவர்களை மீண்டும் ஜினிவாவில் சந்தித்தேன். ரொமே னியா தேசத்தில், எங்கோ ஓரிடத்தில், சர்வ தேச விருந்துக் கச்சேரி அவர் நடத்துவதாகவும், அங்கே வருமாறும் என்னை அவர் வேண்டிக்கொண்டார். போக முடியவில்லை; பரவச பக் தர்களின் திருக்கூட்டத்தைப் பார்க்க முடியாமல் போனதற் காக, நான் மிகுதியும் வருந்தினேன்; எனது ஆவல் பூர்த்தி பெறாமலே போய்விட்டது. ஆக்ஸ்போர்ட் கூட்ட இயக்கத் தைப் பற்றி, நான் அதிகமாகப் படிக்கப் படிக்க, என்னுடைய ஆச்சரியம் வளர்ந்துகொண்டே வந்தது.

# XXII

## இந்தியாவில் விவாதங்கள்

ஸ்விட்ஸர்லாந்துக்கு நாங்கள் வந்து சேர்ந்ததும், இங்கிலாந்திலே சர்வஜன வேலை நிறுத்தம் ஒன்று நிகழ்ந்தது. நான் இதைக்கண்டு மிகுதியும் பரபரப்பு அடைந்தேன். எனது அனுதாபங்கள் யாவும் வேலை நிறுத்தம் செய்தவர்களின் பக்கந்தான் என்று சொல்லத் தேவையில்லை. வேலை நிறுத்தம் சில நாட்களுக்குப்பின்னர் முறிந்துபோய்விட்டது. இதனால், எனக்கே சொந்தமாக பெரிய விபத்து வந்ததுபோல, நான் வருந்தினேன். சில மாதங்கள் கழித்து இங்கிலாந்துக்குப் போய் சில நாட்கள் தங்கினேன். சுரங்கத் தொழிலாளர்களது போராட்டம் இன்னும் நடந்துகொண்டிருந்தது. இரவில் லண்டன் மாநகரில் அரைகுறையாகத்தான் வெளிச்சம் இருந்தது. ஒரு சுரங்கப் பிராந்தியத்துக்குப் போனேன். டெர்பிஷயரிலிருந்த சுரங்கத்துக்கு என்று என் ஞாபகம். ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் மெலிந்து வாடிய முகத்துடன் இருந்தனர். இதைவிட துக்கமான வேறொருகாட்சியைக் கண்டேன். வேலைநிறுத்தம் செய்தவர்களில் பலரும் அவரது பெண்சாதிகளும், ஸ்தல கோர்ட்டுகளில், விசாரிக்கப் படுவதையும் பார்த்தேன். விசாரணைசெய்ய வீற்றிருந்த நீதிபதிகள் நிலக்கரிச்சுரங்கங்களின் மானேஜர்கள் அல்லது டைரக்டர்கள். அவர்கள் தொழிலாளர்களைவிசாரித்து விசேஷ சட்டங்களின்கீழ் அற்பக்குற்றங்களுக்காக தண்டனை விதித்தார்கள். முக்கியமாக ஒரு வழக்கு எனக்கு மிகுதியும் கோபத்தை உண்டாக்கிற்று. மூன்று நான்கு பெண்பிள்ளைகள், தங்கள் குழந்தைகள் சகிதமாக கூண்டிலே நின்றார்கள். அவர்கள்செய்த குற்றமென்ன? வேலை நிறுத்தக் கமிட்டியின் கட்டளைக்குமீறி, வேலைக்குச்சென்ற தொழிலாளிகளைப் பார்த்து, இந்தப் பெண்கள் பழித்தார்களாம். இந்த இளவயதுத் தாய்மார்களையும் குழந்தைகளையும் பார்த்தால், சரியானபடி அவர்களுக்கு வாழ்க்கையில் ஆகாரம் கிடைத்திருக்காது என்று தோன்றிற்று. நீண்ட போராட்டத்தினால் அவர்களுடைய உடம்பு மெலிந்து போய்விட்டது. அவர்களது உள்ளம் கசந்தது. எனவே ஆத்திரத்தில் தங்கள் வேலைகளை

அபகரிக்க வந்தவர்கள் சிலர்பேரில் கோபங்கொண்டு, அவர்கள் கேலி செய்திருக்கலாம்.

ஒரு வகுப்பார் தம் நலத்திற் கேற்றவாறு நீதி விதிப்பதைப்பற்றி படிக்கிறோம். அடிக்கடி இந்தியாவில் வகுப்பு பக்ஷபாதமான அநியாயத்தீர்ப்புகள் சகஜம். ஆனால் இத் தகைய அநியாயத்தீர்ப்பை இங்கிலாந்தில் நான் எதிர் பார்த்ததே இல்லை. எனவே என்னைத் திடுக்கிடச் செய்து விட்டது. இன்னொரு விஷயத்தையும் கண்டேன். தொழிலாளர்களுக்குள்ளே மிகுதியான பயம் இருந்துவந்தது. இதைக் கண்டும் நான் ஆச்சரியம் அடைந்தேன். போலீஸ்காரர்களும் அதிகாரிகளும், தொழிலாளர்களை நன்றாய்ப் பயமுறுத்தி விட்டார்கள். இதை தொழிலாளர்கள் ஏன் எதிர்க்காமல் பொறுத்துக்கொண்டிருந்தார்கள் என்று தோன்றிற்று. நீண்ட போராட்டம்; அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் முற்றிலும் தளர்ந்துபோனார்கள். நெஞ்சு உடைந்துபோகும் படியான நிலைமைக்கு வந்து விட்டார்கள். அவர்களுடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ஏனைய தொழிலாளி கூட்டங்கள் அவர்களைக் கைவிட்டுவிட்டன. அப்படியிருந்தும் ஏழை இந்திய தொழிலாளிக்கும் இவர்களுக்குமிடையே மகத்தான வித்தியாசம் இருக்கிறது. பிரிட்டிஷ் சுரங்கத் தொழிலாளர்களுக்குப் பக்கபலமாக அவர்களுடைய சொந்த ஸ்தாபனம் இருந்தது. உலகத்திலிருக்கும் தொழிற் சங்கங்கள் யாவும் இவர்களிடம் அனுதாபத்துடன் இருந்தன. இவர்களுக்கு நல்ல விளம்பரமும் பிரசாரமும் கிடைத்தன. தவிர இன்னும் பல வசதிகள் அவர்களுக்கு உண்டு. ஆனால் இந்த வசதிகள் யாவும் இந்தியத் தொழிலாளிக்கு இல்லை. ஆயினும் இந்தியத் தொழிலாளி பிரிட்டிஷ் தொழிலாளி இருவரின் மனத்திலும் சமமான பயம் குடிகொண்டிருப்பது வியக்கத் தக்கதாக விருந்தது.

இந்த ஆண்டில் இந்தியாவில் மாகாண சட்டசபைகளுக்கும் இந்தியா சட்டசபைக்கும் மூன்று வருஷத்திய தேர்தல் நடைபெற்றது. அதில் எனக்கு சிரத்தை கிடையாது. ஆனால் இந்த தேர்தலில் ஏற்பட்ட கொடிய விவாதங்களின் செய்திகள் ஸ்விட்ஸர்லாந்தில் எனக்குக் கிடைத்தன. காங்கிரஸ் கட்சியான சுயராஜ்யக் கட்சியை சட்டசபையிலும் எதிர்த்துப் போராடுவதற்காகப் புதுக் கட்சியொன்றைப் பண்டித மதன்மோகன மாளவியாவும் லாலா லஜபதிராயும்

அமைத்தாக கேள்விப்பட்டேன். இந்த கட்சிக்கு தேசீயக் கட்சி யென்று பெயரிடப் பட்டிருந்தது. இந்தத் தேசீயக் கட்சிக்கும் சுயராஜ்யக் கட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை என்னல் -அப்பொழுதுஞ்சரி, இப்பொழுதுஞ்சரி அறிந்து கொள்ள முடியவில்லை. கொள்கைகளில் வேற்றுமையா? முறையில் வேற்றுமையா? அப்பொழுது சட்டசபைகளில் கட்சிகளுக்குள் தெளிவான வேற்றுமை ஒன்றும் கிடையாது. கொள்கைகளின் வித்தியாசத்தினுலும் அவைகள் பிரிந்திருக்க வில்லை. சட்டசபைகளுக்கு புதியதொரு எதிர்ப்பு முறையை முதன் முதலாகக்கொண்டு வந்தது சுயராஜ்யக் கட்சிதான். அரசியலில் தீவிர போக்கை அது தழுவி நின்றது. என்ருலும் இந்தக் கட்சிக்கும் ஏனைய சட்டசபைக் கட்சிகளுக்கும் அடிப்படையான வேற்றுமை இல்லை. புதிதாய் அமைக்கப்பட்ட தேசீயக் கட்சியில், அதிகமான மிதவாத அம்சங்கள் காணப்பட்டன. அதை ஹிந்து கட்சியென்றே சொல்ல வேண்டும். ஹிந்து மகாசபையைத் தழுவியே, இந்தக்கட்சி சட்டசபையில் வேலை செய்து வந்தது. இந்தக் கட்சிக்கு தலைவர், பண்டித மாளவியா. அவருடைய மனப்போக்கின் பிரதிபிம்பமே தேசீயக் கட்சியென்று சொல்லவேண்டும். அவரது பழைய சம்பந்தத்தால் அவர் காங்கிரசில் இருந்து வந்தார். ஆனல், அவருடைய மனப்பான்மை அநேகமாக மிதவாதிகளின் மனப்பான்மையைத் தழுவி நின்றது.

அவர் ஒத்துழையாமையையும், காங்கிரசின் சட்டமறுப்புத் திட்டத்தையும் ஏற்கவில்லை. காங்கிரஸ் திட்டத்தைச் செப்பனிடுவதிலும், அவர் யாதொரு பங்கும் எடுத்துக்கொள்ள வில்லை. காங்கிரஸ்காரர்களுக்கு அவரிடம் அதிக மரியாதை இருந்தது. காங்கிரசில் அவரை எப்பொழுதும் அன்புடன் வரவேற்பார்கள். ஆனல் புதிய காங்கிரசுக்கும் அவருக்கும் தொடர்பே கிடையாது. அவர் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கவில்லை. சட்டசபை சம்பந்தமாக, காங்கிரஸ் இட்ட கட்டளைகளை, நிறைவேற்றிவைக்க அவர் மறுத்துவிட்டார். ஹிந்து மகாசபையின் தலைவர்களுக்குள் மிகக் கீர்த்தியும் செல்வாக்கும் பெற்றவர் மாளவியாஜீ. வகுப்புவாத விஷயங்களில் அவருக்கும் காங்கிரசுக்கும் அடிப்படையான வித்தியாசங்களுண்டு. காங்கிரஸ் தோன்றிய காலம் முதல், அவர் காங்கிரசின் தொடர்பை வைத்துக் கொண்டிருக்கிருர். தேசத்தில் உருவான வேலையை ஏதா

வது ஒருஸ்தாபனம் செய்து வருமானால், அது காங்கிரஸ் ஒன்றேதான் என்று அவர் கண்டு கொண்டார். மேலும் விடுதலைப் போராட்டத்தில் அவருக்கு உணர்ச்சி அதிகமாக உண்டு. எனவே, போராட்டக் காலங்களில் அவருடைய இதயம் காங்கிரசில் இருந்தது. மற்றைய சமயங்களில் அவரது மூளை வேறு கூட்டங்களோடு கலந்து வேலை செய்து வந்தது. இதனால் அவருடைய உள்ளத்தினூடே, நிரந்தரப் போராட்டம் நிகழ்ந்து வந்தது. சிலசமயங்களில் மாறுபட்ட இரண்டு பாதைகளில் ஒரே காலத்தில் செல்லவேண்டுமென்று அவருக்கு யோசனை தோன்றிவிடும். முடிவு வெறும் குழப்பம் தான். தேசீய உணர்ச்சியோ எப்பொழுதும் குழப்பம் கொண்ட ஒரு கதம்பச்சரக்காகும். மாளவியாஜீ பழுத்த தேசீயவாதி; அவருக்கு, ஆசார சீர்திருத்தத்திலும் பொருளாதாரமாறுதல் துறையிலும் அக்கரை இல்லை.

அவர் பழைய வைதீகப்பற்றை எல்லாத்துறைகளிலும் ஆதரிப்பவர். சமஸ்தானாதிபதிகளும் தாலுகாதாரர்களும் பெரிய ஜமீன்தார்களும் மாளவியாஜீயைத் தங்கள் நண்பராக கருதுகின்றார்கள். அவருக்கு ஒரேஒரு ஆசை. இந்தியாவிலே அந்நியர்கள் ஆளவே கூடாது என்பதுதான். அவருடைய இளமைப் பருவத்துப்படிப்பையும் அரசியல் பயிற்சியையும் தழுவியே, அவரது மனப்பான்மை சென்றுகொண்டிருந்தபடியால், புரட்சித் தன்மை வாய்ந்த எத்தகைய இயக்கத்திலும் பிடித்தம் இல்லை. உலக யுத்தத்திற்குபின் புரட்சிக் கலக்கமுற்றிருந்த உலகத்தை, தூங்கிக்கொண்டிருந்த பத்தொம்பதாம்நூற்றாண்டின் தலைவர்கள் கிரீன், மில், கிளாட்ஸ்டன், மார்லி முதலியோரின் மனப்பான்மையோடும், மூவாயிரம் நாலாயிரம வருஷத்திற்கு முன்னிருந்த ஹிந்து தர்மசாஸ்திரங்களின் கண்ணேடும் பார்த்துவந்தார். முரண்கொண்ட பல தன்மைகள் அவரிடம் இருந்தன. ஆனால் இந்த முரண்களை எப்படியாவது சரிப்படுத்திவிடலாம் என்பதில் அவருக்கு அளவற்ற நம்பிக்கை. அந்த முரண்களை தாமே தமது சொந்த சக்தியால் நேர் செய்துவிடலாம் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. அவர் நீண்டகாலப் பொதுஜன ஊழியர். அவருடைய இளமைப் பருவமுதற்கொண்டே, அவர் பல துறைகளிலும் நாட்டுக்குத் தொண்டு செய்திருக்கிறார். காசி, ஹிந்துப்பல்கலைக் கழகத்தை ஸ்தாபித்திருக்கிறார். வேலையில் மிகுதியும் சிரத்தை கொண்டவர். சத்திய புத்தி

உள்ளவர். பேச்சு சாதுரியம் படைத்தவர். சாந்தஸ்வபாவம் கொண்டவர். யாரும் அவரிடம் அன்புகொள்ளுவார். இத்தகைய தன்மைகளால் அவர் இந்திய ஜன சமூகத்தினிடையே செல்வாக்குப் பெற்றிருக்கிறார்.

அவரோடு ஏனையோர் ஒத்து அவருடைய அரசியலைப் பின்பற்றி நடக்காவிடினும், அவருக்கு அன்பும் மரியாதையும் காண்பிக்காமல் இருக்கமுடியாது. நீண்டகாலப் பொதுஜன ஊழியத்தாலும், அவருடைய முதுமைப் பருவத்தாலும், இந்திய அரசியல் உலகில் குரு போன்றவர். ஆனால் அவருக்கும் நவீன உலகத்துக்கும் அதிக தொடர்பு இல்லை. ஜனங்கள் அவர் சொல்லுவதை மரியாதையுடன் கேட்கின்றார்கள். ஆனால், அதை பெரும்பான்மையோர் பின்பற்றி நடப்பது இல்லை. அவருடைய காலம் வேறு; இந்தக்காலம் வேறு. மாளவியாஜீ ஸ்வராஜ்யக் கட்சியைச் சேராதது இயற்கை தான். ஸ்வராஜ்யக்கட்சி அவருடைய விருப்பத்தைக் காட்டிலும் தீவிரமான கட்சி. அது காங்கிரஸ் முறையில் கட்டுப்பாடாக ஒட்டிக்கொண்டு உழைக்கவேண்டும். ஆனால் மாளவியாஜீயோ, இத்தகைய கட்டு திட்டத்தை விரும்பக்கூடியவர் அல்ல. அரசியலிலும் வகுப்புவாதத்திலும், அவர் தமது சொந்தக் கருத்துப்படியே நடக்கவேண்டும் என்று ஆசைப்பட்டவர். இந்த மனப்பான்மைக்குத் தக்கபடி புதிய கட்சியில் அவருக்கு வசதி ஏற்பட்டது. இந்தக் கட்சிக்கு அவர் ஸ்தாபகரும் தலைவரும் ஆனார்.

புதிய தேசீயக்கட்சியில் லாலா லஜபதிராய் சேர்ந்தது என்ன காரணத்தினால் என்று எனக்கு எளிதிலே விளங்கவில்லை. வகுப்பு வாதத்திலும மித வாதத்திலும் அவருக்கு சிறிதளவு சார்பு இருந்தாலும், அவர் தேசீயக்கட்சியில் சேர்ந்துகொண்டது பொருந்தவில்லை. அந்த ஆண்டு கோடையில், நான் லாலாஜீயை ஜினிவாவில் சந்தித்தேன். அவர் காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக எதையும் செய்யமாட்டார் என்று எங்களுடைய சம்பாஷணைகளிலிருந்து நான் கிரஹித்தேன். என்றாலும் காங்கிரஸ் கட்சியின் எதிர் கட்சியில் அவர் எவ்வாறு போய்ச்சேர்ந்தாரோ? தேர்தல் காலத்தில், அவர் காங்கிரஸ் தலைவர்களின்பேரில், சில குற்றச்சாட்டுகள் செய்தார். அப்பொழுதுதான் அவரது மனம எவ்வாறு சென்று கொண்டிருந்தது என்று தெரிந்தது. காங்கிரஸ் தலைவர்கள் இந்தியாவுக்கு வெளியே இருக்கும் ஜனங்களோடு சேர்ந்து

சதி செய்கிறார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டினார். காபூல் நகரில் காங்கிரஸ் கிளையொன்றை ஸ்தாபித்தது இத்தகைய சதிக்கு அத்தாட்சியென மேலும் குற்றஞ்சாட்டினார். எத்தனையோ பேர்கள் அவரை வேண்டிக்கொண்டார்கள். எனினும் அவர் குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டுச் சொல்லவுமில்லை. விவரங்களையும் கொடுக்கவில்லை. ஸ்விட்சர்லந்துக்கு எனக்கு வந்த இந்தியப்பத்திரிகைகளில், லாலாஜீயின் குற்றச்சாட்டுகளை நான் படித்து திடுக்கிட்டுப்போனேன். காங்கிரசின் காரியதரிசி என்ற முறையில் காங்கிரசைப்பற்றி எனக்கு எல்லா விவரங்களும் தெரியும். காபூல் காங்கிரஸ் கமிட்டியை காங்கிரசுடன் இணைப்பதற்கு நான்தான் தூண்டுதலாய் இருந்தேன். காபூலில் காங்கிரஸ்சபையை அமைப்பதற்கு மூல காரணரா யிருந்தவர் தேசபந்துதாஸ். லாலாஜீயின் குற்றச்சாட்டுகளின் விவரங்கள் அப்பொழுது எனக்குத் தெரியாது. ஆனால் பொதுவாக அவரது குற்றச்சாட்டுகளுக்கு காங்கிரஸ் சம்பந்தப்பட்டவரையிலும், ஆதாரமே கிடையாது என்று என்னால் கூறமுடியும். லாலாஜிக்கு யாரோ தவறான செய்தியைக் கொடுத்திருக்க வேண்டும். இது எவ்வாறு நேர்ந்தது என்று எனக்குத் தெரியாது. அவர் பொதுவாக வதந்திகளை நம்பி இருக்கலாம். மௌல்வி உபயதுல்லாவோடு அவர் செய்த சம்பாஷணையின் மூலமாக இத்தகைய மனப்பான்மை அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். உபயதுல்லாவின் சம்பாஷணை எனக்கு ருசிகரமானதாகப் படவில்லை. லாலாஜிக்குப் பட்டிருக்கலாம். ஆனால் தேர்தல்கள் அசாதாரணமான சம்பவங்களாகும். தேர்தல் காலத்தில் ஆத்திரப்படுவதும் அத்துமீறி எதையும் பேசுவதும் செய்வதும் இயல்பாகும். தேர்தலைப் பார்க்கப்பார்க்க, எனக்கு அதிலே மிகவும் வெறுப்பு உண்டாகின்றது. இந்த வெறுப்பு ஜனநாயக உணர்ச்சிக்கு விரோதமாக இருப்பினும், அதைத் தடுக்கமுடியவில்லை.

பெரிய மனிதர்கள் ஒருபுறமிருக்கட்டும். நாட்டிலே அப்பொழுது ஓங்கிவரும் வகுப்புப் பகைமையின் உணர்ச்சியால், தேசீயக் கட்சியோ அல்லது அதைப் போன்ற வேறொரு கட்சியோ தோன்றியிருக்கத்தான் வேண்டும். ஹிந்துக்கள் பெரும்பான்மையோர் என்று முஸ்லீம்கள் பயப்படுகிறார்கள். முஸ்லீம்கள் தங்களைப் பயமுறுத்தி அதிகமான சலுகைகளைப்பெற முயற்சி செய்கிறார்களென்று ஹிந்துக்கள் ஆத்திரப்படுகிறார்கள். நடுப்பாதையில் நின்றுகொண்டு,

"கொடுக்கிறாயா, கொல்லவேண்டுமா" என்று கொள்ளைக் காரர்களைப் போல, முஸ்லீம்கள் மனப்பான்மையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பல ஹிந்துக்கள் ஆத்திரப்படுகிறார்கள். தேவையான சலுகைகளை கொடுக்காவிட்டால், நாங்கள் எதிர்க்கட்சிக்குப் போய்விடுவோம் என்று பயமுறுத்து வதைப்போல முஸ்லீம்கள் காரியம் செய்கிறார்கள் என்று ஹிந்துக்கள் வருந்துகிறார்கள். இந்தக் காரணத்தினாலேயே, ஹிந்து மகாசபைக்கு சிறிதளவு ஹிந்துக்களிடையே அனுதாபமும் மதிப்பும் உண்டாயின. ஹிந்து மகாசபை வகுப்பு வாதத்தை ஆதரித்து, பிரசாரமும் காரியங்களும் செய்யச் செய்ய, முஸ்லீம் வகுப்புவாதம் வளர்ந்துகொண்டே போயிற்று. பரஸ்பர பிரசாரத்தாலும் சந்தேக மனப்பான்மையினாலும், வகுப்பு உணர்ச்சி வளர ஆரம்பித்துவிட்டது. இப்பிரச்னை சாதாரணமாக பெரும்பான்மையோரான ஹிந்துக்களுக்கும் அதிக பலமுள்ள சிறுபான்மையோரான முஸ்லீம்களுக்கும் நடுவேயுள்ளது.

ஆனால் சில மாகாணங்களில் இந்நிலைமை இதற்கு நேர் விரோதமாக விருந்தது. பாஞ்சாலத்திலும் சிந்துவிலும் ஹிந்துக்களும் சீக்கியர்களும் சிறுபான்மையோராவர். முஸ்லீம்கள் பெரும்பான்மையோர். இந்த மாகாணங்களில் பெரும்பான்மையோரான முஸ்லீம்களால் சிறு பான்மையோரான தாங்கள் நசுக்கப்படுவார்கள் என்று ஹிந்துக்களும சீக்கியர்களும் அஞ்சினார்கள். ஏனைய மாகாணங்களில் இத்தகைய அச்சம் முஸ்லீம்களுக்கிடையே இருந்துவந்தது. உண்மையில் ஒவ்வொரு கூட்டத்திலும் உத்தியோகங்களை விரும்புபவர்கள் மற்ற கூட்டத்திலிருக்கும் இதே இனத்தாரோடு போட்டி போட்டு, தங்களுக்கே அந்த உத்தியோகங்களைப் பெற்றுவிடவேண்டும் என்பதுதான் நோக்கமாகும். இந்தப் பூசலில் முதலாளிமார்களும் கலந்துகொண்டு, எத்தகைய பெரிய மாறுதல்களுக்கும் இடங்கொடாமல் வகுப்புத் தீயை வளர்க்க முயன்றனர். வகுப்புப் பிரச்னை அதிகரிக்க அதிகரிக்க, ஸ்வராஜ்யக் கட்சியின் செல்வாக்கும் குறைந்து கொண்டேவந்தது; ஸ்வராஜ்யக் கட்சியிலிருந்த முஸ்லீம் அங்கத்தினர்களிற் சிலர் அந்தக்கட்சியைவிட்டு விலகி, வகுப்பு வாதக்கக்ஷிகளில் சேர்ந்து கொண்டார்கள். ஹிந்து அங்கத்தினர்களிற் சிலர் தேசியக் கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். ஹிந்து வாக்காளர்களுக்குள் லாலாஜிக்கும், மாளவியாஜிக்

கும் நல்ல செல்வாக்கு உண்டு.* வகுப்பு வாதத்துக்கு பிரதம போர்க்களமான பாஞ்சாலத்திலே, லாலாஜிக்கு அமிதமான செல்வாக்கு இருந்தது.

காங்கிரஸின் சார்பாக, அதாவது ஸ்வராஜ்யக் கட்சியின் சார்பாகத் தேர்தலில் போராடும் பொறுப்பு முழுமையும் தகப்பனார் பேரில் வந்து விழுந்தது. இந்தப் பொறுப்பை தேசபந்து முன்னர் பகிர்ந்து கொண்டிருந்தார். ஆனால், அவர் மறைந்து போய்விட்டார். சண்டை என்றால், தகப்பனாருக்குப் பிடிக்கும். சண்டையைப் பார்த்து பயந்து நழுவக் கூடியவர் அவர் அல்ல. எதிர் கட்சிகள் வலுக்க வலுக்கத்தான் தகப்பனார் தேர்தலில் மிதமிஞ்சிய ஊக்கத்தைக் காண்பிக்கத் துவக்கினார். எதிர்க் கட்சியாருக்கு நல்ல அடி கொடுத்தார். அவர்களிடமிருந்து திரும்பவும் நன்றாக வாங்கிக்கொண்டார். இரண்டு கட்சிகளும் தயை தாட்சண்யம் காண்பிக்காமல், ஒன்றையொன்று எதிர்த்துப் போராடின. தேர்தலுக்குப் பிறகு, இந்தக் கட்சிகளுக்குள் மனஸ்தாபம் முதிர்ந்து நின்றது. தேர்தலில் தேசீயக் கட்சிக்கு திருப்திகரமான வெற்றி கிடைத்தது. ஆனால், இந்த வெற்றியினால், சட்ட சபையில் எதிர்ப்பு கம்பீரமாக ஏறாமல், தொனி குறைந்துகொண்டே வந்தது. சட்ட சபையில் மிதவாதம் அதிகமாக தலை தூக்க ஆரம்பித்துவிட்டது. ஸ்வராஜ்யக் கட்சி காங்கிரஸின் ஒரு பகுதியாக வேலை செய்தது. அந்தக் கட்சி தனது சக்தியை வலுப்படுத்திக்கொள்வதற்காக முயற்சி செய்ததில், சந்தேகப்பட்ட பல பேர்வழிகளைத் தன்னகத்தில் சேர்த்துக்கொண்டு, கட்டுப்பாட்டிலும், தொனியிலும், தன்மையிலும் குறைந்து கொண்டே வந்துவிட்டது. தேசீயக் கட்சியும் இதே தோரணையில் வேலை செய்து, ஸர்க்கார் பட்டதாரிகளையும், பெரிய நிலச்சுவான்தார்களையும், முதலாளிகளையும் அரசியல் பழக்கமே இல்லாத ஏனையோர்களையும் சேர்த்துக்கொண்டு, தனது கட்டுப்பாட்டையும், தன்மையையும் பெரிதும் குறைத்துக் கொண்டது.

1926-ஆம் வருஷக் கடைசியில் பயங்கரமான சம்பவம் ஒன்று நடைபெற்றது. அந்தச் சம்பவம் இந்தியா முழுவதையும் திடுக்கிடச் செய்துவிட்டது. வகுப்பு வாதம் நமது மக்களை எவ்வளவு வரையிலும் ஆட்டிவைக்க முடியும் என்பதை அந்த நிகழ்ச்சி தெளிவாகக் காண்பித்துவிட்டது. ஸ்வாமி சிரத்தானந்தர் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார்.

யாரோ ஒரு வெறியன் அவரைக் கொன்றுவிட்டான். டில்லியில் கூர்க்கப் படைகள் காங்கிரஸ்காரர்களை எதிர்த்து வந்தபொழுது, அவர்களுக்குத் தமது மார்பைக் காட்டி அவர்களுடைய துப்பாக்கிக்கு இரையாவதற்குச் சிறிதும் தயங்காமல் முன் சென்ற வீரனை ஸ்வாமி சிரத்தானந்தருக்கு எத்தகைய மரணம்! சிரத்தானந்தர் ஆரிய ஸமாஜத் தலைவர் என்பதைக் கருத்தில் கொள்ளாமல், எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் டில்லி ஜும்மா மசூதியில் பிரசங்கம் செய்யும்படியாக முஸ்லீம்களே அவரை அன்புடன் வரவேற்றார்கள். இந்தியாவின் விடுதலையையும், ஒற்றுமையையும் பற்றித் திரளான ஹிந்து முஸ்லீம்களுக்கிடையே அன்றைக்கு அவர் மகத்தான பிரசங்கம் ஒன்றைச் செய்தார். அந்தக் கூட்டத்திலே, அவர்கள் ஹிந்து-முஸல்மான்கி ஜே என்று உரக்க ஆரவாரம் செய்தார்கள். அந்தக் காலத்தில் அந்த ஒற்றுமையுடன் அரசாங்கத்தாரை எதிர்த்துப் போராடி, இரு கூட்டத்தாரும் தங்கள் இரத்தத்தைச் சிந்தி, அந்த ஒற்றுமையை ருஜுப்படுத்தினார்கள். இன்றைக்கு அவர் இறந்து போய்விட்டார். இல்லை, கொல்லப்பட்டார். யாரால் கொல்லப்பட்டார்? இந்தியா தேசத்தில் பிறந்து வளர்ந்த சகோதர இந்தியனால் கொல்லப்பட்டார். இந்தச் செய்கையால், தான் சுவர்க்கத்துக்குப் போகக் கூடும் என்றும், புண்ணியத்தைச் சம்பாதித்துக்கொண்டதாகவும் அந்தக் கொலையாளி கருதினான்.

எப்பொழுதுமே எனக்கு தைரியத்தைக் கண்டால் மிகவும் மதிப்பு. நல்லதொரு கொள்கைக்காக சாவு வரையிலும் போராடி, யாரேனும் ஒருவர் தைரியத்தைக் காண்பித்தால், அவரிடத்தில் எனக்கு அளவு கடந்த மோகம் உண்டாகும். இத்தகைய பிரமை எல்லோருக்கும் சாதாரணமாக உண்டாகக் கூடியதுதான். ஸ்வாமி சிரத்தானந்தரிடம் அச்சமின்மை என்ற தன்மை அளவுகடந்து இருந்தது. அவர் நல்ல ஆஜானுபாகு. நேர்த்தியான உருவம் படைத்தவர். சந்நியாச உடைதரித்து இருப்பவர்; முதுமை பருவத்திலும் முதுகு கூனாமல், நிமிர்ந்து நடக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர். அவருடைய கண்களில் பளிச் பளிச்சென்று, மின் வெட்டுகளைப் போல் ஒளி வீசும். மற்றவர்களிடம் பலவீனத்தைக் கண்டால், அவருடைய முகத்தில் ஆத்திரமும், பதைபதைப்பும் தோன்றி மறைவதைத் தெளிவாகக் காணலாம். வடிவழகமைந்த அந்த உருவத்தை நான் மறக்கவே முடியாது.

## XXIII

## பிரஸ்ஸல்ஸில் ஒடுக்கப்பட்டவர்கள் மகாநாடு

1926-ம் வருஷக் கடைசியில் நான் பெர்லினில் இருந்தேன். ஒடுக்கப்பட்ட தேசத்தார் பிரஸ்ஸல்ஸ் நகரில் மகாநாடு கூடப்போகின்றார்கள் என்று அறிந்தேன். இந்த நோக்கம் எனக்கு மிகுதியும் பிடித்தது. பிரஸ்ஸல்ஸ் காங்கிரசின் நடவடிக்கைகளில், இந்திய தேசிய காங்கிரஸ் பகிரங்கமான முறையில் கலந்து கொள்ளலாம் என்ற யோசனையை இந்தியாவுக்கு சொல்லியனுப்பினேன்; யோசனை ஏற்றுக்கொள்ளப் பட்டது. இந்த வேலைக்காக, நான் இந்தியக் காங்கிரசின் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டேன். 1927-ம் வருஷம் பிப்ரவரி மாதத் துவக்கத்தில் பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸ் நடைபெற்றது. காங்கிரஸ் கூடுவதற்கு மூலகாரணம் யார் என்பது எனக்குத் தெரியாது. அந்தக் காலத்தில் தேசப்பிரஷ்டமான தேசபக்தர்களும் தீவிரக்கட்சியைச் சேர்ந்தவர்களும், வெளிநாடுகளிலிருந்துவந்து தங்குவதற்கு பெர்லினில் விசேஷ சௌகர்யங்கள் இருந்தன. இந்தவகையில் பெர்லின், பாரிஸ் நகரோடு கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டி போட்டுக் கொண்டுவந்தது. மேலும் பெர்லின் நகரில் பொதுவுடைமைக் கட்சியாரும் பலமாக இருந்தார்கள். ஒடுக்கப்பட்ட சாதியார் அனைவரும் ஒன்று சேர்ந்து, எல்லா நாட்டுத் தொழிற்கட்சிகளோடும் உறவு கொண்டாட வேண்டும் என்ற எண்ணம் உலகெங்கும் பரவிவந்தது. தவிர இவர்கள் ஒன்றுகூடினால்தான் ஒடுக்குபவர்களை எதிர்த்துப் போராடமுடியும் என்ற நம்பிக்கையும் வளர்ந்துவந்தது. முதலாளி சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலை யடைவது எல்லா நாடுகளுக்கும் பொதுவானதென்று அப்பொழுதுதான் உணர ஆரம்பித்தார்கள். சாம்ராஜ்யக்கொள்கையை எதிர்த்துப் போராடி, அதை வீழ்த்துவதற்காக எல்லா நாடுகளிலும் வசிக்கும் ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடவேண்டும் என்று கருதப்பட்டது. குடியேற்ற நாடுகளைப்படைத்த இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி முதலிய வல்லரசுகள் மேற்கூறிய முயற்சிகளுக்கு விரோதமா யிருப்பது சகஜம். ஆனால் ஜெர்மனியோ யுத்தத்துக்குப் பின் குடியேற்ற நாடுகளை யிழந்து

விட்டது. ஆகவே, மற்ற வல்லரசுகளுக்கு சொந்தமான குடியேற்ற நாடுகளிலும் அடிமை நாடுகளிலும் கிளர்ச்சி ஏற்படுவதை ஜெர்மன் சர்க்கார் தடுக்காமல் அனுதாபத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர். தீவிரக் கட்சியார் வெளிநாடுகளிலிருந்து பெர்லினில் வந்து கூடிக்கொண்டதற்கு இது ஒரு காரணமாகும். இவர்களிலே, சிறப்பாக பங்கெடுத்துக் கொண்டவர்கள், கூமிங்தேங் என்ற தீவிரக் கட்சியைச் சேர்ந்த சீனர்கள். கூமிங்தேங் கட்சிப்பிரசாரத்தால், சைனுவில் பழைய ஜமீன்தார் உரிமைகள் எல்லாம் சரிந்து வீழ்ந்து கொண்டிருந்தன. இந்த நூதனமான நிகழ்ச்சியைக்கண்டு, சாம்ராஜ்ய வல்லரசுகள்கூடத் தங்களுடைய திமிரை தணித்துக்கொண்டு, பிரஜைகளோடு சரஸமாகப் பழக ஆரம்பித்தன. சீனுவின் ஒற்றுமையையும் விடுதலையையும் யாராலும் இனி ஒரு நிமிஷம்கூடத் தடுக்கமுடியாது என்று தோன்றிற்று. தனது வெற்றியிலே கூமிங்தேங் கட்சிக்கு வெகு உற்சாகம். தன் போக்குக்குக் குறுக்கே நின்ற பல இடைஞ்சல்கள் இன்னதென்று அதற்குத் தெரியும். எனவே சர்வதேசப் பிரசாரத்தால் தனது சக்தியை வலுப்படுத்திக் கொள்ள கூமிங்தேங் முயற்சி செய்தது. இந்தக் கட்சியைச் சேர்ந்த சமதர்மிகள் வேற்று நாட்டு சமதர்மிகளோடு கலந்து பிரசாரம் செய்யவேண்டுமென்று தீர்மானம் கொண்டார்கள். அப்பொழுது அந்தக் கட்சியில் பிளவுகளே இல்லை. ஒடுக்கப்பட்டவர்களது காங்கிரஸை நடத்தவேண்டும் என்ற கருத்தை கூமிங்தேங் கட்சியின் ஐரோப்பியப் பிரதிநிதிகள் வரவேற்றார்கள். இந்த கருத்தை முதன் முதல் கிளப்பியது இவர்களாகவே இருக்கலாம். சமதர்மிகளும் இதை ஆரம்பித்திருக்கக்கூடும். ஆனல் தங்கள் பெயர் வெளிக்கு வராமல், பின்னே நின்று அவர்கள் காரியம் செய்தார்கள்.

பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸுக்குப் பணமும் ஆதரவும் தென் அமெரிக்காவிலிருந்தும் மெக்ஸிகோவிலிருந்தும கிடைத்தன. அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் பொருளாதார சாம்ராஜ்யம் தென் அமெரிக்க நாடுகளுக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. ஐக்கிய மாகாணங்களுக்கு விரோதமாக மற்றைய அமெரிக்க நாடுகளை ஒன்று சேர்க்கவேண்டுமென்று மெக்ஸிகோ நாடு அரும்பாடுபட்டது. எனவே பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸில் மெக்ஸிகோ அதிகமான சிரத்தை எடுத்துக்கொண்டது என்று சொல்லத் தேவையில்லை. உத்தியோக முறைமையில், மெக்

ஸிகோ அரசாங்கத்தார் பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸில் கலந்து கொள்ளமுடியாவிட்டாலும், தங்களது முக்கிய ராஜதந்திரிக ளில் ஒருவரை பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸில் பிரசன்னமாயிருக்கு மாறு அனுப்பிவைத்தார்கள்.

பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸில் பல நாடுகளின் பிரதிநிதிகள் பிரசன்னமாயிருந்தார்கள். ஜாவா, இந்தோ-சைனு, பாலஸ் தீனம், ஸிரியா, எகிப்து முதலிய நாடுகளிலிருந்து பிரதிநிதி கள் வந்திருந்தார்கள். வட ஆப்பிரிக்காவிலிருந்து அராபியர் களும் நீக்ரோவர்களும் வந்திருந்தார்கள். தொழிற்கட்சிக ளின் தீவிரப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் தொழிலாளர் களுக்காக ஒரு தலைமுறையாய்ப் போராடிய முக்கியஸ்தர்கள் பலரும் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்து வந்திருந்தார் கள். சமதர்மிகளும் அங்கே கூடினார்கள். அவர்கள் நட வடிக்கைகளில் சிறப்பாகக் கலந்துகொண்டார்கள். அவர்கள் சமதர்மிகள் என்ற ஹோதாவில் மகாநாட்டுக்கு வரவில்லை. தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். காங்கிரஸுக்கு ஜார்ஜ் லான்ஸ்பரி அவர்கள் தலைவராக தெரிந் தெடுக்கப்பட்டார். அவர் உருக்கமான பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தினார். காங்கிரஸ் பொறுப்பில்லாதவர்களது கூட்ட மல்லவென்றும் அது சமதர்மக் கொள்கையைத் தழுவியதல்ல வென்றும் இதனின்றும் நன்றாகத் தெரியவில்லையா? ஆனால் மகாநாடு சமதர்மிகளிடம் அனுதாபம் காண்பித்தது என்று சொல்லவேண்டியதுதான். சில கொள்கைகளில் வேற்றுமை கள் இருந்தபோதிலும், ஒத்துழைப்பதற்குப் பல சந்தர்ப்பங் கள் இருப்பதாகக் காணப்பட்டது. 'சாம்ராஜ்யத்துக்கு விரோதமான லீக்' என்ற அமைப்பைக் காயமாக ஏற்படுத்திய தும், அந்த லீக்குக்கும் தலைவராக இருக்க லான்ஸ்பரி இசைந் தார். ஆனால் கூடிய விரைவில் அவசரப்பட்டு இக்காரியம் செய்ததற்காக அவர் வருந்தினதாகத் தோன்றிற்று. அவ ருடைய செயலை பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கீகரிக்கவில்லை. பிரிட்டனிலே, தொழிற்கட்சி, பார்லிமெண்டில் பிரதான எதிர்க்கட்சியாக, அப்பொழுது வேலை செய்து வந்தாலும், கூடிய சீக்கிரத்தில் மந்திரிப்பதவிகளை ஏற்கவேண்டியதா யிருக்கும். எனவே ஆபத்தும் புரட்சியும் நிறைந்த அரசிய லில் எதிர்கால மந்திரிமார்கள் கலந்துகொள்வது உசிதமா யிருக்காது. லான்ஸ்பரி அவர்கள் தமக்கு வேலை அதிக மென்ற காரணத்தாலே முதலில் லீக் தலைமைப்பதவியை

ராஜிநாமாச் செய்தார். அடுத்தபடியாக லீக் அங்கத்தினர் என்ற பதவியினின்றும் விலகிக்கொண்டார். இரண்டொரு மாதங்களுக்கு முன், அவர் பேசிய பேச்சைக்கேட்டு பரவசம் அடைந்த எனக்கு, அவர் இவ்வாறு திடீரென மாறிப்போனதைக் கண்டு வருத்தம் உண்டாயிற்று.

சாம்ராஜ்யத்துக்கு விரோதமான லீக்கில் கீர்த்திவாய்ந்த பலர், போஷகர்களாகவிருந்து ஆதரவு காண்பித்தார்கள். அவர்களில் ஈன்ஸ்டீன் ஒருவர். சீனதேசத்து ஸ்ரீமதி சன்யாட்சென் ஒருவர். ரொமென் ரோலந்து அவர்களும் ஒருவர் என்று நான் எண்ணுகிறேன். சில மாதங்களுக்குப் பிறகு ஈன்ஸ்டீன் இந்த லீக்கிலிருந்து விலகிக்கொண்டார். பாலஸ்தீனத்தில் நிகழ்ந்த அராபிய-யூத சச்சரவில் பிரஸ்தாப லீக், அராபியர்களுக்குச் சாதகமாக இருந்தது என்ற காரணத்தால் ஈன்ஸ்டீன் விலகிக்கொண்டார். பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸ் மூலமாயும் "லீக்" கமிட்டியின் கூட்டங்கள் மூலமாயும் குடியேற்ற நாட்டுப் பிரச்னைகளைத் தெளிவாக அறிந்துகொள்ள உதவியாய் இருந்தது. ஐரோப்பியத் தொழிலாளர்களின் உள்ளங்களில் எத்தகைய போராட்டங்கள் நிகழ்ந்துவந்தன என்பதும் எனக்குப் பளிச்சென்று தெரிந்தது. இவைகளைப்பற்றி ஏற்கனவே எனக்குக் கொஞ்சம் தெரியும். படித்திருந்தேன். ஆனால் எனது அறிவு புத்தக அறிவாக விருந்தது, அனுபவத்தால் ஏற்பட்டதல்ல. இப்பொழுதோ சிறிது அனுபவமும் கிடைத்தது.

முக்கியஸ்தர்களான தொழிலாளர்களைக் கண்டுபேசி, அவர்களது உள்ளங்களில் நிகழ்ந்துவரும் போராட்டங்களைத் தெரிந்துகொள்ள எனக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. சர்வதேசத் தொழிற்கட்சி மகாநாடுகளில் சமதர்மக் கொள்கையை ஆதரித்த மூன்றாவது மகாநாட்டிலேதான் எனக்குப் பிடித்தம். பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் மனப்பான்மையும் அதன் முறையும் இந்தியாவிலிருக்கும் நமக்கு நன்றாகத் தெரியும். நான் சமதர்மக் கொள்கையிடம் ஆதரவு வைக்கத்தொடங்கினேன். அதில் எத்தனையோ தப்பிதங்கள் இருந்தபோதிலும், நயவஞ்சகத்தைக் காண முடியாது. சாம்ராஜ்யச் சுரண்டல் நோக்கத்தையும் பார்க்க முடியாது. சமதர்மக் கொள்கைகளைப் பூராவும் ஆராய்ந்து நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தக் கட்சியில் பொதுவான சில அம்சங்கள்தான் எனக்குத்தெரியும். மேலும், ருஷியாவிலே நிகழ்ந்த

மகத்தான மாறுதல்களைப் பார்த்து, நான் மகிழ்ச்சியடைந்தேன்.

ஆனால், பல சமயங்களில், சமதர்மிகளிடம் எனக்கு மிகுதியும் ஆத்திரம் உண்டாகும். அவர்களுடைய எதேச்சாதிகார முறைகள் எனக்குப் பிடிக்கவில்லை. யாரையும் அனுவசியமாகவும் அநாகரிகமாகவும் அவர்கள் தாக்கிவந்தது எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களோடு ஒத்துப் போகாதவர்களைச் சாபம் கொடுத்து, ஏசி வந்தார்கள். அவர்களுடைய இந்தப் பழக்கம் எனக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. தொழிலாளிகளின் குடும்பங்களில் பிறவாததாலும் முதலாளி மார்களின் கல்விமுறையில் போதிக்கப்பட்டதாலும், எனக்கு அத்தகைய வெறுப்பு ஏற்பட்டதென்று சமதர்மிகள் கட்சிவாதம் சொல்லக்கூடும். 'சாம்ராஜ்யத்துக்கு விரோத லீக்' கமிட்டிக் கூட்டங்களில், சில்லரை விவாதங்களில் அநேகமாக நான் அமெரிக்கப் பிரதிநிதிகளையும் ஆதரித்து வந்தது குறிப்பிடத்தக்கது. செயல் முறையில் அவர்களுக்கும் எனக்கும் மனஒற்றுமை அதிகமாகக் காணப்பட்டது. பிரசங்கங்களைப்போல நீண்ட தீர்மானங்கள் செய்வதில், எங்களுக்கு ஆட்சேபணை அதிகம். சுருக்கமான, எளிதான, தீர்மானங்களாக இருக்கவேண்டும் என்பது எங்களது விருப்பம். ஆனால், ஐரோப்பா கண்டத்து வழக்கம் வேறு மாதிரியாக இருந்தது. பல சமயங்களில், சமதர்மிகளுக்கும், சமதர்மிகளில்லாத வர்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிடும். அநேகமாக முடிவில் ராஜி ஏற்பட்டுவிடும். பின்னர் எங்களிற் சிலர், தாய்நாடுகளுக்குத் திரும்பி வந்துவிட்டோம். அதற்குப்பிறகு எங்களால் கமிட்டிக் கூட்டங்களில் ஆஜராயிருக்க முடியவில்லை.

சாம்ராஜ்யக் கொள்கை கொண்ட வல்லரசுகள், பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற காங்கிரஸை நடுக்கத்துடன் நோக்கின. அதன் நடவடிக்கைகளைக் கண்டு சிறிதளவு திகிலடைந்து போனார்கள். பிரிட்டிஷ் அந்நியநாட்டு இலாகாவைச் சேர்ந்த 'அங்கூர்' என்ற பிரசித்திபெற்ற எழுத்தாளர் எழுதிய நூல் ஒன்றில் இதைப்பற்றிப் படிப்பவர் பதைக்கும் படியாகவும் நகைக்கும் படியாகவும் குறிப்புகள் எழுதியிருக்கிறார். இம் மகாநாட்டில் ஏராளமான உளவர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். பிரதிநிதிகளிற் பலர் ரகஸியப் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள். இதுசம்பந்தமாக அதிசய நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது. என்னுடைய அமெரிக்க நண்பர் ஒருவர் பாரிஸ்

நகரில் இருந்தார். பிரஞ்சு ரகசியப் போலீஸைச் சேர்ந்த பிரெஞ்சுக்காரர் ஒருவர் அவரைச் சந்தித்தார். குறிப்பான சில விஷயங்களைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள, அவர் வந்திருந்தார். தமது விசாரணையை முடித்துக் கொண்ட பின்னர் "நாம் இருவரும் ஏற்கனவே சந்திக்கவில்லையா ? என்னை அடையாளம் தெரிகிறதா?" என்று கேட்டார். அமெரிக்க நண்பர் ஞாபகப்படுத்திக்கொள்ள முயன்றார். நினைவு வரவில்லை யென்று அவர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. பிறகு இரகசியப் போலீஸ் பிரெஞ்சுக்காரர் பின்வருமாறு சொன்னார்:—

"நான் தங்களைப் பிரஸ்ஸல்ஸ் காங்கிரசில் சந்தித்திருக்கிறேனே! நான்ஒரு நீக்ரோ பிரதிநிதியாக என்னுடைய முகம் கைகள் முதலியனவற்றை சாயத்தால் கறுப்பாக அடித்துக் கொண்டு வரவில்லையா?" என்றார்.

"சாம்ராஜ்ய விரோத லீக்" கமிட்டியின் கூட்டங்களில் ஒன்று, கொலோன் நகரில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நான் ஆஜராய் இருந்தேன். கூட்டம் முடிந்த பிறகு, டஸல்டார்ப் நகருக்கு நாங்கள் போகும்படியாக வேண்டிக் கொண்டார்கள். அமெரிக்காவில் அநியாயமாகத் தூக்கிலிடப் பட்ட சாகோ, பான்செட்டி என்ற இருவர்களைப்பற்றிய அனுதாபக்கூட்டம் டஸல்டார்பில் கூட்டப்பெற்றது. இந்தக்கூட்டம் முடிந்து, நாங்கள் திரும்பிவருகையில், போலீசார் எங்களுடைய அனுமதிச் சீட்டுகளைப் பார்க்கவேண்டும் என்று கேட்டார்கள். எங்களிற் பலரிடம் தங்களுடைய அனுமதிச் சீட்டுகள்கூடவே சட்டைக்குள்ளிருந்தன. ஆனால் என்னுடையஅனுமதிச் சீட்டை கொலோன் ஹோட்டல் ஒன்றில் வைத்து மறந்து வந்துவிட்டேன். டஸல்டார்ப் இரண்டொரு மணிநேரப் பிரயாணம்தானே என்று எண்ணி அனுமதிச் சீட்டைக் கையோடு எடுத்துக் கொண்டுவரவில்லை. என்னை ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள். நல்ல வேளையாக என்னைப் போலவே கொலோனில் தங்கள் அனுமதிச் சீட்டுகளை வைத்துவிட்டுவந்த இங்கிலீஷ்காரர் ஒருவரும் அவரது மனைவியாரும் என்னுடன் கூடச் சேர்ந்து வந்தார்கள். சுமார் ஒரு மணி நேரம் காத்துக்கொண்டிருந்தோம். டெலிபோன் மூலம் போலீசார் விசாரணை நடந்திருக்கவேண்டும். எங்களைப் போகும் படியாக இறுதியில் போலீஸ் அதிகாரி, கருணையுடன் உத்தரவு அளித்தார். "சாம்

ராஜ்ய விரோத லீக்" சமதர்மக் கொள்கையிடம் சிறிது சிறிதாக நாட்டம் கொண்டபோதிலும், அது தனது விசேஷ நோக்கத்தை இழந்துவிடவில்லை. நான் கடிதப் போக்கு வரத்து மூலமாகத்தான், லீக்கோடு தொடர்பு வைத்துக் கொள்ள முடிந்தது. 1931-ம் ஆண்டில் காங்கிரசுக்கும் இந்திய அரசாங்கத்தாருக்கும் டில்லிமா நகரில் ராஜி ஏற்பட்டதில், நானும் கலந்துகொண்டேன் என்று என்பேரில் பழி சுமத்தி, "லீக்" என்னிடம் ஆத்திரம் கொண்டு, என்னை ஒரு தீர்மானத்தின் மூலமாக, தனது அமைப்பினின்றும் விலக்கி விட்டது. என்பேரில் 'லீக்' ஆத்திரப்படுவதற்கு ஆதாரம் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் எனது நிலைமையை விளக்கிக் காண்பிப்பதற்காக, "லீக்" எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்திருக்கலாம்.

1927-ம் வருடம் கோடையில் என் தகப்பனார் ஐரோப்பாவுக்கு வந்தார். அவரை வெனிஸ் நகரில் சந்தித்தேன். அடுத்த சில மாதங்கள் நாங்கள் எல்லோரும் அநேகமாக ஒன்றாகத்தான் இருந்தோம். தகப்பனார், என் மனைவி, தங்கை, நான் எல்லோருமாக ஸோவியத்தின் பத்தாவது ஆண்டு விழாக்காலத்தில், நவம்பர் மாதத்தில் மாஸ்கோ நகருக்குச் சென்றோம். அது மிகவும் சுருக்கமான பிரயாணம். மாஸ்கோவுக்குப் போவதென்றும் அங்கே இரண்டொரு நாட்கள் தங்குவதென்றும் நாங்கள் திடீரென்று தீர்மானம் செய்தோம். இதனால் எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அங்கே சிலநாட்களே தங்கினாலும், நாங்கள் பார்த்தது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அந்தக் காட்சியினின்றும் நாங்கள் சோவியத் தத்துவத்தைப்பற்றியும் புதிய ருஷியாவைப் பற்றியும் அதிகமாக ஒன்றும் தெரிந்து கொள்ளமுடியவில்லை. என்றாலும் புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்வதற்கு, இந்தக் காட்சி அநுகூலமான அடிகோலியாக விருந்தது. சமதர்மக் கூட்டு இயக்க முறைகளும், கருத்துகளும் எனது தகப்பனாருக்கு முழுதும் புதியதானவை. அவருடைய மனப் பயிற்சி சட்ட வரம்புக்கு உட்பட்டு நடக்கும் பயிற்சியாகும். அந்த அமைப்பினின்றும் அவர் தமது மனதை எளிதிலே வெளியே கொண்டுவரமுடியாது. ஆனால், மாஸ்கோவில் அவர் கண்டகாட்சி அவரது உள்ளத்தில் பதிந்தது என்று உறுதியாகச் சொல்லலாம். இந்தியாவுக்கு சைமன் கமிஷன் வரப் போகின்றது என்ற அறிவிப்பை முதன் முதலாக நாங்கள்

மாஸ்கோவில் தெரிந்து கொண்டோம். இந்தச் செய்தியை மாஸ்கோ பிரசுரம் ஒன்றில் முதன் முதலாகப் படித்தோம். இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னர், பிரீவி கவுன்ஸில் நீதிஸ்தலத்தில் தகப்பனார் ஒரு வழக்குக்காக ஆஜராகவேண்டியிருந்தது. அது இந்தியாவிலிருந்து, பிரீவி கவுன்ஸிலுக்கு வந்திருந்த அப்பீல் வழக்காகும். அந்த வழக்கில் தகப்பனாரோடுகூட ஆஜரானவர் ஸர் ஜான் சைமனவர்கள். அது ஒரு பழைய ஜமீன்தார் வழக்கு. அதனுடைய துவக்க காலத்தில், பல ஆண்டுகளுக்கு முன்னர், நானும் வக்கீலாக ஆஜராயிருந்திருக்கிறேன். அதைப்பற்றி இப்பொழுது எனக்கு யாதொரு சிரத்தையும் இருக்கவில்லை. ஆனால் ஸர் ஜான் சைமன் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி, ஒரு தடவை தகப்பனாரோடு ஸர் ஜான் சைமனுடைய காரியாலயத்துக்கு வழக்கைப்பற்றி கலந்து பேசுவதற்காகப் போயிருந்தேன்.

1927-ம் வருஷ முடிவு. ஐரோப்பாவில் எங்கள் வாசம் அதிகமாக நீடித்துக்கொண்டே போயிற்று. தகப்பனார் ஐரோப்பாவுக்கு வந்திருக்காவிடில் நாங்கள் சீக்கிரமாகவே இந்தியாவுக்குத் திரும்பி வந்திருப்போம். திரும்பி வரும் பொழுது துருக்கி, எகிப்து முதலிய நாடுகளில் சிறிது காலம் தங்கவேண்டுமென்று விரும்பினோம். ஆனால் அதற்குப் போதுமான காலம் இல்லாமற் போய்விட்டது. சென்னையில் அந்த வருஷம் கிறிஸ்மஸ் காலத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸுக்கு வரவேண்டுமென்று எனக்கு மிகுதியும் ஆவல் உண்டாயிற்று. மார்ஸெயில்ஸிலிருந்து புறப்பட்டோம், நான், மனைவி, தங்கை, மகள் எல்லோரும் கொழும்புக்குப் புறப்பட்டோம். தகப்பனார் பின்னும் மூன்று மாதகாலம் ஐரோப்பாவிலேயே தங்கியிருந்தார்.

# XXIV

## இந்தியா திரும்புதல், ராஜீயவேலையில் புகுதல்

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு நான் திரும்பி வந்த பொழுது எனது உடலும், மனமும் நல்ல ஆரோக்கிய நிலையில் இருந்தன. எனது மனைவிக்குப் பூரணமாக குணமாக வில்லை. என்றாலும் முன்னைவிட எவ்வளவோ தேறியிருந்தாள். எனவே அது நிமித்தமாக எனக்கு ஏற்பட்டிருந்த கவலை குறைந்தது. ஏராளமான ஊக்கமும் உற்சாகமும் கொண்டிருந்தேன். எனது மனதில் இருந்த குழப்பமும் தடுமாற்றமும் தற்காலிகமாக மறைந்தன. என்னுடைய நோக்கம் விசாலத்தை அடைந்தது. தேசீயம் என்ற லட்சியம் மட்டும் போதாதென்றும் அது ஒரு குறுகிய திட்டத்தைக் கொண்டதென்றும் எனக்குத் தோன்றிற்று. அரசியல் விடுதலை, பூரண சுதந்திரம் இவைகள் முக்கியமானவைதான்; ஆனால் அவைகள், சரியான வழியில் சில படிகளே ஆவன. ஜனசமூக ஆசாரங்களிலும் பொருளாதாரத்துறையிலும் ஜனசமூகத்தை மாற்றி அபேதவாதத் திட்டத்துக்குள் கொண்டு வந்தாலொழிய, நாட்டுக்குப் பொதுவாக நன்மை யேற்படாது. ஜனங்களின் தன்மையிலும் அபிவிருத்தி யடையமுடியாது என்று நம்பலானேன். உலக இயக்கங்களைப்பற்றியும் நிகழ்ச்சிகளைப்பற்றியும் தெளிவான மதிப்பும் பிடிப்பும் எனக்கு ஏற்பட்டதாக நான் கருதினேன்.

அரசியலைப்பற்றியும் தற்கால நிகழ்ச்சிகளைப்பற்றியும் நவீன நாகரிகத்தைப்பற்றியும் விஞ்ஞான, கலைஞானப் பயிற்சியைப்பற்றியும் நான் ஏராளமான நூல்களைப் படித்தேன். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும், அரசியல், பொருளாதாரம், கலை முதலிய துறைகளில் ஏற்பட்டு வரும் மகத்தான மாறுதல்களைப்பற்றிய ஆராய்ச்சி மிகவும் ரஸமானது. சில அருவருப்பான சம்பவங்கள் நிகழ்ந்தபோதிலும், சோவியத் ருஷியாவின் போக்கில் எனக்கு அதிகமான கவர்ச்சி யேற்பட்டது. உலகத்துக்கே நல்வாக்குச் செய்தி அனுப்ப, ருஷியாவால்தான் ஆகும் என்று எண்ணினேன். சென்ற மகா யுத்தத்துக்குப் பிறகு ஐரோப்பா ஒரு வகையில் அமைதி

பெற்று வாழத் துவக்கிக்கொண்டிருந்தது. பொருளாதார மந்த நெருக்கடி 1927-ம் ஆண்டில் இல்லை. ஆனால், ஐரோப்பா, (ருஷ்யா நீங்கலாக) அமைதிபெற்று வாழ்ந்தது, இது வெளித் தோற்றமே ஒழிய உண்மையல்லவென்றும், ஐரோப்பாவிலும் உலகத்திலும் மகத்தான மாறுதல்களும் எழுச்சிகளும் நிகழக் காத்துக்கொண்டிருக்கின்றன வென்னும் நம்பிக்கையுடன் நான் இந்தியாவுக்குத் திரும்பிவந்தேன்.

உலகம் திரண்டு ஒரு வகைப் போக்கில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை ஐரோப்பிய நாடுகளில் நேரும் நிகழ்ச்சிகளைக் கொண்டு அறிந்த பின்னர், இந்தியாவையும் அதற்குத் தோதான நிலைமையில் கொண்டுவந்து வைக்க வேண்டியது தான் உடனே செய்ய வேண்டிய வேலை என்று எனக்குத் தோன்றிற்று. முதலில் இந்தியாவின் லக்ஷ்யங்களில் மாறுதல் உண்டாக்க வேண்டும். முதன்முதலில், அரசியல் லக்ஷ்யத்தில், எள்ளளவும் சந்தேகமிருக்கக் கூடாது. இந்தியாவின் லட்சியம் பூர்ண சுயராஜ்யம்தான் என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்ற குழப்பப் பேச்சு பயன்படாது. அடுத்தபடியாக, ஜனசமூக அமைப்பில், இந்தியாவின் லட்சியம் என்ன என்பதையும் கவனிக்க வேண்டும். இத்துறையில் காங்கிரஸ் உடனே தீவிரமாக உழைக்குமென்று எதிர் பார்க்க முடியாது. காங்கிரஸ் ஒரு அரசியல் ஸ்தாபனம். அதனுடைய நோக்கம் தேசியம். வேறு துறைகளில் அது தனது கவனத்தைச் செலுத்தி, யோசித்ததே இல்லை. இருந்தாலும், அந்தத் துறையிலும் காங்கிரஸ் சிறிது மனம் செலுத்தும்படியாக, எப்பொழுதாவது செய்யத்தானே வேண்டும்?

காங்கிரஸுக்கு வெளியே தொழிலாளர் குழாங்களிலும் வாலிபர்களது கூட்டங்களிலும் சமூகத்திருத்தத்தைப்பற்றி, எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். இந்த உத்தேசத்துடன் காங்கிரஸில் உத்தியோகம் வகிக்கக்கூடாது என்று நினைத்திருந்தேன். எங்கேயாவது எட்டிப்போய் கிராமாந்தரங்களில் வசித்து, அவர்களுடைய உண்மையான நிலைமையைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் ஆசைப்பட்டேன். ஆனால், இந்தமாதிரி நடப்பது சாத்தியமில்லாமற்போயிற்று. மீண்டும் காங்கிரஸ்வேலைக்குள் மூழ்கும்படி நேர்ந்தது. நாங்கள் சென்னைக்கு வந்ததும், காங்கிரஸ் சுழலில் நான் அகப்

பட்டுக்கொண்டேன். காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு அநேக தீர்மானங்களை வரைந்து அனுப்பினேன். பூர்ண விடுதலை, போர் ஆபத்து, 'சாம்ராஜ்யத்துக்கு விரோதமான லீக்'கோடு கலத்தல், முதலியவைகளைப்பற்றி தீர்மானங்களை வரைந்து அனுப்பிவைத்தேன். அவைகளில் பெரும்பான்மையைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஏற்றுக்கொண்டார்கள். அவைகளை பகிரங்கக் காங்கிரஸில் நான் பிரேரணை செய்யவேண்டியதாயிற்று. அவைகள் அநேகமாக ஏகமனதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறித்து, நான் வியப்படைந்தேன். பூர்ண சுதந்திரத்தைப்பற்றிய தீர்மானம் ஸ்ரீமதி பெசண்ட் அம்மையாராலும் ஆதரிக்கப்பட்டது. எல்லோரும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு அளித்தது திருப்திகரமாகத்தானிருந்தது. ஆனாலும், தீர்மானத்தின் உட்பொருள் சரியாகத் தெரிந்துகொள்ளப்படவில்லையோ அல்லது தீர்மானத்துக்கு தப்பர்த்தம் செய்துகொண்டார்களோ என்று நான் சிறிது சந்தேகப்பட்டேன். நான் சந்தேகப்பட்டது உண்மையென்று பின்னர் தெரிந்தது. காங்கிரஸ் முடிந்ததும், பூர்ண ஸ்வராஜ்யத் தீர்மானத்தின் அர்த்தத்தைப்பற்றி வாக்குவாதம் உண்டாகிவிட்டது.

நான் கொண்டுவந்த தீர்மானங்கள் பழைய, மாமூல் காங்கிரஸ் தீர்மானங்களுக்கு சிறிது மாறுபட்டவை. அவைகள் புதிதான நோக்கத்தையும் லட்சியத்தையும் வெளிக்காண்பித்தன. காங்கிரஸ்காரர்களிற் பலருக்கு அத்தீர்மானங்களின் பேரில் விருப்பம் இருந்தது. அன்று சிலருக்கு பிடிக்காமலிருந்தாலும் அவர்கள் தீர்மானங்களை எதிர்க்கவில்லை. இத்தீர்மானங்கள் வெறும் வாய்ப்பேச்சுக்கள் என்றும் அவைகளால் யாதொரு கெடுதியும் ஏற்படாதென்றும் கருதி, அவைகளைப்பற்றி வீணுகக் காலம் கழிக்காமலிருப்பதற்காக இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றிவைப்பதே உசிதமானகாரியம் என்றும் அவர்கள் கருதி இவைகளை நிறைவேற்றிவைத்து விட்டு, வேறு முக்கியமான தீர்மானங்களுக்குச் செல்லலாமென்று அவர்கள் எண்ணியிருக்கலாம். எனவே, பூரண சுயராஜ்யத் தீர்மானம் காங்கிரஸின் லட்சியமாகக் கொள்ளப்பட்டபோதிலும் இந்தஆண்டில் அந்தத் தீர்மானத்துக்கு உண்மையான பொருள் விளக்கம் ஏற்படவில்லை. இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பூரண சுயராஜ்யம் காங்கிரஸின அடக்க முடியாத, ஜீவாதாரமான ஆவலாக ஆயிற்று.

காந்திஜி, காங்கிரஸ் சமயத்தில் சென்னையிலிருந்தார். அவர் காங்கிரஸில் பிரசன்னமாயிருந்தார். ஆனால் காங்கிரஸின் போக்கை அமைப்பதில், அவர் யாதொரு பங்கும் எடுத்துக்கொள்ளவில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டியில், அவர் ஒரு அங்கத்தினர். இருந்தாலும் காரியக் கமிட்டிக் கூட்டங்களுக்கு வரவில்லை. சுயராஜ்யக் கட்சி, காங்கிரஸில் வலுவடைந்து காங்கிரஸை நடத்தி வரத் துவக்கியது முதல், காந்திஜீ அதிகமாக காங்கிரஸில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அவரை அடிக்கடி யோசனை கேட்பார்கள். அவருக்குத் தெரியாமல், எதையும் செய்வதே இல்லை. காங்கிரஸில் நான் கொண்டுவந்த தீர்மானங்களை காந்திஜீ எவ்வளவு வரையிலும் ஏற்றுக்கொண்டார் என்பது எனக்குத் தெரியவில்லை. அந்தத் தீர்மானங்களை அவர் விருப்புடன் நோக்கவில்லையென்று எனக்குத் தோன்றிற்று. அவைகளை ஆட்சேபித்தும் அவர் எந்த சமயத்திலும், எங்கும் பேசினதேயில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், தகப்பனாரோ ஐரோப்பாவில் இருந்தார்.

பூர்ண ஸ்வராஜ்யத் தீர்மானம் வெறும் ஏமாற்றம் என்பது சென்னை காங்கிரஸ் நடவடிக்கைகளிலேயே தெரிந்துவிட்டது. சைமன் கமிஷனைக் கண்டித்து அதைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்ற தீர்மானம் யோசனைக்கு வந்தது. இந்தத் தீர்மானத்தில், சர்வகட்சி மகாநாடு ஒன்றைக் கூட்டி, அதன் மூலமாக இந்தியாவின் அரசியல் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று யோசனை கூறப்பட்டது. சர்வ கட்சி மகாநாட்டுக்காக மிதவாதிகளின் ஒத்துழைப்பை நாடவேண்டியதாயிற்று. ஆனால், அவர்களோ பூரண ஸ்வராஜ்ய மனப்பான்மையை துளிக்கூட கொண்டவர்களல்ல. எனவே, பூரண ஸ்வராஜ்யத்தை லட்சியமாகக்கொண்டு, அவர்கள் அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்றை வகுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? குடியேற்ற நாட்டு அந்தஸ்தோடு அவர்களுடைய ஆசை முற்றுப்பெற்றுவிடும். மீண்டும் காங்கிரஸின் காரியதரிசி பதவியை நான் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. காங்கிரஸின் அந்த ஆண்டு தலைவர் டாக்டர். எம். ஏ. அன்சாரி அவர்கள். அவர் எனது பழைய நண்பர். அருமையான தோழர். எனவே, நான் காரியதரிசியாக இருக்கவேண்டியதாயிற்று. மேலும், நான் கொண்டுவந்த தீர்மானங்களில் பல நிறைவேறிவிட்டதால், அவைகளை அமுலுக்குக் கொண்டுவர

வேண்டிய பொறுப்பு ஓரளவு என்னைச் சேர்ந்ததல்லவா? இந்தக் காரணம்பற்றியும் நான் காரியதரிசியானேன்.

சர்வ கட்சி மகாநாட்டைப்பற்றிய யோசனையால், எனது தீர்மானங்கள் செத்துப்போயின என்பது உண்மை. இருந்தாலும், பூராவும் வீணாகப்போய்விட்டது என்று சொல்லவும் முடியாது. காரியதரிசிப் பதவியை யேற்றுக்கொண்டதற்கு ஒரு காரணம், சர்வ கட்சி மகாநாட்டின் தூண்டுதலால், அல்லது வேறுகாரணங்களால் காங்கிரஸ் மிதவாதத்தன்மையைப் பெறுமல், பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஆவலாகும். அந்த ஆண்டில், காங்கிரஸின் மனம் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு ஊசலாடிக் கொண்டிருந்தது. மிதவாதப்பக்கம் திரும்பாமல் பூர்ண விடுதலைப் பக்கம் காங்கிரஸ் செல்லவேண்டும் என்பது எனது ஆசை. ஒவ்வொரு ஆண்டும் காங்கிரஸ் நடைபெறும் காலத்தில், அதோடு வேறு பல மகாநாடுகளும் காட்சிகளும் நடைபெறும். குடியரசு மகாநாடு ஒன்று, முதல் தடவையாக (அதுவே கடைசித்தடவையாகவும்) கூட்டப்பட்டது. அந்த மகா நாட்டுக்கு, நான் தலைமை வகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் குடி அரசுக் கொள்கையைக் கொண்டவனாதலால், அவர்களுடைய யோசனை எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் இந்தப்புதிய மகாநாட்டுக்கு, யார் முயற்சி யெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாததால், நான் சிறிது தயங்கினேன். நாய்க் குடைகளைப்போலத் தோன்றி, மறையும் அமைப்புகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள எனக்குச் சம்மதமில்லை. நான் தலைமை வகித்தேன். ஆனால் பின்னர் இதைக்குறித்து மிகவும் வருந்தினேன். ஏனெனில், இந்தக் குடிஅரசு மகாநாடு பிறந்த பொழுதே இறந்துவிட்டது. அந்த மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் நகல்கள் வேண்டுமென்று பலமாதங்கள் முயற்சிசெய்து பார்த்தேன். முயற்சி வீணாகப்போயிற்று. புதியபுதிய முயற்சிகளைத் துவக்கி, பிறகு அவைகளை அந்தரத்தில் விட்டுவிடும் பழக்கம் நம்மவர்களிடம் இருப்பதைக்காண வருத்தமாய் இருக்கிறது. பிடிவாதம்கொண்ட கூட்டத்தை நாம் சேர்ந்தவர்கள் அல்ல என்று மற்றவர்கள் குறை கூறுவதில் மிகுதியும் உண்மை இருக்கிறது.

காங்கிரஸ் கலைந்து சென்னையிலிருந்து நாங்கள் போகு முன்னரே, டில்லியில் ஹக்கீம் அஜ்மல்கான் அவர்கள் இறந்து

போனதாகச் செய்தி கிடைத்தது. அவர் காங்கிரஸின் மாஜி தலைவர். காங்கிரஸ் தலைவர் என்ற ஹோதாவில் மட்டுமல்லாமல், அவருக்கு வேறு ஒரு மதிப்பும் உண்டு. அவர் பழைய முகலாய சம்பிரதாயத்தில் வளர்ந்து வாழ்ந்து வந்தவர். அவருக்கும், நவீனத்துக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. பழைய வைதீக சம்பிரதாயத்தில் ஊறிப் போனவர். என்றாலும், அவருடைய நாஸூக்கான பழக்க வழக்கங்களைப் பார்ப்பதும், பதைபதைப்பு சிறிதுமில்லாத அவரது குரலைக் கேட்பதும், அவருடைய நகைச் சுவையைக் கேட்டுக் களிப்பதும் பெரு மகிழ்ச்சியைத் தரும். பார்வைக்கு ராஜத் தோற்றம் கொண்டவர்; ராஜரீக வழிகளில் தமது வாழ்க்கையை நடத்துபவர். அவருடைய முகத்தைப் பார்த்தால், பண்டைய முகலாய மன்னர்களின் முகத்தைப்போல இருக்கும் என்றும் சொல்லலாம். இத்தகைய பெரியார் ஒருவர் கரடுமுரடான அரசியலில் கலந்து கொள்வது என்பது அபூர்வம். புதிதாக கிளர்ச்சிக் காரர்கள் தோன்றுகையில், மேற் சொன்ன பெரியார்களைப்போலிருப்பவர்களைத் தங்களுக்குத் துணையாகவிருக்க இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷார்கள் தூண்டில்போட்டுத் தேடுவார்கள். சிறுபிராயத்தில், ஹக்கீம்ஜீ அரசியலில் கலந்துகொண்டதில்லை. அவருடைய குடும்பம் கீர்த்திபெற்ற வைத்தியர்களின் குடும்பமாகும். அந்தக் குடும்பத்துக்கு இவர் தலைவர். இவருடைய தொழிலிலேயே காலத்தைப்போக்க வேண்டியிருந்தது. ஆனால் ஐரோப்பியப் போரின் இறுதிகாலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாலும், டாக்டர் எம். ஏ. அன்சாரி அவர்களுடைய நட்பின் தூண்டுதலாலும், ஹக்கீம்ஜீ சிறிது சிறிதாக காங்கிரஸில் பற்றுக்கொள்ள ஆரம்பித்தார். பின்னர் பாஞ்சாலப் படுகொலை ராணுவ அமுலாலும் கிலாபத் பிரச்னையாலும் ஹக்கீம்ஜீ மனம்முழுதும் மாறிப்போய், காந்திஜீயின் ஒத்துழையாமைத் திட்டத்தை முழுதும் ஏற்றுக்கொண்டார். ஹக்கீம்ஜீ தமது உயர்ந்த தன்மைகளை பெருந்தனங்களாகக் காங்கிரஸுக்கு கொண்டுவந்தார். பழைய போர்வழிகளுக்கும் புதிய கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே சங்கிலித் தொடர்பாக நின்று, தேசீய இயக்கத்திற்கு பேராதரவை யளித்தார். எனவே, இரு கூட்டத்தாருக்குள்ளும் ஒற்றுமையை நாட்டி இயக்கத்துக்கு சக்தியைக்கொடுத்து, அதைக் கெட்டிப்படுத்தினர். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் அவரிடத்தில் பற்றுக் கொண்டு இருந்தமையால், அந்த இரு கூட்டத்தார்களையும் சேர்த்து, ஓரளவு ஒற்றுமைப்படுத்த அவரால் முடிந்தது.

ஹக்கீம்ஜீ, காந்திஜீக்கு ஆப்த நண்பர் ஆனார். ஹிந்து-முஸ்லீம் பிரச்னைகளில், ஹக்கீம்ஜீயின் யோசனையைக் கடைசி வார்த்தையாக காந்திஜி மதித்து, வேறு எந்த யோசனையையும் அவர் ஏற்பதில்லை. எனது தகப்பனாரும் ஹக்கீம்ஜீயும் அன்புடன் நெருங்கிப் பழகிவந்தார்கள்.

சென்ற ஆண்டில், ஹிந்து மகாசபைத் தலைவர்களிற் சிலர் என்பேரில் குற்றஞ் சாட்டினார்கள். எனது கல்வியின் குறைவாலும், பாரசீக நாகரிகத்தில் நான் அதிகமாகத் தோய்ந்து விட்டதாலும், எனக்கு ஹிந்துக்களின் மனப்பான்மை அறவே தெரியாது என்று அவர்கள் என்பேரில் குறைகூறினார்கள். எத்தகைய நாகரிகம் என்னிடமிருந்தது, அல்லது என்னிடம் நாகரிகமே இருந்ததா என்பதைப்பற்றி ஒன்றுமே சொல்லமுடியாது. உண்மையிலேயே பாரசீக பாஷை எனக்குத் தெரியாது. எனது தகப்பனார் இந்திய-பாரசீக நாகரிகத்தில் வளர்ந்தவர் என்பது உண்மை. இந்த நாகரிகம் டில்லி அரண்மனையின் நாகரிகமாகும். இந்த நாகரிகம் வட இந்தியாவில் மிகுதியும் காணப்படுவதாகும். காஷ்மீரப் பிராமணர்கள் எதிலும் சமாளித்துக்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்கள். அவர்கள் காஷ்மீரத்திலிருந்து, இந்தியப் பள்ளத்தாக்குகளில் வந்து குடியேறியதும் இந்த இந்திய-பாரஸீக நாகரிகம் வலுத்து நிற்பதைக் கண்டார்கள். அந்த நாகரிகத்தில் கலந்துகொண்டார்கள். அதன்பயனாக, காஷ்மீரப் பிராமணர்களின் மத்தியிலே நேர்த்தியான உருது வித்வான்களும், பாரஸீக பண்டிதர்களும் தோன்றினார்கள். பின்னர், இந்த நாகரிகம் அழிபட்டு, ஐரோப்பிய நாகரிகம் தோன்றியதும், காஷ்மீரப் பிராமணர்கள் இங்கிலீஷ்பாஷையைக் கற்றுக்கொண்டு ஐரோப்பிய நாகரிகத்தில் மூழ்கத் தொடங்கினார்கள். இன்றைக்கும் காஷ்மீரப் பிராமணர்களுக்குள், பல சிறந்த பாரஸீக வித்வான்கள் இருக்கின்றனர். ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ, ராஜா நரேந்திரநாத் இவர்களுடைய பெயர்களைச் சொன்னால் போதுமானது.

ஹக்கீம்ஜீ யிடத்திலும் எனது தகப்பனாரிடத்திலும் பொதுவான பல தன்மைகள் இருந்தன. பழைய குடும்பத்தொடர்புகள் இருந்ததாகக் கூடப் பின்னர் அவர்கள் கண்டுகொண்டார்கள். அவர்கள் நெருக்கமான நண்பர்கள் ஆனார்கள். ஒருவர் மற்றவரை 'சகோதரர்' என்று அழைத்துக் கொள்வார்கள். அரசியலில் மட்டுமல்ல; தமது குடும்பப் பழக்க வழக்கங்

களிலே, ஹக்கீம்ஜீ மிகுதியும் பழைய வைதீகப்பற்றுக் கொண்டவர். அவரால் பழைய பழக்கங்களிலிருந்து பிறழ்ந்து நடக்க முடியாது. அவருடைய வீட்டிலிருந்த படுதாக் கொடுமையைப்போல, வேறு எந்த வீட்டிலும் நான் கண்டதில்லை. ஆயினும், ஒரு நாட்டின் பெண்மணிகள் விடுதலை பெற்ருலொழிய, அந்த நாடு முன்னேறிச் செல்லமுடியாதென்பது ஹக்கீம் ஜீயின் தீர்மானமான கருத்தாகும். இதை என்னிடம் அவர் வற்புறுத்திக் கூறியிருக்கிருர். துருக்கிப் பெண்மணிகள் தங்களுடைய விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய தொண்டைப்பற்றி, ஹக்கீம்ஜீ என்னிடம் வியந்து வியந்து பேசுவார். கெமால்பாக்ஷா வெற்றி பெற்றது, துருக்கிய ஸ்திரீகளின் முயற்சியினுல்தானென்று அவர் முடித்துவிடுவார். ஹக்கீம் அஜ்மல்கான் மறைந்தது காங்கிரஸுக்கு மகத்தான நஷ்டமாகும். அதன் ஒரு முக்கிய தூண் முறிந்தது போலிருந்தது. அவர் இறந்தபின், நாங்கள் டில்லிக்கு எப்பொழுது போனுலும், அந்நகர் ஏதோ மூளியாகப் போய்விட்டதுபோல் தோன்றும். டில்லியும், ஹக்கீம்ஜீயும் எங்கள் மனத்தில் அவ்வளவு பின்னிக்கொண்டிருந்தார்கள். பில்லிமாரனென்ற பகுதியில், டில்லிமாநகரத்தில் ஹக்கீம்ஜீ வசித்து வந்த வீட்டுக்கும், டில்லி நகரத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

1928-ம் வருஷம் ராஜீயவேலை நாடெங்கும் தீவிரமாகச் செய்யப்பட்டது. அந்த ஆண்டில் அரசியலில் அதிகச் சுறுசுறுப்பு தோன்றிற்று. ஏதோ பெரிய உணர்ச்சியால் தூண்டப்பெற்று, பொது மக்கள் முன்னேறி நடப்பதுபோலத் தோன்றிற்று. இத்தகைய புதியகிளர்ச்சி, எல்லாக் கூட்டங்களிலும் சமமாகக் காணப்பட்டது. நான் இந்தியாவை விட்டு ஐரோப்பாவுக்குப் போயிருந்த காலத்தில், சிறிது சிறிதாக, இந்த மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும். நான் திரும்பி வந்ததும் அதைப்பார்க்கையில், அது மகத்தான மாறுதலாகத் தோன்றிற்று. 1926-ம் வருஷத் துவக்கத்தில், இந்தியா அமைதியாக இருந்தது. மந்தமாக இருந்தது என்று கூடச் சொல்லலாம். 1919-லிருந்து 1922-ம் ஆண்டு வரையில் நாட்டில் ஏற்பட்டிருந்த எழுச்சியிலும், போராட்டத்திலும் கலந்துகொண்டு, அடைந்த களைப்பினின்றும் இந்தியா அப்பொழுது எழுந்திருக்கவில்லை. ஆனுல், 1928-ம் ஆண்டிலோ, இந்தியாவைப் பார்த்தால், எங்கேயும் சக்தியும் சுறுசுறுப்பும்,

புதிது புதிதாகத் துடித்துக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டது. எங்குபார்த்தாலும் இது சம்பந்தமாக அத்தாட்சியைக் காணலாம். ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களிடத்திலும், குடியானவர்களிடத்திலும், நடுத்தர வகுப்பு வாலிபர்களிடத்திலும், அறிவாளிகளின் மத்தியிலும் இந்தப் பரபரப்பு மிகுதியும் காணப்பட்டது.

இந்தியாவில் தொழிலாளர் இயக்கம் வெகுவாகப் பரவியது. அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் வலுப்பெற்று தக்க பிரதிநிதிகள் கொண்ட அமைப்பாக ஆகிவிட்டது. தொழிலாளர் காங்கிரஸ் இந்தியாவில் ஏற்பட்டு, ஏழு எட்டு வருஷங்கள்தான் ஆயிருந்தது. ஆனாலும் எண்ணிக்கையிலும் அமைப்பு முறையிலும், அது மிகுதியும் வலுவடைந்துவிட்டது. அதனுடைய லட்சியமும் கருத்துகளும் தீவிர எல்லைகளைநோக்கி நின்றன. அடிக்கடி வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன. முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமை உணர்ச்சி வளரலாயிற்று. பஞ்சு ஆலைத்தொழிலாளர்களும் ரெயில்வே தொழிலாளர்களும் நடத்திவந்த அமைப்புகள் நன்றாகத் திறமையுடன் வேலைசெய்து வந்தன. இந்தச் சங்கங்களில் ஜி. ஐ. பி. ரெயில்வே சங்கத்தையும் கிர்னி காம்கர் சங்கத்தையும் சிறப்பாகச் சொல்லவேண்டும். தொழிலாளர் இயக்கமும் சங்கமும் வளரவளர, அவைகளுக்குள்ளாகவே பகைமைகளும் பிளவுகளும் ஏற்பட்டன. இந்தியத் தொழிலாளர் இயக்கம் சரியாக வேர்ப்பிடிக்கு முன்னரே, கக்ஷிப் பிளவுகள் ஏற்பட்டன. இரண்டாவது உலகசங்கத்தைச் சேர்ந்து சீர்திருத்தத்தை மட்டும் விரும்பியவர்கள் மிதவாதிகளாகி ஒரு கூட்டமாகச் சேர்ந்தார்கள். தீவிர மாறுதல்களை விரும்பும் மூன்றாவது உலகசங்கத்தைச்சேர்ந்த புரட்சி மனப்பான்மை கொணடவர்கள் வேறொரு கூட்டமாகப் பிரிந்தார்கள். இந்த இரு கூட்டங்களுக்கு மிடையே, பல வேறு மனப்பான்மை கொண்டவர்கள், ஒருசமயம் ஒரு கூட்டத்தைச்சேருவதும், இன்னொருசமயம் இன்னொரு கூட்டத்தைச் சேருவதுமாக இடைநின்று, ஊசலாடிக் கொண்டிருந்தனர். பொதுமக்களின் அமைப்புகளில் இவ்வாறு சமயோசிதக் கக்ஷிகள் இருப்பது சகஜமே. குடியானவர்களிடம் பரபரப்புத் தோன்றிற்று. ஐக்கிய மாகாணங்களிலும் சிறப்பாக அயோத்தியிலும் அவர்களது எழுச்சி முக்கியமாகக் காணப்பட்டது. குடியானவர்களது கண்டனக் கூட்டங்கள் சர்வசாதாரணமாகிவிட்டன. புதிய

அயோத்தி விவசாயிச் சட்டத்தினுல் குடியானவர்களது நிலைமையில் யாதொரு பெரிய நன்மையும் ஏற்படவில்லை. குடியானவர்களின் பழைய கஷ்டநிலைமை அப்படியே இருந்தது. குஜராத்திலே குடியானவர்களுக்கும் அரசாங்கத்தாருக்கும் இடையே போராட்டம் நிகழ்ந்தது. பம்பாய் அரசாங்கத்தார் நிலவரியை உயர்த்த முயற்சி செய்தார்கள். குஜராத்தில் ரயத்துவாரித்திட்டம் அமுலிலிருந்தது. அதாவது, குஜராத் முழுவதும் சிறு சிறு மிராசுதார்கள் அதிகம். இவர்களுக்கும் சர்க்காருக்கு மிடையே ஜமீன்தார்கள் இல்லை. எனவே சர்க்கார் குஜராத் மிராசுதார்களிடமிருந்து நேரே வரி வசூல் செய்து வந்தனர்.

குஜராத்தில் பர்டோலி சத்தியாக்கிரகத்தை சர்தார் வல்லபாய் படேல் நடத்திவந்தார். போராட்டம் மிக்க தீரத்துடன் நடத்தப்பட்டது. அதைக்கண்டு இந்தியாவின் ஏனைய பகுதிகளில் மகிழ்ச்சியும் ஆச்சரியமும்உண்டாயின. பர்டோலி குடியானவர்கள் தங்கள் கோரிக்கைகளில் பெரும் பான்மையை அடைந்து வெற்றி பெற்ருர்கள். ஆனுல் பர்டோலிப் போராட்டத்தின் உண்மையான வெற்றி, அதன் போக்கைக் கண்டு இந்தியாவிலிருக்கும் விவசாயிகள் அனைவரும் தைரியம் அடைநததேயாகும். பர்டோலி இந்திய விவசாயியின் ஆசைக்கும் ஆற்றலுக்கும் வெற்றிக்கும் ஒரு அறிகுறியாகத் திகழ்ந்தது. 1928-ம் ஆண்டில் இந்தியாவில் மற்ருெர் சிறப்பான இயக்கம் தோன்றிற்று. வாலிபர்களிடையே பரபரப்பும் கிளர்ச்சியும் உண்டாயிற்று. இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் வாலிபர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. வாலிபர் மகாநாடுகள் நடத்தப்பெற்றன. மகாநாடுகளின் கொள்கைகள் பலவிதம். சில மகாநாடுகளில் புரட்சிக் கருத்துக்களையும உபாயங்களையும் வாதம்செய்தார்கள். வேறு சில மகாநாடுகளில் ஒரு மாதிரியான மதப்பற்று கொண்டு விஷயங்களை ஆராய்ச்சி செய்தார்கள். மகாநாடுகள் எவ்வாறு ஆரம்பித்து எப்படி நடைபெற்ற போதிலும், வாலிபர்கள் தற்போது பரவிநிற்கும் சமூக பொருளாதாரப் பிரச்னைகளைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார்கள். பொதுவாக வாலிபர்களுக்குச் சிறிய சீர்திருத்த நோக்கம் இல்லை. சமூகத்தை அடியோடு மாற்றி வைக்கவேண்டுமென்ற புரட்சி நோக்கம்தான் அவர்களிடம் அதிகமாகக் காணப்பட்டது.

அரசியல் கிளர்ச்சி சம்பந்தமாக 1928-ம் ஆண்டில் குறிப்பிடக் கூடியவை சைமன் கமிஷன் பகிஷ்காரமும் சர்வ

கட்சி மகாநாடும்தான். மேற்கூறிய பகிஷ்காரத்தில் மித வாதிகளும் காங்கிரஸோடு ஒத்துழைத்தார்கள். பகிஷ்காரத்துக்குப் பூரண வெற்றி கிடைத்தது. கமிஷன் எந்த இடத்துக்குச் சென்றாலும் "சைமன் திரும்பிப் போங்கள்" என்ற கூக்குரலோடு பொது மக்கள் கமிஷனை எதிர்கொண்டு ஆரவாரம் செய்தார்கள். 'சைமன் திரும்பிப் போங்கள்' என்று அடிக்கடி சொன்னதனால், இந்தியப்பொதுமக்களுக்கு, ஸர் ஜான் சைமனுடைப் பெயர் தெரிந்ததுமல்லாமல், திரும்பிப் போங்கள் என்பதற்கு இரண்டு இங்கிலீஷ் வார்த்தைகளும் அவர்களுக்குத் தெரிந்துபோய்விட்டன! "சைமன் திரும்பிப் போங்கள்" என்ற சொற்கள் கமிஷன் அங்கத்தினர்களின் மனதில் மிகவும் ஆத்திரத்தை மூட்டியிருக்கவேண்டும். ஒரு கதை சொல்வதுண்டு. புதுடில்லியில் "வெஸ்டர்ன் ஹாஸ்டலி"ல் கமிஷன் அங்கத்தினர்கள் தங்கியிருந்தார்களாம். நடுநிசி. வெளிச்சமே இல்லை. அந்த சமயத்தில் இருளிலிருந்து "சைமன் திரும்பிப் போங்கள்" என்று சப்தம் கேட்டதாக அவர்களுக்குத் தோன்றிற்றாம். இரவில் கூடவா இந்தத் தொல்லை என்று அவர்கள் ரொம்பவும் கோபித்தார்களாம். சாம்ராஜ்யத் தலைநகரான புதிய டில்லியில் காலி இடங்கள் பல இருக்கின்றன. அந்த இடங்களிலே கூடிக்கொண்டு, நரிகள் ஊளையிடும் சப்தம் இவர்களுக்கு "சைமன் திரும்பிப் போங்கள்" என்று காதில் பட்டிருக்கலாம். பாவம்!

சர்வகட்சி மகாநாடு கூடிற்று. அதனுடைய வேலை அவ்வளவு கஷ்டமாக இல்லை. அவர்கள் இந்தியாவின் அரசியல் அமைப்பு சம்பந்தமான மூலாதாரக் கொள்கைகளைப்பற்றி எளிதிலே தங்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்கிக்கொண்டார்கள். தற்போது மேனாடுகளில் அமுலிலிருக்கும் ஜனநாயக பார்லிமெண்டு ஆட்சிமுறையைத் தழுவிய அரசியல் அமைப்பு தேவை என்று அநேகமாக ஏகமனதாக மகாநாட்டில் ஏற்கப்பட்டது. இத்தகைய அரசியல் திட்டத்தை யாரும் எளிதிலே தயார் பண்ணமுடியும். ஆனால் உண்மையான கஷ்டம் வேறொன்று. வகுப்பு வாதம் அல்லது சிறுபான்மையோரின் பிரச்னை எழுந்தால், அதற்குப் பரிகாரத்தைத்தேட, மகாநாட்டினால் முடியவில்லை. வகுப்பு வாத அமைப்புகளின் தீவிர பிரதிநிதிகள் சர்வகட்சி மகாநாட்டில் கூடிக்கொண்டிருந்தார்கள். எனவே ஒற்றுமை ஏற்படுவது

சாத்யமில்லாமற் போய்விட்டது. பழைய ஒற்றுமை மகாநாட்டைப்போலவே சர்வகட்சி மகாநாடும் நடைபெற்று முடிந்தது. இந்த சமயத்தில், வசந்த காலத்தில் ஐரோப்பாவினின்றும் என் தகப்பனார் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். சர்வ கட்சி மகாநாட்டில் அவர் மிகுந்த சிரத்தைகொண்டார். கடைசியாக அம் மகாநாடு சிறிய கமிட்டி ஒன்றை நியமித்தது. கமிட்டிக்கு தகப்பனார் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசியல் திட்டம் ஒன்றைத் தயாரித்து, வகுப்புப்பிரச்னையை ஆராய்ந்து, பூரணமான ரிபோர்ட்டை சமர்ப்பிக்கும்படியாக கமிட்டிக்கு தாக்கீது செய்யப்பட்டது. இந்த கமிட்டிக்குத் தான் "நேரு கமிட்டி" என்று பெயர். அது வெளியிட்ட ரிப்போர்ட்டுக்குத்தான் "நேரு ரிப்போர்ட்டு" என்றும் பெயர். இந்தக் கமிட்டியில் ஸர் தேஜ்பகதூர் சாப்ரு அங்கத்தினராக விருந்தார். ரிப்போர்ட்டை வரைவதில் அவர் அதிகமான பொறுப்பு எடுத்துக்கொண்டார். நான் இந்தக் கமிட்டியில் அங்கத்தினனாக இருக்கவில்லை. ஆனாலும் காங்கிரஸ் காரிய தரிசி என்ற முறையில், கமிட்டியில் அதிகமாகக் கலந்து கொண்டேன். கலந்துகொண்டது எனக்கு மிகவும் தொல்லை யாக இருந்தது. உண்மையான பிரச்னையை மகாநாடு கவனிக்கவில்லை. அரசியல் அதிகாரத்தைப் பொதுமக்கள் பெறக் கூடியமுறைதான், உண்மையான பிரச்னையாகும். அந்த அதிகாரத்தை எவ்வாறு அடைவது என்று கொஞ்சம்கூட யோசிக்காமல், காகிதத்தில் விஸ்தாரமான அரசியல் அமைப்புத்திட்டம் ஒன்றை வரைந்தால் என்ன லாபம்? என் சம்பந்தப்பட்ட வரையிலும் இன்னொரு தொல்லை என்னவெனில், சர்வகட்சி மகாநாடு, குடியேற்ற நாட்டு அந்தஸ்தை இந்தியாவின் லட்சியமாக ஏற்றுக்கொண்டதேயாகும். ஆனால் கமிட்டி உண்மையான ஒரு வேலையைச்செய்து முடித்திருக்கலாம். வகுப்புப் பிரச்னைக்குப் பரிகாரம் ஒன்றை, கமிட்டி தற்காலிகமாகக் கண்டுபிடித்திருக்கலாம். ஒப்பந்தமூலமாக வகுப்புப் பிரச்னையை தீர்க்கமுடியாது என்பது என் எண்ணமாகும். பொதுவான நாட்டுப் பிரச்னைகளில் மனமொத்துப் போனால் ஒழிய, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒற்றுமை ஏற்பட முடியாது. ஆனால், தற்காலிகமாகவேனும், வகுப்புப் பிரச்னைக்கு ஒரு பரிகாரமேற்பட்டு, நாட்டு மக்கள் ஒத்துப்போவார்களானால், வகுப்புகளுக்குள் அமைதி உண்டாகி, எல்லோரும் அரசியல் போராட்டத்தில் கலந்து கொண்டு, இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபடலாம். இந்த

ஒரு நோக்கத்தைக்கொண்டே கமிட்டியின் வேலையை எவ்வகையிலும் தடைசெய்ய, நான் விரும்பவில்லை. எனக்கு சாத்தியப்பட்டவரையிலும் கமிட்டிக்கு எனது உதவியை அளித்துவந்தேன்.

வெற்றி கைக்கெட்டிவிட்டது போலத் தோன்றிற்று. இரண்டு மூன்று அம்சங்களிலேதான் சில்லறைத் தகராறுகளிருந்தன. இவைகளில் முக்கியமான பகுதி பாஞ்சாலத்தைப் பற்றி. அங்கே ஜனங்கள் ஹிந்து, முஸ்லிம், ஸீக்கியர் என்ற முக்கூறுகளாக பிரிந்திருக்கிறார்கள். ஜனத் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்து, ஏதோ புள்ளி விவரங்களைக் கொண்டு, புதியவிதத்தில் ஒரு பரிகாரத்தைக் கமிட்டி சிபார்சு செய்தது. ஆனால், எல்லாம் வீணாகப் போயின. சந்தேகமும், பயமும் கமிட்டியில் குடிகொண்டிருந்தன. சிறிதளவு எல்லாக் கட்சியார்களும் விட்டுக் கொடுத்திருப்பார்களானால், வகுப்புப் பிரச்னையைப் பற்றி தற்காலீகமாகவேனும் பரிகாரம் ஏற்பட்டிருக்கும். கமிட்டியின் ரிபோர்ட்டைப் பரிசீலனை செய்வதற்காக, சர்வ கட்சி மகாநாடு லட்சுமணபுரியில் கூடிற்று. மீண்டும் எங்களிற் சிலருக்கு தர்ம சங்கடமாகவே இருந்தது. வகுப்பு வாதத்துக்குப் பரிகாரம் ஏற்படக் கூடுமானால், அதற்குக் குறுக்கே நிற்க, நாங்கள் தயாராயிருக்கவில்லை. ஆனால் பூரண ஸ்வராஜ்யம் என்ற பிரச்னையில் இம்மிகூட விட்டுக் கொடுக்க எங்களுக்கு மனமில்லை. பூரண ஸ்வராஜ்யப் பிரச்னையைப் பற்றி யாதொரு முடிவுக்கும் வரவேண்டாமென்று முக்கியஸ்தர்களை நாங்கள் மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டோம். "காங்கிரஸ் பூரண விடுதலைக்காகப் பாடுபடட்டும். மற்றைய மிதவாதக் கூட்டங்கள் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்காக உழைத்துப் போராடட்டும். இதுதான் வேண்டுமென்று வடிவாக வார்த்தைகளில் இலட்சியத்தை அமைக்க வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தோம். ஆனால் தக்பபனுர் கொஞ்சங்கூட இதற்கு மசியவில்லை. எப்படியாவது ரிபோர்ட்டை வெளியே கொண்டு வந்துவிட வேண்டுமென்று அவர் தீர்மானித்துவிட்டார். அப்பொழுது இருந்த நிலைமையில் அவர் எங்களுக்கு இணங்கியிருக்கவும் முடியாது.

மகாநாட்டில் பூரண ஸ்வராஜ்ய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் பலர் இருந்தார்கள். பூரண ஸ்வராஜ்ய லட்சியத்திலிருந்து குறைத்து மகாநாடு எந்த முடிவைச் செய்திருந்தா

லும் அதற்கும், எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று ஒரு அறிக்கை விடுக்குமாறு இந்தக் கோஷ்டியினர் என்னைக் கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் வகுப்பு வாதப் பிரச்னைக்கு பரிகாரம் தேடுவதில் குறுக்கே நிற்கவில்லையென்பதையும் தெளிவுபடுத்தி அறிக்கையை வெளியிட்டோம். முக்கியமான இந்த பிரச்னையில், நாங்கள் நடந்துகொண்டது சிறந்த முறையாகாது. ஆனால், அன்றைக்கே இந்தியப் பூரண விடுதலைச் சங்கத்தை நாங்கள் ஸ்தாபித்தோம். சர்வ கட்சி மகாநாட்டில் என்னைத் திடுக்கிடச் செய்யும்படியாக வேறொன்று நடந்தது. அயோத்தி தாலுக்தார்களின் பிடிவாதத்தின்பேரில் அரசியல் அமைப்புத் திட்டத்தின் மூலாதார உரிமைப் பகுதியில், தங்கள் நிலங்களில் பரம்பரை பாத்தியமும் சேர்க்கப்பட்டது. இந்தக் கமிட்டியின் அரசியல் அமைப்புக்கு அடிதாங்கியாயிருந்தது சொத்து உரிமையே. ஆனால், ஜமீன்தார்களின் பரம்பரைபாத்தியத்தை அஸ்திவாரமாகச் செய்து கொடுப்பது மிகுந்த அநியாயமாகத் தோன்றிற்று.

காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸில் சேராத பிரமுகர்களும், பெரிய நிலச்சுவான்தார்களின் உறவை நாடினோர்களே ஒழிய, தங்கள் கட்சிக்குள்ளாகவே இருந்த தீவிரவாதிகளின் உறவை நாடவில்லை என்பது இதிலிருந்து தெளிவாயிற்று. எங்களுக்கும் எங்களுடைய தலைவர்களில் பலருக்குமிடையே, பெரிய பிளவு இருந்தது வெளிப்படையாயிற்று. இந்த நிலைமையில், காங்கிரஸ் காரியதரிசியாக நான் வேலைபார்ப்பது தவறு எனத்தோன்றிற்று. பூரண ஸ்வராஜ்ய லீக்கின் ஸ்தாபனங்களில் நானும் ஒருவன் என்று காரணம் காட்டி என் உத்தியோகத்தை ராஜினாமாச் செய்தேன். ஆனால், காரியக்கமிட்டி இதற்கிணங்க வில்லை; என்னைப்போல ராஜினாமாச் செய்தவர், சுபாஷ்போஸ் அவர்கள். "நீங்கள் இருவரும் காங்கிரஸின் நடைமுதல் முறைக்கு விரோதமில்லாமல் லீக்கையும் நடத்திவரலாம்" என்று காரியக்கமிட்டியார் எங்களுக்குத்தெரிவித்தார்கள். இதனின்றும், காங்கிரஸ் பூரண ஸ்வராஜ்யத்தை யேற்றுக்கொண்டது என்று நினைத்தேன். எனவே மீண்டும் காரியதரிசியாக இருக்க, நான் சம்மதித்தேன். எனது ராஜினாமாவை எவ்வளவு எளிதில் வாபஸ் வாங்கிக்கொண்டேன் என்பதை நினைக்க, எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வாறு பல சந்தர்ப்பங்களில், நேர்ந்திருக்கிறது. ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்க, இரண்டு கட்சிக

ளுக்கும் மனமில்லாமையால், அவ்வாறு பிரிந்து போகாமலி ருப்பதற்காக, எந்த சாக்கைக் கொண்டும் இரண்டு கட்சிகளும் காங்கிரஸில் ஒட்டிக்கொண்டே இருந்தன. சர்வகட்சிமகாநாட் டிலும், கமிட்டிக்கூட்டங்களிலும் காந்திஜி யாதொரு பங்கும் எடுத்துக்கொள்ளவில்லை. லக்ஷ்மணபுரி மகாநாட்டில்கூட, அவர் பிரசன்னமாயிருக்கவில்லை. இதற்கிடையே, ஸைமன் கமிஷன் இந்தியாவில், ஒரு ஊரை விட்டு இன்னொரு ஊருக்கு நகர்ந்து கொண்டே போயிற்று. ஆனால், கறுப்புக் கொடிகளும், விரோதக் கூட்டங்களும் ஸைமன் கமிஷனை எங்கும் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தன. "திரும் பிப் போங்கள்" என்ற சத்தம் நிற்கவே இல்லை. சில இடங்க ளில் போலீசாருக்கும் கூட்டங்களுக்கும் கைகலப்பு ஏற்பட் டது. லாகூரில் நிலைமை நெருக்கடிக்கு வந்துவிட்டது. லாகூர் நிகழ்ச்சியால், இந்தியா முழுதும் ஆத்திரம் பொங்கி யெழஆரம்பித்தது. லாகூரிலே, சைமன் கமிஷன் பகிஷ்கா ரக் கூட்டத்தை நடத்தியவர் லாலா லஜபதிராய். ஆயிரக் கணக்கானவர்கள் குழுமியிருந்த கூட்டத்துக்கு முன்னணி யில், லாலா லஜபதிராய் நின்றுகொண்டிருக்கையில், அவரை இளமைப்பருவம் பொருந்திய இங்கிலீஷ் போலீஸ் உத்தி யோகஸ்தர் ஒருவர் தாக்கி, அவருடைய மார்பிலே குண்டாந் தடியால் அடித்தார். கூட்டம் பலாத்கார முறையில் எவ் விதத்திலும் இறங்கவில்லை. லாலாஜீயோ சாத்வீக வழியை நாடி நின்றார். ஆயினும் அவர் அமைதியுடன் நிற்கையில், அவரும் அவரது தோழர்களில் பலரும் போலீசாரால் கடு மையாக அடிக்கப்பட்டார்கள்.

தெருக் கூட்டங்களில் கலந்து கொள்பவர்கள், போலீசா ரோடு ஒரு சமயம் உறைந்துகொள்ள நேரும் என்பதை லாலாஜி தெரிந்து கொண்டிருந்திருப்பார். என்றாலும், லாலா ஜீயையும் மற்றவர்களையும் போலீசார் தாக்கியதைக் கேட்டு, இந்திய பொதுமக்கள் திடுக்கிட்டுப் போனார்கள். அந்த நாட் களில், போலீசார் தடியடிப் பிரயோகத்துக்கு ஆரம்பிக்க வில்லை. தடியடி பழக்கமாகி அதனால் உணர்ச்சியின மழுங் கலும் அப்பொழுது எங்களிடம் ஏற்படவில்லை. பாஞ்சாலத் தின் ஒப்பற்ற தலைவர், நிகரற்ற செல்வாக்கு படைத்தவர், இந்தியத் தலைவர்களுள் சிறப்பு வாய்ந்தவர், அத்தகைய லாலாஜீ இந்தக் கதியை அடைந்தாரானால், இந்தியாவின் திக்கற்ற கதியை எவ்வாறு வர்ணிக்கமுடியும்? அடித்த அடி,

மார்பிலே விழுந்தால், லாலாஜீக்கு உடம்பிலே ஊமைக் காயமாகப் போய்விட்டது. அவர் இருதய நோயால் நீண்ட காலம் வருந்தினார். வாலிபன் ஒருவன் இவ்வாறு அடிபட்டிருந்தால், இதனால் அதிக அபாயம் நேரிட்டிராது. ஆனால், லாலாஜீ இளைஞரும் அல்ல; அவரது உடல் நிலைமை நன்றாயிருக்கவுமில்லை. அவர் சில வாரங்களுக்குப் பின்னர் இறந்து போனார். அவருடைய மரணத்துக்கும் இந்த ஊமைக்காயத்துக்கும் எவ்வளவு தூரம் சம்பந்தமென்பது நிச்சயமாகச் சொல்லமுடியாது. இந்த நிகழ்ச்சி, லாலாஜீயின் முடிவைத் துரிதப்படுத்தியது என்று டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். உடம்பில் ஏற்பட்ட ஊமைக்காயத்தோடு உள்ளத்திலும் அவருக்கு இடிவிழுந்தது போல ஆகிவிட்டதால், லாலாஜீயின் மரணம் துரிதப் படுத்தப் பட்டிருக்கவேண்டும். தனக்கு நேர்ந்த அவமானத்தைப்பற்றி, லாலாஜீக்குத் துளி கூட கசப்பும் கோபமுமிடையாது. தம்மைப் போலீசார் தாக்கியதிலிருந்து, தேசத்திற்கேற்பட்ட அவமானத்தைக் குறித்து, அவர் மிகவும் மனக் கசைப்படைந்தார்; ஆத்திரப் பட்டார்.

தேசத்துக்கு நேர்ந்த இந்த அவமானத்தினால் இந்தியா முழுதும் மனக் கொதிப்பு உண்டாயிற்று. இந்தச் சம்பவத்துக்குப் பின் சிறிது காலத்திற்குள், லாலாஜீயின் மரணம் நேர்ந்ததாலும், லாலாஜீயின் மரணத்துக்கும் போலீசார் தாக்கியதற்கும் சம்பந்தம் உண்டு என்று பொது மக்கள் கருதியதாலும், ஜனங்கள் வருத்தப்படுவதை நிறுத்திக்கொண்டு, ஆத்திரத்தையும் கோபத்தையும் காண்பிக்கத் தலைப்பட்டார்கள். இந்த நிலைமையை உள்ளபடியே அறிந்துகொள்வது அவசியமாகும். இதைத் தெரிந்துகொண்டால்தான், பகத்சிங் தோன்றியதற்கும் திடீரென வட இந்தியாவில் பகத்சிங்கை மிகுதியும் ஜனங்கள் கொண்டாடினதற்கும் காரணம் என்னவென்று ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

மனிதர்களையும் செயல்களையும் காரணத்தை ஆராயாமல், கண்டிப்பது மிகவும் எளிதான காரியமாகும். செயலுக்குக் காரணமாயிருக்கப்பட்ட நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளாமல் தீர்ப்புச் சொல்லுவது தவறாகும். இதற்கு முன் பகத்சிங் என்றால் யார் யென்றே தெரியாது. பலாத்காரச் செயலைச் செய்ததற்காக மட்டும் பகத்சிங்கை ஜனங்கள் கொண்டாடவில்லை. சென்ற முப்பது ஆண்டுகளாக இந்தியாவில் பலாத்கா

ரப் புரட்சிக்காரர்கள் எத்தனையோ நூறுபேர்கள் இருந்திருக்கிறார்கள். பலாத்காரப் புரட்சி வங்காளத்தில் துவங்கியபோது, புரட்சிக்காரர்களில் ஒரு சிலரை மக்கள் பாராட்டி யிருக்கக் கூடும். ஆனால் பகத்சிங்குக் கிடைத்த பாராட்டில் ஆயிரத்திலொருபங்குகூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதை மறுக்க முடியாது. மேலும் இன்னொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். பலாத்கார நிகழ்ச்சிகள் இடையிடையே நேர்ந்தாலும், இந்திய இளைஞர்களுக்கு அவைகளில் உண்மையான அனுதாபம் கிடையாது. பதினைந்து ஆண்டுகளாக இந்தியாவில் சாத்வீகம் ஒன்றே வற்புறுத்தப்பட்டு வந்தது. பலாத்காரச் செயல்களை ஆதரிக்காத நிலைமைக்குப் பொதுமக்கள் வந்துவிட்டார்கள். பொதுவாக, பலாத்காரச்செயல் புரிவோர்கள் நடுத்தர வகுப்பு கூட்டததாரிடமிருந்தும் அறிவாளிகளிடமிருந்தும் தோன்றுவது வழக்கம். இந்தக் கூட்டத்தார்கள்கூட, காங்கிரஸ் பிரசாரத்தினால் பலாத்கார வழிகளை வெறுக்க ஆரம்பித்து விட்டார்கள். தீவிரப் புரட்சிக்காரர்களும்கூட தங்கள் மனதைச் சிறிது மாற்றிக்கொண்டு வருகிறார்கள். பலாத்காரச் செயல்களுக்கும், புரட்சிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும், புரட்சிக்கு தூண்டுதலாயிருப்பது பலாத்காரச் செயலல்லவென்றும், பலாத்காரச் செயலால் புரட்சி இயக்கம் தடைப்பட்டுப்போகிறதென்றும் அவர்கள் தெரிந்துகொண்டு வருகிறார்கள். பலாத்கார பயங்கரச் செயல்கள் அரசியல் விடுதலைக்குத் தகுந்த உபாயமல்லவென்று அவர்கள் கண்டு கொண்டார்கள்.

பலாத்காரம் இந்தியாவில் சிறிது சிறிதாக செத்துக் கொண்டே வருகிறது. அரசாங்கத்தின் அடக்குமுறையால் அது தணிந்து போகவில்லை. அரசாங்கத்தின் அடக்குமுறையால், பலாத்காரம் புரையோடிப்போகுமே யல்லாது இறந்து போகாது. வேறு சில காரணங்களாலும் உலக நிகழ்ச்சிகளாலும் இந்தியாவிலும் உலகத்திலும் பலாத்கார பயங்கரச் செயல்களில் நம்பிக்கை குறைந்துகொண்டு வருகின்றது. எந்த நாட்டிலும் புரட்சி மனப்பான்மை தோன்றுங் காலத்தில பலாத்காரம் சிறிது காலத்துக்குத் தலைதூக்கி நிற்கும். ஆனால அந்தப் பருவம் கடந்தவுடனே, அதுவும் மறைந்துவிடும். சற்சில சமயங்களில் பலாத்காரச் செயல்கள் நேரலாம். ஆனால அவைகள் நாட்டின் பொதுவான எழுச்சியின் விளைவுகளாக இருக்கமாட்டா. ஒரு பிரதேசத்தின கஷ்டத்தாலோ, தனி

புருஷர்களின் ஆத்திரத்தாலோ தான் நேரும். அப்பருவத்தை இந்தியா தாண்டியாகிவிட்டது. சிற்சில சமயங்களில் சம்ப விக்கும் பலாத்காரச் செயல்களும் விரைவில் மறைந்துவிடும். இதனால் பலாத்கார வழிகளில் இந்தியாவிலிருக்கும் எல்லோருக்கும் நம்பிக்கை இல்லாமற்போய்விட்டது என்று அர்த்த மில்லை. தனித்தனி நின்று, பலாத்காரச் செயல்களைச் செய்வதில், ஜனங்களுக்கு நம்பிக்கையில்லை என்று மட்டும்தான் அர்த்தம் செய்துகொள்ள முடியும். மற்ற நாடுகளைப்போல் இந்தியாவும் ஒழுங்கான அமைப்புடன் பலாத்காரவழிகளையும் கைக்கொண்டு விடுதலையடையும் காலம் வருமென்று பலர் எதிர்பார்க்கின்றனர். இதைப்பற்றி இப்பொழுது வாதம் செய்வது லாபமல்ல. ஆனால் தனிப்பட்ட பலாத்காரச் செயல்களுக்கும் புரட்சி உபாயத்துக்கும் சம்பந்தமே இல்லை.

தமது பலாத்காரச் செயலால் பகத்ஸிங் செல்வாக்கு பெறவில்லை. லாலாஜீயின் கௌரவத்தைக் காப்பாற்றி, அதன் மூலமாக நாட்டின் கௌரவத்தையும் காப்பாற்றியதற்காக, நாட்டு மக்கள் பகத்ஸிங்கைப் பாராட்டினார்கள். அவர் செய்த செயல் மறந்துபோய்விட்டது. அவர் இந்தியாவின் மனப்பான்மைக்கு ஒரு அறிகுறியாகத் திகழ்ந்தார். இரண்டொரு மாதங்களுக்குள், பாஞ்சாலத்திலுள்ள எல்லா ஊர்களிலும் வட இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் அவருடைய பெயரை பேசிப் பேசி, ஜனங்கள் பாராட்டினார்கள். அவரைப் பற்றி கணக்கற்ற பாடல்களைப் பாடினார்கள். அவர் நொடிப் பொழுதிலே அடைந்த செல்வாக்கு வியக்கத் தக்கதாகும்.

ஸைமன் கமிஷன் அடிக்குச் சிறிது காலத்துக்குப் பின்னர், டில்லியில் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் லாலா லஜபதிராய் பிரசன்னமாயிருந்தார். அடியின் அடையாளங்கள் அவருடைய தேகத்திலிருந்தன. அப்பொழுதும் அவர் மிகுதியும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். லக்ஷ்மணபுரியில் நடைபெற்ற சர்வ கக்ஷி மகாநாட்டுக்குப் பின்னர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிச் கூட்டம் கூடிற்று. இந்தக் கூட்டத்தில் பூரண விடுதலைப் பிரச்னை எப்படியோ எழுந்துவிட்டது. எதைப் பற்றி வாதம் என்று எனக்கு சரியாக நினைவில்லை. ஆனால் கூட்டத்தில் நான் விரிவாகப் பேசினது நினைவிருக்கிறது. காங்கிரஸுக்குப் புரட்சி மனப்பான்மை வேண்டுமென்றும், சீர் திருத்த மனப்பான்மை தேவையில்லையென்றும், காங்கிரஸ், புரட்சி உபாயங்களை நாட

வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் நான் எடுத்துச் சொன்னேன். என்னுடைய பேச்சில் விசேஷமாகக் குறிப்பிடக்கூடியது ஒன்றுமில்லை. சாதாரணமாக நான் அதை மறந்திருப்பேன். எனது பேச்சைப் பல அம்சங்களில் லாலாஜீ மறுத்துப் பேசியதால், நான் அதை இன்றைக்கும் மறந்து போகவில்லை. நான் சொல்லுகிறபடி செய்தால், இந்தியா பிரிட்டிஷ் தொழிற் கக்ஷியாரிடமிருந்து எவ்வித நன்மையையும் எதிர்பார்க்க முடியாது என்று லாலாஜீ எச்சரிக்கை செய்தார். என் சம்பந்தப்பட்ட வரையிலும் லாலாஜீயின் எச்சரிக்கை தேவையே இல்லை. பிரிட்டிஷ் தொழிற் கட்சியாரை நடத்தும் தலைவர்களிடம் எனக்குப் பற்றும், நம்பிக்கையுமிருந்ததே இல்லை. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தைப் பிரிட்டிஷ் தொழிற்கக்ஷி ஆதரித்து, சாம்ராஜ்யக்கொள்கையை எதிர்த்து நின்று, சமதர்மத்திற்காக ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யுமாகில் நான் ஆச்சரியப்பட்டுப் போவேன். லாலாஜீ லாகூருக்குத் திரும்பிப் போனதும், நான் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் செய்த பிரசங்கத்தைப் பற்றி மீண்டும் குறிப்பிட்டு "பீபில்" என்ற அவரது வாரப் பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரை எழுதத் துவக்கினார். முதல் கட்டுரை வெளி வந்தது. இரண்டாவது வெளி வருவதன் முன்னர் அவர் இறந்துவிட்டார்.

# XXV

## தடியடி அனுபவம்

லாலா லஜபதிராய் போலீசாரால் அடிக்கப்பட்டு, அதன் பின்னர் அவர் இறந்துபோனதிலிருந்து, ஸைமன் கமிஷன் பகிஷ்கார வேலை மிகவும் மும்முரமாக நடைபெற்றது. கமிஷன் எந்த இடத்துக்குப் போனாலும், அந்தந்த இடங்களில் தேசமக்கள் அதை ஏகோபித்து பகிஷ்காரம் செய்தார்கள். அது லக்ஷ்மணபுரிக்கு வருவதாயிருந்தது. பகிஷ்கார முயற்சியில் அவ்வூர் காங்கிரஸ் கமிட்டி மகத்தான பிரசாரவேலை செய்தது. கமிஷன் வருவதற்கு பல நாட்கள்முன்னதாகவே பெரிய ஊர்வலங்கள், மகாநாடுகள், முதலிய ஏற்பாடு செய்யப்பெற்றன. இது பிரசாரத்துக்குப் பிரசாரமாக இருந்ததுமல்லாமல், கமிஷன் வருகிற நாளில், இப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு பயிற்சியாகவும் இருந்தது. நான் லக்ஷ்மணபுரிக்குப் போனேன். இந்த நிகழ்ச்சிகளில் சிலவற்றில் பிரசன்னமாயிருந்தேன். இந்த ஊர்வலங்கள் முதலியன அமைதியான முறையில், ஒழுங்காக நடந்ததை, அதிகாரிகள் கண்டு மனவேதனையடைந்தார்கள். சில இடங்கள் வழியாக ஊர்வலங்களை நடத்தக்கூடாதென்று உத்தரவுகள் செய்து பகிஷ்கார வேலையைத் தடைசெய்யத் துவக்கினார்கள். இது சம்பந்தமாக இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சிறியதொரு அனுபவத்தைப் பெற்றேன். போலீசாரின் தடியடிப் பிரயோகத்தை எனது தேகம் அனுபவிக்க நேர்ந்தது. வீதிகளில் போக்குவரத்துக்குத் தடையேற்படுத்துகிறார்கள் என்ற வெளிப்படையான காரணத்தைக் கொண்டு, ஊர்வலங்கள் தடுக்கப்பட்டன. இந்த வகையில் யாரும் குறைகூறும்படியாக இடம் வைத்துக்கொள்ளலாகாது என்று நாங்கள் தீர்மானம் செய்துகொண்டோம். பதினாறு பேர் அடங்கிய சிறு கூட்டங்களாகப் பிரித்து, சந்தடியில்லாத வீதிகள் வழியாக மகாநாடு கூடுமிடத்திற்கு ஊர்வலம் செல்லவேண்டுமென்று திட்டம் செய்துகொண்டோம். சட்டப்படி பார்த்தால், இதுவும் உத்தரவை மீறியதாகத்தான் ஆகும். கொடி எடுத்துக்கொண்டு பதினாறு பேர்சென்றால், அதுவும் ஊர்வலந்தானே?

பதினறு பேர் கொண்ட ஒரு கூட்டத்துக்கு நான் தலைமை வகித்து நடத்தினேன். நடுவிலே கொஞ்சதூரம் விட்டு, அடுத்த கூட்டம் எனது தோழர் கோவிந்த வல்லப பந்த் அவர்களின் தலைமையின்கீழ் வந்துகொண்டிருந்தது. சுமார் இருநூறு கஜங்களுக்கு முன்னதாக, எங்கள் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. ரஸ்தாவிலே, ஈ, காக்கை இல்லை. திடீரென்று எங்களுக்குப் பின்னே குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. பின்னல் திரும்பிப் பார்த்தோம். குதிரைப் போலீஸ் படையொன்று பின்னலே வந்தது. படையில் சுமார் இரண்டு அல்லது மூன்று டஜன் பேர்கள் இருந்தார்கள். எங்களை வளைத்துக் கொள்வதற்காக, அது விரைவில் வந்துகொண்டிருந்தது. எங்களை அவர்கள் நெருங்கிவிட்டார்கள். எங்கள் கூட்டத்தின் நடுவே, அவர்கள் குதிரைகளை விட்டு ஓட்டியதால், நாங்கள் கல்கலத்துப் பிரிந்துபோக நேர்ந்தது. பெரிய பெரிய குண்டாந்தடிகளைக் கொண்டு, குதிரைப் படையார், எங்களுடைய தொண்டர்களை அடிக்க ஆரம்பித்தார்கள். அடியினின்றும் தப்பித்துக்கொள்ள தொண்டர்கள் பக்கத்து நடைபாதையில் ஒதுங்கிக்கொண்டார்கள். சிலர் சிறிய கடைகளில்போய்ப் பதுங்கிக் கொண்டார்கள். போலீஸார் அவர்களைத் துரத்திச்சென்று அடித்தார்கள். எங்கள் மேரில் குதிரைகள் பாய்ந்து வருவதைப் பார்த்து பத்திரமாக ஏதேனும் ஒரு இடத்துக்குச் செல்லவேண்டு மென்று எனக்கும் ஆசை உண்டாயிற்று. மனக் கலக்கத்தை உண்டாக்கக் கூடிய காட்சியாக விருந்தது. இருந்தாலும் இடத்தைவிட்டு நகரக்கூடாது என்ற பிடிவாதமும் எனக்கு ஏற்பட்டு விட்டது. எனக்குப் பின்னே இருந்த தொண்டர்களின் பேரில் அடிவிழுந்ததால், முதலடி எனக்குக் கிடைக்கவில்லை. நான் தப்பித்துக் கொண்டேன். ஆனல் நடைப்பாதையில், நான் மட்டுமே தனித்து இருக்கக் கணடேன். சில கெஜங்களுக்கு அப்பால் போலீஸ்காரர்கள் எங்களுடைய தொண்டர்களைத் துரத்தியடித்துக் கொண்டிருந்தார்கள். அடி படும் கோரக் காக்ஷியைக் கண்டு, தலைமறைவாய்ப் போய்விடலாமோ என்று எண்ணினேன். மறுபடியும் அதே இடத்தில் நின்றுகொண்டு, எனக்குள்ளாகவே வாதம்செய்து அந்த இடத்தை விட்டு நகருவது கேவலமான காரியம் என்று முடிவு செய்துகொண்டேன். இதெல்லாம் இரண்டு மூன்று நிமிஷங்களுக்குள் நடந்திருக்கும். எனது மனதிலே நிகழ்ந்த போராட்டம் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. கோழையைப்போல்

நான் நடக்கக்கூடாது என்ற கர்வத்தினால் இருந்த இடத்தி லேயே இருக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டேன். கோழைத் தனத்துக்கும், தைரியத்துக்கும் இடையே, எவ் வளவு தூரம் இருந்ததென்று சொல்லமுடியாது. நான் கோழையைப்போல அந்த சமயம் நடந்துகொண்டிருக்கவும் கூடும்.

இந்த மாதிரி தீர்மானம் செய்து கொண்டவுடனே, குதி ரைப் படைப் போலீஸ்காரர் ஒருவர் தமது நீண்ட புதிய தடி யைச் சுற்றிக்கொண்டு என்னிடம் வருவதைக் கண்டேன். "உம், உன் வேலையைச் செய்" என்று அவனிடம் சொல்லி விட்டு, எனது தலையை, (முகத்தையும் தலையையும் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையினால்) வேறு புறம் திருப்பிக்கொண் டேன். எனது முதுகில் அவன் ஓசைகேழ்க்கும்படி பலமாக இரண்டு அடி கொடுத்தான். நான் ஸ்தம்பித்துப் போனேன். எனது தேகமெல்லாம் ஆட ஆரம்பித்துவிட்டது. என்றாலும் நான் அப்படியே நின்று கொண்டிருந்ததைக் கண்டு எனக்கே ஆச்சரியமும் திருப்தியும் உண்டாயின. போலீஸ் படையைத் திருப்பி எங்கள் முன்னே நிறுத்திப் பாதையை மறித்துக் கொண்டார்கள். எங்களுடைய தொண்டர்கள் மீண்டும் கூடிக் கொண்டனர். பலருக்கு மண்டை உடைந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. இந்தத் தருணத்தில், வல்லப பந்தும் அவரது கூட்டமும் வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களுக்கும் நன்றாக அடி. நாங்கள் எல் லோரும் போலீஸாரைப் பார்த்துக்கொண்டு கீழே உட்கார்ந்து கொண்டோம். இவ்வாறு இரண்டொரு மணி நேரம் உட் கார்ந்து கொண்டிருந்தோம். இருள் வந்துவிட்டது. ஒரு புறத்தில் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் கூடிக் கொண்டார்கள். நாங்கள் அடிபட்ட செய்தியைக் கேட்டு, மற்றொரு பக்கத்தில் பொதுஜனங்கள் ஏராளமாகக் கூட்டம் கூடிவிட்டார்கள். கடைசியில் நாங்கள் தீர்மானம் செய்தி ருந்த பாதை வழியாக, செல்வதற்கு, அதிகாரிகள் சம்மதித் தார்கள். நாங்கள் அந்த வழியாகப் போனோம். எங்களைத் தாக்கி அடித்த குதிரைப் போலீஸ்படை, பந்தோபஸ்தைப் போல எங்களுக்கு முன்னே போய்க் கொண்டிருந்தது. அத னால் என் உடலிலும் உள்ளத்திலும் புதிய அனுபவம் ஏற் பட்டது என்பதற்காகவே, விரிவாக இந்நிகழ்ச்சியைப்பற்றி எழுதினேன். தடியடியைத் தாங்கிக்கொள்ளக்கூடிய உடல்

வலிமை பெற்றவன் என்ற எண்ணத்தாலுண்டான உற்சாகத்தினால், தேகத்திலேற்பட்ட வலி முழுதும் மறந்துவிட்டேன். நான், அடிபட்டுக் கொண்டிருந்த பொழுதும், இந்த நிகழ்ச்சியை மனதில் நிறுத்தி ஆராய்ந்து கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த தடியடிப் பயிற்சி எனக்கு மிகவும் உபயோகமாக இருந்தது. அடுத்த நாள் சைமன் கமிஷன் லக்ஷ்மணபுரிக்கு வர விருந்தது. எங்களுடைய பகிஷ்காரம் மகத்தான அளவில் அன்றைக்குத்தான் காண்பிக்கப்படவேண்டும் என்று ஆசைப்பட்டோம்.

அந்த சமயத்தில் தகப்பனார் அலகாபாத்திலிருந்தார். நான் அடிபட்ட செய்தியைப் பத்திரிகையில் பார்த்து அவரும் குடும்பத்தாரும் கலங்கிப் போவார்கள் என்று எனக்குத் தெரியும். எனவே, எல்லாம் சரியாயிருக்கிறதென்றும் அவர் கவலைப்படவேண்டாமென்றும் மாலையில் அவரிடம் டெலிபோன்மூலம் பேசினேன். ஆனால் அவரால் கவலைப்படாமலிருக்க முடியவில்லை. அவருக்குத் தூக்கம் வரவில்லை. லக்ஷ்மணபுரிக்கு வருவதென்று நடுநிசியில் தீர்மானம் கொண்டுவிட்டார். கடைசி ரயில் வண்டியும் போய்விட்டது. எனவே, அவர் மோட்டாரில் புறப்பட்டார். வழிநடுவே, காருக்கு அவகேடுகள் சில நேர்ந்தன. விடியற்காலையில் 5 மணிக்கு 146 மைலுக்கப்பாலிருந்த லக்ஷ்மணபுரிக்கு வந்துசேர்ந்தார். அலுத்துக் களைத்து இருந்தார்.

அவர் வந்துசேர்ந்த சமயம் நாங்கள் ஸ்டேஷனுக்கு ஊர்வலமாகப்போவது என்று தீர்மானித்துத் தயாராயிருந்தோம். முதல் நாள் மாலையில் நிகழ்ந்த சம்பவங்கள் லக்ஷ்மணபுரியை தட்டி எழுப்பிவிட்டன. சூரிய உதயத்திற்கு முந்தியே, திரளான ஜனங்கள் ஸ்டேஷன் வழியே நடந்துகொண்டிருந்தார்கள். நகரத்தின் பல பகுதிகளிலிருந்து சிறு சிறு ஊர்வலங்கள் வந்து கொண்டிருந்தன. நாலு நாலு பேராகப் பல ஆயிரம் ஜனங்கள் ஊர்வலமாக அணிவகுத்துக் காங்கிரஸ் காரியாலயத்திலிருந்து முக்கிய ஊர்வலமாக ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள். நாங்கள் இந்த ஊர்வலத்திலேதான் இருந்தோம். ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே போனதும், போலீசார் எங்களைத் தடுத்தார்கள். அரை மைல் சதுக்கத்தில் பெரிதான திறந்த வெளி ஸ்டேஷனுக் கெதிரே இருந்தது. இந்த மைதானத்தின் ஒரு புறத்தில், நாங்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். முன்னால் செல்லுவதற்கு யாதொரு பிரயத்

தனமும் செய்யாமல், எங்களுடைய கூட்டம் அமைதியாக இருந்த இடத்திலேயே இருந்தது.

அந்த இடத்தில் சாதாரணப்போலீசார், குதிரைப்படை போலீசார், இராணுவத்தார் எல்லோரும் ஏராளமாக இருந்தார்கள். கூட்டமோ சொல்ல முடியாது. இரண்டு பேர்களாகவும் மூன்று பேர்களாகவும் சேர்ந்து சேர்ந்து, திறந்த வெளியில் ஜனங்கள் பரவி நின்றூர்கள். நெடுந்தூரத்தில், திடீரென்று ஒரு கூட்டம் வருவதைக் கண்டோம். குதிரைப் படையார் அந்தப்பூரா இடத்திலும் வளைந்துகொண்டு எங்களை நோக்கி வந்தார்கள். இடையிலே, சந்தித்தவர்களை எல்லாம் மிதித்துத் துரத்திக்கொண்டே வந்தார்கள். குதிரைப்படையார் தாவிவந்த காட்சி நேர்த்தியாகத்தான் இருந்தது. ஆனல், வேடிக்கைப் பார்க்கவந்த சாதுஜனங்கள் குதிரைகளின் குளம்புகளில் அகப்பட்டுக் கஷ்டப் படுவதைப்பார்க்கச் சகிக்க முடியவில்லை. ஜனங்கள் வலிபொறுக்க முடியாமல் தரையில் புரண்டு கொண்டிருந்தார்கள். பலர், நகரவே முடியவில்லை. திறந்த வெளியைப் பார்த்தால், அது ஒரு போர்க்களத்தைப் போலத் தோன்றிற்று. ஆனல், காட்சியைக் காண்பதற்கோ, யோசிப்பதற்கோ, எங்களுக்கு நீண்ட நேரம் கிடைக்கவில்லை. குதிரைப்படை வீரர்கள் எங்களைத் தாக்கினர்கள். நாங்கள் அசையாமல் நின்று கொண்டிருந்தோம். நாங்கள் அசையாதது கண்டு, குதிரைகள் திடீரென்று நிறுத்தப்படவே அவை எங்கள் தலைக்கு எதிரில் முன்னங்கால்கள் துடிதுடிக்கப் பின்னங்கால்களில் நின்றன. பிறகு எங்களைக் குண்டாந்தடிகள் கொண்டு அடிக்க ஆரம்பித்தார்கள். இந்த அடியில் குதிரைப் படை, சாதாரணப்போலீஸ் எல்லாரும் சேர்ந்து கொண்டார்கள். சரியான அடி! முதல் நாள் மாலை இருந்த தெளிவான புத்தி எனக்கு அன்றைக்கு இல்லை. இருந்த இடத்திலேயே நின்று கொண்டு அசையக்கூடாது என்ற எண்ணம் ஒன்று தான் எனக்கு நன்ருக ஞாபகமிருந்தது. அடிமேல் அடி விழுந்ததால், எனக்கு பாதிக்கண் மூடிப்போயிற்று. ஒரு சமயத்தில் திடீரென்று ஆத்திரம்வந்து திருப்பி அடிக்கவேண்டும் என்றும் எனக்குத் தோன்றிற்று. என் முன்னே இருந்த போலீஸ்காரனைக் குதிரையினின்றும் கீழே தள்ளிவிட்டு, அந்தக் குதிரையின்பேரில் நான் வெகு எளிதிலே ஏறி சவாரி செய்திருக்க முடியும். ஆனல், நீண்ட காலப்பயிற்சியாலும், கட்டுப்பாட்டினலும், முகத்திலே அடிவிழாதபடி காப்பாற்றிக்

கொள்ளக் கையைத் தூக்கினதைத் தவிர, வேறொன்றும் செய்யவில்லை. நாங்கள் சிறு விரலை உயர்த்தி இருந்தால் போதும்! எங்களில் நூற்றுக்கணக்கானவர்களைப் போலீசார் சுட்டு வீழ்த்தி யிருப்பார்கள் என்று எனக்கு நன்ருகத் தெரியும்.

ஒரு யுகமாகத் தோன்றிற்று. ஆனால் போலீசார் இடித்துப் பிடித்துத் தள்ளின நேரம் சில நிமிஷங்கள் தான் ஆகியிருக்கும். அவர்களுடைய தாக்குதலினால், சிறிது சிறிதாக எங்களுடைய அணிவகுப்பு உடைந்துபோகாமல், பின்னடைய ஆரம்பித்தது. இதனால் நான் மட்டும் தனித்து நின்று எனது கங்குகளில் யாதொரு ஆதரவுமில்லாமல் இருந்தேன். என்பேரில் சரமாரியாக அடி விழுந்துகொண்டிருந்தது. இப்படி விழுந்துகொண்டிருக்கும் சமயத்தில், பின்னே இருந்து யாரோ என்னைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். இவ்வாறு தூக்கிக்கொண்டு போனது எனக்குப் பிடிக்கவில்லை. போலீசார் என்னைக் குறிவைத்து அடிக்க முயலுகின்றனர் என்று எண்ணி, என்னுடைய இளந்தோழர்களிற் சிலர் இவ்வாறு தூக்கிக்கொண்டுபோய் காப்பாற்றத் தீர்மானம் செய்துவிட்டார்கள். சுமார் நூறு அடிக்குப் பின்னால், எங்கள் ஊர்வலம் மீண்டும் சரியான அமைப்பில் சேர்ந்துகொண்டது. போலீசாரும் பின்னே தொடர்ந்து எங்களுக்கு முன்னால் 50 அடி தூரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். இவ்வாறு இரண்டு கட்சியார்களும் ஒருவரை யொருவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கையில், இவ்வளவு தொல்லைக்கும் காரணமாயிருந்த சைமன் கமிஷன் ஸ்டேஷனிலிருந்து அரைமைல் தூரத்திற்கப்பால் இரகசியமாகப் போய்விட்டது. ஆனால் கமிஷன் எங்கு போனாலும் கறுப்புக்கொடிகளையும் ஊர்வலக்காரர்களையும் தப்பித்துக் கொள்ளவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் பூரண ஊர்வல தோரணையுடன் நாங்கள் காங்கிரஸ் காரியாலயத்துக்கு வந்துசேர்ந்தோம். அங்கே ஊர்வலத்தைக் கலைத்தோம். நான் வேகமாக தகப்பனாரிடம் சென்றேன். அவர் என்னைப்பற்றிய கவலையுடன் காத்துக் கொண்டிருந்தார்.

காரியம் முடிந்து பரபரப்பு அடங்கியதும் என் தேகம் வலியாலும், களைப்பாலும் சோர்வுற்றிருப்பதை உணர்ந்தேன். உடம்பில் எல்லாப் பாகங்களும் கொடுமையாக வலிக்க ஆரம்பித்துவிட்டது. உடம்புநிறைய ஊமைக்காயங்களும் அடித்

தழும்புகளும் நிறைந்திருந்தன. நல்லவேளையாக எந்த ஜீவாதாரமான அங்கத்திலும் காயம் ஏற்படவில்லை. ஆனால் எங்களுடைய தோழர்களில் பலருக்கு பலமான காயங்கள் உண்டாயின. தோழர் கோவிந்த வல்லப பந்த் ஆறடி சொச்சம் உயரம். அடிப்பதற்கு அவர் நல்ல குறி. அவர் என் பக்கத்திலிருந்தார். அவருக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. அந்தக் காயங்களினால் நீண்டகாலம்வரையிலும் அவரால் முதுகை நிமிர்த்த முடியவில்லை. சுறுசுறுப்பாக எந்த வேலையும் செய்ய முடியவில்லை.

எதையும் தாங்கக்கூடிய உடல் வலிமை எனக்கு இருக்கிறதென்ற கர்வத்துடன், இந்த நிகழ்ச்சியை மறந்துவிட்டேன். ஆனால், அடியைக்காட்டிலும் வேறொன்று என் மனதைவிட்டு அகலவே இல்லை. எங்களை அடித்த போலீஸார் முகங்கள் அப்படியே இன்றைக்கும் ஞாபகத்திலிருக்கின்றன. எங்களைக் கொடுமையாக அடித்துத் தாக்கியவர்கள் வெள்ளைக்கார சார்ஜண்டுகளாகும். இந்தியக் கருப்புப் போலீசார் அவ்வளவு பலமாக அடிக்கவுமில்லை; தாக்கவுமில்லை. அந்த வெள்ளைக்கார சார்ஜண்டுகளுடைய முகங்களை அப்பொழுது பார்க்கவேண்டுமே! பகைமையும் இரத்த வெறியும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. அனுதாபமாவது ஜீவகாருண்யமாவது மருந்துக்குகூட முகத்தில் காணமுடியாது.

எங்கள் முகங்களிலும் ஆத்திரமும், பகைமையும் குடிகொண்டிருந்திருக்கவேண்டும். நாங்கள் அமைதியுடனிருந்தாலும், எதிரிகளின் பேரில் எங்களுக்கு அன்பு பிறந்தது என்றாவது எங்களுடைய முகங்கள் அழகாக இருந்தன என்றாவது சொல்ல முடியாது. சார்ஜண்டுகளுக்கும் எங்களுக்கும் பரஸ்பரம் யாதொரு மனஸ்தாபமும் கிடையாது; யாதொரு கலகமும் கிடையாது. அவர்களும் நாங்களும் அந்த சமயம் எதிர்த்துப் போராடும் இரண்டு சக்திகளின் பிரதிநிதிகளாக விருந்தோம். இந்த சக்திகள் மனத்தை மயக்கி எங்களை ஆட்கொண்டுவிட்டன. செய்வது இன்னதென்று தெரியாமல் நாங்கள் போராடினோம். சண்டையின் உற்சாகத்தில் நாங்கள் எவரையும் கவனிக்கவில்லை. ஆனால் காரியம் முடிந்ததும் இந்தச் செயல்கள் எதற்காக என்ற பிரச்னை தானாகவே என் மனத்தில் எழுந்தது.

## XXVI

## தொழிலாளர் சங்க காங்கிரஸ்

1928-ம் ஆண்டில் இந்தியாவில் பெரிதாகத் தோன்றிய நிகழ்ச்சிகள் சைமன் கமிஷன் பகிஷ்காரமும், சர்வகட்சி மகாநாடும்தான். ஆனால், என்னுடைய சிரத்தையும் நோக்கமும் வேறு துறைகளில் சென்று கொண்டிருந்தன. நான் காங்கிரசுக்குப் பொதுக்காரியதரிசி. எனவே, காங்கிரஸ் அமைப்பை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டுவரும் மாறுதல்களைப் பற்றி, ஜனங்களுக்கு எடுத்துக் காண்பிக்க வேண்டும் என்று மிகவும் ஆவலுற்றேன். சென்னையில் பூரணவிடுதலை சம்பந்தமாகக் கிடைத்த வெற்றியை நிலைநிறுத்தி வலுப்படுத்த எண்ணினேன். ஏனெனில் சர்வகட்சி மகாநாட்டினால் இந்த வெற்றி நஷ்டப்பட்டுவிடும் போலத் தோன்றிற்று. எனவே தேசத்தில் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்து அநேக மகாநாடுகளில் பிரசங்கம் செய்தேன். நான்கு மாகாண மகாநாடுகளில் தலைமை வகித்தேன். பாஞ்சாலம், மலையாளம், டில்லி, ஐக்கிய மாகாணங்கள்—இவற்றின் மாகாண மகாநாடுகளில் தலைமை வகித்தேன். வங்காளத்தில் வாலிபர் சங்கத்திலும் பம்பாயில், மாணவர் மகாநாட்டிலும், தலைமை வகித்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். அடிக்கடி ஐக்கிய மாகாணங்களில் கிராமங்களுக்குச் சென்று பார்த்தேன். சில சமயங்களில், ஆலைத்தொழிலாளர்களுக்குப் பிரசங்கம் செய்தேன். எனது பிரசங்கங்கள் யாவும் கருத்துகளில் அநேகமாக ஒன்று போலத்தானிருக்கும். ஆனால், அந்தந்த இடங்களுக்கும் கூட்டத்துக்கும் தக்கவாறு பிரசங்கங்களின் உருவம் மட்டும் மாறிநிற்கும். ஒவ்வொரு இடத்திலும், நான் அரசியல் விடுதலையையும் சமூக விடுதலையையும் பற்றிப் பேசுவேன். அரசியல், சமூகவிடுதலைக்கு ஒத்ததுதானென்று வற்புறுத்தி வந்தேன்.

சமதர்மக் கொள்கைகளை காங்கிரஸ் ஊழியர்களிடையேயும் படித்தவர்கள் மத்தியிலும் பரப்பவேண்டுமென்பது என் ஆசை. ஏனெனின், தேசீய இயக்கத்துக்கு முதுகெலும்பைப்போல இருந்து வரும் இந்தக் கூட்டத்தார்கள், குறுகிய

தேசீய முறையிலேயே எதையும் நோக்கி வந்தார்கள். இவர்கள் பண்டைக் காலத்துப் பெருமைகளைப் பற்றி அழுத்திப் பேசுவார்கள். அன்னிய ஆட்சியால், பொருளாதார அத்யாத்மிகத் துறைகளில் ஏற்பட்ட நஷ்டங்களைப் பற்றிப் பேசுவார்கள். ஏழைகளது துயரங்களையும் அன்னியர் ஆட்சியின் அவமானத்தையும் குறித்துப் பேசுவார்கள். தேசத்தின் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமாகில், அன்னிய ஆட்சியினின்றும் விடுதலை அடையவேண்டும் என்று வற்புறுத்துவார்கள். தாய்நாட்டுக்காகத் தியாகம் செய்யவேண்டிய தேவையைப்பற்றி வெகுவாகப் பேசுவார்கள். இத்தகைய பேச்சுகளினால், ஒவ்வொரு இந்தியனுடைய உள்ளமும் துடிதுடித்தது. எனது உள்ளமும் துடிதுடித்து, உருகிப் போயிற்று. ஆனால், இந்தியாவிலும் சரி, பண்டைப் பெருமைகளைப்பற்றி பேசினால், எனக்கு இனிப்பு உண்டாவதில்லை. பண்டைக்காலப் பெருமை உண்மையல்ல என்று நான் நினைக்கவில்லை. அவைகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவதால், தற்போதையப் பிரச்னைகளைப்பற்றியும் நமது போராட்டத்தின் முக்கிய அம்சங்களைப்பற்றியும் யோசிக்கவொட்டாமல், நம்மைத் தடுத்துவிடுகின்றது. அவைகளினால் உணர்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது. ஆனல், யோசிக்கும்திறமை வளர்வதில்லை.

இந்தியாவில், அபேதவாதத்துறையில் புகுந்தவர்களில், நான்தான் முதல் பேர்வழி அல்ல. நானோ, சமதர்ம திட்டத்துக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ஊர்ந்து சென்றுகொண்டிருந்தேன். ஏனையோர் வெகு விரைவிலே தீவிர அபேதவாதிகளாக, ஏற்கனவே ஆகிவிட்டார்கள். தொழிலாளர்களின் இயக்கம் சமதர்மக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வாலிப சங்கங்களில் பெரும்பான்மையும் அதே கருத்துக் கொண்டிருந்தன. 1927-ம் வருடம் டிசம்பர் மாதத்தில், நான் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய பொழுது பொதுவாகவே, இந்தியாவில் சமதர்மக் கொள்கைக் காற்று சிறிது குழம்பி வீசிக்கொண்டிருந்தது. 1927க்கு முன்னாலேயே, சமதர்மக் கொள்கைகளில் ஊறிப்போனவர்கள் பலர் இருந்தனர். அவர்கள் பொதுவாக, உலக துக்கம் தீர்ந்து சுகம் பெறவேண்டுமென்ற பொதுவான விருப்பங் கொண்டவர்கள்தான். ஆனால் கார்ல்மார்க்ஸ் அவர்களின் ஆராய்ச்சியை அனுசரித்து பலர் சமதர்மக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர். சிலர் பூராவும் அக்கொள்கை

களைக் கைக்கொண்டனர். ருஷியாவின் ஐந்துவருஷத்திட்டம், இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சமதர்மக் கொள்கைகள் பரவுவதற்கு சாதகமாக விருந்தது. நான் முக்கியமான ஒரு காங்கிரஸ்வாதி. காங்கிரஸ் அமைப்பில் சிறப்பான உத்தியோகம் வகித்துவந்தேன். எனவே, அபேதவாதிகளுக்குள் எனக்குக் கிடைத்த கீர்த்தி முழுதும் மேற்கூறிய இரண்டு காரணங்களாலேதான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். மற்றும் பல முக்கிய காங்கிரஸ் வாதிகளும் சமதர்ம முறையில் கவனம் செலுத்தி யோசிக்கத் தலைப்பட்டார்கள். ஐக்கிய மாகாணக் காங்கிரஸ்கமிட்டியில், சமதர்மிகள் பலர் இருந்தனர். 1926-ம் ஆண்டிலேயே அபேதவாதத் திட்டம் ஒன்றை மாகாணக்கமிட்டியில் தயாரிக்க நாங்கள் தீர்மானித்தோம்.

எங்கள் மாகாணத்தில் ஜமீன்தாரி தாலுக்தாரி திட்டம் தான் அமுலிலிருந்து வந்தது. எனவே நாங்கள் முதன்முதலாகக் கவனம் செலுத்தவேண்டிய சங்கதி நில உரிமைகள் தான். தற்போது அமுலிலிருக்கும் நிலஉரிமைத்திட்டம் ஒழிய வேண்டுமென்றும் அரசாங்கத்துக்கும் குடியானவனுக்கும் இடையே ஜமீன்தார் என்ற தரகர் தேவையில்லையென்றும் நாங்கள் அறிக்கை வெளியிட்டோம். ஆனால் நாட்டில் இத்தகைய கருத்துகள் பழக்கம் இல்லாமையால், நாங்கள் நிதானத்துடன் வேலை செய்யவேண்டியதாயிற்று.

1929-ம் வருஷத்தில் ஐக்கியமாகாணக் காங்கிரஸ்கமிட்டி இன்னொருபடி முன்னால் சென்று, அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு சிபார்சு செய்தது. சமதர்மக்கொள்கையை இது தழுவியதாகும். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி 1929-ம் வருஷம் கோடையில், பம்பாயில் கூடிற்று. ஐக்கிய மாகாணத் தீர்மானத்தின் பீடிகையை, அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொண்டு, அந்தத் தீர்மானத்துக்கு ஆதாரமான சமதர்மக்கொள்கையையும் ஒப்புக்கொண்டுவிட்டது. ஐக்கிய மாகாணக்கமிட்டியின் முழுத்தீர்மானம் பின்னர் யோசிக்கப்படலாம் என்றுஒத்திவைக்கப்பட்டது. அத்தீர்மானத்தையும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முடிவையும் அநேகர் அறவே மறந்துவிட்டு, காங்கிரசில் சென்ற இரண்டொரு வருஷங்களில்தான் சமதர்மக்கொள்கைகளைத் திடீரென்று நுழைத்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் தீர்மானத்தைப்பற்றி அதிகமாக யோசனை

செய்யாமல், அதை அகில இந்தியக் காங்கிரஸ்கமிட்டி நிறை வேற்றிவைத்தது உண்மையாகும். தாங்கள் செய்யும் காரியம் இன்னதென்று உணராமல் அங்கத்தினர்களிற்பலர் வோட்டுப் போட்டிருக்கலாம். இந்தியப் பூரண விடுதலைச் சங்கத்துக்கு ஐக்கிய மாகாணத்தில் ஒரு கிளை ஸ்தாபனம் இருந்தது. அந்த "லீக்" முற்றிலும் சமதர்ம மயம். பொதுவாக, காங்கிரஸ் கமிட்டியைக் காட்டிலும் இந்த லீக் மிகத்தீவிரமாயிருந்தது. பூரண விடுதலைச் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்று என்ன வெனில் சமூக விடுதலைக்காக பாடுபடுவதாகும். இந்தியா முழுதும் "லீக்" கிளைக்ளை ஸ்தாபித்து அவைகளின் மூல மாக பூரண விடுதலையையும் சமதர்மத்தையும் பற்றிப் பிர சாரம் செய்ய எண்ணினோம்.

ஆனால் நான் மிகுதியும் ஏமாந்து போனேன். 'லீக்' ஐக் கிய மாகாணத்தில்தான் ஓரளவு வேலை செய்தது. தேசத்தில் ஆதரவு இல்லையென்ற காரணத்தால் அல்ல; 'லீக்'கின் ஊழி யர்களில் பெரும்பாலர் பிரபல காங்கிரஸ் ஊழியர்களுமாவர். காங்கிரஸ் பூரண விடுதலைக் கொள்கையை ஒப்புக்கொண்டு விட்டதால், காங்கிரஸ் அமைப்பின் மூலமாக பூரண விடுத லைப் பிரசாரம் செய்ய முடியும் என்று அவர்கள் எண்ணினார் கள். முதன்முதலாக 'லீக்'கை ஸ்தாபித்தவர்களில் சிலர், இந்த அமைப்பை சிரத்தையுடன் நோக்கி, அதை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் கொள்ளவில்லை. காங்கிரஸ் நிர்வா கஸ்தர்களின் மனத்தை மாற்றுவதற்காகவே இந்த 'லீக்'கை ஸ்தாபிக்க அவர்கள் எண்ணம் கொண்டார்கள். எனவே பூரண விடுதலை 'லீக்' தளர்ந்துபோய்விட்டது. காங்கிரஸ் சக்தி பெற்று எழ எழ, தீவிர வாதிகள் அனைவரும் காங்கிர ஸால் கவரப்பட்டு அதில் சேர்ந்துகொண்டார்கள். 'லீக்' பல வீனமடைந்துகொண்டே போயிற்று. 1930-ஆம் வருஷத்திய சட்ட மறுப்புப் போருக்கு பின்னர் 'லீக்' காங்கிரஸுக்குள்ளே ஐக்கியமாகி மறைந்துபோயிற்று.

1928-ன் பின் பகுதியிலும், 1929-லும் நான் கைது செய்யப்படலாமென்று வெகுவாகப் பேசிக்கொள்ளப்பட்டது. பத்திரிகைகளில் இது அடிக்கடி குறிப்பிடப்பட்டது. இதைப் பற்றித் தெரிந்த நண்பர்களிற் பலர் எனக்கு எச்சரிக்கைகள் அனுப்பினார்கள். இந்த எச்சரிக்கைகளால் ஸ்திரமாக எந்த வேலையிலும் ஈடுபட முடியவில்லை. எப்பொழுது கைது செய் யப்படுவேன் என்று காத்திருந்தேன். சிறை புகுவதைப்பற்றி

எனக்குக் கவலையில்லை. என் எதிர்காலம் எப்படி யிருப்பினும், நிலைத்த குடியும், குடித்தனமுமாக நான் வாழ முடியாதென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். எனவே ஸ்திரமற்ற வாழ்க்கைக்கும், திடீரென்ற மாறுதல்களுக்கும், சிறை செல்வதற்கும் எப்பொழுதும் தயாராயிருப்பதற்காக, நான் எவ்வளவு விரைவிலே பழகிக்கொள்ளுகிறேனே அவ்வளவு நலமென்று தோன்றிற்று. அநேகமாக நானும், எனது குடும்பத்தினரும் இத்தகைய பயிற்சியில் தேர்ச்சி பெற்றுவிட்டோம். ஆதலால் நான் எப்பொழுது கைது செய்யப்பட்டாலும், அதை ஒரு சாதாரண நிகழ்ச்சியாகவே கருதினேன். கைதியாகப் போவதாக பரவிய வதந்திகளால் எனது தினசரி வாழ்க்கைக்கு ஒரு வகையான பரபரப்பு உண்டாயிற்று. சுதந்திரத்தோடு வாழும் 'ஒவ்வொரு நாளும் லாபமாகக் கருதினேன். உள்ளபடியே 1928-29-ஆம் ஆண்டுகளில் நான் சிறைக்கு வெளியேஇருந்தேன். 1930-ம் ஆண்டு ஏப்ரல்மாதத்தில் கைது செய்யப்பட்டேன். அன்றுமுதல் நான் சிறைக்கு வெளியே இருந்த காலம் மிகக் குறைவானதாகும். சிறிது காலம் தங்கிப் போகும் விருந்தாளியைப் போலத்தான், நான் எனது வீட்டிலே வாழ்ந்து வந்தேன். இன்றைய பொழுது போனதும் நாளைக்கு என்ன நேரும் என்பது தெரியாமலும், சிறைப் பிரவேசம் எப்பொழுதும் நேரலாமென்றும் நான் எனது வாழ்க்கையை நடத்தி வந்தேன்.

1928-ம் வருடம் முடிகிறதருணத்தில், கல்கத்தா காங்கிரஸும் கிட்ட நெருங்கிவந்தது. எனது தகப்பனர் அதற்குத் தலைமை வகிக்கவேண்டியவர். சர்வகட்சி மகாநாட்டைப் பற்றியும் தாம் வரைந்த ரிப்போர்ட்டைப் பற்றியும் அவர் மிகவும் உற்சாகத்துடனிருந்தார். தமது ரிப்போர்ட்டைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளுமாறு எப்படியாவது செய்துவிட வேண்டுமென்பது அவருடைய ஆசை. பூரண விடுதலைப் பிரச்னையில் யாருடனும் ராஜி செய்துகொள்ள, நான் தயாரா யில்லாததால், அவருடைய ஆசைக்கு நான் இணங்கமாட்டேனென்பது அவருக்குத் தெரியும். இதனுல் அவருக்குக் கோபம் உண்டாயிற்று. நாங்கள் இருவரும் ஒத்துப்போக முடியவில்லை. இருவரும் வெவ்வேறு வழி சென்றமையால், எங்களுக்குள் அபிப்பிராய விரோதம் ஏற்பட்டது. இதற்கு முன் பல தடவைகளில் எங்களுக்குள் அபிப்பிராயபேதம் இருந்தது. எனவே, நான் ஒரு கட்சியிலும் தகப்பனர் வேறு

கட்சியிலும் இருக்க நேர்ந்தது. ஆனால் இதற்கு முன்பும் அல்லது இதற்குப் பின்னாலேயும், இப்பொழுதேற்பட்ட மனக் கசப்பு இருந்ததாகத் தெரியவில்லை. இந்த அபிப்பிராய பேதத்தைப்பற்றி, நாங்கள் இருவரும் மிகுதியும் துயரப்பட்டோம். கல்கத்தாவில் இந்த விஷயம் நெருக்கடியான நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டது.

சர்வகட்சி மகாநாட்டினால் தயாரிக்கப் பெற்ற யாதாஸ்தை பெரும்பான்மை வோட்டுகளால், காங்கிரஸ் ஆதரிக்காவிடின், தான் காங்கிரஸின் தலைவர் பதவி வகிக்கமுடியாதென்று அவர் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டார். இது நியாயமான முறைதான்; இப்படித்தான் அவர் நடந்துகொண்டிருக்கவேண்டும். என்றாலும் இந்த யோசனையால், அவருக்கு விரோதமாக விருந்த பலர் கலக்கமடைந்து போனார்கள். ஒன்றை ஆட்சேபித்துக் கண்டனம் செய்வதும், ஆனால் பொறுப்பை ஏற்றுக்கொண்டு காரியம் செய்வதில் தயங்குவதும் காங்கிரஸில் ஒருவழக்கமாக இருந்து வருகிறது. ஒருவரது ஆட்சேபனையால் எதிர்க்கட்சி வலுக்குன்றி, அதன் போக்கு தமக்கு சாதகமாயிருக்கக்கூடுமென்று காங்கிரஸிலே சாதாரணமாக எண்ணங்கொண்டிருக்கிறார்கள். பொறுப்பு ஏற்றுக் கொள்ளாமல் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறவேண்டு மென்று விரும்புகிறார்கள். நமக்கு யாதொரு பொறுப்புமில்லாமல் இந்திய அரசாங்கம் நடைபெற்றுவருகிறது. அந்த அரசாங்கத்தின் நிர்வாகிகளின் செயல்களைக் கண்டிக்கத்தான் நம்மால் முடியும். அந்தக் கண்டிப்பும் காரியத்திற்குப் பயன்படாத ஒரு ஆட்சேபனையாகத்தான் இருக்கும். நாம் சொல்வதை எதிராளி கேட்கவேண்டுமானால், பொறுப்பை எதிராளி நம்மிடம் கொடுத்து விட்டால், அதையேற்றுக் காரியம் செய்வதற்கான தைரியமும் மனப்பான்மையும் பயிற்சியும் நம்மிடமிருக்கவேண்டும். இராணுவம், சிவில், உள்நாடு, பிறநாடு முதலிய அரசியல் இலாகா எல்லாவற்றையும் அடக்கி ஆளும்படியான சக்தி நம்மிடம் இருக்கவேண்டும். மிதவாதிகள் கேட்பதுபோல ஒருபகுதி பொறுப்பு மட்டும் கேட்பது, அர்த்தமில்லாத விஷயமாகும். நம்மால் அரசியல் நிர்வாகம் செய்யமுடியாது என்று ஒப்புக்கொள்வதாகும். காந்திஜீயைக் குறைகூறுபவர்களில், பலரிடம், இத்தகைய ஆட்சேபணையான மனப்பான்மை இருந்துவருகிறது. காந்திஜீயின் திட்டங்கள் பலருக்குப் பிடிக்கவில்லை; என்றாலும் அழுத்தமாக அவர்கள்

அவைகளைக் கண்டிப்பதோடு நின்றுவிடுகிறார்களே யொழிய, காந்திஜியைக் காங்கிரஸைவிட்டுத் துரத்துவதற்கு தயாராக இருக்கவில்லை. இந்த மனப்பான்மை சகஜமாக ஏற்படக்கூடியதே. ஆனால் இந்த மனப்பான்மை இருகட்சியார்களுக்கும் நேர்மையானதல்ல.

கல்கத்தா காங்கிரசில் இத்தகைய கஷ்டங்கள் சில நேர்ந்தன. இரண்டுகட்சிகளுக்கு மிடையே ராஜிப்பேச்சு நடைபெற்றது. ராஜித்திட்டமும் அநேகமாகத் தயார் செய்யப்பட்டது. ஆனால் முடிவிலே அது ஏற்றுக்கொள்ளப் படவில்லை. நடவடிக்கை ஒரே குழப்பமாயிருந்தது. எல்லோரும் கௌரவமாகக்கூட நடந்துகொள்ளவில்லை. சர்வகட்சி மகாநாடு தயாரித்த ரிபோர்ட்டை ஒப்புக்கொண்டு, ஒரு தீர்மானம் காங்கிரசில் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஆனால் தீர்மானத்துக்கு ஒருஷரா போடப்பட்டது. அதாவது, ஒரு ஆண்டுக்குள் ரிபோர்ட்டில் காணப்பெற்ற அரசியல் திட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், காங்கிரஸ் பூர்ண விடுதலையை மீண்டும் தனது லட்சியமாகக் கொண்டுவிடும் என்பதுதான். ஒருவருஷம் தவணை கொடுக்கப்பட்டது. இத் தவணைக்குள் ராஜி ஏற்பட்டாலன்றி ராஜீயப்போர் தொடங்குமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. பூரண விடுதலையிலிருந்து நழுவி, இந்தத்தீர்மானம் வெகு தூரம் கீழேவந்துவிட்டாலும், ஒருவகையில் இவ்வாறு தீர்மானம் நிறைவேறியது நல்லகாலமென்றே சொல்லவேண்டும். ஏனெனில், பிளவு இல்லாமல் காங்கிரஸ் அந்த ஆண்டு தப்பித்துக்கொண்டது. காங்கிரஸைப் பிளந்து கூறுகளாக்க, யாரும் அப்பொழுது தயாராய் இருக்கவில்லை. காங்கிரஸ் இவ்வாறு பிளவுபட்டுப் போகாமல் இருந்ததினால், 1930-ம் ஆண்டில் நடைபெற்ற போராட்டத்துக்கு, அதிக உதவியாக இருந்ததாகச் சொல்ல வேண்டும்.

ஒரு ஆண்டுக்குள் சர்வ கட்சி மகாநாட்டின் அரசியலமைப்புத் திட்டத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்று தெளிவாக எல்லோருக்கும் தெரியும். போராட்டம் நிகழப் போவது நிச்சயம். அப்பொழுது தேசம் இருந்த நிலைமையில் காந்திஜீயின் தலைமையில்லாமல், எத்தகைய போராட்டத்தையும் அழுத்தமாக நடத்தி வெற்றி பெற முடியாது. பகிரங்க காங்கிரஸில், இந்தத் தீர்மானத்தை அன்றுகுறை மன்னுடனே எதிர்த்தேன்.

என்ருலும்; மீண்டும் காங்கிரஸின் காரியதரிசியாகத் தெரிந்தெடுக்கப்பட்டேன். என்ன நேர்ந்தாலும், நான் காங்கிரஸ் காரியதரிசி பதவியில் எப்படியோ ஒட்டிக்கொண்டிருந்தேன். காங்கிரஸ் சிம்மாசனத்தில் எந்தத் தலைவர் வீற்றிருந்தாலும் சரியே, அந்த அமைப்புக்கு நிரந்தரக் காரியதரிசியைப்போல் ஆகிவிட்டேன்.

கல்கத்தா காங்கிரஸ் துவங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் நிலக்கரிச் சுரங்கப் பிராந்தியத்தின் மத்தியஸ்தலமாக விருந்த ஜாரியா என்னுமிடத்தில் அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் நடைபெற்றது. முதலிரண்டு நாட்கள் அந்தக் காங்கிரஸின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டேன். பிறகு, கல்கத்தாவுக்குப் போக நேர்ந்தது. தொழிலாளர் காங்கிரஸில் நான் கலந்துகொண்டது, இதுதான் முதல் தடவையாகும். குடியானவர்களின் மத்தியில் அதிகமாகப் பழகி அவர்களுக்காக, நான் எவ்வளவோ பாடு பட்டபோதிலும், ஒருவாறு விவசாயிகள் என்னை அன்புடன் நோக்கியபோதிலும், தொழிலாளர்களின் மத்தியில் நான் ஒரு அன்னியனாக விருந்தேன். இந்தத்தொழிலாளர் காங்கிரஸுக்குள்ளும், இரு கட்சிகள். சீர்திருத்தக்காரர்கள் ஒரு கட்சி. புரட்சி மனப்பான்மை கொண்டவர்கள் இன்னொரு கட்சி. சீர்திருத்தக்காரர்கள் பழைய தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அரசியலில் மிதவாதிகள். தொழிலாளர் இயக்கத்தில் அரசியலைப் புகுத்தக் கூடாதென்பது அவர்களுடைய வாதம். மிகவும் ஜாக்கிரதையாக காரியம் செய்ய வேண்டுமென்றும், தொழிலாளர்களின் நிலைமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக சீர்திருத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் அவர்கள் எண்ணினார்கள். இந்தக் கூட்டத்துக்கு என். எம். ஜோஷி அவர்கள் தலைவர். இவர் இந்தியத் தொழிலாளர் பிரதிநிதியாக ஜினிவாவுக்கு அடிக்கடி போயிருக்கிருர்.

தொழிலாளர் காங்கிரஸில் இன்னொரு கட்சி இருந்தது. அது தீவிரக் கட்சி. அரசியல் கிளர்ச்சியில் நம்பிக்கை கொண்டது. பகிரங்கமாகத் தனது புரட்சி மனப்பான்மையை வெளியே தெரிவித்துக்கொண்டு வந்தது. இந்தக் கட்சிக்குத் தூண்டுதலாய் நின்றவர்கள் சில சமதர்மிகளும், அவர்களை நெருங்கிய ஏனையோரும் ஆவர். பம்பாய் ஆலைத் தொழிலாளர்களை இந்தக் கூட்டத்தார் தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்

டார்கள். இவர்களுடைய தலைமையின் கீழ் பம்பாயில் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஒன்று நடைபெற்றது. அதற்கு சிறிதளவு வெற்றி கிடைத்தது. கிர்னிகாம்கர் சங்கம என்ற புதியதொரு ஆலைத் தொழிலாளர் சங்கம், பம்பாயில் தோன்றிற்று. பம்பாய் நகரத் தொழிலாளர்கள் யாவரையும் இந்தச் சங்கம் ஆட்டி வைத்துக்கொண்டிருந்தது. தீவிரக் கட்சியார் நடத்தி வந்த இன்னொரு வல்லமை பொருந்திய சங்கம் உண்டு. அது ஜி. ஐ. பி. ரெயில்வேத் தொழிலாளர் சங்கம் ஆகும்.

தொழிலாளர்களின் காங்கிரஸ் தோன்றிய காலந் தொட்டு, அதன் நிர்வாகமும், காரியாலயமும் என். எம். ஜோஷி அவர்களிடமும், அவரது நெருங்கிய தோழர்களிடமுமே இருந்து வந்தன. ஜோஷி அவர்கள் இயக்கத்தைச் சிறிது சிறிதாக நன்ருகக் கட்டிக்கொண்டு வந்தார். தீவிரக் கட்சியார் சாதாரணப் பேர்வழிகளானதால், நிர்வாகத்தில் யாதொரு மாறுதலையும் செய்ய இயலவில்லை. இது ஒரு அதிருப்தியான நிலைமையாகவிருந்தது. தொழிலாளர்களின் உண்மையான நிலைமையை இது வெளிக் காண்பிக்கவில்லை. மனஸ்தாபமும், அதிருப்தியும் தொழிலாளர் காங்கிரஸில் நிறைந்து கொண்டே வந்தது. தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் அதிகார ஸ்தானங்களைத் தாங்கள் பெற வேண்டுமென்று தீவிரக் கட்சியார் ஆத்திரப்பட்டார்கள். ஆனால் விஷயங்களை நெருக்கடிக்குக் கொண்டுபோனால், பிளவு ஏற்பட்டுவிடும் என்று தோன்றியதால் நெருக்கடியை யாரும் விரும்பவில்லை. இந்தியா சம்பந்தப்பட்ட வரையிலும் தொழிலாளர் சங்க இயக்கம் இன்னும் இளமைப் பருவத்திலேயே இருந்தது. அது பலவீனமா யிருந்ததுமல்லாமல், அதைப் பெருமபாலும் நடத்தியவர்கள் தொழிலாளரல்லாத ஏனையோர்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களை அந்நியர்கள் தங்களுக்கு சாதகமாக உபயோகப்படுத்திக்கொள்ளும் நிலைமை எளிதிலே ஏற்பட்டுவிடும். இத்தகைய தன்மை தொழிற்சங்கங்களிலும், இந்தியத் தொழிலாளர் காங்கிரஸிலும் தோன்றத் தலைப்பட்டது. ஆனால் என். எம். ஜோஷி அவர்கள் தொழிலாளர் சங்க இயக்கத்தில் பெரிதும் அனுபவமும், சிரத்தையும் கொண்டவர். பல ஆண்டுகள் சலிக்காமல் வேலை செய்து தொழிலாளர்கள் இயக்கக் கட்டிடத்தை எழுப்பிவிட்டார். அரசியலில் மிகவும் பிற்போக்கானவர் என்று ஜோஷியைக் கருதுபவர்கள்கூட, அவர் இந்தியத் தொழிலாளர் இயக்கத்துக்கா

க்குச் செய்த தொண்டுகளைப் பாராட்டுகின்றனர். இவ்வாறு வேறு எவரையும் பாராட்ட முடியாது.

ஜாரியாவில் என்னுடைய அனுதாபங்கள் யாவும் தீவிரக் கட்சியாரிடம்தானிருந்தது. ஆனால், நான் புதிதாக வந்தவனானபடியால், இந்தக் குடும்பச் சண்டைகளில் தலை கால் தெரியவில்லை. எனவே, அவைகளினின்றும் விலகி நிற்க, நான் தீர்மானம் கொண்டேன். நான் ஜாரியாவை விட்டு வந்த பிறகு, தொழிலாளர் காங்கிரஸின் வருஷத் தேர்தல் நடைபெற்றது. அடுத்த வருஷத்துக்கு, அந்தக் காங்கிரஸின் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்று கல்கத்தாவில் எனக்கு செய்தி கிடைத்தது. என்னைத் தலைவர் பதவிக்கு அபேட்சகராக நிறுத்தியவர்கள் மிதவாதக் கூட்டத்தினர். எனக்கு எதிராக நிறுத்தப்பட்டவர் நிஜமான ஒரு தொழிலாளர். அவரை நிறுத்தியவர்கள் தீவிரக் கூட்டத்தார். தீவிரக் கட்சியாரின் அபேட்சகர், தேர்தலில் வெற்றி பெறக்கூடும் என்பதைத் தெரிந்துகொண்டு, மிதவாதக் கட்சியார் என்னை அபேட்சகராக நிறுத்தி வைத்தார்கள். தேர்தலன்று நான் ஜாரியாவில் இருந்திருப்பேனாகில், தொழிலாளர் அபேட்சகரை ஆதரித்து, நான் என்னுடைய நியமனத்தை வாபஸ் வாங்கிக்கொண்டிருப்பேன். புதிதாக வந்தவனும், தொழிலாளியுமில்லாத என்னைத் தலைமைப் பதவியில் திடீரென ஏற்றி விடுவதென்பது கேவலமான செயல் என்று எனக்குத் தோன்றிற்று. இந்தியாவில் தொழிலாளரியக்கத்தின் இளமைப் பருவத்தையும், பலவீனத்தையும் இந்த நிகழ்ச்சி புலப்படுத்துகின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

1928-ம் ஆண்டில் தொழிலாளர் சச்சரவுகளும் வேலை நிறுத்தங்களும் அதிகமாக காணப்பட்டன. 1929-ம் ஆண்டிலும் அவ்வாறே. பம்பாய் ஆலைத் தொழிலாளர்கள் மிகவும் எளியவர்கள்; தீனர்கள். ஆனால் தீவிர உணர்ச்சியுள்ளவர்கள். இந்த வேலைநிறுத்தங்களில, அவர்கள் தலைமையாக நின்றார்கள். வங்காளச் சணல் ஆலைகளில் பெரிதான வேலை நிறுத்தம் ஒன்று செய்யப்பட்டது. ஜேம்ஷட்பூர் இரும்புத் தொழிற்சாலைகளிலும் ரயில்வேக்களிலும் வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன என்பது எனது நினைவு. ஜேம்ஷட்பூர் இரும்புத்தகடு ஆலைகளில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. வேலை நிறுத்தம பல மாதங்கள் வரையிலும் கடுமையான போராட்டமாக நீண்டு கொண்டே போயிற்று. வேலை நிறுத்

தத்துக்கு பொதுஜன அனுதாபம் ஏராளமான அளவில் இருந்த போதிலும், இந்த ஆலை முதலாளிகள் தொழிலாளர்களை அடியோடு நசுக்கி விட்டார்கள். பர்மா எண்ணெய்க் கம்பெனியார் இந்த ஆலைகளின் சொந்தக்காரர்கள்.

சுமார் இரண்டு வருஷங்கள் தொழிலாளர் உலகத்தில் ஏகப்பட்ட கலக்கம் இருந்து வந்தது. தொழிலாளரின் நிலைமை சிறிது சிறிதாக சீர்கெட்டு வந்தது. ஐரோப்பிய யுத்தத்தின் முடிவுக்குப்பின்னர், சில ஆண்டுகளாக இந்தியத் தொழிற்சாலைகளுக்கு ஏராளமான லாபம் கிடைத்துவந்தது. ஐந்து ஆறு வருஷகாலம் பஞ்சு ஆலைகளிலும் சணல் ஆலைகளிலும் நூற்றுக்கு நூற்றைம்பது வீதம் லாபம் கிடைத்தது. இந்தக் கூடுதலான லாபங்கள் யாவும் பங்குதாரர்கள் பைகளுக்கும் முதலாளிகளின் பாங்கிகளுக்கும் போய்ச்சேர்ந்தன. ஆனால் தொழிலாளர்களோ என்றும் போல வேலை செய்து கொண்டிருந்தார்கள். கூலியில் சம்பளம் சிறிதளவு உயர்த்தப் படும் பொழுதெல்லாம், அகவிலையும் கிராக்கியாகிக்கொண்டு வந்தது. இந்த நாட்களில், அவசர அவசரமாக லட்சக்கணக்கில், லாபத்தைச் சம்பாதித்தாலும் தொழிலாளர்களின் வீடுகளோ மகாக் கேவலமாக இருந்தன. தொழிலாளர்களின் மனைவிமார்கள் உடுத்திக்கொள்ள உடையின்றி பாதி நிர்வாணமாக இருந்தார்கள். பம்பாய்த் தொழிலாளர்களின் நிலைமை கேவலமாயிருப்பினும், வங்காளச் சணல் ஆலைத்தொழிலாளர் நிலைமை அதைவிடக் கேவலமாக இருந்தது. கல்கத்தா மாளிகைகளின் அருகிலிருந்த தொழிலாளர்களுக்கு இத்தகைய நிலைமையா ஏற்படவேண்டும்? இந்தத் தொழிலாளர்களும் அவர்களது மனைவிமார்களும் தலைக்கு எண்ணெய்இல்லாமலும் பாதி நிர்வாணத்தோடும் ஏன் வேலை செய்யவேண்டும்? கிளாஸ்கோ, டண்டிமுதலிய நகரங்களில் வசிக்கும் வெள்ளைக்கார முதலாளிகளும், இந்தியாவில் இருக்கும் சில கறுப்பர்களும் செழித்துக் கொழுப்பதற்காக, இவர்கள் இவ்வாறு வேலை செய்துவந்தார்கள்.

லாபம வந்தகாலத்தில், தொழில் நன்றாக நடந்தது; ஆனால் தொழிலாளருக்கு யாதொரு நன்மையும் ஏற்படவில்லை. வியாபாரமந்தம் ஏற்பட்டதும், அதிகலாபம் கிடைக்கவுமில்லை; இதனால் தொழிலாளர்களுக்குத்தான் கஷ்டம் ஏற்பட்டது. முதலாளிகளோ, தாங்கள் அடைந்த பழைய லாபங்களை அறவே மறந்துவிட்டார்கள். இப்பொழுதோ,

லாபங்கள் அதிகமாக வருவதில்லை. எனவே எவ்வாறு தொழில் நடைபெற முடியும். தொழிலாளர் உலகத்தில் கலக்கமும் கஷ்டங்களும் உண்டாயின. பம்பாயில் ஏற்பட்ட மகத்தான வேலை நிறுத்தங்களால், முதலாளிகளும் அரசாங்கத்தாரும் மிகவும் திகிலடைந்து போனார்கள். தொழிலாளர் இயக்கம் நோக்கங்களிலும், அமைப்பிலும் வலுவடைந்துவந்தது. மேலும் அரசியல் கிளர்ச்சியும் வலுப்பெற்று வந்தது. இந்த இரண்டு கிளர்ச்சிகளும் தனித்தனியே நின்று நடைபெற்று வந்தாலும், ஒன்றுக்கொன்று சாதகமாயும் இருக்கக் கூடிய தென்பதைச் சர்க்கார் உணர்ந்து தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியை திருப்தியுடன் நோக்கவில்லை.

1929-ம் வருஷம் மார்ச்சு மாதம் அரசாங்கத்தார், தீவிரக் கட்சியின் சில தொழிலாளத் தலைவர்களைக் கைது செய்தார்கள். பம்பாய் கிர்னிகாம்கர் சங்கத்தினின்றும், வங்காளத்திலிருந்தும், ஐக்கிய மாகாணத்திலிருந்தும், பாஞ்சாலத்திலிருந்தும் தொழிலாளத் தலைவர்களைப் பொறுக்கி யெடுத்துக் கைதுசெய்தார்கள். இவர்களிற் சிலர் சமதர்மிகள். சிலர் சமதர்மிகளுடன் நெருங்கியவர்கள். மற்றும் பலர் வெறும் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த மிதவாதிகள். நாலரை வருஷம் விடாமல் நடந்துவந்த மீரட்டு சதிவழக்கின் துவக்கம் இதுதான். மீரட் சதிவழக்காளர்களுக்குப் பண உதவி செய்வதற்காக ஒரு கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு என் தகப்பனார் தலைவர். டாக்டர் அன்சாரியும், வேறு பலரும், நானும் அங்கத்தினர்களாயிருந்தோம். வேலை மிகவும் கஷ்டமாயிருந்தது. பணம் வசூலிக்கமுடியவில்லை. பொதுவாகத் தொழிலாளர்களிடம் பணக்காரர்களுக்கு அதிகமான அனுதாபம் இல்லையென்று கண்டோம். பணம்கொடுத்தால் தான் தாங்கள் கேசில் ஆஜராகமுடியுமென்று வக்கீல்மார்கள் சொல்லிவிட்டார்கள். எங்கள் கமிட்டியிலும் என் தகப்பனரைப்போல கீர்த்திபெற்ற வக்கீல்கள் சிலர் இருந்தார்கள். அவர்களைப் பொதுவாக நடவடிக்கைகள் சம்பந்தமாய் எப்பொழுதும் கலந்துகொள்ளமுடியும், அதனல் யாதொருசெலவும் இல்லை. ஆனல் பல மாதங்கள் மீரட்டில் ஒரே அடியாக இருப்ப தென்பது அவர்களால் முடியாதகாரியம். வேறுசில வக்கீல்களைக்கேட்டுப் பார்த்தோம். பணம்சம்பாதிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று அவர்கள் கருதினதாக எங்களுக்குத்தோன்றிற்று.

மீரட் வழக்கைத் தவிர எம். என். ராய் அவர்களுக்காக வும் வேறு பலருக்காகவும் எதிர்கட்சியாடப்பணம் சேகரிக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. இந்தசமயங்களில் என்தொழிலைச்சேர்ந்த வக்கீல்மார்களின் பேராசையைக்காண ஆச்சரியமாகஇருந்தது.பாஞ்சாலத்தில் இராணுவ அமுல்நடைபெற்ற காலத்தில், இராணுவஅமுல் கைதிகளுக்காக எதிர்கட்சியாட பிரபல வக்கீல் ஒருவர் ஏராளமான தொகையைக் கேட்டது தான் முதன்முதலாக வக்கீல்களின்பேராசையைக்கண்டு தங்களைப்போலொத்த வக்கீல்களுக்காக ஆஜராவதற்குக்கூட அவர்கள் ஏராளமானபணம் கேட்டார்., எல்லோரும் கடனைவாங்கி அல்லது சொத்துக்களைவிற்று அவருக்குபீஸ்கொடுக்க வேண்டியிருந்தது. நான் திகைத்துப்போனேன். பின்னர்எனக்கு ஏற்பட்ட அனுபவம் யாவும் இன்னும் துக்ககரமாய்இருந்தன. செப்புக் காசுகளாக ஏழைகளிடமிருந்து வசூல்செய்து அவ்வகளை "செக்குகளாக" மாற்றி வக்கீல்மார்களுக்கு கொழுகொழுவென்று கொடுக்கவேண்டுமென்றபொழுது என்மனம் தாங்கமுடியவில்லை. எதிர் கட்சி ஆடினாலும் ஆடாவிட்டாலும் பிரயோஜனமில்லை. ஆயினும் மீரட்வழக்கில் எதிர் கட்சியாட வேண்டியதற்குப்பல காரணங்கள் இருந்தன.

சதிவழக்கு "டிபென்ஸ்" கமிட்டிக்கும் வழக்குசம்பந்தமான எதிரிகளுக்கும் இடையே பல சமயங்களில் நல்ல உறவு இல்லாமற்போய்விட்டது. எதிரிகளில் பலரகமான பேர்வழிகள் இருந்தனர். அவர்களுக்குள் ஒரே "டிபன்ஸ்" இல்லை. சில மாதங்களுக்குப்பின் எங்களுடைய கமிட்டியைக் கலைத்து விட்டு, எங்களிற்பலர் தனிமுறையில் அவர்களுக்கு உதவி செய்துவந்தோம். இந்தியாவில் அரசியல் நிலைமை திருப்திகரமாக மாறிக்கொண்டேவந்தமையால் அது எங்கள்கவனத்தை இழுத்தது. 1930-ம் ஆண்டில் நாங்கள்எல்லோரும் சிறைக்குள் இருந்தோம்.

## XXVII

## ராஜீய வானத்தில் இடி முழக்கம்

1929-ம் ஆண்டு காங்கிரஸ் லாகூரில் நடைபெறவிருந்தது. காங்கிரஸ் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் பாஞ்சாலத்துக்கு வந்தது. இந்தப் பத்து ஆண்டுகளுக்கு முன்னே பாஞ்சாலத்தில் நடைபெற்ற ஜலியன்வாலாக்கொலை, இராணுவ அமுலின் அவமானங்கள், அமிர்தசரஸ் காங்கிரஸ், அதன் பின்னர்வந்த ஒத்துழையாமை—இவைகள் மறுபடியும் தேசமக்களின் ஞாபகத்தில் எழுந்தன. இந்தியாவின் தோற்றமே மாறிப்போய்விட்டது. அரசியலில் அரசாங்கத்தோடு போராடவேண்டுமென்ற எண்ணம் திரும்பவும் வளர்ந்து வந்தது. நாடு முழுதும் போராட்ட மனப்பான்மை பெருகிற்று. "யானைவரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே." இந்தியா சட்டசபையிலும், மாகாண சட்டசபைகளிலும் ஜனங்கள் சிரத்தையிழந்து, நீண்டகாலம் ஆகிவிட்டது. ஏதோ சிலர் மட்டும் சட்டசபையைத் தொத்திக்கொண்டு நின்றார்கள். இந்தியாவில், எதேச்சாதிகார ஆட்சிக்கு இவர்கள் ஒரு திரையைப்போல் நின்றார்கள். ஆனால், இந்தத்திரை கிழிபட்டு வெகுநாளாகிவிட்டது. இந்தியாவின் பார்லிமெண்டு என்று பிரிட்டனில் சிலர் பேசுவதற்காக, இந்தியர்களிற் சிலர் இன்னும் சட்டசபைக்குள் போய்க்கொண்டிருந்தார்கள் என்லாம். இல்லாவிட்டால், படிப்பதிற்காகவு மிருக்கலாம். 1928-ம் வருஷத்தில், இந்தியா சட்டசபையில், ஸைமன் கமிஷனோடு ஒத்துழைப்பதில்லை யென்று ஒரு தீர்மானம் நிறைவேறிற்று. அதுதான் சட்டசபையில் முக்கியமாக நடைபெற்ற கடைசிவேலையாகும். பின்னர் அரசாங்கத்தாருக்கும் இந்தியா சட்டசபைத் தலைவருக்கும் சச்சரவு ஏற்பட்டது. ஸ்வராஜ்யக் கட்சியைச்சேர்ந்த விட்டல்பாய் படேல் அவர்கள் சட்டசபைத் தலைவராக விருந்தார். அவர் தமது சுதந்திரமான மனப்பான்மையினால், அரசாங்கத்தின் கங்குகளில் முள்ளைப்போல் சதா குத்திக்கொண்டிருந்தார். அவருடைய இறக்கைகளைக் கத்தரித்துவிட அரசாங்கத்தார் முயன்று வந்தார்கள்.

இத்தகைய நிகழ்ச்சிகளால், தேசமக்களது கவனம் ஒருவாறு சட்டசபையில் சென்றது. ஆனால் மொத்தத்தில் இப்பொழுது சட்டசபைக்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகளில் பொதுஜனங்களின் கவனம் ஊன்றிப்போய் நின்றது. சட்டசபை வேலை என்ற ஏமாற்றத்திலிருந்து, எனது தகப்பனார் முழுதும் தெளிவு அடைந்தார். அந்த நிலைமையில் சட்டசபைகளில் இனி யாதொரு வேலையும் செய்யமுடியாதென்று கூறிவிட்டார். சந்தர்ப்பம் நேருமாகில், சட்டசபையை விட்டு வெளியேறிவிட விரும்பினார். சட்டவரம்புக்கு உட்பட்டு கிளர்ச்சி செய்ய வேண்டுமென்ற பயிற்சியையும் மனப்பான்மையையும் கொண்டிருந்த எனது தகப்பனார், தன் அனுபவத்தின் காரணமாக அத்தகைய கிளர்ச்சியால் இந்தியாவுக்கு யாதொரு பயனும் ஏற்படாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். இந்தியாவுக்கு, சட்டப்படி அரசியலமைப்பு இருக்குமாகில், சட்டவரம்புக்குட்பட்ட கிளர்ச்சிசெய்யலாமென்றும், யதேச்சாதிகாரத்தின் பயனாக திடீர் திடீரென்று ஜாலவித்தையால் மாஞ்செடிகள் முளைப்பதுபோல அவசரச் சட்டங்கள் தோன்றும் பொழுது, சட்டத்தின் ஆட்சி அறவே இல்லையென்றும் அவர் சொல்லுவார். மனப்பான்மையிலும் பழக்கவழக்கத்திலும் அவர் புரட்சிக்காரர் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல. மத்திய தரவகுப்பாரால் நடத்தப்படும் ஜனநாயக ஆட்சிமுறை இருந்திருக்குமாகில், அந்த ஆட்சிமுறையைத் தாங்கும் தூணைப்போல அவர் விளங்கியிருப்பார். ஆனால், இந்தியாவின் உண்மையான நிலைமையை உன்னிப்பார்க்கப் பார்க்க, அவருக்கு இந்த பொம்மை சட்டசபைகளில் பொறுக்கமுடியாத கோபம் உண்டாகி, சட்டவரம்புக்குட்பட்ட கிளர்ச்சியைப் பெரிதும் வெறுக்கத்துவக்கிவிட்டார். கல்கத்தா காங்கிரஸில் நேரு ரிபோர்ட்டை காங்கிரஸ் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று காங்கிரஸுக்கு யோசனைகூறி, அதைக்காங்கிரஸ் ஏற்றுக்கொள்வதற்காகப் பிரயத்தனம் செய்ததைத்தவிர, காந்திஜீ அரசியலில் வேறு எதையும் செய்யாமல் ஒதுங்கியே இருந்துகொண்டு வந்தார். ஆனால், நிகழ்ச்சிகள் யாவையும் அவர் கவனித்துக்கொண்டே வந்தார். காங்கிரஸ் தலைவர்கள் யாவரும், அவரை அடிக்கடி கலந்து கொள்வார்கள். சென்ற சில ஆண்டுகளாக, அவர் தமது ஊக்கத்தைக் கதர் இயக்கத்தில் செலுத்திவந்தார். இந்த நோக்கத்திற்காக, இந்தியா முழுதும் மூலைமுடுக்குகளிலெல்லாம் அவர் பிரயாணம்செய்தார்.

ஒவ்வொரு மாகாணத்தையும் வரிசையாக எடுத்துக் கொண்டு அந்தந்த மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லாக்களி லும் பிரயாணம் செய்தார். ஜில்லாக்களிலும் முக்கியமாகக் கருதப்பட்ட எல்லா இடங்களுக்கும் அவர் சென்ருர். சென்ற விடத்திலெல்லாம் திரளான கூட்டங்கள் கூடின. அவருடைய பிரயாண ஏற்பாடுகள் செய்து கூட்டங்களை சமாளிப்பது மிக வும் கஷ்டசாத்தியமாக விருந்தது. இவ்வாறு இந்தியா முழு தும் அடிக்கடி சுற்றி யிருக்கிருர். வடக்கே இருந்து தெற்கு வரையிலும், கிழக்கிலிருந்து மேற்குவரையிலும், இந்தியா வில் ஒவ்வொரு அடி மண்ணும் அவருக்குத் தெரியுமென்று சொல்லலாம். காந்திஜீ இந்தியாவைச் சுற்றிப்பார்த்தது போல வேறு யாரும் சுற்றிப்பார்த்ததில்லை யென்று நான் எண் ணுகிறேன். பண்டைக்காலத்திலே, யாத்திரீகர்கள் பலர் யாத் திரை ஆசையால், நாடுமுழுதும் பிரயாணம் செய்திருக்கிருர் கள். ஆனல், அவர்களுக்கு வசதிகள் மிகக்குறைவான தாகும். காந்திஜீ, ரயில் மூலமாகவும் மோட்டார் மூலமாக வும் ஒரு வருஷத்துக்குள் சுற்றிப்பார்த்த நிலப்பரப்பை அவர் கள் வாழ்நாள் முழுவதிலும்கூட, சுற்றிப்பார்த்திருப்பார் களா என்பது சந்தேகம். காந்திஜீ நடை பிரயாணமும் செய்வார். இவ்வாறு செய்து அவர் இந்தியாவையும் அதன் மக்களையும் பற்றிச் சிறப்பாக பல விஷயங்கள் தெரிந்துகொண் டார். இந்தப்பிரயாணத்தின் மூலமாக லட்சக்கணக்கான ஜனங்கள் அவரைக்காண சந்தர்ப்பம் வாய்த்தது.

அவருடைய கதர் சுற்றுப்பிரயாண சம்பந்தமாக, 1929-ம் ஆண்டில் அவர் ஐக்கிய மாகாணங்களுக்கு வந்தார். கொடுமையான கோடைகாலம்; என்ருலும், அநேக வாரங் கள் ஐக்கிய மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார். சில சமயங்களில் நானும், அவருடன் கூடப்போவேன். ஏற் கனவே அனுபவமிருந்தபோதிலும், அவரைக் காணவந்த திரளான கூட்டங்களைக் கண்டு, என்னல் ஆச்சரியப்படாம லிருக்க முடியவில்லை. சிறப்பாக, கோரக்பூர் ஜில்லாவில் கூட்டங்களின் அபாரமான தொகையைக் குறிப்பிடாம லிருக்க முடியாது. வெட்டவெளியின் கூட்டமோ என்று ஐயுற வேண்டி இருந்தது, நாங்கள் கிராமாந்தரங்களின் வழி யாக மோட்டாரில் போய்க்கொண்டிருக்கையில், சிற்சில மைல்களுக்கிடையே பதினாயிரம் முதல் இருபத்தையாயிரம் வரை ஜனங்கள் திரண்டுவிடுவார்கள். முக்கிய கூட்டங்களில்

லக்ஷத்திற்குமேல் கூடிவிடுவார்கள். ஒலிபரப்பும் கருவி வசதிகள் எல்லா இடங்களிலும் கிடையாது. சிற்சில நகரங்களில் மட்டுமிருந்தன. அவர் சொல்லுவது பெரும்பாலான ஜனங்களுக்கு கேட்கக் சாத்தியமில்லை. மகாத்மாவை அவர்கள் தரிசனம் செய்தால் போதுமானது. காந்திஜீ வழக்கம்போல சுருக்கமாக ஏதாவது அவர்களுக்கு உபதேசம் செய்வார். இவ்வாறு செய்யாவிட்டால், சுற்றுப்பிரயாணத்தைப் பூர்த்தி செய்யவே முடியாது. அலுத்துக் களைத்துப்போகவேண்டியதாயிருக்கும். அவருடைய ஐக்கியமாகாணச் சுற்றுப்பிரயாணம் முழுதும், நான் அவரோடு சென்றுகொண்டிருக்கவில்லை. என்னல் அவருக்கு விசேஷ உதவி யாதுமில்லை. அவரோடு போகும் கூட்டத்தில் ஓர் ஆளை அதிகமாகச் சேர்ப்பதில் அர்த்தமில்லை. ஜனக்கூட்டங்களில் எனக்கு வெறுப்புக் கிடையாது. ஆனல் கூட்டத்தில் அங்குமிங்கும் தள்ளப்பட்டு கால்கள் மிதிபட்டு நசுங்கிப்போவதில், என்ன ஆனந்தம் இருக்கிறது? காந்திஜீயோடு போகிறவர்களுக்கு அநேகமாக இந்தக் கதி நேராமலிருப்பதில்லை.

நான் செய்யவேண்டிய வேலை எவ்வளவோ இருந்தது. கதர்ப் பிரசாரமே முக்கிய வேலையாக ஏற்றுக்கொள்ள நான் இஷ்டப்படவில்லை. நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டிருக்கும் ராஜீயப் பிரச்னைகளின் பக்கத்தில் கதர் இயக்கம் ஒரு சிறிய கிளை வேலையாகத் தோன்றிற்று. அரசியல் சம்பந்தமில்லாத பிரச்னைகளில், காந்திஜீ தமது கவனத்தைச் செலுத்துவது எனக்கு ஓரளவு பிடிக்கவில்லை. அவருடைய மனப்பான்மையின் சொரூபம் எனக்குச் சரியாக விளங்கவில்லை. அந்தக் காலங்களில் அவர் கதர் வேலைக்காக நிதி திரட்டிவந்தார். தரித்திரநாராயணனுக்குப் பணம் தேவையென்று அவர் அடிக்கடிகூறுவார். இப்பணத்தைக்கொண்டு குடிசைத்தொழில்கள் ஸ்தாபித்து ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று அவர் நோக்கம். ஆயினும், தரித்திர நாராயணன் என்று சொல்லும்பொழுது, வறுமையை அவர் கௌரவப்படுத்திப் பேசினர் என்பது தெளிவு. கடவுள் ஏழை பங்காளன் என்பது அவரது பல்லவி ஆகும். எல்லா மதங்களிலும் இதேவிதப் பல்லவி இருந்து வருகிறது. வறுமையைப் புகழ்வது எனக்குப் பிடிக்கவில்லை. வறுமை கொடிய விரோதியாக என் கண்ணில் படுகின்றது. வறுமையை அழிக்கப் போராட வேண்டுவதுதான் கருமமாகும். வறுமையை

நிலைத்து நிற்கும்படி செய்யக்கூடிய தத்துவத்தை ஆதரிக்க லாகாது. எனவே வறுமையை உற்பத்திசெய்து, அதைச் சகித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கைத் திட்டத்தைத் தாக்கி, அதை மாற்றியாகவேண்டும். இதற்குத் தயங்குபவர்களுக்கு வறுமைக்கு ஏதோ ஒருவகையில் சமாதானம் சொல்ல வேண்டியிருக்கிறது. ❀

இவர்கள் எப்பொழுதும் உலகம் வறுமை நிரம்பித்தான் இருக்கும் என்று நம்புகிறார்கள். வறுமையே ஒழிந்து, மனித ரெல்லோரும் சுகமாகவிருக்கும் நிலைமையை இவர்கள் கற் பனைகூடச் செய்துகொள்ள முடிவதில்லை. ஏழையும் பணக் காரனும் எப்பொழுதும் கூடக்கூடத்தான் இருப்பான் என் பது இவர்களது முடிவு. இவ்விஷயத்தைக் காந்திஜீயிடம் வாதம் செய்திருக்கிறேன். பணக்காரர்கள், தங்களிடம் இருக்கும் சொத்தை ஏழைகளுடைய தர்மசொத்து என்று கருதி, தங்களை அந்தச் சொத்துக்குத் தர்ம கர்த்தாக்களாக பாவித்துக் கொள்ளவேண்டும் என்று காந்திஜீ சொல்லுவார். இது ஒரு பண்டைக்கால உபதேசமாகும். இத்தகைய தத் துவம் இந்தியாவிலும், பழைய ஐரோப்பாவிலும் இருந்து வந் தது. ஜன சமூக விடுதலைக்கு இந்தத் தத்துவத்தினால் எப் படி பரிகாரம் ஏற்பட முடியும் என்று எனக்கு விளங்கவே இல்லை. சட்டசபை வேலைகள் பயனற்றுப் போனபடியால், ஜனங்களின் மனம் அவைகளிடம் செல்லவில்லை என்று ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால், ஒருநாள் திடுக்கிடும்படியான செய்தி ஒன்று வந்தது. இந்தியா சட்ட சபையின் விஸிட்டர் இடத்திலிருந்து, இரண்டு வெடிகுண்டு களை, பகத்சிங்கும், பி. கே. தத்தரும் எறிந்தார்கள்; யாருக் கும் படுகாயம் ஏற்படவில்லை. யாருக்கும் சேதம் உண்டாகா மல் இருக்கவேண்டுமென்றும் வெறும் பரபரப்பை மட்டும் உண்டாக்கிச் சத்தம் செய்யவேண்டுமென்ற நோக்கம் கொண்டு, இந்த வெடிகுண்டுகள் வீசப்பட்டன என்று எதிரி கள் பின்னர் வாக்குமூலம் கொடுத்தது உண்மையாக இருந் திருக்கலாம். ஆனால் அசெம்பிளியிலும் வெளியேயும் அவர் கள் ஏராளமான பரபரப்பை உண்டாக்கி விட்டார்கள். புரட் சிக்காரர்களின் ஏனைய வேலைகள் இதைப்போல அவ்வளவு சாதுவாக இல்லை. லாலா லஜபதியைத் தாக்கியதாகச் சொல் லப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர் லாகூரில் சுட்டுக் கொல்லப்பட்டார். வங்காளத்திலும் ஏனைய இடங்களிலும்,

பலாத்காரப் புரட்சிச் சின்னங்கள் தலைதூக்கி நின்றன. சதி வழக்குகள் மலிந்துபோயின. விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டவர்களது எண்ணிக்கை அதிகரித்தது.

லாகூர் சதி வழக்கு நடக்கையில், போலீசார் கோர்ட்டில் விசித்திரமாக நடந்துகொண்டார்கள். எனவே, இந்தச் சதி வழக்கில் ஜனங்கள் அதிகமான கவனம் செலுத்தத் துவக்கினார்கள். தங்களை அதிகாரிகள் கோர்ட்டிலும், சிறையிலும் நடத்தியவகை சதி வழக்கு எதிரிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவர்களிற் பெரும்பான்மையோர் உண்ணாவிரதமிருக்கத் தீர்மானித்தார்கள். அது, எவ்வாறு ஆரம்பித்தது என்பதன் சரியான காரணங்கள் எனக்கு ஞாபகமில்லை. அரசியல் கைதிகளை நடத்தும் வகையைப் பொதுவாக்க் கண்டிப்பதற்காக, இந்த உண்ணாவிரதம் ஏற்பட்டதாகப் பின்னர் சொல்லப்பட்டது. உண்ணாவிரதம் பல வாரங்கள் நீடித்துப்போய், தேசத்தில் பரபரப்பை உண்டாக்கிற்று. எதிரிகள், உடல் மெலிந்துபோனார்கள். அவர்களைக் கோர்ட்டுக்குக் கொண்டுவர முடியவில்லை. அடிக்கடி நடவடிக்கைகளை ஒத்திப் போடவேண்டியதாயிற்று. எதிரிகள் கோர்ட்டில் ஆஜராகாவிட்டாலும், அல்லது அவர்களுக்காக வக்கீல் ஆஜராகாமற்போனாலும், விசாரணையை நிறுத்தாமல், கோர்ட்டில் நடத்தலாம் என்று ஒரு சட்டத்தை ஆக்க, இந்தியச் சர்க்கார் துணிந்தார்கள். சிறையில் இவர்களை நடத்தும் முறையையும் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டியதாயிற்று. உண்ணாவிரதம் துவக்கி ஒரு மாதகாலம் ஆயிருக்கும். நான் அப்பொழுது லாகூரில் இருந்தேன். சிறையிலிருந்த எதிரிகளிற் சிலரைப் பார்ப்பதற்கு எனக்கு அனுமதி கிடைத்தது. நான் போய்ப் பார்த்தேன். முதன் முதலாக, பகத்சிங்கை அப்பொழுதுதான் கண்டேன். ஜதீந்திர நாத் தாஸ் முதலிய ஏனையோரையும் கண்டேன். அவர்கள் மிகவும் மெலிந்துபோய்ப் படுக்கையிலேயே கிடந்தார்கள். அவர்களிடம் அதிகமாகப் பேச முடியவில்லை. பகத்சிங் நல்ல கவர்ச்சி பொருந்திய, புத்திசாலித்தனமான முகத்தோற்றம் வாய்ந்தவர். அவரது முகத்தில் அமைதி குடி கொண்டிருந்தது. கோபம் சிறிதுகூட அந்த முகத்தில் காணப்படவில்லை. சாந்தமான பார்வை. அவர் பேசும்பொழுதும் சாந்தமாகவே பேசினார். ஒரு மாதம் உண்ணாவிரதம் இருந்தவர்கள் சாந்தமாகத்தான் இருப்பார்கள்போலும்! ஜதீன்தாஸ்

இன்னும் அதிக சாந்தத்தோடு இருந்தார். அவரைப் பார்த்தால், மிருதுவான கன்னிப் பெண்ணைப்போல இருந்தது. நான் பார்க்கும்பொழுது, அவருக்கு உடம்பிலே அதிகமான வலி. அவர் 61 நாள் பட்டினி கிடந்து, இறுதியில் இறந்து போனார்.

1907-ம் வருஷத்தில், லாலா லஜபதிராயோடு தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட சர்தார் அஜீத்சிங், பகத்சிங்கின் சிறியதகப்பனார். தன்னுடைய சிறியதகப்பனாரைப் பார்க்கவோ, அல்லது அவரைப்பற்றி ஏதாகிலும் ஒரு செய்தி கேட்கவோ, பகத்சிங் மிகவும் ஆவல் கொண்டிருந்தார். ஸர்தார் அஜீத்சிங் நாட்டைவிட்டுப்போய், பல ஆண்டுகளாய் விட்டன. அவர் தென் அமெரிக்காவில் குடியேறி வாழ்ந்து வருவதாக சில வதந்திகள் உலவின. ஆனால் திட்டமான செய்தி ஒன்றும் அவரைப்பற்றி கிடைக்கவில்லை. அவர் இருக்கிறாரா? அல்லது இறந்துதான் போய்விட்டாரா? என்பது கூட எனக்குத் தெரியாது. ஜதீன் தாஸின் மரணத்தினால் தேசம் முழுதிலும் பரபரப்பு உண்டாயிற்று. அரசியல் கைதிகளை அரசாங்கத்தார் எவ்வாறு நடத்தவேண்டுமென்ற பிரச்னையைப்பற்றி நாட்டில் எல்லோரும் பேசத்துவக்கினார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை நியமனம் செய்தார்கள். இந்தக் கமிட்டியின் ஆலோசனையின் பயனாக, கைதிகளை மூன்று கூறுகளாகப் பிரித்து, புதிய விதிகள் செய்யப்பட்டன. இப்புதிய விதிகளினால் யாதொரு நலமும் ஏற்படவேயில்லை. பழைய நிலைமை, பழைய நிலைமையாகவே இருந்தது. லாகூர் காங்கிரசுக்கு தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் இந்த வேலையில் கவனத்தைச் செலுத்தி வந்தன. 1929-ம் வருஷத்தில் காந்திஜீயைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று ஏகமனதாக நாட்டில் விருப்பம் இருந்ததாகச் சொல்லலாம். தலைவர் பதவியின்மூலமாக காந்திஜீயின் செல்வாக்கு பெருக்கடையப்போகின்றது என்பதல்ல. பல ஆண்டுகளாக அவர் காங்கிரஸ் தலைவர்களுக்குத் தலைவராக இருந்து வந்திருக்கிறார். போராட்டத்தை, நாடு ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. வரக்கூடிய போராட்டத்துக்கு காந்திஜீதான் உண்மையான தலைமை வகிக்கவேண்டுமென்பது நிச்சயம். எனவே, காங்கிரசுக்கும் அந்த ஆண்டுத் தலைவராக, காந்திஜீ

அமையவேண்டுமென்பது நாட்டினரின் விருப்பமாகும். அவருடைய உன்னதமான நிலைமையில் வேறு எந்தத்தலைவரும் இருக்கவில்லை. எனவே, மாகாணக் கமிட்டிகள் எல்லாம் தலைவர் பதவிக்கு அவரது பெயரைச் சிபார்சு செய்தன.

ஆனால், காந்திஜீ அப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். எப்படியோ மன்றாடி அவருடைய மனதைத் திருப்புவதற்கு இடமிருப்பதாகச் சிலருக்குத் தோன்றிற்று. கடைசியாக தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக லக்ஷ்மண புரியில், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூட்டப்பெற்றது. காந்திஜீ இணங்குவார் என்று கடைசி நிமிஷம் வரையிலும் நாங்கள் எல்லோரும் எண்ணிக்கொண்டிருந்தோம். அவர் இணங்கவில்லை. கடைசி நிமிஷத்தில், அவர் என் பெயரைப் பிரேரணைசெய்தார். காந்திஜீ இணங்காததைக் கண்டு, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அதிருப்தியடைந்தது. இந்த தர்மசங்கடமான நிலைமையைக்கண்டு அங்கத்தினர்களுக்கு ஆத்திரமும் உண்டாயிற்று. வேறொரு போவழியும் அகப்படவில்லை. ஆதலால், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி என்னை லாகூர் காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இந்தத் தேர்தலால், நான் மிகவும் மனம் நொந்து போனேன். அவர்கள் என்னை அவமானப் படுத்தியதாகத் தோன்றிற்று. அதனால் ஏற்படக்கூடிய கௌரவத்தை நான் ஏளனம் செய்யவில்லை. அது மகத்தான கௌரவம்தான். சாதாரண முறையில் நான் தேர்ந்து எடுக்கப்பட்டிருப்பேனாகில், எனக்கு மகிழ்ச்சி உண்டாயிருக்கும். பகிரங்கமான வழியில், நான் இந்தப் பதவிக்குவந்து சேரவில்லை, சந்துப்பாதையால்கூட வரவில்லை. திருட்டு வழியால் திடீரென்று மேலேவந்து, அகில இந்தியக் கமிட்டியைத் திடுக்கிடச் செய்ததாகத் தோன்றிற்று. எப்படியோ முகத்தைச் சுளித்துக்கொள்ளாமல், அவர்கள் இந்தக் கசப்பான மாத்திரையை மென்று விழுங்கிவிட்டார்கள். எனது மானத்திற்குப் பங்கம்நேர்ந்ததாகக் கருதினேன். எனக்குக் கிடைத்த கௌரவத்தை "வர்பஸ்" செய்துவிடலாமென்று எண்ணினேன், நல்லவேளையாக ஆத்திரத்தை யடக்கிக்கொண்டு யாருக்கும் தெரியாமல் கமிட்டிக் கூட்டத்திலிருந்து வெளியேறிப் போனேன்.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தைப் பற்றி எனது தகப்பனார் அதிக மகிழ்ச்சி கொண்டார். என்னு

டைய அரசியல் போக்கு அவருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் என்னிடத்தில் அவருக்கு பிரியம். ஏதேனும் எனக்கு அள வில்லா நன்மை கிடைத்தால், அவர் மகிழ்ச்சி அடைவார். அடிக்கடி அவர் என்னைக்கண்டிப்பார். வெட்டொன்று; துண்டு இரண்டாகப் பேசுவார். ஆனால் எவரும் என்னைப்பற்றி அவ ரிடம் குறைகூறிவிட்டு அதற்குப் பிறகு அவருடைய மரியா தைக்குப் பாத்திரமாக இருக்கமுடியாது. எனது தேர்தல் உண்மையிலேயே எனக்கு மகத்தான கௌரவமாகும். அது ஒரு மகத்தான பொறுப்பும் கூட. மேலும், தகப்பனுருக்குப் பின், அடுத்த வருஷத்திலேயே, அவருடைய மகன் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு வருவதென்பது அபூர்வ சம்பவம். காங் கிரஸ் தலைமைப் பதவிவகிக்கும் பொழுது எனக்கு வயது 40 இருக்கும். மிகச் சிறியபிராயத்தில் காங்கிரசின் தலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன் நான்தான் என்று அடிக்கடி சொல் லப்படுவதுண்டு. ஆனால் அது உண்மையல்ல.

என் வயதிலேதான் கோகலே காங்கிரஸ் தலைவர் ஆனுர். மௌலானு அபுல்கலாம் அசாத் அவர்கள் காங்கிரசின் தலைவரானபொழுது, அவருக்கு வயது நாற்பதுக்குச் சற்று குறைவுதான். ஆனால் கோகலேயை அவருடைய முப்பது வயது முதற் கொண்டே பெரியவராக மதித்து விட்டார் கள். அபுல்கலாம் அசாத் அவர்களுடைய தோற்றத்தைப் பார்த்தால், வயதானவர் போலிருக்கும். அவருடைய மகத்தான பாண்டித்தியத்திற்கு ஏற்ற முகத்தோற்றம் அவரிடமிருந்தது. என்னைப்பெரிய அரசியல் வாதியாக வாவது அல்லது வித்வானுகவாவது யாரும் இது வரையி லும் மதித்ததில்லை. ஆகவே, தலை நரைக்க ஆரம்பித்து முகத்தில் சிறிது தளர்ச்சி ஏற்பட்டுவிட்டபோதிலும் என்னைப் அதிக வயதானவனுக ஒருவரும் கருதுவதில்லை. லாகூர் காங்கிரஸ் கிட்டநெருங்கிக் கொண்டுவந்தது. நிகழ்ச்சி கள் ஒவ்வொன்ருக தம்மைத்தாமே தள்ளிவந்தது போலத் தொடர்ந்து வந்தன. இந்த சம்பவங்களில் மனிதச்செயல் சிறி தும் இல்லைபோலத் தோன்றிற்று. இந்தப்போக்கில், ஒருக்கால் நான் தடையாக விருப்பேனே என்ற எண்ணமும எனக்கு உண்டாயிற்று. இவ்வாறு இந்தியாவின் விதி மேல்நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை, சர்க்கார் தடுக்க எண்ணி ஒரு யுக்தி செய்தார்கள். விரைவில் வட்டமேஜை மகாநாடு ஒன்று கூட்டப்படும் என்று வைசிராயாக விருந்த லார்டு இர்வின்

பிரபு அறிவித்தார். அந்த அறிவிப்பின் சொற்கள் சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருந்தன. அந்த அறிவிப்புக் கெவ்வளவோ அர்த்தம் செய்து கொள்ளலாம்; அல்லது அர்த்தமே இல்லை என்றும் முடிவுசெய்து கொள்ளலாம். அந்த அறிவிப்புக்கு யாதொரு பொருளுமில்லை யென்றுதான் எங்களில் அநேகர் எண்ணினார்கள். உள்ளபடியே அந்த அறிவிப்பில் சாரமிருந்தாலும், அது எங்களுடைய லட்சியத்துக்குப் பதின் காதவழி கிட்டத்தில் கூடவரவில்லை.

வைஸிராய் அறிக்கை விடுத்தவுடனே தேசத்திலே என்ன கேவலமான பரபரப்பு! அவசர அவசரமாக டில்லியில் தலைவர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டினார்கள். பல கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டனர். மகாநாட்டிலே காந்திஜீ பிரசன்னமா யிருந்தார். எனது தகப்பனாரும் இருந்தார். அஸெம்பளி தலைவர் வித்தல்பாய் படேலும் இருந்தார். ஸர். தேஜ்பகதூர் ஸாப்ரூவைப் போன்ற மிதவாதத் தலைவர்களும் ஏனையோரும், அந்த மகாநாட்டில் பிரசன்னமா யிருந்தார்கள். எல்லோருக்கும் சம்மதமான தீர்மானமொன்றை மகாநாடு நிறைவேற்றி வைத்தது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு வைஸிராயின் அறிவிப்பை மகாநாடு ஏற்றுக்கொள்வதாகத் தீர்மானம் வரையப்பட்டது. குறிப்பிட்ட நிபந்தனைகள் அத்தியாவசியமென்றும், அவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலொழிய மீதி விஷயங்களை ஒத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கத்தார் இந்த நிபந்தனைகளை யேற்றுக்கொண்டால், தலைவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கத் தயார் என்றும் அறிவிக்கப்பட்டது. நிபந்தனைகள் அர்த்த புஷ்டியானவைதான். அவைகளை அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டால், மகத்தான வித்தியாசம் ஏற்பட்டிருக்கும். நிபந்தனைகள் வருமாறு :—

(1) இந்தியாவுக்குப் பூரண குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் கொண்ட அரசியலை ஆதாரமாகக் கொண்டு, மகாநாட்டில் விவாதங்கள் அனைத்தும் செய்யப்படவேண்டும். (2) மகாநாட்டின் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் காங்கிரஸ்காரர்களா யிருக்க வேண்டும். (3) அரசியல கைதிகள் யாவரையும் விடுதலை செய்ய வேண்டும். (4) குடியேற்ற நாட்டு அரசியலைப்போல் கூடுமான வரையில் இந்திய அரசாங்கத்தின் நிர்வாகம் இப்பொழுது முதலே நடைபெறுதல் வேண்டும்.

பல வகையான கூட்டங்களின் பிரதிநிதிகள் இத்தகைய நிபந்தனைகளுடன் ஏகமனதுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது மகத்தான வெற்றிதான். காங்கிரஸ்படி கீழிறங்கிற்று. ஆனால், எல்லோரும் ஒத்துப் போனதைக் கணக்கிட்டுப் பார்த்தால் தீர்மானம் உயர்ந்ததென்றுதான் சொல்லவேண்டும். இந்தத் தீர்மானத்தில் ஒரு ஏமாற்றம் மட்டும் இருந்தது. இரண்டு கட்சிக்காரர்களும் இந்த நிபந்தனைகளை இருவித நோக்கங்களோடு ஒப்புக்கொண்டார்கள். ஒத்துழைப்புக்கு இவை இன்றியமையாதவை என்று காங்கிரஸ் வாதிகள் எண்ணினார்கள். இதுதான் காங்கிரஸின் மனப்பான்மை என்பதைப் பின்னே நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டங்களில் தெளிவாக விளக்கிக் காண்பித்தார்கள். மேலும் இந்த நிபந்தனைகளுக்கு அடுத்த காங்கிரஸ் வரையிலும்தான் காலத் தவணையும் கொடுக்கப்பட்டது. மிதவாதிகளோ, குடியேற்ற நாட்டு அந்தஸ்தை இந்தியாவின் லட்சியமாக அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டாலே போதும் என்ற மனப்பான்மை கொண்டவர்கள். ஒத்துழைப்பு, ஒத்துழையாமை என்ற சங்கடங்களே அவர்கள் மனதில் எழவில்லை. இந்த நிபந்தனைகளை அவர்கள் உண்மையான நிபந்தனைகளாகவும் கருதவில்லை. அரசாங்கத்தார் இவற்றை பூர்த்தி செய்யவில்லை. என்றாலும், நமது மிதவாத நண்பர்களும், பரஸ்பர ஒத்துழைப்பு வாதிகளும் தங்களுடைய அறிக்கைக்குத் துரோகம் செய்துவிட்டு, அரசாங்கத்தாரோடு பூரணமாக ஒத்துழைத்தார்கள். அரசாங்கத்தார், நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வில்லையே என்று ஆத்திரம் கொண்ட காங்கிரஸ்காரர்களைச் சிறைக்கு அனுப்பிய அரசாங்கத்தாரோடு அவர்கள் ஒத்துழைத்தார்கள். இவ்வாறு நடக்குமென்று எங்களில் பலருக்கு சந்தேகம் உண்டு. இந்த அளவில் நேருமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எப்பொழுதும் பகுத்தறிவு இல்லாமல், அரசாங்கத்தோடு ஒத்துழைப்பை நாடும் மிதவாதிகளுக்கு இந்த மகாநாட்டின் தீர்மானத்தினால், ஒருவகையாக மனம் மாறுமென்று, நாங்கள் எண்ணியிருந்தோம். மேலும், இந்த ராஜீத் தீர்மானத்தில் எங்களிற் பலருக்கு வெறுப்பு இருந்தாலும், காங்கிரஸில் பிளவு உண்டாக்க நாங்கள் விரும்பவில்லை.

காங்கிரஸை வலுவுடன் வைத்திருக்கவேண்டும் என்பது எங்களுடைய ஆசை. பெரியதொரு போராட்டத்தை எந்த நிமிஷமும் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். என

வே, காங்கிரஸுக்குள் பிளவு இருக்கக்கூடாது என்று தீர்மானம் கொண்டோம். தீர்மானத்தில் கண்ட நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என்பது நாடறிந்த சங்கதியாகும். எனவே, எங்களுடைய தீவிரக்கக்ஷிக்கு அதிகமான ஆதரவு ஏற்பட்டு, நாங்கள் காங்கிரஸுக்குள்ளே இருக்கும் மிதவாத மனப்பான்மை கொண்டவர்களைக்கூட எங்களுடன் சேர்த்துக்கொண்டு போகமுடியுமென்று எண்ணினோம். சில வாரங்கள்தானே கழியவேண்டும்! டிசம்பர் மாதமும், லாகூர் காங்கிரஸும் நெருங்கி வந்துகொண்டிருந்தன.

என்றாலும், இந்தக் கூட்டு அறிக்கை எங்களிற் சிலருக்குக் கசப்பு மாத்திரையாகத்தானிருந்தது. பூரண விடுதலையைச் சிறிது காலத்துக்குக்கூட, பரீக்ஷார்த்தமாகக்கூட விட்டுக் கொடுப்பது தவறாகும், ஆபத்துக்கிடமானதாகும். பூரண விடுதலையென்பதை பேரத்துக்குரிய ஒரு சரக்காக எண்ணுவது கூடாது. அது நாட்டின் சுவாசத்தைப் போன்ற ஒரு லக்ஷியம் என்பதை ஒருநாளும் மறக்கலாகாது. அது கிடைக்காவிட்டால், இந்தியாவில் திருப்தி இருக்கமுடியாது என்பதையும் விளக்கிக் காண்பித்திருக்க வேண்டும். எனவே, நான் தயங்கினேன். அறிக்கையில் கையெழுத்துப் போட மறுத்தேன். சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் கையெழுத்துச் செய்ய, திட்டமாக முடியாது என மறுத்து விட்டார்கள். ஆனால், முன்னால் பல தடவைகளில்போல் இப்பொழுதும், மறறவர்கள் கூறும் சமாதானத்தை ஒப்புக்கொண்டு இந்த அறிக்கையிலும் கையெழுத்துப் போட்டுவிட்டு, மனத்துயரத்துடன் திரும்பிவந்தேன். காங்கிரஸ் தலைமைப் பதவியினின்றும் விலகிக்கொள்வது, என்று எண்ணி மறு நாள் காலையில் காந்திஜீக்கு ஒரு கடிதம் எழுதினேன். எனக்கு மனக் கலக்கம் ஏற்பட்டபோதிலும், காங்கிரஸ் தலைமைப் பதவியினின்று விலகிக்கொள்ள பூராவும் எண்ணமுமில்லை. காந்திஜீ யிடமிருந்து ஒரு ஆறுதலான கடிதம் எனக்குக் கிடைத்தது. மூன்றுநாள் யோசித்தேன். முடிவில், கலக்கம் சிறிது நீங்கிற்று.

லாகூர் காங்கிரஸ் கூடுவதற்கு, சிறிது காலமுன்னர் அரசாங்கத்துக்கும் காங்கிரஸுக்கும ஒற்றுமை ஏற்பட வழி உண்டா என்று கடைசியாக ஒருதரம் முயற்சிசெய்து பாாத்தார்கள். வைஸ்ராய் இர்வின் பிரபுவோடு பேட்டியொன்று

ஏற்பாடுசெய்யப்பட்டது. இந்த ஏற்பாடு யாருடைய வேலை என்று எனக்குத் தெரியாது. அநேகமாக இது விட்டல்பாய் படேலின் முயற்சியாகத்தா னிருக்கலாமென்று கருதுகிறேன். காங்கிரசின் சார்பாக காந்திஜீயும், எனது தகப்பனாரும் பேட்டியில் பிரசன்னமாய் இருந்தனர். ஜின்னா, ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ, சட்டசபைத் தலைவர் படேல் இவர்களும் பிரசன்னமாயிருந்தார்கள் என்று நினைக்கிறேன். பேட்டியால் ஒரு பயனும் ஏற்படவில்லை. ஒற்றுமைக்கு வழி இல்லை. அரசாங்கமும் காங்கிரசும் இரண்டும் இரண்டு கரைகளில் இருந்தன. கல்கத்தா காங்கிரசில் கொடுத்த ஒரு வருஷத் தவணை நெருங்கிக்கொண்டு வந்தது. காங்கிரசின் லட்சியம் பூரண விடுதலைதான் என்று கடைசியாக தெரிவித்துக் கொள்ள வேண்டியகாலம் வந்துவிட்டது. பூரண விடுதலையை அடைவதற்கு, தக்க சாதனங்களைப்பற்றி யோசிக்கவேண்டிய தேவையும் நெருங்கிவிட்டது.

லாகூர் காங்கிரசுக்கு இரண்டொருவாரங்களுக்கு முன்பு, வேறு துறையில் முக்கியமான அலுவல் ஒன்றை நான் கவனிக்கவேண்டி யிருந்தது. அகில இந்தியத் தொழில் சங்கக் காங்கிரஸ் நாகபுரியில் கூட விருந்தது. அதற்கு அந்த ஆண்டுத் தலைவன் நான் ஆனபடியால், காங்கிரஸில் தலைமை வகிக்க வேண்டியதாயிற்று. இந்திய தேசீயக் காங்கிரசிலும் அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸிலும் அடுத்தடுத்து இரண்டொரு வாரங்களுக்குள் ஒரே பேர்வழி தலைமைவகிப்பதென்பது சாதாரண நிகழ்ச்சி அல்ல. இரண்டு காங்கிரஸ்களையும் ஒன்று சேர்த்து தேசவிடுதலைக்காகவும், அபேதவாதத் திட்டத்துக்காகவும் அவைகளைப் போராடச் செய்யவேண்டும என்பது என்னுடைய ஆசையாகும். அது வீணான ஆசையோ என்று சந்தேகப்படுவதுண்டு. ஏனெனில், தேசீயத்தை ஒருவாறு விடத்துணிந்தாலொழிய அபேதவாதம் சாத்தியமல்ல. இந்திய தேசீயக் காங்கிரஸ் அபேதவாதக் கொள்கையை ஏற்காவிட்டாலும், புரட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்டது. தேசத்திலே அது ஒன்றுதான் வலுவான அமைப்பாகும். எனவே தொழிலாளர் சங்கங்கள், காங்கிரஸோடு ஒத்துழைத்து உதவி செய்யத்தான் வேண்டும். ஆனால் தொழிலாளர் சங்கம் தங்களது லட்சியத்தையும் திட்டத்தையும காங்கிரஸில் கலக்காமல் தனியாக வைத்துக் கொண்டிருக்கவேண்டும். போராட்டம் நடைபெற்றால், காங்கி

ரஸுக்கு சமூகப் பொருளாதாரத் துறைகளிலும் தீவிரமான புரட்சி நோக்கம் உண்டாகக்கூடும் என்று எண்ணினேன். சென்ற சில ஆண்டுகளாக காங்கிரஸின் போக்கு கிராமங்களை நோக்கியே சென்று வந்தது. குடியானவர்களின் செழிப்பையே காங்கிரஸ் தனது லட்சியமாகக் கொண்டிருந்தது. இந்த நோக்கம் வலுவடையப் பெறுமாகில், காங்கிரஸ் குடியானவர்களின் மகத்தான அமைப்பாக மாறிவிடக்கூடும். ஐக்கிய மாகாண ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளிலே பெரும்பான்மையாக இருந்தவர்கள் குடியானவர்கள்தான். இவர்களை நடத்தியவர்கள் நடுத்தர வகுப்பைச்சேர்ந்த அறிவாளிகள்.

இந்திய காங்கிரஸில் கிராமத்து விவசாயிகளும் பட்டினத்து தொழிலாளர்களும் ஏராளமாகக் கலந்து கொண்டு, அவர்களுக்குள் போட்டி ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். ஆனால் அந்த சந்தர்ப்பம் விரைவில் நேரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இப்பொழுது காங்கிரஸை நடத்தி வருபவர்கள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நகரவாசிகள். தேசம் விடுதலைபெறுமளவும் தேசீயக்கொள்கைதான் தலை தூக்கி நிற்கும். தேசீயத்திற்குத் தான் நாட்டிலே ஏராளமாக ஆதரவு இருக்கும். என்றாலும், காங்கிரஸைத் தொழிலாளர்களுக்கு நெருங்கிவரும்படியாகச் செய்ய வேண்டியது அவசியமென்று தோன்றிற்று. இந்தக் கருத்தைக் கொண்டு, மாகாணத் தொழிலாளர் சங்கத்திலிருந்து மாகாண காங்கிரஸ் கமிட்டிக்குப்பிரதிநிதிகள் அனுப்பும்படியாககேட்டுக் கொண்டோம். மேலும் காங்கிரஸ்காரர்களில் அநேகர் தொழிலாளர்களின் அலுவல்களில் சிறப்பாக கலந்துகொண்டிருந்தார்கள். ஆனால் தொழிலாளர்களுள் தீவிரக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அகில இந்திய காங்கிரஸில் சேர்ந்துகொள்ள விரும்பவில்லை. அவர்களுக்கு காங்கிரஸ் தலைவர்களிடம் நம்பிக்கையில்லை. காங்கிரஸின் நோக்கம் பிற்போக்கானது என்றும் அது தனவந்தர்களுக்கு சாதகமானதென்றும் இவர்கள் கருதினார்கள். காங்கிரஸ் தேசீயக்கொள்கையில் பற்றுக்கொண்ட ஒரு அமைப்பு. ஆதலால், தொழிலாளர்களது பார்வையிலே இவ்வாறு படுவது நியாயந்தான். 1929-ம் வருஷம் முழுதும் இந்தியாவிலிருந்த தொழிற்சங்கங்கள் யாவும் கலக்கமுற்றுக் கிடந்தன. தொழிலாளர்களின் நிலைமையைப்பற்றி விசாரணை செய்ய, விட்லி கமிஷன் என்று ஒரு ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டது. தொழிலாளர்களுள் தீவிரக்கட்சியார் கமிஷனைப்

பகிஷ்கரிக்க வேண்டும் என்று எண்ணினார்கள். மற்றயக் கட்சியார் ஒத்துழைப்புக்குச் சாதகமாக விருந்தனர். நிதானக்கட்சியை சேர்ந்த சில தலைவர்களுக்கு கமிஷனில், அங்கத்தினர் பதவி அளிக்கப் பெற்றது. என் சம்பந்தப்பட்ட வரையிலும், தீவிரக்கட்சியாருடைய தீர்மானந்தான் எனக்குப் பிடித்தது. காங்கிரஸிலும் இந்தக் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்திருந்தார்கள். பெரியதொரு போராட்டத்தைத் துவக்கி நடத்திவைக்கும் தறுவாயில், உத்தியோக முறையில் தோன்றிய கமிஷன்களோடு ஒத்துழைப்பது அபத்தமாகக் காணப்பட்டது.

நாகபுரியில் கூடிய தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் விட்லி கமிஷனைப் பகிஷ்கரிப்பதா வேண்டாமா என்ற பிரச்னையும், இன்னும் சில விஷயங்களும் தீவிரமான வாதத்துக்குரியவைகளாக ஆகிவிட்டன. இந்தப்பிரச்னைகளில் தீவிரக் கட்சியார் வெற்றிபெற்றார்கள். இந்த காங்கிரஸில் நான் ஒரு முக்கியஸ்தனுகவே நடந்துகொள்ளவில்லை. தொழிலாளர் உலகத்துக்கு நான் புதியவன். வழி புரியவில்லை. எனவே சிறிது தயங்கினேன். பொதுவாக, தீவிரக்கட்சியாருக்கு சாதகமாக எனது கருத்துக்களைத் தெரிவித்தேன். ஆனால் எந்தக் கட்சியோடும் சேர்ந்துகொள்ளவில்லை. பட்சபாதமில்லாத தலைவன் என்ற முறையில் நடந்துகொண்டேன். தொழில் காங்கிரஸிற்கு வழிகாட்டும் தலைவனாக நடந்து கொள்ளவில்லை என்றாலும், தொழிலாளர் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. புதிதாக ஒரு மிதவாதக்கக்ஷி தோன்றிற்று. இதை நான் எந்த வகையிலும் தடுக்கமுடியாமல், பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. மிதவாதக்கூட்டத்தார், தொழிலாளர் காங்கிரசிலிருந்து விலகியிருக்கக்கூடாதென்பது என் கருத்தாகும். என்றாலும் அவர்களுக்கு ஆத்திரத்தை யுண்டுபண்ணி, அவர்களைக் காங்கிரஸிலிருந்து விலகும்படி செய்வதற்குத் தீவிரக்கட்சியின் தலைவர்கள் என்னென்னவோ செய்துவிட்டார்கள். இந்த இரண்டு கட்சிகளுக்கு மிடையே, மத்தியக் கூட்டம் ஒன்று திக்கற்ற நிலைமையில் நின்று தவித்துக்கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தை தலைமை வகித்து சரியான காரியமுறையை யாராவது ஒரு தலைவர் வகுத்திருப்பாராகில் இரண்டு கூட்டங்களின் ஆத்திரத்தையும் அடக்கி பிளவில்லாமல் செய்திருக்கக்கூடும். பிளவு நேர்ந்திருக்குமாயினும் பின்னர் நேர்ந்த கேவலமான விளைவுகள் நேர்ந்திருக்கமாட்டா.

இப்பிளவினால் இந்தியாவில் தொழிலாளர் சங்க இயக்கம் பலமாக அடிபட்டு வீழ்ந்தது. அதினின்றும் மூர்ச்சை தெளிந்து, இன்னும் அது மேலெழவில்லை. தொழிலாளர்களின் தீவிரக்கட்சிக்கு விரோதமாக, அரசாங்கத்தார் ஏற்கனவே போர் தொடுத்திருந்தார்கள். அந்தப்போரில் முதல் சம்பவம் மீரட் சதி வழக்காகும். இந்தப் போர் நீடித்துக்கொண்டே போயிற்று. அந்தத் தருணந்தான் தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்வதற்கு நல்லதருணமென்று முதலாளிகளும் எண்ணினார்கள். 1929-30-ல் உலகப் பொருளாதார மந்தம் ஆரம்பித்துவிட்டது. இதனாலும், நாலாபக்கங்களிலிருந்தும் தாக்கப்பட்டதாலும், தங்களுடைய சங்கங்கள் சீர்குலைந்து போனதாலும், இந்தியத் தொழிலாளர்களின் கஷ்டங்களைச் சொல்லமுடியாது. தாங்கள் நாளுக்குநாள் சீர்குலைந்து போவதைப் பார்த்துக்கொண்டே இருந்தும் அதைத் தடுக்கமுடியாத திக்கற்றநிலைமைக்கு வந்துவிட்டார்கள். அடுத்த இரண்டொரு வருஷங்களில் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் மற்றுமோர் பிளவு ஏற்பட்டது. இந்தத்தடவை தொழில் காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்கள் சமதர்மிகள். இந்தியாவிலே இப்பொழுது மூன்று வகைத் தொழிலாளர் கூட்டங்கள் ஏற்பட்டன. மிதவாதக் கூட்டம், சமதர்மக் கூட்டம், மற்றையக் கூட்டம். நடைமுறையிலே அவைகள் யாவும் பலவீனமாய் இருந்தன. அவைகளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவைகளுடைய பரஸ்பர சச்சரவுகளினால், சாதாரணத் தொழிலாளர்கள் அலுத்துப்போனார்கள். இந்தச் சச்சரவிலே நான் கலந்துகொள்ளவில்லை. 1930-ம் வருடம் முதல், நான் அநேகமாக சிறையிலேயே இருந்தேன். வெளியே இருந்த சிறிது காலத்திலும் இந்தக் கூட்டங்களுக்கிடையே ஒற்றுமை உண்டாக்க முயற்சிகள் செய்யப்பட்டுவருவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் முயற்சிகள் பலிக்கவில்லை. ரயில்வேத் தொழிலாளர்கள், மிதவாதக் கூட்டச் சங்கங்களில் சேர்ந்து கொண்டு, அவைகளை வலுப்படுத்திவிட்டார்கள். இந்தச் சங்கங்களை அரசாங்கத்தார் அங்கீகாரம் செய்தார்கள். இவர்கள் செய்த சிபார்சுகளை இந்திய அரசாங்கத்தார் ஜினிவா சர்வதேசத் தொழிலாளர் மகாநாட்டுக்கு அனுப்பிவைப்பார்கள். இந்த லாபம் மிதவாதச் சங்கங்களுக்கு ஏற்பட்டது. மேலும், ஜினிவாவுக்குப் போக வசதி ஏற்பட்டதால், தொழிலாளர் தலைவர்களிற் சிலர் மிதவாதச் சங்கங்களோடு சேர்ந்துகொண்டு, தங்கள் சங்கங்களையும் அவைகளுடன் இணைத்துக் கொண்டார்கள்.

# XXVIII

## பூரணவிடுதலைத் தீர்மானமும், அதன பினனரும

லாகூர் காங்கிரஸ் நடவடிக்கைகள் என் ஞாபகத்தில் தெளிவாக இன்றும் இருக்கின்றன. காங்கிரஸில் நான் முக்கியஸ்தனாயிருந்தபடியால், அத்தகைய ஞாபகம் இருக்கத்தானே செய்யும்? அந்த நாட்களில் எனக்கிருந்த உணர்ச்சிப் பெருக்கைப்பற்றி சிந்திப்பதற்கு எனக்கு சில சமயங்களில் விருப்பம் உண்டாகின்றது. லாகூர் ஜனங்கள் எனக்கு அளித்த கம்பீரமான வரவேற்பை, நான் ஒரு நாளும் மறக்கமுடியாது. இந்த வரவேற்பு எனக்குத் தனி மனிதன் என்ற முறையில் அளிக்கப்படவில்லை யென்று எனக்குத்தெரியும். இந்த வரவேற்பு மகத்தான லட்சியத்தைக் காண்பிக்கும் அறிகுறியாக இருந்தாலும், ஒருமனிதன் அத்தகைய அறிகுறியாக ஒவ்வொரு சமயத்தில் ஆவானேயாகில், அதனால் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுமல்லவா? என்னுடைய சொந்த மகிழ்ச்சி ஒரு பெரியகாரியமல்ல. மகத்தான பிரச்னைகள் காத்துக்கொண்டிருந்தன. அவைகளை நினைத்துப் பார்த்தால், திகில் உண்டாகும்போல் இருந்தது. வெறும் கருத்துக்களையோ அல்லது ஆக்ஷேபணைகளையோ தெரிவிக்கும்படியான தீர்மானங்களை, நாங்கள் செய்வதாக உத்தேசம் கொள்ளவில்லை. நாட்டைப் போராட்டத்துக்கு அழைக்கும்படியான தீர்மானம் செய்யவிருந்தோம். கோடானுகோடி மக்களின் வாழ்க்கையை அடியோடு மாற்றும்படியான காரியம் செய்யவிருந்தோம். எதிர்காலத்தில், எங்களுக்கும் எங்கள் நாட்டுக்கும் என்ன நேருமோ? அதை யாரும் சோதிடம் சொல்ல முடியாது. உடனே வரப்போவது போராட்டம் என்று மட்டும் தெரியும். அதிலே எங்களுக்கும் எங்களைச் சேர்ந்தவர்களுக்கும் துன்பம்தான் வரப்போகின்றது என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். இந்த எண்ணங்களினால், உற்சாகத்தின் மத்தியில் பணிவும் உண்டாயிற்று. எங்களுடைய பொறுப்பைப்பற்றி, தீவிரமாகவும் தெளிவாகவும், சிந்திக்கலாயிற்று. காங்கிரஸில் நிறைவேறும் தீர்மானத்துக்கு கொடுக்கும் ஒவ்வொரு வோட்டின் அர்த்தம் "சுகம் துறக்கவேண்டும். இவ்வாழ்க்கையின் இன்பம் இழக்கவேண்டும். நண்பர்களுடன்

சல்லாபிக்கும் மகிழ்ச்சி இனிகிடையாது. இரவும் பகலும் தனித்து வாழவேண்டும். உடலிலும் மனதிலும் துன்பத்தை ஏற்கவேண்டும்" என்று உணர்ந்தோம்.

பூரண விடுதலையைப்பற்றி முக்கிய தீர்மானமும், நம்முடைய விடுதலைப் போராட்டத்தை நடத்தும்செயல் முறையை விளக்கிக்காட்டும் தீர்மானமும், அநேகமாக ஏக மனதுடன் நிறைவேறின என்று சொல்லலாம். பல ஆயிரங்களில் சிலரே விரோதமாக வாக்குக் கொடுத்தார்கள். திருத்தம் ஒன்றைப் பற்றிதான் காங்கிரசில் வோட் எடுக்கப்பட்டது. அது தோற்றுப்போயிற்று. முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேறிய நேரம் 1919-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி நடுநிசி யென்பது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. அதோடு புதிய ஆண்டு, பழைய வருஷத்தை உதைத்துத் தள்ளிவிட்டு, கம்பீரமாய் அந்த இடத்தில் புகுந்தது. கல்கத்தா காங்கிரஸ் கொடுத்திருந்த ஒரு வருஷத்தவணை முடிந்ததும், புதிய தீர்மானம் செய்யப்பட்டு போராட்டத்துக்கு ஆயத்தமானதும் ஒன்றாக இருந்தது. தீர்மானம் செய்தாகி விட்டது. ஆனால் போராட்டத்தை எவ்வாறு, எப்பொழுது துவக்குவது? என்று யாருக்கும் விளங்கவே இல்லை. போராட்டத்துக்கு திட்டத்தை வகுத்து அதை அமுலுக்குக் கொண்டுவரும்படியாக, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனாலும், உண்மையான முடிவு காந்திஜீயின் கையில்தான் இருந்தது என்பது எங்களுக்கு எல்லோருக்கும் நன்றாகத்தெரியும்.

எல்லைப்புற மாகாணத்திலிருந்து ஏராளமான ஜனங்கள் லாகூர் காங்கிரஸுக்கு வந்திருந்தனர். தனிப்பிரதிநிதிகள் ஆண்டுதோறும் காங்கிரஸுக்கு வருவதுண்டு. சென்றசில வருடங்களாக, கான் அப்துல் காபர்கான் காங்கிரஸில் பிரசன்னமாய் இருந்து எங்கள் யோசனைகளில் கலந்து கொண்டார். லாகூரில் முதன்முதலாக எல்லைப்புறத்திலிருந்து ஊக்கமுள்ள இளைஞர்களிற் பலர் வந்து அகில இந்திய அரசியல்பிரவாகத்தில் கலந்துகொண்டார்கள். அவர்களுடைய ராஜீயப்பயிற்சி இல்லாத மனத்தில் புதிய உணர்ச்சி ஏற்பட்டது. இந்தியாவின் விடுதலைக்காக உற்சாகத்துடன் தாங்களும் ஒற்றுமையுடன் போராடவேண்டும் என்ற உற்சாகத்துடன் அவர்கள் திரும்பிப் போனார்கள். அவர்கள் கபடமற்ற சுபாவம்

கொண்டவர்கள். ஆனால், காரியத்திலே சூரர்கள். அவர்கள் அதிகமாகப் பேசுவதில்லை. சொற்களுக்கும் வாக்கியங்களுக்கும் அனாவசியமாக வியாக்கியானம் செய்துகொண்டு, காலத்தைக் கடத்துவதில்லை. திரும்பிப்போனதும் அவர்கள் தங்கள் ஜனங்களுக்கு மத்தியிலே புதிய கருத்துகளைப் பிரசாரம்செய்து, அவர்களுக்குள் கட்டுப்பாட்டை உண்டாக்க முயன்றார்கள். முயற்சியில் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆண்களும் பெண்களும எல்லைப்புறங்களில் போட்டிபோட்டுக் கொண்டு காங்கிரஸ் அமைப்பில் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் தேசீயசபையில் கடைசியாக வந்தபோதிலும் 1930-ம் வருடத்தில் துவங்கிய இந்திய விடுதலைப் போராட்டத்திலும் அதன் பின்னரும் எல்லைப்புற வாசிகள் இயற்றிய சிறப்பான தொண்டைப் புகழாமலிருக்க முடியாது.

லாகூர் காங்கிரஸ் முடிந்தது. அதன் ஆணைக்குக் கட்டுப்பட்டு மாகாணச் சட்டசபை காங்கிரஸ் மெம்பர்களும் இந்தியா சட்டசபை காங்கிரஸ் மெம்பர்களும் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று என்னுடைய தகப்பனார் தாக்கீது அனுப்பினார். அநேகமாக எல்லோரும் வெளியேறிவிட்டார்கள். ஒரு சிலர் மட்டும் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிக்கு விரோதமாக வெளியேறவில்லை. எதிர்காலத்தைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெளிவாகத் தெரியவில்லை. காங்கிரஸ் தொண்டர்களிடம் ஏராளமான உற்சாகம் இருந்தது. ஆனால், கடுமையான வேலைத் திட்டத்தைக் காங்கிரஸில் நிறைவேற்றி வைத்த பின்னர் அதைப்பற்றி நாட்டில் எத்தகைய உற்சாகம் இருக்குமென்று ஒருவருக்கும தெரியவில்லை. நாங்களோ எங்களுடைய எல்லாவற்றையும் துறந்துவிட்டு, போராட்டத்துக்கு முனைந்து விட்டோம். இனித் திரும்பிப் பார்க்க முடியாது. ஆனால் நாங்கள் பிரயாணம் செய்யவேண்டிய பிரதேசம் முற்றிலும் புதிதாகவிருந்தது. நாட்டின் மனப்பான்மை எப்படியிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளவும், எங்களுடைய போராட்டத்துக்கு ஆரம்பம் செய்வதற்காகவும்* ஜனவரி மாதம் 26-ம் தேதியை பூரண விடுதலை நாளாகக் கொண்டாடும்படி நாட்டுக்கு அறிவிக்கப்பட்டது. அன்றைக்கு பூரண விடுதலை விரதத்தை, தேச மக்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

---

* "சுதந்திரச் சங்கு"ம் அன்று முதலே தோன்றியது.

எங்களுடைய திட்டத்தைப்பற்றி சந்தேகமும், மனக் குழப்பமும் இருந்தபோதிலும், உற்சாக மேலீட்டாலும், ஏதாவது பயனுள்ள காரியம் ஒன்றைச் செய்யவேண்டுமென்ற ஆசையாலும் பின் வரப்போகும் நிகழ்ச்சிகளுக்காக ஆவலுடன் காத்திருந்தோம். ஜனவரி மாதம ஆரம்பத்தில், நான் அலகாபாத்திலிருந்தேன். தகப்பனுரோ அநேகமாக அலகபாத்திற்கு வெளியே இருந்தார். அந்த ஆண்டு கும்பமேளா வருஷம் என்று நினைக்கிறேன். பிரயாகை க்ஷேத்திரமாகிய அலகாபாத்துக்கு லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் இடைவிடாமல் வந்துகொண்டே இருந்தார்கள். அவர்களில் எல்லா வகைப்பட்ட ஜனங்களும் இருந்தார்கள். விவசாயிகள், கூலிக்காரர்கள், கடைக்காரர்கள், கொத்தர்கள், வியாபாரிகள், முதலாளிகள், வக்கீல் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள், இவர்கள் யாவரும் வந்தார்கள். அதாவது ஹிந்து சமூகத்தின் ஒருபாகம் திரண்டு வந்ததுபோல் தோன்றிற்று. இந்தப் பெரிய திரளான கூட்டங்கள் ஆற்றுக்குப்போய் நீராடித் திரும்பிவருவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். "சட்ட மறுப்பு செய்ய வாருங்கள்" என்று அழைத்தால், இவர்கள் என்ன செய்வார்கள் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அவர்களில் எத்தனை பேருக்கு லாகூர் காங்கிரசின் தீர்மானங்கள் தெரியும்?

தூய்மையான கங்கையிலே, அவர்களும் அவர்களுடைய மூதாதைகளும் எத்தனை ஆயிர வருஷங்களாக நீராடி வருகின்றார்கள்? கங்கைக்குச் செல்லவேண்டும் என்ற நம்பிக்கை அவர்களிடம் எவ்வளவு காலமாக இருந்திருக்கிறது? இந்த விஷயத்தில் அவர்கள் காண்பிக்கும் ஊக்கத்தில் சிறிதளவை அரசியல் கிளர்ச்சியில் திருப்பி தங்களுடைய வாழ்க்கையை ஏன் எல்லாத் துறைகளிலும செழிக்கச் செய்து கொள்ளக் கூடாது? ஒருக்கால் அவர்களுடைய மனது, மதத்திலே ஊடுருவிச் சென்று, வேறு எதையும்பற்றி சிந்தனை செய்வதற்கு இடம் கொடாமல்போய்விட்டதா? ஆனுல்,பண்டையகாலத்திலிருந்து வந்த இந்தக் கருத்துகள், காலச் சக்கரத்தாலும் பிரசாரத்தாலும் பல்வேறு வகைகளில் கலக்கப்பட்டு வருகின்றன வென்பதும் எனக்குத் தெரியும். தெளிவில்லாத பல ஆசைகளின் கலக்கத்தினுல், சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக, இந்தியாவில் கிளர்ச்சிகள் தோன்றி இந்தியாவின் தோற்றத்தையே அடியோடு மாற்றி விடவில்லையா? புதிய

நோக்கங்கள் வேருன்றி வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. புதிய ஆசைகள் பரவிவருகின்றன என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் புது கருத்துகள் எவ்வளவு தூரம் பரவி இருக்கின்றன? அவைகளுடைய வலு என்ன? ஒன்றுபட்ட காரியத்திற்கு அவைகள் எவ்வளவு வரையில் சக்திகொடுக்க முடியும்? மக்கள் எவ்வளவுதூரம் போராட்டத்தை நடத்தி, அதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? இந்தக் கேள்விகளுக்கு சரியான பதில் கிடைப்பதற்கு வழியில்லை.

திரளான யாத்ரீகர்கள் எங்கள் வீடு தேடிவந்தனர். க்ஷேத்திர ஸ்தலங்களில் ஒன்முகிய பரத்வாஜ் என்ற இடத்துக்கு அருகாமையில் எங்கள் வீடு சௌகரியமாய் அமைந்து நிற்கின்றது. பண்டைகாலத்திலே இந்த இடத்தில் பல்கலைக் கழகம் ஒன்று இருந்ததாம். மேளாக் காலத்தில் தங்கு தடையில்லாமல் சூரியோதயத்திலிருந்து அஸ்தமனம் வரையிலும் யாத்ரீகர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருப்பார்கள். பெரிய தலைவர்களை, முக்கியமாக என் தகப்பனுரைப் பார்க்கலாமென்ற ஆசையுடன் அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். இவ்வாறு எங்கள் வீட்டுக்கு வந்தவர்களில் பெரும்பான்மையோர் அரசியல் கிளர்ச்சியில் பற்றுள்ளவர்கள். அவர்கள் காங்கிரஸைப்பற்றிக் கேள்விகள் கேட்பார்கள். காங்கிரஸ் என்ன தீர்மானம் செய்திருக்கிறது? இனிமேல் என்ன நேரும்? என்று கேட்பார்கள். பொருளாதாரத் துறையில் அவர்களுக்கு அதிகத் தொல்லைகள் இருந்தமையால், அவைகளைப் போக்கிக்கொள்ள என்ன செய்ய வேண்டுமென்று கேட்பார்கள். காங்கிரஸின் ஜயகோஷங்கள் அவர்களுக்கு நன்முகத் தெரியும். எனவே, நாள் முழுதும் எங்கள் வீட்டிலே "ஜேக்கள்" தொனித்துக்கொண்டே இருக்கும்.

முதலில் இருபது அல்லது ஐம்பது பேர்கள் சிறுசிறு கூட்டங்களாக வந்துகொண்டிருக்கையில், அவர்களிடம் சில வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தேன். ஆனால் இவ்வாறு அவர்களிடம் பேசுவது சாத்தியமில்லாமற் போயிற்று. ஏனெனில், அவர்கள் நூற்றுக்கணக்கில் இடைவிடாமல் வர ஆரம்பித்தார்கள். ஆகவே, அவர்கள் வரும்பொழுது மௌனமாக அவர்களுக்கு நமஸ்காரம் செய்வேன்; இதுவும் சிறிது நேரத்தில் சாத்தியமில்லாமற் போயிற்று. பின்னர் ஒளிந்துகொள்ள முயன்றேன்; அதுவும் வீணுகப் போயிற்று. கூப்பாடுகள் வலுத்துப்போயின. வீட்டுக்கூடங்களில் ஜனங்கள் தாராள

-மாக வர ஆரம்பித்து விட்டார்கள். ஒவ்வொரு ஜன்னல்வழியாகவும் ஜனங்கள் உற்றுப்பார்க்க முயற்சி செய்தார்கள். இந்த நிலைமையில் வேலை செய்யவோ, பேசவோ, சாப்பிடவோ அல்லது வேறு எதையும் செய்யவோ சாத்தியமில்லாமற் போயிற்று இது எங்களுக்குத் தொந்திரவு உண்டாக்கியதும் தவிர, மிகுந்த கோபத்தையும் உண்டாக்கிற்று. என்றாலும் இவர்கள் சாது ஜனங்கள். இவர்களுடைய ஒளி நிறைந்த கண்களிலே அன்பு திகழ்ந்தது. பல தலைமுறைகளாக இவர்கள் வறுமையிலும் துயரத்திலும் வாழ்ந்துவருகின்றார்கள். என்றாலும் இவர்களுடைய நன்றியறிதலும் அன்பும் குறைவதேயில்லை. அவர்களது அன்புக்கு மாற்றாக அவர்கள் எதையும் மற்றவர்களிடமிருந்து கேட்கவில்லை. சகோதர பாவத்தையும் அனுதாபத்தையும் தான் அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். இத்தகைய அன்பு நிறைவையும். பக்திப் பெருக்கையும் கண்டு தலைவணங்காமல் இருக்கமுடியாது.

எங்களுடைய அருமைத் தோழி ஒருவர், அந்தக் காலத்தில் எங்களுடன் வீட்டில் தங்கியிருந்தார். அந்த அம்மாளோடு ஐந்து நிமிஷ நேரம்கூடச் சமபாஷணை செய்யமுடியவில்லை. அடிக்கடி எழுந்திருந்து, வெளியே போய் கூட்டங்களுக்கு ஏதாவது சொல்லிவிட்டு வரவேண்டியிருந்தது. என்னுடைய பரிதாபமான நிலைமையைக்கண்டு, அவர் சிறிது கேலி செய்தார். பொது ஜனங்களிடம் என்னுடைய செல்வாக்கைக்கண்டு வியப்படைந்தார். உண்மையிலேயே ஜனங்கள் தேடிவந்தது தகப்பனாரை. அவர் வீட்டிலில்லாததால், அவர் வேலையை நான் செய்யவேண்டியிருந்தது. அந்த அம்மாள் திடீரென்று என்னைத் திரும்பிப் பார்த்து, இந்தப் பொது ஜன சன்மானத்தால் பெருமை யுண்டாகவில்லையா என்று கேட்டாள். பதில் சொல்ல நான் சிறிது தயங்கினேன். கேட்கத் தகாத கேள்வியை கேட்டுவிட்டோமோ என்று அந்த அம்மாள் எண்ணத்துவக்கினார். அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவருடைய கேள்வி எனக்குக் கொஞ்சங்கூட கஷ்டத்தை உண்டாக்கவில்லை. பதில் சொல்லுவது மட்டும் அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. எனது மனம் எங்கேயோ சென்றிருந்தது. எனது உணர்ச்சியின் போக்குகளை ஆராய்ந்து கொண்டிருந்தேன். பொது ஜனங்களுடன் திடீரென்று எனக்கு அளவற்ற செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது என்பது உண்மைதான். படித்தவர்கள் என்னைக் கொண்டாடுகிறார்

கள். இளைஞர்களும் யுவதிகளும் என்னை வீரனாகவே ஓரளவு மதிக்கின்றார்கள். என்னைப்பற்றி பாட்டுகள் பாடப்பட்டிருக்கின்றன. நம்பத்தகாத கட்டுக்கதைகள் விநோத விநோதமாகப் பரவிவருகின்றன. என் விரோதிகள் என்னை எதிர்க்கும் பொழுதுகூட, என்னுடைய திறமையையும் நல்லெண்ணத்தையும் புகழ்ந்து பேசுவதை ஒரு பாடமாகச் செய்துகொண்டு விட்டார்கள்.

இத்தகைய புகழால், துறவியோ அல்லது மனிதத் தன்மையை இழந்த பூதமோ தான் பாதிக்கப்படாமல் இருக்க முடியும். நான் இவ்விரண்டினத்தையும் சேர்ந்தவனல்ல. எனது புகழ் என்னுடையதலைக்கேறி, அதைக்கொஞ்சம் கிறுகிறுக்கச் செய்துவிட்டது. இதனால்எனக்கு நம்பிக்கையும் சக்தியும் உண்டாயின. இந்தத் தலைக்கனத்தினால், நான் சிறிதளவு சர்வாதிகாரியைப்போல நடந்துகொண்டதாக எனக்கு தோன்றிற்று. என்றாலும் என் கர்வம் மிதமிஞ்சிப் போய்விடவில்லை. கூடியவரையிலும் நான் புத்திசாலிதான் என்ற எண்ணம் எனக்கு எப்பொழுதும் உண்டு. என்னிடத்தில் கூழைக்கும்பிடு கிடையாது. என்னுடைய திறமை எந்தவிதத்திலும் அசாதாரணம் என்று நான் எண்ணியதில்லை. என்னுடைய குறைகள் யாவை என்பதும் எனக்குத் தெரியும். அடிக்கடி என்னையே நான் சோதனை செய்து வந்தமையால் நான் நிலைதடுமாறிப்போகவில்லை. கூடுமானவரையில் நிகழ்ச்சிகளை உள்ளபடியே விருப்பு வெறுப்பின்றி மதிப்பிட்டுக் கொண்டுவரப் பழக்கம் செய்துகொண்டிருந்தேன். செல்வாக்கு, நல்லவர்களுக்கும் புத்திசாலிகளுக்கும் மட்டும் தான் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. புகழ் உயர்குணத்தின் அடையாளமாக இருக்க வேண்டுமென்பது கிடையாது. தகாத பேர்வழிகளுக்குக்கூட செல்வாக்கு உண்டாவதை நாம் பார்க்கின்றோமல்லவா? எனக்கு செல்வாக்குக் கிடைத்தது எதனாலே? என்னுடைய திறமையினாலா அல்லது என்னுடைய குறைகளினாலா? தவிர எனக்கு எதற்காக செல்வாக்குக் கிடைக்கவேண்டும்? என்னுடைய புத்திசாலித்தனத்தாலும் பாண்டித்தியத்தினாலும் அல்ல. இவைகளால் ஒருவனுக்கு அநேகமாக மக்களிடையே செல்வாக்கு உண்டாவதில்லை. என்னுடைய தியாகங்களால் என்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில், இந்தியாவில் என்னைக்காட்டிலும் உயிர்போகிறவரையிலும் தியாகம்செய்தவர்கள் ஆயிரக்கணக்

கில் இருக்கிறார்கள். என் வீரப்பட்டம் முற்றிலும் பொய்ப் பட்டமாகும். வீரனைப்போல் நடிக்கும் ஆசையும் மிகக்கேவல மானது என்று நான் எண்ணுபவன். விசித்திர புருஷனு மல்ல. எனக்கு உடலிலும் உள்ளத்திலும் சிறிதளவு தைரியம் உண்டு என்பது உண்மைதான். அந்தத் தைரியத்துக்கு அஸ்தி வாரமாயிருப்பதுஎனது சொந்தத் தன்மையிலும், எனது ஜாதியிலும், தேசத்திலும் உள்ள பெருமையாகும். என்னை யாரும் எதையும் செய்யும்படி கட்டாயப் படுத்த முடியாது.

என் செல்வாக்கின் காரணம் என்னவென்ற கேள்விக்கு எனக்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. வேறுவித மாக இதை நான் ஆராயத் தொடங்கினேன். என்னையும் எனது தகப்பனாரைப் பற்றியும் பிடிவாதமாகப் பொய்க்கதை கள் சில பரப்பப்பட்டு வருகின்றன என்பதைக் கண்டேன். நாங்கள் எங்கள் துணிமணிகளை பாரிசுக்குச் சலவைக்காக அனுப்புவது வழக்கம் என்று சரடு திரிக்கப்பட்டு வந்தது. இதை நாங்கள் எத்தனையோ தடவைகளில் பொய் என்று ஆட்சேபித்திருக்கிறோம். இருந்தாலும் அது பிடிவாதமாக உயிர் பெற்றுக்கொண்டே வருகின்றது. இதைக் காட்டிலும் அபத்தமான ஒன்றைக் கற்பனை செய்துபார்க்கவே முடியாது. இத்தகைய, ஆடம்பர விரயமான மைனர் விளையாட்டில் யாரா வது ஒருவன் ஈடுபட்டிருப்பானாகில், அவனுக்கு முட்டாள் பட்டம் கொடுத்து தனி சன்மானம் செய்யவேண்டும். இன் னொரு வேடிக்கையான புரளி ஒன்று உண்டு. இப்பொழுது எட்டாவது எட்வர்ட்டு மன்னராக இருக்கும் வேல்ஸ் இள வரசரோடுகூட, நான் பள்ளிக்கூடத்தில் படித்ததாக மற்றோர் சரடு விடப்பட்டு வருகிறது. வேல்ஸ் இளவரசர் இந்தியா வுக்கு 1921-ம் ஆண்டில் விஜயம்செய்த பொழுது என்னைப் பார்க்கவேண்டு மென்று கூப்பிட்டனுப்பியதாகவும் விடுகதை கட்டினார்கள்! நான் அப்பொழுது சிறையிலிருந்தேன். உண் மையில், நான் வேல்ஸ் இளவரசரோடு எந்தப் பள்ளிக்கூடத் திலும் சேர்ந்து படித்ததேயில்லை. நான் அவரிடம் பேசியதே கிடையாது. அவரைச் சந்திக்கும் பாக்கியம் ஒருபொழுதும் எனக்கு ஏற்படவில்லை.

இத்தகைய பொய்க்கதைகளாலேயே மட்டும் எனக்கு கீர்த்தியும் செல்வாக்கும் ஏற்பட்டன என்று நான் சொல்ல வரவில்லை. செல்வாக்குக்கு இதைக்காட்டிலும் உறுதியான அஸ்திவாரம் இருந்திருக்கலாம். ஆனால், செல்வாக்கின் மெத்

த்தைக் கட்டிடங்கள் யாவும் இத்தகைய புரளிகளால் ஏற்பட்டன என்பதில் சந்தேகமில்லை. பெரிய பேர்வழிகளோடு பழகி, தாராளமாகச் செலவுசெய்து, இன்பசாகரத்தில் மூழ்கியிருப்பவர்கள், அவைகளைவிட்டு விட்டு தேசத்தொண்டு செய்கிறார்கள் என்ற கதை பரவினால், ஜனங்கள் உற்சாகங்கொள்ளத்தான் செய்வார்கள். துறவு மார்க்கத்தைக்கண்டு, இந்தியாவிலே எப்பொழுதுமே ஒருவகை ஆனந்தமடைவார்கள். துறவினால் வரும் கீர்த்தியில் எனக்கு அதிக மதிப்பில்லை. வெறும் துறவும் தியாகமும் எனக்குக் கவர்ச்சி அளிப்பதில்லை. நல்ல முயற்சியுடன் செயற்கரிய செயல்களைச் செய்வதே உயர்ந்ததென்று நான்கருதினேன். தியாகத்தையும், துறவையும் மனிதன் தனது லட்சியத்தை அடையப் பயிற்சிச் சாதனங்களாகமட்டும் கருத வேண்டுமென்பது என் எண்ணம். மகத்தான கருமங்களில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு, பிடிவாதமும் சகிப்புத் தன்மையும் இருக்கவேண்டும். எத்தகைய எதிர்ப்பு வந்து மோதினாலும், மனம் தளரலாகாது. ஆனால் துறவு மார்க்கத்தில் எனக்கு பிடித்தமே கிடையாது. இன்பத்தைக்கண்டு நடுங்குகிற உள்ளத்தில் எனக்குப் பெருமையில்லை. நான் பெரிதாக மதித்த எதையும் வேண்டுமென்று நான் தியாகம் செய்ததில்லை. ஒரு வேளை நான் சாதாரணமாக நினைக்கும் காரியங்களை மற்றவர்கள் தியாகமாக நினைக்கக்கூடும். எனது நண்பர் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லியாகவில்லை. ஜனங்கள் என்னைப் புகழ்கின்றார்களே அதனால் என் உள்ளத்தில் மகிழ்ச்சியும் கர்வமும் உண்டாகவில்லையா என்று கேட்டார். இந்தப் புகழ் எனக்குக் கஷ்டமாகவிருந்தது. அதைவிட்டு ஓட்டமெடுக்க, பல சமயங்களிலும் நான் விரும்பினேன். ஆனாலும இத்தகைய பாராட்டுதல் பழக்கமாகிவிட்டது. சில சமயங்களில் இந்தக் கும்பிடு இல்லாமற்போனால், எனக்கு வருத்தம் கூட உண்டாகும. இரண்டு வழிகளாலும் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. ஆனால் ஜனங்கள், என் சம்பந்தமாகக் காட்டிய வணக்கமும் குதூகலமும் என் உள்ளத்தில் பதுங்கிக் கிடந்த தேவையைப் பூர்த்திசெய்து விட்டனவென்று மொத்தத்தில் சொல்லவேண்டும்.

* *

நான், அவர்களிடம் செல்வாக்கு பெற்று அவர்களைச் செயலுக்குத் தூண்டமுடியும் என்ற எண்ணத்தினால், அவர்களுடைய இதயங்களின மேரில், நான் அதிகாரம் செலுத்தத் துவக்கினேன். என்னுடைய அதிகார ஆசையை இது

ஓரளவு திருப்தி செய்தது. ஆனால் அவர்கள் என்னைச் சும்மா விட்டுவிட்டார்களா? அவர்கள் என்னிடம் காண்பித்த அன்பினாலும், நம்பிக்கையாலும் என்னுடைய உள்ளத்தை மிகுதியும் கலக்கி; என்பேரில் அவர்கள் சூக்ஷ்மமாகக் கொடுங்கோல் ஆட்சியை நடத்த ஆரம்பித்தார்கள். நான் ஒரு வகையில் அகம்பாவி. தனித்து இருப்பதில் எனக்கு விருப்பமதிகம். என்றாலும் இந்த அகம்பாவம் மறைந்து அடிக்கடி கும்பலில் கரைந்துபோவேன். தனியே நான் சுவர்க்கத்துக்குப் போவதைக்காட்டிலும், இந்த ஜனங்களோடு சேர்ந்து நரகத்துக்குப் போவது உயர்ந்த வேலை என்று அச்சமயங்களில் கருதுவேன். இருந்தாலும், அவர்களுக்கும் எனக்குமிடையே இருந்த பெரிய வித்தியாசங்களால், நான் சதாகாலமும் அவர்களோடு சேர்ந்து, கலந்து போகமுடியவில்லை. எனக்கும் அவர்களுக்குமிடையே இருந்த இந்த உறவு என்னவென்பதை விளக்கிக்கொள்ள முடியாமல், ஆச்சரியத்தோடு அவர்களை நான் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். தேகத்திலே சதை எவ்வாறு தெரியாமல் வளருகிறதோ, அதுபோல இந்த அகம்பாவமும் மடிப்பு மடிப்பாக வளருகிறது. யாரிடம் இந்த அகம்பாவம் வளர்ந்து வருகிறதோ, அது தினசரி எவ்வளவு திரண்டுகொண்டே வருகிறதென்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. நல்லவேளையாக வாழ்க்கையில் அடிக்கடி சரியான அடிகள் விழுகின்றன. அவைகளால் இந்த அகம்பாவம் சிறிது குறையலாம்; அல்லது அடியோடு நசித்துப் போகலாம். இந்தியாவிலே சென்ற சில ஆண்டுகளாக எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைச் சொல்லிமுடியாது. வாழ்க்கை என்ற பள்ளிக்கூடம் எங்களுக்குச் சிறிது கஷ்டமாகவே இருந்தது. துன்பமென்ற 'உபாத்தியாயர்' எங்களிடமிருந்து கடுமையாக வேலை வாங்கிக்கொண்டு வந்தது.

வேறு வகையிலும் நான் பாக்கியசாலி. எனது தலை கனத்துப் போகாமல் விஷயங்களைக் கூடுமானவரையில் உள்ளபடியே நான் மதித்துப் பார்ப்பதற்கு எனக்கு துணை நின்றவர்கள் பலர். முக்கியமாக, இந்த அமசத்தில், எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே நான் பொக்கிஷமாகக் கருதினேன். அருமையான தோழர்களும் நண்பர்களும என்னை அடிக்கடி திருத்திக்கொண்டே வந்தார்கள். பொதுஜன விழாக்கள், நகரசபைகளின் உபசாரப் பத்திரங்கள், மற்றும் வேறு பொது ஸ்தாபனங்கள் அளிக்கும வரவேற்புகள், ஊர்வலங்கள் முத

வியவைகளால் எனக்கு மனவேதனையும், வெட்கமும் உண்டாவதுண்டு. உபசாரப் பத்திரங்களில், என்னைப்பற்றி எவ்வளவோ மிகைப்படக் கூறப்பட்டிருக்கும். தடபுடலாகச் சொற்களைத் தூவி, வாக்கியங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அதைப் படிக்கும்பொழுது எல்லோரும் மௌனமாய் இருப்பார்கள். அந்த சமயத்தில் கலகலவென்று சிரிக்கவேண்டுமென்ற அடக்கமுடியாத ஆசை எனக்கு உண்டாகும். நாக்கை நீட்டிக் கேலிசெய்யலாமா வென்று தோன்றும். தலைகீழாக நிற்கலாமாவென நினைப்பேன். இவ்வளவு பொய்யாக எழுதப்பட்ட உபசாரப் பத்திரத்தை மெய்யென்று கொண்டு, ஜனங்களெல்லோரும் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களே, அவர்களை இவ்வாறு செய்து தாக்கி விழிப்படையச் செய்யலாமா என்று எனக்குத் தோன்றும். நல்ல வேளையாக என்னுடைய சொந்த திருப்திக்காகவும், இந்தியாவின் பொதுஜன வாழ்வின் கம்பீரத்துக்காகவும் இத்தகைய வெறியை அடக்கிக்கொண்டு கூடுமானவரையில் சாதுத்தனமாக நடந்துகொள்வேன். ஆனால் எப்பொழுதுமே சாதுவாக நடந்துகொள்ள முடியவில்லை. சில சமயங்களில் பெரிய கூட்டங்களிலும், முக்கியமாக ஊர்வலங்களிலும் நான் ரொம்பவும் அலுத்துப் போவேன். ஊர்வலங்களை எனக்காகத்தான் ஏற்பாடு செய்திருப்பார்கள். ஆனாலும் என்னுடைய மனைவியையோ அல்லது வேறு யாரையோ வண்டியில் வைத்துவிட்டு, ஊர்வலத்தை நடத்தும்படி கூறிவிட்டு, கூட்டத்துக்குள் நான் மறைந்து போய்விடுவேன்.

இவ்வாறு ஒருவனுடைய உண்மையான உணர்ச்சிகளை, அடிக்கடி அடக்க முயலுவது கஷ்டம். நல்ல கூட்டங்களிலே முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு, ஏதோ தீர்க்காலோசனை செய்வதுபோலப் பாவனை செய்யவேண்டிய கொடுமை இதனின்றும் ஏற்பட்டதுதான் மிச்சமாகும். இந்தத் தன்மையினாலோ என்னவோ, ஒருவர் என்னை ஒருசமயம் ஓர் ஹிந்துப் பத்திரிகையில் ஒரு ஹிந்து விதவைக்குச் சமமாக ஒப்பிட்டு, ஒரு கட்டுரை வரைந்திருந்தார். பழைய காலத்து ஹிந்து விதவைகளிடம் எனக்கு ஏராளமான மரியாதை உண்டு. ஆனாலும் மேற்சொன்ன கட்டுரையைப் படித்து, நான் திடுக்கிட்டுப் போனேன். ஹிந்து விதவைகளைப்போல, நான் துறவு பூண்ட சரணாகதி மனப்பான்மையுடன், புன்னகையின்றி, பக்திசிரத்தையுடன், எனது கடமையை நான் ஆற்றி

வருகின்றேன் என்று என்னைப் புகழ்வதாக ஆசிரியர் எண்ணியிருக்கவேண்டும். இதைக் காட்டிலும் அதிகமான சுறுசுறுப்புக்கொண்ட தன்மைகளும் நகைச்சுவையும் சிரிப்பும் என்னிடம் இருப்பதாக அவர் காணவில்லை யென்று வருந்தினேன். "எனக்கு நகைச்சுவை இல்லாவிடின் நான் எந்தக் காலத்திலேயோ தற்கொலை செய்துகொண்டிருப்பேன்" என்று காந்திஜீ ஒரு சமயம் பத்திரிகா நிருபரொருவரிடம் கூறியதாகக் கேள்வி. அவ்வளவு முடிவாகச் சொல்ல என்னால் முடியாது. ஆனால் நகைச் சுவையாலும் சிலர் செய்யும் வேடிக்கைக் காரியங்களாலும் சிரிப்பு வாராமற்போனால், என் வாழ்க்கை தாங்கக்கூடாத பாரமாகத்தான் ஆகியிருக்கும்.

எங்கள் குடும்பத்தார்களும் நெருங்கிய நண்பர்களும் என்னை அடிக்கடி கேலி செய்வார்கள். உபசாரப் பத்திரங்களில் மிகைப்பட வரையப்பட்டிருக்கும் அலங்கார வாக்கியங்களையும், அர்த்தமற்ற கற்பனைக் கருத்துக்களையும் பற்றி சிரித்துச் சிரித்துக் கேலி செய்து, அவைகளைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தெறிந்து விடுவார்கள். வரவேற்புப் பத்திரங்களில், எனக்கு சிற்சில வேடிக்கையான பட்டங்கள் அளிக்கப்பட்டிருக்கும். தேசீய இயக்கத்திற்சேர்ந்து, தேசத்தொண்டு ஆற்றிய முக்கியஸ்தர்களுக்கு இவ்வாறு மரியாதைப் பட்டங்கள் அளிக்கப்படுவதுண்டு. இவைகளிலே, ஆடம்பரமான பட்டங்களையும் சொற்களையும் என்னுடைய மனைவியும் சகோதரிகளும் பொறுக்கி வைத்துக்கொண்டு மரியாதையில்லாமல் என்னைக் கேலி செய்யத்துவக்கி விடுவார்கள். ஒருவர் என்னை, "பாரத பூஷணம்" என்று அழைத்துச் சிரிப்பார். "பாரத பூஷணம் இல்லை, தியாகமூர்த்தியாக்கும்" என்று இன்னொருவர் கேலி செய்வார். இவர்கள் இவ்வாறு கேலி செய்வதால், எனக்கு ஆறுதல் ஏற்பட்டு நகைப்பு உண்டாகும். பொதுக் கூட்டங்களில், நான் சாதுவைப் போல நடிக்கவேண்டிய தொல்லையால் ஏற்பட்ட அலுப்பு, ஒருவாறு தீரும். இந்தக் கேலியிலே என்னுடைய சிறிய பெண்ணும் சேர்ந்துகொள்ளுவாள். இந்தக்கேலிக் கூத்தில் கலந்து கொள்ளாதவர் என்னுடைய தாயார் ஒருவர்தான். உபசாரப் பத்திரங்களில் அளிக்கப்பட்டிருக்கும் பட்டங்களுக்கெல்லாம், யாதொரு குறைவுமின்றி நான் தகுதி பெற்றவன் என்பது அவருடைய நினைப்பு. எனவே, அவருடைய செல்வப் புதல்வனை யாரேனும் கேலி செய்வதைப் பார்த்தால், அவருக்கு

ஆத்திரம் வந்துவிடும். தகப்பனாரோ, இவைகள் எல்லாவற்றையும் தமாஷாக அனுபவித்துக் கொண்டிருப்பார். விஷயத்தைத் தெரிந்துகொண்டு, அதற்கு அனுதாபம் காண்பிக்கிற தனிவழி அவருக்கு உண்டு.

ஜேக்கள், கூட்டங்கள், பொதுஜனவிழாக்கள், எல்லையற்ற வாதங்கள், அரசியல் மேடுபள்ளம் இவைகளால் நான் மேலழுந்தின வாரியாகத்தான் பாதிக்கப்பட்டேன். உண்மையான போராட்டம் ஒன்று எனது உள்ளத்தினூடே மிகுதியும் போராடிக்கொண்டிருந்தது. என்னுடைய அந்தரங்க தாபம் தணியவில்லை. பலவிதமான கருத்துகளும் உணர்ச்சிகளும் விசுவாசங்களும் என்னுடைய உள்ளத்தில் ஒன்றையொன்று தாக்கிக்கொண்டிருந்தன. என்னுடைய மனம் போர்க்களமாயிற்று. இதனின்றும் நான் விடுதலையை வேண்டினேன். அதற்காக காரியங்களில் ஈடுபட்டேன். அப்பொழுது, எனக்கு ஒருவாறு அமைதி உண்டாயிற்று. வெளிப் போராட்டத்தினால் உள் போராட்டத்தின் புழுக்கம் ஒருவாறு தணிந்தது. சிறையில் உட்கார்ந்து கொண்டு, இதை யெல்லாம் நான் ஏன் எழுதிக் கொண்டிருக்கிறேன்? சிறையிலிருந்தாலும் சரி, வெளியே இருந்தாலும் சரி, நான் தேடிக்கொண்டிருக்கும் லட்சியத்தின் ஆவல் இருந்துக் கொண்டே இருக்கின்றது. ஆயினும், பழைய அனுபவங்களையும் எண்ணங்களையும் வரைவதால் மன அமைதியும், ஆத்ம திருப்தியும் உண்டாகலாமென்ற நம்பிக்கையில் இவ்வாத்ம சரிதத்தை எழுதலானேன்.

# XXIX

## சட்டமறுப்பு ஆரம்பம்

1930-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந் தேதி பூரண விடுதலை நாள் வந்தது. நாட்டின் உற்சாகம் பொங்கிய மனப்பான்மை, மின்னலைப்போலப் பளிச்சென்று கண்ணில் பட்டது. நாடெங்கும் கூட்டங்கள் கூட்டப்பட்டன. கூட்டங்கள் ஒழுங்காகவும் அமைதியுடனும் நடைபெற்றன. பிரசங்கங்கள் கிடையாது. ஜனங்கள் பூரண விடுதலை விரதம் பூண்டார்கள். கூட்டங்களின் நடவடிக்கைகள் கம்பீரமாக இருந்தன. இந்தக் கொண்டாட்டத்தினால் காந்திஜிக்குப் போதுமான தூண்டுதல் ஏற்பட்டது. ஜனங்களின் நாடித்துடிப்பை அளந்து பார்ப்பதில், காந்திஜி நிபுணர். காரியம் செய்வதற்குக் காலம் வந்து விட்டதென்று இமைப்பொழுதில் அவர் தெரிந்து கொண்டார். சடசட வென்று நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நேர்ந்தன. சட்டமறுப்பு நெருங்கவே, எங்களுடைய எண்ணங்கள் 1921-22-ல் நடைபெற்ற இயக்கத்துக்குத் திரும்பிச்சென்றன. சௌரிசௌரா சம்பவத்தால் காந்திஜி அப்பொழுது இயக்கத்தைத் தடை செய்து விட்டதை நினைத்தோம். ஆனால் இப்பொழுது தேசத்தில் அதிகமான கட்டுப்பாடு காணப்பட்டது. சாத்வீகப் போராட்டத்தின் தன்மையை ஜனங்கள் உள்ளபடியே அறிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். போராட்டத்தின் தோரணையையும் ஓரளவு உணர்ந்து கொண்டிருந்தார்கள். காந்திஜி சாத்வீகத்தை நிலைநிறுத்துவதில் அளவற்ற சிரத்தை கொண்டிருக்கிறார் என்பதை ஜனங்கள் நன்றாக உணர்ந்து கொண்டுவிட்டார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன், காந்திஜியின் சாத்வீகத்தை நம்பாதவர்கள் பலர் இருந்தார்கள். இப்பொழுதோ ஒருவர் கூட இல்லை யென்பது நிச்சயம். போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் எங்கேயாவது சூழ்ச்சியாலோ அல்லது சகிக்க முடியாமலோ பலாத்கார நிகழ்ச்சிகள் நேராது என்று நாம் எவ்வாறு உறுதியுடனிருக்க முடியும்? இத்தகைய நிகழ்ச்சியொன்று நேர்ந்தால், சட்ட மறுப்பியக்கத்தின் போக்கு என்ன ஆகும்? காந்திஜி திடீரென்று போராட்டத்தை

நிறுத்திவிடுவாரா ? இத்தகைய எண்ணங்களால் எங்களுக்கு மனக் கலக்கம் உண்டாயிற்று.

காந்திஜீயும் இதைப்பற்றி யோசித்திருந்தார். அவரை வருத்திய பிரச்னை வேறொன்று. சாத்வீகச் செயல் முறையால்தான் மனிதன் உயர்நிலையை அடையமுடியுமென்றும், அதுதான் சரியான வழியென்றும், அதை சரியாய்ப்பின்பற்றினால் ஒருநாளும் வீண்போகாதென்றும் அவருடைய நம்பிக்கையாகும். கலவரம் இல்லாத காலத்தில், தான் இந்த முறையைக் கையாண்டால் நல்ல பயன் கிடைக்குமானால், இந்த முறை எக்காலத்திலும் பயனளிக்கும் என்ற தனது கொள்கை தவறுகுமென்பதே. அப்பொழுது, சாத்வீக் ஒத்துழையாமையை எல்லாக் காலங்களிலும் கையாளமுடியாது என்ற முடிவுக்குத்தானே வரவேண்டும் ? இந்த முடிவை காந்திஜீ ஒருநாளும் ஏற்கமாட்டார். சாத்வீகச் சட்ட மறுப்பு எல்லாக் காலத்துக்கும், எல்லா சந்தர்ப்பங்களிலும் உபயோகிக்கக் கூடிய இணையற்ற சாதனம் என்பது காந்திஜீயின் திடமான நம்பிக்கையாகும். ஆகையால் பலாத்கார நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களிலும் கலவரத்தின் மத்தியிலும், இந்தச் சாதனம் வேலை செய்துதான் ஆகவேண்டும். சமயத்துக்குத் தக்கவாறு இந்தச் சாதனத்தைப் பிரயோகம் செய்யலாம். ஆனால் கலவரத்துக்குப் பயந்து போராட்டத்தை நிறுத்திவிட்டால், சாத்வீக ஒத்துழையாமை குறைகொண்ட சாதனம் என்று ஒப்புக் கொள்ளவேண்டியதாயிருக்கும். இவ்வாறு காந்திஜீ தமது மனதில் வாதம் செய்திருக்கவேண்டும். ஆனால் திட்டமாக எனக்குத் தெரியாது. இதுசம்பந்தமாக தமது உள்ளத்தில் மாறுதல் ஏற்பட்டதாகத் தெரிவித்துக்கொண்டார். போராட்டத்தின் மத்தியில் தனி பலாத்கார நிகழ்ச்சிகள் நேருமாகில், போராட்டத்தை நிறுத்த வேண்டியதில்லையென்றும, ஆனால் இயக்கமே பலாத்கார இயக்கமாக மாறிப் போவதாகத் தோனறினால், அப்பொழுது இயக்கத்தின் வேகத்தைக் குறைத்து அல்லது இயக்கத்தை மாற்றி, நடத்த வேண்டுமென்றும் காந்திஜீ தெரிவித்தார். இந்த வியாக்கியானத்தால் எங்களுக்கு திருப்தி உண்டாயிற்று. நல்லது ! ஆனால், எப்படிப் போராட்டத்தை ஆரம்பிக்கிறது? எந்தவிதமான சட்டமறுப்பைக் கைக்கொள்ளுவது ? காலத்திற்கும் ஜனங்களுக்கும் தோதாக இருக்கும்படியான சட்டமறுப்பு எது ? அந்தச் சமயத்தில் மகாத்மா ஜாடை காண்பித்தார்.

உப்பு! உப்பு!! உப்பு!!! நாடெங்கும் இதுதான் பேச்சு. இந்தச் சொல்லே மூலமந்திரமாயிற்று. இதுவே விடுதலையின் அறிகுறியாக விளங்கியது. உப்பு வரியைத் தாக்க வேண்டும்; உப்புச் சட்டங்களை உடைத்தெறிய வேண்டும். இவ்வாறு காந்திஜீ அறிவித்தபொழுது, நாங்கள் திகைத்துப் போனோம். தேசீயப்போராட்டத்துக்கும், உப்புக்கும் என்ன பொருத்தம் என்று எண்ணினோம். மேலும், காந்திஜீ இன்னும் ஒரு விநோத அறிவிப்பைச் செய்தார்; அதுதான் அவருடைய பதினொரு கோரிக்கைகளாகும். நாம் பூரண விடுதலை பாஷையில் எலலாவற்றையும் பற்றி பேசிக்கொண்டிருக்கையில், அரசியல் ஆசாரத் திருத்தத் துறைகளில் சில மாறுதல்களை ஜாபிதா செய்வதால், என்ன லாபம் என்று எண்ணினோம். பூரண விடுதலை என்ற சொல்லைக் காந்திஜீ எந்தக் கொள்கையில் உபயோகப்படுத்துகிறார்? எங்களுடைய அர்த்தமும், அவர் கொள்ளும் பொருளும் ஒன்றுதானா வென்று யோசிக்க அப்பொழுது நேரமில்லை. மேலுக்கு மேல் நிகழ்ச்சிகள் நேர்ந்துகொண்டே வந்தன. இந்தியாவில் எங்கள் கண் முன்னாலேயே, நாளுக்கு நாள், அரசியல் துறையில் சம்பவங்கள் வேகமாகப் பாய்ந்து வருவதைக் கண்டோம். பொருளாதார மந்தத்தால் உலக முழுவதும் பெரிய மாறுதல்கள் நேர்ந்து வருகின்றன வென்பதை அப்பொழுது எங்களால் உணரக் கூடவில்லை. விலைவாசிகள் குறைந்து வந்தன. இதைக் கண்டு நகரத்திலிருப்பவர்கள் சந்தோஷம் அடைந்தார்கள். ஆனால் கிராமத்திலிருக்கும் குடியானவர்கள் விலைவாசி திடீரென்று விழுந்ததும், மிகவும் நடுங்கிப் போனார்கள்.

வைஸிராய்க்குக் கடிதம் எழுதிவிட்டு, ஸபர்மதி ஆசிரமத்திலிருந்து டாண்டிக்கு உப்பு எடுக்க மகாத்மா பிரயாணமானார். உப்பு எடுக்கச் சென்ற இந்த யாத்ரீகர்களின் கூட்டம் வழி நடந்து ஒவ்வொரு நாள் சென்றதும், தேசத்தில் உற்சாகம அதிகரிக்கத் துவக்கிற்று. போராட்டத்திற்கு ஏற்பாடுகளைச் செய்ய ஆமதாபாத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டம் கூட்டப் பெற்றது. கூட்டத்தில் போராட்டத்தின் தலைவர் (காந்திஜீ) பிரசன்னமா யிருக்கவில்லை. அவர் தம்முடைய சீடர்களுடன் கடலுக்கு யாத்திரை போய்க்கொண்டிருந்தார். திரும்பி வர அவர் மறுத்துவிட்டார். அவர் கைது செய்யப்படும் பட்சத்தில் என்ன செய்வது என்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி யோசித்து கமிட்

டியின் சார்பாக காங்கிரஸ் தலைவருக்கு விசேஷமான அதிகாரங்களைக் கொடுத்தது. காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டால், காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய காங்கிரஸ் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. தமக்குப் பின்னால் தலைவரையும் நியமிக்க காங்கிரஸ் பிரஸிடெண்டுக்கு உரிமை யளிக்கப்பட்டது. எல்லா மாகாண, ஜில்லா, ஊர் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களுக்கும் இத்தகைய உரிமைகள் அளிக்கப்பட்டன.

இவ்வாறுதான் சர்வாதிகாரிகள் என்பவர்கள் தோன்றி, காங்கிரஸின் சார்பாக போராட்டத்தை நடத்தி வந்தார்கள். காங்கிரஸிலே யதேச்சாதிகாரிகள் தோன்றியது எவ்வளவு கேவலமான சம்பவம் என்று இந்தியா மந்திரி, வைஸிராய், மாகாணக் கவர்னர்கள் முதலியவர்கள் பிரமாதமாகப் பிரசாரம் செய்தார்கள். இந்திய அரசாங்கத்தார் ஜனநாயக முறையில் பற்றுக் கொண்டவர்களாம்! ஜனநாயகத்தின் நல்ல தன்மைகளைப் பற்றி இந்தியாவிலிருந்த மிதவாதப் பத்திரிகைகளும் எங்களுக்கு உபதேசம் செய்தன. நாங்கள் இவைகளையெல்லாம் வியப்புடனும், மௌனத்துடனும் கேட்டுக்கொண்டிருந்தோம். ஏனெனில் நாங்கள் அப்பொழுது சிறையிலிருந்தோமல்லவா? இத்தகைய பிரசாரத்தை முழு வஞ்சகம் என்றுதான் கூற வேண்டும். இந்தியாவின் ஆட்சி முறை எப்பேர்ப்பட்டது? பூரண எதேச்சாதிகாரம் என்ற தத்துவத்தைத் தழுவியதாகும். நேரான சட்ட திட்டங்கள் உண்டா? நபர்களின் சுதந்திரத்தை ஒடுக்கியும், பறிமுதல் செய்தும், அவசரச் சட்டங்களால் யதேச்சாதிகார தோரணையில், இந்தியா ஆளப்பட்டு வருகிறது. இருந்தாலும் நம்மை ஆள்பவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி நீளமாகப் பேசுகிறார்கள். ஜனநாயகத்தின் சாயைகூட (நிழல்கூட) இந்தியாவில் இல்லை. தன்னுடைய அதிகாரத்தையும், உரிமைகளையும் காத்து, அவைகளை எதிர்க்க முயல்பவர்களை அடக்கப் பார்ப்பது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இயல்புதான். ஆனால் இவ்வாறு செய்வதில், ஜனநாயக முறை கையாளப்பட்டு வருகின்றது என்று அதிகார வர்க்கத்தினர் கூறுவதை எழுதி வைத்திருந்தால், பின்னால் வரும் தலைமுறையார்கள், இதைப் பார்த்து வியப்படைந்து சிந்தனை செய்வார்கள். 'காங்கிரஸ் அமைப்புகள் சட்டம் மீறியவை' என்று ஸர்க்கார் அறிவிக்கக் கூடிய காலம் நெருங்கி வந்துவிட்டது. எனவே கலந்து யோசித்து காரியம்

செய்வதற்கு கமிட்டிக் கூட்டங்கள் கூட்ட முடியாது. இந்த நெருக்கடிக்கு காங்கிரஸ் பரிகாரம் தேட வேண்டும். நம்முடைய போராட்டத்தை பகிரங்கமாக நடத்தி, தொனியைக் குறைக்காமல் பொது மக்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டுமென்று நாங்கள் எண்ணியபடியால், ரகசியமாக எதையும் நாங்கள் செய்ய விரும்பவில்லை. ரகசிய வேலையால் நல்ல பயனும் ஏற்படவில்லை.

எங்களில் முக்கியஸ்தர்களாக இருக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் எல்லா மாகாணங்களிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் கைது செய்யப்படுவது நிச்சயம். அப்பொழுது போராட்டத்தை யார் நடத்துவது? சேனையிலே செய்வதுபோல, காயம்பட்டுப் படுக்கையில் கிடக்கும் தளகர்த்தர்களின் காலி ஸ்தானங்களுக்கு மற்றவர்களை நியமனம் செய்வதுதான் முடிந்தகாரியம். போர்க்களத்திலே, ஆர அமர உட்கார்ந்துகொண்டு, கமிட்டிக்கூட்டங்களை நடத்த முடியாது. சில சமயங்களில் இவ்வாறும் செய்து பார்த்தோம். கமிட்டி முழுவதையும் ஏககாலத்தில் அரசாங்கத்தார் கைது செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் இக்கூட்டங்கள் கூட்டினோம். நாங்கள் எதிர்பார்த்தபடியே அரசாங்கத்தாரும் கைது செய்தார்கள். போர்த் திட்டத்தை வகுத்து, யோசனை செய்வதற்காகத் தள கர்த்தர்களின் ஆலோசனைக் கமிட்டியைப்போல எங்களுக்கு வசதி இருக்கவில்லை. பணம், தளவாடங்கள் முதலியவற்றைக்கொடுத்து போரை நடத்துவதற்குத் தூண்டுதலாயிருக்கும் மந்திரிமார்களைப்போல எங்கள் காங்கிரஸில் ஏதேனும் கூட்டம் இருந்ததா? அதுவும் இல்லை. எங்களில் முக்கியஸ்தர்களாயும் தலைவர்களாயும் உள்ளவர்கள் பகிரங்கமாக நிமிர்ந்து முன்னணியில் நின்று போராட்டத்தை நடத்தவேண்டியதாயிற்று. போராட்டம் ஆரம்பித்த பொழுதே, அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். எங்களுடைய சர்வாதிகாரிகளுக்கு நாங்கள் கொடுத்த அதிகாரம் தான் என்ன? போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானம் கொண்டவர்கள் என்பதைக் காண்பிக்கும் பொருட்டு, அவர்களை முன்னணியில் நிறுத்தி அவர்கள் சிறைக்குப்போகும் கௌரவத்தை அளித்தோமே அதுதான் நாங்கள் கொடுத்த அதிகாரம்.

எங்கெந்த இடங்களில் காங்கிரஸ் கமிட்டிகள் அரசாங்கத்தாரால் அடக்கப்பட்டு கூட முடியாதோ, அங்குதான் சர்

வாதிகாரிகளுக்கு வேலை இருந்துவந்தது. கமிட்டிகள் கூடக் கூடிய இடங்களில் சர்வாதிகாரிகளுக்கு அதிகாரங்கள் இல்லை. சர்வாதிகாரிகள் எந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கும் அதிகாரம் பெறவில்லை. எந்தக் கொள்கையையும் அவர்கள் மாற்ற முடியாது. போராட்டத்தை அந்தந்த ஸ்தலத்துக்கு ஏற்றவாறு நடத்தலாம் என்ற சில்லரை உரிமைதான் அளிக்கப்பட்டது. அவர்களுக்கு காங்கிரஸ் ஏதேச்சாதிகாரம் என்றால், சிறைப்பிரவேசத்துக்கு அனுமதிச்சீட்டு என்று அர்த்தம். இவ்வாறே பழையவர்கள் போவதும் புதியவர்கள் அவர்களுடைய ஸ்தானங்களுக்கு வருவதுமாக ஒவ்வொருநாளும் கழிந்துகொண்டே வந்தது. இவ்வாறு எங்களுடைய கடைசி ஏற்பாடுகளைச் செய்துகொண்டோம். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இருந்த நாங்கள் ஒருவருக்கொருவர் விடைபெற்றுக்கொண்டோம். நாங்கள் மறுபடியும் சந்திப்போமா அல்லது சந்தித்தால் எப்பொழுது, எவ்வாறு சந்திப்போம் என்பது எங்களில் ஒருவருக்கும் தெரியாது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் புதிய யோசனைகளின்படி, மாகாணங்களில் ஏற்பாடு செய்வதற்காக, எங்கள் ஊர்களுக்கு நாங்கள் விரைந்து சென்றோம். "சிறைக்குப் போவதற்குமுன் பல்குச்சிகளைச்சேர்க்கவேண்டும்" என்று ஸ்ரோஜினி நாயுடு கேலி செய்தார்.

திரும்பும்பொழுது தகப்பனாரும் நானும், காந்திஜீயைப் பார்க்கப்போனோம். அவர், அப்பொழுது தமது பக்தகோஷ்டியுடன் ஜாம்புஸாரில் இருந்தார். அவருடன் சிலமணி நேரம் கழித்தோம். பிறகு அவர் தமது திருக்கூட்டத்தோடு தமது உப்பு யாத்திரையின் அடுத்த கட்டத்துக்குப்போனார். காந்திஜீ, கையில் கோல் கொண்டு, பக்தர்களுக்கு முன்னால் உறுதியான நடையுடனும், அமைதியான கலங்காத பார்வையுடனும் சென்றுகொண்டிருந்தது மிகவும் உருக்கமான காட்சியாகவிருந்தது. எங்களுடைய அலகாபாத் பழைய வீட்டை நாட்டுக்குத் தானம் செய்து, அதற்கு 'ஸ்வராஜ்ய பவனம்' என்று புதிய நாமகரணம் செய்யவேண்டுமென்று தகப்பனார், காந்திஜீயை ஜாம்புஸாரில் கலந்து தீர்மானித்துக்கொண்டார். அவர் அலகாபாத்துக்குத் திரும்பிவந்ததும், இதை நாட்டாருக்கு அறிவித்துவிட்டு காங்கிரஸ்காரர்களிடம் கட்டிடத்தை ஒப்புவித்துவிட்டார். இந்த வீட்டின் ஒரு பகுதியைத்தான் பின்னர் ஆஸ்பத்திரியாக மாற்றியமைத்தார்கள். இதுசம்பந்தமான

தஸ்தாவேஜுகளை அப்பொழுது அவரால் செய்துகொடுக்க முடியவில்லை. அவரது விருப்பப்படிக்கு ஒன்றரையாண்டுகள் கழித்து, இதை தர்ம சொத்தாகச்செய்து, அவசியமான தஸ்தாவேஜுகளையும் நான் செய்துகொடுத்தேன். ஏப்ரல் மாதம் வந்துவிட்டது. காந்திஜீ கடற்கரையை நெருங்கிவிட்டார். உப்புச்சட்டங்களை எதிர்த்து சட்டமறுப்பை ஆரம்பிக்க, நாங்கள் அவருடைய கட்டளைக்காகக் காத்துக்கொண்டிருந்தோம். சில மாதங்களாக நாங்கள் எங்களுடைய தொண்டர்களைப் பயிற்சி செய்துகொண்டிருந்தோம். என்னுடைய மனைவி கமலாவும், சகோதரி கிருஷ்ணுவும் தொண்டர் படையில் சேர்ந்து, ஆணுடைப்புத் தரித்துக்கொண்டார்கள். தொண்டர்களிடம் ஆயுதங்கள் கிடையாது. தடிகள்கூட இல்லை. அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வந்ததின்நோக்கம், அவர்கள் தங்களுடைய வேலையைத் திறமையாகச் செய்து பெரிய கூட்டங்களைச் சமாளிக்க சக்திபெறவேண்டும் என்பதுதான். ஏப்ரல் மாதம் 6-ந் தேதி யன்று தேசீய வாரம் துவங்குகின்றது. இதை ஒவ்வொரு ஆண்டும் நாடுமுழுதும் கொண்டாடுகிறது எல்லோரும் அறிந்ததே. ஏப்ரல் மாதம் 6-ந் தேதி டாண்டி கடற்கரையில் காந்திஜீ உப்புச் சட்டத்தை உடைத்தெறிந்தார். மூன்று நான்கு நாட்கள் கழித்து உப்புச் சட்டங்களை மீறி, எல்லா இடங்களிலும் சட்டமறுப்பு செய்யும்படியாக காங்கிரஸ் கமிட்டிகளுக்கு அனுமதி கிடைத்தது.

ஏதோ ஒரு ஊற்றுமடையைத் திறந்துவிட்டதுபோல ஆயிற்று. நாடு முழுதும், நகரத்திலும் உப்பு செய்வதுதான் தினசரிப் பேச்சாக இருந்தது. உப்பு செய்வதற்கு விநோதமான பல உபாயங்கள் கையாளப்பட்டன. இதைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஏதோ படித்ததைத் திரட்டி, துண்டுப் பிரசுரம் வெளியிட்டோம். சட்டி, மடக்குகளைச் சேகரித்து, உப்புத் தண்ணீரை வார்த்துக் காய்ச்சி, ஒன்றுக்கும் உதவாத உப்பைத் தயார் செய்துவிட்டோம். நாங்கள் அடைந்த பெருமைக்குக் கணக்கில்லை. வாயால் ருசிகூடப் பார்க்க முடியாத இந்த உப்பை ஜனங்கள் ஏராள விலை கொடுத்து வாங்கினார்கள். உப்பு நல்லதா, கெட்டதா, என்பதைப்பற்றி ஒருவரும் கவலைப்படவே இல்லை. வெறுக்கத்தக்க உப்புச்சட்டத்தை உடைத்தெறிவதுதான் எங்கள் முக்கிய கருத்து ஆகும். நாங்கள் ஆக்கிய உப்பு, மட்டரகமாய் இருந்தால் என்ன? பாதகம் இல்லை. உப்புச் சட்டத்தை உடைத்

தெறிந்தோமே, அதுவே போதுமானது. அதுதான் எங்களுக்கு வெற்றியாகும். உப்பு சத்தியாக்கிரகத்தால் நாளுக்கு நாள் தேசத்தில் உற்சாகம் அதிகரித்துக்கொண்டேபோயிற்று. எல்லை காண்முடியாத உற்சாகம்! உப்பு செய்வது காட்டுத் தீயைப்போல் பரவிற்று. நாங்கள், எங்கள் மதியீனத்திற்கு வெட்கப்பட்டு தலை குனிய ஆரம்பித்தோம். முதன் முதல் இந்தத் திட்டத்தை காந்திஜீ எங்களிடம் தெரிவித்தபொழுது, "பேஷ் இதனால் என்ன ஆகப்போகிறது" என்று கேலி செய்து, நம்பிக்கையற்ற நிலையில் நாங்கள் இருந்தோமே? இப்பொழுதோ, நாட்டில் வியக்கத்தக்க காட்சி தோன்றிவிட்டது. இந்தச் சிறியச் சங்கதியால், நாட்டை ஒருமனப்படுத்தி கட்டுப்பாடாக வேலைசெய்யும்படி செய்த மனிதனுடைய அபாரமான சக்தியைக்கண்டு மகிழ்ந்து திகைத்துப்போனோம்!

மத்திய மாகாணத்திலுள்ள ரெய்பூர் என்ற நகரத்தில் மகாநாடு கூடுவதாயிருந்தது. ரெய்பூருக்குப் போவதற்காக, நான் ரயிலேறிக்கொண்டிருக்கிற சமயத்தில், ஏப்ரல் மாதம் 16-ந் தேதி கைதுசெய்யப்பட்டேன். அன்றைக்கே, என்னைச் சிறையில் விசாரித்தார்கள். உப்பு சட்டத்தின்கீழ், எனக்கு, 6 மாதம் தண்டனை கிடைத்தது. நான் கைதியாவேனென்று எதிர்பார்த்து அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியாரால் எனக்கு அளிக்கப்பட்ட பொது அதிகாரங்களைக்கொண்டு, என்னுடைய ஸ்தானத்தில் காங்கிரஸ் தலைவராக இருக்கும்படி, காந்திஜீயை நியமித்திருந்தேன். ஆனால், காந்திஜீ மறுத்துவிடக்கூடுமென்று தோன்றியதால், இரண்டாவதாகத் தகப்பனாரைப் போட்டிருந்தேன். நான் எதிர்பார்த்திருந்தபடியே காந்திஜீ மறுத்துவிட்டார். எனவே தகப்பனார் காங்கிரஸின் தற்காலீகத் தலைவரானார். அவருக்கு உடம்பு குணமில்லை. இருந்தாலும், மகத்தான ஊக்கத்துடன், அவர் இயக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்தார். இயக்கத்தின் துவக்ககாலத்தில், கட்டுப்பாடாகவும், திறமையுடனும் இயக்கத்தை நடத்தி வந்தது, மிகுதியும் நன்மையாக இருந்தது. ஆனால், அவருக்கு பாக்கியிருந்த உடல்நலமும் சீர்கெட்டுப்போயிற்று.

அந்தக்காலத்தில் எங்கு பார்த்தாலும் பரபரப்பான செய்திகள், ஊர்வுலங்கள், தடியடிகள், துப்பாக்கிப் பிரயோகங்கள், தலைவர்களின் அரெஸ்டைப் பாராட்டுவதற்காக ஹர்த்தால்கள், சிறப்பான கொண்டாட்டங்கள்—இவைகள் தினமும் நிகழ்ந்துவந்தன. அன்னியத் துணிகள் அநேகமாக

பகிஷ்கரிக்கப்பட்டுவிட்டன. பிரிட்டிஷ் சாமான்களும் விலக்கப்பட்டன. பெஷாவர், கார்வாலீ தினம் முதலிய நாட்கள் கொண்டாடப்பட்டன. வயது முதிர்ந்த எனது தாயாரும் என் சகோதரிகளும் வெயிலை லட்சியம் செய்யாமல் அன்னியத்துணி ஜவுளிக்கடைகளின் முன்னிலையில் நின்று, மறியல் செய்தார்கள் எனக் கேள்விப்பட்டேன். என்மனது உருகிப்போயிற்று. கமலாவும் இவ்வாறு செய்தாள். ஆனால், இதோடு மற்றோர் பெரியவேலை ஒன்றையும் செய்தாள். அலகாபாத் நகரிலும், ஜில்லாவிலும்நடைபெற்ற இயக்கத்தில், அவள் புகுந்து காட்டிய ஊக்கமும் நெஞ்சுத்திடமும் என்னைப்பிரமிக்கச் செய்துவிட்டன. அவளுடைய சுபாவத்தை நன்கறிந்தவன் என்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு அவள் இவ்வளவு அறியவேலை செய்யக்கூடும் என்ற நம்பிக்கையில்லை. அவள் தனது நோயை மறந்துவிட்டாள். நாள்முழுதும் அங்குமிங்கும் ஓடியாடித்திரிந்து, இயக்கத்துக்குப் பிரமிக்கத்தக்க கட்டுப்பாட்டையும் வலுவையும் கொண்டுவந்து சேர்த்து விட்டாள். இதைப்பற்றி ஏதோ சிறிதளவு, சிறையில் கேள்விப்பட்டேன். பின்னர் தகப்பனார் சிறைக்கு வந்து என்னுடன் சேர்ந்துகொண்டபொழுது, அவரே கமலா செய்த அற்புத வேலையை மிகுதியும் புகழ்ந்து பேசினார். என்னுடைய தாயாரும் மற்றையப் பெண்களும் வெயிலில் அலைந்து, இயக்கத்துக்காகப் பாடுபடுவது, அவருக்கு அதிகமாகப் பிடிக்கவில்லை. ஆனாலும், இரண்டொரு தரம் சொல்லிப்பார்த்து விட்டு, ஆக்ஷேபணையை நிறுத்திக்கொண்டு விட்டார்.

இந்தியாவில் நேர்ந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரமாகத் தோன்றிய நிகழ்ச்சி, பெஷாவரில் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி நேர்ந்தது. இதைப்போலவே, எல்லைப்புற மாகாணம் முழுதும் பின்னர் நேர்ந்தது. அதிகாரிகள் மிஷின் பீரங்கிகளால் சுட்டுக் கொல்லும்பொழுது, சிங்கங்களின் தைரியத்தைக்கொண்ட எல்லைப்புறப் பட்டாணிய தேசபக்தர்கள், மிஷின் பீரங்கிகளுக்குமுன்னே நெஞ்சு தளராமல் அமைதியுடன் நின்று உயிர் நீத்தார்கள். எல்லைப்புற வாசிகள் இவ்வாறு சாத்வீகமாக நடந்துகொண்டது மிகவும் ஆச்சரியமானதாகும். இதற்குமுன், அவர்களுக்கு சாத்வீகமுறையில் நம்பிக்கை இருந்ததே இல்லை. இந்தப் பட்டாணியர்கள் இந்தியாவுக்கே வழிகாட்டிகளாக விளங்கினார்கள். எல்லைப்புற மாகாணத்திலே இன்னொரு அதிசயமான சம்பவம் நேர்ந்தது.

இந்தியக் கார்வாலி சிப்பாய்கள், "பொதுஜனங்களின்பேரில் சுடமாட்டோம்" என்று தளகர்த்தர்களுக்குத் தெரிவித்து விட்டார்கள். ஆயுதந் தாங்கி நிற்காத கூட்டத்தில் சுடுவது அநாகரிகம் என்பதாலும், உள்ளபடியே ஜனங்களிடம் அனுதாபத்தாலும், அவர்கள் சுட மறுத்துவிட்டார்கள். தளகர்த்தர்களின் உத்தரவை சாதாரணச் சிப்பாய் மீறுவதென்றால் எளிதல்ல. என்ன நடக்கும் என்று அவனுக்குத் தெரியும். கார்வாலிகள் இவ்வாறு செய்வதற்கு வேறு காரணம் இருக்கலாம். இந்தியாவிலே, பிரிட்டிஷாரின் அதிகாரம் ஒழிந்துவிட்டது என்று இந்தப்பட்டாளத்திலும் ஏனைய பட்டாளங்களிலும் தவறான செய்தி பரப்பப்பட்டிருந்ததாம். இந்த மாதிரி சமயத்தில்தான் சாதாரணச் சிப்பாய் தன்னுடைய அனுதாபத்துக்குத் தக்கவாறு காரியம் செய்யத்துணிவான். சட்ட மறுப்பு இயக்கம் துவங்கிய சிலநாட்களுக்குள், தேசம் எங்கும் பூகம்பத்தைப்போல அதிர்ச்சி ஏற்பட்டதால், பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்துகொண்டிருக்கிறது என்று சிலர் எண்ணிக்கொண்டிருந்திருக்கலாம். இதன் மூலமாகச் சிப்பாய்களுக்கும் மனமாறுதல் ஏற்பட்டிருக்கக்கூடும். அரசாங்கம் கவிழ்ப் போவதில்லை என்று சீக்கிரத்தில் புலப்பட்டது. அதன்பின் சைனியத்தில் அதிகாரிகள் உத்திரவை மீறி நடப்பதென்ற எண்ணம் மறைந்துபோயிற்று. சிப்பாய்களை இவ்வித சங்கட நிலைமையில் வைக்காமல் அதிகாரிகளும் ஜாக்கிரதையாக இருந்தார்கள்.

அற்புதமான பல சம்பவங்கள் அந்தக்காலத்தில் நேர்ந்தன. ஆனால் எல்லாவற்றை காட்டிலும் விசித்திரமானது, பெண்மணிகள் தேசீய இயக்கத்தில் கலந்துகொண்டவகைதான். வீட்டில் இது வரையிலும் அடைத்துக் கிடந்தவர்கள், நூற்றுக்கணக்கில் வெளிவந்து இயக்கத்தில் கலந்துகொண்டார்கள். அவர்களுக்கு முன்பின் பழக்கமில்லாமல் இருப்பினும், அற்புதமாக உழைத்துப் போராட்டத்தின்நடுவே நின்று, உற்சாகமளித்து வந்தார்கள். அன்னியத் துணிக் கடைகளையும், போதைச் சரக்குக் கடைகளையும் மறியல்செய்வதைத் தங்களுடைய பிரத்யேகத் தொண்டாக, பெண்கள் ஆக்கிக்கொண்டார்கள். பெண்கள் மட்டும் தனித்துச்சென்ற ஊர்வலங்களை எல்லா நகரங்களிலும் காணலாம். ஆண்களைக் காட்டிலும் அவர்கள் அதிகமான பிடிவாதத்தைக் காண்பித்தார்கள். பல சமயங்களில் அவர்கள் மாகாண சர்வாதிகாரிக

ளாகவும் பொறுப்பு வகித்தார்கள். உப்பு சத்யாக்கிரஹத்தைத் தவிர வேறு துறைகளிலும் சட்டமறுப்பு தலைதூக்கிற்று. வைசிராய் அவர்கள், அவசரச் சட்டங்களை உண்டாக்கி, பொதுஜன உற்சாகத்தைக் குறைத்துப் பார்த்தார். ஆனால் தடைகளும், அவசரச் சட்டங்களும் அதிகமாக ஆக, அவைகளை மீறுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகப்பட்டன. எதைச் செய்யக்கூடாதென்று அவசரச் சட்டங்கள், தடுக்க எண்ணினவோ, அவைகளைச் செய்வதற்கு காங்கிரஸ்காரர்களுக்குத் துணிவு ஏற்பட்டது.

போராட்டத்தில் எல்லாத் துறைகளிலும் முதலடி கொடுக்கும் சந்தர்ப்பமும் திறமையும், காங்கிரஸினிடமும் பொது மக்களிடமும்தான் இருந்தது. அவசரச்சட்டம் ஒவ்வொன்றாக வெளிவந்ததும், அதனால் நெருக்கடியை நிர்வாகம் செய்து, நாட்டில் அமைதி உண்டாக்கமுடியவில்லையென்று அரசாங்கத்தார் கண்டுகொண்டதும், புதிய புதிய அவசரச் சட்டங்கள் வைசிராய் அவர்களால் பிறப்பிக்கப்பட்டன. காங்கிரஸ் காரியக்கமிட்டியின் அங்கத்தினர்களிற் பலர் கைது செய்யப்பட்டார்கள். இருந்தாலும், புதிய அங்கத்தினர்கள், காலி இடங்களுக்கு வந்துசேர்ந்து காரியக்கமிட்டி ஒழுங்காக வேலை செய்துகொண்டிருந்தது. புதிதாக அவசரச்சட்டம் தோன்றியதும், அதை எப்படி எதிர்ப்பதென்று காரியக் கமிட்டியார் ஒரு தீர்மானத்தின் மூலமாக யோசனைசொல்லுவார்கள். இந்த யோசனைகளைத் துளிகூட வழுவில்லாமல், எல்லா மாகாணங்களிலும் ஒரே ரீதியாகக் காங்கிரஸ்காரர்கள் பின்பற்றினார்கள். இதற்கு ஒன்றே ஒன்றுதான் விதிவிலக்கு என்று சொல்லலாம். பத்திரிகைப் பிரசுரம் சம்பந்தமாக, ஒவ்வொரு மாகாணத்திலும் தனித்தனி யோசனையைக் கையாண்டார்கள்.

அச்சுக்கூடங்களை அடக்கியாளுவதற்காக, பத்திரிகைகளிடமிருந்து ஜாமீன் தொகை வேண்டி, அவசரச் சட்டம் வெளி வந்தபொழுது, ஜாமீன் தொகையைக் கட்டக் கூடாதென்றும், பத்திரிகையைப் பிரசுரம் செய்ய வேண்டாமென்றும், காரியக் கமிட்டியார் தேச பக்தப் பத்திரிகைகளை வேண்டிக்கொண்டார்கள். பத்திரிகை சொந்தக்காரர்களுக்கு இது கசப்பு மாத்திரையாகவிருந்தது. இப்பொழுதுதான், தேசத்திலே, செய்திகளுக்கு அபரிமிதமான கிராக்கி ஏற்பட்டிருந்த தருணம். இப்பொழுது பத்திரிகையை நிறுத்திவிடக் கூடுமா?

இருந்தாலும், பத்திரிகைகளிற் பெரும்பான்மை நிறுத்தப்பட்டன. உண்மையான செய்திகளைச் சொல்ல முடியாமற் போனதால், பலவித பொய்யான வதந்திகள் புரவ ஆரம்பித்தன. நீண்டகாலம் தேசியப் பத்திரிகைகளால் அடங்கிக் கிடக்க முடியவில்லை. தங்களுடைய எதிரிகளான மிதவாதப் பத்திரிகைகளுக்கு சந்தா கூடி, தொழில் விருத்தியடைந்து வருவதைக் கண்டு, தேசீயப் பத்திரிகைகள் மனம் புழுங்கின. எனவே, மீண்டும் பிரசுர வேலையைத் துவக்கிவிட்டன.

மேமீ 5உ காந்திஜீ கைது செய்யப்பட்டார். அவர் கைதியான பிறகு உப்பளங்களில் பிரவேசித்து, ஏராளமாக உப்பெடுப்பதற்காக, மேல் சமுத்திரக் கரையில் முயற்சிகள் நடைபெற்றன. தொண்டர்கள் திரள் திரளாக உப்பளங்களைத் தாக்குவார்கள். இந்தச் சமயங்களில், போலீஸார் மிகவும் மிருகத் தன்மையாக நடந்துகொண்டார்கள். இந்தக் காட்சியின் நடுநாயகமாக, பம்பாய் நகரம் அப்பொழுது விளங்கிற்று. எப்பொழுதும் ஹர்த்தால்கள், ஊர்வலங்கள், போலீஸ் தடியடிப் பிரயோகங்கள். தடியடிப் பிரயோகத்தால் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை செய்யும் பொருட்டு, தற்காலீக ஆஸ்பத்திரிகள் பல தோன்றின. இப்போராட்டத்தின் அற்புதமென்று சொல்லக் கூடிய நிகழ்ச்சிகள் பல பம்பாயிலே நேர்ந்தன. விளம்பரத்துக்கு தக்க சகல வசதியும் அதனிடம் இருந்தது. அதே மாதிரி சிறிய நகரங்களிலும், கிராமாந்தரங்களிலும் நேர்ந்திருக்கலாம். ஆனால் அந்த நிகழ்ச்சிகளுக்கு விளம்பரம் கிடைக்கவில்லை.

ஜூன் மாதப் பிற்பகுதியில், தகப்பனார் பம்பாய்க்குப் போனார். அவரோடு, தாயாரும், கமலாவும் போயிருந்தார்கள். அவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது—அவர்கள் பம்பாயில் தங்கின சமயத்திலே, தடியடிப் பிரயோகங்களில் அரக்கத்தனமான கொடுமை காணபிக்கப்பட்டது. இவைகள் பம்பாயில் அநேகமாக தினசரி நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன. சுமார் பதினைந்து நாட்களுக்குப்பின்னர், மிகவும் அசாதாரணமான நிகழச்சி ஒன்று நேர்ந்தது. மாளவியாஜீயும், காரியக்கமிட்டி அங்கத்தினர்களும் ஏராளமான ஜனங்கள் பின்தொடர்ந்துவர முன்னே சென்றுகொண்டிருந்தார்கள். இவர்களை முன்னேற வொட்டாமல், போலீசார் தடுத்தார்கள். இரவு முழுதும் இவ்வாறு கழிந்தது. பம்பாயிலிருந்து தகப்பனார் வந்ததும், அவரை ஜூன மாதம் 30-ந் தேதி

அரசாங்கத்தார் கைது செய்தார்கள். அவரோடு சையது மகமதும் கைது செய்யப்பட்டார். காங்கிரஸ் காரியக்கமிட்டி, சட்டம் மீறிய கூட்டம் என்று சர்க்காரால் அறிவிப்பு செய்யப்பட்டபடியால், இவர்கள் இருவரும், காரியக்கமிட்டியின் தலைவர், காரியதரிசி என்ற முறையில் கைதுசெய்யப்பட்டார்கள். இருவருக்கும் ஆறுமாதம் கிடைத்தது. தகப்பஞர் கைதியானதற்கு, வேறு காரணங்களும் இருந்தன. அவர், சிறிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். ஆயுத பாணிகளாயில்லாத பொதுமக்களின் பேரில் சுடும்படியாக, போலீசாரையோ, சிப்பாய்யையோ அதிகாரிகள் ஏவினுல், போலீசாரும் சிப்பாய்களும் என்ன செய்யவேண்டும் என்பதைத் தெளிவாகக்குறிப்பிட்டு பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். இந்தப் பிரசுரம் சட்டத்தைத் தவிழுயதாகும். இந்த சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்று பிரிட்டிஷ் இந்திய சட்டத்தில் காணப்பட்டிருப்பதையே, தகப்பஞர் விரிவாக எழுதியிருந்தார். இருந்தாலும், இதைக்கண்டு சர்க்கார் ஆத்திரப்பட்டார்கள். இது ஆபத்தை யுண்டாக்கும் என்று அவர்கள் கருதினுர்கள். தமது பம்பாய் விஜயத்திஞல் தகப்பஞர் மிகவும் உடல்நொந்து போனுர். விடியற்காலை முதல் நடுநிசி வரையில் அவருக்கு ஓய்வு நேரமே இல்லை. எந்த முடிவுக்கும் அவரே பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. நீண்டகாலமாக அவர் சுகவீனமாக இருந்தார். ஆனுல், இப்பொழுது இன்னும் அதிகமாக, அவருடைய உடல் நலம் சீர்குலைந்து போகவே, விரைவில் பூரண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று டாக்டர்கள் யோசனை கூறியதை ஏற்றுக்கொண்டு, முசூரிக்குப் போக ஏற்பாடுசெய்து கொண்டிருந்தார். ஆனுல் முசூரிக்குப் புறப்படுவதற்கு முன், முதல்நாளே அவர் எங்களோடு நயினி மத்திய சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்தார்.

## XXX

## நைனி சிறையில்

சுமார் ஏழு வருஷங்களுக்குப் பிறகு, மீண்டும் இப்பொழுது சிறை சென்றேன். சிறை நினைவுகள் வாடி மறைந்து போய்க்கொண்டிருந்தன. நான் நைய்னி மத்திய சிறையில் வைக்கப்பட்டேன். ஐக்கியமாகாணத்திலிருக்கும் பெரியசிறைகளில் அதுஒன்று. தனியாக விருக்கும் நூதன அனுபவம் எனக்குக் கிடைத்தது. பக்கா சிறைக்குள் சுமார் 2,200 அல்லது 2,300 கைதிகள் இருந்தார்கள். இவர்கள் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கும் நான் இருந்த இடத்துக்கும் சிறிது தூரம். நானிருந்த அடைப்பிடம் பெரிய சிறைக்குள், ஓர் சிறிய சிறை வடிவத்தில் வட்டம் கொண்டது. குறுக்கு நீளம் நூறுஅடி இருக்கலாம். நாலு புறத்திலும் பதினேந்தடி உயரச் சுவர் கட்டப்பட்டிருந்தது. இதன் மத்தியிலே ஒரு லட்சணமான கட்டிடம். இந்தக் கட்டிடத்தில் 4 அறைகள் இருந்தன. இவைகளில் இரண்டு அறைகள் எனக்குக் கொடுக்கப்பட்டன. ஒன்றிலிருந்து மற்றதற்குப் போகலாம். ஒரு அறையை ஸ்நானத்திற்கும், கக்கூசாகவும் உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும். மற்ற இரண்டு அறைகளும் காலியாயிருந்தன. வெளியிலே சுறுசுறுப்பாக வேலைசெய்து விட்டு, சிறையினுள்ளே வந்ததும், கொஞ்சம் மனச்சோர்வு உண்டாயிற்று. எனக்கு அலுப்பு அதிகமாய் இருந்தது. இரண்டு மூன்று நாட்கள் நான் ரொம்பவும் தூங்கினேன். கோடைகாலம் துவங்கிப் பல நாட்களாயின; வெளிச் சுவருக்கும் உள் கட்டிடத்திற்கும் இடையே இருந்த குறுகிய திறந்த வெளியில், இரவில் தூங்குவதற்கு அனுமதி கிடைத்தது.

என்னுடைய கட்டிலைக் கனமாகச் சங்கிலிபோட்டுக் கட்டியிருந்தார்கள். அதை எடுத்துக்கொண்டு சவாரி விட்டு விடுவேனோ என்று எண்ணினார்கள்போலும்! தப்பி யோடுவதாய் இருந்தால், இந்தச் சுவரில் ஏணியைப்போல் சாத்தி உபயோகப்படுத்தலாமென்ற பயத்திலும் அவ்வாறு செய்திருக்கலாம். இரவு முழுதும் விநோதமான சத்தங்கள்

கேட்கும். கைதி வார்டர்கள் சிறையில் பாதுகாப்புக்காக, சுற்றிச்சுற்றி வருவார்கள். அடிக்கடி பல சுருதிகளிலே, அவர்கள் கூப்பாடு போடுவார்கள். வெகு தூரத்தில் அடிக்கும் காற்றின் அழுகைக் குரலைப்போல, சில சமயங்களில் அவர்கள் நீட்டிக் கூப்பாடு போடுவார்கள். இரவு காவற்காரர்கள், தங்கள் வசமிருக்கும் கைதிகளை அடிக்கடி எண்ணிக்கொண்டு "ஆல்ஸ்வெல்" (எல்லாம் சரி) என்று சத்தம் போடுவார்கள். இரவில் பலதடவைகள் யாரேனும் ஜெயிலதிகாரி ஒருவர், சுற்றிப் பார்த்துக்கொண்டு போவார். பந்தோபஸ்து வேலையிலிருக்கும் வார்டரை உரத்த குரலில் விசாரிப்பார். நான் இருந்த இடம், மற்றவர்களுடைய இடத்திலிருந்து கொஞ்சம் தூரத்திலிருந்ததால், இந்தச் சப்தங்கள் தெளிவாகக் காதில் விழவில்லை. முதலில் அவைகள் என்னவென்று என்னால் தெரிந்துகொள்ளமுடியவில்லை. சில சமயங்களில் காட்டின் ஓரத்தில் இருப்பதாகவும், விவசாயிகள் தங்கள் கழனிகளிலிருந்து காட்டு மிருகங்களை வெருட்டி ஓட்டிக்கொண்டிருப்பதாகவும் எனக்கு தோன்றும். இன்னும் சில சமயங்களில் இது காடுதான் என்றும் இரவிலே சஞ்சரிக்கும் மிருகங்கள் ஊளையிடுகின்றன என்றும் தோன்றும்.

என்னைச் சுற்றி சுவர் சக்கரமாக இருந்தது. நாலுமூலை உள்ள சுவரைக்காட்டிலும் சக்கரச்சுவர், நான் சிறைப்பட்டுக் கிடக்கிறேன் என்ற எண்ணத்தை வற்புறுத்தியது. இது என்னுடைய கற்பனை மட்டும்தானா, அல்லது மற்றவர்களுடைய அனுபவமும் இவ்வாறுதான் இருக்குமா என்று வியப்படைந்தேன். மூலைகள் இல்லாதபடியால், ஒருவித பயங்கரத் தோற்றம் மனதிலே உண்டாயிற்று. பகலிலே, இந்தச் சுவரைப் பார்த்தால், ஆகாயத்தை வளைத்துக்கொண்டு, வானத்தின் பெரும்பாகத்தை என் கண்களிலிருந்து மறைத்துவிடும். கைதிகளுக்கு வானம் ஒரு சிறிய நீலக்கூடாரம்போல்தான் தோன்றும். அதில் போகும் ஒவ்வொரு வெள்ளி மேகத்தையும் ஆவலுடன் காண்பேன். இரவில் அந்தச் சுவர் என்னைக் கொடுமையாக நெருங்கிப் பிடித்துவிட்டதுபோலத் தோன்றிற்று. கிணற்றின்கீழ் நான் இருப்பதாக எண்ணம் உண்டாகும். சற்றுமுன் பார்த்த, நட்சத்திரங்கள் மிதந்துகொண்டிருக்கும். அந்த வானம், வெறும் கற்பனைதானோ என்றும் எண்ணுவேன். நான் சிறையிலிருந்த அடைப்பு விடுதிக்கு "குத்தா கர்" (நாய்வீடு) என்று கைதிகள் ஒரு பரிகாசப்பெயா

வைத்திருந்தார்கள். நான் வருவதற்கு வெகுநாள் முன்னமேயே இப்பெயர் வழங்கி வந்தது. இந்தக் கட்டிடம் முதன் முதல், மற்றைய கட்டிடங்களிலிருந்து விலகிக் கட்டப்பட்ட பொழுது, மிகவும் அபாயகரமான கைதிகளை இங்கே வைத்திருந்தார்கள். பின்னர் அரசியற் கைதிகளும், விசாரணையில்லாமல் காவலிலிருக்கும் தேச பக்தர்களும் மற்றையக் கைதிகளிடமிருந்து பிரிக்கப்பட்டு, இங்கே வைக்கப்பட்டிருந்தார்கள். என்னுடைய விடுதிக்கு முன், கொஞ்ச தூரத்தில் ஒரு கட்டிடம் இருந்தது. அதை நான் முதன்முதல் பார்த்தபொழுது திடுக்கிட்டுப்போனேன். அது ஒரு பெரிய கூண்டைப்போல் காணப்பட்டது. அதனுள்ளே மனிதர்கள் சுற்றிச் சுற்றிப் போய்க்கொண்டிருந்தார்கள். இது, நீர்க்குழாய் இயந்திரம் என்று தெரிந்து கொண்டேன். ஏககாலத்தில் பதினாறு பேர்கள் சேர்ந்து இந்த வேலைசெய்து சுற்றிவந்தால்தான் தண்ணீர் வரும். இந்தத் தண்ணீரைக்கொண்டுதான் சிறைக்கு ஸப்ளை. இந்தக் காட்சி துவக்கத்தில் எனக்கு மிகவும் வெறுப்பாய் இருந்தபோதிலும், கொஞ்சம்கொஞ்சமாகப் பழகிப்போய் விட்டது. எல்லாத் தோற்றங்களும் அப்படித்தானே! ஆனால், மனிதனுடைய உழைப்பை இவ்வாறு முட்டாள் தனமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் உபயோகப்படுத்துவது ரொம்பக் கேவலம் என்று எனக்கு தோன்றிற்று. அந்த இடத்தைக் கடந்து போகும்பொழுதெல்லாம், மிருகக் காட்சிசாலையின் ஞாபகம் எனக்கு உண்டாகும்.

முதலில் தேகப் பயிற்சிக்காகவோ, அல்லது வேறு எந்த அலுவலைக்கொண்டோ என்னுடைய விடுதியினின்றும் வெளியே போக எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. பின்னர், அதிகாலையில், இருள் நீங்குமுன், சிறையின் சுவருக்கு அருகே அரைமணிநேரம் ஓடவோ, நடக்கவோ எனக்கு அனுமதி கிடைத்தது. அதிகாலை நேரத்தை ஏன் அவர்கள் பொறுக்கி எடுக்கவேண்டும்? மற்றையக் கைதிகள் என்னைப் பார்க்கக் கூடாதாம்! நான் அவர்களோடு சேர்ந்து பேசவும் கூடாதாம்! இந்தக் காலை உலாவுதல் எனக்குப்பிடித்தது. இதனால், என் அலுப்புத்தீர்ந்து; சந்தோஷம் அடைந்தேன். எனக்குக் கொடுக்கப்பட்டது அரை மணி நேரந்தானே? அதற்குள், அதிகமான தேகப்பயிற்சி செய்வதற்கு என்ன வழியென்று யோசித்து, ஓடுவதற்கு ஆரம்பித்தேன். தினசரி, இரண்டு மைலுக்கதிகமாக ஓடுவேன். ஒவ்வொரு நாளும், அதிகாலையில் மூன்

றரை அல்லது நாலுமணிக்கு இருட்டா யிருக்கும் பொழுதே எழுந்துவிடுவேன். எனக்குக் கொடுக்கப்பட்டிருந்த விளக்கு படிப்பதற்குப் போதாததாக விருந்ததால் இரவில் சீக்கிரம் உறங்கி விடுவேன். எனவே, அதிகாலையில் எழுந்திருப்பதற்கு சௌகரியமாயிருந்தது. நக்ஷத்திரங்களைப் பார்ப்பதிலே எனக்கு ஆசை. நக்ஷத்திரங்களின் நிலைமையைக்கொண்டு, அநேகமாக், சரியான நேரத்தை நிர்ணயிப்பேன். நான் படுத்துக்கொண்டிருக்கு மிடத்திலிருந்து வடதுருவத்தைப் பார்த்துக்கொண்டிருக்க முடியும். அது எப்பொழுதும் ஒரே இடத்தில் இருப்பதைக்கண்டு எனக்குப் பெரிய துணை கிடைத்தது போல் ஆறுதல் உண்டாகும். மீனமண்டலம் முழுதும் சுற்றித்திரிந்து கொண்டிருக்கும்பொழுது, துருவ நக்ஷத்திரம் மட்டும், இருந்த இடத்திலேயே நிலைத்து நிற்பதைக்காண மனதுக்கு நிம்மதியாக இருந்தது. அந்தக் காட்சி நிலைபெற்ற கொள்கைக்கும், மகிழ்ச்சியுடன்கூடிய ஏகாக்கிரக சித்தத்துக்கும் உதாரணமாகக் காணப்பட்டது.

ஒரு மாத காலத்துக்கு எனக்கு தோழர்களே கிடையாது. ஆனால் எனக்குச் சமையல் பண்ணிப் போட ஒரு கைதி; விடுதியைக் காக்க கைதி வார்டர்கள்; இவர்களுக்கு மேல் அசல் வார்டர். இவர்கள் என்னுடைய விடுதியி லிருந்தார்கள். ஆகவே, தோழர்களில்லாவிடினும், நான் முற்றிலும் தனியாய் இருக்கவில்லை. சில சமயங்களில், அலுவலாக நீண்ட காலத் தண்டனையை அனுபவிக்கும் கைதி வார்டர்கள் அடிக்கடி வருவதுண்டு. ஆயுள் தண்டனை, அதிகமாக இருபது வருடம் அல்லது அதற்குக் கொஞ்சம் குறைவாகச் சிறையிலிருந்துவிட்டால், ஆயுள் தண்டனை தீர்ந்து போவது வழக்கம். ஆனால் இருபது ஆண்டுகளுக்கு அதிகமாக சிறைவாசம் செய்து வரும் கைதிகளிற் பலர் இந்தச் சிறையில் இருந்தார்கள். இத்தகைய கைதிகளில் ஒரு பேர்வழியைப் பார்த்ததும், எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. கைதிகளின் தோள்களிலே அவர்களுடைய சட்டைகளில் மாட்டிக்கொள்ள சிறிய மரச் சீட்டுகள் கொடுக்கப்படும். அதைப் பார்த்தால் அவர்களுடைய தண்டனை, அவர்களுக்கு எப்பொழுது விடுதலை என்ற விவரங்கள் தெரியும். இந்தப் பேர்வழியின் மரச் சீட்டில் அவருக்கு விடுதலை வருஷம் 1996 என்று பொறிக்கப்பட்டிருந்தது. 1930-ஆம் வருடத்துக்குள்ளேயே அவர் பல ஆண்டுகளாகச் சிறையிலிருந்து வருகின்

ஞர். அப்பொழுது அவருக்கு நடுத்தர வயது இருக்கும். அவருக்குப் பல தண்டனைகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லாவற்றையும் கூட்டிக் கணக்குப் போட்டால் 75 வருஷங்கள் கூடுதல் ஆயிற்று.

பல வருஷங்களுக்கு, இந்த ஆயுள் தண்டனைக்காரர்கள் ஒரு குழந்தையை அல்லது ஸ்திரீயையும், குதிரை, நாய் முதலிய மிருகங்களைக்கூடப் பார்ப்பதில்லை. வெளியுலகத்திற்கும், அவர்களுக்கும் அறவே சம்பந்தம் விட்டுப் போகிறது. மனித சல்லாபமே கிடையாது. அவர்களுடைய உள்ளங்களில் குடிகொண்டிருப்பவை, அச்சம், பழி வாங்குதல், பகைமை இவைகள்தான். அவர்கள் சதா காலமும் இவைகளைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு, உலகத்தின் மகிழ்ச்சியையும், கருணையையும், நல்லதனத்தையும் அடியோடு மறந்து, கெட்ட தன்மைகளிலேயே மூழ்கிப் போய்விடுகிறார்கள். கடைசியாக ஆத்திரம்கூட தன்னுடைய வலுவை இழந்துபோய்விடுகிறது. அவர்கள் எதிலும் பிடித்தமில்லாமல், இயந்திரத்தைப்போல் உணர்ச்சியின்றி வாழப் பழகி விடுகிறார்கள். அவர்களுடைய தினசரி வாழ்க்கை ஒரே வகையானது. மாறுதலே கிடையாது. அச்சம் என்ற உணர்ச்சியைத் தவிர, அவர்களிடம் வேறு எந்த உணர்ச்சியும் இருப்பதில்லை. அடிக்கடி கைதிகளை எடை போடுவார்கள். இந்த பயங்கரமான சிறை வாழ்வினால், வாடி வதங்கிப் போகும் மனதை, சிறையதிகாரிகள் எவ்வாறு அளந்து எடை போட முடியும்? மரண தண்டனை கூடாதென்று ஜனங்கள் வாதம் செய்கின்றார்கள். அவர்களுடைய வாதத்தைப் பெரும் பகுதியில் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இந்த ஆயுள் கைதிகள் சிறையில் சிறிது சிறிதாக உயிருடன் கொல்லபபடுவதைப் பார்க்கையில் அவாகளுடைய மன வேதனை என்னைத் துளைக்கையில், மரண தண்டனை இதைவிடச் சிறந்தது என்றும் எனக்குத் தோன்றும். ஆயுள் கைதி ஒருவர், ஒரு நாள் என்னிடம் வந்து, "எங்கள் கதி என்ன? சுயராஜ்யம வந்தால், எங்களை இந்த நரகத்திலிருந்து விடுவித்துவிடுவார்களா?" என்று கேட்டார்.

இந்த "ஆயுள்" கைதிகள் யார்? பெரும்பான்மையோர் கலவரங்களிலும், கொள்ளைகளிலும், கூட்டமாகத்தண்டிக்கப்பட்டவர்கள். ஐம்பது நூறாகச் சேர்ந்து தண்டிக்கப்படுகிறார்கள். இவர்களிற் சிலர் உண்மையாகவே குற்றவாளிக

ளாய் இருக்கலாம். ஆனால், பெரும்பான்மையோர் குற்ற வாளிகளா என்பது சந்தேகம். இத்தகைய வழக்குகளில் ஜனங்கள் அகப்பட்டுக்கொள்வது மிகவும் எளிதான சங்கதி யாகும். ஆளை அடையாளம் காண்பித்தல், அப்ரூவரின் சாட்சி இவை இரண்டு மிருந்தால் போதும். இப்பொழுதோ கொள்ளைகள் மலிந்து வருகின்றன. சிறைகளும் நிறைந்துவருகின்றன. ஜனங்கள், பட்டினி கிடக்கவேண்டியதாய் இருந்தால், அவர்கள் என்னதான் செய்வார்கள்? நீதிபதிகளும், நிர்வாகிகளும் குற்றங்கள் அதிகரித்து வருவதைப்பற்றி, நீண்ட பிரசங்கம் செய்கின்றார்கள், ஆனால் இந்தக் குற்றங்களுக்கு அடிதாங்கிகளாக இருக்கும் பொருளாதாரக் காரணங்களைக் கண்ணைத் திறந்து பார்ப்பதே இல்லை. கிராமங்களிலே சிறு கலகங்கள் நேரும். சின்ன நிலத் தகராறுகளால் கைகலக்க நேரிடும். தாராளமாக தடிகள் பிரயோகிக்கப்படும். ஒருவன் இறந்துபோய்விடுவான். இதனுடைய முடிவு என்ன? குடியானவர்களிலே பலர், ஆயுள் தண்டனை அடைவார்கள். இந்த வகையில் சில சமயங்களில் குடும்பத்து ஆண்பிள்ளைகள் எல்லோரும் சிறையிலிருப்பார்கள். பெண்கள் மட்டும் வெளியே இருந்து ஜீவனம்செய்து, எப்படியோ காலங்கழிப்பார்கள். இவ்வாறு சிறை சென்றவர்களில் யாரும் குற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. உடலிலும் உள்ளத்திலும் சக்திவாய்ந்த வாலிபர்கள்; கொஞ்சம் பயிற்சி, வேறு துறையில் மனத்தைத் திருப்புதல், முதலிய வசதிகள் கொடுத்தால் இவர்கள் நாட்டின் மதிப்புற்ற பொக்கிஷங்களாக விளங்குவார்கள். இந்தியச் சிறைகளில், பழுத்துக் கெட்டுப்போன கைதிகள் சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு, உலகத்தைக் கண்டால் வெறுப்பு. எதையாவது ஒன்றைச் செய்து, பிறருக்குத் துன்பம் உண்டாக்கிக்கொண்டிருக்கும் மனப்பான்மை கொண்டவர்கள். இவர்களைத் தவிர, சிறையிலிருந்த பெரும்பான்மையோரைத் தயக்கமின்றி நான் நம்புவேன். கெட்ட சுபாவத்தினால் குற்றம் செய்யக்கூடியவர்கள், குற்றத்துக்கு இயல்பு இல்லாதவர்கள் என்று இரு கூறுகளாகப் பிரித்து, கணக்கெடுக்கும் யோசனை சிறையதிகாரிகளில் எவருக்கும் தோன்றியதில்லைபோலும். இந்த விஷயத்தில் நியூயார்க் (அமெரிக்கா) சிங்காங்சிறை அதிகாரி லூயிலாஸ் என்பவர், ருசிகரமான புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார். தன் சிறையிலுள்ளவர்களில் 100க்கு 50 பேர் குற்றஞ்செய்யும் சுபாவமில்லாதவர்களென்றும், மீதியில் 25 பேர் கெட்ட சகவாசத்

தாலும், கொடுமையான சமூக நிலைமைகளாலும் குற்றவாளிகளானூர்களென்றும், எட்டில் ஒருபங்குபேர்வழிகள்தான் திருத்தமுடியாத குற்றசுபாவ முடையவர்களென்றும் கணக்கிட்டிருக்கிறார். இந்தியச் சிறைகளில் மோசமான குற்றவாளிகள் இந்த கணக்குக்கு குறைவாகவே இருக்குமென்று நினைக்கிறேன்.

கொஞ்சம் வேலையும் கூலியும் கொடுத்து கல்விப்பயிற்சியும் ஏற்படுமானல், வெகுவிரைவில் இந்தியச் சிறைகள், காலியாய் போய்விடும். இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து, வெற்றி பெறச் செய்ய விரும்பினுல், ஜனசமூக வாழ்க்கையை அடியோடு மாற்றியமைக்கும் தீவிரமான திட்டத்தையும் தத்துவத்தையும் கைக்கொள்ள வேண்டிய தவசியமானதாகும். இதைச்செய்யத்தவறினல், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவில் செய்வது போல, போலீஸ்படைகளை விருத்திசெய்து, சிறைகளை, அதிகமாகக் கட்டிக் கொண்டே போகவேண்டியதாயிருக்கும். இந்தியாவில் சிறைக்குச் செல்லுபவர்களின் எண்ணிக்கை பயங்கரமாக வளர்ந்துகொண்டே வருகிறது. 1933-ம் வருஷத்தில் வங்காளத்திலும், பம்பாய் மாகாணத்திலும் சிறை சென்றவர்களின் தொகை 2,52,000 என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாகாணங்களின் புள்ளி விவரங்கள் எனக்குத் தெரியாது. ஆனல் இரண்டு மாகாணங்களில், இரண்டரை லட்சம் பேர்கள் இருப்பின்,இந்தியா முழுதுக்கும் பத்துலட்சம் பேர்கள் இருப்பார்களென்று சாதாரணமாக எண்ணலாம். இந்தத்தொகை முழுதும் நிரந்தரமான சிறையாளர்களென்று கூறலாகாது. அநேகர் சிறிய காலத்துக்குத் தண்டனை பெறுகிறார்கள். நிரந்தரப் பேர்வழிகள் குறைச்சலா யிருந்தாலும், அதுவும் கணிசமான தொகையாகத்தான் இருக்கவேண்டும். இந்தியாவின் முக்கிய மாகாணங்களில் இருக்கும் சிறைகளே உலகத்தில் அதிக கைதிகளடங்கிய சிறைகளென்று சொல்லப் படுகின்றன. என்னுடைய ஐக்கிய மாகாணமும் இந்த இச்சிக்கத்தகாத கௌரவத்தைப் பெற்றிருக்கிறது. சிறையிலே, கைதியை மனிதனுகக்கருதி அவனை எல்லா வகைகளிலும் திருத்தி அபிவிருத்தியடையச் செய்யவேண்டும் என்ற நோக்கமே கிடையாது. கைதிகளைத் தப்பியோடாமல் காத்துக்கொள்கிற வேலையில் மட்டும் ஐக்கிய மாகாணச்சிறை நிர்வாகத்தை மிகுதியும் சிறப்பாகக் கூறலாம். பதினுயிரத்தில்

ஒரு கைதிகூட ஐக்கிய மாகாணச்சிறையை விட்டுத் தப்பியோடி விட்டதாக, இதுவரையிலும் யாரும் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள்.

15 வயது முதல் இளவயதுள்ள வாலிபர்கள் ஏராளமாகச் சிறைக்குள் இப்பொழுது இருக்கிறார்கள். சிறை நிர்வாகத்தில் இதுவே மிகவும் துக்ககரமான காட்சி. சந்தர்ப்பம் மட்டும் கொடுக்கப்பட்டால், இந்த வாலிபர்கள் எவ்வளவோ நல்ல ஸ்திதிக்கு வந்துவிடுவார்கள். அவர்களுடைய முகத்திலே, ஆரோக்கியமும் அறிவும் ஜ்வலிக்கின்றன. அவர்களுக்கு எழுதப்படிக்க கற்றுக்கொடுக்க, சிறிது காலமாக சிறையில் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் திறமையாக செய்யப்படவில்லை. பயன்படக்கூடிய அளவு போதிக்கப் படுவதில்லை. சிறையிலே, விளையாட்டுகளுக்கு சந்தர்ப்பங்களே கிடையாது. சிறைக்குள்ளே பத்திரிகைகள் வரக்கூடாது. நல்ல புஸ்தகங்களும் பிரவேசிக்கக் கூடாது. சுமார் பன்னிரண்டு மணி நேரம் இரவில் கைதிகள் தங்கள் அறைகளில் பூட்டப்பட்டிருக்கின்றார்கள். அந்த நீண்ட காலத்தில் வேறு வேலை ஒன்றும் அவர்கள் செய்யமுடியாது. மூன்று மாதத்துக்கொரு முறைதான் உற்றார் உறவினரைப் பார்க்கலாம். மூன்றுமாதத்துக்கொரு முறை, கடிதங்களும் எழுதலாம். இவ்வளவு நீண்ட கால எல்லையை வைப்பது அக்கிரமமாகும். இந்த வசதியைக் கூட அநேக கைதிகள் உபயோகப்படுத்திக்கொள்ள முடியாமற் போய்விடுகின்றது. எழுதப்படிக்கத் தெரியாத கைதிகள் ஜெயிலதிகாரிகளைக்கொண்டுதானே ஊருக்கு கடிதம் எழுதுவிக்கமுடியும்? ஆனால் எந்தச் சிறைச் சிப்பந்தி அக்கரையோடு கடிதம் எழுதிக்கொடுக்க முன்வருவான்? அவருடைய வேலை அதிகப்பட்டு, சுமந்துபோகாதா! சில சமயங்களில் கடிதம் எழுதினாலும், விலாசம் தெளிவாக இல்லாததால், கடிதம் போய்ச் சேருவதே இல்லை. உறவினர்களைப் பேட்டி காணுவது இன்னும் கஷ்டம். சிறையதிகாரிகளை எப்படியேனும் திருப்தி செய்தால்தான், அந்தப் பாக்கியம் கிட்டும். சில சமயங்களில் கைதிகளை தூரத்திலிருக்கிற சிறைகளுக்கு மாற்றி விடுவார்கள். இது உறவினர்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை. ஆகவே, அவர்கள் திண்டாடுவார்கள். பல ஆண்டுகளாகக் குடும்பச் செய்தியே தெரியாமல், தவித்துக் கொண்டிருக்கிற கைதிகள் அநேகரை நான் சந்தித்திருக்கிறேன். பேட்டியோ வெகு வேடிக்கையாக நடைபெறும். கைதிகளைச் சேர்த்து கூட்

டமாக வைப்பார்கள். நடுவே ஒரு தண்டியிருக்கும்; அதற்கு மறுபுறத்தில் உறவினர்கள் இருப்பார்கள். ஏககாலத்தில், எல்லோரும் சேர்ந்து சப்தம் போடுவார்கள். காதுக்கு வேதனையாக இருக்கும். பேட்டியில் தனித்துப்பேசிக் கிடைக்கக்கூடிய ஆறுதலே, இல்லாமற் போய்விடும்.

ஆயிரத்தில் ஒருவருக்கு, சில சலுகைகள் கிடைக்கலாம். நல்ல ஆகாரம், அடிக்கடி பேட்டிகள், கடிதம் எழுதுதல் இவைகள் ஆயிரத்திலொரு இந்தியருக்குக் கிடைக்கலாம். ஆனால், ஐரோப்பியர்களாய் இருந்தால், இந்தச் சலுகைகள் எல்லோருக்கும் கிடைக்கும். சட்ட மறுப்பு இயக்க காலத்தில் ஆயிரக் கணக்கான அரசியற் கைதிகள் சிறைக்குள் சென்றாலும், தனிச் சலுகைகள் பெற்றவர்கள் ஒரு சிலரேயாவர். நூற்றுக்கு 95 பேர்கள் சாதாரணக் கைதிகளைப்போல நடத்தப்பட்டு வந்தார்கள். மேற் சொன்ன சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பலாத்கார, பயங்கர வேலைகளில் கலந்துகொண்ட சிலரை, தனித்து ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீண்ட கால தண்டனை; தனிக் காவல்; தனியறை. சிறையிலே, ஏதேனும் பெரிய குற்றம் செய்தால், சாதாரணமாக இந்தத் தனிக் காவல் தண்டனை கொடுக்கப்படுவதுண்டு. ஆனால், இந்தப் புரட்சிக்காரர்களோ, அநேகமாக வாலிபப் பருவத்திலுள்ளவர்கள். எவ்வளவு ஒழுங்காக நடந்துகொண்டாலும், தனிக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தனிக் காவல், கோர்ட்டாரால் அளிக்கப்பட்ட தண்டனை அல்ல. அப்படியிருந்தும், யாதொரு முகாந்தரமுமில்லாமல், இந்தப் பயங்கரமான தண்டனையை சிறையதிகாரிகள், இந்த வாலிபர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும்? இது சட்டத்துக்கு பொருந்தியதே அல்ல. அசாதாரணமான கொடுமையாகத் தோன்றுகிறது. தனிக் காவல் சிறிது காலத்துக்கு இருந்தாலுமே, மிகுந்த துன்பத்தை கொடுக்கக் கூடிய தொன்றாகும். இதையே பல ஆண்டுகள் நீளும்படி செய்தால், எவ்வளவு பயங்கரயாயிருக்கும்? சிறிது சிறிதாக, தொடர்ந்தாற்போல மனம் சீர்குலைந்து போய், பயித்தியம் பிடிக்கும் நிலைமைக்கு வந்துவிடும். கண்களில் ஒளியே இருக்காது. அர்த்த மில்லாமல், கண்ணைப் புரட்டிப் புரட்டி விழிப்பான். திகிலடைந்த விலங்கைப்போல அவன் தோற்றத்தில் தவிப்பதைப் பார்க்கலாம். தனிக் காவல் என்பது ஆன்மாவைப் படிப் படியாகச் சித்திர

வதை செய்து கொல்லுவதாகும். தனிக் காவலைச் சகித்து ஒருவன் தப்பிப் பிழைத்தாலும், அவன் ஒரு தாறுமாறான பேர்வழியாக ஆகின்றான். இவ்வளவு கேவலமான நிலைக்குக் கொண்டுவரப்படுகிறானே, இவன் உண்மையிலேயே குற்றம் செய்தவன்தானோ என்ற கேள்வி எப்பொழுதும் தோன்றக் கூடும். அதற்கு யார், எத்தகைய சமாதானத்தைச் சொல்ல முடியும்? இந்தியாவில், போலீஸார் கையாளும் முறைகளைச் சாதாரணமாக ஜனங்கள் சந்தேகிக்கின்றார்கள். அவைகளில் பொதுவாக நம்பிக்கை யில்லை. அதிலும் அரசியல் சம்பந்தமான வழக்குகளில், போலீஸாரின் செய்லுகைகளில் பன்மடங்கு அவநம்பிக்கை இருந்து வருகின்றது.

வெள்ளைக்காரக் கைதிகளுக்கு சிறையில் தனியான மதிப்பு காண்பிக்கப்படுகிறது. அவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்குச் சிறந்த ஆகாரமும் குறைந்த வேலையும் கிடைக்கின்றன. அவர்கள் அதிகமான கடிதங்களை எழுதலாம். அதிகமாக உறவினர்களின் பேட்டிகளுக்கு வசதி கொடுக்கப்படுகிறது. வாரம் ஒருமுறை பாதிரியார் அவர்களைச் சிறையில் வந்து சந்திக்கிறார். எனவே வெளியுலகத்துக்கும் இந்த வெள்ளைக்கார கைதிகளுக்கும் தொடர்பு உண்டாகிவிடுகிறது. விகடப் பத்திரிகைகளையும், சித்திரப்பட பத்திரிகைகளையும் பாதிரியார் சிறைக்குவரும் பொழுது கையோடு கொண்டு வருகிறார். தேவையானல் அவர் கைதிகளின் குடும்பத்தாருக்கு அடிக்கடி தகவல் கொடுப்பார்.

இந்த உரிமைகள் வெள்ளைக்காரக் கைதிகளுக்கு இருக்கின்றனவே என்று யாரும் மனம் புழுங்கமாட்டார்கள். இந்த உரிமைகள்கூடப் போதமாட்டா வென்பது என் எண்ணம். ஆனல், மனிதர்களுக்குள் வேற்றுமை பாராட்டி ஒருவருக்கு அதிகமான சலுகையும், மற்றவருக்கு குறைந்த சலுகையும் காண்பிப்பதைப் பார்க்க மிகவும வருத்தமா யிருக்கிறது. கைதியை மனிதனாகக் கருதவில்லையே என்ற வருத்தம் உண்டாகிறது. கைதியை மனிதனாகக் கருதாததால், சிறையில் அவனை மனிதனாகவும் நடத்துவதில்லை. அரசாங்க யந்திரத்தின் மனிதத் தன்மையில்லாத மிகவும் கேவலமான ஸ்வரூபத்தை சிறையிலேதான் காணமுடியும். சிறை நிர்வாகம் என்பது ஒரு யந்திரம். அதற்கு மூளை கிடையாது. சிந்தனை சக்தி கிடையாது. அகப்பட்டவர்களை எல்லாம் அது நசுக்

கித் தேய்த்துவிடும். இந்த யந்திரத்தின் உண்மையான உரு வத்தைத் தெளிவாக வெளிக்காண்பிக்கும் பொருட்டு, சிறை விதிகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இந்த விதிகளை ரோஷ முள்ள ஆண்களும் பெண்களும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. மனிதத்தன்மையைச் சிறிதளவும் காணமுடி யாத சிறை நிர்வாகத்தால், மன வேதனைதான் ஏற்படும். திட நெஞ்சு படைத்த ஆயுள் கைதிகள்கூட, இந்த யந்திரத்தால் நசுக்குண்டு குழந்தைகளைப்போல் அழுவதை, நான் பார்த் திருக்கிறேன். ஆறுதலாக ஒரு வார்த்தை சொன்னாலும், அவர்களுடைய முகம் திடீரென மாறி நன்றியறிதலும் மகிழ்ச்சியும் ஊடே தாண்டவமாடும்.

கைதிகளுக்குள்ளே நல்ல நேசப் பான்மையும் தர்ம சிந் தனையும் உண்டு. 'கருப்புக்குல்லா'க் கைதி (அதாவது பன் முறை தண்டிக்கபட்டு சிறையே தன் முக்கியவாசஸ்தல மாகக் கொண்டவன்.) ஒருவன் குருடனாகிவிட்டான். பதின் மூன்று வருஷங்களுக்குப்பிறகு, அவன் விடுவிக்கப்பட்டான். வெளியே போனால் அவனுக்கு நண்பர் ஏது? கையில் காசு ஏது? எனவே, அவனுடைய தோழர்களான கைதிகள் அவ னுக்கு உதவிசெய்ய ஆவலுடன் இருந்தனர். ஆனால் அவர் களால் அதிகமாக ஒன்றும் செய்யமுடியவில்லை. ஒருவன் தன்னுடைய சட்டையைக் கொடுத்தான்; இன்னொருவன் ஒரு துணியைக்கொடுத்தான். அன்று காலையில்தான் இன் னொருவனுக்குப் புதிய செருப்புகள் வந்திருந்தன. அவைகளை அவன் என்னிடம் காண்பித்து மிகவும் கர்வப்பட்டுக்கொண் டிருந்தான். சிறையிலே இது ஒரு பெரிய பொக்கிஷமாகும். ஆனால் குருட்டுத்தோழன் வெறுங் காலோடு வெளியே போகி றான் என்பதைக்கண்டதும், அவன் தன்னுடைய புதிய ஜோடுகளை மகிழ்ச்சியுடன் அவனுக்குக் கொடுத்துவிட்டான். ஜெயிலுக்கு வெளியே இருப்பதைக்காட்டிலும் ஜெயிலி னுள்ளே அதிகமாக தர்ம சிந்தனை இருப்பதாக நான் எண்ணி னேன். 1930-ம் ஆண்டு மிகவும் அற்புதமான வருஷமாகும். உற்சாகமளிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் பல நேர்ந்தன. நாடகத் தில் காணப்படுவது போன்று திடீர் திடீரென்று, காட்சிகள் மாறின. என்ன ஆச்சரியமான விஷயங்கள்! இந்தக் காந்திஜீ, எப்பேர்ப்பட்டவர்! நாடுமுழுதும் உற்சாகத்தைக் கிளப்பி விட்டு, நாட்டாருக்கு ஆவேசத்தையளிக்கக் கூடிய ஆச்சரி யப்படத்தக்க அவரது சக்தியைக் கண்டு நாங்கள் வியப்

படைந்தோம். அவரிடத்தில் ஏதோ ஒரு அமானுஷ்யமான சக்தி இருக்கின்றது. அவரைப்பற்றி, கோகலே உபயோகப் படுத்தின வார்த்தைகள் எங்களுக்கு நன்ருக ஞாபகமிருக்கின் றன. களிமண்ணிலிருந்து வீரர்களைப் படைக்கும் ஆற்றல் காந்திஜீயிடம் இருக்கிறதென்று கோகலே சொன்னது நன் ருக ஞாபகம் இருக்கிறது.

நாட்டின் பொது லட்சியத்தை அடையப் பெறுவதற்கு சாத்வீகச் சட்டமறுப்பு, இணையற்ற ஆயுதம் என்பது ருசு ஆய்விடும் போலக் காணப்பட்டது. நாட்டுக்குத் தன்னு டைய வல்லமையில், அழுத்தமான நம்பிக்கை வளர்ந்துவந் தது. இந்தியா வெற்றியடையாமல் இருக்கமுடியாது என்று அதன் நண்பர்களும் எதிரிகளும் எண்ணத் தலைப்பட்டார்கள். இயக்கத்துக்குள் நின்று ஊக்கத்துடன் வேலை செய்தவர்க ளுக்கு ஒரு வகைக் களிப்பு, மயக்கம் ஏற்பட்டது. இந்தக் களிப்பு, மதில்களைத் துளைத்துக்கொண்டு, எப்படியோ, சிறைக்குள்ளும் வந்து சேர்ந்தது. ஸ்வராஜ்யம் வந்துகொண் டிருக்கிறது என்று சாதாரணக் கைதிகள் கூட சொல்லத் துவக்கினுர்கள். தங்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக் காதா என்று அவர்கள் ஆத்திரத்துடன் காத்துக்கொண்டிருந் தார்கள். கடைத்தெரு வதந்திகளைக் கேட்கும் சிறை வார்டர் கள் கூட, ஸ்வராஜ்யம் நெருங்கி வருகின்றது என்று எதிர் பார்த்தார்கள். சிறிய சிறை அதிகாரி, திகில் பிடித்துப் போனுர். சிறையில் எங்களுக்கு தினசரிப் பத்திரிகைகள் கிடையாது. ஒரு ஹிந்தி வாரப் பத்திரிகை கிடைக்கும். அதிலகப்படும் செய்திகளைக்கொண்டு நாங்கள் எங்கள் கற் பனைகளை வளர்த்துக்கொள்வோம். தினசரி போலீஸ் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், ஷோலாப்பூரில் இரா ணுவ அமுல், தேசீயக்கொடியைத் தாங்கிச் சென்றதற்காகப் பத்து வருஷம் தண்டனை ; இவ்வாறு செய்திகள் கிடைக்கும். நாங்கள் எங்களுடைய நாட்டாரைப்பற்றி மிகவும் கர்வமடை யத் துவக்கினேம். முக்கியமாக, எங்களுடைய பெண்மணிக ளின் ஊக்கத்தைக் கண்டு வியப்படைந்தோம். எங்கள் குடும்பத்தில், என் தாயார், மனைவி, சகோதரிகள், மற்றும் ஒன்றுவிட்ட சகோதரிகள், பெண் தோழர்கள் முதலியவர் கள் காண்பித்த அபாரமான உற்சாகத்தைக் கண்டு எனக்குத் தனியாக ஒருவகைத் திருப்தி ஏற்பட்டது. நான் அவர்களை விட்டுப் பிரிந்திருப்பினும், அவர்களும் நானும் இந்த இயக்கத்

தின் மூலமாகப் புதியதோர் நெருங்கிய உறவு கொண்டோம். என் குடும்பம், ஜனசமூகத்தில் கலந்துபோனதைக் கண்டு, எனக்கு மகிழ்ச்சி. குடும்பம், தன்னுடைய தனித்தன்மையை இழக்காமல், நாட்டோடு பிணைத்துக்கொண்டதில், எனக்கு ஆனந்தம். கமலா சுகவீனமாய் இருந்தாலும், அபாரமான ஊக்கத்தைக் காண்பித்தாள். இது, எனக்கு வியப்பாய் இருந்தது. அபாரமான வேலைசெய்தும், சிறிது காலம் அவளது உடல் நலம் கெடாமலிருந்தது.

சிறையிலே, நான் சௌகரியமாகக் காலம் கழித்து வந்தேன்; வெளியிலோ, மற்றவர்கள் ஆபத்தை மேற்கொண்டு போராடுகின்றார்கள் என்ற எண்ணம் என்னை மிகுதியும் வருத்தியது. எனக்கு வெளியிலே போக ஆவல். ஆனால், அவ்வாறுசெய்ய முடியாததால், சிறைக்குள்ளேயே எனது வாழ்வை மிகவும் கடுமையாக ஆக்கிக் கொண்டேன். ஓய்வு இல்லாமல் வேலை செய்யத் துவக்கினேன்: என்னுடைய ராட்டையில் தினசரி மூன்று மணிநேரம் நூற்பேன். இரண்டு மூன்று மணி நேரம் நெய்வேன். இந்த வசதியைச் சிறை அதிகாரிகளிடமிருந்து நான் கேட்டுப் பெற்றுக்கொண்டேன். இந்த அலுவல்கள் என் மனதுக்கு ரொம்பவும் பிடித்தன. களைப்பு அதிகமாய் இல்லாமலும், சிந்தனை அதிகமாகச் செய்யாமலும் செய்யக்கூடிய அலுவல்களானபடியால், எனது மனத்திலெழுந்த தாபத்தை இவைகள் தணித்துவந்தன. நான் ரொம்பவும் படித்தேன். துணி முதலியவைகளைத் தோய்ப்பதிலும், விடுதியைச் சுத்தம் செய்வதிலும், காலத்தைக் கழித்து வந்தேன். எனக்கு சாதாரணக்காவல் தண்டனை தான். இருந்தாலும் வேண்டுமென்று மனப்பூர்வமாக வேலை செய்தேன்.

வெளியே நேர்வனவற்றைப்பற்றிச் சிந்தனை செய்வதிலும், எனது சிறை அலுவல்களிலுமாக, நயினி சிறையில் காலம் கழிந்துவந்தது. இந்தியச் சிறையின் நிர்வாகத்தைக் கவனித்துப்பார்த்தால், அது, பிரிட்டிஷ் இந்திய அரசாட்சியின் திறமையுடன், ஒப்பிடக்கூடியது என்று எனக்குத் தோன்றிற்று. அரசாட்சி யந்திரத்தின் திறமையைச் சிறையிலும் காணலாம். நாட்டில் அரசாங்கத்துக்கு இருக்கும் பிடிப்பை, சிறை அதிகப்படுத்துவதாகும். ஜனங்களைப்பற்றி அரசாட்சிக்கு கவலையே கிடையாது. வெளித்தோற்றத்துக்கு, சிறையின் நிர்வாகமும் திறம்பட நடப்பதாகத்தான்

தோன்றும். இது ஒரு வகையில் உண்மையே. ஆனால் சிறைக்குள் வருபவர்களைத்திருத்தி, அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டும் என்ற நோக்கம்தான் சிறையினுடைய லட்சியம் என்று சிறை நிர்வாகிகளில் யாரும் கருதுவதாகத் தோன்றவில்லை. "சிறைக்குள் வருகிற ஆளை முறித்து, உடைத்துவிடு." இதுதான் சிறை நிர்வாகத்தின் நோக்கம் போலும்! எனவே, கைதிகள் சிறையை விட்டு வெளியே போகும் பொழுது, அவர்களுக்குத் தன்மதிப்பே இருப்பதில்லை. சிறையை எவ்வாறு நிர்வாகம் செய்கிறார்கள்? கைதிகளை எவ்வாறு அடக்கி ஒடுக்குகிறார்கள்? கைதிகளைக் கொண்டே, கைதிகளை அடக்கி நிர்வாகம் செய்கின்றார்கள். கைதிகளில் சிலரை, கைதி வார்டர்கள் என்று மதிப்பு கொடுத்து, சிறை அதிகாரிகள் அணைத்துக் கொள்கிறார்கள். அதிகாரிகளிடம் இருந்து சலுகை பெறலாமென்றும், பயத்தினாலும், இந்தக் கைதிகள் அதிகாரிகளோடு ஒத்துழைக்கிறார்கள். சம்பளம் வாங்கும் சாதாரண வார்டர்கள், ரொம்பவும் குறைச்சல். ஜெயில் பாதுகாப்பு, அநேகமாக இந்தக் கைதி வார்டர்களால் செய்யப்பட்டு வருகின்றது. சிறைக்குள்ளே, உள்வு பார்த்து அதிகாரிகளிடம் கோள் சொல்லுவது மிகவும் சாதாரண நிகழ்ச்சியாகும். இந்த உளவினால், கைதிகளை ஒன்றுசேர வொட்டாமல், அதிகாரிகள் தடுத்துவிட முடியும். கைதிகளைப் பிரித்துப் பிரித்து வைத்துக்கொண்டிருந்தால் தான், அதிகாரிகளால் அவர்களை அடக்கிவைத்து நிர்வாகம் செய்ய முடியும். இதே முறையை, அரசாங்கத்தார் வெளியேயும் கையாண்டு வருவதை நாம் காணலாம். வெளியே "கைதி வார்டர்களுக்கு" வேறு பெயரைக்கொடுத்து அழைக்கிறார்கள். அவர்களுக்கு டம்பமான பட்டங்கள் அளிக்கப்படுகின்றன. அவர்களுக்குச் சிப்பந்தி படாடோபங்கள் அதிகமாய் உண்டு. சிறையிலிருக்கிறது போலவே, வெளியேயும் இந்த நிர்வாக யந்திரத்தை, ஒரேஒரு சக்திதான் காப்பாற்றி வருகின்றது. நிர்வாகத்துக்குப் பின்னே, ஆயுதபாணியான சிப்பாய் எந்த நெருக்கடிக்கும் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறான். நிர்வாகத்தைக் காப்பாற்றிவரும் சக்தி இது தான்.

நவீன அரசாங்கத்துக்கு சிறை எவ்வளவு முக்கியமானதாயும் தேவையாயும் இருக்கின்றது! இவ்வாறுதான் சிறைக்குள்ளே இருக்கும் கைதி எண்ணுகின்றான். அரசாங்கம்

என்பது பலாத்காரக் கருவி என்பதைச் சிறையிலே, நன்கு தெரிந்துகொள்ளலாம். ஒரு கூட்டத்தாரின் அதிகார ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக, அரசாட்சி என்பது ஒரு பலாத்கார யந்திரம் என்று கார்ல் மார்க்ஸ் அவர்கள் கூறியது எவ்வளவு உண்மையானதாகும்! ஒரு மாதம் வரையில் நான் எனது அறையில் தனிமையாக இருந்தேன். பிறகு, ஒரு தோழர் வந்தார். அவருக்கு நர்மதைப் பிரசாத்சிங் என்று பெயர். அவர் வந்தது எனக்கு ஆறுதலாய் இருந்தது. ஜூன் மாதக் கடைசி நாளில், இரண்டரை மாதம் கழித்து, எங்களுடைய சிறிய விடுதியில், ஏகப்பட்ட பரபரப்பு உண்டாயிற்று. எதிர்பாராமல் ஒரு நாள் காலையில், தகப்பனாரும் டாக்டர் ஸையது முகமதும், அங்கே கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் ஆனந்தபவனில் படுக்கையில் அன்று காலை படுத்துக்கொண் டிருக்கையில், கைது செய்யப்பட்டார்களாம்!

# XXXI

## எர்வாடாவில் ராஜீப் பேச்சு

தகப்பனார் கைது செய்யப்பட்டதற்கு முன்னோ, பின்னோ காங்கிரஸ் காரியக்கமிட்டி, சட்டம் மீறிய அமைப்பு என்று அரசாங்கத்தாரால் அறிவிக்கப்பட்டது. இதனால் புதிய நிலைமை ஏற்பட்டது. காரியக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், கமிட்டி முழுவதையும் அரெஸ்ட் செய்துவிடலாம். தற்காலீக காங்கிரஸ் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு அவர்கள் புதிய அங்கத்தினர்களை நியமனம் செய்யலாம். இந்த முறையில் பல பெண்மணிகள் காரியக்கமிட்டி அங்கத்தினர்களானார்கள். இவர்களில் கமலாவும் ஒருவள். சிறைக்கு வந்தபொழுது, தகப்பனாரின் உடம்பு மிகுதியும் சுகக்கேடாக இருந்தது. சிறையில் அவருக்கு அதிகமான சௌகரியங்கள் கிடைக்காததும் தவிர, அசௌகரியங்கள் பல ஏற்பட்டன. வேண்டுமென்றே அரசாங்கத்தார் இவ்வாறு செய்யவில்லை. ஏனெனில், இந்த அசௌகரியங்களைக் குறைப்பதற்காக தங்களால் இயன்றதைச் செய்ய அவர்கள் தயாராயிருந்தார்கள். ஆனால் நயினிசிறையில் அவர்களால் அதிக சௌகரியம் செய்து கொடுக்க முடியவில்லை. என்னுடைய விடுதியிலிருந்த நான்கு சிறிய அறைகளிலும் நான்கு பேர்களைப் போட்டார்கள். வேறொரு இடத்தில் அதிகமான சௌகரியம் இருக்கக்கூடிய பக்கத்தில், தகப்பனாரை வைப்பதாகச் சிறை சூப்பிரண்டு சொன்னார். எங்களுக்கு இஷ்டமில்லை. நாங்கள் சேர்ந்திருக்கிறோம் என்று சொன்னோம். தகப்பனாருக்கு அருகிலிருந்து யாராவது ஒருவர் அவருக்குத் தொண்டுசெய்ய வேண்டும் என்பது எங்களது விருப்பம்.

மழை காலம் துவக்கிவிட்டது. அறைகளின் உட்புறங்களைக்கூட உலர்ந்த தரையாக வைத்துக்கொண்டிருக்க முடியாமற் போயிற்று. கூரையிலிருந்து ஒழுகி அறைகளின் பல பகுதிகளிலும் தண்ணீர் சொட்டிக்கொண்டே இருக்கும். பத்து அடி நீளமும், 5 அடி அகலமும் உள்ள அறையில், தகப்பனாருடைய படுக்கையை இரவில் எங்கே போடுவதென்பது

பெரிய பிரச்னையாகிவிட்டது. மழைத்துளி தெரிக்கக்கூடாத இடத்தில் போடவேண்டுமே! சாத்தியமில்லாத சங்கதி! சில சமயங்களில் அவருக்குக் காய்ச்சல் வந்துவிடும். எங்களுடைய அறைக்குப் பக்கத்திலே விசாலமான, நேர்த்தியான தாழ்வாரம் ஒன்றைக் கட்டவேண்டுமென்று சிறையதிகாரிகள் கடைசியில் தீர்மானித்தார்கள். தாழ்வாரம் கட்டி முடித்தாய்விட்டது. இடமும் விஸ்தாரமாகப் போய்விட்டது. ஆனால் தகப்பனாருக்கு அதனால் யாதொரு நன்மையும் ஏற்படவில்லை. ஏனெனில், அது தயாரான்தும், தகப்பனார் விடுதலையடைந்து வெளியே போய்விட்டார். பாக்கியுள்ள எங்களுக்குத்தான் அதனால் நன்மை. ஜூலை மாதக் கடைசியில் நாடெங்கும் ஓரே வதந்தியாக இருந்தது. காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கு மிடையே சமாதானம் உண்டுபண்ணுவதற்காக சர். தேஜ் பகதூர் சாப்ரூவும், எம். ஆர். ஜயகரும் முயன்றுகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. சிறையில் தகப்பனாருக்கு மட்டும் தனி மரியாதையாகத் தினசரிப் பத்திரிகை ஒன்று வரும். அதிலே இந்த வதந்தியைப் படித்தோம். இவர்கள் இருவரும் வைசிராய் இர்வினுக்குக் கடிதம் எழுதியதையும், அவர் இவர்களுக்குப் பதில் எழுதியதையும் பத்திரிகையில் பார்த்தோம். இந்த "சமாதானக்காரர்கள்" காந்திஜீயையும் பேட்டி கண்டார்கள் என்று பின்னர் தெரிந்து கொண்டோம். இவர்கள் ஏன் முயற்சி செய்யவேண்டும் என்றும் இவர்களது நோக்கம் என்னவென்றும் எங்களுக்குத் தெரியவில்லை. தகப்பனார் கைது செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக, சுருக்கமான அறிவிப்பு ஒன்றை அவர் வெளியிட்டாராம். அந்த அறிவிப்பே இவர்களை சமாதான முயற்சிக்குத் தூண்டியதாக, பின்னர் இவர்கள் எங்களுக்குச் சொன்னார்கள். பிரஸ்தாப அறிக்கை ஸ்லோகோப் அவர்களால் வரையப்பட்டது. ஸ்லோகோம்ப் லண்டன், 'டெயிலி ஹெரால்டு' பத்திரிகையின் நிருபர். அவர் இந்தியாவுக்கு வந்திருந்தார். தகப்பனாருடன் கலந்து பேசியதிலிருந்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. அறிக்கை தகப்பனாரின் சம்மதத்தைப் பெற்ற பிறகே பிரசுரிக்கப் பட்டது.

அரசாங்கத்தார் சில நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வார்களாகில், காங்கிரஸின் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திக் கொள்ள யோசனை செய்யப்படும் என்பதுதான் இந்த அறிக்கையின் கருத்து. மிக்வும் திட்டமான அறிவிப்பு அல்ல.

என்னையும் காந்திஜீயையும் தகப்பனார் கலந்துகொண்ட பின்னர்தான் திட்டமாக இதைப்பற்றி யோசிக்க முடியுமென்று அறிக்கை தெளிவாகக் கூறிவிட்டது. காங்கிரஸின் தலைவன் என்ற ஹோதாவில் என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டது. அவர் கைதியான பிறகு, நைனி சிறைக்கு வந்ததும் தகப்பனார் இந்த அறிவிப்பைப்பற்றி என்னிடம் பிரஸ்தாபம் செய்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. "அவசரத்தில் இந்த அறிவிப்பு செய்துவிட்டேன். இதைத் தவறாக எல்லோரும் பொருள் செய்து கொள்ளக்கூடும்" என்று அவர் மிகவும் வருந்தினார். தகப்பனார் எண்ணியபடியே, அறிக்கை, தவறாகப் பொருள் செய்து கொள்ளப்பட்டது. இத்தகைய அறிவிப்புகளை எதிர்க் கட்சியார்கள் தவறாகப் பொருள் செய்து கொள்வது இயல்புதானே !

காந்திஜீயிடமிருந்து சிபார்சுக் கடிதமொன்றைத் தூக்கிக்கொண்டு, ஜூலை மாதம் 27-ந் தேதி ஜயகரும், சாப்ரூவும் திடீரென்று நைனி சிறையில் எங்கள்பேரில் வந்து குதித்தார்கள். அன்றைக்கும் மறுநாளும் நாங்கள் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம். தகப்பனாருக்குக் காய்ச்சல். அவர் இந்தச் சம்பாஷணையால் மிகுதியும் அயர்ந்து போனார். நாங்கள் சுற்றிச்சுற்றி வெகுநேரம் பேசினோம். ஆனால், ஒருவருடைய நோக்கம் மற்றவருக்கு விளங்கவில்லை. அரசியலில் எங்கள் பரஸ்பரக் கொள்கைகளில் மகத்தான வித்தியாசங்கள் இருந்தன. எனவே, அவர்கள் சொல்லுவது எங்களுக்கும், நாங்கள் கூறுவது அவர்களுக்கும் விளங்கவே இல்லை. தற்போதைய நிலைமையில் காங்கிரஸுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே சமாதானம் ஏற்படவே முடியாது என்பது எங்களுக்கு வெட்ட வெளிச்சம். காரியக் கமிட்டியிலிருக்கும் தோழர்களைக் கலந்துகொள்ளாமல், முக்கியமாகக் காந்திஜீயைக் கலந்துகொள்ளாமல், யாதொரு யோசனையையும் கூற முடியாது என்று நாங்கள் சொல்லிவிட்டோம். இவ்வாறே கடிதம் ஒன்றை எழுதிக் காந்திஜீக்கு அனுப்பிவைத்தோம்.

பதினொரு நாட்கள் கழிந்தன. ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி; இந்தத்தடவை வைஸிராயின் பதிலை யெடுத்துக்கொண்டு டாக்டர் சாப்ரூ எங்களை மீண்டும் காணவந்தார். நாங்கள் எர்வாடா சிறையில் காந்திஜீயைச் சந்திப்பதில் தமக்கு யாதொரு ஆட்சேபணையும் இல்லை என்றும் வெளியே நின்று போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் ஸர்தார்

வல்லபாய் படேல், மௌலானா அபுல் கலாம் அஸாத் அவர்களைப் போன்ற காரியக்கமிட்டி அங்கத்தினர்களோடு நாங்கள் கலந்து பேச, தாமும் தமது நிர்வாக சபையும் சம்மதிக்க முடியாதென்றும் வைஸிராயின் கடிதத்தில் காணப்பட்டது. இந்த நிலைமையில் எங்களால் எர்வாடாவுக்கு வர முடியுமா என்று டாக்டர் சாப்ரூ எங்களைக் கேட்டார். "எந்தக் காலத்திலும் காந்திஜீயைச் சந்திப்பதற்கு எங்களுக்கு ஆட்சேபணையே கிடையாது. ஆனால், எங்களுடைய மற்றைய தோழர்களைச் சந்திக்க முடியாமற் போனால், முடிவாக ஒன்றையும் தீர்மானிக்கமுடியாது" என்று சொல்லி விட்டோம். பம்பாயில் கடுமையான போலீஸ் தடியடிப் பிரயோகம் நேர்ந்ததென்றும், வல்லபாய் படேல், மாளவியாஜீ, டாஸ்துக் ஷெர்வாணி முதலிய காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் பத்திரிகையில் படித்தோம். இது, விஷயத்தை இன்னும் அதிகமாகச் சிக்கலாக்கி விட்டதென்றும், சங்கதியை நன்றாக வைஸிராய்க்குத் தெளிவுபடுத்தி விடவேண்டுமென்றும் நாங்கள் டாக்டர் சாப்ரூவிடம தெரியப் படுத்தினோம். கூடியசீக்கிரம் காந்திஜீயை நாங்கள் சந்திக்க வேண்டுமென்றும் அதனால் யாதொரு தீமையும் ஏற்படாதென்றும் டாக்டர் சாப்ரூ எங்களிடம் சொன்னார். "எங்களை எர்வாடாவுக்கு அழைத்துச் செல்வதாய் இருந்தால், காங்கிரஸ் காரியதரிசி என்ற ஹோதாவில் நயினி சிறையில் எங்களுடன் இருக்கும் டாக்டர் சையது முகம்மது அவர்களும் எங்களுடன் கூட வரவேண்டும்" என்று நாங்கள் சாப்ரூவிடம் சொல்லி யிருந்தோம்.

ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி, தனி ரயில் வண்டி யொன்றில், தகப்பனார், நான், சையுது முகம்மது மூன்று பேரையும் வைத்து நயினியிலிருந்து பூனாவுக்குக் கொண்டுபோனார்கள். எங்கள் வண்டி முக்கியமான ஸ்டேஷன்களில் நிற்கவில்லை. சின்ன ஸ்டேஷன்களில் சில சமயங்களில் நிற்கும். இருந்தாலும், நாங்கள் ரயிலில் பிரயாணம் செய்து வருகிறோம் என்று எப்படியோ தெரிந்து போய், ரயில்வண்டி நின்ற, நிற்காத எல்லா ஸ்டேஷன்களிலும் ஏராளமான ஜனங்கள் கூடிக் கொண்டிருந்தார்கள். 11-ந் தேதி நடுநிசிக்கப்பால் பூனா வருகே இருக்கும் கிர்க்கிக்கு வந்து சேர்ந்தோம். காந்திஜீயை வைத்திருந்த விடுதியிலேயே எங்களையும் வைப்பாரகளென்றும், அவரை விரைவில் சந்திக்கக் கூடுமென்றும் நாங்

கள் எதிர்பார்த்திருந்தோம். இவ்வாறு தான் எர்வாடா சிறை சூப்ரெண்டு ஏற்பாடு செய்து வைத்திருந்தார். ஆனால், எங்களை நயினியிலிருந்து கூட்டிக்கொண்டுவந்த போலீஸ் உத்தியோகஸ்தர் ஏதோ சொன்னதின் பேரில், எர்வாடா சூப்ரெண்டு பழைய ஏற்பாடுகளை மாற்றிவிட்டார். சூப்ரெண்டு கர்னல் மார்ட்டின் ரகசியத்தை எங்களிடம் சொல்லவில்லை. ஆனால், தகப்பனார் சாதுரியமாக இரண்டொரு கேள்விகள் அவரைக் கேட்கவே, குட்டு வெளியாயிற்று. சாப்ரூ, ஜயகர் முன்னிலையில் தான் நாங்கள் காந்திஜீயை முதன் முதலாகச் சந்திக்கவேண்டும் என்பது அரசாங்கத்தாரின் கருத்தாம். நாங்கள் காந்திஜீயை முன் கூட்டியே சந்தித்துப் பேசிவிட்டால், நாங்கள் கலந்து பேசிக்கொண்டு, மனதைத் திட்டப்படுத்திக்கொண்டு விடுவோம் என்று அதிகாரிகள் எண்ணினார்களாம்! அன்றிரவும் மறுநாள் முழுதும் நாங்கள் சிறையில் தனி விடுதியில் வைக்கப்பட்டிருந்தோம். தகப்பனாருக்கு இதனால் அடக்கமுடியாத ஆத்திரம் உண்டாயிற்று. நயினியிலிருந்து காந்திஜீயைத் தான் பார்ப்பதற்கு தகப்பனார் வந்திருந்தார். அவரைப் பார்ப்பதற்குத் தடை செய்தால், அவருக்கு ஏன் கோபம் வராது? பக்கத்துக்குப் பக்கத்திலே, இருந்துகொண்டு, காந்திஜீயைப் பார்க்க முடியவில்லை யென்றால், தகப்பனாருக்கு ஆத்திரம் பொங்கியெழுந்தது. 13-ந் தேதி காலையில், ஜயகரும் சாப்ரூவும் வந்து விட்டார்களென்றும் அவர்களோடு காந்திஜீ பேசிக்கொண்டிருக்கிறாரென்றும் அங்கே நாங்களும் போகவேண்டு மென்றும் சொன்னார்கள்.

தகப்பனார் மறுத்துவிட்டார். மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, முதலிலே நாங்கள் காந்திஜீயோடு தனியாகப் பேசுவதற்கு அனுமதி கிடைத்தாலொழிய, வரமுடியாது என்று சொல்லிவிட்டார். தகப்பனார் கேட்டதெல்லாம் கிடைத்தன. நாங்கள் எல்லோரும் சேர்ந்து கேட்டுக்கொண்டதன்பேரில், வல்லபாய்படேல், ஜெயராம்தாஸ் தௌலத்ராம், சரோஜினி தேவி, இவர்கள், யோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனுமதிக்கப்பட்டனர். அன்று சாயங்காலம், தகப்பனார், மாமூத், நான் மூன்று பேரும காந்திஜீயின் விடுதிக்கு மாற்றப்பட்டோம். எர்வாடாவில், நாங்கள் தங்கியிருந்த காலம்முழுதும் காந்திஜீயுடன் இருந்தோம். கலந்து யோசனை செய்வதற்காக, இரணடொரு நாள் இந்த விடுதியில் தங்கியிருக்க தௌலத்ராமுக்கும், வல்லபாய்க்கும் அனுமதி

அளிக்கப்பட்டது. சாப்ரூ, ஜெயகரோடு கலந்து நாங்கள் மூன்று நாள் பேசினோம். சட்டமறுப்பை நிறுத்தி, அரசாங்கத்தோடு காங்கிரஸ் ஒத்துழைக்க வேண்டுமானால், குறைந்ததாக இந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று திட்டம் ஒன்றை வகுத்து, அதை எழுத்தில் எழுதி, அவர்களிடம் கொடுத்துவிட்டோம். இந்தத்திட்டம் கடிதஉருவமாக, பின்னர் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்பட்டது.

எர்வாடா சிறையில் ராஜியைப்பற்றி கலந்து யோசித்த கூட்டத்தில், தகப்பனார் தீவிரமாகக் கலந்து கொண்டதன் சிரமம் தாங்கமுடியாமல் பதினோராந்தேதி திடீரென்று அவருக்கு கடுமையான காய்ச்சல் உண்டாயிற்று. இதனால் எங்களுடைய பிரயாணம் தாமதமாயிற்று. 19-ந் தேதி இரவு நாங்கள் நைனிக்குத் திரும்பிப்போனோம். இப்பொழுதும் தனியான ரயில் வண்டிதான். தகப்பனாருக்குப் பிரயாண காலத்தில் எல்லாவித சௌகரியங்களும் செய்துகொடுப்பதில் பம்பாய் அரசாங்கத்தார் மிகவும் கவனம் செலுத்தினார்கள். எர்வாடாவில் நாங்கள் தங்கியிருந்த காலத்திலும் அவருடைய சௌகரியங்கள் நன்றாகக் கவனிக்கப்பட்டு வந்தன. நாங்கள் எரவாடாவுக்கு வந்து சேர்ந்த அன்றிரவில், விநோதமான நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. "தங்களுக்கு என்ன ஆகாரம் பிடிக்கும்" என்று சூபிரெண்டு கர்னல் மார்ட்டின் தகப்பனாரைக் கேட்டார். எளிய ஆகாரத்தை, சொற்பமாக, தாம் எடுத்துக்கொள்வது வழக்கமென்று தகப்பனார் அவரிடம் சொல்லிவிட்டு, காலையில் படுக்கை தேத்தண்ணீரிலிருந்து இரவு சாப்பாடு வரையிலும் ஒரு பெரிய ஜாப்தாவை அடுக்கிக்கொண்டே போனார். நைனி சிறையில் அவருக்கு தினசரி வீட்டிலிருந்து நாங்கள் சாப்பாடு வரவழைத்துக் கொடுப்பது வழக்கம். தகப்பனார் வெகு சாவதானமாக இந்த ஜாப்தாவைக் கொடுத்தார். கனமான ஆகாரவகைகள் எதுவும் அதில் சேரவில்லை என்பதுதான் அதன் அழகே யொழிய, ஜாப்தாமட்டும் மிகவும் நீண்டுபோயிற்று. ரிட்ஸ் அல்லது ஸவாய் ஹோட்டலில், இந்த ஜாப்தா, எளிய, சாதாரண உணவு என்று கருதப்படலாம். தகப்பனாருக்குக்கூட அவ்வாறுதான் எண்ணம். ஆனால், எரவாடா சிறையில் இந்த ஜாப்தாவைச் சொல்லிக்கொண்டே போனால் பொருத்தமாய் இருக்குமா? விநோதமாயிருக்குமல்லவா? தகப்பனாருடைய பணச் செலவுபிடிக்கும் ஜாப்தாவைக் கேட்டுக்கொண்டிருக்

கும் பொழுது, கர்னல்மார்ட்டினுடைய முகம் எவ்வாறு மாறு கின்றது என்பதைக் கவனித்துக்கொண்டு மகமதுவும் நானும் ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தோம். கர்னல் மார்ட்டினுடைய அதிகாரத்தின் கீழ் எரவாடா சிறையில் வெகுகாலமாக இன் னொரு பெரிய மனிதன்வசித்து வந்திருந்தார். இந்தியத் தலை வர்களில் அவர்தான் சிரேஷ்டமானவர். அவருடைய தனிக் கீர்த்தி யாருக்குமேவராது. அப்பேர்ப்பட்ட பெரியாருக்கு ஆட் டுப்பாலும் பேரீச்சம்பழமும் போதுமானவை. ஒவ்வொரு சம யம் அவருக்கு கிச்சிலிப் பழம் கொடுத்தால் அதிகம். புதிதாக வந்திருக்கும் தலைவர் முற்றிலும் மாறான பேர்வழி என்று அவர் கண்டுகொண்டார்.

பூனாவிலிருந்து நைனிக்கு நாங்கள் திரும்பி வருகையி லும், ரயில் வண்டி ஒரே ஓட்டம்தான். பெரிய ஸ்டேஷன்க ளில் நிற்பதில்லை. சின்னச்சின்ன ஸ்டேஷன்களில் நின்றது. ஆனால் கூட்டங்களோ ஏராளம். எங்களுக்காக அவர்கள் எவ் வளவு நேரம் காத்திருந்தார்களோ? பிளாட்பாரம் தாங்கமுடி யாத கூட்டங்கள். ரயில் பாதைகளில்கூட நின்றுகொண் டார்கள்! ஹார்தா, இதார்ஸி, ஹாக்பூர் முதலிய இடங்களில் எள்போட்டால் எள்விழாக் கூட்டங்கள்! நல்லவேளையாக விபத்துக்கள் ஒன்றும் நேரவில்லை. தகப்பனருடைய நிலைமை விரைவில் சீர்கெட்டுக்கொண்டு வந்தது. அவரைப் பரிசோதிப் பதற்கு பல டாக்டர்கள் வந்தார்கள். அவருடைய சொந்த டாக் டர்கள் வந்தார்கள். ஐக்கிய மாகாண அரசாங்கத்தார் அனுப்பி வைத்த டாக்டர்களும் வந்தார்கள். சிறைவாசம் அவருக்குக் கூடாதென்பதும், சிறையில் தக்க வைத்தியம் செய்யமுடியா தென்பதும், தெளிவாகப் புலப்பட்டது. இதையுணர்ந்து நண் பர் ஒருவர், மோதிலால்ஜீயை விடுதலைசெய்வது நலம் என்று பத்திரிகையில் எழுதிவிட்டார். தகப்பனருக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது. "ஜனங்கள் என்ன எண்ணிக்கொள் வார்கள்? நானே வேண்டிக்கொண்டதாக நினைத்துக்கொள்ள மாட்டார்களா?" என்று சொல்லிச் சொல்லி ஆத்திரப்பட்டார். தனிச்சலுகை காண்பித்துத் தம்மை விடுதலைசெய்யவேண்டா மென்று இர்வின் பிரபுவுக்கு தகப்பனர் ஒரு தந்தியும் கொடுத் துவிட்டார். ஆனால், அவரது உடம்பு நாளுக்கு நாள் க்ஷீண மடைந்து கொண்டே வந்தது. தேகத்தின் எடை பொத் தென்று விழுந்துவிட்டது. தனது நிழலைப்போலாகி விட் டார். செப்டம்பர் மாதம் 8-ந் தேதி அவரை விடுதலை செய்து

விட்டார்கள். மொத்தத்தில் அவர் சிறையிலிருந்தது பத்து வாரம்.

தகப்பனுர் வெளியே போன பின்பு, எங்களுடைய வாழ்க்கையும், இடமும் ருசி யில்லாமற்போய்விட்டன. அவர் கூட இருக்கும்பொழுது, அவருக்கு சௌகரியத்துக்காக, பல பல சிறு தொண்டுகள் செய்ய வேண்டி யிருக்கும். மகம்மது, நர்மதா பிரசாத், நான் மூவரும் இவ்வாறு சிறு தொண்டுகளை ஆனந்த ப்ரவசத்தோடு, நாள் முழுதும் செய்துகொண்டு காலத்தைக் கழித்து வந்தோம். அவர் இருக்கும்பொழுது செய்வதில்லை. கொஞ்சம் நூற்பதுண்டு. புஸ்தகங்கள் படிப்பதற்கு நேரமே இருக்கிறதில்லை. அவரோ, இப்பொழுது வெளியே போய்விட்டார். மனமலர்ச்சி யில்லாமல் நெஞ்சிலே பாரத்தோடு, நாங்கள் எங்களுடைய பழைய திட்டத்தில் சிக்கிக்கொண்டோம். தகப்பனுர் போனதிலிருந்து, சிறைக்கு வந்துகொண்டிருந்த தினசரிப் பத்திரிகையும் நின்று போய்விட்டது. 4, 5 நாள் கழித்த பிறகு என்னுடைய மைத்துனர் ரஞ்சிட் எஸ். பண்டிட் கைது செய்யப்பட்டார். எங்கள் விடுதிக்கு அவர் வந்து சேர்ந்தார்.

ஒரு மாதம் கழிந்த பின்னர், அக்டோபர் மீ 11வ என்னுடைய ஆறுமாத தண்டனை பூர்த்தியாகிவிட்டபடியால், நான் விடுதலை செய்யப்பட்டேன். போராட்டம் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருந்ததால், வெளியிலே எத்தகைய சுதந்திரமும் இருக்க முடியாது என்று எனக்குத் தெரியும். சமாதானக்காரர்களான ஸாப்ரூ, ஜயகரின் முயற்சிகள் தோற்றுப்போயின. என்னை என்று விடுதலை செய்தார்களோ அன்றைக்கே இரண்டொரு அவசரச் சட்டங்கள் அரசாங்கத்தாரால் வெளிப்படுத்தப்பட்டன. நான் வெளியே இருக்கக் கூடிய சிறிது காலத்துக்குள், அழுத்தமாகப் பயன் படக் கூடிய காரியம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று ஆவல் கொண்டதனுல், எனது விடுதலையைப் பற்றி சந்தோஷமடைந்தேன். கமலா அப்பொழுது அலகாபாத்தில் இருந்தாள், காங்கிரஸ் வேலையை மிகவும் மும்முரமாகச் செய்து கொண்டிருந்தாள். தகப்பனுர் முசோரியில் வைத்தியம் பார்த்துக்கொண்டிருந்தார். அவரோடு தாயாரும், சகோதரிகளும் தங்கி இருந்தார்கள். அலகாபாத்தில் ஒன்றரை நாள் கடுமையாக வேலை செய்துவிட்டு, நானும், கமலாவும் முசோரிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

கிராமாந்திரங்களில் வரி கொடா இயக்கத்தை துவக்க லாமா வேண்டாமா என்பதைப் பற்றி தீவிரமாக யோசித் துக்கொண்டிருந்தோம். கிஸ்தி வசூல் செய்யும் காலம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. தானியங்களின் விலைகள் படுமோசமாகக் குறைந்துவிட்டபடியால், வரி வசூல் செய் வது கஷ்டமாகவிருந்தது. உலகப் பொருளாதார மந்தத்தின் அதிர்ச்சி, இந்தியாவில் மிகவும் தெளிவாக அப்பொழுது காணப்பட்டது. வரி கொடா இயக்கத்துக்கு இதுதான் மிக வும் நேர்த்தியான தருணமென்று தோன்றிற்று. சட்ட மறுப் புக்கும் அது தோதாக இருக்கும். குடியானவர்களின் விமோசனத்திற்கும் வழியாக இருக்கும். அந்த வருஷ விளை வைக் கொண்டு பூரா கிஸ்தியையும் விவசாயிகள் செலுத்த முடியாது. ஏற்கனவே மிச்சப்படுத்தி வைத்திருந்தால், அதைக் கொடுக்கலாம். இல்லாவிட்டால் கடன் வாங்கவேண் டும். ஜமீன்தார்களோ கையில் ஏதேனும் கொஞ்சம் மிச்சப் படுத்தி வைத்திருப்பார்கள். கையில் இல்லாமற்போனாலும் அவர்களால் எளிதிலே கடன் வாங்க முடியும். ஆனல், சாதாரணக் குடியானவனே, அநேகமாக பட்டினி; கையில் காசும் இருப்பதில்லை. பிறகு எப்படிக் கடன் வாங்க முடி யும் விவசாயிகள்? கட்டுப்பாடாக இருக்கக் கூடிய நிலைமையில் அல்லது ஜனநாயக ஆட்சியில் நடைபெறும் நாட்டில், குடியா னவர்களிடமிருந்து அதிகமான கிஸ்தி வசூல் செய்ய முடி யாது. ஆனல் இந்தியாவிலே விவசாயிகளுக்கு அதிகமான செல்வாக்கு கிடையாது. காங்கிரஸ் எந்தெந்த இடங்களில் அவர்களுக்காக வேலை செய்ததோ, அங்கங்கே அவர்களுக்குக் கொஞ்சம் செல்வாக்கு இருக்கலாம். விவசாயிகள் கலகம் எப் பொழுது ஏற்படுமோவென்ற திகில் இருந்ததால், பொதுவாக, அவர்களுக்குச் சிறிதளவு சௌகரியம் இருக்கக்கூடும். ஆனல் அவர்கள் பரம்பரைப் பழக்கத்தால், முணுமுணுப்பின்றி எதையும் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்.

குஜராத்திலும் வேறு சில இடங்களிலும், அந்தக் காலத் தில் வரி கொடா இயக்கங்கள் நடைபெற்றன. ஆனல் அவைகள் பூராவும் அரசியல் போராட்டங்கள். சட்ட மறுப்பு இயக்கத்துக்குத் தோதாக நடத்தப்பட்டவையாகும். அந் தப் பகுதிகளில், ரயத்துவாரித் திட்டம் அமுலிலிருந்து வருகி றது. விவசாயிகள் அரசாங்கத்தாருக்கு நேரே கிஸ்தி செலுத்தி வந்தார்கள். அவர்கள் வரி கொடா விட்டால், அர

சாங்கக் கஜானாவில் மூளிவிழுந்து போகும். ஐக்கிய மாகாணங்களிலோ, நிலைமை வேறுவிதமானது. இந்தப் பிராந்தியத்தில் ஜமீன்தாரித்திட்டம் அமுலிலிருந்து வருகிறது. அர்சாங்கத்துக்கும் விவசாயிக்கும் நடுவே தாரகர்கள் இருக்கிறார்கள். விவசாயிகள் கட்டணத்தை நிறுத்திவிட்டால், மத்தியப் பேர் வழிக்கு உடனே நஷ்டம் உண்டாகும். வகுப்புச் சண்டை முற்றும். காங்கிரஸோ தேசீயக் கொள்கை கொண்ட ஒரு ஸ்தாபனம் ஆகும். காங்சிர்சுக்குள் பல சாதாரண ஜமீன்தார்களும் சில பெரிய ஜமீன்தாரர்களும் சேர்ந்து உழைத்து வருகிறார்கள். ஜமீன்தார்களுக்குக் கோபம் வரும்படியாக, எதையும் செய்வதற்கு காங்கிரஸ் தலைவர்கள் மிகவும் அஞ்சினார்கள். எனவே, சட்டமறுப்பு நடைபெற்ற ஆறு மாத காலமாக, வரி கொடா இயக்கத்தைத் துவக்க அஞ்சினார்கள். வரி கொடாமைக்குத் தக்க தருணம் அப்பொழுது தான் கனிந்து நின்றது என்பது எனது எண்ணம் ஆகும். வகுப்புப் பிரச்னையைக் கிளப்புவதற்கு நான் அஞ்சவில்லை. ஆனால், காங்கிரஸ் அதனுடைய தற்போதைய கொள்கைப்படிக்கு, வகுப்புச் சண்டையை ஆதரிக்க முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும். ஜமீன்தார்கள், விவசாயிகள் இரு கூட்டத்தாரும் சேர்ந்து வரிகொடுக்கவேண்டாம் என்று காங்கிரசால் சொல்ல முடியும். சர்க்கார் கிஸ்தியை ஜமீன்தார்கள் அநேகமாகக் கொடுத்து விடுவார்கள். அப்படிச் செய்வது அவர்களுடைய குற்றமென்று கூறிவிடலாம்.

அக்டோபர் மாதம், நான் சிறையிலிருந்து வெளிவந்த பொழுது, அரசியல் பொருளாதார நிலைமைகள் வரிகொடா இயக்கத்துக்கு மிகுதியும் தோதாயிருந்ததாக எனக்குத் தோன்றிற்று. விவசாயிகளின் பொருளாதாரத் தொலலைகளைப்பற்றிச் சொல்லத் தேவை இல்லை. எங்களுடைய சட்டமறுப்பு வேலைகள் நாடெங்கும் இன்னும் செழித்துக்கொண்டிருந்த போதிலும், அவைகள் ஒரே ரகமாக இருந்தன. ஜனங்கள் சிறு கூட்டமாகவும் பெருங்கூட்டமாகவும் சிறைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால், துவக்கத்தில் இருந்த வேகம் தணிந்து கொண்டிருந்தது. அடிக்கடி ஹர்த்தால்களையும், ஊர்வலங்களையும் நடத்தி மத்தியவகுப்பார்களும், நகரத்தார்களும் அலுத்துப்போனார்கள். இந்த அலுப்பைத் தொலைத்து, உற்சாகம் உண்டாக்குவதற்காக, ஏதேனும் ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடிக்கவேண்டும். இந்த உற்சாகம் எங்கிருந்து வரக்

கூடும்? விவசாயிகளிடமிருந்துதான் வரமுடியும். விவசாயிக ளிடத்தே பதுங்கிக் கிடக்கும் அபாரமான சக்தியை வெளிப் படுத்தவேண்டும். இவ்வாறு செய்தால், சட்ட மறுப்பு இயக் கம் பொதுஜன இயக்கமாக மாறிப்போகும். இதனால் ஜன சமூகத்தைப்பற்றிய பொருளாதாரப் பிரச்னைகளை தெளி வாக யோசிக்க நிர்ப்பந்தமான நிலைமை யேற்பட்டுவிடும். இதிலே எனக்கு அக்கறை அதிகம் என்று சொல்லத் தேவை யில்லை. அலகாபாத்தில் நான் தங்கின ஒன்றரை நாட்களில் எனது தோழர்களும் நானும், இந்த விஷயங்களைப் பற்றி விவாதம் செய்தோம். எங்களுடைய மாகாண காங்கிரஸ் கமிட்டியின் காரியக் கமிட்டியை வெகு சீக்கிரத்தில் கூட்டி னோம். எந்த ஜில்லாவுக்கு முடியுமோ, அந்த ஜில்லா வரி கொடாமையை துவக்கலாம் என்று ஒரு தீர்மானத்தை நிறை வேற்றினோம். மாகாணத்தின் எந்தப் பகுதியில் ஆரம்பிக்க லாமென்று நாங்கள் யோசனை சொல்லவில்லை. ஜமீன்தார்க ளும் விவசாயிகளும் ஒன்று சேர்ந்து வரி கொடா இயக்கத்தை நடத்தவேண்டுமென்று நாங்கள் காரியக்கமிட்டி கூட்டத்தில் தீர்மானித்தோம். வரி கொடாமையை விவசாயிகள் மட்டும் தான் ஆதரிப்பார்கள் என்று எங்களுக்கு நன்றாகத் தெரி யும்.

வரி கொடா இயக்கத்தைத் துவக்க அனுமதி கிடைத்த வுடனே, எங்களுடைய அலகாபாத் ஜில்லா வரி கொடாமை யைத் துவக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டது. ஒரு வாரம் கழித்து விவசாயிகளின் மகாநாடொன்று கூட்ட எண ணினேன். வரி கொடாமையை ஆரம்பிக்கத் தீர்மானித் தோம். சிறையிலிருந்து வந்த பிறகு, இந்த ஒரு நாளில், நான் நல்ல வேலை செய்ததாக எண்ணிக்கொண்டேன். அலகாபாத் நகரத்தில் பொதுக்கூட்டம் ஒன்றையும் ஏற்பாடுசெய்து, கூட் டத்தில் வெகு நீளமாகப் பேசினேன். இந்தப் பிரசங்கத்திற் காகத்தான், நான் பின்னர் தண்டனைபெற்றேன். பின்னர் அக் டோபர் மாதம் 13-ந்தேதி, கமலாவும் நானும் முசோரிக்குப் போய், தகப்பனாரோடு மூன்று நாள் தங்கியிருந்தோம். தகப்ப னாரின் உடம்பு சிறிது குணப்பட்டுக் கொண்டுவந்தது. அநேக மாக நெருக்கடியான நிலைமைத் தீர்ந்துபோய், முற்றிலும் குண மடைந்து விடுவார்போல் தோன்றியமையால், எனக்கு சந் தோஷமாக இருந்தது. அந்த மூன்று நாட்களும் நான் மிக வும் அமைதியுடனும் சந்தோஷத்துடனுமிருந்தேன். மீண்டும

குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பது நன்றாகத்தானிருந்தது. என்னுடைய பெண் இந்திரா, அங்கேயிருந்தாள். என்னுடைய சகோதரியின் மூன்று பெண்களும் இருந்தனர். நான் குழந்தைகளோடு விளையாடுவேன். எங்களுடைய நாட்டுக் கொடிப் பாட்டைப் பாடிக்கொண்டு, மூன்று வயதுக் குழந்தை கொடியைத் தாங்கிமுன்னே செல்ல, நாங்கள் எல்லோரும் பின்தொடர்ந்து வீட்டைச் சுற்றிச்சுற்றி,கம்பீரமாக ஊர்வலம் வருவோம். அவர், உயிரை பறித்துச் செல்லும் கொடிய நோயில் வீழ்வதற்கு முன் தகப்பனாரோடு நான் கழித்த கடைசி மூன்று நாட்கள் இவைகளே.

மீண்டும் நான் கைது செய்யப்படுவேன் என்று எதிர் பார்த்து, இன்னும் சிறிது காலத்தை என்னோடு கழிக்க எண்ணம் கொண்டு, தகப்பனாரும் அலகாபாத்துக்குத் திரும்பி வருவதென்று திடீரென்று தீர்மானம் கொண்டார். அலகாபாத்தில் 19வ கூடவிருந்த விவசாயிகளின் மகாநாட்டில் பிரசன்னமா யிருப்பதற்காக அக்டோபர் 17வ முசோரியை விட்டு நானும், கமலாவும் புறப்பட்டோம். ஒரு நாள் கழித்து, அதாவது 18வ, மற்றவர்களுடன் சேர்ந்து புறப்படுவதாக தகப்பனார் ஏற்பாடு செய்திருந்தார். கமலாவும், நானும் திரும்பி வருகையில், பிரயாணம் விசித்திரமா யிருந்தது. நாங்கள் புறப்படும்பொழுதே டேராடூன் நகரில் என் பேரில் 144-வது பிரிவுப்படி தடையுத்தரவு சாதரா செய்யப்பட்டது. லக்ஷ்மணபுரியில், சில் மணி நேரங்கள் கழித்தோம். லக்ஷ்மணபுரி நகரிலும் ஒரு தடையுத்தரவு எனக்காகக் காத்துக்கொண்டிருந்ததாக அறிந்தேன். கூட்டம் ஏராளமாய் என்னைச் சூழ்ந்துகொண்டிருந்ததால், போலீஸ் உத்தியோகஸ்தர் என்னையணுகி, அந்தத் தடையுத்தரவை, என்பேரில் சாதரா செய்ய முடியவில்லை. நகர சபையார் எனக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று அளித்தார்கள். பிறகு நாங்கள் அலகாபாத்துக்கு மோட்டாரில் புறப்பட்டோம். வழி நெடுகக் குடியானவர்களின் பல கூட்டங்களில் காரை நிறுத்தி, சிறிது பிரசங்கம் செய்துகொண்டு போனேன். 18வ இரவு நாங்கள் அலகாபாத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். 19வ காலை இன்னொரு தடையுத்தரவு எனக்குக் கிடைத்தது. கவர்ன்மெண்டார், என் காரின் பின்னாலேயே என்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார்கள். இன்னும் சில மணிநேரங்கள்தான் நான் வெளியே இருக்க முடியுமென்று தோன்றிற்று. கைது

செய்யப்படு முன், விவசாயிகளின் மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்று எனக்கு ஆவல்.

இந்த மகாநாட்டில் பிரதிநிதிகளைமட்டும் அழைத்திருந்தோம். மற்றவர்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை. அலகாபாத் ஜில்லா சம்பந்தப்பட்ட வரையிலும், இந்த மகாநாடு தக்க பிரதிநிதித்துவம் கொண்டதாகக் காணப்பட்டது. சுமார் 1600 பிரதிநிதிகள் பிரசன்னமாய் இருந்தார்கள். ஜில்லாவில் வரிகொடா இயக்கத்தைத் துவக்குவதென்று மகாநாட்டில் மிகவும் உற்சாகத்துடன் தீர்மானம் நிறைவேறியது. எங்களுடைய முக்கியமான ஊழியர்களுக்குள் சிறிது மனத் தயக்கம் உண்டாயிற்று. "ஜமீன்தார்கள், விவசாயிகளைப் பய முறுத்துவதற்கு, செல்வாக்கும் வல்லமையும் படைத்திருக்கிறார்களே? ஜமீன்தார்களுக்கு ஆதரவாகப் பின் பலமாகச் சர்க்கார் இருக்கிறார்களே? ஆகையால், நம்முடைய முயற்சி கைகூடுமா" என்று சிலர் சந்தேகம் கொண்டார்கள். இதை சகித்து,விவசாயிகள் எவ்வளவு வரையில், உறுதியுடன் இருக்க முடியுமென்றுஅவர்களுக்குத்திட்டமாகவிளங்கவில்லை.ஆனால், அங்கே கூடியிருந்த 1600 பிரதிநிதிகளின் உள்ளங்களில் தயக்கமோ, சந்தேகமோ சிறிதளவுகூடக் கிடையாது. அதாவது அத்தகைய தயக்கம் தோற்றத்தில் வெளிப்படையாகக் காணப்படவில்லை. மகாநாட்டில் பிரசங்கம் செய்தவர்களில் நான் ஒருவன். பொதுஜனக் கூட்டங்களில் பேசக்கூடாதென்று என் பேரில் தடைஉத்தரவு போடப்பட்டிருந்தது. அந்த உத்தரவை இந்தப் பிரசங்கம் மூலமாக நான் மீறி நடந்தேனோ என்னவோ எனக்குத்தெரியாது. ரயிலில் வந்து கொண்டிருந்த தகப்பனாரையும், உறவினர்களையும் வரவேற்க, நான் ஸ்டேஷனுக்குப் போயிருந்தேன். ரயில் வண்டிகொஞ்சம் தாமதித்து வந்தது. அவர்கள் வந்து சேர்ந்ததும், நான் அவர்களை வரவேற்று, ஒரு கூட்டத்திற்குப் போய்விட்டேன். நகரவாசிகளும் சுற்றுப்புறத்துக் கிராமவாசிகளும் சேர்ந்து இந்தக்கூட்டத்தை யேற்பாடு செய்திருந்தார்கள். இரவு சுமார் 8 மணி இருக்கும். மிகவும் அலுத்துப்போய் கூட்டத்திலிருந்து நானும் கமலாவும் திரும்பி வந்துகொண் டிருந்தோம். தகப்பனாரோடு ஆர அமர பேசலாம் என்ற மகிச்சியுடனே வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தேன். அவர் முசோரியிலிருந்து திரும்பிவந்தது முதல், நானும் அவரும் இரண்டு வார்த்தைகூடச் சேர்ந்தாற்போல் பேசவில்லை. ஆகவே, அவர்

எனக்காகக் காத்துக்கொண்டிருப்பாரென்று எனக்குத் தெரியும். நாங்கள் திரும்பி வந்து கொண்டிருக்கையில், எங்களுடைய வீட்டிற்குக் கூப்பிடு தூரத்தில் எங்களது மோட்டார்கார் நிறுத்தப்பட்டது. என்னைக் கைது செய்தார்கள். யமுனை நதியைத் தாண்டி அழைத்துக் கொண்டுபோய், என்னுடைய பழைய இருப்பிடமாகிய நயினிச்சிறையில் என்னை வைத்துவிட்டார்கள். கமலா தனியாக ஆனந்த பவனுக்குச் சென்று, இந்தப் புதிய செய்தியைக் காத்துக் கொண்டிருந்த என் குடும்பத்தாருக்குத் தெரிவித்தாள். நயினி சிறைக்குப் போய் சேர்ந்ததும் 9 மணி அடித்தது.

# XXXII

## ஐக்கிய மாகாணங்களில் வரிகொடா இயக்கம்

சிறையிலிருந்து வெளிவந்து 8 நாட்களுக்குள் மறுபடியும் நயினி சிறைக்குப் போய்ச் சேர்ந்தேன். பழைய விடுதியிலே மீண்டும், சையது முகம்மது, நர்மதாப் பிரசாத், ரஞ்சித் எஸ். பண்டிட், இவர்களோடு சேர்ந்து கொண்டேன். சில நாட்கள் கழித்து சிறையிலேயே என்னை விசாரித்தார்கள். விடுதலையன்றைக்கு மறுநாள், நான் அலகாபாத்தில் செய்த பிரசங்கத்தைப் பல கூறுகளாக வெட்டி, அதன்பேரில் பல குற்றச்சாட்டுகள் செய்யப்பட்டன. வழக்கம்போல நான் எதிர்க்கட்சி ஆடவில்லை. கச்சேரியில் சுருக்கமாக வாக்கு மூலம் ஒன்றைக்கொடுத்தேன். 124 ஏ. பிரிவின்படி எனக்கு 18 மாதக் கடினக்காவலும், 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. 1882-ம் வருஷத்திய உப்புச் சட்டத்தின்படிக்கு 6 மாதமும்; நூறு ரூபாய் அபராதமும் கிடைத்தன. 1930-ம் வருஷத்திய அவசரச் சட்டத்தின் கீழ் 6 மாதக் கடின காவலும், நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. மொத்தம் இரண்டு வருஷக் கடுங்காவல்; அபராதம் செலுத்தத் தவறினால், அதற்காக 5 மாதம் சிறைவாசம். இது என்னுடைய ஐந்தாவது தடவை சிறைப் பிரவேசமாகும்.

என்னை மீண்டும் கைதி செய்து தண்டனை விதித்ததால், சட்டமறுப்பு இயக்கத்துக்கு, சிறிதளவு ஊக்கம் ஏற்பட்டது. முந்தியைக் காட்டிலும், அதிக உற்சாகத்துடன் ஜனங்கள் இயக்கத்தில் வேலை செய்யத் துவக்கினார்கள். இந்தப் புதிய ஊக்கத்துக்குப் பெரும்பான்மையாக தகப்பனார் காரணமாவார். நான் கைதுசெய்யப்பட்ட செய்தியை, கமலா அவருக்குத் தெரிவித்ததும், அவருக்கு அதிர்ச்சி யுண்டாகி, வருத்தம் ஏற்பட்டது. திடீரென்று முதுகை நிமிர்த்திக் கொண்டாராம்; ஒரு நிமிஷம் கூட, தாம் இனி நோயாளியாக இருக்கப்போவதில்லை யென்று எதிரே இருந்த மேஜையின் பேரில் படீரென்று அடித்தார். "இனி எனக்கு நோய் ஏது ? நான் குணம் அடைந்து விட்டேன். முழுஆள் வேலை செய்யப்போகிறேன். நோய்க்கு குனிந்து கொடுத்துக்கொண்

டிருக்கப்போவதில்லை" என்று அழுத்தமாகச் சொன்னாராம். ஆனால், அது கம்பீரமான தீர்மானமே ஒழிய, உடம்பிலே சக்தி இல்லை. வெகு நாட்களாக அவருடைய உடம்பைச் சிறிது சிறிதாகத்தின்று கொண்டிருந்த வியாதியை, திடீரென்று, தீர்மானத்தால் உதறித் தள்ளிவிட முடியுமா? இருந்தாலும், சில நாட்களுக்கு அவரிடம் மிகுதியான மாறுதல் காணப்பட்டது. அவரைப் பார்த்தவர்கள் எல்லோரும் வியந்து போனார்கள். எர்வாடா சிறையில் இருந்து வந்த காலம் முதல், அவர் எச்சில் துப்பும் பொழுதெல்லாம் இரத்தம் வந்து கொண்டிருந்தது. அவர் தீர்மானம் செய்து கொண்ட பின்னர், இரத்தம் வருவது திடீரென நின்று போயிற்று. சில நாட்கள் வரவே இல்லை.

தகப்பனாருக்குப் பிரம்மானந்தம். அவர் என்னைச் சிறையில் பார்க்க வந்த பொழுது, பெரு மகிழ்ச்சியுடன் என்னிடம் நிலைமையைத் தெரிவித்தார். ஆனால் சில நாட்கள் தான் இந்தமாதிரி இருந்தது. பிறகு முன்னைக் காட்டிலும், எச்சில் கோழையோடு அதிகமாக இரத்தம் வர ஆரம்பித்து விட்டது. நோயும் வலுத்துப் போயிற்று. நடுவே கிடைத்த இந்தப் பாக்கியத்தால், அவர் தம்முடைய பழைய வலுவோடு வேலை செய்யத் துவக்கினார். இந்தியா முழுதும் சட்டமறுப்பியக்கத்திற்குப் புத்துயிர் அளித்து பலப்படுத்தினார். பல இடங்களிலிருந்தும் வந்த ஜனங்களோடு தகப்பனார் கலந்துபேசி, விவரமான யோசனைகளைச் சொல்லி, சட்டமறுப்பை விரிவு படுத்தினார். நவம்பர் மாதத்தில் நான் பிறந்த தினத்தன்று இந்தியா முழுதும் கொண்டாடவேண்டுமென்று அவர் குறிப்பிட்டார். என்னுடைய பிரசங்கத்தின் எந்தப் பகுதிகளுக்காக நான் கைது செய்யப்பட்டேனோ, அவைகளைப் பொதுக் கூட்டங்களில் படிக்குமாறு யோசனை சொன்னார். அன்றைக்கு நாடுமுழுதும் போலீஸார் வலுவாகப் பல இடங்களில் தடியடிப் பிரயோகம் செய்தார்கள். கூட்டங்களும் ஊர்வலங்களும் பலவந்தமாகத் தாக்கப்பட்டன. அன்றைக்கு மட்டும் இந்தியா முழுதும் 5000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று மதிப்பிடப்பட்டது. இது ஒரு தனிப் போக்கான ஆண்டு நிறைவுக் கொண்டாட்டமல்லவா?

தகப்பனாருக்கும் உடம்பு குண மில்லாததால், பொறுப்பு எடுத்துக்கொண்டு, இவ்வளவு ஊக்கத்துடன், அவர் வேலை செய்தது, மிகுதியாக அவருக்குச் சுகக்கேட்டை உண

டாக்கிவிட்டது. பூரணமாக ஓய்வு எடுத்துக் கொள்ளவேண் டும் என்று அவரை நான் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். இந்தியாவில் அவர் இருந்தால், அவருக்கு ஓய்வு எடுத்துக் கொள்வது சாத்தியப்படாது. தம்முடைய இயக்கத்தின் வெற்றி தோல்வியை நினைத்துக்கொண்டே யிருப்பார். மேலும், யோசனை கேட்பதற்காக ஜனங்கள் அவரிடம் வருவார்கள். இது எனக்குத் தெரியும். ஆகவே, ரங்கூன், சிங்கப்பூர் அல்லது டச்சுத் தீவுகளுக்குப் பக்கமாகச் சிறிது காலம் தகப்பனார், கடல்பிரயாணம் செய்யலாமென்று நான் யோசனை கூறினேன். பிரயாணத்தில் வைத்திய நண்பர் ஒருவரும் கூடச் செல்வதற்கு ஏற்பாடாகியிருந்தது. இந்த நோக்கத் தோடு அவர் கல்கத்தாவுக்குச் சென்றார். ஆனால் அவருடைய தேக நிலைமை மிகவும் கேவலமாகப் போய்விட்டது. அவரால் நெடுந்தூரம் செல்லமுடியவில்லை. கல்கத்தாவுக்குப் பக்கத்தி லேயே, அவர் ஏழு வாரம் தங்கியிருந்தார். குடும்பத்தார் களும் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் கமலா மட்டும் போகவில்லை. அவள் அலகாபாத்திலேயே தங்கியிருந்து, காங் கிரஸ் வேலைசெய்து கொண்டிருந்தாள்.

வரிகொடா இயக்கத்தில் நான் ஊக்கம் காட்டியதனாலே தான் வெகுவிரைவில் மீண்டும் கைது செய்யப் பட்டேன். என்னைக் கைது செய்தது, அந்த இயக்கத்துக்கு நல்ல தூண்டு கோலாய் இருந்தது. விவசாயிகள் மகாநாடு கூடிக்கலைந்த வுடனேயே, நான் கைது செய்யப்பட்டேன். மகாநாட்டின் பிரதிநிதிகள் எல்லோரும் அப்பொழுது அலகாபாத்திலிருந் தார்கள். நான் கைதுசெய்யப்பட்டதால், அவர்களது உற்சா கம் அதிகப்பட்டது. மகாநாட்டின் தீர்மானத்தை ஜில்லா வின் ஒவ்வொரு கிராமத்திலும் போய்ச்சொன்னார்கள். இரண் டொரு நாட்களில் வரி கொடா இயக்கம் துவக்கப்பட்டது என்று ஜில்லா முழுதிலும் தெரிந்து போயிற்று. எல்லாஇடங் களிலும், ஜனங்கள் இதில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண் டார்கள். அந்தக்காலத்தில் எங்களுடைய முக்கியமான கஷ் டம் ஒன்றேஒன்றுதான். காங்கிரஸ்காரர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் பொது ஜனங்கள் என்ன செய்யவேண்டும் என்றும் தேசத்தாருக்கு அறிவிப்பதற்குச் சரியான வசதி இல்லாமற் போய்விட்டது. எங்களுடைய செய் திகளைப் பிரசுரம் செய்தால், அரசாங்கத்தாரால் அடக்கப் பட்டு ஆபத்து நேருமோ என்று பத்திரிகைகள் பிரசுரிப்ப

தில்லை. எங்களுடைய துண்டுப் பிரசுரங்களையும், அறிவிப்புகளையும் அச்சுக்கூடங்கள் அச்சடிப்பதில்லை. காகிதங்களையும், தந்திகளையும் அரசாங்கத்தார் கவனித்துப் பார்த்து அவைகளை அடிக்கடி தடுத்துவிட்டார்கள். ஆகவே நாங்கள் எவ்வாறு அறிவிப்பது? ஆட்கள் கையில் காகிதங்களை எழுதிக் கொடுத்தனுப்ப வேண்டும். இப்படிச்செய்கையில் எங்களுடைய தூதர்கள் சில சமயங்களில் கைது செய்யப்பட்டார்கள். மேலும், இந்த முறையினால் பணம் செலவாகி வந்தது. தவிர ஏராளமான ஆட்களும் தேவை. சில இடங்களில் இந்த முறை வெற்றியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. மாகாணத்திலுள்ள கிளைக்காரியாலயங்களுக்கும் தலைமையாபீசுக்கும் போக்குவரத்து இருந்தது. ஜில்லாவில் முக்கிய ஸ்தலங்களுக்குள் தொடர்பும் இருந்து வந்தது. நகரங்களிலே எந்தச் செய்தியும் எளிதிலே பரவிவிடும். அச்சுச்சட்டத்தை மீறி கையால் எழுதப்பெற்ற பத்திரிகைகளைக் கொண்டு, செய்தியை பரப்ப முயற்சி செய்யப்பட்டது. இத்தகைய பிரசுரங்களுக்கு அப்பொழுது நிறைய கிராக்கி இருந்தது.

பொதுஜன அறிவிப்புக்காக, நகரங்களில் தம்பட்டம் மூலமாக தெருத்தெருவாகச் சொல்லிக்கொண்டே போவதுண்டு. இவ்வாறு செய்பவர்களை அநேகமாக அரசாங்கத்தார் கைது செய்துவிடுவார்கள். இதைப்பற்றி யாரும் கவலைப்படவே இல்லை. கைது செய்யப்படுவதற்குத்தான் எல்லோரும் ஆவலாக இருந்தார்கள். மழுப்பித் தப்பித்துக்கொள்வதற்கு, ஒருவருக்குக்கூட விருப்பம் கிடையாது. இந்த வழிகள் நகரங்களுக்குத் தோதாய் இருந்தன. கிராமாந்திரங்களில் இவைகளை எளிதிலே அனுஷ்டிக்க முடியவில்லை. கையெழுத்துப் பிரசுரங்களை யனுப்பினோம்; முக்கியமான கிராமங்களுக்குத் தூதர்கள் போய்வந்தார்கள். ஆனால் இவைகளின் மூலமாய்த் திருப்திகரமாகக் காரியம் செய்யமுடியவில்லை. தலைமை யாபீசின் கட்டளைகள் கிராமாந்தரங்களுக்குப் போய்ச்சேர ரொம்ப காலம் பிடித்தது. அலகபாத்தில் கூடிய விவசாயிகள் மகாநாடு, இந்தக் கஷ்டத்திற்குப் பரிகாரம் தேடிக்கொண்டுவிட்டது. இந்த மகாநாட்டுக்குப் பிரதிநிதிகள் அநேகமாக முக்கியமான கிராமங்களிலிருந்து வந்திருந்தார்கள். ஆகவே, அவர்கள் கலைந்தபொழுது, விவசாயிகள் சம்பந்தமாகச் செய்யப்பட்ட புதியதீர்மானங்களைத் தங்கள் கிராமங்களுக்குப்போய்ச் சொன்னார்கள். மகாநாட்டின் காரணமாக, நான் கைதுசெய்

யப்பட்டதையும் எடுத்துக்கூறினார்கள். அவர்களோ ஆயிரத்து அறுநூறு பேர்கள். இவர்களே வரி கொடா இயக்கத்துக்கு திடம்கொண்ட, உற்சாகம் நிறைந்தபிரசாரகர்களாக ஆகிவிட்டார்கள். இயக்கத்தின் ஆரம்ப வெற்றி நிச்சயமாய் விட்டது. துவக்கத்தில் விவசாயிகள் கிஸ்தி செலுத்தமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களைப் பயமுறுத்தினால் ஒழிய, ஒருக்காலும் செலுத்தமாட்டார்கள் என்பதும் நிச்சயம். ஜமீன்தார்களும் அதிகாரிகளும் அவர்களைப் பயமுறுத்தி பலாத்காரத்தைப் பிரயோகம் செய்தால், அவர்கள் எவ்வளவு வரையும் தாங்குவார்களென்று எவராலும் சொல்ல முடியவில்லை.

பொதுவாக ஜமீன்தார்களும், விவசாயிகளும் வரி கொடுக்க வேண்டாமென்று வேண்டிக்கொண்டோம். இதிலே ஜமீன்தார், குடியானவர் என்ற பிளவே கிடையாது. ஆனாலும் அனுபவத்திலே பார்த்தால், ஜமீன்தார்களில் பெரும்பான்மையோர் வரியைச் செலுத்திவிட்டார்கள். தேசப் போராட்டத்தில் அனுதாபங் கொண்ட ஜமீன்தார்களில் சிலரும் வரியைச் செலுத்திவிட்டார்கள். பின் சொன்ன அபிமானிகளை அரசாங்கத்தார் பல வகைகளிலும் தொல்லை செய்து வற்புறுத்தினார்கள். நஷ்டப்படுவதாய் இருந்தால், இவர்களுக்கு ஏராளமாக நஷ்டம் உண்டாகும். விவசாயிகளோ மிகவும் உறுதியாக நின்று வரியைச் செலுத்தவில்லை. ஆகவே எங்களுடைய போராட்டத்தின் முடிவு ஜமீன்தார்களின் குத்தகைப் பணத்தை விவசாயிகள் கொடுக்காத இயக்கமாக மாறிவிட்டது. அலகாபாத் ஜில்லாவிலிருந்து ஐக்கிய மாகாணங்களின் ஏனைய ஜில்லாக்களில் சிலவற்றுக்கும் இது பரவியது. அநேக ஜில்லாக்களில் பகிரங்கமாக யாதொரு அறிவிப்பும் செய்யாமல், விவசாயிகள் தங்கள் குத்தகைப் பணத்தைச் செலுத்தாமல் நிறுத்திக்கொண்டார்கள். தானியங்கள் விற்காமல் சம்பலாகப் போனமையால், அவர்களால் குத்தகைப் பணம் கட்ட முடியாமலும் போய்விட்டது. அரசாங்கத்தாரும், பெரிய ஜமீன்தார்களும் இந்த இயக்கத்தைத் தடுக்கப் பல மாதங்கள் வரையிலும் விரிவாக யாதொன்றும் செய்யவில்லை. அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு பக்கத்திலே சட்ட மறுப்போடு, அரசியல் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. மறு பக்கத்திலே பொருளாதார மந்தத்தால், விவசாயிகள் கஷ்டப்பட்டுக்

கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டும் ஒன்று கூடிக்கொண் டன; விவசாயிகளின் எழுச்சியை சதா தியானம் செய்து கொண்டு, அரசாங்கத்தார் திகிலடைந்தார்கள். இந்தச் சமயத் தில் லண்டன் நகரில் வட்ட மேஜை மகாநாடு நடந்துகொண் டிருந்தது. இந்தியாவில், தங்களது தொல்லைகளை அதிகமாக் கிக்கொள்ள அரசாங்கத்தார் விரும்பவில்லை. இந்திய ஆட்சி, கொடுங்கோலாட்சி யென்று மிகுதியும் விளம்பரப்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு மனமில்லை.

ஐக்கிய மாகாணம் சம்பந்தப் பட்டவரையிலும், வரி கொடா இயக்கத்தினால் முக்கியமான பயனொன்று ஏற்பட் டது. எங்களுடைய போராட்டம், நகரங்களிலிருந்து கிராமங் களுக்கும் பரவிவிட்டது. அதனால் இயக்கத்துக்குப் புதிதான ஒரு ஊக்கம் உண்டாகி, அதற்கு விரிவான அஸ்திவாரம் ஏற் பட்டது. நகர ஜனங்கள் அலுத்துக் களைத்துப்போனதாலும், நடுத்தர வகுப்பார்களுக்கு ருசி குறைந்தாலும், ஐக்கிய மாகாணங்களில் இயக்கம் வலுத்துக்கொண்டே போயிற்று. முந்திய காலங்களைவிட, இப்பொழுது அதன் வலு அதிகமா கத்தானிருந்தது. மற்றைய மாகாணங்களில் நகரங்களிலிருந்து கிராமங்களுக்குப் போராட்டத்தை மாற்றிச் செல்லவில்லை. அரசியல் துறையிலே மட்டும் போராட்டம் நடைபெற்றுவந் தது. பொருளாதாரப் பிரச்னைகள் கலக்கவேயில்லை. இயக் கத்தை நடத்திவந்தது நகரங்கள் என்றே சொல்லவேண்டும். எனவே, நடுத்தர வகுப்பார்கள் சிறிது சிறிதாக அலுத்துப் போக, இயக்கமும் அந்த மாகாணங்களில் குன்றிக்கொண்டே போயிற்று. இயக்கத்தில் இதுவரையிலும் சிறப்பான பங்கை யெடுத்துக்கொண்டு வந்த பம்பாய் நகரம்கூடச் சிறிதளவு தளர் ச்சி காண்பிக்க ஆரம்பித்தது. சட்டம் மீறுதலுக்குக் குறை இல்லை. எங்கும் அரெஸ்டுகள் நேர்ந்துகொண்டே இருந்தன. ஆனால் இவைகளில் உயிரில்லை போலக் காணப்பட் டன. உயிர்ச் சத்து எங்கோ மறைந்துவிட்டது. இது இயற் கைதான். ஏனெனில், புரட்சி ஸ்தாயியில் (நிலையில்) பொது ஜனங்களின் மனப்பான்மையை நீண்டகாலம் நிலைக்க வைத் திருப்பது சாத்தியமில்லாத விஷயமாகும். சாதாரணமாக சில நாட்கள்தான் புரட்சி உற்சாகத்துடன் இயக்கத்தை வைத் துக் கொண்டிருக்கமுடியும். ஆனால் சட்டமறுப்போ, ஊக் கம் குறையாமல் பல மாதங்களுக்கு நீண்டு கொண்டு போகும் படியான வல்லமையைப் பெற்றிருந்தது. எவ்வளவு காலம்

வேண்டுமானாலும் இயக்கம் நடைபெறும் போலவும் தோன்றிற்று.

அரசாங்கத்தின் அடக்குமுறையும் வளர்ந்துகொண்டு போயிற்று. காங்கிரஸ் கமிட்டிகளும், வாலிபர் சங்கங்களும் இதுவரையிலும் போராட்டத்தை நடத்திவந்தன. அவைகள் இப்பொழுது சட்டம் மீறியவை என்று அறிவிக்கப்பட்டு கலைக்கப்பட்டன. சிறையில் அரசியல் கைதிகளை மிகவும் கேவலமாக நடத்த ஆரம்பித்தார்கள். விடுதலை அடைந்ததும், மீண்டும் மக்கள் சிறைக்கு வருவதைக் கண்டு அரசாங்கத்தாருக்கு ஆத்திரம் பொங்கியெழுந்தது. தண்டனைபெற்றாலும் தளராமல், தேசபக்தர்கள் இயக்கத்தை நடத்துவதைப் பார்த்து, அரசாங்கத்தின் உள்ளத்தில் திகில் உண்டாயிற்று. 1930-ம் வருஷம் நவம்பரிலோ, டிசம்பரிலோ ஐக்கிய மாகாணச் சிறைகளில், அரசியல் கைதிகளிற் சிலர் கசையடி அடிக்கப்பட்டார்கள். சிறை ஒழுங்கை மீறியதற்காக இந்தத் தண்டனை. இந்தச் செய்தி எங்களுக்கு நயினி சிறையில் எட்டிற்று, நாங்கள் மனம் கலங்கினோம். கசையடி அடிப்பது அறவே கூடாதென்பது என்னுடைய எண்ணமாகும். எத்தகைய குற்றமாயினும் சரியே, கசையடி கூடாது. நாங்கள் இப்பொழுது பெரிதும் மனம் தவித்துப் போனாலும், பின்னர் இந்தக் கேவலமான தண்டனையைக் கண்டு மனம் பழகிப் போகும்படியாக, அதிகக் கேவலமான நிகழ்ச்சிகள் சிறைகளிலும் வெளியேயும் நமது நாட்டில் நடக்கத் தலைப்பட்டன. சிறுவர்களுக்குச் சில்லரை குற்றங்களுக்காகக் கசையடி தண்டனை கொடுப்பது மிருகத் தன்மை கொண்டதாகும். எங்கள் விடுதியில் இருந்த நாங்கள் நால்வரும் இதைப்பற்றி அரசாங்கத்தாருக்கு எழுதினோம். இரண்டு வாரங்களாகியும் யாதொரு பதிலும் கிடைக்கவில்லை. கசையடி கூடாது என்ற எங்களது ஆக்ஷேபத்தை காண்பிக்கவும், கசையடி பெற்றவர்களுக்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளவும் ஏதாவது தொன்று செய்யவேண்டுமென்று நாங்கள் தீர்மானங்கொண்டோம். 72 மணி நேரம், அதாவது மூன்று நாட்கள், சுத்தப் பட்டினி இருப்பதாகத் தீர்மானம்கொண்டோம். உண்ணா விரதம் எங்களுக்கு வழக்கமில்லை. அதை நாங்கள் எவ்வளவு வரையில் தாங்கக்கூடும் என்பதும் எங்களுக்குத் தெரியாது. முந்தின தடவைகளில் நான் 24 மணி நேரத்துக் கதிகமாகப் பட்டினி கிடந்ததில்லை.

அதிகக் கஷ்டமின்றி எங்களது உண்ணு விரதத்தை நாங்கள் பூர்த்தி செய்துகொண்டோம். நான் அச்சப்பட்டபடி, உண்ணு விரதம் அவ்வளவு பயங்கரமானதல்ல என்பதைத் தெரிந்து கொண்டதில் எனக்கு மிகவும் சந்தோஷம். ஆனல் முட்டாள்தன மொன்று செய்தேன். பட்டினி கிடக்கும் பொழுதுகூட, என்னுடைய வழக்கமான வேலைகளையும், தேக பயிற்சியையும், ஓட்டத்தையும் விட்டுவிடவில்லை. உண்ணு விரதத்துக்கு முன், எனக்கு உடம்பு கொஞ்சம் குண மில்லாமையால், பட்டினி கிடந்ததால் யாதொரு நன்மையும் ஏற்படவில்லை. அந்த மூன்று நாட்களுக்குள் எங்களில் ஒவ்வொருவருக்கும் எடையில், 7, 8 ராத்தல் குறைந்துபோய் விட்டது. ஏற்கனவே எங்களுக்கு நயினி சிறையில் 15-லிருந்து 26 ராத்தல் எடை குறைந்திருந்ததோடு, இதுவும் சேர்ந்து கொண்டது. நாங்கள் உண்ணு விரதம் இருந்தது ஒரு புற மிருக்க, கசையடியைப் பற்றி, வெளியே கிளர்ச்சி செய்யத் துவக்கினர்கள். அதன் பயனுக இனி கசையடி கூடாதென்று ஐக்கியமாகாண அரசாங்கத்தார், சிறை யதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பினர்கள் என்பது என் நினைவு. ஆனல் இந்த உத்தரவுகள் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கவில்லை. ஒரு வருஷம் கழித்து ஐக்கிய மாகாணங்களிலும் ஏனைய மாகாணங்களிலும் சிறைகளில் கசையடி மலிந்துபோய்விட்டது. இந்தச் சில்லரை திகில்களைத் தவிர, மற்றப்படி சிறையில் நாங்கள் அமைதியுடன் வாழ்ந்து வந்தோம். காலப் பருவம் மிகவும் நன்றுயிருந்தது. அலகாபாத்தில் எப்பொழுதுமே குளிர் காலம் இன்பமாயிருக்கும். எங்களுடைய விடுதிக்கு ரஞ்சித் பண்டிட் பொக்கிஷம் போன்றவரானர். ஏனெனின், அவருக்குத் தோட்டத்தைப் பற்றி ரொம்ப தெரியும். பார்க்க இனிமையா யில்லாத எங்களுடைய அடைப்புக்குள், வெகு விரைவில் பல வர்ணங்கள் கொண்ட மலர்கள் பூத்து நிறைந்து நின்றன. அந்த அடைப்புக்குள்ளாகவே "கால்" பந்து விளையாடவும், அவர் வசதியை உண்டாக்கிக் கொடுத்துவிட்டார்.

நைனி சிறையில் எங்களுக்கு இன்பமான பரபரப்பை உண்டுபண்ணியது வேறென்று. எங்கள் தலைக்குமேலே ஆகாய விமானங்கள் பறந்து செல்வதைக் காண எங்களுக்கு மிகவும் ஆனந்தமாயிருந்தது. ஐரோப்பாவிலிருந்து பிரெஞ்சு, இந்தோ—சைன, ஜவா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு விமானங்கள் செல்வதாயிருந்தால், நைனியைத் தொட்டுக்

கொண்டுதான் அவைகள் போகும். விமானப் பாதையில் அலகாபாத் ஒரு துறைமுகமாகும். பட்டேவியாவுக்கும், அதனின்றும் பறந்து செல்லும் டச்சுக்கார விமானங்களின் கம்பீரத் தோற்றம் எங்களுக்குக் களிப்பைத் தந்தது. சில சமயங்களில் விடியற்கால நேரத்தில், இருள் பிரியுமுன்னர், நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் காட்சி அளித்துக்கொண்டிருக்கும் வேளையில், குளிர் காலத்தில், ஆகாயத்தில் விமானம் பறந்து செல்லும். விமானத்தில் இரண்டு பக்கங்களிலும் சிவப்பு வெளிச்சங்கள் இருக்கும். விமானம் முழுதும் வெளிச்சமாக அழகிய காட்சியை அது பறந்து செல்லும்பொழுது, கண் குளிரக் காணலாம்.

பண்டித மதன்மோகன மாளவியாவும் வேறு ஏதோ சிறையிலிருந்து நைனிக்கு மாற்றப்பட்டார். அவரை எங்கள் விடுதியில் வைக்காமல் தனியாக வைத்தார்கள். ஆனால் நாங்கள் அவரைத் தினமும் சந்தித்தோம். நான், வெளியே அவரைக் கண்டு தெரிந்துகொண்டதைக் காட்டிலும் சிறைக்குள்ளே அதிகமாக அவரைப்பற்றித் தெரிந்துகொண்டேன். முதுமைப் பருவத்திலிருந்தும், அவரிடம் ஒரு வாலிபனுடைய உற்சாகம் இருந்தது. ஜீவசத்து நிறைந்திருப்பதாகக் காணப்பட்டார். அவர் இன்பமும் இங்கிதமும் நிறைந்த தோழர். ரஞ்சித் அவர்களின் உதவியைக்கொண்டு ஜெர்மன் பாஷையும் கற்றுக்கொள்ள அவர் ஆரம்பித்தார். அவருடைய ஞாபக சக்தியோ அபாரமாக இருந்தது. அவர் நைனி சிறையிலிருந்த பொழுது, கசையடியைப்பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டார். அவருக்கு மிகுதியும் மனக்கலக்கம் உண்டாயிற்று. உடனே மாகாணத்தின் தற்காலீக கவர்னருக்கு எழுதினார்: ஆனால் சீக்கிரத்தில அவருக்கு சுகவீனமேற்பட்டது. சிறையிலிருந்த சௌகரியங்கள் அவரது உடல் நிலைக்குப் போதவில்லை. அவரால் குளிரைத் தாங்கமுடியவில்லை. நோய் கடுமையாகி விட்டது. எனவே அவரை நகர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்கள். அவருடைய தண்டனைக் காலம் முடிவடையுமுன்னர் அவரை விடுதலை செய்தார்கள். நல்ல வேளையாக ஆஸ்பத்திரியிலேயே அவர் குணமடைந்துவிட்டார்: 1931-ம் ஞு ஜனவரிமீ முதல்தேதி, புதிய வருஷப் பிறப்பு நாளில் கமலா கைது செய்யப்பட்டதாக எங்களுக்குச் செய்தி எட்டியது. எனக்குச் சந்தோஷம். அவளுடைய தோழர்களிற் பலர், ஏற்கனவே சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்

களைப் பின்பற்றவேண்டும் என்று அவளுக்கு ஆவல். சாதாரணமாக ஆண் பிள்ளைகளாக இருப்பின், அவர்களும் எனது சகோதரியும் வேறு பல ஸ்திரீகளும் வெகுகாலத்துக்கு முன்னரே கைது செய்யப்பட்டிருப்பார்கள். ஆனால் கூடுமானவரையில் பெண்களைக் கைது செய்யவேண்டாம் என்பது அரசாங்கத்தாரின் அக்கால்த்து நோக்கமாயிருந்தபடியால், இவர்கள் இவ்வளவு காலத்துக்குத் தப்பித்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ, கமலாவின் மனோரதம் நிறைவேறிவிட்டது. அவள் எவ்வளவு மகிழ்ச்சியுடனிருப்பாள் என்று எண்ணினேன்! ஆனால், எப்பொழுதும் அவளுக்கு உடம்பு சுகக்கேடாயிருந்தமையால், சிறையினால் அவ்ளுக்கு அதிகமான துன்பங்கள் ஏற்படுமோ என்றும் பயந்து போனேன்.

அவளைக் கைது செய்ததும், பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்த பத்திரிகை நிருபர் ஒருவர், நாட்டுக்கு ஒரு செய்தி கொடுக்கவேண்டும் என்று அவளை வேண்டிக்கொண்டார். அந்த நிமிஷத்திலே அதிகமாக ஆலோசனை செய்யாமல், சுருக்கமாகச் செய்தி ஒன்றை, அவள் கொடுத்தாள். அது அவளுடைய இயல்புக்கு மிகவும் பொருத்தமானதாகும். "என்னுடைய கணவனது அடிச்சுவடுபற்றி சிறைக்குச் செல்லுவதில், எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் கர்வமும் ஏற்பட்டிருக்கின்றன. ஜனங்கள் கொடியைத் தளர்த்தாமல் பறக்கவிட்டுக் கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்". இதுதான் அவள் நாட்டுக்கு விடுத்த நற்செய்தியாகும். சிறிதளவு யோசனை செய்து செய்தியைக் கொடுத்திருந்தால், செய்தி வேறு விதமாக இருந்திருக்கும். ஆண்களின் கொடுங்கோலை எதிர்த்துப் பெண்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பிறந்தவள் தான் என்பது அவளுடைய அழுத்தமான கருத்தாகும். ஆனால் அந்த நிமிஷத்தில் ஹிந்து மனைவியின் பரம்பரை தர்மம்தான் அவளது உள்ளத்தில் மாலோங்கி நின்றது. எனவே, ஆணின் கொடுமையை அவள் மறந்துபோனாள். அப்பொழுது த்கப்பனார் கல்கத்தாவிலிருந்தார். உடம்பு நோயில்லை. ஆனால், கமலாவைக் கைதுசெய்து தண்டித்த செய்தி அவருக்குக் கிடைத்ததும், அவரை மிகுதியும் ஆட்டிவிட்டது. அலகாபாத்துக்குத் திரும்புவதென்று தீர்மானம் கொண்டார். உடனே என்னுடைய தங்கை கிருஷ்ணாவை அலகாபாத்துக்கு அனுப்பிவைத்தார். இரண்டொரு நாள் கழித்து மற்றவர்

களோடு தாமும் அலகாபாத்துக்கு வந்து சேர்ந்தார். ஜனவரி 12-ம் தேதி, என்னைப் பார்க்க அவர் நைனிக்கு வந்தார். அவரைக் கடைசியாகப் பார்த்து இரண்டுமாதகாலம் ஆயிற்று. இப்பொழுது அவரை நான் கண்டபொழுது, திடுக்கிட்டுப் போனேன். அதை மறைத்துக் கொள்ள முடியவில்லை. அவருடைய தோற்றத்தைக் கண்டு, நான் எவ்வளவு திகிலடைந்தேன், என்பதை அவர் உணரவில்லை என்று தோன்றிற்று. கல்கத்தாவில் தாமிருந்ததைவிட, உடம்பு குணமடைந்து வருவதாக அவர் என்னிடம் சொன்னார். ஆனால் அவரது முகம் முழுதும் மிகுதியும் ஊதியிருந்தது. ஏதோ தற்காலிக காரணத்தால், இவ்வாறு நேர்ந்துவிட்டதாக அவரது எண்ணம்.

அவருடைய அந்த முகத்தோற்றம் என்னைவிரட்டிக் கொண்டே யிருந்தது. அவரது முகம் அவ்வாறு இருந்ததே இல்லை. உண்மையாக அவரது உயிருக்கு ஆபத்து வரப் போகிறதென்று நான் அச்சம் கொண்டது, இதுதான் முதல் தடவையாகும். அவரை எப்பொழுது கண்டாலும் சக்தியும் ஆரோக்கியமும்தான் என் கண்ணில் படும். அவரையும் சாவையும் சேர்த்து நான் ஒருபொழுதும் கற்பனை செய்ததே இல்லை. அவர் எப்பொழுதும் சாவைப்பற்றி பேசிச் சிரிப்பார். கேலிசெய்வார். இன்னும் நீண்டகாலத்திற்கு இருக்கப்போவதாக என்னிடம் சொல்லுவார். ஆனால் அவருடைய வாலிபப் பருவத்து நண்பர்கள் ஒவ்வொருவராய் மரிக்கும்பொழுது, அவருக்கு ஒருவகைத் தனிமை யுணர்ச்சி உண்டாகும். புதிதான கூட்டத்தில் சேரவேண்டியிருக்கிறதே என்று லேசாக அவர் மனம் வருந்துவார். தாமும் தமது நண்பர்களைப் போலவே மறையவேண்டிவரும் என்ற எண்ணமும் அவருக்கு உதயமாகும். ஆனால் பொதுவாக இந்த மனோ நிலை நீடித்திருப்பதில்லை. நிறைந்த உயிர்ச் சத்து உள்ளவரானபடியால், மீண்டும் கலகலவென்று சிரிக்கத் துவங்கிவிடுவார். அவருடைய அபரிமிதமான உற்சாகத்தையும், அன்பையும் அனுபவித்த குடும்பத்தினரான எங்களுக்கு அவர் இல்லாமல் உலகம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்வது கஷ்டமாக விருந்தது. அவருடைய தோற்றத்தைக் கண்டு நான் பயந்து போனேன். என்னென்னவோ ஆபத்துகள் வருமென்று மனதில் எண்ணங்கொண்டேன். இருந்தாலும் விரைவில் அவருக்கு யாதொரு ஆபத்தும் வருமென்று நான் எண்ணவில்லை.

என்ன காரணத்தாலோ எனக்கும் அப்பொழுது உடம்பு சரியாயில்லை.

முதலாவது வட்டமேஜை மகாநாடு முடிகிற சமயம். அதனுடைய கடைசிக் கோலத்தையும் காட்சியையும் கவனிக்க விநோதமாய் இருந்தது. அவைகளை நிந்தைக் கண்ணோடு பார்த்தோம். அந்தப் பிரசங்கங்களும் வாதங்களும் வேதாந்தங்களும் சாரமற்றவையாகவும், உண்மையற்றவையாகவும் தோன்றின. ஆனால் ஒன்று மட்டும் உண்மையாக விளங்கிற்று. நமது நாடு மிகுதியும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில், நமது ஆண்களும் பெண்களும் ஆச்சரியப்படத்தக்க முறையில் நடந்துகொண்ட போதிலும், நமது போராட்டத்தை அலட்சியம் செய்து எதிர்த்த கட்சிக்கு ஒத்தாசை செய்ய நமது நாட்டில் சிலர் தயாராக இருந்தார்கள் என்ற உண்மை வெளியாயிற்று. தேசீயம் என்ற போர்வையின் கீழ், இந்தியாவில் பலதிறப்பட்ட உணர்ச்சிகள், பொருளாதாரத்துறையில் நடமாடிக்கொண்டு வருகின்றன என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்த விஷயம். தேசீயம் என்ற பெயரை வைத்துக்கொண்டு, முதலாளிமார்கள் எதிர்காலத்திலும் தங்களுடைய பாத்யதைகளை காப்பாற்ற முயலுகின்றார்கள் என்பது தெளிவாயிற்று. வட்டமேஜை மகாநாடு என்பதே, முதலாளிகளின் கூட்டமாகும். அதன் பிரதிநிதிகளிற் பலர் எங்களது போராட்டத்தை எதிர்த்தவர்கள். இன்னும் சிலர் எங்களிடமிருந்து விலகி நின்று, சும்மா இருந்தார்கள். ஆனால், இவர்கள் சும்மா இருந்தகாலம் முடிவடைந்து விட்டது. லண்டனிலிருந்து ஜாடை காட்டியவுடனே, இவர்கள் கூட்டமாக லண்டனுக்குப் போக ஆவல் கொண்டவர்கள் ஆனார்கள். எரிகிற வீட்டில் பிடுங்கினவரையில் ஆதாயமென்றபடி, கொள்ளையில் பங்குபெற லண்டனுக்குச் செல்ல துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். காங்கிரசில், விவசாயிகளும் தொழிலாளர்களும் அதிகமாகச் சேர்ந்து வருகிறார்கள் என்ற எண்ணத்தினால், முதலாளிகள் லண்டனில் எதிர்க் கட்சியோடு சேரத்துவக்கினார்கள். இந்தியாவில் அரசியல் மாறுதல் ஏற்படுமாகில், தங்களுடைய செல்வாக்கு போனாலும் போய்விடுமென்று முதலாளிமார்கள் எளிதில் முடிவுக்கு வந்தார்கள். தங்கள் நலத்துக்கு ஆபத்து வரக் கூடுமென்றும் எண்ணத் துணிந்தார்கள். இந்தியமுதலாளிகள் காங்கிரசின் தீவிரப் போக்கைக் கண்டு பயந்துபோய், இந்திய

அரசியலில் மகத்தான மாறுதல்களை விரும்பவில்லை. பிரிட்டிஷார் சாசுவதமாக இந்தியாவிலிருந்து பழைய ஜனசமூகப் பழக்க வழக்கங்களையும் பாத்தியங்களையும் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமென்று, முதலாளிகள் விரும்பினார்கள். இந்தியாவுக்கு குடியேற்றநாட்டு அந்தஸ்து போதுமென்று சொல்வதற்கு இதுதான் காரணமாகும்.

இப்பொழுது இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷ் சேனை இந்தியாவை விட்டுப் போகவேண்டுமென்றும், இந்தியச் சேனை இந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் வர வேண்டுமென்றும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையே ராஜி செய்வதுதான் முறையென்றும் நான் சொன்னதற்காக, பிரசித்தி பெற்ற மிதவாத இந்தியத் தலைவர் ஒருவர் என்னிடம் மிகுதியும் ஆத்திரம் கொண்டார். இந்த யோசனைக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டாலும், தம்மாலியன்ற அளவு அதை எதிர்க்கப் போவதாகச் சொல்லுகிற எல்லைக்கு அவர் போய்விட்டார். இதை ஏன் அவர் எதிர்க்கவேண்டும்? தேசத்தின் விடுதலை என்றால் இந்த மிகச் சாதாரணமான நிபந்தனைகள் கூட இருக்கக் கூடாதோ? இத்தகைய நிபந்தனை தற்போதைய நிலைமையில் கை கூடுவதற்கு சாத்யப்படாதென்ற காரணத்தால் அவர் எதிர்க்கவில்லை. ஆனால் அது கூடாது என்ற நோக்கத்தினால் எதிர்த்தார். அன்னியநாட்டுப் படையெடுப்பு நேருமோ என்ற அச்சத்தினால் இவ்வாறு எண்ணி இருக்கலாம். பிரிட்டிஷ் சேனைதான் நம்மைக் காப்பாற்ற முடியுமென்று நினைத்திருக்கக்கூடும். படையெடுப்பு சங்கதி இருக்கட்டும். "என்னைக் காப்பாற்று" என்று இந்தியன் ஒருவன் அன்னியனிடம் கேட்பது எவ்வளவு கேவலமான காட்சி! ஆனால், பிரிட்டிஷார் இந்தியாவிலேயே இருக்க வேண்டு மென்று இவர்கள் நினைப்பதற்கு, அன்னியப் படையெடுப்பு உண்மையான காரணமல்ல வென்று எனக்குத் தோன்றுகிறது. எளியவர்கள் மேலோங்கி வராமல் தடுத்து, தங்களுடைய புராதனப் பாத்தியங்களை ஒன்று விடாமல் பாது காத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆசையினால்தான் பிரிட்டிஷார் இந்தியாவில் இருக்கவேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

வட்டமேஜை மகாநாட்டின் இந்தியப் பிரதிநிதிகள் எல்லோரும் வகுப்பு வாதிகளாயிருந்தாலும் அல்லது தேசீய வாதிகளாயிருந்தாலும் மேற் சொன்ன ஒரு ஆசையில் ஒன்று

கூடிக்கொண்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கத் தயாராயிருந்தார்கள். விடுதலைப் போராட்டத்துக்காக சிறைக்குச்சென்ற தேசபக்தர்களும், அந்தத்தேச பக்தர்களைக் காவலில் வைத்திருக்கும் சிறையாளர்களோடு கைகுலுக்கி மகிழ்ந்து ராஜி பேசும் இந்தியர்களும், இந்த இரு கூட்டத்தாரும் தேசீய நோக்கம் கொண்டவர்கள் என்று சொன்னால், எவ்வளவு விநோதமா யிருக்கிறது? இன்னும் வேறு சிலர் இந்தியாவில் இருக்கிறார்கள். அவர்கள் பேச்சுப் படித்தவர்கள். ஸ்வராஜ்யத்துக்கு சுதேசியமே அடிப்படையென்றும் தியாகம் செய்தும் எல்லோரும் அதை ஆதரிக்க வேண்டுமென்றும் அவர்கள் பிரசங்கம் செய்வார்கள். சட்ட மறுப்புப் போராட்டத்தில், அவர்கள் யாதொரு தியாகமும் செய்யவேண்டியதா யிருக்கவில்லை. அவர்களுடைய தொழில்கள் அபிவிருத்தியடைந்து நல்ல லாபம் கிடைத்தது. மற்றவர்கள் சிறைக்குச் சென்றும் தடியடி பட்டுக்கொண்டும் இருக்கும் பொழுது, இவர்கள் தங்களுடைய கடைகளில் பணத்தை எண்ணிக்கொண்டு உல்லாசமாக வீற்றிருந்தார்கள். பின்னர் காங்கிரசின் தேசீயக் கொள்கையில் தீவிர நோக்கம் கலக்க ஆரம்பித்தபொழுது, இவர்கள் தங்கள் குரலைத் தணித்துக் கொண்டு, பேச்சைப் பதப்படுத்திக் கொண்டார்கள். தீவிரக் கட்சியார்களைக் கண்டித்தார்கள். மாஞ்செஸ்டர் ஆலை முதலாளிகளோடு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

வட்டமேஜை மகாநாடு என்ன சாதித்தது என்பதைப் பற்றி எங்களுக்குக் கவலையேயில்லை. அது எட்டத்தி லிருந்தது. அதன் முயற்சிகள் உண்மை கொண்டவையல்ல. முழுதும் நிழலாட்டம். ஆனால் போராட்டமோ, இந்தியாவின் நகரங்களிலும் கிராமங்களிலும் நடைபெற வேண்டியதாகும். போராட்டம் விரைவிலே முடிவடைந்து விடுமென்ற மயக்கம் எங்களுக்குக் கிடையாது. வரப்போகிற ஆபத்துக்களையும் நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் 1930-ம் வருஷத்திய நிகழ்ச்சிகள் எங்களுக்குத் தன்னம்பிக்கையையும் போராடுவதற்குரிய வல்லமையையும் சகிப்புத் தன்மையையும் அளித்தன. அந்த நம்பிக்கையுடனே நாங்கள் எதிர்காலத்தை அக மகிழ்ச்சியுடன் வரவேற்று நின்றோம். டிசம்பரிலேயோ அல்லது ஜனவரித் துவக்கத்திலேயோ ஒரு சம்பவம் நேர்ந்தது. அதனால் நாங்கள் மிகவும் வருத்தப் பட்டுப் போனோம். எடின்பரோ நகரின் (எடின்பரோ ஸ்காட்லந்து

தேசத்தின் தலைநகர்) சுதந்திரம், கனம் சாஸ்திரியாருக்கு அளிக்கப் படுகையில், அவர் ஒரு பிரசங்கம் செய்தார். இந்தியாவில் சட்ட மறுப்பியக்கத்தில் கலந்துகொண்டு சிறைக்குப் போனவர்களைப்பற்றி ஏளனமாகப் பேசினார். அந்தப் பேச்சும், அந்தப் பேச்சின் சந்தர்ப்பமும் எங்களுக்கு வருத்தமுண்டாக்கின. சாஸ்திரியாருக்கும் எங்களுக்கும் அரசியலில் மகத்தான அபிப்பிராய பேதங்களிருப்பினும், அவரிடம் எங்களுக்கு மரியாதை உண்டு.

வட்டமேஜை மகாநாடு முடியும் தருணத்தில், திரு. ராம்ஸே மாக்டொனல்டு அவர்கள் சகோதரப் பான்மை ஒழுகும் அவரது வழக்கமான பேச்சைப் பேசிவிட்டு மகாநாட்டை முடித்துவிட்டார். காங்கிரஸ் தனது கெட்டவழிகளை நிறுத்திவிட்டு, வட்டமேஜை மகாநாட்டு அன்பர்குழாத்தில் சேருவதற்காக காங்கிரஸை அவர் வேண்டிக்கொண்டார். 1931 ஜனவரி மாத மத்தியில், காங்கிரஸ் காரியக்கமிட்டி அலகாபாத்தில் கூடிற்று. கவனிக்கப்பட்ட பல விஷயங்களில் மாக்டொனல்டு அவர்களது யோசனையும் ஒன்றாகும். நான் அப்பொழுது நைனி சிறையிலிருந்தேன். காரியக் கமிட்டி நடவடிக்கைகளைப்பற்றி என்னுடைய விடுதலைக்குப்பின் கேள்விப்பட்டேன். தகப்பனார் கல்கத்தாவிலிருந்து, அப்பொழுது தான் வந்தார். அவரது உடம்பு மிகவும் கேவலமாக இருந்தது. என்றாலும், காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் யாவருடனும் தம்முடைய படுக்கையில் உட்கார்ந்துகொண்டு விஷயங்களை விவாதம் செய்ய வேண்டுமென்று அவர் வற்புறுத்தி விட்டார். சட்டமறுப்பை சிறிதளவு குறைத்துக்கொண்டு மாக்டொனல்டு அவர்களுக்கு ஒரு சமிக்ஞை காண்பிக்கலாம் என்று யாரோ ஒருவர் யோசனை கூறினாராம். இதைக் கேட்டவுடன், தகப்பனாருக்கு ஆத்திரம் தாங்கமுடியவில்லை. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டார். தேசத்தின் நோக்கம் பூர்த்தியாகும் வரையில், தாம் ராஜிக்குத் தயாராயில்லை யென்றும் தாம் ஒருவர் மட்டும் இருந்தாலும் போராட்டத்தை நடத்திக்கொண்டே போவாரென்றும் கூச்சல் போட்டார். இந்தப் பதை பதைப்பு அவருடைய உடம்புக்கு மிகவும் கெடுதல் செய்தது. உடனே காய்ச்சலின் வேகம் அதிகரித்து விட்டது. காரியக் கமிட்டி அங்கத்தினர்களை வெளியே போகச்சொல்லி, அவரைமட்டும் தனியாக வைப்பதற்கு டாக்டர்கள் அரும்பாடு பட்டார்கள்.

அவருடைய யோசனையைக் கேட்டு காரியக்கமிட்டி ராஜிக் கிணங்காத் தீர்மான மொன்றை நிறைவேற்றிற்று. இந்தத்தீர்மானம் வெளியாவதற்கு முன்னமே, ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ, ஸ்ரீநிவாச சாஸ்திரி இவர்களிடமிருந்து தகப்பனருக்கு ஒரு தந்தி வந்தது. தங்களைக் கண்டுபேசும் வரையில், காங்கிரஸ் ஒரு முடிவுக்கும் வரக்கூடாதென்று அவர்கள் வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் ஆங்கிலநாட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். காரியக் கமிட்டியார் ஏற்கனவே ஒரு தீர்மானம் செய்து விட்டார்களென்றும், சாப்ரூவும் சாஸ்திரியாரும் வந்து கலந்துபேசும் வரையில் அந்தத் தீர்மானம் வெளியாகாதென்றும் பதில் தந்தி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சிறைக்குள் இருக்கும் எங்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் தெரியாது. ஏதோ நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று மட்டுமே தெரியும். எங்களுக்கு சிறிதளவு மனவேதனை. எங்களுக்கு கவலையெல்லாம் பூரண விடுதலை நாளான ஜனவரி 26-ந் தேதியைப் பற்றித்தான். இதுதான் முதலாவது ஆண்டு விழா நாளாகும். இந்த ஆண்டு விழாவை நாடு எவ்வாறு கொண்டாடுமோ என்று யோசித்துக் கொண்டிருந்தோம். பூரண விடுதலை நாள் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. கூட்டங்கள் கூட்டினார்கள். பூரண விடுதலைத் தீர்மானத்தை மீண்டும் கூட்டங்களில் உறுதி செய்தார்கள். இந்த நாளைக் கொண்டாடியது ஆச்சரியப் படவேண்டிய சங்கதியாகும். ஏனெனில், பத்திரிகை, அச்சுக்கூட வசதிகள் கிடையாது. தந்தி, தபாலையும் உபயோகப்படுத்த முடியாது. என்றாலும் நாடு முழுதும் ஒரே வாசகமமைந்த தீர்மானமொன்றை எல்லா மாகாணங்களிலும் நகர கிராமங்களென்ற வித்தியாசமில்லாமல், அந்தந்த மாகாணத்தின் தாய்மொழியில் நிறைவேற்றி வைக்கப்பட்டது வியப்புக் குரியதாகும். சட்டத்தை மீறியே, இந்தக் கூட்டங்கள் கூட்டப்பட்டன. போலீஸார் இவைகளைப் பலவந்தமாகக் கலைத்தார்கள்.

ஜனவரி மாதம் 26-ந் தேதியன்று நைனி சிறையில் நாங்கள், சென்ற ஆண்டையும் வரப்போகிற ஆண்டையும் பற்றி யோசனை செய்து காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தோம். என்னுடைய தகப்பனரின் உடம்பு தடபுடலா யிருக்கிறதென்றும் நான் உடனே வீட்டுக்குப் போகவேண்டுமென்றும் திடீரென்று எனக்குச் சொன்னார்கள். விசாரித்ததில் அதற்காக என்னை விடுதலை செய்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்

டேன். ரஞ்சித் அவர்களும் என்னோடுகூட வந்தார். அன்று மாலையில், இந்தியாவில் பல்வேறு சிறைகளிலிருந்தும் இன்னும் பலர் விடுதலை செய்யப்பட்டார்கள். இவர்கள் யாவரும் காங்கிரஸ்காரியக் கமிட்டியின் பழைய, புதிய அங்கத்தினர் கள். நாங்கள் கூடிக்கலந்து நிலைமையை யோசிக்குமாறு, அரசாங்கத்தார் எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார்கள். ஆகவே, அன்றைய மாலையில் எப்படியேனும் நான் விடுதலை செய்யப் பட்டிருப்பேன். தகப்பனாருடைய உடல் நிலையால் சில மணி நேரங்கள் முன்னதாகவே விடுதலை செய்யப்பட் டேன். அவ்வளவுதான். கமலாவும் அன்றைக்கே லக்ஷ்மண புரி சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டாள். அவள் மொத்தத்தில் சிறையிலிருந்தது இருபத்தாறு நாட்கள். அவ ளும் காரியக் கமிட்டியின் புதிய அங்கத்தினள்.

# XXXIII

## எனது தகப்பனரின் மரணம்

ஜனவரி மாதம் 12-ந் தேதி தகப்பனர் என்னை அவருடைய ஊதின முகத்தோடு, நைனி சிறையில் பார்த்த பின்னர், இரண்டு வாரம் கழித்து, இப்பொழுது அவரைக் கண்டேன். அவரது உடம்பு இப்பொழுது இன்னும் கேவலமாகப் போய்விட்டது. முகத்தின் வீக்கமும் அதிகரித்திருந்தது, பேசுவதற்கும் சிறிது சிரமப்பட்டார். அவருடைய மனதும் தெளிவாய் இல்லாமல் பிதற்றத் துவக்கினர். ஆனல் அவருடைய பழைய மனஉறுதி மட்டும் தளரவில்லை. இதன் மூலமாக உடலும் உள்ளமும் அறவே கட்டுவிடாமல் இன்னும் கொஞ்சம் வேலை செய்துகொண்டு வந்தன. என்னையும் ரஞ்சித்தையும்பார்த்து அவர் இன்பமுற்ருர். ரஞ்சித் காரியக் கமிட்டி அங்கத்தினராக இல்லாமையால், இரண்டொரு நாள் கழித்து அவரை மீண்டும் நைனி சிறைக்கு அழைத்துக் கொண்டுபோனர்கள். இதனல் தகப்பனருக்கு மனவேதனை உண்டாயிற்று. அடிக்கடி ரஞ்சித் எங்கே, ரஞ்சித் எங்கே என்று கேட்டுக்கொண்டே இருந்தார். இந்தியாவில் வெகு தூரத்திலிருந்து அநேகர் தம்மைப் பார்க்க வரும்பொழுது, தம்முடைய சொந்த மருமகப்பிள்ளையைத் தம்மிடம் வரவொட்டாமல் அரசாங்கத்தார் தடுக்கிருர்களே என்று அவர் முறையிட்டுக் கொண்டிருந்தார். இதனல் டாக்டர்களுடைய கவலை அதிகமாய்விட்டது. தகப்பனரின் உடம்பும் தேறவில்லை. டாக்டர்களது யோசனையின்பேரில் மூன்று நான்கு நாள் கழித்து ஐக்கிய மாகாண அரசாங்கத்தார் ரஞ்சித் அவர்களை விடுதலை செய்தனர். ஜனவரி மாதம் 26-ம் தேதி, நான் விடுதலை செய்யப்பட்ட அன்றே காந்திஜீயும் எர்வாடா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அவரை அலகாபாத்துக்கு அழைத்து வரவேண்டுமென்று எனக்கு ஆவல். காந்திஜீ விடுதலையடைந்தாரென்று தகப்பனரிடம் சொன்னேன். அவரைக்காண, என்னைக்காட்டிலும் அதிகமாக தகப்பனர் ஆவல் கொண்டார். அதுவரையிலும் கண்டிராத வரவேற்பு, பம்பாயில் காந்திஜீக்கு அளிக்கப்பட்டது. கூட்டத்தில், கணக்கு எடுக்கமுடியாத ஜனங்கள். இந்த வரவேற்புக்குப் பிறகு

மறு நாள் கார்திஜீ அலகாபாத்துக்குப் புறப்பட்டு இரவில் நடுநிசி கடந்து கொஞ்ச நேரத்தில் எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். ஆனால் நடுநிசியானாலும் தகப்பனர் அவருக்காகக் காத்துக்கொண்டு விழித்திருந்தார். காந்திஜீ வந்து இரண்டொரு வார்த்தைகள் சொன்னதும், தகப்பனருக்கு அபரிமிதமான ஆறுதல் ஏற்பட்டது. என்னுடைய் தாயாருக்கும், அவர் வந்ததனல், சமாதானமும் ஆறுதலும் உண்டாயின.

காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் (பழையவர்களும், புதியவர்களும்) யாவரும் எங்கே கூடுவதென்று புரியாமல் தலைமைக் காரியாலயத்திலிருந்து, உத்தரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பலருக்கு அலகாபாத்துக்கு வந்து, தகப்பனரைக் காண வேண்டுமென்று ஆசை. ஆகவே, உடனே அலகாபரத்தில் காரியக் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டு நாள் கழித்து முப்பது, நாற்பது அங்கத்தினர்கள் வந்து சேர்ந்தார்கள். எங்களுடைய வீட்டுக்கு அடுத்தாற்போலிருந்த சுயராஜ்ய பவனத்தில், காரியக் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெற்றன. அடிக்கடி நான் இந்தக் கூட்டங்களுக்குப் போவேன். ஆனல் என்னுடைய மனதில் அமைதி யில்லாமையால், கூட்டத்தில் சிறப்பாகப் பங்கொன்றும் எடுத்துக் கொள்ள முடியவில்லை. கூட்டத்தில் என்ன முடிவு செய்தார்கள் என்பதுகூட எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை. சட்ட மறுப்புப் போராட்டத்தை நிறுத்தாமல் நடத்த வேண்டுமென்று அவர்கள் முடிவுசெய்தார்கள் என்று எண்ணுகிறேன்.

இந்தப் பழைய நண்பர்களும், தோழர்களும் அநேகமாகச் சிறையிலிருந்து வெளி வந்தவர்கள். மீண்டும் சிறையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தவர்கள். இவர்கள் கடைசியாக ஒரு முறையேனும் தகப்பனரைத் தரிசனம் காண வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அவர்கள் காலையிலும், மாலையிலும் இரண்டு பேர்களாகவும், மூன்று பேர்களாகவும் அவரைப் பார்க்க வந்தார்கள். தம்முடைய பழைய தோழர்களோடு பேசுகையில், தாம் படுத்துக்கொண்டிருக்கக் கூடாதென்றும், சாய்வான நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டுமென்றும் பிடிவாதம் பிடித்துவிட்டார். முகத்தின் வீக்கத்தால், தோற்றத்தில் ஒளி இல்லை. அப்படியே அசையாமல் உட்கார்ந்துகொண்டிருந்தார். ஆனல நண்பர்கள் ஒவ்வொருவராக வந்து போய்க்கொண்டிருக்கையில், அவர்களை

அடையாளம் கண்டுகொண்டதாக, கண்ணுல் சொல்லி, தலையைச் சிறிது சாய்த்து, இரு கரங்களையும் குவித்து நமஸ்கரிப்பார். அவரால் அதிகமாகப் பேச முடியாவிடினும், சில சமயங்களில் இரண்டொரு வார்த்தை சொல்லுவார். அப்பொழுதுகூட அவருடைய பழைய கேலியும், நகைச் சுவையும் அவரை விட்டு அகலவில்லை. அங்கே அவர் வீற்றிருந்ததைப் பார்த்தபொழுது, காயமடைந்த கிழச் சிங்கம்போல் தோன்றிற்று. அவரது உடம்பில் வலு. இல்லை. அதனுல் என்ன? ராஜ கம்பீரத் தோற்றமும், சிங்கப் பார்வையும் எங்கே போய்விடும்? அவருடைய உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் பாய்ந்து செல்கின்றன என்பது யாருக்குத் தெரியும்? நம்முடைய இயக்கத்தில் அவருக்குச் சிரத்தை இருக்க முடியாத நிலைமைக்கு அவர் வந்துவிட்டதைப் பற்றியோ என்னவோ? உள்ளுக்குள் அவர் போராடிக்கொண்டிருந்தார் என்பது தெளிவு. தன்னிடமிருந்து நழுவி ஓடிக்கொண்டிருந்த உலகைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளப் போராடிக் கொண்டிருந்தார். கடைசி வரையிலும் இந்தப் போராட்டம் நடைபெற்றது. அவர் தோற்றுப் போகவில்லை. நல்ல தெளிவோடு சில சமயங்களில் எங்களிடம் பேசுவார். தொண்டை இறுகக் கட்டிக்கொண்டு பேச முடியாத காலத்திலும் தாம் சொல்ல வேண்டியவற்றைக் காகிதத்தில் எழுதிக் காண்பிப்பார்.

அடுத்த வீட்டில் நடந்து கொண்டிருந்த காரியக் கமிட்டி கூட்டத்தில், அவருக்கு யாதொரு சிரத்தையும் உண்டாகவில்லை. பதினைந்து நாட்களுக்கு முன் இது நேர்ந்திருந்தால், அவருடைய உள்ளத்தில் ஒருவகைப் பரபரப்பு உண்டாயிருக்கும். இப்பொழுதோ, இவைகளுக்கும் தமக்கும் வெகு தூரம் என்று அவர் முடித்து கொண்டு விட்டார். "நான் போய் வருகிறேன், மகாத்மாஜீ! நான் விரைவில் போய்விடுவேன். ஸ்வராஜ்யத்தைப் பார்ப்பதற்கு நான் இங்கே இருக்கமாட்டேன். ஆனுல் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்களென்றும், ஸ்வராஜ்யம் விரைவில் வருமென்றும் எனக்குத் தெரியும்" என்று தகப்பனர் காந்திஜீயிடம் சொன்னுர். கூட்டம் முடிந்து மற்றைய நகரங்களிலிருந்தும் வந்திருந்த அன்பர்களில் அநேகமாக எல்லோரும் போய்விட்டார்கள். காந்திஜீ போகவில்லை. நெருங்கிய சில உறவினர்களும், நண்பர்களும் இருந்தார்கள். அவரது பழைய நண்பர்களான அன்ஸாரி, பிதன்சந்திர ராய்,

ஜீவராஜ் மேத்தா மூன்று கீர்த்தி பெற்ற டாக்டர்களும் தங்கி னார்கள். பிப்ரவரி 4வ காலையில் தகப்பனார் சிறிது குணமடைந்தாற்போல் தோன்றிற்று. எக்ஸ்ரே வைத்தியம் செய்துகொள்ள அலகாபாத்தில் வசதி இல்லை. அந்த வசதி கள் லக்ஷ்மணபுரியில் இருந்தமையால், அங்கே தகப்பனாரை அழைத்துக்கொண்டு போய் வைத்தியம் செய்வதென்று தீர் மானித்தோம். அன்றைக்கே நாங்கள் அவரை மோட்டார் மூலமாக, லக்ஷ்மணபுரிக்கு எடுத்துச் சென்றோம். காந்திஜீயும் மற்றும் பலரும் கூடவே வந்தார்கள். நாங்கள் மெதுவாகத் தான் பிரயாணம் செய்தோம். ஆனாலும் தகப்பனார் மிகவும் களைத்துப் போனார். அடுத்த நாள் களைப்புத் தீர்ந்தது போலக் காணப்பட்டது: என்றாலும் வேறு சில விகாரமான தோற்றங்கள் இப்பொழுது தோன்றின. 6வ காலையில் அவ ருடைய படுக்கையின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தேன். முதனாளிரவு அவருக்கு உறக்கமே இல்லை. படுக்கையில் புரண்டுகொண்டே இருந்தார். திடீரென்று அவருடைய முகத்திலே அமைதி நிலவுவதைக் கண்டேன். போராட்டம் நின்று விட்டது. நல்லவேளையாக அவருக்கும் தூக்கம் வந் ததே என்று நான் சந்தோஷப்பட்டேன். ஆனால் என்னு டைய தாயாரின் பார்வை கூர்மையாக விருந்தது. அவள் "ஐயோ!" என்றலறினாள். அவளைத் திரும்பிப்பார்த்து, தகப் பனார் தூங்குவதால், அவருடைய தூக்கத்தைக் கலைக்க வேண்டாம் என்று அவளிடம் மன்றாடி கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அந்த தூக்கமே அவருடைய கடைசித் தூக்கமாகும். அதனின்றும் அவர் விழிக்கவே இல்லை.

தகப்பனாரின் சவத்தைஅன்றைக்கே அலகாபாத்துக்கு கார் மூலமாகக் கொண்டுவந்தோம். நான் அந்தக்காரில் உட் கார்ந்துகொண்டேன். ரஞ்சித் அதை ஓட்டினார். தகப்பனாரின் தனிப் பணியாளனான ஹரியும் அந்தக்காரில் இருந்தார். எங் களுக்குப் பின்னால் இன்னொரு கார் வந்தது. அதில் என் தாயா ரும் காந்திஜீயும் இருந்தார்கள். அதன்பின்னர் வேறு கார்கள் வந்தன. அன்றைக்கு முழுதும் என்ன நடந்ததென்று எனக் குத் தெரியாது. நான் மதிமயங்கிப் போனேன். ஏராளமான கூட்டங்களாலும், அடுத்தடுத்து நிகழ்ச்சிகள் நேர்ந்தமையா லும் யோசிப்பதற்கு எனக்கு நேரமே இல்லை. யாதொரு அறி விப்பும் இல்லாமலே லக்ஷ்மணபுரியில் ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டார்கள். லக்ஷ்மணபுரியிலிருந்து அலகாபாத்துக்கு

வெகு விரைவில் வந்தோம். தகப்பனாரின் சவத்துக்குப் பக்கத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். சவத்தைத் தேசீயக் கொடியால் சுற்றியிருந்தோம். பெரிய தேசீயக் கொடி ஒன்றைக் காரின் மேல் பறக்கவிட்டிருந்தோம். அலகாபாத்துக்கு வந்ததும் தகப்பனாருக்கு மரியாதை செய்வதற்காக திரளான ஜனங்கள் மைல்கள் கணக்கில் நின்றுகொண்டிருந்தார்கள். வீட்டில் சில சடங்குகள் நடைபெற்றன. திரளான ஜனங்கள் பின்தொடர, கங்கைக் கரைக்குச் சவத்தை எடுத்துக்கொண்டு சென்றோம்.

குளிர்காலத்தில், அன்றுமாலையில் ஆற்றின் கரையில், பொழுதுசாய்ந்த வேளையில், தீ கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. எங்களுக்கும் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கும் பொக்கிஷமாயிருந்த அந்த உடல் தீக்கிரையாயிற்று. அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு, காந்திஜீ ஒருசில உருக்கமான வார்த்தைகளைக் கூறினார். பிறகு நாங்கள் எல்லோரும் வீட்டுக்கு மௌனமாகச் சென்றோம். நாங்கள் ஆறாத்துயரத்துடன் வீடுவந்து சேர்ந்தபொழுது நக்ஷத்திரங்கள், மிகுந்த பிரகாசத்துடன் வெளித்தோன்றிக் கொண்டிருந்தன. எனக்கும் என் தாயாருக்குமாக ஆயிரக்கணக்கான அனுதாபச் செய்திகள் வந்தன. இர்வின்பிரபுவும் அவரது மனைவியாரும் தாயாருக்கு மரியாதைத்தந்தி யொன்றை யனுப்பிவைத்தார்கள். இவ்வளவு அன்பும்அனுதாபமும் எங்களுக்கு கிடைக்கப் பெறவே, எங்களுடைய ஆறாத்துயரமும் ஒருவாறு ஆறத்துவக்கிற்று. ஆனால் உண்மையிலேயே என்தாயாருக்கும் எங்கள் எல்லோருக்கும் ஆறுதலைஅளித்து, நெருக்கடியில் மனஅமைதியுடன் இருக்கும்படியாகச் செய்தது காந்திஜீயின் மிகஆச்சரியமான சக்தியாகும்.

தகப்பனார் இறந்துபோனாரென்று முற்றிலும் முடிவு செய்வது எனக்குக் கஷ்டமாக விருந்தது. மூன்று மாதம் கழித்து நான் என்னுடைய மனைவி மக்களோடு இலங்கையிலிருந்தேன். நுவரெலியாவில் ஓய்வுக்காகத் தங்கிச் சில நாட்களைக் கழித்தோம். எனக்கு அந்த இடத்தில் ரொம்பப் பிரேமை உண்டாயிற்று. தகப்பனார் இங்கே இருந்தால், அவருக்கு எவ்வளவு குணமாயிருக்கும் என்று திடீரென எனக்குத் தோன்றிற்று. அவரை ஏன் வரவழைக்கக்கூடாது? அவர் ரொம்பக் களைத்துப்போயிருப்பாரே? அவருக்கு ஓய்வு இருந்தால் நல்லதல்லவா? என்றெல்லாம் எண்ணி அவருக்கு அலகாபாத்துக்கு தந்தி கொடுக்க எண்ணினேன். இலங்கையி

லிருந்து நாங்கள் அலகாபாத்துக்குத் திரும்பிவந்ததும், ஒரு நாள் தபாலில் ஒரு கடிதம் வந்தது. விலாசம் என்னுடைய விலாசம். கையெழுத்து தகப்பனாருடையது. கூட்டின்பேரில் தபாலாபீஸ்களின் பல முத்திரைகள் நிறைந்திருந்தன. அதை ஆச்சரியத்துடன் திறந்து பார்த்தேன். அது தகப்பனார் எனக்கு எழுதிய கடிதம். எழுதினது 1926-ம் வருஷம் பெப்ரவரி மாதம் 28-ந் தேதி. 1931-ம் வருஷம் கோடை காலத்தில்தான் அது என் கைக்கு வந்துசேர்ந்தது. ஐந்தரை வருஷம் அந்தக் கடிதம் பிரயாணம் செய்து கொண்டிருந்தது. நானும் கமலாவும் 1926-ம் வருடத்தில், ஐரோப்பாவுக்குப் பிரயாணமான காலத்தில், தகப்பனார் எனக்கு ஆமதாபத்திலிருந்து கடிதம் எழுதியிருந்தார். நாங்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த இத்தாலிய லாயிட் கப்பலின் மேற்பார்வையில் பம்பாய் நகரத்துக்கு எனக்கு விலாசம் எழுதப்பட்டிருந்தது. சமயத்தில் எங்கள் கைக்கு வராமல், தவறிப் போய், பல இடங்களை அக்கடிதம் சுற்றிப் பார்த்திருக்கவேண்டும். அநேக தபாலாபீஸ்களில் கிடந்து கிடந்து, கடைசியாக யாரோ ஒரு புத்திசாலி, அதைக் கண்டெடுத்து எனக்கு அனுப்பியிருக்கவேண்டும். கடிதத்தின் விநோதம் என்ன வென்றால், அது எங்களுக்கு விடைகொடுத்தனுப்பிய கடிதமாக விருந்தது.

# XXXIV

## டில்லி ஒப்பந்தம்

தகப்பனார் இறந்த அன்றைக்கே, அநேகமாக அந்த நேரத்திலேயே வட்டமேசை மகாநாட்டிலிருந்த இந்திய அங்கத்தினர்களிற் பலர் பம்பாயில் வந்திறங்கினார்கள். ஸர் தேஜ் பகதூர் சாப்ரூவும், ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும், கூட சிலரை அழைத்துக்கொண்டு (அவர்களுடைய பெயர்கள் ஞாபகமில்லை) நேரே அலகாபாத்துக்கு வந்து சேர்ந்தார்கள். காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் சிலரும் காந்திஜீயும் அலகாபாத்தில் இருந்தார்கள். எங்களுடைய வீட்டில் பகிரங்கமில்லாமல் சில கூட்டங்கள் நடைபெற்றன. வட்ட மேசை மகாநாட்டில் நடந்தவைகளின் வரலாறு எங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் துவக்கத்திலேயே ஒரு சிறிய சம்பவமொன்று நிகழ்ந்தது. எடின்பரோ நகரில் தாம் பேசிய பேச்சுக்காக, (யாரும் அவுரைக் கேட்காமலிருக்கையிலேயே) தாம் மிகவும் வருந்துவதாக கனம் சாஸ்திரியார் தெரிவித்துக் கொண்டார். தம்மைச் சுற்றி இருக்கும் நிலைமைக்குத் தக்கவாறு, தாம் பேசவேண்டிய நிர்ப்பந்தம் வழக்கமாகத் தமது வாழ்க்கையில் ஏற்பட்டுவருகிறதென்றும் வீணான சொற்பெருக்கினால் கேடு விளைகின்றது என்றும் அவர் சேர்த்துச் சொன்னார்.

எங்களுக்கு ஏற்கனவே தெரியாத எதையும் வட்ட மேசை மகாநாட்டைப் பற்றி பிரதிநிதிகள் எங்களுக்கு சொல்லிவிடவில்லை. ஸர். இன்னாரும், பிரபு இன்னாரும் சேர்ந்தும், தனியாகவும், திரைமறைவிலே, நின்று செய்த சூழ்ச்சிகளைப் பற்றி அவர்கள் எங்களிடம் பிரஸ்தாபம் செய்தார்கள். பெரிய உத்தியோகஸ்தர்கள் தனிமையில் பேசும் பேச்சுக்களை பிரதானமாகக் கருதுகிற கெட்ட வழக்கம் நம்முடைய இந்திய மிதவாத நண்பர்களிடம் அதிகமாக உண்டு. கொள்கைகளைப் பற்றியோ அல்லது இந்தியாவின் உண்மையான நிலைமையைப் பற்றியோ அவர்களுக்குச் சற்றேனும் கவலை இல்லை. அவர்களும், நாங்களும் பேசிக்கொண்டதிலிருந்து, புதிதாக யாதொரு யோசனையும் உதிக்கவில்லை.

வட்டமேஜை மகாநாட்டின் தீர்மானங்களுக்கு கொஞ்சங்கூட மதிப்பு வைக்கவேண்டியதில்லையென்று நாங்கள் ஏற்கனவே எண்ணிக்கொண்டிருந்த எண்ணம்தான் நிலை நின்றது. அந்த சமயம், யாரோ ஒருவர் [அவர் யாரென்று எனக்கு ஞாபக மில்லை.] காந்திஜீ வைஸிராய்க்கு எழுதி, அவரைப் பேட்டி கண்டு ஒளிவு மறைவில்லாமல், எல்லாவற்றையும் ஏன் பேசக் கூடாது என்று யோசனை சொன்னார். இந்த யோசனையி லிருந்து நல்ல பயன் ஏற்படாது என்று நன்றாகத் தெரிந் திருந்தும் காந்திஜீ அதற்கு உடன்பட்டார்.

காந்திஜீக்கு எதிரிகளைச் சந்தித்து, அவர்களிடம், மனதை விட்டுப் பேசுவதில், பேராவல் உண்டு. இது அவரு டைய கொள்கை. தம்முடைய கட்சி மிகவும் நியாயமானது என்ற நம்பிக்கை அவருக்கு உறுதியாக உண்டு. எனவே, எதிர்க் கட்சியாரை தமது வழிக்குக் கொண்டு வர அவர் பிர யாசைப்படுவார். மற்றக் கட்சியார், மூளையால் மட்டும் காந்தி ஜீயின் வாதத்தை ஏற்றுக்கொண்டாலும், அவருக்குப் போதாது. எதிர்க்கட்சியார் தங்களுடைய ஆத்திரத்தையும், அவநம்பிக்கையையும் அடியோடு விட்டுவிட்டு, சிநேகபாவத் துடனும், நன்னோக்குடனும் விஷயங்களைப் பார்க்கும்படியாக, அவர்களிடம் மனமாற்றம் ஏற்படுவதற்காக, காந்திஜீ பாடு படு வார். இத்தகைய மாறுதல் ஏற்படின் எதிரிகளும் இந்தக் கட் சியில் எளிதிலே நம்பிக்கை கொள்ளமுடியும். நம்பிக்கை ஏற்படாவிடினும், எதிர்ப்பாவது குறையும். போராட்டத்தில் ஆத்திரம், அசூயை முதலியன அதிகமாக ஏற்படமாட்டா. தமக்கு எதிரிகளாயிருப்பவர்களோடு, தனித்துப் பேசியும் உறவாடியும் காந்திஜீ மகத்தான பல வெற்றிகளை அடைந் திருக்கிறார். எதிரியைத் தமது ஆத்ம சக்தியால் தமது கட் சிக்குக் கொண்டுவரும் அவருடைய சாமர்த்தியம் ஆச்சரியப் படத் தக்கதாகும். நகைத்து ஏளனம் செய்ய வந்த பலர், காந்திஜீயை வணங்கி, பக்தர்களாகி யிருக்கிறார்கள். பக்தர்க ளாகாமல் அவர்கள் எதிர்க் கட்சியாடினாலும், அதிலே பின் னர் ஏளனத்தைக் காண முடியாது.

தம்முடைய சக்தி காந்திஜீக்குத் தெரியும். தம்மோடு மாறுபட்டவர்களுடன் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பத்தை, காந் திஜீ எப்பொழுதும் வரவேற்பார். ஆனால் சில்லரை விஷயங் களுக்காக, தனி மனிதர்களோடு பழகி உறவாடுவது, ஒரு சங்கதி. சாம்ராஜ்ய வெறியால் தலை விரித்தாடும் இயந்திர

மயமான பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு உறவாடி, உறவாடி, வெற்றி பெறுவதென்பது வேறு சங்கதியாகும். இது காந்திஜீக்கு நன்ருகத் தெரியும். ஏதோ பலன் கிடைத்துவிடுமென்று எதிர்பார்த்துக்கொண்டு, காந்திஜீ, இர்வின் பிரபுவோடு பேட்டியை நாடவில்லை. அரசாங்கத்தோடு ராஜிப் பேச்சு நடக்கிறது என்ற வதந்தியினுல், சட்டமறுப்பு இயக்கம் குறைவான வேகத்துடன் நடந்து வந்தபோதிலும், அப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டுதா னிருந்தது. தவக்கமன்னியில், பேட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. காந்திஜீ டில்லிக்குப் புறப்பட்டுப் போனுர். பேட்டியினுல் ராஜி ஏற்பட வசதி இருக்குமாயின், காரியக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு தகவல் கொடுத்து, டில்லிக்கு அழைத்துக்கொள்வதாகச் சொல்லி விட்டு காந்திஜீ புறப்பட்டார். இரண்டொரு நாட்கள் சென்றன. நாங்கள் எல்லோரும் டில்லிக்கு அழைக்கப்பட்டோம். மூன்று வாரங்கள் நாங்கள் அங்கே தங்கி யிருந்தோம். தினசரி கூட்டங்கள் நடைபெற்றன. கூடிக் கலந்து நீண்ட நேரம் வாதம் செய்து களைத்துப் போவோம். காந்திஜீ இர்வின் பிரபுவை அடிக்கடி பேட்டி கண்டு வந்தார். சில சமயங்களில் இரண்டு மூன்று நாட்கள் பேட்டியே இருக்காது. லண்டனிலிருக்கும் இந்திய மந்திரியின் காரியாலயத்துக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் செய்திப் போக்குவர்த்து நடந்துக்கொண்டிருந்தது. சில சமயங்களில் சில்லரை விஷயங்களாலும், இரண்டொரு வார்த்தைகளுக்காகவும் ராஜிப் பேச்சு தடைப்பட்டு நின்று போகும்.

சட்டமறுப்பை நிறுத்துதல் என்ற சொற்களைப் பற்றித் தகராறு உண்டாயிற்று. ஜனங்களுக்கு கடைசியாக இருக்கக்கூடிய ஆயுதம் சட்டமறுப்புதான் என்பதனுல், அந்த அடியோடு விட்டு விட முடியாது என்று காந்திஜீ, முதலிலிருந்தே தெளிவாகக் கூறிவிட்டார். ஆனுல் சட்ட மறுப்பைத் தற்காலிகமாக நிறுத்தமுடியும் என்று மட்டும் காந்திஜீ ஏற்றுக் கொண்டார். சட்டமறுப்பை அடியோடு விட்டு விட வேண்டும் என்று இர்வின் பிரபு வாதம் செய்தார். காந்திஜீ இதற்கு இணங்கவில்லை. கடைசியாக 'நிறுத்துவது' என்ற சொல்லுக்குப் பதிலாக 'தொடரப்படாது' என்று மாற்றி அமைக்கப்பட்டது. சீமைத்துணிக் கடைகளையும் மதுபானக் கடைகளையும் மறியல் செய்யும் உரிமை சம்பந்தமாக நீண்ட நேரம் வாதம் செய்யப்பட்டது. ஒப்பந்தத்துக்கு தற்காலிக

மாக என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதைப் பற்றி நாங்கள் பெரும் பகுதிக் காலத்தைச் செலவிட்டோம். மூலாதாரமான விஷயங்களைப் பற்றி கவனிக்கவே இல்லை. தற்காலிகமாக ஒப்பந்தம் ஏற்பட்டு, தினசரிப் போராட்டம் நின்று விடுமாகில், மூலாதாரமான விஷயங்களைப்பற்றி, ஆர, அமர தீர்க்காலோசனைகள் செய்து கவனிக்கலாம் என்று நாங்கள் எண்ணினோம். போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கான பேச்சுகளாக மட்டும் இவைகளை நாங்கள் மதித்தோம். கொள்கைகளையும் முக்கியமான விஷயங்களையும் மாற்றி, பின்னர் நீளமாகச் சம்பாஷணை செய்யலாம் என்றிருந்தோம். அந்த நாட்களில் பல அக்கிரமான ஜனங்கள் டில்லிக்கு, வந்துகொண்டிருந்தார்கள். அந்நியநாட்டுப் பத்திரிகை நிருபர்கள், முக்கியமாக அமெரிக்கர்கள், வந்தார்கள். நாங்கள் செய்தி ஒன்றும் வெளியிடாமல் மௌனம் சாதித்ததைக்கண்டு, அவர்கள் மிகவும் ஆத்திரப்பட்டார்கள். அரசாங்கத் தரப்பிலிருந்து, காந்தி—இர்வின் சம்பாஷணையைப்பற்றி அதிகமான செய்திகள் தங்களுக்கு கிடைத்திருப்பதாகவும் காங்கிரஸ்காரர்களிடமிருந்து ஒன்றுமே கிடைக்கவில்லையென்றும் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அது உண்மைதான். உயர் பதவியில் இருந்த மக்கள் பலர் காந்திஜீக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்துவதற்காக டில்லிக்கு விரைந்து வந்தார்கள். ஏனெனின் மகாத்மாவின் கிரகம் அப்பொழுது உச்சத்திலிருந்ததல்லவா? காங்கிரஸினின்றும் காந்திஜீயிடத்திலிருந்தும் வெகுதூரம் விலகி நின்று, அவர்களைக் கண்டனம்செய்த இந்த ஜனங்கள், இப்பொழுது காந்திஜீக்கு மரியாதை செய்ய விரைந்து வருவதைக் காண வெகு விநோதமாயிருந்தது. காங்கிரஸ் தன் பெயரை ஸ்தாபித்துக் கொண்டுவிட்டது. எதிர் காலத்தில் என்ன நேருமென்பது யாருக்கும் தெரியாது. ஆகையால் காங்கிரஸுடனும் அதன் தலைவர்களுடனும் உறவு கொண்டாடுவது அவர்களுக்கு நல்லதல்லவா? பிறகு ஒரு வருஷம் கழித்து அவர்களிடம் வேறொரு மாறுதல் காணப்பட்டது. தங்களுக்கு காங்கிரஸினிடமும் அது செய்யும் வேலையிலும் வெறுப்பு உண்டென்றும், தங்களுக்கும் காங்கிரஸுக்கும் யாதொரு தொடர்பும் கிடையாதென்றும் அவர்கள் கூரைமீது நின்று மறுபடியும் கூச்சல் போட்டார்கள்.

இந்த நிகழ்ச்சிகளால் வகுப்பு வாதிகள் கூடக் கலங்கிப் போயினர். எதிர்காலத்தில் வரப்போகிற அரசியலமைப்பில்,

தங்களுக்கு அநேகமாக இடம் கிடைக்காதோ என்று அவர்கள் பயந்துபோனார்கள். ஆகையினாலே அவர்களிற் பெரும் பான்மையோர் மகாத்மாவிடம் வந்தார்கள். "வகுப்புவாதத்தை வெகு எளிதிலே தீர்த்துக்கொள்ளலாம். தாங்கள் மட்டும் முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும். ராஜிக்கு வரத்தயாராயிருக்கிறோம். வகுப்புப் பிரச்னைக்கு பரிகாரம் தேடுவது கஷ்டமல்ல" என்று அவர்களுக்கு மகாத்மா உறுதி கூறினார். காந்திஜீயும் எங்களிற் பலரும் டில்லியில் டாக்டர் அன்ஸாரி அவர்களது வீட்டில் தங்கியிருந்தோம். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் முதல் எல்லோரும் இடைவிடாது அன்ஸாரியின் வீட்டிற்கு வந்துகொண்டே இருந்தார்கள். ஓய்வு நேரங்களில் நாங்கள் இவர்களது நடவடிக்கைகளைக் கவனித்து வந்தோம். அப்படிக் கவனிப்பது ருசிகரமாகவும் லாபகரமாகவும் இருந்தது. பல ஆண்டுகளாக நாங்கள் சந்தித்துக் கலந்துகொண்ட கூட்டங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் வசிக்கும் ஏழைகளது கூட்டங்களாகும். சிறைக்கு அடிக்கடி போய்வருபவர்களோடு கலந்து பழகிவந்தோம். காந்திஜீயைக் காணவந்த தனவந்தர்களான இந்தக் கனவான்களோ மனித இயற்கையின் வேறொரு காட்சியை எங்களுக்குக் காண்பித்தார்கள். எங்கே அதிகாரமிருக்கிறதாகத் தோன்றுகிறதோ; எந்தக்கட்சிக்கு வெற்றி ஏற்படுவதாகத் தோன்றுகிறதோ, அதோடு ஒட்டிக் கொண்டு, அதற்கு சலாம் போட்டு, புன்னகையுடன் இவர்கள் அதை வரவேற்க முடியுமென்பதைக் காண்பித்துக்கொண்டார்கள். இவர்களில் அநேகர் இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் போன்றவர்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்துபோய், இந்தியாவில் வேறு ஆட்சி செழிக்கத் துவக்கினாலும், அதற்கும் அவர்கள் தூண்களாக அமைவார்களென்று தெரிந்து கொண்டு, நாங்கள் ஆறுதல் அடைந்தோம்.

அந்த நாட்களில் புதிய டில்லியில், அடிக்கடி காலையில் காந்திஜியோடு நடந்து போவேன். இந்த நேரத்திலேதான் அவரிடத்தில் ஒருவர் தனித்துப் பேசமுடியும். நாளில், மற்ற நேரமெல்லாம் துண்டு துண்டாக வெட்டப்பட்டு, குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்வார்; அல்லது ஏற்கனவே வாக்கு கொடுத்தபடி யாரிடமாவது பேசிக்கொண்டிருப்பார். காலை நடைக் காலங்களிலும் சில சமயங்களில் தனித்துப் பேசமுடியாது. இந்த நேரங்களில் கூட, அன்

னிய நாட்டிலிருந்து சிலர் அவரை பேட்டி காண வந்து விடுவார்கள். சில சமயம் யாரேனும் ஒரு நண்பர் காந்திஜீயைத் தம்முடைய சொந்த அலுவல் சம்பந்தமாகக் கலந்து பேச வந்து விடுவார். இறந்த காலம், நடப்பு, எதிர்காலம் சம்பந்தமான பல விஷயங்களை நாங்கள் பேசினோம். காங்கிரசின் எதிர்காலத்தைப்பற்றி அவர் தமது கருத்தொன்றை வெளியிட்டார். அதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். இந்தியா விடுதலையடைந்ததும், காங்கிரஸ் தானாக மறைந்து போகுமென்று நான் எண்ணி இருந்தேன். "காங்கிரஸ் மறைந்து போகாது. அது நீள வேலை செய்துகொண்டே போகும். ஆனால் அதனுடைய அங்கத்தினர்கள் யாரும் அரசாங்கத்தின் கீழ் சம்பளமுள்ள உத்தியோகத்தை ஏற்கமாட்டார்கள். யாராவது ஏற்க விரும்பினால், அவர் காங்கிரசை விட்டு விலக வேண்டும். இதுதான் காங்கிரசின் எதிர்கால நடப்பு" என்று அவர் என்னிடம் சொன்னார். காந்திஜீ எவ்வாறு யோசித்து, இந்த முடிவுக்கு வந்தார் என்பது எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை. காங்கிரஸ் தன்னலமற்ற அமைப்பாக மாறி விட்டால், அரசாங்கத்தின் நிர்வாகத்தையும் அதன் இலாகாக்களையும் காங்கிரசால் அடக்கி ஆளமுடியுமென்றும், அரசாங்கத்தை நல்ல பாதையில் நடைபெறச் செய்ய முடியுமென்றும் அவர் எண்ணியிருக்க வேண்டும். இது ஒரு அசாதாரணமான கருத்து ஆகும். இதை நான் மனதில் வாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அநேக கஷ்டங்கள் குறுக்கிடும் என்று தோன்றிற்று. இத்தகைய அமைப்பு ஒன்று ஏற்பட்டால், அதை சுயநலக்காரர்கள் தங்கள் லாபத்துக்காக உபயோகப்படுத்திக்கொள்ள முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. அனுபவத்தில் எப்படி இருக்குமோ, அதைப்பற்றி இப்பொழுது கவலைப்பட வேண்டியதில்லை. ஆனாலும் காந்திஜீயின் மனப்போக்கு எப்படி இருந்தது என்று தெரிந்து கொள்வதற்கு இது உதவியாய் இருக்கிறதல்லவா?

தற்காலத்தில் அரசியலில் கட்சி ஏற்படுமானால், அது அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றி, அரசியலையும், பொருளாதாரத்தையும் தனது கட்சித் திட்டத்தின்படிக்கு திருத்தியமைப்பதற்காக ஏற்படுவதாகும். அதாவது பெரும்பான்மையோரின் நலத்தைக் கோறி, நிர்வாகம் செய்வதற்காகக் கட்சி அமைப்பு ஏற்படுதல் வேண்டுமென்பது நவீன அரசியல் நிபுணர்களது கருத்து ஆகும். காந்திஜீயின் ஜனநாயகம் அத்

யாத்மிகத் தன்மையைக் கொண்டதாகும். ஜனநாயகத்துக்கும், பெரும்பான்மையான நபர்கள் என்ற கொள்கைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பது காந்திஜீயின் கருத்து ஆகும். ஜனப் பிரதிநிதித்துவத்தைப் பற்றியும் அவர் அதிகமாகக் கவலைப்படவில்லை. ஜனநாயகத்துவம், தியாகத்தையும், தொண்டையும் தழுவியதாகும். அது நெறியில் நிற்க வேண்டும். ஜனநாயகக் கொள்கையைக் கொண்டவன் யார் என்பதை விளக்கிக் காண்பிக்க சமீபத்தில் அறிவிப்பு ஒன்று காந்திஜீ விடுத்தார். "நான் பிறவி முதல் ஜனநாயக வாதி; ஒருவன் மனிதர்களில் தாழ்ந்தவர்களோடு ஒட்டிக்கொண்டு, அவர்களுடைய வாழ்க்கையைப் போலவே தானும் வாழ்க்கை நடத்த சிரத்தையுடன் முயன்றால், அவனை ஜனநாயகக் கொள்கை கொண்டவன் என்று சொல்லக் கூடுமானால், அந்த பாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன்" என்று காந்திஜீ சொல்லியிருக்கிறார்.

மேலும் விவரமாக அவர் ஜனநாயகத்தைப் பற்றி விவாதம் செய்ததாவது:—" காங்கிரஸ் ஜனநாயகத் தன்மை கொண்டதாகும். இந்தத் தன்மையும், கீர்த்தியும் காங்கிரஸுக்கு ஏராளமாக வரும் பிரதிநிதிகளின் தொகையாலும், வேடிக்கை பார்க்க வருபவர்களின் கூட்டத்தாலும் ஏற்பட்டவையல்ல. நாளுக்குநாள் அதிகமாகச் செய்துகொண்டு வரும் தொண்டின் மூலமாக, காங்கிரஸின் கீர்த்தி ஓங்கி வருகின்றது. மேனாட்டில் ஜனநாயகம் தனது சோதனைக் காலத்தில் இருந்து வருகிறது. அங்கே ஜனநாயகம் அநேகமாகத் தோற்றுப் போனதாக எனது எண்ணம். ஜனநாயகம் இன்னது தானென்று உலகத்துக்குவிளக்கிக் காண்பிக்கும்படியாக இந்தியாவுக்கு பாக்கியம் ஏற்படக் கூடும். வஞ்சகமும், நேர்மையற்ற வாழ்வும் ஜனநாயகத்தின் விளைவுகளாக இருக்க முடியாது. ஆனால் ஐரோப்பாவிலே இவைகள் மலிந்து வருகின்றன. பருமனைக் கொண்டு ஜனநாயகத்தை அளக்க முடியாது. ஜனசமூகத் தொண்டில் பூராவும் ஈடுபட்டிருக்கும் சிலர் இருந்தாலும், உண்மையான ஜனநாயகம் நிலவுவதாகச் சொல்லலாம். பலாத்காரத்தின் மூலமாக ஜனநாயகத்தை வளர்க்க முடியாது என்பது எனது உறுதியான எண்ணமாகும். ஜனநாயக உணர்ச்சியை வெளியே இருந்து உள்ளே செலுத்த முடியாது. அது உள்ளே இருந்து, தானே மலர வேண்டும்." தற்போது மேனாட்டில் நடப்பிலிருக்கும் ஜன

நாயகம், ஜனநாயகம் அல்ல என்று காந்திஜீ சொல்லுகிறார். ஆனால் காந்திஜீ சொல்லும் ஜனநாயகத்துக்கும், சமதர்மி களின் ஜனநாயகத்திற்கும் ஒற்றுமை இருப்பதாகத் தோன்று கிறது. சமதர்மிகளும் இவ்வாறுதான் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவதென்ன? பொது மக்களுக்குத் தங்க ளுடைய ஆசாபாசங்கள் இன்னதென்று விளக்கமாகத் தெரி யாமலிருக்கலாம். ஆனால் அவைகளைத் திட்டமாகக் காண பிக்கும் பாத்தியம் சமதர்மிகளுக்கு (அவர்கள் ஒரு சிலரா யிருந்தாலும்) உண்டென்று வாதாடுகிறார்கள். ஜனத் தொகை யின் பெரும்பான்மையைப் பொறுத்து சமதர்மியின் திட்டம் ஆக்கப்படவில்லை. காந்திஜீயின் கருத்துக்கும், சமதர்மியின் கொள்கைக்கும் சில அம்சங்களில் ஒற்றுமை யிருக்கலாம். ஆனால் சமதர்மத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரக் கூடிய மனப்பான்மையிலும், முறைகளிலும் இரண்டுக்கும் வித்தியாசங்கள் ஏராளமாக இருக்கின்றன. சமதர்மி பலாத் காரத்தில் நம்பிக்கை கொண்டவன்; காந்திஜீயோ அதை வெறுப்பவர்.

காந்திஜீ ஜனநாயக வாதியா? அல்லவா? என்று வாதிக்க வேண்டியதில்லை. அவர் இந்தியாவின் ஏழை விவசாயிகளின் பிரதிநிதி; கோடிக்கணக்கில் இந்தியாவில் வசிக்கும் விவசாயி களது ஆத்மா காந்திஜீதான். காந்திஜீ விவசாயிகளின் பிரதி நிதி என்று சொன்னால் மட்டும் போதாது. அவர் ஏழை விவசாயியின் விசுவ ரூபமானவர். அவர் சாதாரண விவசாயி அல்ல. மிகக் கூர்மையான புத்தி வாய்ந்தவர். நேர்த்தி யான உணர்ச்சி உள்ளவர். நல்ல ருசி படைத்தவர். விசால மான தரிசனம் அவருக்கு உண்டு. மிகுதியும் மனித உணர்ச்சி கொண்டவர்; என்றாலும் துறவி. தம்முடைய ஆசாபாசங்களை அடக்கி, அவைகளைப் பரலோக வாழ்க்கை வழியில் திருப்பி, ஒளி பெறச் செய்தவர். காந்தத்தைப்போல மனிதர்களைத் தன்னகத்துக்கு இழுக்கும் பெருமித சக்தி படைத்தவர். அவரிடம் பற்றும் பக்தியும் கொண்டவர்கள் அவரைவிட்டுப் பிரிந்துபோக இயலாது. இந்தக் குணங்கள் எல்லாம் சராசரி குடியானவனிடம் காணமுடியாது. இருந் தாலும் அவர் ஒரு மாபெரும் குடியானவன். வாழ்க்கை விஷ யங்களில் குடியானவனுடைய நோக்குதான் அவரிடம் இருக்கின்றது. வாழ்க்கையின் சில பகுதிகளைக் குடியான வன் எவ்வாறு பார்ப்பதில்லையோ, அதுபோலவே காந்திஜீ

சில அம்சங்களைப் பார்க்க மனமில்லாமல், கண்களை இறுக மூடிக்கொள்வார். இந்தியா விவசாய இந்தியா; அதனாலே தான் காந்திஜீக்கு அவருடைய இந்தியா நன்றாகத் தெரியும். எந்த சமயத்தில் எக்காரியம் செய்யவேண்டும் என்று யோசனை செய்யாமலே உணரும் சக்தி அவரிடம் இருக்கின்றது. நிலைமையை அவரைக்காட்டிலும் கணக்காக யாருமே அளக்கமுடியாது. ஒருவித அசாத்தியமான மோப்பம் அவரிடம் காணப்படுகின்றது.

காந்திஜீயை நிதானிப்பது மிகவும் கஷ்டமான வேலையாகும். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவரை நிதானிப்பதற்கு எவ்வளவு கஷ்டப் படுகின்றார்களோ, அவ்வளவு கஷ்டம் அவருடன் நெருங்கிப் பழகும் தோழர்களுக்கும் உண்டு. அவர் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலிருந்தாலும், அவருடைய வாழ்க்கைக்கும் அந்த நாட்டின் வாழ்க்கைக்கும் தோதுப்படாது. ஆனால் இந்தியாவோ அவரை அறிந்து கொண்டது போலக் காணப்படுகின்றது. பாபம், மோட்சம், சாத்வீகம் இவைகளைப்பற்றி, அவர் துறவியான தீர்க்கதரிசியைப்போன்று உபதேசம் செய்யும் பொழுது இந்தியா பரவசமடைகின்றது. இந்தியாவின் புராணங்களிலே அரிய துறவிகளைப்பற்றி ஏராளமான கதைகள் இருக்கின்றன. துறவிகள் தங்கள் தவத்தின் கடுமையாலும் தியாகத்தின் பயங்கர வசீகரத்தாலும் மலையளவு புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொண்டு, இந்திராதி தேவதைகளுடைய ஆட்சிகளையும் சீர்குலைத்து அழித்ததாக, கதை சொல்லுவதுண்டு. காந்திஜீயினுடைய வியக்கத்தக்க ஊக்கத்தையும் உள்வலிமையையும் நான் காணும் பொழுதெல்லாம், இந்தக் கதைகள் என் மனதுக்கு அடிக்கடி வருவதுண்டு. காந்திஜீ தம்முடைய சக்தியை எங்கே இருந்தோ, அள்ளிக்கொண்டு வருகிறாரே, அந்த ஊற்று வற்றவே வற்றாதுபோலத் தோன்றுகிறது. காந்திஜீ பிரகிருதியில் சேர்ந்தவர். ஓர் அபூர்வமான சிருஷ்டி யென்று சொல்ல வேண்டும். அவரிடத்தில் நம் சிந்தனைக் கெட்டாத ஓர் சக்தியைத் தரிசிக்கின்றோம்.

நவீன இந்தியாவில், தொழிலபிவிருத்தி அடைந்திருக்கிற இந்தியாவில், இப்பொழுதுகூட விவசாய வாழ்க்கைதான் முக்கியமாக நிற்கின்றது. எனவே, இந்தியா தனது அருமையான இந்த மைந்தனைக் (காந்திஜீயை) கும்பிடும் விக்கிரக மூர்த்தியாயும், அபிமானத்தைப் பெற்ற தலைவராயும் ஆக்கிக்

கொள்வது இயல்புதான். காந்திஜீ மறந்துபோன பண்டைய பாரத சரிதத்தை மீண்டும் உயிர்ப்பித்துவிட்டார். இந்தியா வின் ஆன்மாவின் தனித்தோற்றங்கள் அவர் மூலமாக வெளி யுலகுக்குக் காணப்பட்டன. இந்தியா நசுக்குண்டு அவதிப் பட்டுக் கொண்டிருந்தது. கஷ்டத்தைப் பொறுக்கமுடியா மல், திக்கற்ற நிலையில் முணுமுணுத்துக்கொண்டு, இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பற்றித் தெளிவில்லாத கனவு களைக் கண்டு கொண்டிருந்தது. அந்தத் தருணத்தில் காந்திஜீ தோன்றினார். மனதுக்கு உறுதியையும் தேகத்துக்கு வல்ல மையையும் இந்தியர்களுக்கு அளித்தார். எதிர்காலம், கவர்ச்சி யுடன்கூடிய காட்சியாக மாறிற்று. இந்தியா தனது இரு முகங்களுடன் ஏககாலத்தில் தனது பண்டைப் பெருமையை யும் எதிர்காலப் பெருமையையும் பார்க்கத் துவக்கிற்று.

இந்தக் குடியான மனப்பான்மையினின்றும் எங்களிற் பலர் பிரிந்து வெகுதூரம் சென்று விட்டார்கள். பழைய பழக்க வழக்கங்களும், மதமும், கருத்துகளும் எங்களுக்கு வெகுதூரம். நாங்கள் எங்களை நவீனர்கள் என்று கருதிக் கொண்டோம். அபிவிருத்தி என்ற பாஷையில் சிந்தனை செய்யலானோம். தொழிலபிவிருத்தியினால் வாழ்க்கையைத் திறம்பட நடத்தி, கூடி வாழமுடியும் என்று எண்ணினோம். குடியானவர்களுடைய மனப்பான்மை பிற்போக்கு கொண் டது என்று நாங்கள் எண்ணினோம். எங்களிற் சிலருக்கு அபேதவாதத்தில் ருசி உண்டாயிற்று. இப்பேர்ப்பட்ட நாங் கள் அரசியலில் காந்திஜீயோடு எவ்வாறு நெருங்கி உழைக்க நேர்ந்தது? அவருடைய ஆப்த பக்தர்களாக நாங்கள் எப்படி ஆனோம்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது கஷ் டம். காந்திஜீயை நேரில் தெரியாதவர்களுக்கு என்ன பதில் சொன்னாலும் திருப்தி உண்டாகாது. புருஷகாந்தி என்பது தெளிவாக விளக்கமுடியாத ஒரு விஷயமாகும். அது ஒரு அபூர்வ சக்தி. அந்த சக்தி மனிதர்களது உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் தன்மை வாய்ந்ததாகும். இத்தகைய ஆன்ம, சாந்த சக்தி காந்திஜீயிடம் ஏராளமாக இருக் கின்றது. அவரை நாடிவருகிறவர்களுக்கு ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாக அவர் காட்சி அளிக்கின்றார். அவர் மக் களைத் தம் வசமாக்கிக்கொண்டார். அவரிடம் வந்தவர்கள் மனம் மாறிப்போய், தங்களது அறிவுக்கு ஆறுதலைக் கொடுக் கும் படியான முடிவுக்கு வந்து, அவருடன் ஒட்டிக்கொள்கி-

ருர்கள். அவர்கள் அவருடைய வாழ்க்கைத் தத்துவத்தை ஏற்காமல் இருக்கலாம். அவருடைய இலட்சியங்கள் பல வற்றை ஒப்புக் கொள்ளாமலிருக்கலாம். அநேக சமயங்களில் அவர்களுக்கு காந்திஜீயின் சுபாவம் தெளிவாக விளங்குவதே இல்லை. ஆனால் காந்திஜீ குறிப்பிடும் செயலை எல்லோ ரும் அறியக் கூடும். அதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள முடியும். நீண்ட காலமாக, இந்தியாவில் செயல் திறன் அழிந்து, மக்கள் சோம்பலுக்கு உள்பட்டு, தாங்களா கவே தங்களுடைய முதுகெலும்பை வளைத்துக்கொண்டு, சலாம்போட்டு, அடிமைகளாக வாழ்ந்து வந்தார்கள். காந்தி ஜீயோ, இந்த நிலைமையை மாற்றுவதற்காக செயல் திட்டம் ஒன்றை வகுத்தார். அது அறத்தைத் தழுவிய செயல் திட்டமாகும். எனவே, அறிவுக்கும் உணர்ச்சிக்கும் பொருத் தமுள்ள திட்டமாதலால், அதனில் எல்லோரும் ஈடுபடாம லிருக்க முடியுமா? சிறிது சிறிதாக, அவர் கர்மத்தின் நேர் மையையும், தேவையையும் எங்களுக்கு உணர்த்திவிட்டார். நாங்கள் அவருடைய தத்துவத்தை ஒப்புக்கொள்ள வில்லை யாயினும், அவரைப் பின் பற்றிச் சென்றோம். கருத்துக் கும் செயலுக்கும் பொருத்தம் இருக்கவேண்டும். கருத்தை விட்டுச் செயலைப் பிரித்துப் பார்ப்பது தவறான முறையாகும். இவ்வாறு பிரித்துப் பார்த்தால் முரண் உண்டாகி, மனதிலே போராட்டம் ஏற்பட்டு, இறுதியில் துன்பமுண்டாகும். காந்திஜீ, கர்மவீரரானதாலும், மர்றும் நிலைமைகளைச் சூக்ஷம மாக அறியக்கூடிய வல்லமை படைத்தவ ராதலாலும், எங்க ளுக்குச் சரியென்று தோன்றுகிற பாதையில் அவர் செல்லுவா ரென்று நாங்கள் எண்ணி இருந்தோம். அதெப்படி இருந்த போதிலும் இதுவரையிலும் அவர் போய்க்கொண்டிருந்த பாதை சரியானதே. எதிர்காலத்தில் அவரிடமிருந்து பிரிய நேர்ந்தால், அதைப்பற்றி இப்பொழுது முதற்கொண்டு எதிர் பார்த்து, கவலைப்படுவது முட்டாள் தனமாகும்.

எங்களுடைய மனத்தில் தெளிவும் உறுதியும் இல்லை என்பது இதனின்றும் விளங்குகிறதல்லவா? நாங்கள் கூறும் கட்சி தர்க்கத்துக்கு ஒத்ததாக இருந்தாலும், இந்தியாவின் உண்மையான நிலைமையைப்பற்றி எங்களைக் காட்டிலும் காந்திஜீக்கு வெகு அதிகமாகத் தெரியும் என்றஉணர்ச்சி எங் களைவிட்டு ஒருபொழுதும் அகன்றதில்லை. ஜனங்களுடைய பக்தியை அளப்பரிய அளவில் கவரக்கூடிய இந்த மனிதனிடம்

சாதாரண மனிதர்களுடைய ஆசைக்கும் தேவைக்கும் வேண்டிய ஏதோ ஒன்று அபரிமிதமாக இருக்கவேண்டுமென்றும் இவரை எங்களுடைய கட்சிக்கு மாற்றிவிடலாமென்றும் நாங்கள் நம்பினோம். அவரை மாற்றுவது எளிதாகத் தோன்றிற்று. அவருக்கு குடியானவனுடைய மனப்பான்மை இருந்தாலும், அவர் ஒருபிறவிப் புரட்சிக்காரர். எத்தகைய மகத்தான மாறுதல்களைக் கண்டும் சிறிதுகூட அஞ்சாத, தயங்கி நிற்காத புரட்சிக்காரர் காந்திஜீ.

இந்தியாவில் சீர்குலைந்துவரும் சோம்பேறிகளை ஊக்கத்துடன் வேலைசெய்யும்படி எவ்வாறு செய்வது? நயத்தைக் காண்பித்தா, அல்லது பயத்தைக் காண்பித்தா? காந்திஜீ கைக்கொண்டது இரண்டு வழிகளுமல்ல. எத்தகைய அற்புதத்தை நாட்டில் தோற்றுவித்துவிட்டார்! சோம்பேறிகளை நாள் முழுதும் ஓயாமல் வேலை செய்யும்படியாக மாற்றிவிட்டாரே! கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டாரே! எப்படி முடிந்தது? சாந்தமானபார்வையால்; நயமான உரையால்; தம்முடைய சொந்த நடத்தையால். சத்தியாக்கிரகத்தின் துவக்க காலத்தில், அதாவது 1919-ம் ஆண்டில், காந்திஜீயை "அன்பிற்குரிய அடிமையோட்டி" என்று பம்பாய் உமார் சுபானிஅவர்கள் அழைத்தது, எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அதன்பின் இந்தப்பன்னிரண்டு வருஷகாலத்துக்குள் எவ்வளவோ நேர்ந்துவிட்டது. இந்த மாறுதல்களைப் பார்க்க முடியாமல் உமார் இறந்துபோனார். ஆனால் இறவாமல் பாக்கியசாலிகளாக இருக்கும் நாங்கள் 1931-ம் வருஷம் வரையிலும் நிகழ்ந்து வந்ததை ஆனந்தத்துடனும் மனவெழுச்சியுடனும் நோக்குகின்றோம். 1930-ம் ஆண்டு எங்களுக்கு அற்புத வருஷமாகும். காந்திஜீ தம்முடைய மந்திரசக்தி நிறைந்த கையால் தொட்டு, நாட்டை அடியோடு மாற்றிவிட்டதாகத் தோன்றிற்று. இறுதியாக, பிரிட்டிஷ் அரசாங்கத்தை வென்றுவிட்டோம் என்று எங்களில் யாரும் முட்டாள்தனமாக எண்ணிவிடவில்லை. எங்களுடைய மன உற்சாகத்துக்கும் அரசாங்கத்துக்கும் யாதொரு சம்பந்தமும்இல்லை. போராட்டத்தில் கம்பீரமாக நடந்துகொண்ட எங்களுடைய ஜனங்களைப்பற்றி, எங்களுடைய ஸ்திரீகளைப் பற்றி, எங்களுடைய வாலிபர்களைப்பற்றி, எங்களுடைய குழந்தைகளைப்பற்றி நினைத்து நினைத்து நாங்கள் கர்வம் அடைந்தோம். இத்தகைய எழுச்சி எந்தக்காலத்திலும், எந்த ஜன சமூகத்துக்கும் விலை

மதிக்கப் பெறாத பொக்கிஷமாகும். அதுவும் அடிமைகளாக் நசுக்குண்டு வாழும் இந்தியர்களுக்கு எத்தகைய லாபகரமான பொக்கிஷம் என்று சொல்லத் தேவையில்லை. இந்தப் பொக்கிஷம் எங்களிடமிருந்து பறிபோகும் படியாக எதுவும் நேரக் கூடாதென்று நாங்கள் கவலையுடனிருந்தோம்.

என் சம்பந்தப்பட்ட வரையிலும், காந்திஜீ எப்பொழுதுமே அசாதாரணமான ஒரு பிரியத்தையும் மதிப்பையும் எனக்குக் காண்பித்திருக்கிறார். என்னுடைய தகப்பனாரின் மரணத்திற்குப் பின்பு, அவர் இன்னும் நெருக்கமாக என்னுடைய உள்ளத்தில் குடிகொண்டுவிட்டார். நான் எதைச் சொன்னாலும், அந்த எப்பொழுதும் பொறுமையுடன் கேட்பார். என்னுடைய ஆசையைப் பூர்த்திசெய்வதற்காக, எவ்வளவோ பிரயாசை எடுத்துக் கொள்வார். எனவே, அபேதவாதத் திட்டத்துக்கு அவருடைய மனதைச் சிறிது சிறிதாக திருப்பி விடலாம் என்று நானும் எனது தோழர்களிற் சிலரும் ஆசையுடன் எண்ண இடமிருந்தது. அபேதவாத வழியில் உண்மை இருப்பதாகத் தமக்கு புலப்பட்டால், சிறிது சிறிதாக அந்தப் பாதையில் வரத்தாம் தயாராயிருப்பதாகவும் காந்திஜீ சொல்லியிருக்கிறார். அபேதவாதத் திட்டத்தின் மூலக்கொள்கைகளை அவர் ஒப்புக்கொள்ள வேண்டித்தான் வருமென்று எனக்குத் தோன்றிற்று. தற்போதைய தொழிலபிவிருத்திப் போக்கினாலும், அரசியல் போக்கினாலும் ஏற்பட்டிருக்கும் அநியாயத்தையும், அழிவையும், துன்பத்தையும், தீமையையும் போக்குவதற்கு வேறு வகை புலப்படாததால், சமதர்ம முறைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சமதர்மத்தின் லக்ஷியத்தையும் மூலக் கொள்கைகளையும் காந்திஜீ ஏற்றுக் கொள்ளுவார் என்று எனக்குத் தோன்றிற்று. இவ்வாறு நான் அப்பொழுது எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் காந்திஜீயின் லக்ஷியத்துக்கும் சமதர்ம லக்ஷியத்திற்கும் அடிப்படையான வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை நான் இப்பொழுது உணர்கின்றேன்.

இது நிற்க, 1931-ம் வருஷம் பெப்ரவரி மாதத்தில் நடந்த டில்லி வரலாறுகளைக் கவனிப்போம். காந்தி—இர்வின் சம்பாஷணைகள் அடிக்கடி நடந்துகொண்டிருந்தன. பிறகு, திடீரென்று நின்றுபோய்விட்டது. வைசிராய் காந்திஜீயைச் சில நாட்கள்வரையிலும் கூப்பிட்டனுப்பவே இல்லை. முறி

வுக்கு வந்துவிட்டதுபோலத் தோன்றிற்று. காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் தங்களுடைய மாகாணங்களுக்கு டில்லியிலிருந்து புறப்பட்டுப்போகத் தயாராக இருந்தார்கள். கலைவதற்குள் எங்களுடைய எதிர்காலத் திட்டத்தையும் சட்ட மறுப்பையும் பற்றிக் கலந்து பேசினோம். ராஜி முறிந்தது நிச்சயமானால் நாங்கள் கூடி சந்தித்துப் பேசுவதற்கு சந்தர்ப்பம் வாய்க்காது என்று எங்களுக்கு நன்கு தெரியும். உடனே கைதியாக்கப் படுவோம் என்று எதிர்பார்த்தோம். காங்கிரஸை நசுக்குவதற்கு இன்னும் கடுமையான அடக்குமுறையை அரசாங்கத்தார் கையாளப்போவதாக நாங்கள் கேள்விப்பட்டோம். இப்பொழுது கையாளப்பெற்று வந்த முறையைக் காட்டிலும் மிகக் கொடிய அடக்குமுறை ஏற்படும் என்று சொன்னார்கள். இதுதான் கடைசிக் கூட்டம் என்று எண்ணி, நாங்கள் கூடி போராட்டத்தை எதிர்காலத்தில் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கான யோசனைகளை நாட்டுக்குத் தெரிவிப்பதற்காக பல தீர்மானங்களை நிறைவேற்றி வைத்தோம். ஒரு தீர்மானம் முக்கியமானது தற்காலிகத் தலைவர் தமக்குப் பின், தலைவர் இன்னாரென்று நியமனம் செய்வது இதுவரையிலும் வழக்கத்திலிருந்தது. காரியக் கமிட்டியில் காலியாகும் ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதற்கும், இதே விதி அனுஷ்டானத்திலிருந்தது. புதிதாகச் சேரும் காரியக்கமிட்டியின் அங்கத்தினர்களுக்கு சிறைக்குப்போகும் உரிமை இருந்ததே யொழிய, போராட்டத்தில், எத்தகைய மாறுதலையும் செய்ய அதிகாரமில்லை. காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யும் இந்த முறையில் சிறிது அபாயமும் இருந்தது. எனவே, தலைவர்களையோ அல்லது அங்கத்தினர்களையோ இனி நியமனம் செய்யக் கூடாது என்று டில்லியில் காரியக் கமிட்டி ஒரு தீர்மானம் செய்தது. பழைய கமிட்டியில் பாக்கியாக ஒரு அங்கத்தினர் மட்டும் சிறைக்கு வெளியே இருந்தாலும் அவரே தம்மைப் பூரண கமிட்டியாக பாவித்துக் கொண்டு, வேலை செய்யவேண்டும் என்று தீர்மானித்தோம். நாங்கள் எல்லோரும் சிறையிலிருக்கும்பொழுது வெளியே யாதொரு காரியக் கமிட்டியும் வேலைசெய்யமுடியாது. ஆனால் காரியக்கமிட்டியின் அதிகாரங்கள் நாட்டில் வாழும் ஒவ்வொரு ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும் இருப்பதாக நினைத்துக் கொண்டு, அவர்கள் கடமையாக இடைவிடாது போராட்டத்தை நடத்தவேண்டுமென்று கம்பீரமாகத் தீர்மானம் செய்தோம்.

போராட்டத்தை நிறுத்தாமல் நடத்துவதற்கு இது நல்ல யுக்தியாகும். யாதொரு ஆபத்தும் வழியிலே இல்லை. தலைமைக் காரியாலயத்திலிருந்து, மாகாணங்களிலுள்ள கிளை ஸ்தாபனங்களுக்கு அவ்வப்போது தாக்கீது அனுப்பி சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாமற்போயிற்று. மேலும் காங்கிரஸ் ஊழியர்கள் எல்லோருக்கும் தெரிந்தவர்களானதாலும், அவர்கள் பகிரங்கமாக வேலை செய்ததாலும், அவர்களுக்கு பகிரங்கமாக யோசனை சொல்லி அனுப்பமுடியாது. அவர்களை அரசாங்கத்தார் எப்பொழுதும் கைதுசெய்து விடலாம். 1930-ம் வருஷம் கடிதப் போக்குவரத்துக்காகவும் மேற்பார்வை வேலைக்காவும் காங்கிரசுக்குள் இரகசிய இலாகா ஒன்று அமைக்கப் பெற்றது. இது நன்முக வேலை செய்தது. இரகசியமாக செய்தி யனுப்புவதில் வெற்றியுடன் காரியம் செய்ய முடியும் என்பது ருசுவாகி விட்டது. ஆனுல் இது எங்களுடைய பகிரங்க இயக்கத்துக்குப் பொருத்தமானதல்ல. காந்திஜீக்கும் இது பிடிக்கவில்லை. தலைமைக் காரியாலயத்திலிருந்து தாக்கீதுகள் வராமற் போனுல், அந்தந்த ஸ்தலத்திலிருக்கும் காங்கிரஸ் தொண்டர்கள் தங்களுடைய புத்திக்குத் தக்கவாறு போராட்டத்தை நடத்தும் பொறுப்பு அவர்களிடம் சுமத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சாத்தியப்பட்டால் தாக்கீதுகளும் அனுப்பப்பட்டுவந்தன. இந்தத் தீர்மானத்தையும் ஏனைய தீர்மானங்களையும் நாங்கள் நிறைவேற்றிவைத்தோம். அவைகள் பிரசுரிக்கப்படவுமில்லை; அமுலுக்கு வரவுமில்லை. இந்தத் தருணத்தில் இர்வின் பிரபு, காந்திஜீயைக் கூப்பிட்டனுப்பினுர். சம்பாஷணை மீண்டும் நடைபெற்றது.

மார்ச்சு மாதம் 4-ந் தேதி இரவு வைஸிராயின் மாளிகையிலிருந்து, காந்திஜீயின் வருகையை எதிர்பார்த்து நாங்கள் நடுநிசி வரையில் காத்துக் கொண்டிருந்தோம். அவர் இரவு 2 மணிக்குத் திரும்பிவந்தார். நாங்கள் எழுப்பப்பட்டோம். ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னுர். ஒப்பந்த நகலைப்பார்த்தோம். ஒப்பந்தத்தின் வாக்கியங்கள் அடிக்கடி எங்களுக்குள் வாதிக்கப்பட்டிருந்ததால் அநேகமாக ஞாபகத்தில் இருந்தது. பாதுகாப்பு என்ற விஷயம் சம்பந்தமாக, அமைக்கப்பட்ட வாக்கியங்கள் மட்டும் எனக்குத் திகிலையுண்டாக்கின. அத்தகைய வாக்கியங்களை நான் எதிர் பார்க்கவே இல்லை. நான் உடனே ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள்

எல்லோரும் தூங்கப்போய்விட்டோம். இதைப்பற்றி இனி மேல் சொல்வதற்கும் ஒன்றுமே இல்லை. காரியம் முடிந்து விட்டது. எங்கள் தலைவரும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு விட்டார். நாங்கள் அவரிடமிருந்து அபிப்பிராய பேதப்பட்டோம். என்றாலும் எங்களால் என்ன செய்யமுடியும்? அவரைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்குவதா? அவரிடமிருந்து பிரிந்து கொள்வதா? அல்லது எங்களுடைய சம்மதமில்லாமையை பகிரங்கப்படுத்துவதா? கடைசி வழியால் எனக்கு ஒருவாறு ஆத்ம திருப்தி ஏற்படலாம். ஆனால் முடிவு சம்பந்தப்பட்ட வரையிலும், இனியாதொரு வேற்றுமையும் இருக்கமுடியாது. சட்டமறுப்பு இயக்கம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு விட்டது. காரியக் கமிட்டிகூட இயக்கத்தை இனி நடத்தமுடியாது. ஏற்கனவே காந்திஜீ ராஜிக்கு ஒப்புக் கொண்டு விட்டார் என்று அரசாங்கத்தார் சொல்லக் கூடுமல்லவா? தற்காலிகமாக சட்டமறுப்பை நிறுத்திவிட்டு அரசாங்கத்தோடு ராஜிசெய்து கொள்ளவேண்டும் என்பதில் எங்களுடைய ஏனைய தோழர்களைப் போலவே எனக்கும் பூரண விருப்பம்தான். எங்களுடைய தோழர்களை மீண்டும் சிறைக்கு அனுப்புவதும் ஆயிரக்கணக்கான தோழர்களைச் சிறையிலேயே நீடித்து வைத்துக்கொண்டிருப்பதும் எங்களுக்கு எளிதான காரியமல்ல. எவ்வளவோ பழக்கிக்கொண்டு, சிறை வாசத்தைப்பற்றி நாங்கள் சிரித்துக்கொண்டு பேசினாலும், இரவு பகலாக வாழ்க்கையைக் கழிப்பதற்கு சிறை விரும்பத்தக்க இடமல்ல. மேலும், மூன்று வாரத்திற்கதிகமாக காந்திஜீயும் இர்வின் பிரபுவும் கலந்து பேசிக்கொண்டிருந்தமையால், ராஜி வந்துகொண்டிருக்கிறது என்று தேசம் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தது. முறிந்து போயிருக்குமாயின் மிகுந்த ஏமாற்றமா யிருந்திருக்கும். தற்காலிக ராஜிக்கு காரியக் கமிட்டியிலிருந்த நாங்கள் எல்லோரும் சாதகமாகத் தானிருந்தோம். ஆனால் விடுதலைக்கு ஜீவாதாரமான எதையும் விட்டுக் கொடுத்துவிட நாங்கள் தயாராக இல்லை.

பலமாக வாதிக்கப்பட்ட பல அம்சங்களைப் பற்றி, நான் அதிகமாக்க் கவலைப்படவில்லை. எல்லாவற்றைக் காட்டிலும் இரண்டு விஷயங்களிலேதான் எனக்கு சிரத்தை. எக்காரணத்தைக் கொண்டும் நாட்டின் லட்சியமான பூரண விடுதலையைக் குறைத்துப் பேசக் கூடாதென்பதொன்று; ஐக்கிய

மாகாண விவசாயிகளின் இயக்கத்துக்கு இந்த ராஜியினால் எத்தகைய பலன் ஏற்படக் கூடும் என்பது இரண்டாவது. எங்களுடைய வரி கொடா இயக்கம் வெற்றிகரமாக நடந்து கொண்டு வந்தது. சில இடங்களில் ஒரு சல்லிகூட கிஸ்தி வசூலாகவில்லை. விவசாயிகள் உற்சாகத்துடனும், உறுதியுடனும் இருந்தார்கள். உலக வியாபார மந்தத்தால் அகவிலை மிகக் குறைந்து போய் அவர்களால் வரி கொடுக்கவே முடியவில்லை. எங்களுடைய வரி கொடா இயக்கம் அரசியல், பொருளாதாரம் என்ற இரண்டு முகங்களைக் கொண்டதாகும். அரசாங்கத்தோடு தற்காலிகமாக ராஜி ஏற்பட்டால், சட்ட மறுப்பை நிறுத்த வேண்டிவரும். ஆகவே வரிகொடா இயக்கத்துக்கு அடிதாங்கியாய் இருக்கும் அரசியல் காரணம் அகன்று போய்விடும். ஆனால் பொருளாதாரத் துறையில் என்ன செய்வது? அகவிலையோ தலை குப்புற விழுந்துவிட்டது. விவசாயிகள் வரியில் பெரும் பாகத்தைக்கூட கொடுக்க சக்தி யில்லாமலிருந்தனர். விஷயத்தை காந்திஜீ இர்வின் பிரபுவுக்கு மிகவும் தெளிவாக எடுத்துக் காண்பித்துவிட்டார். வரிகொடா இயக்கத்தை எங்களால் நிறுத்தி வைக்க முடியும். ஆனால், விவசாயிகளைத் தங்கள் சக்திக்கு மீறி வரி கொடுக்கும்படியாக, எங்களால் யோசனை சொல்லமுடியாது என்று காந்திஜி சொல்லிவிட்டார். இது மாகாண சம்பந்த பிரச்னையானதால், இந்திய அரசாங்கத்தோடு விவரமாக விவாதம் செய்வது முடியாத காரியமாகவிருந்தது. இது சம்பந்தமாக, மாகாண அரசாங்கத்தார் எங்களோடு தாராளமாகக் கலந்து பேசுவார்களென்றும், விவசாயிகளின் துயரைப் போக்குவதற்காக தங்களால் இயன்றதை அவர்கள் செய்வார்கள் என்றும் எங்களுக்கு உறுதி கொடுக்கப்பட்டது. இது ஒரு தெளிவில்லாத உறுதியாகும். ஆனால் அந்த சந்தர்ப்பத்தில், இதைவிட அதிகமான தெளிவோடு எந்த உறுதியையும் அரசாங்கத்தார் கொடுத்திருக்க முடியாது. வரி கொடா இயக்கப் பிரச்னை இவ்வாறு பரிகரிக்கப்பட்டது. எங்களுடைய ஜீவாதார லட்சியமாகிய பூரண விடுதலைப் பிரச்னை பாக்கி இருந்தது. ஒப்பந்தத்தின் இரண்டாவது ஷரத்தை நோக்கியபொழுது, இதற்கு ஆபத்து வந்துவிட்டதாக எனக்குத் தோன்றிற்று. நம்முடைய ஜனங்கள் இதற்காகவா ஓராண்டு முழுதும் வீரத்தனமாகப் போராடினார்கள்? எங்களுடைய கூச்சல்களும், செயல்களும் இப்படியா முடிய வேண்டும்? ஜனவரி ௴ 26௳ எதற்காக நாடெங்கும் பூரண விடுதலை விரதம் எடுத்துக்கொள்ளப்-

பட்டது? எனவே இரவு முழுதும் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தேன். விலை மதிக்க முடியாத ஒன்று என்னுடைய உள்ளத்திலிருந்து வெளியே சென்றுவிட்டதாயும், என்னுடைய இதயம் காலியாகப் போய்விட்டதாயும் எனக்குத் தோன்றிற்று. 'நாம் எதிர் பார்த்தபடி கர்ஜனை செய்வதில்லை. அழுகைக் குரலுடன் நம் உலகம் மறைகின்றது' என்ற கவியின் மொழிகள் நினைவுக்கு வந்தன.

# XXXV

## கராச்சி காங்கிரஸ்

என்னுடைய மனோவேதனையை காந்திஜீ யார் மூலமாகவோ தெரிந்துகொண்டார். காலையில் வழக்கமாகப் போகும் "பேடா" வில் என்னை அவருடன் கூட வருமாறு சொன்னார். நாங்கள் நீண்டநேரம் பேசினோம். ஜீவாதாரமான எதுவும் இழக்கப்படவில்லை என்றும், கொள்கை எதையும் விட்டுக் கொடுக்கவில்லையென்றும் என்னுடைய மனத்தைத் தேற்ற அவர் முயற்சி செய்தார். ஒப்பந்தத்தில் "இந்தியாவின் நலங்களுக்காக" என்ற வார்த்தைகள் காணப்படுகின்றன. இந்த வார்த்தைகளுக்கு காந்திஜீ பொருள் செய்து, இந்தியாவின் பூரண சுதந்திர லட்சியம், அந்த வார்த்தைகளில் பொதிந்துகிடக்கின்றது என்றார். இது சரியான அர்த்தமாக எனக்கும் தோன்றவில்லை. நான் திருப்தி அடையவில்லை. ஆனால் அவருடைய சம்பாஷணையால் எனக்கு ஒரு வகை அமைதி உண்டாயிற்று. ஒப்பந்தத்தில் லாபநஷ்டத்தைப் பற்றிக்கூட எனக்கு கவலையில்லை. தாங்கள் திடீர் திடீரென்று, எதிர்பாராதபடி காரியம் செய்வது, என்னைப் பயமுறுத்தி விடுகின்றது. பதினைந்து ஆண்டுகளாக, நான் தங்களிடம் நெருங்கிப் பழகிக்கொண்டுதான் வருகிறேன். என்றாலும் நான் அறியக்கூடாத ஒரு தன்மை தங்களிடம் எங்கேயோ மறைந்துகொண்டு கிடக்கின்றது. அதை நினைக்க எனக்குத் திகிலாயிருக்கிறது" என்று நான் அவரிடம் தெரிவித்துக்கொண்டேன். இத்தகைய விளங்காத அச்சம் தம்மிடம் இருக்கிறதென்றும், அதற்குத் தாம் கூட ஜவாப்தாரியல்லவென்றும், அது எங்குகொண்டுபோய் விடுமென்று தாம் முன்னதாகவே சொல்ல முடியாதென்றும் காந்திஜீ ஒப்புக்கொண்டார்.

இரண்டொருநாள் செய்வதின்னதென்று தெரியாமல் நான் முனகிக்கொண்டே இருந்தேன். ஒப்பந்தத்தை அந்த நிலைமையில் எதிர்த்துத் தடுப்பதென்பது முடியாத காரியம். அந்தக் கட்டம் தவறிப்போய் விட்டது. அதை அனுபவத்தில் ஏற்றுக்கொண்டாலும், சொல்லளவிலே அதனின்றும் விலகி

நிற்கின்றேன் என்பதைத் தெளிவுபடுத்திக் காண்பிக்கத்தான் அப்பொழுது முடியும். அப்படிச் செய்தால், என்னுடைய தற்பெருமைக்குத் திருப்தியாக இருந்திருக்கும். ஆனால் முக்கியமான பிரச்னைக்கு அது எத்தகைய உதவி அளிக்கக் கூடும்? முடிந்துபோன காரியத்தை மரியாதையாக ஏற்றுக்கொண்டு காந்திஜீ செய்தது போல, அதற்கு நேர்த்தியான வியாக்கியானம் செய்வது உசிதமல்லவா? "பூரண விடுதலையை இப்பொழுதும் தாங்கி நிற்கின்றோம்" என்று பத்திரிகை நிருபர் பேட்டி ஒன்றில், காந்திஜீ தெளிவாகக் கூறி தமது வியாக்கியானத்தை வற்புறுத்தி யிருக்கிறார். அப்பொழுதும் பிற்காலத்திலும் யாதொரு தகராறும் இருக்கக்கூடாதென்று இர்வின் பிரபுவிடம் காந்திஜீ, இதை மிகவும் தெளிவாக விளக்கி யிருக்கிறார். வட்டமேஜை மகாநாட்டுக்கு, காங்கிரஸ் தனது பிரதிநிதியை அனுப்புவதாயிருந்தாலும், இந்த ஷரத்தின் பேரில் பூரண விடுதலை பாத்தியம் வற்புறுத்தப்படும் என்று காந்திஜீ, இர்வின் பிரபுவிடம் சொல்லியிருக்கிறார். இர்வின் பிரபு வியாக்கியானத்தை ஏற்கவில்லை. ஆனால் இந்த வியாக்கியானத்தை வற்புறுத்த காங்கிரசுக்கு உரிமையுண்டென்று அவர் ஏற்றுக்கொண்டார்.

மனதிலே எனக்குத் துயரம் மிகுந்த போராட்டம். உடலிலும் துன்பந்தான். என்றாலும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளவதென்றும் அதற்காக முழு மனதுடன் உழைப்பதென்றும் நான் தீர்மானித்தேன். நடு வழியொன்றும் எனக்குப் புலப்படவில்லை. ஒப்பந்தத்துக்கு முன்னும் பின்னும், காந்திஜீ, இர்வின் பிரபுவைப் பேட்டிகண்டபொழுதெல்லாம் சட்டமறுப்புக் கைதிகளல்லாத ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்று அவர் மன்றாடினார். ஒப்பந்தப்படி, சட்ட மறுப்புக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால் இவர்கள் அல்லாத அரசியல் கைதிகள் ஆயிரக்கணக்கில் இருந்தார்கள். விசாரணைக்குப்பின் தண்டனை பெற்றவர்கள், விசாரணையில்லாமலே காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள், விசாரணை இல்லாத கைதிகள், பல ஆண்டுகள் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நாடு முழுதும் ஆத்திரம் ஏற்பட்டிருந்தது. இத்தகைய கைதிகள் வங்காளத்தில் அதிகமாக இருந்தமையால், வங்காளத்தில் அதிகமான ஆத்திரம் காணப்பட்டது. ருஜு இல்லாமலிருப்பதே சிறந்த ருஜு என்று கொண்டு, இந்திய

அரசாங்கத்தார் இவர்களை விசாரணையின்றி காவலில் வைத் திருக்கிறார்கள் போலும். விசாரணையில்லாக் கைதிகள் பலாத் கார வழிகளில் இறங்கின அல்லது இறங்கும் புரட்சிக்காரர் கள் என்று அரசாங்கத்தார் சாதிக்கப் பார்க்கின்றார்கள். இவர் களையும் விடுதலை செய்யவேண்டுமென்று காந்திஜீ மிகுதியும் கேட்டுப்பார்த்தார். “ஒப்பந்தத்தை ஆதாரமாகக்கொண்டு நான் கேட்கவில்லை. ஜனங்களின் ஆத்திரத்தைத் தளர்த்துவ தற்காக, இவ்வாறு செய்தால் மிகவும் உசிதமாயிருக்கு மென்று சொல்லுகிறேன். இதனால், வங்காளத்தில், அரசாங் கத்துக்குச் சாதகமான மனப்பான்மை ஏற்படலாம்” என்று காந்திஜீ சொல்லிப் பார்த்தார். ஆனால் அரசாங்கமோ, இதைக் காது கொடுத்துக் கேட்கிற வழியாக இல்லை.

பகத்சிங்கின் மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிவைக்கவேண்டும் என்று காந்திஜீ அரசாங்கத்தாரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். இர்வின் பிரபு இதற்கும் இணங்கவில்லை. ஒப்பந்தத்தின்பேரில் அரசாங்கத்தாரை இந்த விஷயத்தில் வேண்டிக் கொள்ளவில்லை. நாடு முழுதும் பகத்சிங்கிடம் இருக்கும் அனுதாபத்தைக் கருதி, அரசாங்கத் தார் இவ்வாறு செய்ய வேண்டுமென்பது காந்திஜீயின் கட்சி யாகும். அரசாங்கத்தார் இணங்கவில்லை. இந்த சமயத்தில் விநோதமான நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது. இந்தியாவில் இருக் கும் பலாத்காரப் புரட்சிக் காரர்களின் மனப் போக்கு எவ் வாறு இருக்கின்றது, என்பதைத் தெரிந்து கொள்ள, இந்தச் சம்பவம் எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தது. தகப்பனாரின் மரணத்துக்குச் சிறிது முன்னோ, பின்னோ, நான் சிறையி லிருந்து விடுதலை யடைந்தவுடனே, இது நேர்ந்தது. எனக் குத் தெரியாத ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னைப் பார்க்கவேண்டுமென்றார். தம்முடைய பெயர் சந்திரசேகர ஆசாத் என்று என்னிடம் சொன்னார். அவரை முன்பு நான் பார்த்ததே இல்லை. பத்து வருஷங்களுக்கு முன்னால், பள் ளியை விட்டுவிலகி, 1921-ம் ஆண்டு சட்டமறுப்பு இயக்க காலத்தில், அவர் சிறைக்குச் சென்றார் என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.

அப்பொழுது அவருக்கு சுமார் 15 வயதிருக்கலாம். சிறையில் ஏதோ சில விதிகளை மீறிவிட்டார் என்று அவரை கசையடி அடித்தார்கள். பின்னர் சிறிது சிறிதாக அவர் பலாத்காரப் புரட்சிக் கூட்டத்தை நாடிச் சென்றார். கடைசி

யாக வட இந்தியாவில், புரட்சிக் காரர்களுக்கு இவரும் ஒரு முக்கியமான தலைவரானார். இவைகள் எல்லாவற்றையும் நான் அறை குறையாகக் கேள்விப் பட்டிருந்தேன். இந்த வதந்தி களில் எனக்குச் சிரத்தை கிடையாது. எனவே, அவரைக் கண்டு நான் ஆச்சரியப் பட்டுப்போனேன். அரசாங்கத் தாருக்கும் காங்கிரசுக்கும் ராஜி ஏற்படப் போகின்றது என்று பொதுவாக நாட்டில் ஒரு எதிர்பார்ப்பு இருந்ததால், அவர் என்னைக் காண வந்திருந்தார். ஆசாத் என்னைக் கேட்டதா வது:—"ராஜி ஏற்படுமாகில், எங்கள் கூட்டத்துக்கு விமோ சனம் ஏற்படுமா? எங்களைச் சட்டத்துக்குப் புறம்பே உள்ள வர்கள் எனக் கருதி, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குத் துரத்தி வேட்டையாடி, எங்களைக் கண்டுபிடித்துக் கொடுப் பவர்களுக்கு சன்மானம் கொடுக்கப்படும் என்று அறிவிப்பதை அரசாங்கத்தார் இன்னமும் கையாளுவார்களா? அல்லது, தூக்கு மரம்தான் எங்களுக்குப் பிராப்தியா? அமைதியுடன் தொழில்களைச் செய்ய எங்களுக்கு வசதி ஏற்படுமா? எனக் கும் எனது தோழர்களுக்கும் பலாத்காரப் புரட்சி வழியில் இனி நம்பிக்கை இல்லை. என்றாலும் சமாதான முறைக ளாலே மட்டும், இந்தியா விடுதலையடைந்துவிட முடியாது. எதிர்காலத்தில் வலுத்த கலகம் ஏற்படலாம். ஆனால் அது புரட்சிக்காரர்களின் இரகசியமான பலாத்காரச் செயலாக இருக்காது. இந்தியாவின் விடுதலைக்கு பலாத்கார இரகசியச் செயல் தேவையில்லை. என்னை ஊருக்குஊர் போலீசார் வேட்டையாடிக்கொண்டு வருகிறார்களே, அது எப்பொழுது ஒழியும்? அமைதியுடன் வாழ்க்கை நடத்த சந்தர்ப்பம் அளிக்கப்படாவிடின், நான் என்ன செய்கிறது? சமீபத்தில் நடைபெற்ற பலாத்காரச் செயல்கள், நாங்கள் தற்காப்புச் செய்து கொள்வதற்காகவே ஏற்பட்டவையாகும்."

இவ்வாறு ஆசாத் என்னிடம் சொன்னார். அவர் வாயி னின்றும் இவைகளைக் கேட்பதில் எனக்கு மிகவும் சந்தோ ஷம். பலாத்காரத்தில் நம்பிக்கை குறைந்து வருகிறதென்று ஆசாத் சொன்னதற்கு ருசு, பின்னரும் எனக்குக் கிடைத் தது. இரகசிய பலாத்காரப் புரட்சித் தத்துவம் உடைபட் டுப் போய்விட்டது. அங்கே இங்கே, சில கொலைகள் நேரு மாயின், அது பொதுவான புரட்சிக்கொள்கையால் தூண் டப்பட்டவை அல்ல. அங்கங்கே ஸ்தல அதிகாரிகள் செய் யும் அக்கிரமங்களினால், ஆத்திரம் எழுந்து செய்யப்படும்

குற்றங்களாகும். ஆனால் பழைய புரட்சிக்காரர்கள் அனைவரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் சாத்வீகத்துக்கு மாறிவிட்டார்கள் என்றும், பிரிட்டிஷ் ஆட்சியை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார்கள் என்றும் இதற்கு அர்த்தமே இல்லை. ஆனால், பழைய பலாத்காரத் தத்துவ முறையில், அவர்கள் இப்பொழுது யோசித்துப் பார்ப்பதில்லை. அவர்களிற் பெரும்பான்மையோருக்கு பாஸிஸ்டுக் கட்சியின் மனப்பான்மை ஏற்பட்டிருப்பதாகத் தோன்றிற்று.

அரசியல் விடுதலை சம்பந்தமாக என்னுடைய தத்துவமும் வேலைத்திட்டமும் என்னவென்று, சந்திரசேகர ஆசாத் அவர்களுக்கு விளக்கிக் காண்பித்து என்னுடைய நோக்கத்துக்கு அவரைத் திருப்ப முயன்றேன். ஆனால், அவர் கேட்ட அடிப்படையான கேள்விக்கு, நான் தக்க மறுமொழி கொடுக்க முடியவில்லை. நான் இப்பொழுது என்ன செய்கிறதென்று கேட்டாரே, அதற்கு என்னிடம் தக்க சமாதானம் இல்லை. அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் ஆறுதலோ அமைதியோ ஏற்படும் படியாக, சமீபத்தில் ஒன்றும் நேரப் போவதில்லை. தம்முடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி எதிர்காலத்தில் பலாத்காரச் செயல்களைத் தமது தோழர்கள் செய்யாமலிருக்கத் தூண்டவேண்டுமென்றும், இந்தச் செயல்களால் நாட்டின் விடுதலை இயக்கத்தின் போக்குத் தடைப்பட்டுப் போகிறதென்றும் அவரிடம் சொல்லிக் கொண்டேன். அவ்வளவுதான் என்னால் முடிந்த காரியமாகும். இரண்டு மூன்று வாரம் கழித்து காந்தி—இர்வின் ராஜி சம்பாஷணை நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அலகாபாத்தில், போலீசார் சந்திர சேகர் ஆசாத்தை வளைத்துக்கொண்டு சுட்டுக் கொன்று விட்டார்கள், என்று நான் டில்லியில் கேள்விப் பட்டேன். பகலிலே, நகரப் பூங்காவனம் ஒன்றில், அவர் அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டார். அவரைப் பெரிய போலீஸ் படை ஒன்று வளைத்துக் கொண்டது. ஆசாத் மரத்தின் பின் புறத்தில் நின்று, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றார். இரண்டு கட்சிகளுக்குள்ளும் வேட்டுப் பந்தயம் ஏற்பட்டது. ஆசாத் இரண்டொரு போலீஸ்காரர்களுக்கு காயம் உண்டாக்கினார். போலீஸ்காரர்கள் ஆசாத்தைச் சுட்டு வீழ்த்தினார்கள்.

தற்காலிக ராஜி ஏற்பட்டபிறகு, நான் டில்லியைவிட்டு லக்ஷ்மணபுரிக்குப் போனேன். சட்டமறுப்பை நாடு முழுதும்

நிறுத்துவதற்காக விரைவிலே ஏற்பாடுகள் செய்தோம். என்ன கட்டுப்பாடு! தாக்கீது அனுப்பியது தான் தாமதம். காங்கிரஸ் ஸ்தாபனங்கள் யாவும் ஒரு மனிதனைப்போல எழுந்து நின்று, காரியக் கமிட்டியின் தாக்கீதுகளை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டன. ராஜியைப்பற்றி அதிருப்தி கொண்டவர்கள், எங்களிற் பலர் இருந்தார்கள். அவர்களைத் தடுப்பதற்கு எங்களிடம் தக்க வசதிகள் இல்லை. பலர், ராஜியைக் கண்டித்தாலும், அனுபவத்தில் அதை யேற்றுக்கொண்டு, காங்கிரஸ் சட்டமறுப்பை நிறுத்திவிட்டது. எங்களுடைய மாகாணத்தில் இந்த ராஜியால், என்ன விளைவுகள் தோன்றியுள்ளன என்பதைத் தெரிந்துகொள்ள நான் ஆவல் கொண்டேன். சில இடங்களில், வரிகொடா இயக்கம் வலுப்பெற்று இன்னும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சட்டமறுப்புக் கைதிகள் அனைவரையும் அரசாங்கத்தார் விடுதலை செய்கின்றார்களா என்பதைப் பார்ப்பதுதான் எங்களுடைய முதல் வேலையாகும். ஒவ்வொரு நாளாக, ஆயிரக் கணக்கில் சட்டமறுப்புக் கைதிகள் விடுதலை செய்யப் பெற்றார்கள். சந்தேகமான சில சட்டமறுப்புக் கைதிகள்தான் சிறையில் பாக்கி இருந்தார்கள். பலாத்காரப் புரட்சிக் கைதிகளும் விசாரணை இல்லாத கைதிகளும் விடுதலை செய்யப்படவில்லை யென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

டில்லி ஒப்பந்தப்படி விடுதலையடைந்த கைதிகள் தங்கள் கிராமத்துக்கோ அல்லது நகருக்கோ திரும்பிப் போனதும் ஜனங்களால் வரவேற்கப்பட்டார்கள். இது இயல்புதானே! அலங்காரங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள், பிரசங்கங்கள், உபசாரப் பத்திரங்கள் ; நாடெங்கும் இவைகளைத்தான் அடிக்கடி காண முடிந்தது. இவை யாவும் இயல்புக்கு ஒத்தபடியால், இவைகளை யாரும் எதிர் பார்த்திருக்கத்தான் வேண்டும். ஆனால் சிறிது காலத்திற்குமுன், போலீஸ் தடியடிப் பிரயோகம் தாராளமாகக் காட்சி கொடுத்து வந்து, ஊர்வலங்களும், கூட்டங்களும் பலவந்தமாகக் கலைக்கப்பட்டதற்கும், இந்த வரவேற்பு உபசாரங்களுக்கும் மாறுதல் திடீரென்று தோன்றிற்று. எனவே, போலீஸார் இந்த மாறுதலைக் கண்டு மிகவும் மனங் குழைந்து போனார்கள். சிறையிலிருந்து வெளி வந்த நம்மவர்களில் பலருக்கு வெற்றி யுணர்ச்சியும் சிறிதளவு இருந்திருக்கலாம். வெற்றி, மகிழ்ச்சியடையக் காரணமே இல்லை. சிறையில் அடியோடு நசுக்கப்பட்டுப் போயிருந்தாலொழிய,

விடுதலை பெற்று வெளியே வரும்பொழுது மனத்தில் மகிழ்ச்சியும் உண்டாகத்தான் செய்கிறது. பட்டாளம் பட்டாளமாக தேச பக்தர்கள் விடுதலை செய்யப்பட்டபொழுது, இந்த மன எழுச்சி இன்னும் கொஞ்சம் அதிகப்பட்டுவிட்டது. நான் இதை ஏன் அழுத்திச் சொல்லுகிறேன் என்றால், காங்கிரஸினுடைய இந்த "வெற்றி ஆடம்பரத்தை" ஸர்க்கார் சில மாதங்கள் கழித்து காங்கிரஸின் பேரில் குற்றச்சாட்டாக வைத்துப் பழி சுமத்தினார்கள். அரசாங்கத்தாருக்கு எப்பொழுதும் அதிகாரத் தோரணையிலேயே பழக்கம். பொது ஜன சம்மதத்தைப் பெறாமல், இராணுவ அமுலைப் போல ஆட்சி செய்து வந்ததால், தங்களுடைய கீர்த்திக்கு மிகுதியும் பங்கம் ஏற்பட்டதாக நினைத்துக்கொண்டு, அவர்கள் மிகவும் மனதில் கஷ்டப்பட்டுப் போனார்கள். எனக்குத் தெரிந்த வரையிலும், எங்களில் எவரும் இந்த விஷயத்தைப் பற்றி சிந்தனை செய்ததே இல்லை. ஜனங்கள் இவ்வாறு தேச பக்தர்களை உற்சாகத்துடன் வரவேற்றதைக் கண்டு, ஸிம்லா மலையுச்சியில் வசிக்கும் அதிகாரிகளிலிருந்து, பள்ளத்தாக்குகளில் வாழும் சில்லறைச் சிப்பந்திகள் வரையிலும் ஆத்திரத்துடன் மனம் புழுங்கினார்கள் என்று பின்னர் நாங்கள் அறிந்தபொழுது, அது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதிகாரிகளுடைய மனப் புழுக்கத்தை ஆதரித்து எழுதிய பத்திரிகைகள் எல்லாம், அந்தக் "கர்வ பங்க" மனக் கஷ்டத்திலிருந்து இன்னும் விடுதலை அடையவில்லை. அந்த வரவேற்புகள் நடந்தேறி, இப்பொழுது மூன்றரை வருஷங்களுக்கு மேலாகியும், அவர்களுடைய ஆத்திரம் அந்தை நினைத்துக்கொண்டால் தணியவே இல்லை. பெரிய வெற்றி, காங்கிரஸுக்குக் கிடைத்து விட்டது போல காங்கிரஸ்காரர்கள் ஆர்ப்பாட்டம் செய்து விழாக் கொண்டாடினதாக நினைத்து, இன்றைக்கும் அவைகள் திகில் பட்டுக் கிடக்கின்றன. அரசாங்கத்தாருக்கும், அவர்களுடன் தோழமை பூண்ட பத்திரிகைகளுக்கும் இவ்வாறு ஆத்திரம் பொங்கி யெழுந்த காட்சி, எங்களுக்கு வியப்பாகவே இருந்தது. சட்ட மறுப்புப் போராட்ட காலத்திலே அவர்களுடைய நரம்புகள் எந்த நிலைமையி லிருந்ததென்றும், எத்தனை தினுசான உணர்ச்சிகளை அவர்கள் அடக்கி வைத்துக்கொள்ள நேர்ந்ததென்றும், இந்த அசட்டு ஆத்திரத்திலிருந்து நன்றாக வெளித் தோன்றிற்று. ஏதோ இரண்டொரு சில்லறைக் காங்கிரஸ்காரர்கள் நடத்திய ஊர்வலங்களாலும், நிகழ்த்திய பிரசங்கங்களாலும் அதிகாரிகள் ஆத்திரப்பட்டு

மனம் தடுமாறிப் போனது, மிகவும் வேடிக்கையாக இருந்தது.

காங்கிரஸ்காரர்களுக்குள்ளே, அதுவும் காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளே பிரிட்டிஷ் அரசாங்கத்தாரைத் தோற்கடித்து விட்டதாகத் துளிகூட எண்ணமே கிடையாது. ஆனால் நம்முடைய ஜனங்கள் செய்த தியாகங்களையும், காண்பித்த தைரியத்தையும் நினைத்து நாங்கள் வெற்றி யுணர்ச்சி கொண்டோம். 1930-ம் ஆண்டில் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளால், நாங்கள் சிறிது கர்வமடைந்தோம். எங்களைப்பற்றி எங்கள் மனதிலேயே உயர்வான எண்ணத்தை அது உண்டாக்கிற்று. நாங்கள் தன்னம்பிக்கை பெற்றோம். தாழ்மையான தொண்டன் கூட இதை நினைத்துப் பெருமையுடன், தலைநிமிர்ந்து நடந்தான். தேசம் நடத்திக் காண்பித்த போராட்டத்தினால், உலகத்தின் கவனம் இந்தியாவின்பேரில் பாய்ந்தது. உலக அபிப்பிராயம், பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குச்சள்ளை கொடுத்தது. அதனால் நாங்கள் எங்களுடைய லக்ஷியத்துக்குக் கிட்ட நெருங்கி வந்துவிட்டதாக எண்ணினோம். இப்படியெல்லாம் எண்ணினால், அது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரைத் தோற்கடித்தது போல் ஆகிவிடுமா? உண்மையாகச் சொல்லுமிடத்து, டில்லி ஒப்பந்தத்தால், அரசாங்கத்தாருக்குத் தான் அதிக லாபம் என்று எங்களிற் பலர் எண்ணினார்கள். "நம்முடைய லக்ஷியம் இன்னும் கிட்ட நெருங்கி வந்துவிடவில்லை. மகத்தான கஷ்டங்கள் குறுக்கே நிற்கின்றன. இன்னும் எத்தனையோ போராட்டங்கள் போராடியாகவேண்டும்" என்று எங்களிற் சிலர் குறிப்பிட்டார்கள். இதைக்கொண்டு டில்லி ஒப்பந்தத்துக்கு மீறிய மனப்பான்மையைக் காண்பித்து, மீண்டும் போரைத் துவக்க நாங்கள் ஏற்பாடு செய்கிறோமென்று அரசாங்கத்தாரின் நண்பர்கள் எங்கள்பேரில் குற்றம் சாட்டினார்கள்.

ஐக்கிய மாகாணங்களில் நாங்கள் இப்பொழுது கவனிக்க வேண்டிவந்தது, குடியானவர்கள் சம்பந்தமான பிரச்னையாகும். கூடுமானவரையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் இப்பொழுது எங்களுடைய நோக்கமாக இருந்தது. எனவே நாங்கள் உடனே, ஐக்கிய மாகாண அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டோம். சென்ற பன்னிரண்டு வருடங்களாக காங்கிரஸ்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே

கடிதப் போக்கு வரத்து கிடையாது. இப்பொழுதோர் சில சம்பந்தமான பிரச்னையைப்பற்றி அதிகாரிகளுடன் கலந்து பேசுதவற்காக நான் பெரிய அதிகாரிகளில் சிலரைப் போய் பேட்டி கண்டேன். நாங்கள் இந்த விஷயமாக நீண்ட கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொண்டோம். எங்களுடைய மாகாணக் காங்கிரஸ் கமிட்டி எங்களில் முதன்மையா யிருப்ப வர்களில் ஒருவரான கோவிந்த வல்லப பந்த் அவர்களை, எங் களுக்கும் மாகாண அரசாங்கத்துக்கு மிடையே தூது செல் லும் அதிகாரியாக நியமித்தது. அரசாங்கத்தார் விவசாயி களின் நெருக்கடி நிலைமையையும், தானியங்களின் விலை வீழ்ச்சியையும், சாதாரணக் குடியானவனிடமிருந்து கேட்கப் பட்ட வரியை கொடுக்க இயலாத நிலையிலிருப்பதையும் ஒப்புக் கொண்டனர். எனவே, வரியில் எவ்வளவு தள்ளிக் கொடுக்க வேண்டும் என்பது தான் கேள்வி. இதிலே தாராள நோக்கம் கொண்டு தாங்களே காரியம் செய்யவேண்டிய பொறுப்பு மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும். வழக்கமாக அர சாங்கத்தார் ஜமீன்தார்களையும் நிலச்சுவான்தார்களையும் கலந்து பேசிக்கொள்வதைத் தவிர, ஏழை விவசாயிகளிடம் நேரே பேசியதில்லை. அரசாங்கத்தாரிடமிருந்து வரிவஜா லாபத்தைப்பெற்ற ஜமீன்தார்கள், பின்னர் விவசாயிகளுக்குக் கொஞ்சம் தள்ளிக் கொடுப்பார்கள். அரசாங்கத்தார் தங்க ளுக்கு யாதொரு வகையிலும் வரியைத் தள்ளிக் கொடுக்காத வரையில், ஜமீன்தார்கள் குடியானவர்களுக்கு எவ்விதப் பரி காரமும் செய்துகொடுக்க இணங்குவதில்லை. ஆகவே, இது சம்பந்தமாக முடிவு செய்யவேண்டியவர்கள் அரசாங்கத்தார் தான்.

வரி கொடா இயக்கம் வாபஸ் வாங்கப் பெற்றதென்றும், தங்களால் இயன்ற அளவு வரியைச் செலுத்த வேண்டுமென் றும் விவசாயிகளுக்கு மாகாண காங்கிரஸ் கமிட்டி தாக் கீது அனுப்பிவிட்டது. மாகாண காங்கிரஸ் கமிட்டி விவ சாயிகளின் பிரதிநிதி என்ற முறையில், வரியை அதிக மாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொண்டது. அரசாங்கத்தார் இதை நீண்டகாலம் கவனிக்கவே இல்லை. யாதொரு பரிகாரமும் செய்யவில்லை. மாகாணத்தின் கவர்னரான ஸர் மால்கம் ஹெயிலி அவர்கள் ரஜாவிலோ அல்லது வேறு அலுவலிலோ சென்றிருந்தமை யால், வரிவஜா விஷயத்தில் விரைவில் அரசாங்கத்தார் எது

வும் செய்ய முடியாமல் போயிருக்கலாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அதிகமாகக் கால்தாமதம் செய்யாமல் அரசாங்கத்தார் ஏதாவது பரிகாரத்தைச் செய்து கொடுத்திருக்க வேண்டும். ஸர் மால்கம் ஹெய்லி கோடையில் திரும்பிவரும் வரையில், இந்த விஷயத்தை அரசாங்கத்தார் அசட்டைசெய்து விட்டார்கள். இந்தத் தவக்கத்தாலும் தடுமாற்றத்தாலும் நிலைமை கேவலமாகிப்போய், விவசாயிகள் ஊர்ப்பட்ட கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. டில்லி ஒப்பந்தத்துக்குப் பிறகு, என்னுடைய உடம்பு கொஞ்சம் கெட்டுப்போய் விட்டது. சிறையிலேயே நான் சுகமில்லாமல் இருந்தேன். அதோடு, தகப்பனார் இறந்த அதிர்ச்சி சேர்ந்துகொண்டது. டில்லியில் ராஜிப் பேச்சு நடைபெறும் பொழுது, அதிகமான வேலை செய்யவேண்டியதாயிற்று. இவைகளை யெல்லாம் என்னுடைய உடம்பு தாங்க முடியவில்லை. கராச்சி காங்கிரசுக்கு முன்னே கொஞ்சம் குணமடைந்து விட்டேன்.

கராச்சி நகரம், இந்தியாவின் வடமேற்கி லிருக்கின்றது. போக்கு வரத்து சௌகரியங்கள் அமைந்ததல்ல. அதற்கும் நாட்டின் மற்றைய பகுதிகளுக்கும் நடுவே, பாலைவனம் பரந்து கிடக்கின்றது. என்றாலும், இந்தக் காங்கிரசுக்கு நாட்டின் வெகு தூரங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். அப்பொழுது தேசத்தாரின் மனப்பான்மைக்கு இந்தக் கூட்டம் அறிகுறியாகத் திகழ்ந்தது. இந்தியாவிலே தேசீய இயக்கத்தின் வலு அதிகரித்து வருவதைக்கண்டு, நாட்டிலே அமைதியான மனப்பூரிப்பு ஒன்று எழுந்து விட்டது. காங்கிரஸ் காண்பித்த அரிய தியாகத்தாலும், திட்டமான கட்டுப்பாட்டினாலும்; நாட்டார் காங்கிரசின் பேரில் ஒருவகைக் கர்வம் கொண்டார்கள். நாட்டு மக்களிடம் ஒருவிதத் தன்னம்பிக்கையும் அடக்கமான உற்சாகமும் காணப்பட்டன. இது ஒரு புறமிருக்க, எதிர்காலத்தில் தீர்க்கவேண்டிய மகத்தான பிரச்னைகளும் விபத்துகளும் எங்கள் கண் முன்னே தோன்றின. எங்களுடைய வார்த்தைகளும் தீர்மானங்களும், வெறும் வார்த்தைகள் அல்ல; வெறும் தீர்மானங்கள் அல்ல. அதன்படி நாடுநடக்கத் தயாராயிருக்கிறது என்பது தெளிவாகிவிட்டது. எனவே யோசனையின்றி எதையும் பேச முடியாது; எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றி வைக்கலாகாது. அதனால் எங்களுடைய பொறுப்பும் மிகுதியும் அதிகப்பட்டுப் போய்விட்டது. நாட்டில் பெரும்

பான்மையோர் டில்லி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டாலும், அதனிடம் ஜனங்களுக்கு நம்பிக்கையும் பிரியமும் உண்டாக வில்லை. பலவீனமான பல நிலைமைகளுக்கு அது நாட்டை இழுத்துக் கொண்டுபோய், நாட்டாரின் பூரண விடுதலை லட்சியத்தைக் குறைத்து விடுமோ வென்று பயந்தார்கள். ஒப்பந்தத்திற்கு முன் நாட்டில் பிரச்னைகளைப்பற்றி மனத்தெளிவு இருந்தது. அத்தகைய தெளிவு இனிமேல் இராதோ என்று கவலைப் பட்டார்கள். காங்கிரஸ் கூடுவதற்கு முன், பகத்சிங் தூக்கி விடப்பட்டதைப் பற்றி ஜனங்கள் மிகுதியும் ஆத்திரப் பட்டார்கள். வட இந்தியாவிலே, இந்த ஆத்திரம் வெகுவாகப் பரவி நின்றது. கராச்சி நகரம் வடக்கே இருந்தமையால், பாஞ்சாலத்தி லிருந்து ஏராளமான ஜனங்கள் (கராச்சி) காங்கிரசுக்கு வந்திருந்தார்கள்.

கராச்சி காங்கிரஸ், காந்திஜீக்கு தனிப்பெருமையை அளித்த சம்பவமாகும். வேறு எந்தக் காங்கிரசில் இருந்ததைக் காட்டிலும், கராச்சி காங்கிரசில் காந்திஜீக்கு ஏராளமான மதிப்பு இருந்தது. காங்கிரசின் தலைவர் சர்தார் வல்லபாய் படேல். குஜராத்தில், பர்டோலி சத்தியாக்கிரகப் போரையும் ஏனைய போராட்டங்களையும் வெற்றியுடன் நடத்தியவர், என்ற கீர்த்தி வாய்ந்தவர். இந்தியாவிலிருக்கும் அரும்பெரும் கர்ம வீரர்களில் அவர் ஒருவர். என்றாலும் கராச்சி காங்கிரசில் மகாத்மா முடிசூடா மன்னராக விளங்கினார். அப்துல் கபூர் கான் தலைமையில் எல்லைப்புற மாகாணத்திலிருந்து செஞ்சட்டை "வீரர் பட்டாளம்" காங்கிரசுக்கு வந்திருந்தது. இந்த வீரர்களைக்கண்டு, ஜனங்கள் ஆனந்தப் பட்டார்கள். அவர்கள் எங்கு சென்றாலும் ஆரவாரம்! 1930-ம் வரு ஏப்ரல் மாதத்திலிருந்து அதிகாரிகள் எவ்வளவோ ஆத்திரம் மூட்டினாலும்; செஞ்சட்டை வீரர்கள் மிகவும் அமைதியுடனும், தைரியத்துடனும் நடந்துகொண்டார்கள். இதனால், இந்தியா முழுதும் அவர்களைப் பாராட்டிற்று. செஞ்சட்டைகள் என்ற பெயரினால், அவர்கள் சமதர்மிகளோ என்று சிலர் தவறாக நினைத்துக்கொண்டார்கள். உண்மையிலேயே இவர்களுக்கு "குதாய் கித்மத்கார்" என்று பெயர். இந்த அமைப்பு முதலில் தனி ஸ்தாபனமாகக் காங்கிரஸோடு சேர்ந்து உழைத்தது. பின்னர் 1931-ம் ஆண்டில், அது காங்கிரஸோடு இணைக்கப் பெற்ற கிளை ஸ்தாபனமாக ஆயிற்று. சிவப்பு அங்கிகளை அவர்கள் அணிந்துகொண்டிருந்தமையால், அவர்களுக்கு

"செஞ்சட்டைகள்" என்று பெயருண்டாயிற்று. பொருளாதாரத் துறையில் இவர்களுக்கு யாதொரு திட்டமும் கிடையாது. இவர்களுடைய நோக்கம் தேசீயமே. ஆசாரத் திருத்தத்திலும் இவர்கள் சிரத்தை காண்பித்தார்கள்.

கராச்சி காங்கிரசின் முக்கியமான தீர்மானம், டில்லி ஒப்பந்தத்தையும் வட்டமேஜை மகாநாட்டையும் பற்றியது. அந்தத் தீர்மானம் காரியக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பெற்றதால், நான் அதை ஏற்றுக்கொண்டேன். தீர்மானத்தைப் பகிரங்கக் காங்கிரசில் பிரேரணை செய்ய வேண்டுமென்று என்னைக் காந்திஜீ கேட்டபொழுது நான் தயங்கினேன். எனக்கு மனம் வரவே இல்லை. பிரேரணை செய்வதற்கு முதலிலே மறுத்துவிட்டேன். பிறகு இவ்வாறு செய்வது பலவீனமான நிலைமை யென்றும், அது யாருக்கும் திருப்தியை உண்டாக்காதென்றும் எனக்குத் தோன்றிற்று. ஒன்று, அதை நான் ஆதரிக்க வேண்டும் அல்லது எதிர்க்கவேண்டும். புனை சுருட்டு செய்வது தகாது. இந்த விஷயத்தில் என்னுடைய கருத்து என்ன, என்று ஊகிக்கும்படியாக ஜனங்களை விட்டு விடவும் கூடாது. கடைசி நிமிஷத்தில், பகிரங்கக் காங்கிரசில் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்குச் சிறிது முன்னால், பிரேரணையை ஆதரிப்பதாகத் தீர்மானம் கொண்டேன். என்னுடைய உணர்ச்சிகள் என்ன வென்றும், இந்தத் தீர்மானத்தை நான் ஏன் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டேன் என்றும், ஜனங்கள் அதை ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற காரணத்தை விளக்கியும் காண்பிக்க காங்கிரசில் நான் பெரு முயற்சி செய்தேன். நான் செய்த பிரசங்கம் அதிக முன்யோசனை யின்றி என் உள்ளத்தின் உணர்ச்சி மேலீட்டால் எழும்பியது. எனவே, பிரசங்கத்தில் அலங்காரமும் கோர்த்தியான வாக்கியமும் இல்லாமலிருந்தும் நல்ல பிரசங்கமாக அமைந்து விட்டது. நான் யோசித்துச் செய்த பல பிரசங்கங்களைவிட இது மிகவும் உயர்ந்ததாக விருந்தது.

வேறு சில தீர்மானங்களைப் பற்றியும், காங்கிரசில் பேசினேன். பகத்சிங்கைப்பற்றிய தீர்மானம், மூலாதாரக் கொள்கைகளையும் பொருளாதாரத் திட்டத்தையும் பற்றிய தீர்மானம்; இவைகளை ஆதரித்தும் பேசினேன். பின் சொன்ன தீர்மானத்தில் எனக்கு அதிக அக்கறை இருந்தது. தீர்மானத்தில் அடங்கி இருந்த விஷயத்தால், எனக்கு அதனிடம் பிரியம் உண்டாயிற்று என்பதோடு, காங்கிரஸ்

சபைக்கே இந்தத் தீர்மானத்தால் புதியதொரு நோக்கு ஏற்படும் என்ற காரணத்தால், இந்தத் தீர்மானத்தில் எனக்கு அதிக சிரத்தை ஏற்பட்டது. இது வரையிலும் காங்கிரசின் நோக்கம் சுத்தமான தேசீய வழிகளிலே தான் சென்று கொண்டிருந்தது. பொதுவாக, குடிசைத் தொழில்களையும் சுதேசியத்தையும் காங்கிரஸ் ஆதரித்தது என்பதைத் தவிர, பொருளாதாரப் பிரச்னைகளில் கவனம் செலுத்தவில்லை. கராச்சித் தீர்மானத்தில் காங்கிரஸ் புதிதாக ஒரு அடி முன்னே எடுத்துவைத்தது. அது மிகச்சிறிய அடியாயிருந்தாலும், அபேதவாத திசையில் சென்றது. நாட்டின் மூலாதாரமான தொழில்களையும், இலாக்காக்களையும் பொது உடைமையாக்கவேண்டுமென்பது அந்தத் தீர்மானத்தின் அடிப்படைக் கருத்தாகும். ஏழைகளின் சுமையைக் குறைத்து, பணக்காரர்களின் பேரில் அதைப்போடுவதற்காக் தீர்மானத்தில் பலவிதத் திட்டங்கள் குறிப்பிடப்பட்டன. இந்தத் தீர்மானம் வெகு மிதமான தீர்மானம். ஆனால், இந்திய அரசாங்கத்தை நடத்திவரும் பெரிய மனிதர்களின் உள்ளத்தில் கவலையை உண்டாக்கிக் கடுமையாக யோசிக்கும்படி செய்துவிட்டது. கராச்சிக்கு ரஷியப் போல்ஷ்விக்கர்கள் பணத்தையனுப்பி, காங்கிரஸ் தலைவர்களின் மனதை மாற்றிவிட்டார்கள் என்று தங்களுக்கு சகஜமாயுள்ளபுத்தியை சூக்ஷமத்துடன் அதிகாரிகள் ஊகித்துக்கொண்டார்கள். அரசியல் படுதாவுக்குள் இருப்பவர்கள் இவ்வதிகாரிகள். வெளியுலகத்துக்கும் அவர்களுக்கும் தொடர்பு கிடையாது. அவர்களைச் சுற்றி இரகசிய மயம். எனவே, கற்பனைக்கதைகளையும் ரகசிய வரலாறுகளையும் கேட்க, அவர்களுக்கு ஆவலதிகம். இந்தக் கதைகள், சிறு சிறு பாகங்களாக, அவர்களுடைய செல்லப்பத்திரிகைகள் மூலமாக பெரிய இரகசியங்கள் போல் வெளியிடப்பட்டன. திரையைத் தூக்கிப்பார்த்தால் இன்னும் அதிகமாகக் காணலாம், என்று ஜாடையாகக் குறிப்பிடவும் செய்தார்கள். மூலாதாரக் கொள்கைகளைக் கொண்ட கராச்சி தீர்மானத்தைப் பற்றி பல சமயங்களில் மேற்சொன்ன வழியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி குறிப்பிட்டிருப்பது அரசாங்கத்தாரின் கருத்து, என்று தான் என்னால் முடிவு கட்டிக்கொள்ள முடியும். கதை சுருக்கமாக இதுதான். யாரோ மூடுமந்திரப் பேர்வழி ஒருவர், (அவர் தீவிர சமதர்மக் கொள்கை உடையவராம்) இந்தத்தீர்மானத்தையோ அதன் பெரும் பகுதியையோ வரைந்தாராம்! அவர், கராச்சியில் இதை

என்னிடம் கொடுத்தாராம். "தாங்கள் இந்தத் தீர்மானத்தை யேற்றுக்கொள்கிறீர்களா அல்லது நான் டில்லி ஒப்பந்தத்தை எதிர்க்கப்போகிறேன்; அப்பொழுது என்ன செய்வீர்கள்? என்று நான் காந்திஜியைப் பயமுறுத்தினேனும்! அழுதபிள்ளைக்குப் பழத்தைக் காண்பித்து சமாதானப் படுத்துவது போல் காந்திஜி எனக்காக இதை யேற்றுக்கொண்டாராம்! அதிக வேலையால் அலுத்துப்போன காங்கிரசின் பேரிலும் விஷயாலோசனைக் கமிட்டியின் பேரிலும் இந்தத் தீர்மானத்தைக் காங்கிரஸ் முடிகிற நாளில் காந்திஜி பொத்தென்று போட்டு கட்டாயப்படுத்தி அதன் சம்மதத்தைப் பெற்றாராம்!

மூடுமந்திரப் பேர்வழியின் பெயர் இது வரையில் நேர் முகமாகச் சொல்லப்படவில்லை. ஆனால் பல குறிப்புகளைக் கொண்டு யாரைச் சொல்கிறார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ளலாம். எனக்கு மூடுமந்திர வழி தெரியாது. விஷயங்களை வளைத்து வளைத்துப் பேசும் வழக்கமும் என்னிடம் இல்லை. ஆகவே, மூடுமந்திரப் பேர்வழி எம். என். ராய் அவர்களாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லிவிடுகிறேன். எம். என். ராய் அவர்களோ; அல்லது சமதர்மக் கொள்கையில் பற்றுக் கொண்ட வேறு எவரோ இந்த சாதுவான கராச்சி தீர்மானத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை ஸிம்லா, டில்லி குட்டித் தெய்வங்கள் அறிய ஆவல் கொண்டார்களானால், அப்பொழுது அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்வார்கள். சமதர்மி எவனும் இந்தத் தீர்மானத்தை ஏளனம் செய்யாமலிருக்க முடியாது. இந்தத் தீர்மானத்தில் சீர்திருத்த மனப்பான்மை காணப்படுகிறதேயன்றி புரட்சி மனப்பான்மை யில்லை. ஜனசமூகத்தின் நடுத்தர வகுப்பினர்களின் வேலை இது, என்று அவர்கள் கேலி செய்வார்கள். காந்திஜீ சம்பந்தப்பட்ட வரையிலும் சென்ற 17 ஆண்டுகளாக நான் அவருடன் நெருங்கிப் பழகும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். அவரை நான் பயமுறுத்தவும் முடியாது; அவரிடம் நான் பேரம் செய்யவும் முடியாது. நான் பயமுறுத்தினேன் அல்லது பேரம் செய்தேன் என்று குறிப்பிடுவது வெட்கக்கேடானதாகும். ஒருவர் மற்றவருக்கு இணங்கிக் கொடுத்துக்கொள்வோம். சில விஷயங்களில் அபிப்பிராய பேதத்தால் நாங்கள் இருவரும் வெவ்வேறு பாதையில் செல்ல நேரலாம். ஆனால் சந்தைக் கடை பேரம்

எங்களால் செய்யவே முடியாது. எங்களிருவருக்குள்ளும் அத்தகைய உறவு இல்லை.

இத்தகைய தீர்மானம் ஒன்றைக் காங்கிரஸில் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று எண்ணியது எனது மிகப் பழைய யோசனையாகும். சில ஆண்டுகளாக ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டி இது சம்பந்தமாகக் கிளர்ச்சி செய்து, அபேதவாதத் தீர்மானம் ஒன்றை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய முயன்றுகொண்டு வந்தது. 1929-ம் ஆண்டில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியை அபேதவாதக் கொள்கையை ஓரளவு ஏற்றுக்கொள்ளும்படியாகவும் செய்தது. பின்னர் சட்ட மறுப்பு துவங்கிற்று. 1931-ம் வருடம் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் டில்லியில் காந்திஜீயோடு பேசிய காலை நான் இந்த விஷயத்தை அவருக்குக் குறிப்பிட்டேன். பொருளாதார விஷயங்களைப் பற்றி காங்கிரஸில் தீர்மானமொன்று தேவைதான் என்று என் யோசனையை அவர் வரவேற்றார். ஒரு தீர்மானத்தை வரைந்து, அதைத் தம்மிடம் காண்பிக்கும்படியாகவும், கராச்சியில் இந்த விஷயத்தைக் கொண்டு வரும்படியாகவும் அவர் எனக்கு சொல்லியிருந்தார். நான் அவ்வாறே கராச்சியில் செய்தேன். அவர் நகலில் பல மாறுதல்களைச் செய்தார். பல யோசனைகளைச் சொன்னார். இந்தத் தீர்மானத்தைப் பற்றி யோசிக்கும்படியாக காரியக் கமிட்டியை வேண்டிக்கொள்ளு முன்னர், தீர்மானத்தின் வாசகத்தைப் பற்றி நாங்கள் இருவரும் ஒத்துப் போக வேண்டுமென்று அவர் விருப்பப்பட்டார். நான் பல நகல்கள் தயாரித்தேன். இதனால் இரண்டொரு நாள் சுணக்கம் ஏற்பட்டது. மேலும் நாங்கள் வேறு விஷயங்களைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. கடைசியாக தீர்மானத்தின் வாசகத்தைப் பற்றி, நாங்கள் இருவரும் ஒத்துப்போனோம். முதலில் காரியக் கமிட்டியின் முன்னர் இந்தத் தீர்மானம் வைக்கப்பட்டது. பின்னர் விஷயாலோசனைக் கமிட்டியில் விவாதிக்கப்பட்டது. இது ஒரு நூதனமான சங்கதி என்பது உண்மைதான். விஷயாலோசனைக் கமிட்டியில் இதைப் பற்றிப் பலர் வியப்படைந்தார்கள்; என்றாலும் காங்கிரஸிலும், கமிட்டியிலும் இந்தத் தீர்மானம் எளிதிலே நிறைவேறிற்று. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த துறைகளில், இதை எவ்வாறு விரிவுபடுத்தலாம் என்பதைப்பற்றி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி யோசனை செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை நகல் உருவமாக நான் வரைந்து கொண்டிருக்கையில், வழக்கமாக என்னுடைய கூடாரத்துக்குவரும் அன்பர்களில் சிலரை நான் இதைப்பற்றிச் சில சமயங்களில் கலந்துகொண்டதுண்டு. ஆனால், இந்தத் தீர்மானத்துக்கும் எம். என். ராய் அவர்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அவர் இதை ஏற்கமாட்டாரென்றும் இதைப் பார்த்துச் சிரிப்பாரென்றும் எனக்கு நன்றாகத் தெரியும். நான் கராச்சிக்கு வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் அலகாபாத்தில் எம். என். ராயைச் சந்தித்தேன். ஒரு நாள் மாலையில் அவர் திடீரென்று எங்கள் வீட்டில் பிரவேசம் செய்தார். அவர் இந்தியாவிலிருக்கிற சங்கதியே எனக்குத் தெரியாது. 1927-ம் ஆண்டில் அவரை நான் மாஸ்கோவில் பார்த்திருக்கிறேன். ஆகையால் உடனே அடையாளம் கண்டுகொண்டேன். அவர் என்னை கராச்சியிலும் பார்த்தார். ஆனால் ஐந்து நிமிஷத்துக் கதிகமாக அவர் என்கூட இருக்கவில்லை. சென்ற சில வருஷங்களாக, அரசியலில் என்னைக் கண்டித்து, ராய் வெகுவாக எழுதியிருக்கிறார். அடிக்கடி எனக்கு அவர் மனவருத்தத்தையும் உண்டாக்கியிருக்கிறார். அவருக்கும் எனக்குமிடையே, ஏராளமாக அபிப்பிராயபேதமிருந்தது. இருந்தாலும், அவர் என் உள்ளத்தைக் கவர்ந்தார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு தொந்தரவுபடுகையில், என்னால் முடிந்தவரை அவருக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று நான் விருப்பங்கொண்டேன். அவர் தம்முடைய அசாதாரணமான புத்தி விசேஷத்தால் என் மனதைக் கவர்ந்தார். மேலும் அவரை எல்லோரும் கைவிட்டு விட்டார்கள். அவர் தனியாக நின்று தவிக்கின்றார் என்ற காரணத்தினாலும் எனக்கு அவரிடம் ஆதரவு உண்டாயிற்று. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவரைப் பின்தொடர்ந்து, வேட்டையாடப் பார்த்தது இயல்புதான். இந்திய தேசியவாதிகளுக்கு அவரிடம் சிரத்தை இல்லை. இந்தியாவில் சமதர்மிகள் என்று சொல்லிக்கொள்ளுவோர்களும் தங்கள் கட்சிக்கு ராய் ஒரு துரோகி என்று வெறுத்தார்கள். அவர் பல ஆண்டுகள் ருஷ்யாவில் வசித்து சமதர்மப் புரட்சிக் கமிட்டியோடு, நெருக்கமாக ஒத்துழைத்து, பிறகு அவர்களிடமிருந்து பிரிய நேரிட்டது என்பது எனக்குத் தெரியும். ஏன் இவ்வாறு நேர்ந்தது என்பது எனக்கு அப்பொழுது தெரியாது. வைதிகச் சமதர்மிகளுக்கும் அவருக்கும் எந்தெந்த வகையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன என்

றும், அவருடைய தற்போதைய கருத்துகள் யாவை என்றும் இப்பொழுதும் எனக்குத் தெளிவாகத் தெரியாது. ஆனால், இப்பேர்ப்பட்ட பெரிய மனிதரை எல்லோரும் கைவிட்ட தைக் குறித்து, எனக்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று. என்னுடைய வழக்கமான பழக்கத்துக்கு விரோதமாக அவருக்காக டிபென்ஸ் கமிட்டியில் நான் சேர்ந்துகொண்டேன். 1931 கோடையிலிருந்து மூன்று வருஷ காலத்துக்கதிகமாக அவர் இதுவரை சிறையிலிருந்து வருகிறார். உடம்பு குணமில்லை. அநேகமாக தனிக்காவலில் இருந்து வருகிறார் என்று சொல்லவேண்டும். கராச்சி காங்கிரசில், கடைசியாகக் காரியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காரியக் கமிட்டியைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனால் அந்த வருஷத்துத் தலைவரின் யோசனைப்படி காந்திஜியையும் வேறு சிலரையும் கலந்துகொண்டு காரியக்கமிட்டி அங்கத்தினர்களை அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி ஏற்றுக்கொள்வது என்ற சம்பிரதாயம் ஏற்பட்டிருந்தது. கராச்சியில் காரியக்கமிட்டித் தேர்தலில், நாங்கள் அப்பொழுது எதிர்பாராத விபரீதமொன்று விளைந்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களாயிருந்த சில முஸ்லீம் அன்பர்கள் காரியக்கமிட்டியில் சேர்க்கப்பட்ட ஒரு முஸ்லீமைப்பற்றி ஆக்ஷேபித்தார்கள். தங்கள் கூட்டத்திலிருந்து ஒருவரை நியமிக்கவில்லை யென்பதைக்கொண்டு, அவர்கள் மனம் வருந்தியிருக்கலாம். காரியக்கமிட்டியில் அங்கத்தினர்கள் பதினைந்துபேர். இந்தக்கமிட்டியில் எல்லாவித கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்டு புகுத்துவதென்பது சாத்தியப்படாத விஷயமாகும். ஆனால், பாஞ்சாலத்திலே இருந்த கட்சித் தகராறினால் காரியக் கமிட்டித்தேர்தல் ஆட்சேபிக்கப்பட்டதென்ற உண்மையான காரணம் பின்னால் தெரிய வந்தது. இதன் பலனாக பாஞ்சாலத்தில் செல்வாக்குப் படைத்த முஸ்லீம் காங்கிரஸ் ஊழியர்களிற் பலர், அஹ்ரார் கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். எனவே, சாதாரண முஸ்லீம்களும் மிகுதியும் அந்தக் கட்சியில் சேரத் தலைப்பட்டார்கள்.

இந்த முஸ்லீம்கள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கும் முஸ்லீம் பொது ஜனங்களுக்கும் சிலவகையில் தொடர்பு உண்டு. எனவே இந்தக்கட்சி வலுவான அமைப்பாகப் போய்விட்டது. தனவந்தர்களாகச் சேர்ந்துகொண்டு

அமைத்த முஸ்லீம் வகுப்புவாதச் சங்கங்களைக் காட்டிலும் அஹ்ரார் சங்கம் வலுப்பெற்றது. ஆனால் அஹ்ரார் கட்சியாரும் இறுதியில் வகுப்புவாதத்தில் போய்ச் சேர்ந்துகொண்டார்கள். இருந்தாலும் அந்தக்கட்சியாருக்கு முஸ்லீம் பொதுஜனங்களோடு தொடர்பு இருந்ததினால் கொஞ்சம் உயிர் இருந்தது. பொருளாதாரத்துறையிலும் அவர்கள் சிறிதளவு விசால நோக்குடன் இருந்தார்கள். இந்திய சமஸ்தானங்களில் முஸ்லீம்கள் கிளர்ச்சி செய்ததில், அஹ்ரார் கட்சியார் தூண்டுதலா யிருந்தார்கள். முக்கியமாக காஷ்மீர் சமஸ்தானத்தில் நடைபெற்ற கிளர்ச்சியில், அவர்கள் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். காஷ்மீரத்தில் வகுப்புவாதத் தொல்லைகளும் பொருளாதாரத் தொல்லைகளும் விநோதமாகப் பின்னிக்கொண்டு கிடந்தன. காங்கிரஸிலிருந்து அஹ்ரார் கட்சித் தலைவர்கள் சிலர் விலகிக்கொண்டது, பாஞ்சாலத்தில் காங்கிரசுக்கு மிகுந்த நஷ்டமாகும். ஆனால் இதைப்பற்றி எங்களுக்கு கராச்சியில் தெரியவில்லை. சிறிது சிறிதாகத்தான் உணர நேர்ந்தது. காரியக்கமிட்டித் தேர்தலால், இந்தப் பிரிவு ஏற்படவில்லை. இந்தத்தேர்தல் ஒரு சாக்காக இருந்தது. ஆனால் உண்மையான காரணங்கள் ஆழத்தில் பதிந்து கிடந்தன.

நாங்கள் எல்லோரும் கராச்சியிலிருக்கையில், கான்பூரில் நேர்ந்த ஹிந்து-முஸ்லீம் கலகத்தைப்பற்றிக் கேள்விப்பட்டோம். கணேச சங்கரவித்யார்த்தி அவர்கள் பொதுஜனங்களுக்கு ஒத்தாசை செய்வதற்காகப் போன இடத்தில், வெறிபிடித்த பலர் அவரைக் கொன்றுவிட்டதாகப் பின்னர் கேள்விப்பட்டோம். இந்த பயங்கரமான, மிருகத்தன்மை வாய்ந்த கலகங்கள் மிகவும் கேவலமானவை. அந்தக் கேவலத்தை கணேஷ் அவர்களின் மரணம் தெளிவாக உணர்த்தியதுபோல வேறு எதுவும் இதுவரையிலும் உணர்த்தியதே இல்லை. கணேச சங்கரவித்யார்த்தி காங்கிரஸ் கட்சியில் நின்று, அருமையாக உழைத்தவரென்று ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தெரியும். அவர் தீரர்; யோக்கியர்; தீர்க்கதரிசனம் படைத்தவர்; அருமையான யோசனை சொல்லக்கூடியவர்; ஒருபொழுதும் மனம் தளராதவர்; அமைதியாக உழைப்பவர்; விளம்பரத்தையும் உத்தியோகப் பதவியையும் ஏளனம் செய்பவர்; அவர், ஐக்கிய மாகாணத்திலிருந்த எங்களுக்கெல்லாம் சிறந்த உயிர்த்தோழர். வாலிபத்தின் ஆர்வத்தினால், தாம் பக்தியுடன் தொண்டு செய்துவந்த கொள்கைக்காக, தமது உயிரை

அவர் விருப்புடன் அர்ப்பணம் செய்தார். அறிவீனர்களின் கைகள் அவரை அடித்துக் கீழே வீழ்த்திவிட்டன. அதனால் கான்பூரும் மாகாணமும் தங்கள் புருஷ ரத்தினங்களில் அருமையான ஒன்றை இழந்து நிற்கின்றன. இந்தச் செய்தி எங்களுக்கு கராச்சியில் கிடைத்தபொழுது ஐக்கிய மாகாணப் பிரதிநிதிகளின் விடுதியில் ஒரே துக்கமயமாயிருந்தது. மாகாணத்தின் கீர்த்தி சென்றுவிட்டதாகத் தோன்றிற்று. இருந்தாலும் தயக்கமின்றி, சாவை எதிர்த்து வென்று கீர்த்தியுடன் மாண்டார் என்பதில் நாங்கள் பெருமை அடைந்தோம்.

# XXXVI

## தெற்கே ஓய்வு

நான் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், வேறி டம்போய் கொஞ்சகாலம் அமைதியாக இருக்கவேண்டுமென் றும் என்னுடைய டாக்டர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். இலங்கையில் ஒருமாத காலம் கழிக்கலாம் என்று நான் தீர் மானித்தேன். இந்தியா விசாலமான நாடுதான். என்ற லும் இந்தியாவிலேயே நான் பிரயாணம் செய்தால், என் மன துக்கு உண்மையான ஓய்வு உண்டாகாது. ஏனெனில், நான் எங்கு சென்றாலும், அங்கே அரசியல் பிரச்னைகளும் அரசி யல் தோழர்களும் என்னை வளைத்துக்கொள்வது நிச்சயம். இந்தியாவுக்கு மிகவும் சமீபத்தில் இருப்பது இலங்கை ஒன்று தான். இலங்கைக்கு நாங்கள் போனோம்.—கமலா, இந்திரா, நான். 1927-ம் ஆண்டில் நாங்கள் ஐரோப்பாவிலிருந்து திரும்பிவந்த பின்னர், இதுதான் எங்களுடைய முதல் விடு முறையாகும். எங்களுடைய மனதிலே அதிகமான சள்ளை யில்லாமல் அமைதியுடன், நானும், மனைவியும், மகளும் சேர்ந்து விடுமுறைப் பிரயாணம் செய்தது இதுதான் முதல் தடவை யாகும். இதன் பின்னர், இத்தகைய அனுபவம் கிடைக்கவில்லை. கிடைக்குமோ என்று சில சமயம் நான் ஆச்சரியப்படுவதுமுண்டு.

என்றாலும், இலங்கையில் எங்களுக்கு அதிகமான ஓய்வு கிடைக்கவில்லை. நூரெலியாவில் நாங்கள் தங்கிய இரண்டு வார காலத்தில், சிறிதளவு ஓய்வு கிடைத்தது என்று சொல்லாம். இலங்கையில் எல்லாவகை ஜனங்களும் எங்களை அன்புடனும் உபசாரத்துடனும் வரவேற்றார்கள். இத்தகைய உபசாரத்தைப் பெறுவது இனிமையாகத்தா னிருந்தது. ஆனால் அடிக்கடி அசௌகரியமாகவும் இருந்தது. நூரெலியாவில், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளிகளும் மற்றவர்களும் தினசரி பல மைல்களுக்கப் பாலிருந்து எங்களைக் காண வருவார்கள். வரும்போது, நேர்த் தியான புஷ்பங்கள், காய்கறிகள், வீட்டு வெண்ணெய், இவை களை அவர்கள் கொண்டுவந்து கொடுப்பார்கள். எங்களால்

சிறிது நேரம்கூட அவர்களோடு கலந்து பேச முடியவில்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு, புன்னகை புரிந்து கொண்டோம். அவர்கள் அருமையாகக் கொண்டுவந்து கொடுத்த பரிசுகளால், எங்களுடைய சிறிய வீடு நிறைந்து போயிற்று. அவர்கள் மிகவும் வறுமையில் ஆழ்ந்தவர்கள்; அவர்கள் எங்களுக்கு அளித்ததை நாங்கள் அநேகமாக விடுதிகளுக்கும் ஆஸ்பத்திரிக்கும் கொடுத்துவிடுவோம். இலங்கையில் பிரபல காட்சிகள் பலவற்றை நாங்கள் போய்ப் பார்த்தோம். புத்த சமயமடங்களையும் செழிப்பான காடுகளையும் சரித்திர சம்பந்தமான இடிந்த கட்டடங்களையும் நாங்கள் பார்த்தோம். அநுராதபுரத்தில் புத்தர் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஒரு பழைய சிலை யொன்று இருந்தது. அதைக்கண்டு நான் ஆனந்தமடைந்தேன். ஒருவருஷம் கழித்து, நான் டேராடூன் சிறையில் இருந்தபொழுது, இலங்கையிலிருந்து நண்பர் ஒருவர் இந்த சிலையின் படமொன்றை எனக்கு அனுப்பி வைத்தார். நான் அதை என்னுடைய சிறையறையில் இருந்த என்னுடைய சிறிய மேஜையின் பேரில் வைத்துக்கொண்டேன். அந்தச் சிலை எனக்கு அருமையான தோழனாகிவிட்டது. புத்தருடைய சிலையில் காணப்பெற்ற உறுதியான, அமைதிகொண்ட உடற்கூறு அமைப்புகள் எனக்கு ஆறுதலை யளித்து, சக்தியைக் கொடுத்து; பல தடவைகளில் என்னுடைய மனத்தளர்ச்சியையும் போக்கி யிருக்கின்றன.

புத்தரிடத்தில் எனக்கு எப்பொழுதுமே அளவு கடந்த பிரேமை. இந்தப் பிரேமையின் காரணத்தை அலசிக் கண்டு பிடிப்பது கஷ்டமானவேலை. ஆனால் அது மத சம்பந்தமான பிரேமையல்ல, புத்த சமயத்தைச்சுற்றி வளர்ந்திருக்கும் கொள்கைகளில் எனக்குச் சிரத்தை கிடையாது. புத்தருடைய மூர்த்தியிலேதான் எனக்குப்பிரேமை. இதைப் போலவே யேசுநாதரின் மூர்த்தியும் என்னைவெகுவாக இழுத்திருக்கிறது. அவர்களுடைய மடங்களில் அநேக புத்த சமய சந்நியாசிகளை நான்சந்தித்தேன். அவர்கள் எங்கிருந்தாலும் எங்கு சென்றாலும் மரியாதை செய்யப் படுகின்றனர். அவர்களுள் யாரைப் பார்த்தாலும், உலகக் கவலையொழிந்து, அமைதியும் சஞ்சலமின்மையும் பெற்றிருப்பதாகத் தோன்றிற்று. அவர்களுடைய முகங்களைக் கண்டால், அதில் புத்தி விசேஷம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய உள்

ளங்களில் கடுமையான போராட்டங்கள் இருப்பதற் கடையாளமாக அவர்களுடைய முகங்களில் யாதொன்றும் தெரியவில்லை. மகா சமுத்திரத்தை நோக்கி அமைதியுடன் ஓடிக்கொண்டிருக்கும் நதியைப்போல், வாழ்க்கை அவர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அவர்களைக் கண்டு, நான் சிறிதளவு பொறாமைப்பட்டேன். அமைதியுடன் இருக்கத் தங்குமிடம் வேண்டும் என்ற ஆசை எனக்குச் சிறிதளவு உண்டாயிற்று. ஆனால் என்னுடைய வாழ்க்கை வேறு விதமானதென்றும், அது போராட்டப் புயல் காற்றினடுவே வாழப்படவேண்டியதென்றும் எனக்கு நன்றாகத் தெரியும். அமைதியுடன் தங்குமிடம் எனக்கு ஒருகாலும் இருக்கமுடியாது. ஏனெனில், வெளியே புயல்காற்று கடுமையாக அடித்துக்கொண்டிருப்பதுபோல, என் உள்ளத்திலும் போராட்டம் வலுவாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒருகால் எனக்கு அமைதியுடன் தங்குமிடம் கிடைத்தாலும், அதனால் எனக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுமா?

சிறிது காலத்துக்கு, இலங்கை வாழ்க்கை இனிப்பாய் இருந்தது. கீழே படுத்துக்கொண்டு நன்றாகக் கனவு காணலாம்போல் இருந்தது. அதன் சீதோஷ்ண நிலைமை ஆறுதலைக் கொடுக்கும். எனக்குள்ளே எனக்குத் தெரியாமல் நுழைந்து கொண்டது. அப்பொழுதிருந்த நிலைமையில் இலங்கை எனக்குப் பொருத்தமாகத் தோன்றிற்று. அந்த தீவின் அழகைக் கண்டு நான் மகிழ்ச்சி நிரம்பிப்போனேன். எங்களுடைய ஒரு மாத விடுமுறை விரைவில் பூர்த்தியாகி விட்டது. மிகுந்த வருத்தத்துடனே தான் நாங்கள் இலங்கையை விட்டுத் திரும்பி வந்தோம். அந்த நாட்டையும் அதன் மக்களையும்பற்றி பல நினைவுகள் எனக்கு இப்பொழுதும் முன்னே வருகின்றன. செய்வதற் கொன்றுமில்லாத சிறையிலே, இந்த நினைவுகள் எனக்கு இனிப்பான தோழர்களாக இருந்தன.

ஒரு சிறு சம்பவம் என் ஞாபகத்தில் இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. அது நேர்ந்தது யாழ்ப்பாணத்துக்குப் பக்கத்திலே என நான் நினைக்கிறேன். ஒரு பள்ளியின் உபாத்திமார்களும் மாணவர்களும் எங்களுடைய மோட்டார் காரை நிறுத்தி, சில உபசார வார்த்தைகளை மொழிந்தார்கள். பையன்களுடைய ஆவல் நிறைந்த முகங்கள் தனியாக என்னுடைய பார்வையில் பட்டன. பிறகு அவர்களில் ஒருவன் என்

னிடம் வந்து, என்னுடைய கைகளைக்குலுக்கி, யாதொரு கேள்வியும் கேளாமல் வாதமும் செய்யாமல் "நான் ஒருகாலும் தளர்ச்சியடையேன்" என்று சொன்னான். அந்த இளமுகத்தின் விழிகள் ஒளிவீசின. பிடிவாதம் நிறைந்து நின்றது. அந்தமுகம் என்னுடைய உள்ளத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது. அவன் யார் என்று எனக்குத் தெரியாது. அவனுக்கும் எனக்கும் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. அவன் தனது வார்த்தையைக் காப்பாற்றி வாழ்க்கையின் கஷ்டமான பிரச்னைகளை எதிர்த்துப் போராடும்பொழுது, தயங்கமாட்டான் என்ற உறுதி என்னிடம் எப்படியோ இருந்துவருகிறது.

இலங்கையிலிருந்து நாங்கள் தென்னிந்தியாவுக்குப் போனோம். முதலில் தெற்குக்கோடி கன்னியாகுமரி முனைக்குச் சென்றோம். அங்கே வியக்கத்தக்க அமைதி நிலவிற்று. பிறகு திருவாங்கூர், கொச்சி மலையாளம், மைசூர், ஹைதராபாத் வழியாக பிரயாணம் செய்தோம். இவைகளில் பெரும்பான்மை சுதேச சமஸ்தானங்கள். சில பாகங்கள் அபிவிருத்தியடைந்த நிலைமையில் இருக்கின்றன. மற்றவை மிகப் பிற்போக்கானவை. திருவாங்கூரும் கொச்சியும், பிரிட்டிஷ் இந்தியாவை விடக் கல்வியில் மிகுதியும் முன்னேற்றமடைந்தவை. மைசூர் தொழிலபிவிருத்தியில் சிறந்ததாகும். ஹைதராபாத் பழையகால முறையில் நடைபெற்று வரும் கர்நாடக அரசாங்கம். நாங்கள் எங்கு சென்றாலும், எங்களுக்கு உற்சாகமான வரவேற்பு கிடைத்தது. வரவேற்பில் ஜனங்களோடு அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். ஆனால் அதிகாரிகளின் உள்ளத்தில் சிறிதளவு கவலை இருந்தது என்று எனக்குத் தென்பட்டது. எங்களுடைய சுற்றுப் பிரயாணத்தினால், ஜனங்கள் ஆபத்தான வழிகளில் சிந்தனை செய்யத் துவக்கி விடுவார்களோ என்று அதிகாரிகள் கலங்கினார்கள். மைசூரிலும் திருவாங்கூரிலும் அரசியல் வேலைக்கு சிறிதளவு சுதந்திரமும் சந்தர்ப்பங்களும் அளிக்கப்பட்டிருக்கிறதாகத் தோன்றிற்று. ஹைதராபாத்தில் இவ்வளவுகூட இல்லை. எனவே எவ்வளவோ உபசாரத்தினிடையில் நான் இருந்தபோதிலும் பிராணவாயு வின்றி மூச்சடைத்துப் போகும்போல எனக்கு உணர்ச்சி ஏற்பட்டது. மைசூரிலும், திருவாங்கூரிலும் ஏற்கனவே அளிக்கப்பெற்றிருந்த சிறிதளவு சுதந்திரம்கூட, அந்த அரசாங்கத்தார்களால் பின்னர் பறிமுதல் செய்யப்பட்டன.

மைசூர் சமஸ்தானத்தில் பங்களூர் நகரில், மிக உயர்ந்த இரும்புத் தூணில் தேசியக் கொடியை ஏராளமான ஜனங்களுக்கிடையே நான் உயர்த்தினேன். நான் பங்களூரை விட்டுச் சென்ற சிறிது காலத்துக்கெல்லாம், இந்தக் கம்பம் துண்டு துண்டாக உடைக்கப்பட்டது. கொடியை உயர்த்துவது குற்றமென்று மைசூர் அரசாங்கத்தார் ஆக்கிவிட்டார்கள். திருவாங்கூரில் இன்றைக்கும் காங்கிரஸ், சட்டம் மீறிய கூட்டமாகக் கருதப்பட்டு வருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திய பின்னரும் காங்கிரஸ் சட்ட வரம்புக்கு உட்பட்ட கூட்டம் என்று கருதப் பெற்றாலும், திருவாங்கூரில் காங்கிரஸுக்கு சாதாரண அங்கத்தினர்களைக்கூடச் சேர்க்க முடியாது. எனவே மைசூரிலும், திருவாங்கூரிலும் அமைதி கொண்ட சாதாரண அரசியல் கிளர்ச்சியையும் நசுக்கி வருகிறார்கள். ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்த வசதிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அந்த சமஸ்தானங்கள் இரண்டும் பின்னே போய்க்கொண்டிருக்கின்றன. ஹைதராபாத்திலோ பின்னே போவதற்கும், வசதிகளை வாபஸ் வாங்கிக்கொள்வதற்கும் தேவை ஏற்படவே இல்லை. ஏனெனில் அது ஒருபொழுதும் முன்னேறிச் சென்றதுமில்லை; எத்தகைய வசதியையும் கொடுத்ததுமில்லை. ஹைதராபாத்தில் அரசியல் கூட்டங்கள் என்பதே தெரியாது. மத ஆசார திருத்த சம்பந்தமான கூட்டங்களையும் அரசாங்கத்தார் சந்தேகிக்கிறார்கள். கூட்டங்களை நடத்த தனி அனுமதி பெற வேண்டும். ஹைதராபாத்தில் உண்மையான பத்திரிகைகளே இல்லை. வெளியிலிருந்து "கிளர்ச்சி" விஷப் பூச்சிகள் வராமல் தடுப்பதற்காக, இந்தியாவின் வேறு பகுதிகளில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளில் பல ஹைதராபாத்தில் நுழைய முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கின்றன. மிதவாதப் பத்திரிகைகள்கூட தடுக்கப்பட்டிருக்கின்றன. தடை அவ்வளவு கடுமை.

கொச்சியிலோ, "வெள்ளை யூதர்கள்" என்று சொல்லப்படும் கூட்டத்தார் வசிக்குமிடத்திற்கு போயிருந்தோம். அவர் தொழுகையிற் கலந்து கொண்டோம். இந்தச் சிறு கூட்டம் மிகுதியும் பழமையும் தனித்தன்மையும் கொண்டதாகும். ஆனால், தொகையில் குறைந்துகொண்டே வருகிறது. கொச்சியில் அவர்கள் வசிக்குமிடம், பழைய ஜெருஸலத்தைப் போல இருக்கிறதென்று எங்களிடம் சொன்னார்கள். அதனிடம் புரா

தனத் தோற்றம் இருக்கிறது என்பது நிச்சயம். மலையாளத்தில் சிரியன் கிறிஸ்தவர்கள் சிறப்பாக வாசம் செய்யும் பட்டினங்கள் சிலவற்றுக்கு நாங்கள் சென்றோம். கிறிஸ்துவுக்கு பின் முதல் நூற்றாண்டிலேயே, கிறிஸ்து மதம் ஐரோப்பாவில் பரவுவதற்கு முன்னமேயே, அது இந்தியாவுக்கு வந்து அதற்குத் தென் இந்தியாவில் உறுதியான பிடிப்பு ஏற்பட்டதென்பது அநேகருக்கு இன்றும் தெரியாது. இந்தக் கிறிஸ்தவர்களுடைய தலைமைக் குரு, சிரியாவில், ஆண்டியாக் நகரிலோ எங்கேயோ இருக்கிறார். ஆனால், இவர்களுடைய கிறிஸ்து மதம் அனுபவத்தில், சுதேசக் கிறிஸ்துவ மதமாகும். வெளியுலக கிறிஸ்தவ மதத்துக்கும் இதற்கும் அதிகமாக தொடர்பு கிடையாது. தெற்கே பிரயாணம் செய்கையில், நெஸ்டோர் என்ற கூட்டத்தாரை நாங்கள் கண்டோம். இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இவர்களில், பதினாயிரம் பேர்கள் இருக்கின்றார்கள் என்று இவர்களுடைய கிறிஸ்துவ குருமார் என்னிடம் சொன்னார். இந்தக் கூட்டத்தார் ஏனைய குடிகளோடு வெகு காலத்துக்கு முன்னரே, கலந்து போய்விட்டார்கள் என்று நான் எண்ணியிருந்தேன். இந்தியாவில் அவர்கள் ஒரு காலத்தில் செழித்திருந்தார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. வடக்கே காசி வரையில் இந்தக் கூட்டத்தின் பக்தர்கள் ஒருகாலத்தில் ஏராளமாகப் பரவி வசித்து வந்தார்கள் என்று என்க்குச் சொன்னார்கள்.

ஸரோஜினி நாயுடுவையும், அவருடைய பெண்கள் பத்மஜா, லீலாமணி இருவரையும் பார்ப்பதற்கென்றே, நாங்கள் ஹைதராபாத்துக்குச் சென்றோம். நாங்கள் அவர்களுடன் தங்கியிருந்த காலத்தில், படித்த ஸ்திரீகளின் கூட்டம் ஒன்று, அவர்களுடைய வீட்டில், என்னுடைய மனைவியைச் சந்திப்பதற்காகக் கூட்டப்பட்டது. கமலா, அவர்களுக்குப் பிரசங்கம் செய்தபொழுது, ஆண் பிள்ளைகள் ஆக்கி வைத்திருக்கும் சட்டங்களையும், வழக்கங்களையும் எதிர்த்துச் சுதந்திரத்துக்காக ஸ்திரீகள் போராட வேண்டும் என்றும், தங்களுடைய புருஷர்களுக்கு அதிகமாக ஸ்திரீகள் கீழ்ப்படிந்து நடக்கக் கூடாதென்றும் அவள் பேசி யிருக்க வேண்டும். இதுதான் அவளுக்கு எப்பொழுதும் இனிப்பைக் கொடுக்கும் விஷயமாகும். ஆனால், இந்தப் பிரசங்கம் நடந்து இரண்டு மூன்று வாரங்கள் கழித்து விநோதமான சம்பவம் ஒன்று நேர்ந்தது. ஒரு நாள் ஹைதராபாத்திலிருந்து கமலாவுக்கு ஒரு கடிதம் வந்தது.

நாங்கள் ஹைதராபாத்துக்கு வந்துவிட்டுப் போன பிறகு, என்னுடைய மனைவி, தாறுமாருக நடந்துகொண்டு வருகிருள். அவள் நான் சொல்வதைக் கேட்பதில்லை. முன் மாதிரி, என் விருப்பப்படி அவள் நடப்பதுமில்லை. என்னேடு தர்க்கம் செய்கிருள். சில சமயங்களில் அடித்துவிடுவாள் போலக் கூடத் தோன்றுகிறது" என்று மூளை கலங்கிப் போன கணவ ஞெருவன் கடிதம் எழுதியிருந்தான்.

பம்பாயிலிருந்து இலங்கைக்குப் பிரயாணம் செய்த ஏழு வாரங்களுக்குப் பிறகு மீண்டும் நாங்கள் பம்பாய்க்கு வந்து சேர்ந்தோம். உடனே, காங்கிரஸ் அரசியல் சுழலில் மீண் டும் புகுந்தேன். காரியக்கமிட்டியின் கூட்டங்கள் பல நடை பெற்றன. முக்கியமான பிரச்னைகளைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. இந்தியாவின் நிலைமை விரைவில் மாறிக் கொண்டு வருவது கண்ணில் பட்டது. பின்வரும் பிரச்னை கள் எங்கள் முன் நின்றன. (1) ஐக்கிய மாகாண விவசாயிக ளின் தகராறு (2) எல்லைப்புற மாகாணத்தில் கான் அப்துல் கபார்கான் அவர்களது தலைமையில் செஞ்சட்டை இயக்கத்தின் அபரிதமான பெருக்கம் (3) ஆத்திரத்தையும் கொதிப்பையும் அடக்கிக்கொண்டு நரம்பு கெட்டுக்கிடக்கும் வங்காளம் (4) எப்பொழுதும் நிழலைப் போல கூட இருக்கும் வகுப்புவாதப் பிரச்னை (5) சில்லரை சங்கதிகளிலே அரசாங்க அதிகாரிக ளுக்கும் காங்கிரஸ் காரர்களுக்கும் மத்தியில் அபிப்பிராய பேதத்தாலும் தகராருலும் ஏற்பட்ட பரஸ்பர குற்றச்சாட்டு கள் (6) டில்லி ஒப்பந்தத்தை மீறி நடந்ததாக இருதரப்பா ருக்கும் சந்தேகம் (7) எப்பொழுதும் திரும்பித்திரும்பி வரு கிற கேள்வி—இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதா? மகாத்மாகாந்தி அங்கே செல்லவேண் டுமா? இவைகளைப்பற்றியெல்லாம் காரியக்கமிட்டி யோசிக்க வேண்டியதாயிற்று.

## XXXVII

## ஒப்பந்தக்காலத்தில் தகராறு

காந்திஜீ வட்டமேஜை மகாநாட்டுக்கு லண்டன் போவதா? இல்லையா? அடிக்கடி இந்தக் கேள்வி பிறந்தது. தெளிவான பதில் கிடைக்கவில்லை. கடைசி நிமிஷம் வரை யாருக்கும் தெரியாது. காங்கிரஸ் காரியக்கமிட்டிக்கும் தெரியாது. காந்திஜிக்கும் கூடத்தெரியாது. பதில் பல விஷயங்களைப் பொறுத்திருந்தது. புதிது புதிதாக நிகழ்ச்சிகள் நேர்ந்து வந்தமையால், நிலைமை மாறிக்கொண்டே இருந்தது. அந்தக் கேள்விக்கும் பதிலுக்கும் அடியில் உண்மையான கஷ்டமான பிரச்னைகள் பதுங்கிக் கிடந்தன. வட்டமேஜை மகாநாடு இந்தியாவின் அரசியல் அமைப்பை ஏற்கனவே அடிகோலி விட்டதாகவும் அந்தத்திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் வரையப்பட்டு விட்டதாகவும் திட்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டிய வேலைதான் பாக்கி என்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் அவர்களது நண்பர்களும் திருப்பித்திருப்பி எங்கள் காதில் ஓதினார்கள். ஆனால் காங்கிரஸ் அந்த மாதிரி நினைக்கவில்லை. காங்கிரஸ் சம்பந்தப்பட்டவரையிலும் திட்டத்தைத் துவக்கத்திலிருந்து அலசிப்பார்த்து அமைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. டில்லி ஒப்பந்தப்படிக்கு சமஷ்டிக் கொள்கையும் பாதுகாப்பு வரையறையும் ஒப்புக்கொள்ளப்பட்டன என்பது உண்மைதான். இந்தியாவின் அரசியல் பிரச்னைக்கு சமஷ்டித் திட்டம்தான் ஏற்ற பரிகாரமென்று எங்களில் பலருக்கு வெகுகாலமாகத் தோன்றியபோதிலும், வட்டமேஜை மகாநாடு குறிப்பிடும் சமஷ்டித் திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. சமஷ்டிக்கும் ஜன சமூகமாறுதலுக்கும் விரோதமில்லை. சமஷ்டிக்கும் பூரண அரசியல் விடுதலைக்கும் மிகவும் பொருத்தம்தான். ஆனால் பாதுகாப்புகளைக்கொண்டு புகுத்துவதுதான் கஷ்டமான வேலையாகவிருந்தது.

சாதாரணமாகப் பாதுகாப்புகளை வற்புறுத்தினால், அரசாட்சியின் உறுதி மிகுதியும் தொலைந்து போகும். ஆனால் "இந்தியாவின் நலங்களைக் கருதி" என்ற சொற்கள் மூலமாக,

இந்தப் பாதுகாப்புத் தொல்லையைச் சிறிதளவு கடந்து செல்லலாமென்றாலும், பூரண விடுதலையையும் பாதுகாப்புகளையும் ஒன்று சேர்த்து இணைக்கமுடியாது. வரப்போகிற அரசியல் திட்டத்தில் இந்தியாவுக்கு எல்லாத் துறைகளிலும், பூரண சுதந்திரம் வேண்டுமென்று கராச்சி காங்கிரஸில் மிகவும் தெளிவாக எடுத்துக்காண்பிக்கப்பட்டிருக்கிறது. தேசப்பாதுகாப்பு, அன்னியநாட்டு விஷய நிர்வாகம் இவை இந்தியாவின் கையிலிருக்கவேண்டும். இந்தியாவின் பொருளாதார நாணயத் திட்டத்தை இந்தியாவுக்கேற்றபடி அமைத்துக்கொள்ள இந்தியாவுக்குப் பூரண அதிகாரம் இருக்கவேண்டும். கடன்களை ஏற்றுக்கொள்ளுமுன், இந்தியா பிரிட்டனுக்கு எவ்வளவு கடன் கொடுக்கவேண்டும் என்ற பிரச்னையை நன்றாக அலசிப் பார்த்து விடவேண்டும். அரசியல் பொருளாதாரத் துறையில், என்ன மாறுதல்கள் ஏற்படவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் கராச்சியில் மூலாதார உரிமைத் தீர்மானம் ஆக்கப்பட்டிருக்கிறது. இவைகள் யாவும் கராச்சி காங்கிரஸில் தெளிவாக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் யாவும் இந்தியாவின் தற்போதைய அரசியலமைப்புக்கும் வட்டமேஜை மகாநாட்டில் வந்தமுடிவுகள் பலவற்றுக்கும் நேர்விரோதமானவை.

காங்கிரஸின் நோக்கத்துக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருந்தது. இந்த வித்தியாசத்தை விரைவிலே அப்பொழுது போக்கிவிட முடியும் என்று தோன்றவில்லை. காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் வட்டமேஜை மகாநாட்டில் யாதொரு ஒற்றுமையும் ஏற்படுமென்று காங்கிரஸ்காரர்கள் யாரும் எதிர்பார்க்கவே இல்லை. எதிலும் நல்லது தான் நேருமென்று சாதாரணமாக எண்ணிக்கொண்டிருக்கும் காந்திஜீக்குக் கூட நம்பிக்கை இல்லை. ஆனால் அவர் ஒருபொழுதும் தமது நம்பிக்கையை விட்டுவிடுவதில்லை. கடைசிவரையில் முயன்று பார்த்துவிட வேண்டும் என்ற தீர்மானம் கொண்டவர். வெற்றி கிடைத்தாலும் கிடையாவிட்டாலும், டில்லி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்று, முயற்சி செய்து பார்த்துவிடவேண்டியதுதான் என்று நாங்கள் எல்லோரும் கருதினோம். இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் நாங்கள் கலந்து கொள்ளக்கூடாமல் தடுப்பதற்கு இரண்டு முக்கியமான விஷயங்கள் இருந்தன. வட்டமேஜை மகாநாட்டில் காங்கிரஸின் நோக்கத்தைப்

பூர்த்தியாகச் சொல்லும் உரிமை ஒன்று. அதனால் ஏற்கனவே இதைப்பற்றி முடிவுசெய்யப்பட்டு, எங்கள் இஷ்டப்படி பூரண சுயராஜ்யத்தை வற்புறுத்த சுதந்திரம் கிடைத்திருந்தபடியால் இத்தடை நீங்கிற்று. இந்தியாவிலிருக்கும் நிலைமைகளால், வட்டமேஜை மகாநாட்டுக்குப் போகாமல் இருக்க நேரிடலாம். ஏதோ ஒரு தகராறு ஏற்பட்டு காங்கிரஸ் அரசாங்கத்தோடு போராட வேண்டிய தேவை உண்டாக்கலாம். அரசாங்கத்தார் கடுமையான அடக்குமுறையைக் கையாளலாம். இவைகள் இந்தியாவில் நேர்ந்து நம்முடைய வீடு தீப்பற்றி எரியுமாகில், இந்தத் தீயை அலட்சியம் செய்துவிட்டு நம்முடைய பிரதிநிதி லண்டனுக்குப் போய் அரசியல் திட்டங்களைப்பற்றி தர்க்க விதர்க்கம் செய்வதென்பது மிகவும் பொருத்தமில்லாத சங்கதியாகிவிடும்.

இந்தியாவின் நிலைமை விரைவில் மாறிக்கொண்டே வந்தது. இதை நாடு முழுவதும் காணலாம். முக்கியமாக வங்காளத்திலும் ஐக்கிய மாகாணங்களிலும் எல்லைப்புறமாகாணத்திலும் நிலைமை மாறிவந்தது நன்றாகத் தென்பட்டது. டில்லி ஒப்பந்தத்தால் வங்காளத்துக்குப் பரிகாரம் ஏற்படுவதற்கு இடமே இல்லை. நிலைமையின் பழைய கொடுமை தளராமல் கேவலமாகிக் கொண்டே வந்தது. சட்டமறுப்புக் கைதிகளிற் சிலர் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் சட்டமறுப்புக் கைதிகள் அல்லாத ஆயிரக் கணக்கான அரசியல் கைதிகள் இன்னும் சிறையினுள்ளேயே இருந்தார்கள். விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டவர்கள் சிறையிலிருந்தார்கள்; அல்லது அவர்களுக்கென அமைக்கப்பெற்ற தனியான காவலிடங்களில் வைக்கப் பட்டிருந்தார்கள். 'ராஜ நிந்தனைப்பேச்சு' என்று சொல்லி, புதிது புதிதாக தேசபக்தர்களைக் கைது செய்தார்கள். சாதாரண அரசியல் வேலைகளுக்காகவும் பலர் கைது செய்யப்பட்டார்கள். அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு தணியாமல் தொடர்ந்து கொண்டே போயிற்று. வங்காளத்திலோ பலாத்காரப் புரட்சிக்கூட்டம் இருந்ததால் வங்காளம் சம்பந்தப்பட்ட வரையும் அந்த மாகாணப் பிரச்னை மிகவும் சிக்கல் கொண்டதாக ஆயிற்று. காங்கிரஸ் வேலைகளையும் சட்ட மறுப்பையும் பயங்கரச் செயல்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பயங்கரச் செயல்கள் கடலில் கரைத்த காயமாகும். ஆனால் பயங்கரச் செயல்களால் நாட்டில் அதிகமான கூப்பாடு ஏற்பட்டு, அவைகள்

நாட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்தன. மேலும், காங்கிரஸ் வேலைக்கு இவைகள் தடையாயிருந்தன. மற்ற மாகாணங்களில் காங்கிரஸ் வேலை எவ்வளவு நயமாக நடந்தனவோ, அம்மாதிரி வங்காளத்தில் நடைபெற முடியவில்லை. ஏனெனின் பயங்கரச் செயலால் ஏற்பட்ட நிலைமையில், அமைதியான சட்ட மறுப்பியக்கத்துக்கு சாதகமான வசதி எதுவும் தோன்ற முடியாது.

பயங்கரச் செயலைச் சாக்காகக் கொண்டு அரசாங்கத்தார் கடுமையான அடக்குமுறையைக் கையாண்டார்கள். இதனால் புரட்சிக்காரர்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டார்களோ அவ்வளவு காங்கிரஸ்காரர்களும் பாதிக்கப்பட்டனர். போலீஸ்காரர்களும், அதிகாரிகளும் காங்கிரஸ்காரர்களுக்கு விரோதமாக அவசரச் சட்டங்களையும், விசேஷ சட்டங்களையும் பிரயோகம் செய்யாமல் இருக்க முடியவில்லை. அரசாங்கத்தாருக்குச் சம்மதமில்லாத வேலைகளைத் தொழிற்கட்சித் தொண்டர்களும், விவசாய இயக்க ஊழியர்களும் செய்வார்களானால் அவர்களை அரசாங்கத்தார் அடக்காமலிருப்பார்களா? விசாரணையின்றி பல ஆண்டுகளாக காவலில் வைக்கப்பட்டிருக்கும் தேச பக்தர்களிற் பலர், பலாத்காரப் புரட்சியில் கலந்துகொள்ளாமல், சாதாரண அரசியல் வேலையைச் செய்ததற்காகவே காவலில் வைக்கப்பட்டிருக்கலாம். தங்களுடைய குற்றங்கள் தான் என்னவென்பதைத்தெரிந்துகொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படவில்லை. எனவே அவர்கள் எதை ருஜுப்படுத்துவது? அவர்கள் கோர்ட்டில் விசாரிக்கப்படுவதில்லை. ஏனென்றால் அவர்களைத் தண்டனைக்குக் கொண்டு வரக் கூடிய சாட்சியம் போதுமான அளவு போலீஸாருக்குக் கிடைப்பதில்லை. அரசாங்கத்துக்கு விரோதமான குற்றங்களைப் பற்றிய பிரிட்டிஷ் இந்திய சட்டங்கள், எல்லா அரசியல் வேலையையும் குற்றமாகக் கவ்விக்கொண்டு கிடப்பனவாகும். அவைகளின் நெருக்கமான வலையிலிருந்து தப்பித்துக்கொள்வது கஷ்டம். அப்படியிருந்தும், பலரை விசாரணைக்குக் கொண்டு வராமலிருந்தது, அவர்களுக்கெதிராக யாதொரு சாக்ஷியமும் இல்லையென்பதை ருஜுப்படுத்துகிறது. சில வேளை கோர்ட்டார் ஒருவர் விடுதலை செய்யப்படலாம். ஆனால், அவரை மீண்டும் உடனே போலீஸார் கைது செய்து, விசாரணையின்றி காவலில் வைக்கக் கூடும். இவ்வாறு அடிக்கடி நேர்ந்திருக்கிறது.

இந்த சிக்கலான வங்காளப் பிரச்னை சம்பந்தமாக யாதொன்றும் செய்ய முடியாமல் காங்கிரஸ் காரியக் கமிட்டி மிகவும் திக்கற்ற நிலைமையில் இருந்தது. இவைகளால் கமிட்டி மனம் நொந்துகொண்டே வந்தது. வங்காளப் பிரச்னை ஏதாவது ஒரு உருவத்தில் அவர்களுடைய கவனத்துக்கு வந்துகொண்டேயிருந்தது. காரியக் கமிட்டி உசிதமென்று தோன்றிய முறையில் பரிகாரம் தேட முயற்சி செய்யும். ஆனால் அது உண்மையான பரிகாரம் அல்லவென்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் பலவீனத்தில் ஆழ்ந்து விஷயங்கள் நடக்கிறபடி நடக்கட்டும் என்று சும்மா இருந்து விட்டார்கள். அவர்கள் இருந்த நிலைமையில் அவர்கள் வேறு என்ன செய்திருக்க முடியும் என்று சொல்லுவது கஷ்டமானதாகும். காரியக் கமிட்டியின் இந்த மனப்பான்மையைக் கண்டு வங்காளத்தில் மிகுதியும் ஆத்திரப்பட்டார்கள். காங்கிரஸ் நிர்வாகிகளும் ஏனைய மாகாணங்களும் வங்காளத்தை அலட்சியம் செய்கின்றார்கள் என்ற எண்ணம் வங்காளத்தில் வளர்ந்துகொண்டே வந்தது. சோதனைக் காலத்தில் வங்காளத்தை எல்லோரும் கைவிட்டு விட்டார்களேயென்று வங்காளிகள் எண்ணத் துணிந்தார்கள். இந்த மாதிரி நினைப்பது முழுதும் தவறாகும். இந்தியா பூராவுக்கும் வங்காளிகளிடம் பூரண அனுதாபம் உண்டு. ஆனால் இந்த அனுதாபத்தை பயன் தரும் முறையில் ஒத்தாசையாக எவ்வாறு மாற்றிக் காண்பிப்பதென்பது தெரியவில்லை. மேலும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சொந்தத் தொல்லைகளே தலைக்கு மேல் வந்து குவிந்துகொண்டன.

ஐக்கிய மாகாணங்களிலே விவசாயிகளின் நிலைமை கேவலமாகிக் கொண்டுவந்தது. மாகாண அரசாங்கத்தார் இந்தப் பிரச்னையோடு விளையாடிக் கொண்டிருந்து, வரிவஜாவைப் பற்றிய முடிவு செய்யாமலே கட்டாயப்படுத்தி வரியை வசூலிக்க ஆரம்பித்தார்கள். எங்கு பார்த்தாலும் ஒரே ஜப்தி; நிலத்தை விட்டுக் குடியானவர்கள் அப்புறப்படுத்தப் பட்டார்கள். நாங்கள் இலங்கையிலிருக்கையில், கட்டாயப்படுத்தி வரியை வசூல் பண்ணினதற்காக விவசாயிகள் இரண்டு மூன்று இடங்களில் கலகம் செய்தார்கள். கலகங்கள் பெரிதல்ல. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஜமீன்தாரோ, அவரது ஏஜண்டோ கலகத்தில் இறந்துபோக நேர்ந்தது. காந்திஜி, நைனிடாலுக்குச் சென்று, ஐக்கிய மாகாணக் கவர்னர் சர் மால்காம் ஹெயிலியோடு விவ

சாயிகளின் கஷ்டங்களைப்பற்றி பேசினார். ஆனால் பயன் இல்லை. அரசாங்கத்தார் தங்கள் வரிவஜா திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால் அது எதிர்பார்த்ததற்கு மிகவும் குறைவாக இருந்தது. குக்கிராமங்களில் பெரிய கூச்சல் கிளம்பிற்று. ஜமீன்தார்கள் அரசாங்கத்தாரோடு சேர்ந்து கொண்டார்கள். இருவருமாக தங்களுடைய வலுவை விவசாயிகளின் பேரில் பிரயோகம் செய்து, ஆயிரக்கணக்கான குடியானவர்களை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த நிலங்களினின்றும் அப்புறப்படுத்தி, அவர்களுடைய கொஞ்சசொத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள். இந்த சம்பவங்கள், வேறு நாடுகளில் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில், விவசாயிகளின் கலகம் பெரிதாக நேர்ந்திருக்கும். ஆனால் காங்கிரஸினுடைய நன்முயற்சிகளால் குடியானவர்கள் பலாத்கார வேலைகளில் இறங்காமல் தடுக்கப்பட்டார்கள். குடியானவர்களின் பேரில் அரசாங்கத்தாரும் ஜமீன்தார்களும் பிரயோகம் செய்த பலாத்காரமோ, எல்லை கடந்ததாக விருந்தது. இந்த விவசாயிகளின் எழுச்சிக்கும் துயரத்துக்கு மிடையே, ஒரு நன்மையும் உண்டாயிற்று. தானியங்களின் விலைகுறைந்து போனதால்,ஏழைத் தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் வயிறு நிறையும்படி சாப்பிட பாக்கியம் ஏற்பட்டது.

வங்காளத்தைப்போலவே, எல்லைப்புற மாகாணத்திலும் டில்லி ஒப்பந்தத்தால் அமைதி ஏற்படவில்லை. நிலைமை சாக்ஷத்வமாகவே சிக்கலாகக்கிடந்தது. அரசாட்சியோ, இராணுவ அமுலைப் போன்றது. விசேஷ அவசரச்சட்டங்கள், சிறிய குற்றங்களுக்கும் கடுமையான தண்டனைகள். இந்த நிலைமையை எதிர்த்துப் போராட, அப்துல் கபார்கான் பெரிய கிளர்ச்சி ஒன்றை நடத்தினார். அவரைக் கண்டு, சர்க்கார் விரைவில் திகிலடையும்படியாயிற்று. இந்த வீரன், தன் ஆறடி மூன்றங்குல உயரமுள்ள உருவத்துடன் கிராமம் கிராமமாகச் சென்று, செஞ்சட்டை அமைப்புகளை ஸ்தாபித்துக் கொண்டே போனார். அவரோ, அவருடைய முக்கியமான துணையாளர்களோ எங்கு சென்றாலும் அங்கே ஒரு செஞ்சட்டை அமைப்பு ஸ்தாபிக்கப்படும். இவ்வாறு செய்து மாகாணம் முழுதும் அவர்கள் "குதாய்கித்மத்கர்" கிளை ஸ்தாபனங்களைப் பரப்பிவிட்டார்கள். அவர்களுடைய நடவடிக்கைகள் பூரண சாத்வீகம் கொண்டவை. மூடுமந்திரமாக எவ்வளவோ, அவர்களுக்கு விரோதமாகப் பேசப்பட்

டாலும், ஒரு சிறு பலாத்கார நிகழ்ச்சியாவது, அவர்களுக்கு விரோதமாக ருசுப் படுத்தப்படவே இல்லை. அவர்கள் அமைதியுடனிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களுடைய பழைய புராதன வழக்கம், போரும் பலாத்காரமுமானதாலும்; அவர்கள் அமைதியில்லாமல் கிடக்கும் எல்லைப்புறத்தில் வசித்து வந்தாலும், இந்திய தேசிய இயக்கத்தோடு இணைக்கப்பட்டு இந்த மாகாணத்திலும் கட்டுப்பாட்டுடன் அமைப்புகள் ஸ்தாபிக்கப் பெற்றதாலும், அரசாங்கத்தார் திகிலடைந்து போனார்கள். செஞ்சட்டையர்களின் சாத்வீகத்தில் அரசாங்கத்தாருக்கு நம்பிக்கையே இல்லையென்று நான் நினைக்கிறேன். அவர்கள் நம்பினார்களென்றே வைத்துக்கொண்டாலும், "குதாய்கித்மத்கா" இயக்கத்தின் கட்டுப்பாட்டைக் கண்டு, அரசாங்கத்தார் திகிலும் தொல்லையும் படாமலிருக்க முடியாது. இந்த இயக்கம் அரண்மனைக்கு எதிர்மனையல்லவா? எனவே, இதனுடைய வளரும் வல்லமையைப் பார்த்துக் கொண்டு அரசாங்கத்தாரால் சும்மா இருக்க முடியுமா?

இந்த மாபெரும் இயக்கத்துக்குத் தனிப்பெரும் தலைவர் கான் அப்துல் கபார்கான் ஆவார். இவரை "பெக்ரே ஆப்கன்" "பெக்ரே படான்" "பட்டாணியரின் பொக்கிஷம்" "காந்தி ஏசர் ஹாத்" (எல்லைப்புற காந்தி) என்று பலவாறாக அழைத்தார்கள். அவர் சாந்தமாக விடா முயற்சியுடன், எவ்வளவு கஷ்டங்கள் குறுக்கிட்டாலும், அரசாங்கத்தார் தடுத்தாலும், லட்சியம் செய்யாமல், எல்லைப்புற மாகாணத்தில் தொண்டு செய்து, வியக்கத்தக்க செல்வாக்கைப் பெற்று விட்டார். அவர் அரசியல் வாதியல்ல, அரசியலின் சூழ்ச்சிகளும் தந்திரங்களும் அவருக்கு அறவே தெரியாது. உயர்மானவர்; நேராக நிமிர்ந்து நிற்பவர்; உடலிலும் உள்ளத்திலும் நேராக நிற்பவர்; ஆடம்பரத்தை வெறுப்பவர்; அதிகப் பேச்சு பிடிக்காதவர்; இந்திய விடுதலையின் திட்டத்தோடு இசைந்த தம்முடைய மாகாணத்துக்கும் விடுதலையை எதிர் பார்த்து நிற்பவர். அரசியல் திட்டங்களிலும் சட்ட சம்பந்தமான பேச்சுகளிலும் அவருக்கு சிரத்தை கிடையாது. எதைச் செய்து முடிப்பதற்கும் காரியம் செய்து தானாக வேண்டும். மகாத்மா காந்தி காண்பித்த சாத்வீகவழி அவருடைய உள்ளத்தில் நன்றாகப் பதிந்து கொண்டது. காரியம் செய்வதற்கு அமைப்பு அவசியமாகும். ஆகவே சட்ட திட்டங்களைப் பற்றி, அதிகமாக வாதமோ, யோசனையோ செய்யாமல், அவர் அமைப்

புகளை ஸ்தாபிக்கப் புறப்பட்டார். அபூர்வமான வெற்றி பெற்ருர். அவருக்கு சிறப்பாக காந்திஜியிடம் மிகுந்த பிரேமை. கூச்சத்தாலும் விளம்பரத்தை வெறுக்கும் தன்மையாலும், துவக்கத்தில் அவர் காந்திஜீயுடன் நெருங்கிப் பழக முடியாமற் போயிற்று. பின்னர் அவர்கள் நெருங்கிச் சந்தித்து பல விஷயங்களைப் பற்றி பேசும் படியாக ஏற்பட்டது. எனவே அதிகமான நெருக்கம் உண்டாயிற்று. இந்தப் பட்டாணியர் எங்களைக் காட்டிலும் அதிகமான நம்பிக்கையுடன் சாத்வீக தத்துவத்தை எவ்வாறு ஒப்புக்கொண்டார்? என்பது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவருக்கு சாத்வீகத்தில் நம்பிக்கை இருந்ததில் சந்தேகமில்லை. அதனுலேதான் எவ்வளவோ ஆத்திர மூட்டப்பட்டாலும், தமது ஜனங்கள் அமைதியுடனிருக்கும் படியாக அவரால் செய்ய முடிந்தது. எல்லைப்புற மாகாண ஜனங்கள் அடியோடு பலாத்காரத்தை விட்டுவிட்டார்கள் என்று சொல்வது அபத்தமாகும். எந்த மாகாணத்து ஜனங்களும் சாத்வீகத்தை முழுதும் ஏற்றுக் கொள்ளவில்லை. பொது ஜனங்கள் எப்பொழுதுமே உணர்ச்சிப் பெருக்கால் அசைபவர்கள். அவர்கள் அவ்வாறு நகரும்பொழுது, அவர்கள் இன்னது தான் செய்வார்களென்று யாரும் திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனுல் 1930-ம் வருஷத்திலும் அதன் பின்னரும், எல்லைப்புற மாகாண ஜனங்கள் காண்பித்த அடக்கம் மிகவும் வியக்கத் தக்க தொன்ருகும்.

அரசாங்க அதிகாரிகளும் நம்நாட்டுத்தொடை நடுங்கிச் சகோதரர்களிற் சிலரும் எல்லைப்புறக் காந்தியை அவ்வளவு நேசத்தோடு பார்ப்பதில்லை. உண்மையென்று அவருடைய வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. எல்லைப்புறக் காந்தி பேசுவதற்கெல்லாம் சூழ்ச்சி அர்த்தம் கொடுத்து அதிகாரிகளும் அவர்கள் தோழர்களும் அவநம்பிக்கை கொண்டார்கள். ஆனுல் சிலவருஷங்களாக அவரும் வேறு எல்லைப்புறத் தோழர்களும் இந்தியாவின் பல பகுதிகளிலிருக்கும் காங்கிரஸ் ஊழியர்களோடு, நெருக்கமாகப்பழகச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. எனவே இவர்களுக்குள் பாஸ்பர நட்பும் மதிப்பும் வளரத்தலைப்பட்டன. பலவருஷங்களாக காங்கிரசில், அப்துல்கபர்கானை அநேகருக்குத் தெரியும். அவரிடம் எல்லோருக்கும் பிரியம். ஆனுல் தனிமனிதன் என்ற எல்லையை அவர் கடந்து, ஒரு அறிகுறியைப்போல் ஆகிவிட்டார். இந்தியவிடுதலைப்போரில் தோழர்களாக நின்று எதற்கும் சளைக்

காத எல்லைப்புற வீரர்களின் தைரியத்திற்கும் தியாகத்துக்கும் அடையாளமாக, அப்துல்கபர்கான் இந்தியாவின் மக்களின் கண்களில் பட்டார். அப்துல்கபர்கானைப்பற்றி, நான் கேள்விப்படுவதற்கு வெகுகாலம் முன்னரே, அவருடைய சகோதரர் டாக்டர் கான்சாகிபு அவர்களை எனக்குத் தெரியும். நான் கேம்பிரிட்ஜிலிருக்கையிலும், பின்னர் "இன்னர் டெம்பிளில்" பாரிஸ்டர் பரீக்ஷைக்காக பயிற்சிபெற்றுக்கொண்டிருக்கையிலும், டாக்டர் கான்சாஹிபு லண்டன் சென்தாமஸ் ஆஸ்பத்திரியில் ஒரு மாணவராக இருந்தார். அவரும் நானும் நெருக்கமான நண்பர்களானோம். நான் லண்டனிலிருக்கிற வரையிலும், இருவரும் சந்திக்காத நாளே கிடையாது. நான் இந்தியாவிற்குத் திரும்பிவந்தேன். அவர் இங்கிலாந்தில் பல வருஷங்கள் வசித்து, போர்க்காலத்திலும் டாக்டராக ஊழியம் செய்தார். பிறகு நான் அவரைக்கண்டது நைனி சிறையில் தான்.

எல்லைப்புறச் "செஞ்சட்டைகள்" காங்கிரசோடு ஒத்துழைத்தனர். ஆனால் அப்பொழுது அவர்கள் தனிஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களாக விருந்தனர். அது ஒரு அசாதாரணமான நிலைமை. காங்கிரசுக்கும் செஞ்சட்டைகளுக்கும் நடுவே தொடர்பாக நின்றது அப்துல்கபர்கான் அவர்கள். இந்தப் பிரச்னையைப்பற்றி காங்கிரஸ் காரியக்கமிட்டியார் எல்லைப்புற மாகாணத்தலைவர்களை 1931ம் ஆண்டு கோடைக்காலத்தில் கலந்துகொண்டு தீர்க்கமாக யோசித்தார்கள். செஞ்சட்டைகளைக் காங்கிரசோடு சேர்த்துக்கொள்வதென்று தீர்மானமாயிற்று. இவ்வாறு செஞ்சட்டை இயக்கம் காங்கிரசின் ஒரு பகுதியாக ஆகிவிட்டது. கராச்சி காங்கிரசுக்குப் பிறகு உடனே எல்லைப்புற மாகாணத்துக்குப் போகவேண்டுமென்பது காந்திஜீயின் விருப்பம். ஆனால் சர்க்கார் இந்தயோசனையை ஆதரிக்கவில்லை. பின்னர் அரசாங்கஅதிகாரிகள் செஞ்சட்டைகளின் செயல்களைப் பற்றி முறையிட்டபொழுதும், தாம் அங்கேபோய் விஷயத்தை நேரில் அறிந்துகொள்ளுவதற்காக அனுமதி தரவேண்டுமென்று காந்திஜீ சர்க்காரைக் கேட்டார். ஆனால் பயன்படவில்லை. நான் எல்லைப்புறமாகாணத்துக்குப் போவதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. டில்லி ஒப்பந்தத்தினால் அரசாங்கத்தின் விருப்பத்தைமீறி எல்லைப்புற மாகாணத்துக்குள் பிரவேசிப்பது உசிதமல்லவென்று நாங்கள் எண்ணினோம். காங்கிரஸ் காரியக்கமிட்டி கவனிக்கவேண்டியிருந்த

பிரச்னைகளில் இன்னொன்று, வகுப்புவாதமாகும். இது புதிய பிரச்னை அல்ல. ஆனால் புதிது புதிதான வேஷத்தோடும் உருவத்தோடும் தலைதூக்கிநிற்கும் சுபாவம் இதற்கு உண்டு. வட்டமேஜை மஹாநாட்டிலே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தப் பிரச்னையை முன்னணியில் வைத்து ஏனைய பிரச்னைகளை இரண்டாம்படிக்கு தள்ளிவிடுவார்கள் என்று நிச்சயமாய்த் தோன்றியதனால்; இப்பொழுது வகுப்புப் பிரச்னைக்கு ஒரு விசேஷச் சிறப்பு ஏற்பட்டுவிட்டது. வட்டமேஜைக்கு அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பெற்ற அங்கத்தினர்கள் யாவரும் அவர்களுடைய வகுப்புவாத மனப்பான்மைக்காகத் தான் முக்கியமாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இந்தியர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையைக்காட்டிலும் வேற்றுமைகளை அழுத்திச் சொல்லவே, இந்த வகுப்புவாதிகளை அரசாங்கத்தார் நியமனம் செய்திருந்தார்கள்.

அரசாங்கத்தார் இந்திய தேசீய முஸ்லீம்களின் தலைவர்களில் எவரையும் நியமனம் செய்ய முடியாதென்று கண்டிப்பாகவும் தெளிவாகவும் சொல்லிவிட்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் யோசனையின்பேரில், ஆரம்பம் முதலே வட்டமேஜை மகாநாடு வகுப்புப் பிரச்னையில் சிக்கிக்கொள்ளுமாகில், உண்மையான அரசியல், பொருளாதாரப் பிரச்னைகள் ஒழுங்காகக் கவனிக்கப்படமாட்டா என்று காந்திஜீ எண்ணினார். இந்த நிலைமையில் தாம் மகாநாட்டிற்குப் போவது பயனற்றவேலை என்றும் அவர் கருதினார். தாம் லண்டனுக்குப் போவதற்கு முன், எல்லாக் கட்சிகளையும் ஒன்று கூட்டி, வகுப்புப் பிரச்னைக்கு முடிவு கண்டால்தான், வட்டமேஜை மகாநாட்டிற்குத் தாம்போவது பயன் தரக்கூடியதாயிருக்குமென்று அவர் காரியக்கமிட்டியிடம் சொல்லிப் பார்த்தார். அவர் நினைத்ததுதான் சரி என்பது பின்னர் நேர்ந்த நிகழ்ச்சிகளினின்றும் ருஜுவாகிவிட்டது. இருந்தாலும் காரியக் கமிட்டி காந்திஜீயுடைய ஆட்சேபங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. வகுப்புப் பிரச்னைக்கு நம்மால் முடிவுகாண முடியவில்லையென்ற ஒரேகாரணத்தை முன்னிட்டு, அவர் லண்டன் போக மறுப்பது தகாது என்று காரியக்கமிட்டி தீர்மானித்து விட்டது. வகுப்புப் பிரதிநிதிகளைக் கலந்துகொண்டு வகுப்புப் பிரச்னைக்கு பரிகாரம் தேடுவதற்கு காங்கிரஸ் காரியக் கமிட்டி முயற்சிசெய்து பார்த்தது. ஆனால் வெற்றி கிடைக்கவில்லை.

மேற்சொன்னவைகள் 1931ம் வருஷக் கோடையில் நாங்கள் கவனிக்க நேர்ந்த முக்கியமான பிரச்னைகளாகும். வேறு பல சில்லரை விஷயங்களுமிருந்தன. அரசாங்க அதிகாரிகள் டில்லி ஒப்பந்தத்தை மீறி நடப்பதாக, ஆங்காங்கு காங்கிரஸ் கமிட்டிகளிடமிருந்து விடாமல், எங்களுக்கு முறையீடுகள் வந்துகொண்டேயிருந்தன. இவைகளில் முக்கியமானவைகளைப் பொறுக்கி எடுத்து, அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தோம். அரசாங்கத்தாரோ காங்கிரஸ் ஒப்பந்தத்தை மீறி நடந்ததாக பதில் குற்றம் சாட்டினார்கள். எனவே குற்றச்சாட்டுகளும் அவைகளுக்கு எதிர்குற்றச்சாட்டுகளும் செய்யப்பட்டு வந்தன. பின்னர் அவைகள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. இவைகளினால் காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையே நல்ல உறவு இல்லையென்று சொல்லாமலே விளங்கும்.

சில்லரை விஷயங்களில் நேர்ந்த இந்தத் தகராறைப் பற்றி அதிகமாக குறிப்பிட்டிருக்க வேண்டியதில்லை. ஆனால் இதைக் குறிப்பிடவேண்டிய தேவை வேறு வகையில் ஏற்பட்டது. இந்தத் தகராறு தனியாட்களைப் பொருத்ததல்ல. மூலாதாரக் கொள்கையைப் பற்றிய சச்சரவாகவிருந்தது. தன் மதிப்பையும், பொருளாதாரத் திருத்தத்தையும் மேற்கொண்டு, நாம் நடத்திய தேசீயப் போராட்டத்தின் பயனாக, இந்தத் தகராறு ஏற்பட்டது. அடிப்படையில் மாறுதல் ஏற்பட்டாலொழிய, மேற்சொன்ன இரண்டு பிரச்னைகளையும் அழித்துவிட முடியுமா? நம்முடைய தேசீய இயக்கம் முதலில் எவ்வாறு துவக்கிற்று? நம்முடைய நடுத்தர வகுப்பார்கள் தன்மதிப்பும், வளர்ச்சியும் வேண்டும் என்ற லட்சியத்தைக் கொண்டதனால், இயக்கம் தோன்றிற்று. இயக்கத்தின் தூண்டுதல்களாக நின்றவைதான் ராஜீய, பொருளாதாரக் காரணங்கள். இந்த நோக்கங்கள் எளியவர்களிடத்திலேயும் சிறிது சிறிதாகப் பரவிப் போய் வலுவடைந்துவிட்டது. கிராமத்தில் வாழ்ந்த குடியானவர்கள் தங்கள் வாழ்நாளை நடத்த முடியாத கேவல நிலைக்கு வந்துவிட்டபடியால், அவர்களைப் போய்த் தேசீய இயக்கம் தாக்கிற்று. பண்டைக்கால கிராமத்துப் பொருளாதாரக் கட்டுப்பாடு வெகு காலத்துக்கு முன்னமேயே தொலைந்து போய்விட்டது. விவசாயத்துக்குச் சாதகமாயிருந்த குடிசைத் தொழில்கள் மடிந்து போயின. குடிசைத் தொழில்களால் சிறிதளவு உதவியடைந்து வந்த மக்களுக்கு அதுவுமில்லாமற் போய்விட்டது. அரசாங்கத்தின்

நிர்வாகப் போக்கு, இந்த அழிவுக்கு ஒரு காரணமாயிற்று. குடிசைத் தொழில் யந்திரத் தொழிலோடு போட்டி போட முடியாமற்போனது, இன்னொரு காரணம். நிலத்தின்மீதிருந்த சுமை அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. இந்தியத் தொழில்கள் மிகவும் மெதுவாக வளர்ந்துகொண்டு வந்ததனால், அதனால் இந்த சுமைக்குப் பரிகாரம் சிறிதும் ஏற்படவில்லை. கிராமக் கட்டுப்பாடு தொலைந்து போய், தன்னை யறியாமலே தனக்குத் தேவையான சாமான்களை கிராமத்தார்கள் உலகச் சந்தையிலிருந்து வாங்கவேண்டிய நிர்ப்பந்த நிலைமைக்கு வந்துவிட்டார்கள். தங்களுக்கு வேண்டிய சாமான்களைக் கிராமங்களிலேயே செய்துகொள்ள முடியவில்லை. சந்தையில் விற்பனையாகும் நயமான சாமான்களோடு கிராமத்தில் செய்யப்பட்ட கரடுமுரடான சாமான்கள் போட்டி போட முடியவில்லை. விவசாயம் பழைய பிற்போக்கான முறையிலேயே செய்யப்பட்டு வந்தது. நிலச்சுவான்தார் உரிமைகளும் சரியான முறையிலில்லை. இந்தத் திட்டத்தை வைத்துக்கொண்டு தீவிர சீர்திருத்தம் எதையும் செய்யமுடியாது. தானியங்கள் கிராக்கியாக விற்கிற காலங்களில் தவிர, மற்றக் காலங்களில் விவசாயிகளும், மிராசுதார்களும் சீரழிந்து கொண்டே போய்க்கொண்டிருந்தார்கள். மிராசுதார்கள் தங்கள் கடனை விவசாயிகளின்பேரில் சுமத்த முயன்றார்கள். சில்லரை மிராசுதார்களும், விவசாயிகளும் கடன்பட்டுக் கடன் பட்டு, சீரழிந்து போனமையால், அவர்கள் தேசீய இயக்கத்தில் சேர்ந்துகொண்டார்கள். கிராமங்களில் சொந்த நிலமில்லாமல் வாழும் குடியானவர்கள் எல்லோரும் தேசீய இயக்கத்தில் சேர்ந்துகொண்டார்கள். ஸ்வராஜ்யம் வந்தால், நிலத் திட்டத்தில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டு, தங்களுடைய கடன்களும், கஷ்டங்களும் பறந்துபோய், தங்களுக்கு சொந்தமாக நிலம் கிடைக்குமென்று இவர்கள் ஆசையோடு எண்ணிவந்தார்கள். ஆனால் இந்த ஆசை தெளிவான பாஷையில் உருவெடுக்கவில்லை.

உலகப் பொருளாதார மந்தத்தோடு 1930-ஆம் வருஷத்தில் சட்டமறுப்பியக்கமும் சமயத்தில் சேர்ந்துகொண்டது. இந்த மந்தத்தால், மிகுதியும் பாதிக்கப்பட்டவர்கள், கிராம விவசாயிகள். எனவே அவர்கள் காங்கிரஸில் சேர்ந்து சட்ட மறுப்பு செய்தார்கள். லண்டனிலோ, வேறு எங்கேயோ வரையப்படும் நேர்த்தியான அரசியல் அமைப்புத் திட்டத்

த்தைப் பற்றி, அவர்களுக்குக் கவலையே இல்லை. நிலத் திட்டத்தில் அதுவும் ஜமீன்தாரித் திட்டமிருக்கும் பிராந்தியங்களில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்பதைப் பற்றித்தான் அவர்களுக்குக் கவலை. ஜமீன்தாரித் திட்டம் தலைமாறிப் போன திட்டமாகும். தற்போது அதனிடம் வலு இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் இருந்து வந்த நிலையில், நிலத் திட்டத்தில் அடிப்படையான மாறுதலை செய்வதற்கு அதற்குத் துணிவு கிடையாது. விவசாயக் கமிஷன் நியமிக்கப்பட்ட பொழுதுகூட, அந்தக் கமிஷன் நிலச்சுவான்தார் உரிமைகளைப் பற்றி விசாரணை செய்யக் கூடாதென்று தடுக்கப்பட்டது.

எனவே, நிலைமையின் தன்மையாலேயே இந்தப் போராட்டம் வரவேண்டியதுதான். ராஜிகளினாலும், நயமான சொற்களாலும் இதற்கு ரக்ஷாபந்தனம் செய்துவிட முடியாது. நிலத் திட்டத்தில் அடிப்படையான மாறுதல்களைச் செய்து பரிகாரத்தை நாடினாலொழிய, போராட்டத்தை தவிர்க்கமுடியாது. இந்தப் பரிகாரத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மூலமாக எதிர்பார்க்க சாத்தியமே இல்லை. தற்காலிகப் பரிகாரங்கள் சிறிது காலத்துக்கு கஷ்டங்களைக் குறைத்து ஆறுதல் அளிக்கலாம். கடுமையாக அடக்குமுறையைக் கையாண்டால், அதனால் விவசாயிகள் பயந்து போய், தங்களுடைய லட்சியத்தை வெளியே சொல்லாமல் தடுக்கப்படலாம். ஆனால் இந்த இருவகை உபாயங்களினாலும் நிலப்பிரச்னைக்கு நிரந்தரமான பரிகாரம் ஏற்பட்டுவிட முடியாது. இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பங்கள் யாவும் கிளர்ச்சிக்காரர்களின் வேலை என்று எல்லா அரசாங்கங்களும் எண்ணிக்கொள்ளுவதுபோல, பிரிட்டிஷ் அரசாங்கமும் எண்ணிக்கொண்டிருக்கிறது. அது ஒரு முழு மூட எண்ணம். சென்ற பதினைந்து ஆண்டுகளாக, இந்தியாவிலே ஒப்பற்ற தலைவர் ஒருவர் இருந்துவருகிறார். அவர் கோடிக்கணக்கான மக்களின் அன்பையும் பக்தியையும் கவர்ந்து கொண்டுவிட்டார். பல வகைகளில் அவர் சொன்னதைச் சட்டமாகக் கருதி ஜனங்கள் நடக்கிறார்கள். இந்தியாவின் தற்போதைய சரிதத்தில், அவர் முக்கிய ஸ்தானம் பெற்று விளங்குகின்றார். ஆயினும் அவரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் இந்தியாவின் ஜனங்கள், அவரைக் காட்டிலும், இந்தச் சரித்திரத்துக்குக் காரண பூதர்களான முக்கியஸ்தர்களல்லவா?

ஜனங்கள்தான் முக்கியமான நடிகர்கள். சரித்திரசம்பந்தமான தூண்டுதல்கள் பின்னே நின்றுகொண்டு, ஜனங்களைப் பிடித்து முன்னே தள்ளுகின்றன. அதனாலேதான், இவர்கள் தங்களுடைய தலைவரின் பாட்டுக்குத் தக்கவாறு ஆடுகின்றார்கள். அத்தகைய சரித்திர சம்பந்தமான அரசியல் ஜனசமூகத் தூண்டுதல்கள் இல்லாவிடில், ஜனங்களைச் செயல் செய்யும்படியாகத் தூண்டுவதற்கு எந்தத் தலைவர்களாலும் கிளர்ச்சிக் காரர்களாலும் முடியவே முடியாது. காந்திஜீயின் சிறப்பான தன்மை யென்னவெனில், அவர் ஜனங்களின் நாடியை பிடித்துப் பார்ப்பதில் நிபுணர். அவர் எப்படியோ யோப்பம் கண்டுகொள்கிறார். இயக்கத்தின் வளர்ச்சிக்கும் செயல் செய்வதற்கும் ஏற்ற சந்தர்ப்பங்கள் எப்பொழுது கனிந்து வருகின்றன என்பதை அவர் திட்டமாகத் தெரிந்து கொள்ளுகிறார். நாட்டில் கொந்தளித்துத் தோன்றும் ஜன சமூக சக்திகளோடு சேர்ந்துகொண்டு 1930-ம் வருஷத்திய சட்டமறுப்பு இயக்கம் நடைபெற்றபடியால், அதற்கு உண்மையான வல்லமையொன்று ஏற்பட்டது. படிப்படியாக, அந்த இயக்கம் உலகசரித்திரத்தில் முக்கிய பாகமாகிக் கொண்டு வருவதாகக் காணப்பட்டது. தேசிய இயக்கத்தின் அறிகுறியாக காங்கிரஸ் திகழ்ந்தது. எனவே நாட்டின் வல்லமையும் பெருமையும் காங்கிரசில் சேர்ந்து கலந்து, அதன் செல்வாக்கை மிகுதியும் வலுப்படுத்தி விட்டன.

தேசிய இயக்கத்தில், இந்த சக்தி தெளிவு பெறுமலும் கணக்குக்கு அகப்படாமலும் அற்புதமாகவும் இருந்தது. என்றாலும் அது நாடெங்கும் வியாபித்திருப்பதைப்பற்றி சந்தேகமே கிடையாது. விவசாயிகள் காங்கிரஸில் சேர்ந்து கொண்டு, அதற்கு உண்மையான சக்தியை அளித்தார்கள். கீழ் நடுத்தர வகுப்பார்கள், காங்கிரஸின் முதுகெலும்பாக நின்று போராட்டத்தை நடத்தினார்கள். இந்தப் புதிய தோற்றத்தால் கவலையடைந்து, தனவந்தர்கள் காங்கிரஸோடு நட்புக்கொண்டிருப்பது உசிதமென்று எண்ணத் துவக்கினார்கள். இந்தியாவிலிருந்த ஆலை முதலாளிகள் காங்கிரஸ் வரைந்த உறுதிப் பத்திரங்களில் கையெழுத்திட்டார்கள். காங்கிரஸுக்கு அதிருப்தி கொடுக்கக்கூடியதாக எதையும், செய்ய அவர்கள் அஞ்சினார்கள். லண்டனில் முதலாவது வட்டமேஜை மகாநாட்டில், சேர்த்தியான சட்டக் குறிப்புகளைப்பற்றி பிரதிநிதிகள் வாதாடிக் கொண்டிருக்கையில்,

உண்மையான சக்தி, ஜனங்களின் பிரதிநிதியான காங்கிரஸுக்கு மெதுவாகவும் மறைவாகவும் வந்துகொண்டேயிருந்தது. இந்த நம்பிக்கை டில்லி ஒப்பந்தத்துக்குப் பின்னரும் வளர்ந்து கொண்டேவந்தது. தற்பெருமையான பிரசங்கங்கள் மூலமாக அல்ல; 1930-ம் வருடத்திலும் அதன் பின்னரும் நேர்ந்த சம்பவங்களை நினைக்கநினைக்க அந்த எண்ணம் வளர்ந்துகொண்டே போயிற்று. ஆனால், எதிரே நிற்கும் கஷ்டங்களும் ஆபத்துகளும் காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெளிவாகத் தெரியாமலில்லை. அவர்கள், அவைகளைக் குறைத்துப்பேச ஒருநாளும் எண்ணினதே இல்லை.

காங்கிரஸ் ஆட்சி நாட்டில் வளர்ந்துவருவதைக் கண்டு, அரசாங்கத்தார் ஆத்திரப்படுவது இயல்பே. இரட்டையாட்சி இருக்கலாமா? அரசியல் அதிகாரமனைத்தும் அரசாங்கத்தினிடம் இருந்தமையால், காங்கிரஸ் ஆட்சிக்கு அஸ்திவாரமில்லை. ஆனால், ஜனங்கள் காங்கிரஸைத் தங்கள் மனதில் ஒரு அரசாங்கமாக மதித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. எதேச்சாதிகார ஆட்சிக்கு காங்கிரஸால் ஏற்பட்ட நிலைமை பிடிக்குமா? காங்கிரஸ் ஜனங்களின் உள்ளத்தில் சூட்சுமமாக அதிகாரம் செலுத்துவதைப் பார்த்து, அதிகாரிகளின் நரம்புகள் ஆட்டம் கண்டுவிட்டன. பின்னர் சில கிராமங்களில் ஊர்வலங்களும், பிரசங்கங்களும் தகாத முறையில் நடந்ததாக அதிகாரிகள் குற்றங் கூறியபோதிலும், அவர்களின் நடுக்கத்திற்கு ஜனங்களின் மனப்பான்மையே உண்மையான காரணமாக விருந்தது.

எப்பொழுதாவது போர் வந்துதானுகவேண்டும். காங்கிரஸ் தன் வேலையை விட்டுவிட்டு தற்கொலை செய்துகொள்ள முடியாது. அரசாங்கமும் காங்கிரஸ் ஆட்சியைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. எனவே காங்கிரசை நசுக்கிவிட அரசாங்கத்தார் தீர்மானித்துக்கொண்டார்கள். இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டைக் கருதி, இந்த சண்டை சிறிது காலம் தள்ளிப் போடப்பட்டது. லண்டனுக்கு காந்திஜீயை எப்படியாவது கொண்டுபோய் விடவேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஆத்திரப்பட்டார்கள். காரணம் இன்னதென்று தெரியாது. காந்திஜீ வராமலிருக்கும்படியாக எதுவும் நேராமல், பார்த்துக்கொள்வதற்கு அவர்கள் பூரண ஜாக்கிரதையுடன் இருந்தார்கள். காந்திஜீயை வட்டமேஜை மகாநாட்டுக்கு கட்டாயமாக அழைத்துக்கொண்டு போய்விட வேண்டுமென்று அரசாங்கத்தார் விரும்பினுலும் காங்கிர

ஸுக்கு விரோதமாக அவர்கள் தங்கள் மனதைக் கெட்டிப் படுத்திக்கொண்டு தகராறைக் கிளப்பிக்கொண்டே இருந்தார்கள். டில்லி ஒப்பந்தம் கையெழுத்தானவுடனே, இர்வின் பிரபு இந்தியாவைவிட்டுப் போய்விட்டார். வில்லிங்டன் பிரபு அவருடைய ஸ்தானத்தில் வைஸிராயாக வந்தார். புதிய வைஸிராய் கடுமையான பேர்வழி யென்றும், அவர் முந்தின வைஸிராயைப்போல ராஜிக்கு இணங்கியவரல்ல வென்றும் அவரைப்பற்றி வதந்திகள் உலவின. அரசியலை பெரிய உத்தியோகஸ்தர்களின் சுபாவத்தைக்கொண்டு மதிப்பிடும் வழக்கம் நம்முடைய அரசியல் வாதிகளில் பலருக்கு இருக்கிறதேயல்லாமல் அரசியலைக் கொள்கைகளால் மதிப்பிடும் வழக்கம் அவர்களிடம் இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சாம்ராஜ்யக் கொள்கை வைசிராய்களின் சொந்த அபிப்பிராயங்களைக் கொண்டு நடைபெறுவதில்லை என்று நமது அரசியல் வாதிகளிற் பலர் உணருவதில்லை. ஆகவே வைஸிராயின் மாறுதலால் யாதொரு வித்தியாசமும் ஏற்படமுடியாது. நிலைமை மாறுபாடு அடைவதற்குத் தக்கவாறு அரசாங்கத்தின் போக்கும் சிறிது சிறிதாக மாறிக்கொண்டே போயிற்று. காங்கிரஸோடு உறவு கொண்டாடுவதும் ஒப்பந்தம் செய்துகொள்வதும் சிவில் செர்விஸ் பரம்பரையாருக்குப் பிடிக்கவே இல்லை. அவர்களுடைய பயிற்சியும் ஏதேச்சாதிகார அரசாட்சியும் இதற்கு நேர்மாறானவை. இவைகளால் காங்கிரஸின் செல்வாக்கும் காந்திஜியின் கீர்த்தியும் வளர்ந்து விட்டனவென்றும், காந்திஜீயைச் சரிசமமாகப் பாவித்து, அவருடன் சமாதானம் பேசுவது தவறு என்றும் எண்ணி விரைவில் காந்திஜீயை இரண்டொருபடி கீழே கொண்டுவந்து விடவேண்டுமென்றும் அவர்கள் எண்ணினார்கள், இந்தக் கருத்து மிகவும் முட்டாள்தனமானது. ஆனால் கருத்துகளின் புத்திசாலித்தனத்துக்காக இந்திய சிவில் செர்வீஸ் பேர்வாங்கினதே இல்லை. காரணம் எதுவானாலும் சரியே, அரசாங்கத்தார் தங்களுடைய பிடிப்பைக் கெட்டிப்படுத்திக்கொண்டு, வேறுபுறம் திரும்பி விறைத்து நின்றார்கள். "என்னுடைய தகப்பனாரின் துடையைக்காட்டிலும் என்னுடைய சிறு சுண்டுவிரல் பருமனானது. அவர் உங்களை சவுக்கினால் அடித்து தண்டித்தார். நானோ உங்கள்பேரில் தேள்களைக் கொட்டவிட்டு உங்களைத் தண்டிப்பேன்" என்று பழைய தீர்க்கதரிசி ஒருவர் சொன்னதுபோல அரசாங்கத்தார் நடந்து கொள்வார்கள் எனத் தோன்றிற்று.

அவ்வாறு தண்டிப்பதற்கு இன்னும் காலம் வரவில்லை. கூடுமானால் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் காங்கிரஸ் பிரசன்னமா யிருக்கவேண்டுமென்பது அரசாங்கத்தாரின் நோக்கம். இரண்டு முறை காந்திஜீ சிம்லாவுக்குப்போய் வைஸிராயோடும் ஏனைய அதிகாரிகளோடும் நீண்ட நேரம் சம்பாஷித்தார். அரசாங்கத்தாரை அப்பொழுது மிகுதியும் தொல்லைப் படுத்திக்கொண்டிருந்தவை, எல்லைப்புறச் செஞ்சட்டை இயக்கமும் ஐக்கிய மாகாண விவசாயிகளின் இயக்கமும்தான். எப்போதுமே தொல்லை கொடுத்துவந்த வங்காளப் பிரச்னை இப்பொழுதுமிருந்து வந்தது. ஆனால் அரசாங்கத்தார் காந்திஜீயோடு முதலிலே சொன்ன இரண்டு பிரச்னைகளைப் பற்றித்தான் பேசினார்கள். காந்திஜீ என்னை சிம்லாவுக்குக் கூப்பிட்டிருந்தார். அங்கே இந்திய அரசாங்க அதிகாரிகளிற் பலரை நான் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது. எனது பேச்சுகள் ஐக்கியமாகாண விஷயங்களைப் பற்றியதோடு நின்றுவிட்டன. நாங்கள் ஒளிக்காமல் மனதிலிருந்த விஷயங்களைப் பற்றி வாய் விட்டுப்பேசினோம். பரஸ்பர குற்றச் சாட்டுகளுக்குக் காரணமாயிருந்த உண்மையான தகராறுகளைப்பற்றி வாதம் செய்தோம். மூன்றுமாத காலத்துக்குள் சட்டமறுப்பியக்கத்தை நசுக்கிவிட முடியும் என்று அரசாங்கத்தார் 1931-ம் வருஷம் பெப்ருவரிமாதத்தில் எண்ணினதாக என்னிடம் அதிகாரியொருவர் சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது. (அடக்குமுறை யந்திரத்தை அவர்கள் பக்குவமாகப் பூர்த்தி செய்து வைத்திருந்தார்களாம். ஒரு பொத்தானை அமுக்கினால் போதுமாயிருக்குமாம். பலாத்காரத்தின் மூலமாக சமாதானத்தை நாடுவதைக் காட்டிலும் ஒற்றுமையின் மூலம் நாடுவது உயர்ந்ததென்று கொண்டு, பரஸ்பரப் பேச்சுகளுக்கிடம் கொடுக்க, அவர்கள் தீர்மானித்ததனாலே, டில்லி ஒப்பந்தம் ஏற்பட்டதாம்! ஒப்பந்தம் ஏற்படாவிடில், தயாராய்க் காத்துக் கொண்டிருந்த பொத்தானை ஓர் நிமிஷத்திற்குள், அவர்கள் அழுத்தி இருப்பார்களாம். நாங்கள் நல்லதனமாக நடந்துகொள்ளாவிட்டால், வெகு சீக்கிரத்தில் பொத்தானை அழுத்தவேண்டி யிருக்குமென்று அவர்கள் ஜாடையாகச் சொன்னதுபோல் தோன்றிற்று. ஆனால் சம்பாஷணை மிகவும் மரியாதையுடன் நடைபெற்றது. நாங்கள் என்ன சொன்னாலும் செய்தாலும், போராட்டம் கண்டிப்பாக வந்தே தீரும் என்று எங்கள் இரு கூட்டத்திற்கும் தெரியும்.

இன்னொரு பெரிய அதிகாரி காங்கிரசைப்பற்றி மிக உயர்வாகப் பேசினார். அரசியல் சம்பந்த மில்லாத சில பிரச்னைகளைப்பற்றி நாங்கள் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தோம். "காங்கிரசின் அரசியல் தொண்டு ஒருபுற மிருக்கட்டும். காங்கிரஸ் இந்தியாவுக்கு மகத்தான ஒரு தொண்டு செய்திருக்கிறது. இந்தியர்கள் கட்டுப்பாட்டுக்குள் ஸ்தாபனங்களை அமைத்துச் செயல் செய்யத் தெரியாதவர்கள் என்று சாதாரணமாகக் குற்றம் சாட்டப்படுவதுண்டு. எத்தனையோ கஷ்டங்களும் எதிர்ப்பும் குறுக்கிட்டும், 1930-ம் வருஷத்தில் காங்கிரஸ் தேசத்தில் ஆச்சரியப்படத்தக்கக் கட்டுப்பாட்டை உண்டாக்கி விட்டது" என்று அவர் சொன்னார். காந்திஜீ சிம்லாவுக்கு முதல் தடவை போனதில், அவர் வட்டமேஜை மகாநாட்டுக்கு போவதா இல்லையா என்ற பிரச்னை முடிவாக வில்லை. ஆகஸ்டு மாதம் கடைசி வாரம் காந்திஜீ இரண்டாவது தடவை சிம்லாவுக்குப் போனார். ஏதோ ஒரு வகையில் முடிவான தீர்மானம் செய்தாக வேண்டும். இருந்தாலும் அவர் இந்தியாவைவிட்டுச் செல்வதற்கு மனம் கொள்ளவேஇல்லை. வங்காளத்திலும் எல்லைப்புற மாகாணத்திலும், ஐக்கிய மாகாணத்திலும், துன்பங்கள் திரண்டுவருதை அவர் பார்த்துவிட்டார். இந்தியாவிலே, சமாதானம் நிலவும் என்ற உறுதி அவருக்குக் கிடைத்தாலொழிய, அவர் லண்டனுக்குப் போகவிரும்பவில்லை. கடைசியாக அரசாங்கத்தோடு ஏதோ ஒருவகையாக ஒற்றுமை ஏற்பட்டது. அரசாங்கமும் காங்கிரஸும் சில கடிதங்களை மாற்றிக் கொண்டன. ஒற்றுமை ஏற்பட்ட விவரமும் ஷரத்தும் யாதாஸ்தாக அறிவிக்கப்பட்டன. வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்லும் பிரதிநிதிகளை இட்டுச் செல்லும் கப்பலில், காந்திஜீ பிரயாணம் செய்வதற்காகக் கடைசி நிமிஷத்தில், இந்த ஒற்றுமை ஏற்பட்டது. சிம்லாவிலிருந்து கால்காவுக்குத் தனி ரயில்வண்டி ஏற்பாடு செய்தார்கள். இந்தத் தனி வண்டியின் போக்குக்காக, மற்றைய வண்டிகள் தாமதித்துப்போக நேர்ந்தன. சிம்லாவிலிருந்து பம்பாய்க்கு நான் காந்திஜீயோடு போனேன். ஆகஸ்டு மாதக் கோடியில், ஒருநாட் காலையில், சூரியன் ஜோதிமயமாக, ஒளி வீசிக்கொண்டிருக்கையில், நான் காந்திஜீயை வழியனுப்பினேன். அராபிக் கடல் வழியாக அவர் மேற்கே அழைத்துச் செல்லப்பட்டார். அதன் பின்னர் இரண்டு வருஷங்களுக்கு, நான் அவரைப் பார்க்கவேயில்லை.

---

‘ ஸ்ரீராமா ’ பிரஸ், சென்னை—1936.